விகடன்
பிரசுரம்

வரலாற்றின் வெளிச்சத்தில்
ஔரங்கஜேப்

செ.திவான்

வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்

செ.திவான்

வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்

சே.திவான்

விகடன்
பிரசுரம்

Title: VARALATRIN VELICHATHIL AURANGZEB
© S.DIVAN

ISBN: 978-81-8476-521-2

விகடன் பிரசுரம்: 755

நூல் தலைப்பு:
வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்

நூல் ஆசிரியர்:
© செ.திவான்

அட்டைப்பட ஓவியம்:
மனோகர்

முதற்பதிப்பு: ஆகஸ்ட், 2013

விலை: ₹ 160

பதிப்பாளர்:
பா.சீனிவாசன்

முதன்மை உதவி ஆசிரியர்:
அ.அன்பழகன்

தலைமை உதவி ஆசிரியர்கள்:
கே.பாசுமணி, சிவராஜ்

முதன்மை வடிவமைப்பு:
மு.ராம்குமார்

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் முழுத்துயர்வான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமர்சனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

விகடன் பிரசுரம்
757, அண்ணா சாலை, சென்னை-600 002.

எடிட்டோரியல் பிரிவு போன்: 044-28524074 / 84
விற்பனை பிரிவு போன்: 044-42634283 / 84
e-mail: books@vikatan.com

பதிப்புரை

தெற்கே தரங்கம்பாடி-நாகப்பட்டினம் தொடங்கி, வடக்கே காஷ்மீர், கிழக்கே வங்காளம், மேற்கே ஆப்கானிஸ்தான் என அகண்டு விரிந்த பேரரசை ஆட்சிசெய்தவர் மாமன்னர் ஔரங்கஜேப். ஐம்பது ஆண்டுகள் சிம்மாசனத்தில் வீற்றிருந்த ஔரங்கஜேப்பை ஒரு கொடுங்கோலன் என்று சரித்திரச் சான்றுகள் சொல்லி வருகின்றன. தன் தந்தை ஷாஜகானை சிறைக்குத் தள்ளி ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தவர் ஔரங்கஜேப் என்று பாடப்புத்தகங்கள் நமக்குப் பாடம் நடத்தியிருக்கின்றன.

தன் சொந்த அண்ணன், தம்பியை அப்பட்டமாக படுகொலை செய்தவர்; தன்னை எதிர்த்த மகனையும், மகளையும் விரட்டிக் கொன்றவர் என்றெல்லாம் வழிவழியாக ஔரங்கஜேப் பற்றி சொல்லி வரப்படும் தகவல்கள் உண்மைதானா? ஔரங்கஜேப் இந்துக்களை இம்சித்தவரா? பெண்களை அவமதித்தவரா? காதலிப்பவர்களுக்கு கடுமையான தண்டனைகள் தந்தவரா? இல்லை.. இல்லை... இல்லவே இல்லை என்று ஆதாரங்களுடன் மறுக்கிறார் நூலாசிரியர் செ.திவான். மிகச்சிறந்த வரலாற்று ஆய்வாளரான செ.திவான், ஔரங்கஜேப் எத்தகைய குணம் உடையவர்? அவர் மீது வீண்பழி விழக்காரணம் என்ன என்பதை அலசி ஆராய்ந்ததின் விளைவே 'வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்...'

ஒருவரைப் பற்றிய வரலாற்றை ஆய்வு செய்யும் போது, சம்மந்தப்பட்டவரைப் பற்றியோ, அவர் சார்ந்த சமூகத்தைப்பற்றியோ, காலத்தைப்பற்றியோ விளக்கங்களை ஆய்வாளர்கள், நூலாசிரியர்கள் வாசகர்களுக்கு விளக்குவார்கள். ஆனால், இந்த நூலில் ஔரங்கஜேப் யார் என்பதை உலகிற்கு உணர்த்த இந்து மதக் கோட்பாடுகளில் இருந்தும், கிருத்துவ, சமண மதங்களில் இருந்தும் எடுத்துக்காட்டுக்களை கையாண்டிருக்கிறார். வீரசிவாஜி யார்? சமணர்கள் கழுவேற்றப்பட்டது எப்படி? பாண்டிய மாமன்னர் இலங்கைத்தீவை பிடித்தது எப்படி-? என பல்வேறு வரலாற்று சம்பவங்களின் சுவையான பின்னணிகளை எடுத்துக்கூறுகிறார் செ.திவான்.

ஆக, வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்... தனிப்பட்டவரின் வரலாற்று ஆய்வு மட்டுமல்ல. அகண்ட பாரதத்தின் ஐம்பதாண்டுகால சமூக வரலாறு. படித்துப்பாருங்கள்; அதிசயித்துப் போவீர்கள்!

எண்ண அலைகள்

‘ஔரங்க’ என்ற சொல்லுக்கு ‘அரசு சிம்மாசனம்’ என்றும், ‘ஜேப்’ என்ற சொல்லுக்கு ‘அழகு’ என்றும் பொருள். இந்த இரு பாரசீகச் சொற்களுக்கும் ‘அழகிய அரசு சிம்மாசனம்’ என்று பொருள்*. ஆனால், ‘ஔரங்கஜேப்’ என்று அழைப்பதற்குப் பதிலாக ‘ஔரங்கஜேப்’ என்றே பலரும் கூறி வருகின்றனர். பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் அப்படியே சொல்லிக்கொடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு ஔரங்கஜேப்பின் பெயரையே மாற்றி அழைத்தவர்கள், அவரது வரலாற்றை எப்படி எப்படியெல்லாமோ மாற்றியும் திரித்தும் இருக்கிறார்கள்.

தந்திரங்களும் சூழ்ச்சிகளும் நிறைந்த இந்தப் பூமியில், தெரிந்தவற்றையும் மக்கள் மறந்துபோய்விடுகின்றனர். தெரியாமலேயே போகுமாறு பல உண்மைகள் இங்குச் சிதைக்கப்பட்டு இருக்கின்றன. எனவே, எல்லாவற்றையும், எல்லாக் காலத்திலும், பல வடிவங்களில், பல தளங்களில் மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டியிருக்கிறது.**

ஔரங்கஜேப்பின் உண்மை வரலாற்றை எழுதத் துவங்கிடும் வேளையில், ‘மரங்களை எழுத்தாணியாகவும் கடல் நீரை மையாகவும், வானத்தை ஏடாகவும் கொண்டு எழுதினாலும் தனது ஆசிரியரின் பெருமையை எழுதி முடித்திட இயலாது’ என்று தெலுங்குக் கவிஞர் வேங்கண்ணா, தனது குருவைப் பற்றி எழுதிய வைர வரிகள் எனது நினைவுக்கு வந்தது. மாமன்னர் ஔரங்கஜேப் மீது சுமத்தப்பட்டுவரும் குற்றச்சாட்டுகள் அனைத்தும் உண்மைக்கு மாறானவை என்பதை, சரித்திரப்பூர்வமான ஆதாரங்களுடன் இறைவனின் கருணையோடு உங்கள் முன் வைக்கிறேன்.

முஸ்லிம் மன்னர்கள் மீது மாபெரும் பழி!

இந்தியாவை ஆண்ட முஸ்லிம் மன்னர்கள் ஆட்சியில், ‘ஹிந்து கோயில்களை இடித்தார்கள். பள்ளிவாசல்களைக் கட்டினார்கள்’ என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொடுக்கப்பட்டு நாள்தோறும் நச்சு விதையை, மதத் துவேஷத்தை வளர்த்துவரும் இந்த வேளையில், ‘இந்திய நாட்டு முஸ்லிம் மன்னர்கள், பிற சமயங்கள்பால் வெறுப்புக்

கொண்டதில்லை; குடிமக்களை அச்சுறுத்தி கட்டாயமாக மதமாற்றம் செய்ததில்லை என்றும் சொல்லும்போது, இந்த உண்மைகளுக்கு மாறான உதிரி நிகழ்ச்சிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்திருக்கக்கூடும் என்பதை மறுப்பதற்கில்லை'* என்றாலும், முஸ்லிம் மன்னர்கள் ஆட்சியில் அப்படித் தவறுகளே நடந்திடவில்லையென்று சொல்லிடும் தற்குறியல்ல நான். ஆனால், வரலாற்று உண்மைகளை மறைத்திடும்போது, மறைத்திட முயலும்போது, திட்டமிட்டே மறைந்து வருகிறபோது, அதுகுறித்த உண்மைகளை வரலாற்றின் வெளிச்சத்துக்கு கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

ஔரங்கஜேப் மசூதி அருகே விஷ்ணு ஆலயம்

தமிழ்நாட்டில், ஆற்காட்டில் முஸ்லிம் ஆட்சி. திருவலம் ஆலயம், வள்ளிமலை, திருத்தணி, காஞ்சிபுரம் அனைத்துமே ஆற்காட்டுக்கு அருகில்தான் உள்ளன. மதுரையிலே முஸ்லிம் ஆட்சி, அங்குதான் மீனாட்சியம்மன் கோயில் இருக்கிறது; திருச்சியிலே முஸ்லிம் ஆட்சி, அங்குதான் ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் ஆலயம் இருக்கிறது**. காசியில் ஔரங்கஜேப் மசூதிக்கு வட பக்கம் 50 அடி தூரத்தில் பிந்துமாதவர் விஷ்ணு சந்நிதி ஆலயம் இருக்கிறது***. இப்படி சொல்லிக்கொண்டே செல்லலாம். இவை எல்லாம் இன்றும் நம்முன் கம்பீரமாக இருப்பதை எவர் மறைத்திட முடியும்? முஸ்லிம் மன்னர்கள், ஹிந்து ஆலயங்களை எல்லாம் இடித்துத் தகர்த்தார்கள் என்று சொல்பவர்கள் இதற்கு என்ன விளக்கம் தருவார்கள்?

இடிக்கப்பட்ட பள்ளிவாசல்கள்

தமிழ்நாட்டில் சென்னை ஆவடி பட்டாபிராம், அண்ணாநகர் பள்ளிவாசல், 14.3.1985 வியாழக்கிழமை அன்று இடிக்கப்பட்டது.**** அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது, 'தாம்பரம் குரோம்பேட்டைப் பகுதியில் சானடோரியத்தில் 47 ஆண்டுகளாக இருந்து வந்த ஸ்ரீராம ஆஞ்சநேயர் திருக்கோயில் எந்த முன்னறிவிப்புமின்றி இடிக்கப்பட்டது. அதன் அருகிலிருந்த முஸ்லிம்கள் தொழுகை நடத்தும் பள்ளிவாசலும் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த காரணத்தால் இடிக்கப்பட்டது*****. 16.3.1994 அன்று ஆயுதம் தாங்கிய போலீசார் புல்டோசர் கொண்டு இவற்றை இடித்துத் தரைமட்டமாக்கினார்கள்*. ஜெயலலிதா ஆட்சியின்போது ஆஞ்சநேயர் கோயிலும், பள்ளிவாசலும் இடிக்கப்பட்டது மதக்காரணங்களினாலா? இல்லையே!

பஞ்சாப் அமிர்தசரஸ் பொற்கோயிலில் ஜார் நைல்சிங் பிந்தரன்வாலேயின் தீவிரவாதத்துக்கு எதிராக பாரதத்தின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி 1984 ஜூன் 15-ல் எடுத்த, 'நீல நட்சத்திர நடவடிக்கை' (Operation Blue Star)** இந்திரா காந்தி, சீக்கியர்கள் மீது கொண்ட குரோதத்தால் எடுத்த நடவடிக்கை என்று யாராவது கூற முடியுமா?

இவைபோலவே, மாமன்னர் ஔரங்கஜேப் ஆட்சியிலும் சம்பவங்கள் சில நடைபெற்றுள்ளன. ஆனால், அன்றைய காலகட்டத்தில், இந்தியாவில் மட்டுமல்லாது உலகமெங்கும் கோயில்களும் மடங்களும், மத்திய காலத்தில் அந்தஸ்தும் கௌரவமும் பெற்ற அரசியல் அதிகார சூட்சமத்தின் மையமாகக் கருதப்பட்டன என்ற வரலாற்று உண்மையையும் நாம் மறந்துவிட முடியாது.***

தர்மதாஸின் புதல்வரான லாகூர், இந்துக் கவிஞர் சந்திரபான் பிராமின் வேதங்களிலும் உபநிடதங்களிலும் பாரசீக மொழியிலும் நல்ல புலமைப் பெற்ற தெய்வபக்தி உள்ளவர். 'இவருடைய கொள்கைகளுக்குக் காரணம் இவருடைய ஹிந்து சமயமே!' என்பதை உணர்ந்த ஔரங்கஜேப், தம்முடைய தர்பாரில் இவரைப் பாராட்டியும் பேசியுள்ளார்.****

ஔரங்கஜேப்பின் உலக வாழ்வுக்குப் பின்னரும் செய்நன்றி மறவாது வீரசிவாஜியின் மகன் ஸாஹூ, ஔரங்கஜேப்பின் அடக்க இடத்துக்குச் சென்று மரியாதை செலுத்தி வந்ததை வரலாற்றில் காண முடிகிறது.இவை போன்ற பல்வேறு உண்மைகளை 'வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப் நூலில் காண இருக்கிறீர்கள்.

கி.பி.8-ம் நூற்றாண்டு முதல் இந்தியாவின் மீது பல்வேறு இஸ்லாமிய வம்சத்தினரின் ஆக்ரமிப்புகள், ஹிந்து - முஸ்லிம் மக்கள் இணைந்து நின்றே வெள்ளையரை எதிர்த்தனர். 1857-ல் நடைபெற்ற படைவீரர்களின் புரட்சியில் மன்னர் பஹதூர்ஷா ஜஃபரையேத் தலைவராக ஹிந்து - முஸ்லிம் என்ற இருசாராரும் தேர்ந்தெடுத்தனர்.

ஹிந்து - முஸ்லிம் உறவை 'வாள்' கொண்டு பிரிக்க முடியவில்லை. எனவே, வெள்ளையர் 'தாள்' தூக்கினர். ரத்தக்கறையை நச்சுக்கறையாக மாற்றி, வரலாறுகளை எழுதத் துவங்கினர். அவர்களின் அடிவருடிகளையும் அவ்வாறே எழுதிடப் பணித்தனர்.

"பிரித்தாளும் சூழ்ச்சிக்கொண்ட வெள்ளையர்கள், இந்திய

வரலாற்றைக் காலப் பாகுபாடு செய்யும்போது, ‘இந்து இந்தியா’, ‘முஸ்லிம் இந்தியா’, ‘பிரிட்டிஷ் இந்தியா’ எனப் பகுத்தனர். எனவே, ‘இந்து இந்தியா’ படையெடுப்பால் ‘முஸ்லிம் இந்தியா’ வாக்கப்பட்டது என்பதும், வெள்ளையர் ஆட்சியில் இது நவீன வளர்ச்சிகளைப் பெற்றன என்பதும் இதன் மூலம் பொருளாகிறது.

வெள்ளையர் எழுதிய வரலாற்றுக்கு எதிராக இந்திய தேசியவாதிகள் வரலாறு எழுதுகிறபோது, பழம்பெருமையைத் தூக்கிப் பிடித்தனர். உணர்வுரீதியில் இந்திய தேசியத்தைக் கட்டமைக்க முயன்ற உயர் சாதி இந்துக்கள் பண்டைய ‘இந்து’ இந்தியாவை லட்சியமாக முன்வைத்தனர். இந்தச் செயற்பாடுதான் இஸ்லாமியர் பற்றிய பல்வேறுவிதமான வரலாற்றுப் பொய்களுக்குக் காரணமாகி உள்ளன. பெரும்பாலும், உயர் சாதியினரே ஆதிக்கம் செலுத்தும் கல்வித் துறை, பத்திரிகை, தொலைக்காட்சி முதலியவற்றில் இந்த நிலை தொடர்கின்றன. இதனால் சாதாரண மக்கள் மத்தியிலும் முஸ்லிம்கள் குறித்த, முஸ்லிம் மன்னர்களைப் பற்றியப் பொய்கள் ஆழமாகப் பதிந்துள்ளன.

ஜனநாயக, இடதுசாரி சிந்தனையுடைய வரலாற்று ஆசிரியர்கள், இத்தகைய வரலாற்றுப் பொய்களைத் தோலுரிக்கும் முயற்சிகளையும் செய்தே வந்திருக்கின்றனர்”* என்பர் அ.மார்க்ஸ்.

ஆரியர் வருகை... முஸ்லிம் படையெடுப்பு!

சம்பவங்கள் ஒன்றாக இருந்தபோதிலும் சொல்பவரின் விருப்பு -வெறுப்புக்கு ஏற்ப அவற்றில் ஒருசில தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒரு குறிப்பிட்ட அரசியல் நோக்குடன் தொகுக்கப்படும்போது வெவ்வேறு வரலாறுகள் தோன்றிவிடுகின்றன.

இந்த நாட்டின் எல்லைக்குள் ஆரியர்களும் வந்தார்கள்; முஸ்லிம்களும் வந்தார்கள். இது, ஒரே மாதிரியான நிகழ்ச்சி. ஆனால், வரலாற்றுச் சம்பவங்களை வரைகிறபோது ‘ஆரியர் வருகை’ (குடிபெயர்ந்தது - Aryan immigration) என்றும், ‘முஸ்லிம் படையெடுப்பு’ (Arabs Invasion) என்றும் எழுதினர். அப்போதே பேதங்காட்டி வரலாற்றை எழுதத் துணிந்துவிட்டதற்கு இதுபோன்ற எண்ணற்ற சான்றுகளைக் காட்டிட முடியும்.

இவ்வாறு வரலாறு திரித்து எழுதப்பட்டும், பொய்யாக போதிக்கப்பட்டும் வருவதின் விளைவாகத் தொடரும் தீமைகளைத் துளியேனும் தடுத்து நிறுத்திட முயலும்

எண்ணத்தில் பிறந்ததே இந்த நூல்.

ஸ்ரீநிவாஸ பிள்ளை

‘நான் தமிழ்ப் புலவன் அல்லேன். ஆயினும் தமிழின்பால் உள்ள மட்டற்ற அன்பு தூண்ட, தமிழ் அறிஞர்கள் பலரையும் அவ்வப்போது ஆராய்ச்சி செய்து வெளியிட்டு இருப்பவை நான் அறிந்த அளவையில் தொகுத்தும், எனது ஆராய்ச்சியின் பயனாக உள்ளவற்றைக் கூட்டியும் இந்தப் புத்தகத்தை எழுதுகிறேன்’ என்று தனது நூலின் முன்னுரையில் ஸ்ரீநிவாஸன் குறிப்பிடுவார்.*

அதுபோல நானும் வரலாற்று ஆசிரியன் அல்லன். ஆயினும், வரலாற்று ஆய்வு உணர்வில் ஆர்வமுற்று, ஔரங்கஜேப் குறித்து வரலாற்று ஆசிரியர்கள் பலர் அவ்வப்போது வெளியிட்டுள்ள ஆராய்ச்சிக் குறிப்புகளின் அடிப்படையில், எனது ஆய்வின் பயனாக கிடைத்தவற்றைச் சேர்த்தும் இறைவனின் அருளால் எழுதப்பட்டதே இந்த நூல்.

சுந்தரவரதாசாரியார்

“சரித்திரத்தை உள்ளவாறு கற்க விரும்பும் ஒருவன், அது சம்பந்தமான பல புத்தகங்களையும் படித்து உண்மையைக் கற்பனைகளினின்றும் வேறுபடுத்தி அறிந்துகொள்ளல் வேண்டும். சரித்திர ஆசிரியரும் நடுநிலைமையுடன் விஷயங்களை எடுத்துதெழுதினால், சரித்திர அறிவு பெருகிப் பல நன்மைகளையும் எய்துதல் கூடும்”** என்ற கருத்தின் அடிப்படையில் பிறந்தது இந்த நூல்.

கதே

“இதுவரை யாரும் கூறாததைக் கூறுவதன்றே சிறப்பு என்று எண்ணற்க. இதற்குமுன் இதுவரை யாரும் கூறவில்லை என்று எண்ணுமாறு அதைக் கூறுவதும் சிறப்பேயாகும்”*** என்ற ஜெர்மன் நாடகாசிரியர் ‘கதே’யின் கருத்திற்கேற்ப உருவாக்கப்பட்டது இந்த நூல்.

காஜீ மஹ்மூத் தரம்பால்

மௌலானா மௌலவீ காஜீ மஹ்மூத் தரம்பால் எழுதிய ‘குப்ருதோ’ என்ற உருது நூலின் முன்னுரையில், ‘இந்தப் புத்தகம் இஸ்லாத்தின் தற்காப்பு நிமித்தமாகவே எழுதப்பட்டிருக்கிறது. எனவே, எதிர்மதவாதிகளை ஏசவேண்டும் என்பதும், அவர்களைத் தூஷணை செய்ய வேண்டும் என்பதும் இதன் கருத்தல்ல’ என்று குறிப்பிடுவார். அதுபோன்றே

ஔரங்கஜேப் குறித்த உண்மை விவரங்களை வரலாற்றின் வெளிச்சத்துக்கு கொண்டுவர வேண்டுமென்ற தற்காப்பின் நிமித்தமாக எழுதப்பட்டதே இந்த நூல். யாரையும் தாக்குவதற்காக எழுதப்பட்டதல்ல.

ஜோசப் கோயபல்ஸ்

சர்வாதிகாரி ஹிட்லரின் பிரசார மந்திரியும் ரைன் லாந்தைச் சேர்ந்தவருமான ஜோசப் கோயபல்ஸின், 'ஒரு பொய்யை திரும்பத் திரும்பச் சொன்னால் அது மெய்யாகிவிடுகிறது' என்ற தத்துவப்படி, இந்த நாட்டை ஆண்ட வெள்ளையர்கள் வரலாற்றை எழுதினர். தங்களின் தயவை எதிர்பார்க்கும் இந்திய வரலாற்று ஆசிரியர்களைக்கொண்டு வரலாற்றை எழுதப் பணித்தனர். அதில் வெற்றியும் கண்டனர். 'பிற மத சுதந்திரத்தைப் பாதுகாத்தலே மன்னராகிய தமது கடமை' என வாழ்ந்த ஔரங்கஜேப் மாமன்னரை, 'ஹிந்துக்களின் பரம விரோதி' என எழுதிட வைத்தனர். இத்தகைய தவறான வரலாற்றுச் செய்திகளை ஆய்வு செய்து, உண்மையை உரைக்கிறது இந்த நூல்.

பிரேம்நாத் பஜாஜ்

"ஔரங்கஜேப் முஸ்லிம் அல்லாதவர்களைத் துன்புறுத்தினார் என்றும், அவர்களுடைய மத நிறுவனங்களை அழித்தார் என்றும் பல ஹிந்து எழுத்தாளர்கள் கூறவது ஒருதலைப்பட்சமானது. அவர்கள், பேரரசின் மேன்மையைப் புறக்கணிக்கவும், அவருடைய தோல்வியை ஊதி விரிவடையவும் செய்தனர்" என்ற பிரேம்நாத் பஜாஜின் கூற்றை மெய்ப்பிக்கப் பிறந்தது இந்த நூல்.

ஆச்சாரியா பிரபுல்லா சந்திரபாய்

"இந்த நாளில், ஔரங்கஜேப் கசப்பான முறையில் விமர்சிக்கப்படுகிறார். ஆங்கில வரலாற்று ஆசிரியர்கள், அவர்மீது 'இந்துக்களின் பகைவர்' எனும் முத்திரையைப் பதித்துவிட்டனர். ஆனால், அது உண்மைக்குப் புறம்பானது" (இல்லஸ்ட்ரேட் வீக்லி 5.10.1975) ஆச்சாரியா பிரபுல்லா சந்திரபாயின் இந்தக் கூற்றை உறுதிப்படுத்த உதயமானது இந்த நூல்.

ஔரங்கஜேப், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியபோது, அரசியல் காரணங்களுக்காக தனது தந்தை ஷாஜஹானை அரண்மனைக் காவலில் வைத்திருந்ததைப் பெரிதும் குறை கூறி வருகின்றனர்.

துவக்கம் முதல் முடிவு வரையில் ஷாஜஹானுக்கும்

ஔரங்கஜேப்புக்கும் இடையில் நிலவிய கருத்துவேறுபாடுகளை விளக்கி, அதற்குப் பிறகும் ஔரங்கஜேப்பால் ஷாஜஹானுக்கு வழங்கப்பட்ட மரியாதைகள், வசதிகள் குறித்து 'தந்தையைச் சிறையில் தள்ளியவரா?' எனும் தலைப்பில் விளக்குகிறது இந்த நூல்.

'ஔரங்கஜேப், தனது அண்ணன் தாராஷுக்கோ, சகோதரர்கள் ஷுஜா, முராத்பக்ஷ் ஆகியோரைக் கொன்றுவிட்டு சக்கரவர்த்தியானார்' என்பது, அவர் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டு. ஔரங்கஜேப்பின் அண்ணனும், சகோதரர்களும் எவ்வாறு மடிந்தார்கள்? அதற்கு ஔரங்கஜேப் பொறுப்பாளியா... இல்லையா? பின் அவர்களது மரணம் எவ்வாறுதான் நிகழ்ந்தது? இவற்றை, 'சகோதரர்களைக் கொன்றுவிட்டுச் சக்கரவர்த்தியா?' எனும் தலைப்பில் விளக்குகிறது இந்த நூல்.

வீரசிவாஜி

ஔரங்கஜேப் தனது ஆட்சியில் 'ஜிசியா' வரி விதித்து இந்துக்களைத் துன்புறுத்தியதாகச் சொல்லப்பட்டுவரும் விஷயங்களை, 'ஜிசியா வரியால் இந்துக்களைத் துன்புறுத்தியவரா?' எனும் தலைப்பில் ஆய்வு செய்து அதுகுறித்த உண்மை விவரங்களைத் தருகிறது இந்த நூல்.

ஔரங்கஜேப்பின் ஆட்சியில், தம்மிடம் பணிபுரிந்த இதர மதத்தினரை, குறிப்பாக இந்துக்களை அரசாங்கத்தின் வேலைகளிலிருந்து விலக்கியதாகச் சொல்லப்பட்டுவரும் கருத்தின் உண்மை நிலை குறித்து, 'இந்துக்களை வேலைநீக்கம் செய்தவரா?' எனும் தலைப்பில் தருகிறது இந்த நூல்.

'மராட்டிய வீரசிவாஜியை, 'அப்ஸல்கான்' என்ற தனது படைத்தளபதியை அனுப்பி அழிக்க முயன்றவர் ஔரங்கஜேப்' என்ற குற்றச்சாட்டை விரிவாக ஆராய்ந்து, நடைபெற்ற வரலாற்றுச் செய்திகளை 'அப்ஸல்கானை அனுப்பி சிவாஜியை அழிக்க முயன்றவரா?' எனும் தலைப்பில் விவரிக்கிறது இந்த நூல்.

குற்றச்சாட்டுகளும் பதில்களும்!

ஔரங்கஜேப்பின் மீது சுமத்தப்படுகின்ற பல்வேறு குற்றச்சாட்டுகளை ஆராய்ந்து, ஔரங்கஜேப், 'இராஜபுத்திரர்களின் விரோதியா?', 'சீக்கியர்களின் விரோதியா?', 'இசைக் கலைஞர்களை இம்சித்தவரா?', 'செருப்புக்கு சிறப்புச் செய்திடச் சொன்னவரா?', 'இந்துக்களை

இம்சித்தவரா?', 'மதவெறியரா?' ஆகிய தலைப்புகளில் விளக்கம் தருகிறது இந்த நூல்.

இந்து-முஸ்லிம்-கிறிஸ்துவ ஒற்றுமை வளர வேண்டும் என்றும், அதனைத் தடுத்திட முயலும் தீயசக்திகளின் நாச நர்த்தனங்களை நாட்டுக்குப் படம்பிடித்துக் காட்டிட வேண்டும் என்ற அவாவிலும் பிறந்தது இந்த நூல்.

- செ.திவான்

18-07-2013

ரெகான் சுலைமான் இல்லம்,

பாளையங்கோட்டை.

---

* வேலூர் மௌலானா அப்துல்பாரி அவர்கள், ஆசிரியருக்கு 8.3.1995-ல் எழுதிய கடிதம்.

** 'வீர சுதந்திரம் வேண்டி' நூல் முன்னுரையில், சாத்தூர், 1997.

* மு.அப்துல் கரீம், இஸ்லாமும் சமய நல்லிணக்கமும், திண்டுக்கல். 1996, பக்.149.

** கா.மு.ஷெரீப், இஸ்லாம், இந்து மதத்துக்கு விரோதமானதா?, சென்னை 1989, பக்.65-66.

*** கே.எஸ்.முத்தையா, நமது புண்ணியபூமி அல்லது காசி, சென்னை. 1917, பக்.47-48.

**** மறுமலர்ச்சி, திருச்சி, 22.03.85, 29.03.85 இதழ்கள்.

***** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள் செயலக வெளியீடு, 1994, தொகுதி 60, எண் 3, பக். 696-699.

*அல்ஷரீஅத்துல் இஸ்லாமியா, ஏப்ரல் 1994, பக்.32-37; ஆனந்த விகடன் 27-03-94.

** The Best of India Today 1995 - 1990, P.134-136, மனோரமா இயர் புக் 1991, பக்.506.

*** டி.ஞானையா, மதவாத அரசியல் இந்தியாவின் எதிர்காலம், சென்னை, 1993, பக்.20.

**** கலைக்களஞ்சியம், இணைப்புத் தொகுதி 10, சென்னை, 1948, பக்.237-238.

*அ.மார்க்ஸ், இஸ்லாமியருக்கு எதிரான கட்டுக்கதைகள், புதுவை,1994, பக்.17-18.

* K.S. ஸ்ரீநிவாஸ பிள்ளை, தமிழ் வரலாறு, பிற்பாகம் - முற்பகுதி. கும்பகோணம், 1924, முன்னுரையில்.

** M.K. சுந்தரவரதாசாரியார், 'சரித்திரக் கல்வி' கட்டுரையில், மா.இராசமாணிக்கம், பா.பக்கிரி சுவாமி தொகுப்பு, செந்தமிழ்ச் செல்வம், இரண்டாம் புதையல், 1931, பக்.130.

*** பொ.திருகூடசுந்தரம், அறிவுக்கனிகள், சென்னை, 1952, பக்.165.

இந்த நூல்...

எனது பெற்றோர்
நா.செய்யது மசூது - செ.காசினம்மாள் ஆகியோருக்கு...

உள்ளே...

1. வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்
2. தந்தையை சிறையில் தள்ளியவரா?
3. சகோதரர்களைக் கொன்றுவிட்டுச் சக்கரவர்த்தியா?
4. ஜிசியா வரியால் இந்துக்களைத் துன்புறுத்தியவரா?
5. இந்துக்களை வேலை நீக்கம் செய்தவரா?
6. அப்ஸல்கானை அனுப்பி, சிவாஜியை அழிக்க முயன்றவரா?
7. இராஜபுத்திரர்களின் விரோதியா?
8. சீக்கியர்களின் விரோதியா?
9. இசைக் கலைஞர்களை இம்சித்தவரா?
10. செருப்புக்கு சிறப்பு செய்திடச் சொன்னவரா?
11. இந்துக்களை இம்சித்தவரா?
12. காதலை அழித்திட, கொதிக்கும் நீரில் வைத்துக் கொன்றவரா?
13. ஔரங்கஜேப் மதவெறியரா?
14. உலகப் போரசர்களில் உயர்ந்தவர்

1

வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்

அகிலத்திற்கோர் அருட்கொடையாகத் தோன்றிய அண்ணல் நபி முஹம்மது (ஸல்) அவர்கள் சத்திய சன்மார்க்க இஸ்லாமைப் போதித்த காலத்திற்கு முன்னும் ஆன்றோர்கள் மீது அவதூறுகள் அள்ளி வீசப்பட்டன.

இறைத் தூதர்கள் மீதே பழி சுமத்தப்பட்டன. நபிஈஸா (அலை) (இயேசுபிரான்) அவர்களைப் பற்றியும் அவர்களுடைய தாயார் மரியம் (அலை) மீதும் யூதர்களால் மிகவும் தரக்குறைவாக பழி சுமத்தப்பட்டது. உத்தமர்கள் மீது உண்மைக்கு மாறாக செய்திகள் உரைக்கப்பட்டன; நல்லவர்கள் மீது நஞ்சை கக்கும் சொற்கள் கொட்டப்பட்டன; நாடாண்ட மன்னர்கள் மீது நாகூச்சமின்றி நாசகாரப் பழிகளும் சுமத்தப்பட்டன; இந்த நிலை இன்றும் தொடரத்தான் செய்கின்றது.

வரலாற்றின் நீண்ட நெடிய பக்கங்களைப் புரட்டிப் பார்ப்போமேயானால் இவைகளுக்கு எண்ணற்ற சான்றுகளை நாம் காணமுடியும்.

கலீபா உமர் (ரலி)

கத்தாப், கதைமா தாய் தந்தையருக்கு குறைஷி கோத்திரத்தில் மகனாகத் தோன்றி கி.பி. 633 இல் கலீபாவாகப் பொறுப்பேற்றுக் கொண்ட ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் பனிரண்டரை லட்சம் சதுரமைல்கள் பரப்பளவுக்கு

வெற்றிப் பறைமுழக்கிய தீரர்.

கி.பி. 640 இல் (ஹஜ்ரி 19) ஃபாரூக்குல் அஃலம் ஸையிதினா உமர் (ரலி) அவர்களின் உத்திரவினையேற்று அம்ருஇப்னுஆஸ் எகிப்தின் மீது படையெடுத்துச் சென்றார். கி.பி. 641 இல் 'இஸ்கந்திரியா' என்னும் 'அலெக்சாந்திரியா' முஸ்லிம்களின் வசமாயிற்று; 'ஃபுஸ்நாத்' என்னும் 'கெய்ரோ' தலைநகராக்கப்பட்டது. இந்தப் போரின் போது அலெக்சாந்திரியா (Alexandria) வில் மிகப்பழமையான பெருநூல்களையும், கையெழுத்துப் படிகளையும் தன்னகத்தே கொண்டிருந்த புராதனமான நூலகத்தைக் கலீபா உமர் (ரலி) உத்தரவை ஏற்று அம்ர்இப்னுஆஸ் (ரலி) தீயிட்டுச் சாம்பலாக்கிவிட்டார் என்பது குற்றச்சாட்டு; ஆனால் உண்மை என்ன?

ஜூலியஸ் சீசர்

கி.மு. 48 இல், அதாவது கலீபா உமர் (ரலி) பிறப்பதற்கு 700 ஆண்டுகளுக்கு முன்னரே தாலிமி வமிச கிடைத்தற்கரிய நூற்களஞ்சியத்தை ஜூலியஸ் சீசர் (Julius Caesar) அலெக்சாந்திரியாவில் எரித்துச் சாம்பலாக்கினார் என்று வரலாற்றாசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.*

(* Philip K. Hiiti History of the Arabs' (1964) London P.166.

பிலிப், கே. கிட்டி, 'அராபியர்களின் வரலாறு' பக். 166. இலண்டன், 1964.)

தியோடோஷியஸ்

கி.பி. 389 இல் கீழரோமப் பேரரசின் சீசராக விளங்கிய தியோடோஷியஸ் (Theodosius) பிறப்பித்த உத்தரவின் படி அலெக்சாந்திரியாவில் சேய் நூலகமென்று போற்றப்பட்ட பெரிய நூலகமும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுவிட்டது.

கொள்ளையடித்து அழிக்கப்பட்ட அந்த நூலகத்தின் அலமாரிகளை இருபது ஆண்டுகளுக்குப் பின்னால் பார்வையிட்ட சமயச் சார்பற்ற பார்வையாளர்கள் அவையாவும் காலியாக வெறுமனே இருந்த நிலையைப் பார்த்து மிகுந்த மனவேதனைப் பட்டதையும் வரலாற்றறிஞர் கிப்பன் தெளிவாகவே எடுத்துச் சொல்லியிருக்கிறார்.**

(** எட்வர்டு கிப்பன், ரோமானியப் பேரரசின் எழுச்சியும், வீழ்ச்சியும்.

ஜே.பி. பூரி, (சுருக்கியது) பாகம் மிமிமி பக். 201- இலண்டன்

1965)

அம்ர் இப்னு ஆஸ் (ரலி)

கலீபா உமர் (ரலி) அவர்களின் உத்திரவினையேற்று அலெக்சாந்திரியா நூலகத்தில் உள்ள நூல்களையெல்லாம் நகரத்தின் வெந்நீர் கொப்பறைகளுக்கு பயன்படும் விதத்தில் அமர் இப்னு ஆஸ் (ரலி) தீயிலிட்டார் என்னும் குற்றச்சாட்டின் உண்மை நிலை என்ன?

கி.மு. 48 லும், கி.பி. 389 லும், இரு மன்னர்களால் அலெக்சாந்திரியா நூல் நிலையம் முழுவதுமாக அழிக்கப்பட்டுவிட்டது. இந்த நிலையில் பாரம்பரியமான, புராதனமான நூற்கள் அங்கே குவிந்துகிடந்தன என்பதை நடுநிலையாளர்கள் ஏற்றுக் கொள்ள முடியுமா?

நிக்கு வின் ஜான்

எகிப்தின் வெற்றி குறித்து முழுவிவரங்களையும் தெள்ளத் தெளிவாக எழுதிய சமகாலத்து வரலாற்றாசிரியர் நிக்கு என்ற பகுதியைச் சார்ந்த ஜான் என்பவர் (John of Nikiu). கி.பி. 641 இல் நடந்ததாக பின்னால் சொல்லப்படுவதைப் பற்றி அவர் சமகாலத்தில் எதுவும் கூறாததை, மிக முக்கியமாகக் கவனித்திட வேண்டாமா?

தபாரி (Tabari), இப்னு அப்துல் ஹக்கம் (Ibn Abd al Hakam) ஆகிய இருவரும் இது பற்றி ஏதும் பேசாது இருப்பதையும் கவனித்திட வேண்டாமா?

எகிப்து நாட்டைச சேர்ந்த கிறிஸ்தவ வரலாற்றாசிரியர் யூட்டிசியஸ் (Eutychius) மற்றும் இன்னொரு சுதேசி கிறிஸ்தவரும் அலெக்சாந்திரிய வெற்றியைப் பற்றி எழுதும் போது நூல் நிலையம் தீக்கிரையாக்கப்பட்டதாகச் சொல்லப்படும் சம்பவங் குறித்து எதுவுமே சொல்லவில்லை.

சமகால ஆசிரியர் எவரேயினும், அல்லது அக்கால எதிரிகள் யாரேனும் கூறத் துணியாத அபாண்டப்பழியை, கட்டுக் கதையை கி.பி. 1231 இல் (UxK 629) உயிர்துறந்த அப்துல் லத்ஃபீப் அல்பக்காதி (Abd-al-Latif-al- Baghdadi) என்பவர்தான் முதன் முதலாக எழுப்பினார்.

கி.பி. 641 இல் நடைபெற்றதாகச் சொல்லப்பட்ட சம்பவத்திற்கு அறுநூறு ஆண்டுகளுக்குப் பின்னால், கி.பி. 1231 இல் எழுதிய ஒருவரின் கூற்றை மட்டுமே எடுத்து வைத்துக் கொண்டு, திரும்பத் திரும்ப அதனையே பலரூபங்களில்

சொல்லிச் சொல்லி, கலீபா உமர் (ரலி) அவர்கள் மீது பழியைப் போடுவதை, நடுநிலையாளர்கள் ஏற்றுக் கொள்ள இயலுமா?

வரலாற்றில் நடந்தவைகளை ஆராய்ந்தறிந்த சரித்திர ஆசிரியர்கள் உண்மையை இவ்வாறு உலகுக்கு அறிவித்தனர்; வரலாற்றாசிரியர் கிப்பன் இந்த அபாண்டப் பழியை ஆணித்தரமாக மறுத்திருக்கிறார். பெரிய அளவில் பரப்பப்படும் பொய்யான விஷயங்களுக்கு, உண்மைக்கு மாறான செய்திகளுக்கு அடிப்படை எதுவும் இருக்கிறதா? என்பதனை ஆராய்ந்து பார்த்ததின் விளைவாகத் தான் அலெக்சாந்திரியா நூலகத்தைக் கலீபா உமர் (ரலி) தீவைத்துக் கொளுத்தினார் என்று சொல்லப்படுவது கெட்ட நோக்கத்தோடு பரப்பப்பட்ட கட்டுக்கதை என்பதை உலகம் உணர்ந்தது; பொய் புறத்தே தள்ளப்பட்டது.

பரந்து விரிந்த இந்தியாவை ஏறத்தாழ ஐம்பதாண்டுகள் ஆட்சி செய்த மொகலாயச் சக்கரவர்த்தி அபுல்முஸஃப்ஃபர் முஹியுத்தீன் முஹம்மத் ஔரங்கஜேப் ஆலம்கீர் மீது அடுக்கடுக்கான குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டு, இன்றளவும் சொல்லப்பட்டும் வருகின்றன; அவைகளின் உண்மை நிலை என்ன?

வரலாற்றுச் சான்றுகள்

வரலாறு வரைவது என்பது ஒரு புது வீட்டினைக் கட்டி எழுப்புதல் போன்றது. வீடு கட்டுவதற்குத் தேவையான பொருட்கள் இல்லாமல் வீட கட்டினால் அவ்வீடு நீண்டகாலம் நிலைத்திராது. சக்கரவர்த்தியின் அரண்மனையானாலும் சாதாரணமானவரின் குடிசையானாலும் அஸ்திவாரமில்லாமல் அமைந்திட முடியாது. அது போல் வரலாற்றைச் சிறப்பாக அமைக்க உதவுவது வரலாற்றுச் சான்றுகள். இவைகளை ஆராய்ந்து அறிந்தால் தான் குழப்பம் தீரும்; தெளிவு பிறக்கும்; இருள் அகலும்; ஒளி பிறக்கும்; பொய்யும் பித்தலாட்டமும் மறையும்; உண்மை பளிச்செனத் தெரியும்; புதிய செய்திகளும் கிடைக்கும். பழைய கொள்கை விதிகள் சரிபார்க்கப்பட்டு, புதிய கொள்ளை விதிகளும் தோன்றக்கூடும். இதனை மனத்தில் இருத்திக்கொண்டு, ஔரங்கஜேப் குறித்து ஆய்வு செய்திட துவங்கிய முயற்சி இது.

ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்கள்

“நம் நாகரிகத்தின் பழமையான பெருமையைச் சரித்திர வாயிலாக விளக்கி வைத்தவர்கள் ஐரோப்பிய

ஆராய்ச்சியாளர்களே. வெகுகாலமாக இந்திய ஆராய்ச்சியாளரின் தொகையைக் கணக்கிட ஆரம்பித்தால் ஒரு கையின் விரல்கள் கூட மடிக்கக் கூடாத நிலை தான் இருந்து வருகிறது. சென்ற முப்பது வருஷங்களில் இந்த நிலைமாறி இந்திய ஆசிரியர்களும் மாணவர்களும் நம் நாட்டுச் சரித்திரத்தின் பல துறைகளில் ஆராய்ச்சி நடத்த வசதிகள் ஏற்பட்டன. வர வர ஐரோப்பியர் முயற்சி படிப்படியாகக் குறைந்து இப்போது அநேகமாய் ஒன்று இல்லாமயே போய் விட்டது. இனி மேல் நம் சரித்திரத்தை நம்மவர் ஆராய்ந்தால் உண்டு, இல்லாவிடில் வேறு யாரும் அதைச் செய்யத்தலைப்பட மாட்டார்கள்.*

(* வரலாற்றுப் பேராசிரியர் க.அ. நீலகண்ட சாஸ்திரி, ‘சரித்திர ஆராய்ச்சி, கலைமகள், நவம்பர், 1947, பக் 529.)

நம் சரித்திரத்தை நாமே ஆராய்தல் என்ற அடிப்படையில் இது தொடர்கிறது.

மூலகாரணங்களை ஆராய்தல்

“ஒரு குறிப்பிட்ட புரட்சியைப் பற்றிய வரலாற்றை எழுதுவோர், அதன் உண்மையான மூல காரணங்களை விவரித்துரைத்த பின், அப்போது நிகழ்ந்த சம்பவங்களை விவரிக்க வேண்டும். சரித்திர லட்சணம் அதுதான். புரட்சியின் ஆதி காரணங்களையும் அதை இயக்குவித்த சக்திகளையும் தெளிவாகவும் உண்மையாகவும் பாரபட்சமின்றியும் விவரித்தால்தான், அதைப்பற்றிய சரித்தரமானது அதன் சம்பந்தமான சகல விவரங்களும் அடங்கிய ஒரு நிரந்தரமான உண்மைச் சாசனமாக விளங்க முடியும்.

புரட்சியை ஓட்டிய சம்பவங்களைக் காட்டிலும், அந்தப் புரட்சி ஏற்படுவதற்கான மூலகாரணங்களை ஆராய்வதே சரித்திராசிரியரின் முக்கிய வேலையாகும். காக்கை உட்கார்ந்த சமயம் பனம் பழம் விழுந்தால், அதைத் தள்ளியது காக்தை தான் என்று முடிவு கட்டிவிடக் கூடாது. அவ்விதம் எழுதப்படும் சரித்திரமானது முன்னுக்குப் பின் முரணாக இருப்பதுடன் குழப்பத்தையும் உண்டாக்கிவிடும்.

விபரீதப் போக்குள்ள சரித்திராசிரியர்களால் குழப்பப்பட்ட சரித்திரங்கள் பல உள்ளன

விருப்பு, வெறுப்பும் உண்மையைத் திரித்துக் கூறும் சுபாவமும் உள்ள சரித்திராசிரியர்களால் மற்றொரு பெருந்துன்பமும் விளைகின்றது. குறிப்பிட்ட தலைவர்களைத்

தலைமுறை தலைமுறையாகப் போற்றி வணங்க வேண்டிய சந்ததிகள், அந்தத் தலைவர்களைத் தூற்றும் படியாகவும், அறிவிலிகளான அல்லது பொய்யர்களான சரித்திராசிரியர்கள் செய்து விடகின்றனர்.*

(* வீரஸாவர்க்கர், ஜெயமணி, ஸா. சுப்பிரமணியன் (தமிழாக்கம்) எரிமலை அல்லது முதலாவது 'இந்திய சுதந்திர யுத்தம்' சென்னை 1957).

இந்தியாவில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் மூலபிதா வீரஸாவர்க்கரின் இந்த வரிகளை எண்ணத்தில் தாங்கியவாறு சரித்திரத்தின் முந்தையப் பக்கங்கள் மீண்டும் புரட்டிப் பார்க்கப்படுகிறது. போற்றிப் பாராட்டப்பட வேண்டிய தலைவர்களைத் தூற்றும் படியான நிலையைக் கண்டு சோற்றுத் துருத்தியாய் இருந்து விடுவதா? ஆற்று வெள்ளமென வரும் அடுக்கடுக்கான சான்றுகளைக் கொண்டு, உண்மை நிலையினை உலகிற்கு மீண்டும் நினைவுபடுத்துவதா? என்ற மனப்போரின் விளைவு. . .

ஜாதகம் முதல் இரங்கற்பாட்டு வரையில் ஒன்று விடாமல் எழுதுவதுதான் சரித்திரம் என்ற நினைப்பு மாறிவரும் காலம் இது. ரஸமான சம்பவங்களைக் கோர்வைப்படுத்தி அச்சம்பவங்களினூடே சரித்திர நாயகரின் இயல்பு சுரந்து நிற்கும் படியாக எழுதுவதைச் சிறந்த சிருஷ்டியென்று மதிக்கும் காலம் இது. இந்தச் சரித்திரம் அப்படி அமைந்தது.*

(*டாக்டர் தி.சே.செள. ராஜன், 'வ.வே.சு. ஐயர்', பக் IV. சென்னை 1956.)

இந்த அடிப்படையில்,

இதோ:

வரலாற்றின் வெளிச்சத்தில் மாமன்னர் ஔரங்கஜேப் . . .

2

தந்தையை சிறையில் தள்ளியவரா?

ஐந்தாவது முகலாயச்சக்கரவர்த்தி அபுல்முஸஃப்ஃபர் ஷிஹாபுத்தீன் முஹம்மத் ஷாஜகானின் (Shahjahan) (ஜனவரி 1592 - பிப்ரவரி 1666) புதல்வரான ஔரங்கஜேப் கி.பி. 1658 இல் முகலாயப் பேரரசின் சக்கரவர்த்தியாக அமர்ந்தார். அவ்வேளையில் தந்தை ஷாஜகானைச் சிறையில் அடைத்தார்; கொடுமைகள் செய்தார்; இறுதி நாட்களில் அவரை கண்ணியக் குறைவாக நடத்தினார். அவரது உடல் அடக்கமும் தகுந்த மரியாதைகளுடன் நடத்தப்படவில்லை; இது தந்தை ஷாஜகானுக்கு தனயன் ஔரங்கஜேப் இழைத்ததாகக் சொல்லப்பட்டு வரும் குற்றச்சாட்டுகள்.

இதன் உண்மை நிலை என்ன?

பாசமும் - பகைமையும்

ஆக்ரா கோட்டையைக் கைப்பற்றியதும், ஷாஜகானிடம், மாமன்னர் ஆலம்கீர் ஔரங்கஜேப் தமது புதல்வரான இளவரசர் முஹம்மத் சுல்தானை, கி.பி. 1658 ஜூன் 18ஆம் தேதி (ஹிஜ்ரி 1067 ரம்ஜான் 17) அனுப்பி வைத்து, ‘ஷாஜகான், கோட்டைக்கு வெளியோ வரவேண்டாம்‘ என்று பணிவாகக் கூறும்படி சொல்லி அனுப்பினார். இதைத்தான், ‘ஷாஜகான், ஔரங்கஜேப்பால் சிறையில் அடைக்கப்பட்டார்’ என்று நமக்கு பள்ளிக்கூடங்களிலும், கலாசாலைகளிலும் போதிக்கப்படுகிறது.

வரலாற்றின் இந்தப் பகுதியை எழுதிய பலரும்

ஔரங்கஜேப்பை குறை கூறியே எழுதியிருக்கிறார்கள். ஆனால் உண்மை நிலை என்ன? சற்று விரிவாக ஆராய வேண்டிய முக்கியமான விஷயம் இது.

மும்தாஜ் மஹால்

பேரரசின் பிரபுக்களும் மிக்க ஆற்றல் வாய்ந்தரும் செல்வந்தருமான ஆஸப்கான் என்பவரின் மகள் நவாப் அலியா பேகம் (Nawab Aliya Begum). அர்ஜுமந்பானோ பேகம் (Arjumand Bano Begam), மும்தாஜ்மஹால் (Mumtaz Mahal), அரண்மனையின் அணிகலன் (The Ornament of the Palace) என்ற பெயர்களும் இவருக்கு உண்டு. தனது 20ஆவது வயதில் ஷாஜகான் கி.பி. 1612 இல் மும்தாஜ் மஹாலைத் திருமணம் செய்தார். கி.பி. 1613 ஆம் ஆண்டிற்கும் 1631 ஆம் ஆண்டு ஜுன் 17 இல் பிரசவ காலத்தில் தனது 39ஆவது வயதில் மரணம் அடையும் வரை எட்டு புதல்வர்களையும், ஆறு புதல்விகளையும் மும்தாஜ்மஹால் பெற்றார்.

தாராஷிக்கோ, ஷுஜா, ஔரங்கஜேப், மூராத் பக்ஷ் ஆகிய நால்வரும் ஒரு தாயின் மக்கள்; ஆம். அர்ஜுமந்த் பானு பேகம் என்ற மும்தாஜ் மஹாலுக்குப் பிறந்த பிள்ளைகள்.

ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளான, இவர்களைத் தந்தை ஷாஜகான் எப்படி நடத்தினார்?

வெண்ணையும் சுண்ணாம்பும்

தந்தை ஷாஜகான், தனது பிள்ளைகளைப் பேதமின்றி நடத்தவில்லை; மூத்த மகன் தாராஷுக்கோவிடம் அதிக அன்பு காட்டினர் அவருக்கு அதிக சலுகைகளை வழங்கினார். இளம் பிராயத்திலிருந்தே இந்த முறையை ஷாஜகான் பின்பற்றினார் என்பதற்கு வரலாற்றில் நிறைய சான்றுகள் உள்ளன.

624 பக்கங்களில் சுருக்கி எழுதப்பட்ட ‘ஷாஜகான் நாமா’ என்ற வாழ்க்கை வரலாற்று நூலில்,

இளவரசர்களுக்கு தினசரி வழங்கிய செலவுத் தொகை பற்றிய (Allowance) விவரம் தரப்பட்டிருக்கிறது.

‘The daily allowance of the Princes were allotted as follows. 1000 rupees to the honorable Prince Darashikoh... 500 rupees to Prince Muhammad Aurangzeb. . .*

(* ‘The Shahjahan Nama’ edited by W.E. Begley and Z.A. Desai. P. 18.)

தாராஷுக்கோவிற்கு ஆயிரம் ரூபாய் செலவுத் தொகை வழங்கிய ஷாஜகான், ஔரங்கஜேப்பிற்கு வழங்கியது, அதில் பாதித் தொகை ரூபாய் 500 மட்டுமே.

ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்;

ஒரே சக்கரவர்த்தியின் இளவரசர்கள்;

இளம்பிராயத்திலேயே இவர்களுக்குள் பேதங்காட்டியவர் ஷாஜகான்.

மூத்த மகன் மீது மோகம்

யமுனா நதிக்கரையில் மாளிகையொன்று கட்டிக்கொள்ள தாராஷுக்கோவிற்கு இரண்டுலட்ச ரூபாயை ஷாஜகான் அளித்தார். மாளிகையும் கட்டப்பட்டது. தான் கட்டிய புது மாளிகையைப் பார்ப்பதற்காகத் தந்தையையும், சகோதரர்களையும் தாராஷுக்கோ அழைத்தார்.

அந்த மாளிகையில் நிலவறை ஒன்று கட்டப்பட்டிருந்தது. அதில் ஆள் உயர நிலைக்கண்ணாடிகள் பொருத்தப்பட்டு இருந்தன. அந்த அலங்காரத்தைப் பார்வையிடும்படி சக்கரவர்த்தியையும், தன் சகோதரர்களையும் தாரா அழைத்துச்சென்றார். ஔரங்கஜேப் அந்த அறைக்குப் போக்குவரத்தாயிருந்த வழிக்கருகில் உட்கார்ந்து கொண்டார். அதைப் பார்த்த தாரா, ‘அவன் எங்கே உட்கார்ந்திருக்கிறான் பார்’ என்று கூறுவது போல ஷாஜகானிடம் கண் சமிக்கை காட்டினார்.

‘நீ ஜனங்கள் போக வேண்டிய, வரவேண்டிய வழியில் உன் தம்பிமாருக்கும் கீழானதும் பின்னாலுள்ளதுமான இடத்தில் உட்கார வேண்டிய அவசியமென்ன இருக்கிறது?’ என்று ஷாஜகான் ஔரங்கஜேப்பிடம் கேட்டார். ‘பின்னால் இதற்குக் காரணம் கூறுகிறேன்’ என்று விடை அளித்த ஔரங்கஜேப், மத்தியான (லுஹர்) தொழுகைக்குப் போக வேண்டும் என்று சொல்லிவிட்டு ஷாஜகானிடம் அனுமதி பெறாமலே அங்கிருந்து சென்றுவிட்டார்.

தன்னிடம் ஏதும் சொல்லாமல் தாராவின் மாளிகையின் நிலவறையின் வெளியிலிருந்து ஔரங்கஜேப் சென்று விட்டதையறிந்த ஷாஜகானிடம், தாராஷுக்கோ, ‘பார்த்தீர்களா! உங்களை மதிக்கவில்லை ஔரங்கஜேப்’ என்று தூபமிட்டார். ஷாஜகான் கோபமுற்றார். விளைவு “தர்பார் மண்டபத்திற்கு ஔரங்கஜேப் வரக்கூடாது” என்று விலக்கி வைக்கப்பட்டார். (He was forbidden from the Court)*

(* Jadunath Sarkar. ‘History of Aurangzib’ Vol.I, Calcutta, 1912. P. 79.)

தந்தை ஷாஜகானிடம் மூத்த மகன் தாரா கொண்டிருந்த செல்வாக்கையும், தாராமீது ஷாஜகான் கொண்டிருந்த பாசத்தையும் வரலாற்று நடுநிலையாளர்களின் பார்வைக்கு வைத்துவிட்டு விஷயத்தைத் தொடர்வோம்.

அவமானமும் அர்த்தமுள்ள காரணமும்

தந்தை ஷாஜகானின் உத்திரவால், அதுவும் மூத்த சகோதரர் தாராவின் ஏற்பட்டால் வெளியான உத்திரவால் அவமானத்திற்குள்ளாக்கப்பட்ட ஔரங்கஜேப், ஏழு மாதங்கள் அரசவை தர்பாருக்குச் செல்லவில்லை. ஒரு நாள் தனது சகோதரி ஜஹானாராவிடம் ஔரங்கஜேப் சொன்னார்.

“தாராவின் நிலவறையில் ஒரே ஒர கதவுதான் இருந்தது; தந்தையையும், எங்களையும் அந்த நிலவறைக்குள் உட்கார வைத்துவிட்டு எல்லாம் சரியாய் நடக்கிறதா என்று மேல்பார்வை பார்ப்பவரைப் போல் பல தடவை வெளியிற் போவதும், உள்ளே வருவதுமாய் ‘தாரா’ இருந்ததால், நான் ஐயமுற்றேன். ‘தாரா’ தான் சிம்மாசனம் ஏறுவதற்காகத் தன் தந்தையையும், சகோதரர்களையும் அங்கே அடைத்து வைத்துக் கொன்றுவிடுவார் என்பதால்தான் நான் அந்த அறைக்குள் செல்லவில்லை; இம்மாதிரியான முயற்சிகள் எதுவும் எடுக்கப்பட்டால் அதனைத் தடுத்திடவே வாசலில் காவல்காரனைப் போல் இருந்தேன். ஆனால் தந்தையோ நான் தரையிலிருப்பது அந்தஸ்திற்குக் குறைவென்று, அங்கிருப்பதைக் கண்டித்தார். நான் இறைவனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டவாறே வெளியேறி வந்துவிட்டேன்”.

வேண்டாத பாசமும் வீண் சந்தேகமும்

ஔரங்கஜேப்பின் விளக்கத்தைக் கேட்டு தந்தையிடம் ஜஹானாரா தெரிவித்திட, ஷாஜகான் உண்மையை உணர்ந்தார்.

‘இதனால் ஷாஜகான் சொற்பத்தில் காரணமில்லாமலே தன் புத்திரர் மேல்கூட விபரீதமான சந்தேகம் கொள்ளும் குணமுடையவரென்று நன்கு விளங்குகிறது.*

(* ஆரணி குப்புசாமி முதலியார் எழுதிய சென்னை, திருவல்லிக்கேணி, எம். ஏ. ஷாகுல் ஹமீது அண்ட் ஸன்ஸ் அவர்களால் ஷாஹுல் ஹமீதிய்யா அச்சுக்கூடத்தில் 1924-ல் பதிப்பிக்கப்பட்டு இரண்டு ரூபாய் விலையில் வெளியான

‘ஔரங்கஸீப்’ நூல் பக் 46.)

ஆலம்கீரின் ஆரம்பகாலப் பதவிகள்

கி.பி. 1634 ஆம் ஆண்டில் ஔரங்கஜேப் தனது பதினாறாவது வயதில் பத்தாயிரம் குதிரைப்படை வீரர்களின் தலைவராகவும், நான்காயிரம் ஜாதிக் குதிரைகளைப் பராமரித்திடும் பொறுப்பையும் பெற்றவர்.

ஆர்சா நாட்டு ஜுஜார்சிங் என்ற கிளர்ச்சிக்காரருக்கு எதிராகப் ‘பந்தல்கண்டு’ நாட்டுப் படையெடுப்பின் தலைவராக ஔரங்கஜேப் சென்றார். அரசியல் போர்க்களத்தில் அவர் பெற்ற முதல் அனுபவம் அங்குதான்.

கி.பி. 1636 ஜூலை 14ஆம் நாள் தலைசிறந்த தானைத்தலைவர்களையும், மண்ணைக் கவ்வ வைக்கின்ற, பல பிரச்சனைகளும், பல எதிரிகளும் சூழந்த தக்காணத்தின் ஆளுநராக ஔரங்கஜேப் நியமிக்கப்பட்டார்.

தக்காணம்

மலைப் பகுதிகளில் 53 கோட்டைகளும், சமவெளிகளில் 10 கோட்டைகளும் அமையப் பெற்றது தக்காணம். தலை சிறந்த தளபதிகளையும் தலை கவிழச் செய்யும் சிறப்பிற்குரியது தக்காணம்.

தபதி (Tabti) நதிப் பள்ளத்தாக்கில் புர்கான் பூரைத் தலைநகராகவும் அசிர்கார் கோட்டையை அரணாகவும் கொண்டு அமைந்த காந்தேஷ் பகுதி.

ஔரங்கபாத்தைக் தலைநகராகக் கொண்ட தௌலதாபாத் பகுதி.

எலிச்பூரைத் தலைநகராகக் கொண்ட காந்தேஷிற்குத் தென்கிழக்கிலிருந்த இன்றைய மத்தியப்பிரதேசத்திற்கு உட்பட்ட பகுதி;

கோல்கொண்டா நாட்டிற்கும், பீகாருக்கும் இடைப்பட்ட கோட்டைகளும் குன்றுகளும் நிரம்பிய, நான்தெரைத் (Nander) தலைநகராகக் கொண்ட அன்றைய தெலுங்கானாப் பகுதி ஆகிய நான்கு பகுதிகளையும் உள்ளடக்கியது தான் தக்காணம்.

அரசப் பிரதிநிதி வருவாய்த் தொகையிலிருந்தே இராணுவச் செலவுகளைக் கவனித்தும், நிர்வாகச் செலவிற்கும், மண்டலத்தின் அமைதிக்கும் இவ்வருவாயைக் கொண்டே செலவை ஈடுகட்டவும் நிர்வாகத்தின் ஒழுங்கை நிலைநாட்ட

வேண்டிய நிலையில் ஔரங்கஜேப் இருந்தார்.

பிரச்சினைகள் நிறைந்த, பெரிதும் வருவாய்க்கு வழியில்லாத தக்காணத்தின் ஆளுநராகப் பொறுப்பேற்ற ஔரங்கஜேப் அங்கு யுத்த களங்களைச் சந்தித்தார்.

சிவாஜியின் தந்தையை வென்ற தீரர்

தக்காணத்தில், உத்கீர், அவுஸா, பக்லானா ஆகிய இடங்களில் ஔரங்கஜேப் பெற்ற வெற்றிகள் அவருக்குப் பெரும் சிறப்பையும் பெருமையையும் தந்தது.

நாஸிக் நகருக்கு அருகிலுள்ள பக்லானா கோட்டையின் பாதுகாவலராக சிவாஜியின் தந்தையார் ஷாஜிபான்ஸ்லேயும், அவருக்குத் துணையாக கோலாஜிபான்ஸ்லேயும் இருந்தனர்.

தக்காணத்தின் ஆளுநரான ஔரங்கஜேப் இருவரையும் எளிதில் வெற்றி கொண்டார்.

நாசிக் நகருக்கு அருகிலிருந்த குன்றுகளில் மிகவும் மதிப்புவாய்ந்த ஒரு துண்டுப் பிரதேசத்தைப் பேரரசுடன் இணைத்தவர் ஔரங்கஜேப்.

தங்கையும் தீக்காயமும்

கி.பி. 1644 மார்ச் 26 இல் எரியும் மெழுகுவர்த்தியை எடுத்துச் சென்ற போது, ஆக்ரா மாளிகையில் தனது ஆடையில் தீப்பற்றிக் கொண்டு, உடல் வெந்து போனது ஔரங்கஜேப்பின் சகோதரி ஜஹானாரா பேகத்திற்கு.

நோயுற்றிருந்த அவருக்கு அரண்மனையில் சிகிச்சைகள் அளிக்கப்பட்டது.

குணப்படுத்தியது யார்?

கேப்பிரியம் பௌடன் (Gabriel Bowden) என்ற ஆங்கில மருத்துவர் ஜஹானாராவைக் குணப்படுத்தினார் என்று வரலாற்றில் எழுதுகிறார்கள். ஜஹானாரா பேகம் தீக்காயப்பட்டது 1644 மார்ச் 26. கேப்பிரியல் பௌடன் 1644 செப்டம்பர் வரையில் சூரத்திற்கு வந்து சேர வில்லை.

1645 ஜனவரி 3இல் சூரத்திலிருந்து பௌடன் எழுதிய கடிதம் அவர் அந்த ஆண்டின் இறுதியில்தான் இங்கு வந்ததை உறுதிப்படுத்துகிறது.

ஆனால் 1644 நவம்பருக்குள் ஜஹானாரா பேகம் பூரண குணம் பெற்று விடுகிறார். எனவே ஆங்கில மருத்துவர் ஜஹானாரா

பேகத்தைக் குணப்படுத்தினார் என்பது தவறாகும். அது உண்மையல்ல என்று சர் வில்லியம் பாஸ்டர் (Sir William Foster) இந்தியன் ஆண்டிக்குவரி (Indian Antiquary) 1911ம் வருடம் வெளியானது. பக்கம் 254 இல் தெரிவித்திருக்கிறார்.*

(* வின்சென்ட்ஸ்மித் 'ஆக்ஸ்போர்ட் இந்திய வரலாறு' 1923, பக். 401.)

ஆரிப் என்ற அடிமை ஒருவரால் தயாரிக்கப்பட்ட களிம்பு ஒன்றின் மூலம் முழுக்குணத்தையும் பெற்ற ஜஹானாராவின் தீக்காயத்தைக் குணப்படுத்திய விஷயத்தில் கட்டுக்கதையை அவிழ்த்துவிட்டவர்கள் ஔரங்கஜேப்பின் விஷயத்தில் மட்டும் விட்டுவிடுவார்களா என்ன?

தங்கையைக் காண விரைந்த அண்ணன்

தீக்காயத்தில் நோயுற்றிருக்கும் தங்கை ஜஹானாராவைக் காண ஆக்ராவிற்கு விரைந்து சென்றார் ஔரங்கஜேப்.

1644 மே 2 ஆம் நாள் ஆக்ராவிற்கு வந்த ஔரங்கஜேப்பிற்கு, கிலாத் (Khilat) என்ற பட்டம் அரசவையில் வழங்கப்பட்டது. ஆனால் மே 28 இல் திடீரென ஔரங்கஜேப்பின் தக்காண ஆளுநர் பதவியை ஷாஜகான் பறித்தார். இதற்கு சொல்லப்படும் காரணங்கள் என்ன?

பதவி நீக்கமும் போலிக் காரணமும்

'ஔரங்கஜேப் தனது தோழர்களின் அறிவுரைகளால் தூண்டப்பட்டு, தனது வாளை உதறி எறிந்துவிட்டு துறவியைப் போல வாழ விரும்பினார். எனவேதான் ஷாஜகானால் பதவி நீக்கமும் செய்யப்பட்டார்' என்று ஔரங்கஜேப்பை பதவி நீக்கியதற்குக் காரணமாகச் சொல்லுகிறார்கள். ஆனால் வரலாற்றில் மறைந்து கிடப்பது என்ன என்பதற்கு ஔரங்கஜேப்பின் கடிதங்கள் உண்மையை உலகுக்குப் பறை சாற்றுகின்றன.

தாராவின் தூண்டுதல்

ஔரங்கஜேப்பின் அண்ணன் தாராஷுக்கோ, தந்தை ஷாஜகானிடம் நிறைந்த செல்வாக்கினைப் பெற்றிருந்தார். எனவே எதனையும் சாதித்தார். ஔரங்கஜேப் மீது தீராப்பகைமை கொண்டிருந்த தாராஷுக்கோ, தனது பகைமையை எண்ணி எண்ணி, தந்தையிடம் தூண்டியும், தூபமிட்டும் ஔரங்கஜேப்பின் ஆளுநர் பதவியைப் பறிப்பதற்குக் காரணமாகயிருந்தார்.

1644 மே 2 இல் அரசவையில் வரவேற்கப்பட்டுக் கிலாத்

பட்டமும் வழங்கப்பட்ட ஔரங்கஜேப்பை மே 28 இல் ஆளுநர் பதவியிலிருந்து டிஸ்மிஸ் செய்தது ஏன்?

பத்தாண்டுகளுக்குப் பின் தெரிந்த உண்மை

1656 இல் திரும்பவும் தக்காணத்தின் கவர்னராக ஔரங்கஜேப் நியமிகப்பட்டபோது தனது தங்கைக்கு எழுதிய கடிதத்தில் ஔரங்கஜேப் எழுதுகிறார்,

‘ஆட்சி சம்பந்தப்பட்ட விஷயங்களில் தந்தை ஷாஜகான், அண்ணன் தாராவின் துர்ப்போதனையால் என்னை அலட்சியப்படுத்திவந்தார். கடந்த 10 ஆண்டுகளாக இவ்விதமான அசட்டைக்கு ஆளானதைத் தெரிந்துகொண்டு சக்கரவர்த்தி ஷாஜகானின் பாதையில் தடங்கலாக இருக்க வேண்டாமென்றுதான் நான் ராஜினாமா செய்தேன்’.*

(*Prince Aurangzib, a study, by Dr. S. MeinulHaq. 1962. P.16.)

‘பாச உணர்ச்சிக்கும், ஆதரவிற்கும் மாறாகக் கொஞ்சி விளையாடும் தனது 26ம் வயதில் வஞ்சகமும், வெறுப்பும் கணைகள் போன்று தம்மீத தொடுக்கப்படும் போது’ ஔரங்கஜேப் என்ன செய்ய முடியும்?

அண்ணனின் பேச்சைக் கேட்டு, தன்னைத் தக்காண கவர்னர் பதவியிலிருந்து நீக்கியும், அரச சபையின் நிகழ்ச்சிகளிலிருந்து ஒதுக்கியும், தன்னைப் பொருட்படுத்தாது, எட்டு மாதங்கள் ஷாஜகான் நடந்து கொண்டதும் ஔரங்கஜேப்பின் இள நெஞ்சத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டது. அண்ணனின் சூழ்ச்சியையும், தந்தை ஷாஜகான் தன்னை வஞ்சிப்பதையும் உணர்ந்துகொண்ட நிலையில், ஔரங்கஜேப்பைத் திரும்பவும் 1645 பிப்ரவரி 16ல் குஜராத்தின் ஆளுநராக நியமித்தார்.

குஜராத்தின் கவர்னராக ஔரங்கஜேப்பை செயல்பட விட்டாரா ஷாஜகான்? என்ன செய்தார்? முகலாயப் பேரரசர்கள் பலர் முயன்று தோற்றிருந்த பால்க், பதக்ஷான், காந்தகார்ப் படையெடுப்பை மேற்கொள்ளச் சொல்லி ஔரங்கஜேப்பிற்கு உத்தரவிட்டார் ஷாஜகான்.

தந்தைக்கும், தனயனுக்கும் இடையில் பனிப் போரும் தொடர்ந்தது.

கந்தகாரும் ஆலம்கீரும்

கி.பி. 1647 ஜனவரி வரை ஔரங்கஜேப் குஜராத்தின் கவர்னராக இருந்தார். நிர்வாகத் திறமையையும், உறுதியையும் காண்பிக்கும் வகைளில் சிறப்பாகப் பணியாற்றிக்

கொண்டிருக்கும் போது, பால்க் (Balkh), பத்க்ஷான் (Badakhshan) பகுதிக்கு கவர்னராக ஔரங்கஜேப்பை ஷாஜகான் மாற்றினார். அதோடு கந்தகாரைக் கைப்பற்றவும் ஔரங்கஜேப்பை ஷாஜகான் அனுப்பிவைத்தார்.

கந்தகார்

ஆப்கானிஸ்தானத்தின் தென்பகுதி பெரும்பாலும் சமவெளியால் ஆனது; கிழக்குப் பாகத்தில் இந்தியாவைப் பிரிக்கும் மலைப்பகுதி; தென் பாகத்தில் பலுசிஸ்தானத்திற்கும் கந்தகாருக்கும் இடையில் கடந்து செல்ல முடியாத பாலைவனம்; வடக்கே கஜினி மலை பிரதேசமும் காபூலும்; மேற்கில் வெப்பமான வறண்ட பகுதிகள்; இவைகளால் சூழப்பட்ட கந்தகார் (Kandhahar) முக்கியமான ஒரு பகுதி.

ஆப்கானிஸ்தான், பலுசிஸ்தான், இந்தியா ஆகியவற்றை மத்திய ஆசியாவிலிருந்து பிரித்து நிற்கும் இந்து குஷ்மலை ஹீரட்டிற்கு வடக்கில் வரவர உயரம் குறைந்து, பாரசீகத்திலிருந்தோ, மத்திய ஆசியாவிலிருந்தோ அந்நியர்கள் எளிதில் இந்தியாவைத் தாக்கும் வண்ணம் அமைந்துள்ளது.

பாபரும் கந்தகாரும்

பாரசீகம், இந்தியா, துருக்கி, மத்திய ஆசியா ஆகிய நாடுகளின் வணிகர்கள் தங்கள் பொருட்களைக் கந்தகாரில் பண்டமாற்று செய்து பல பகுதிகளுக்கு எடுத்துச் சென்றனர். வருடத்திற்கு 14 ஆயிரம் ஒட்டகங்கள் இவ்வழியாக சரக்குகளை ஏற்றிச் சென்றன.

16 ஆம் நூற்றாண்டில் பாரசீக சபாவிஸ் (Safavis) பேரரசும் ஏற்பட்டதற்குப் பின்னர் கந்தகாரைக் கைப்பற்றுவதற்று இரு பேரரசுகளும் முயன்றன.

முதல் முகலாய மன்னர் பாபர், பாரசீகத்தின் ஷாஇஸ்மாயீலிடமிருந்து கி.பி. 1522 இல் கந்தகாரைக் கைப்பற்றினார். அதற்குப் பின் அது காம்ரானின் வசமாயிற்று.

ஹுமாயூனும் கந்தகாரும்

கி.பி. 1545 இல் இந்தியாவிலிருந்து தப்பி ஓடிய இரண்டாவது முகலாய மன்னர் ஹுமாயூனுக்குப் பாரசீகமன்னர் அடைக்கலம் கொடுத்தார்; வேண்டிய உதவிகளையும் செய்தார். அந்த உதவியுடன்தான் ஹுமாயூன் கந்தகாரைக் கைப்பற்றினார். ‘பாரசீகரின் உதவியுடன் கைப்பற்றி கந்தகாரைத் திரும்பவும் பாரசீக இளவரசரிடம் அளிப்பேன்’ என்று சொன்ன ஹுமாயூன்

தனது வாக்கினைக் காப்பாற்றவில்லை; ஹுமாயூன் மறைந்தார். முகலாயப் பேரரசர் அக்பர் சிறுவராயிருந்த போது கி.பி. 1558 இல் பாரசீக அரசர் சுல்தான் உசேன்மீர்ஸர் திரும்பவும் கந்தகாரைக் கைப்பற்றிக்கொண்டார்.

அக்பரும் கந்தகாரும்

பாரசீக அரசரின் மகன் மீர்ஸா முஸாபிர் உசேன் ஆட்சியின் போத அக்பரிடம், தானாகவே 1594 இல் கந்தகாரைத் தந்துவிட்டு, முகலாயப் பேரரசில் பட்டமும் பதவியும் பெற்றுக் கொண்டார்.

ஜஹாங்கீரும் கந்தகாரும்

பாரசீக மகாஷா அப்பாஸ் காலத்தில் கி.பி. 1623 இல் 45 நாட்கள் முற்றுகையிட்டு முகலாயரிடமிருந்து கந்தகார் கைப்பற்றப்பட்டது. முகலாயப் பேரரசர் ஜஹாங்கீர் இந்த முற்றுகையின் போது தனது மகன் ஷாஜகானை போர்க்களத்திற்குச் செல்ல உத்தரவிட்டார்; ஆனால் தந்தையின் உத்தரவை ஷாஜகான் நிறைவேற்றவில்லை; போர்க்களத்திற்குச் செல்லவும் இல்லை.

ஷாஜகானும் கந்தகாரும்

கி.பி. 1638 இல் கந்தகாரில் பாரசீக கவர்னராயிருந்த அலீ மர்தான்கான் (Ali Mardankhan) இலட்சக்கணக்கான ரூபாய்களையும், பட்டமும், பதவிகளையும் பெற்றுக்கொண்டு கந்தகாரை ஷாஜகானிடம் கொடுத்துவிட்டார்.

பாரசீக இரண்டாம் ஷா அப்பாஸ் தனது ஆட்சியின் போது பெரும் படையைத் திரட்டி கந்தகாரைக் கைப்பற்றிட முற்றுகையிட்டார். 1648 டிசம்பர் 16 இல் துவங்கிய முற்றுகை 1649 பிப்ரவரி 11 இல் நிறைவுற்று கந்தகார் பாரசீகர்கள் கைவசம் ஆயிற்று. இந்த நிலையில் தான் ஔரங்கஜேப்பை கந்தகாரைக் கைப்பற்ற ஷாஜகான் 1649 ஏப்ரல் மாதம் அனுப்பி வைத்தார்.

பாபர் காலத்திற்குப் பிறகு எந்த முகலாய மன்னரும் கந்தகாரை போர் செய்து வெற்றி கொள்ளவில்லை.

ஹுமாயூன் பாரசீகரின் உதவியோடு அதைக் கைப்பற்றினார். அக்பரும், ஷாஜகானும் பெரும் தொகை கொடுத்து கந்தகாரைப் பெற்றனர். முகலாயர் யாரும் வென்றிராத கந்தகாரைக் கைப்பற்ற ஷாஜகான் தனது மகன் ஔரங்கஜேப்பை அனுப்பிவைத்தார்.

இந்தப் போர்க்களத்தில் ஔரங்கஜேப்பிற்கு எந்த வகையான

அதிகாரம் ஷாஜகானால் தரப்பட்டது?

ஷாஜகானின் திட்டம்

“ஔரங்கஜேப் பாதி இராணுவத்தோடு கோட்டையைத் தாக்க வேண்டும்; அதே சமயம் முகலாயத்தளபதி சாதுல்லாகான் (Sadullahkhan) மீதி இராணுவத்தோடு மேற்குப் பக்கம் போய் பிஸ் (Bist), சமீந்தாவர் (Zamin Dawar) கோட்டைகளைக் கைப்பற்ற வேண்டும். அதனால் கந்தகாருக்கும் பாரசீகத்திற்கும் இடையே தொடர்பு துண்டிக்கப்பட்டு, கந்தகாரில் உள்ள எதிரிப் படையினர் மனம் சோர்ந்து சரண் அடைந்து விடுவார்கள்” என்று ஷாஜகான் போருக்குத் திட்டம் வகுத்துக்கொடுத்தார்.

போர்க்களத்தில்

தன்னிடம் படைகள் மிகக் குறைவாக இருப்பதாலும், படைக் கருவிகளும், போர் வீரர்களுக்குரிய பொருட்களும் பற்றாக்குறையில் இருப்பதாலும் சாதுல்லாகான் ஷாஜகானின் திட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

எதிரிகளின் பக்கத்தில் மூன்று வீரர்கள் என்றால், முகலாயர் பக்கத்தில் ஒரே ஒரு வீரர்தான். அத்துடன் பாரசீகர்களின் படை மிகவும் வலிமையானது, போர்க்கருவிகளும் மிகச்சிறந்தவை. தேவையான துப்பாக்கிகளும், பீரங்கிளும், போர்வீரருக்குரிய பொருட்களும் இல்லாதநிலையோடு போர்க்களம் செல்லும் ஔரங்கஜேப்பிற்கு ஷாஜகான் படுத்தியபாடும் சேர்ந்துகொண்டது.

ஔரங்கஜேப் சுதந்திரமாகச் செயல்பட விட்டாரா ஷாஜகான்? இல்லை. இல்லவே இல்லை.

ஷாஜகானின் உத்தரவு

‘மூல்தானிலிருந்து படையும் கிளம்பிச் சென்று ஔரங்கஜேப்பும், லாகூரிலிருந்து கிளம்பிச் சென்று சாதுல்லாகானும் பேரா என்ற இடத்தில் இணைந்த இரு படைகளும் மதில் சுவரை உடைத்து விட்டுத்தான் தாக்குதலைத் தொடுக்கவேண்டும்‘ என்று ஷாஜகான் உத்திரவு பிறப்பித்தார்.

பழுதான, பயனற்ற பீரங்கிளால் கோட்டைச் சுவரை உடைக்க முடியவில்லை. ஔரங்கஜேப் ஷாஜகானுக்குக் கடிதம் எழுதினார். ‘கோட்டைச் சுவரை உடைக்காமலேயே தாக்குதலை நடத்துகிறோம்‘ என்று ஆனால் ஷாஜகான் கண்டிப்புடன் அதை மறுத்துவிட்டார்.

தந்தைக்கும் தனயனுக்கும் மனதிலே கருத்து வேறுபாடு

தொடர்ந்து வளர ஆரம்பித்தது.

இரண்டாவது இடத்தில்

கந்தகார் போர்க்களத்தில் தளபதி சாதுல்லாகானுக்குத்தான் முக்கிய இடம் அளிக்கப்பட்டது. இரண்டாவது இடத்தில்தான் ஔரங்கஜேப் வைக்கப்பட்டார். வரலாற்றாசிரியர் ஜாதுநாத் சர்க்கார் அதுபற்றிக் கூறும்போது, Throughout the Siege he was really Second in Command.* என்று தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்.

(* Jadunath Sarkar ‘History of Aurangzib’ Vol.I. P.165.)

ஷாஜகான் நடத்திய போர்

காபூலில் இருந்து கொண்டு ஒவ்வொரு உத்திரவுகளையும் ஷாஜகான் சாதுல்லாகான் மூலமே பிறப்பித்துக் கொண்டிருந்தார்.

ஓரிடத்திலிருந்து வேறிடத்திற்குப் பீரங்கிகளைக் கொண்டு செல்வது, படைகளைப் பிரித்து அனுப்புவது, எந்த இடத்தில், எந்த நாளில், எந்த நேரத்தில், எப்படி தாக்குதலைத் தொடுப்பது என்கிற ஒவ்வொரு காரியத்திற்கும் ஷாஜகானின் உத்திரவைப் பெறவேண்டியிருந்தது.

காபூலில் இருந்து ஷாஜகானின் உத்திரவு போர்க்களத்திற்கு வந்து சேர நான்கு நாட்கள் ஆனது. அவ்வளவு கால தாமதமாக வந்த உத்திரவை ஏற்று, மதித்துத்தான் ஔரங்கஜேப் செயல்பட்டார் என்பதை எந்த வரலாற்றாசிரியரும் மறுத்திட முடியாது; மறைக்கவும் முடியாது

போர்க்களத்திலிருக்கும் சாதுல்லாகானுக்குத் தான் தினமும் ஷாஜகான் கடிதங்கள் எழுதினார் அவரிடமிருந்து செய்திகளைத் தெரிந்து கொண்டுதான் ஔரங்கஜேப் பணியாற்றினார். இத்தனைக்குப் பிறகும், போரில் தோல்வியடைந்ததற்கு ஔரங்கஜேப் பின் மீது பழியைச் சுமத்தினார் ஷாஜகான். ஆனால் நடந்தது என்ன? உண்மை வரலாறு என்ன?

தொடரும் பனிப்போர்

‘எவ்வளவு வசதிகளையும், வாய்ப்புகளையும் அளித்தேன்; அப்படி இருந்தும் ஔரங்கஜேப் அந்தக் கோட்டையைக் கைப்பற்றாதது விந்தையாக இருக்கிறது’ என்று ஔரங்கஜேப்பை குற்றம் சுமத்தி ஷாஜகான் கடிதம் எழுதினார்.

‘கந்தகாரை வெற்றி கொள்ள எவ்வளவு முயற்சி எடுத்தேன் என்பது இறைவனுக்குத் தெரியும். என் சக்திக்கு உட்பட்ட

அனைத்தையும் நான் செய்தேன் என்பதையும் இறைவன் அறிவான்; எனக்கு இன்னொரு வாய்ப்புத் தாருங்கள்; பின் வாங்குவதை தாமதப்படுத்தி இன்னொருமுறை தாக்குதல் நடத்த உத்திரவு தாருங்கள்; இத்தனை பெரிய முயற்சிகளை மேற்கொண்ட, கந்தகாரைக் கைப்பற்றாமல் திரும்பினால் எனது பெயருக்கு அது இழுக்காகும்' என்று ஔரங்கஜேப் தந்தைக்குப் பதில் கடிதம் எழுதினார்.

ஆனால் அந்த வேண்டுகோளை ஷாஜகான் ஏற்றுக் கொள்ளவில்லை. பேரரசர் ஷாஜகான் படையை திரும்ப அழைத்த செய்தியை அறிந்ததும் படைவீரர்கள், உளவாளிகள், பதுங்குகுழி அமைத்துப் போரிடுபவர்கள் அனைவரும் போர்க்களத்திலிருந்து திரும்பிவிட்டனர்.

பணிவான வேண்டுகோளும் பரிகாசமான பதிலும்

ஆரம்பத்தில் தாராஷுக்கோ தலைமையில் நான் கந்தகாருக்குச் செல்கிறேன் என்று ஔரங்கஜேப் ஷாஜகானிடம் கூறியிருந்தார். ஷாஜகான் இப்போது கந்தகாரைக் கைப்பற்ற தாராஷுக்கோவைத்தான் அனுப்பப் போகிறார் என்பதை அறிந்த ஔரங்கஜேப், 'என்னையும் தாராவுடன் அனுப்புங்கள்' என்று தந்தையிடம் வேண்டுகோள் விடுத்தார். தாராவின் சொற்படி ஆடும் ஷாஜகான் ஔரங்கஜேப்பை அப்போதும் உதாசீனப்படுத்திவிடுகிறார்.

'நீ கந்தகாரைக் கைப்பற்றக்கூடிய திறமையுள்ளவன் என்று நான் நம்பியிருந்தால் உன்னுடைய இராணுவத்தை நான் பின்வாங்கிடச் சொல்லியிருக்க மாட்டேன். ஒவ்வொரு மனிதனும் சிற்சில வேலைகளைச் செய்யலாம். அனுபவமிக்க மனிதர்களுக்கு அறிவுரைகள் தேவையில்லாத ஒன்று என்று அறிஞர்கள் கூறியிருக்கிறார்கள்' என்று ஷாஜகான் ஔரங்கஜேப்பிற்குக் கடிதம் எழுதினார்.

'சிறு துளியளவு அறிவுள்ளவனும் தன்னுடைய கெடுதல்களினால் தன்னுடைய நல்லவற்றை அறிந்து கொள்வான்; தந்தையாரின் நல்லெண்ணத்தைப் பெற வேண்டியவற்றை செய்துதான் போரிட்டிருக்கிறேன் வேண்டுமென்றே தோற்றுப் போகவில்லை; முயற்சித்து தோல்வியடையாதவர்களை முயற்சிக்கச் செய்ய சக்கரவர்த்தியின் இஷ்டப்படியே நடக்கட்டும்' என்று ஔரங்கஜேப் தந்தைக்குப் பணிவாகப் பதில் கூறினார்.

(ஔரங்கஜேப் சென்றதைவிட பல மடங்கு வீரர்களையும்,

பணத்தையும், பொருட்களையும் கொண்டு சென்ற தாராஷுக்கோவும் கந்தகாரில் ஐந்து மாத முற்றுகைக்குப் பின் தோற்றுத்தான் திரும்பினார் என்பது பின் நடந்த வரலாறு)

உள்ளத்தைக் காயப்படுத்திய உத்தரவு அம்புகள்

ஷாஜகான் பிறப்பித்த அத்தனை உத்தரவுகளையும் மதித்து நடந்த ஔரங்கஜேப்பின் எந்த வேண்டுகோளையும் ஷாஜகான் ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, ஔரங்கஜேப்பிடமிருந்து சில ஜாகீர்களையும் பறித்துக்கொண்டு, அரச வருவாயின் அளவையும் குறைத்து, ஔரங்கஜேப்பை தக்காணக் கவர்னராக மீண்டும் நியமித்தவர் ஷாஜகான்.

இந்த வடுக்கள், வேதனைகள் ஔரங்கஜேப்பின் அந்திம காலமவரை மறையவே இல்லை என்பதற்குச் சான்றுகள் பல உள்ளன.

வேதனையைச் சுமந்த வண்ணம் தனது அண்ணன் தாராவின் பேச்சைக் கேட்டு ஆடும் தந்தை ஷாஜகானை மனதிலே எண்ணி நொந்தவாறே தக்காணம் சென்றார் ஔரங்கஜேப்.

தக்காணத்தில்; தந்தை தனயன் தகராறுகள்

முகலாய சிம்மாசனத்திற்கு வாரிசுகள் உருவாவது திட்ட வட்டமான சட்டமுறையினால் அல்ல; எந்த இளவரசரும் சிம்மாசனத்திற்கு வரவேண்டுமானால் போராட்டங்களையும், சாகசங்களையும் நடத்தித்தான் வரமுடியும் என்பதை அனைவரும் அறிவர். ஆலம்கீர் ஔரங்கஜேப்பின் சாதனைகளும், ஒழுக்கமும் இஸ்லாமிய சமய வாதிகளின் மத்தியிலே அவரை ஒரு தீரராக உருவாக்கிக்கொண்டேவந்தது. அதே வேளையில் தாராஷுக்கோ மீது அவர்களின் ஆதரவும் அனுதாபமும் இல்லாது போயிற்று. இதனை உணர்ந்துகொண்ட தாராஷுக்கோவிற்கு ஔரங்கஜேப்பை 'தகுதியற்றவர்' என்று குற்றஞ்சாட்டித் தீரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அத்தோடு தந்தை ஷாஜகானையும், தமக்கை ஜஹானரா பேகத்தையும் தனது வசமாக்கிக்கொண்டிருந்தார் தாரா. எனவே ஔரங்கஜேப்பிற்கு எவ்வளவு இடைஞ்சல்களைச் செய்ய முடியுமோ அவ்வளவையும் ஷாஜகான் தொடர்ந்து செய்துவந்தார். ஔரங்கஜேப் தக்காணத்தில் பொறுப்பில் இருந்தபோது, ஷாஜகான் அவருக்கு கொடுத்த தொல்லைகள் கொஞ்சமா?

மாறுதலும் மனக்கசப்பும்

தக்காணத்தின் பகுதிகள் முன்னேற்றமில்லாது இருப்பதன் காரணங்களைத் தெளிவாகத் தெரிந்தவர் ஷாஜகான்.

இருந்தபோதிலும் ஔரங்கஜேப் பூரான்பூர் (Burhanpur) வந்தடைந்த மூன்று மாதங்களுக்குள் தௌலதாபாத்திற்கு (Dawlatabad) செல்லுமாறு ஔரங்கஜேப்பிற்கு உத்திரவிட்டார் ஷாஜகான்.

“தக்காணத்திலுள்ள நிலைமைகள் மிக மோசமாக இருப்பதால் அதனைச் சரி செய்ய வேண்டிய அவசியத்தையும், தௌலதாபாத்தில் தற்போது பிரச்சினைகள் எதுவும் இல்லை என்பதனையும் விளக்கி ஔரங்கஜேப் ஷாஜகானுக்குக் கடிதம் எழுதினார். அதோடு ‘தனது சொந்த காரியங்களைக் கூட ஒதுக்கி வைத்துவிட்டு வருகிறேன்’ என்றும் தெரிவித்தார். அவைகளை ஷாஜகான் ஏற்றுக்கொள்ளவில்லை. அதோடு ஔரங்கஜேப்பின் பொருளாதாரக் கஷ்டங்களையும் அவர் அறியவில்லை.

பற்றாக்குறை பதினெழு லட்சம்

ஔரங்கஜேப் தனது நிர்வாகங்களைக் கவனித்திட ஆகும் செலவும் அவருக்கு வழங்கிய நிலப்பகுதிகளிலிருந்து கிடைத்திடும் வருவாயையும் கணக்கிட்ட போது, 17 லட்சம் ரூபாய் பற்றாக்குறை இருப்பது தெரியவந்தது. தனது மரியாதையைக் காப்பாற்றிக்கொள்ள செழிப்பான நிலங்கள் உள்ள பிற பகுதிகளைத் தனது பொறுப்பின் கீழ் தரவேண்டும் என்று ஔரங்கஜேப், ஷாஜகானிடம் கேட்டார்.

ஜாகிர்களில் தனக்கு நிலங்கள் குறைந்ததைப் பற்றியும் சக்கரவர்த்தி ஷாஜகானின் நடவடிக்கைகளைப் பற்றியும் தங்கை ஜஹானராவிற்கு ஔரங்கஜேப் கடிதம் எழுதினார்.

‘ஷாஜகான் இந்த உண்மையான ஊழியனை ஓய்வெடுக்கச் செய்ய வேண்டுமென்று நினைத்தால் முன்னதாக தனக்கு அளிக்கப்பட்ட பக்லானா (Baglana) பகுதியைத் தந்தாலே போதும்‘, ‘இதற்கு மாறாகப் பெரிய மாகாணத்தின் நிர்வாகத்தைக் கொடுத்து என்னைக் கௌரவப்படுத்த வேண்டுமென்று நினைத்தால் அதற்கேற்றபடி எனக்கு உதவிகள் புரிந்து, தக்காண மக்கள் மத்தியிலும் சக்கரவர்த்தியின் முன்னும், தான் தகுதியற்றவன் என்ற நிலை வராதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்‘ என்றும் கேட்டுக் கொண்டார்.*

(* Dr. S. Moinulhaq, Prince Awranzib ; A Study Karachi, 1962. P.51.)

ஔரங்கஜேப்பின் இந்தப் புகார்களில் உண்மை இல்லையென்று எந்த வரலாற்றாசிரியரும் ஒதுக்கித் தள்ளிவிடமுடியாது.

நான்கிலொரு பங்கு வருவாய்

ஔரங்கஜேப்பிற்கு ஒதுக்கப்பட்டிருந்த நிலங்களின் வருவாய் ஆவணங்களில் குறிப்பிட்ட படி இல்லை. மாறாக நான்கில் ஒரு பகுதியே கிடைத்தது. தனக்கு அளிக்கப்பட்ட நிலங்களிலிருந்து கிடைத்திடும் உண்மையான வரவைப் பற்றி விவரமாக ஷாஜகானுக்கு ஔரங்கஜேப் அறிக்கை தந்த போதும், ஷாஜகானின் நடவடிக்கை குழப்பமாகவே இருந்தது.

'தக்காணத்தில் நல்ல நிலங்களை நீ எடுத்துக் கொள்' என்று ஷாஜகான் சொன்னார். ஆனால் அந்தச் சூழ்நிலையில் நல்ல நிலங்களை எடுத்துக்கொண்டால், அந்த நிலத்திற்குரிய சீமான்கள் தக்காணத்தை விட்டு வெளியேறிவிடுவார்கள்; அதன் மூலம் இராணுவத்தின் பலமும், சக்தியும் பாதிக்கப்படும். எனவே தனது பகுதிகளிலிருந்து நல்ல நிலங்களை ஒதுக்காமல், மற்ற மாகாணங்களிலிருந்து தனக்கு நல்ல நிலங்களை ஒதுக்குமாறு ஔரங்கஜேப் கேட்டுக்கொண்டதை ஷாஜகான் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே தரங்குறைந்த நிலங்களையே ஔரங்கஜேப் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

அணைக்கட்டுகளும் அபிப்ராய பேதங்களும்

காந்தேஷ் (Khandesh), பிரார் (Berar) பகுதிகளில் அணைகள் கட்டுவதற்கு ஐம்பதாயிரம் ரூபாய் வேண்டுமென்று முல்தபித்கான் (Multafitkhan) ஔரங்கஜேப்பிடம் கேட்டபோது, இந்த விஷயத்தை சக்கரவர்த்தி ஷாஜகானிடம் முறையிடுமாறு ஔரங்கஜேப் தெரிவித்தார். ஷாஜகான் இது குறித்து அறிந்ததும் ஔரங்கஜேப்பிடம் கோபப்பட்டு கடிதம் எழுதினார்.

'இந்த மாதிரி நிலைமையில் கஜானாவிலிருந்து நீயே கொடுத்திருக்கலாமே' என்று. ஆனால் தனது முந்தைய அனுபவங்களைத் தாம் இன்னும் மறக்கவில்லை என்று ஔரங்கஜேப் தந்தைக்கு கடிதம் எழுதினார்.

புறத்தில் தள்ளப்பட்ட பரிந்துரைகள்

ஔரங்கஜேப் பரிந்துரைத்த பரிந்துரைகள், பதவி உயர்வுகள், பணி நியமனங்களைப் பற்றிய பரிந்துரைகள் எதையும் ஷாஜகான் ஏற்கவில்லை. முல்தபித்கானின் புதல்வர் அஸ்தார் (Hushdar) என்பரை Darughah-i-Tupkhanah என்ற பதவிக்குப் பரிந்துரைந்த போது, ஷாஜகான் அதனை நிராகரித்ததோடு, அந்தப் பதவிக்கு சபீகான் என்ற மீர் அகமது ரித்வாய் என்பவரை (Safikhan or Mir Ahmad Ridwai) நியமித்தார். இதனையறிந்த போது ஔரங்கஜேப் மிகவும் வேதனைப்பட்டார்.

பணி உத்தரவும் பதவி பறிப்பும்

ஆசிர் பகுதியைச் சேர்ந்த கிலாதார் கோட்டையை (Qilahdar of Asir) ஷாஜகான் ஔரங்கஜேப் வசம் ஒப்படைத்தார். ஆனால் இந்தக் கோட்டையைப் பாதுகாத்திட, பராமரித்திட ஔரங்கஜேப் தேர்வு செய்த அதிகாரியை ஷாஜகான் நிறுத்திவிட்டார்.

‘இருபது நெடிய ஆண்டுகள் தான் விசுவாசமாய்ப் பணியாற்றியிருந்தும் ஷாஜகானின் நம்பிக்கையை அவரின் மருமகன் சுலைமான ஷுக்கோ (Sulaiman Shukoh) சம்பாதித்த அளவு நான் சம்பாதிக்க முடியவில்லையே’ என்று ஔரங்கஜேப் இது குறித்து ஜஹானாராவிற்குக் கடிதம் எழுதினார்.**

(* ஜாதுநாத் சர்க்கார், ஔரங்கஜேப் வரலாறு, பாகம்-1, பக்கம் 205.)

கருவாகி வளரும் கருத்து வேற்றுமைகள் குற்றம் சாட்டியவருக்குக் கொலு மண்டபத்தில் பதவி

ஔரங்கஜேப் மூல்தானில் (Multan) இருக்கும் போது அங்குள்ள விவசாயிகளை அவரது அதிகாரி மாலிக் உசேன் (Malik Husayn) துன்புறுத்துவதாக, ஷாஜகான் ஔரங்கஜேப்பிற்குக் கடிதம் எழுதினார்.

திருடர்களையும், கலகக்காரர்களையும் தவிர மாலிக் உசேன் வேறு யாரையும் தவறாக நடத்தவில்லை என்பதை நன்கு அறிந்திருந்த ஔரங்கஜேப், இது குறித்து ஷாஜகானுக்கு விவரமாகக் கடிதம் எழுதினார்; அதோடு,

“அப்படியொரு நிலை ஏற்பட்டிருந்தால் அவரை நானே தடுத்திருப்பேன்; எச்சரித்திருப்பேன்; அநேகமான அது சுயநலமிகளின் உண்மைக்குப் புறம்பான புகார்” என்றும் தெரிவித்தார்.

ஷாஜகான் மாலிக் உசேனை உடனே தனது தர்பாருக்கு வரச்சொல்லி உத்தரவு பிறப்பித்தார்; தர்பாரில் அவருக்குத் தண்டனை எதுவும் வழங்கப்படவில்லை. மாறாக ஷாஜகானால் உயர்பதவி அவருக்கு அங்கு அளிக்கப்பட்டது.

விசுவாச ஊழியர்களைப் பிரித்திடும் வேதனை

இதன் சூட்சமத்தை ஔரங்கஜேப் பின்னர் புரிந்து கொண்டார்.

‘தன்னிடமுள்ள விசுவாசமான ஊழியர்களைப் பிரிப்பது’

என்று முடிவு எடுத்து ஷாஜகான் காரியமாற்றி வருகிறார் என்பதை உணர்ந்த ஔரங்கஜேப், தமக்கை ஜஹானாராவிற்கு அதுகுறித்து நீண்டகடிதம் எழுதினார்.

‘என் கீழ் வேலை செய்யும் அதிகாரிகளை ஷாஜகான் தர்பாருக்கு அழைத்து அபரிமிதமான பதவி உயர்வுகளை அளித்தால் என்னோடு இணைந்து பணியாற்றிட எவரும் என்னுடன் இருக்க மாட்டார்கள். கடந்த இருபது ஆண்டுகளாக நான் தேர்வு செய்து எடுத்து வைத்திருக்கும் நல்ல அதிகாரிகளையெல்லாம் இப்படி கலைந்துவிட்டால், மாற்றிவிட்டால், சக்கரவர்த்தியே எடுத்துக்கொண்டுவிட்டால், எனது பணியினை நான் திருப்திகரமாக ஆற்றிட முடியாது போய்விடும்; இருந்த போதிலும் தகுதி வாய்ந்த அதிகாரிகள் தேவைப்பட்டால் என்னிடம் அது குறித்து தெரிவித்தால், நானே அவர்களை அழைத்து அங்கே அனுப்புவேன்; அப்படிச் செய்தால் அது நலமாக இருக்கும். மேலும் ஷாஜகான் என் மீது நம்பிக்கை இழக்காதிருந்தால், இம்மாதிரியான நடவடிக்கைகளின் நோக்கம் தான் என்ன? தமக்கையாரே தாங்கள் தந்தையாரிடம் தனிமையில் இது குறித்துப் பேசி அவரின் கருத்தைத் தெரிவித்தால், நான் சக்கரவர்த்தியிடம் என் மீது குற்றமிருந்தால் மன்னிப்பு கேட்கத் தயாராக இருக்கிறேன்’ என்று குறிப்பிட்டார்.

He requested his sister to speak to the Emperor about him in Privacy and then inform him about his reactions, so that he might beg forgiveness.*

(* Dr. S. MOINUL HAQ. முந்தைய நூல் பக். 53.)

ஆனால் ஔரங்கஜேப்பிற்கும் ஷாஜகானுக்குமிடையே உள்ள இடைவெளியை அதிகரிப்பதில் கண்ணுங்கருத்துமாகவே ஔரங்கஜேப்பின் விரோதிகள் செயல்பட ஆரம்பித்தார்கள்.

தக்காணத்தில் ஔரங்கஜேப் தனது ஜாகிர்தார்களிடம் நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு மேலே வசூல் செய்து விடுகிறார் என்று ஷாஜகானின் தர்பாரில் வந்து சொன்னார்கள். ஆனால் உண்மை நிலை என்ன?

நிதிப் பற்றாக்குறையும் நீதி புறக்கணிப்பும்

தக்காணத்தின் ராணுவச் செலவு, சிவில் நிர்வாகச் செலவு வகைக்கு ஆன மொத்த செலவு	ரூ. 31,76,000
அரசு நிலத்திலிருந்து கிடைத்த வருவாய்	ரூ. 2,40,000
கோல்கண்டாவிலிருந்து கிடைத்த வருவாய்	ரூ. 8,00,000
டிகோர் (Degarh) பகுதியில் கிடைத்த வருவாய்	ரூ. 1,00,000

ஆக மொத்த வருவாய்	ரூ. 11,40,000
வரவு நீக்கிப் பற்றாக்குறை	ரூ. 20,36,000

இந்தப் பற்றாக்குறையைச் சமாளிக்க தக்காணத்தின் ரிசர்வ் நிதியிலிருந்து கஜானாவின் இருப்பிலிருக்கும் ரூ. 80,60,000 லிருந்து இரண்டு ஆண்டுகள் ஔரங்கஜேப் பணத்தை எடுத்ததால், அவரின் இருப்பு நிதி ரூ. 40,50,000 ஆக குறைந்துவிட்டது. நிதி இருப்பு குறைந்து வருவதைக் கண்ட ஔரங்கஜேப் தனது தந்தை ஷாஜகானுக்கு 'மால்வா, சூரத் கஜானாக்களிலிருந்து தனது நிர்வாகச் செலவுகளுக்கு நிதி ஏற்பாடு செய்யுங்கள் என்று கேட்டார்'.

இந்தக் கோரிக்கையையும் ஷாஜகான் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்.

'நல்ல நிலங்களையெல்லாம் ஔரங்கஜேப் எடுத்துக்கொள்கிறார். பிரயோஜனமில்லாத பகுதிகளை எங்களுக்குத் தருகிறார் என்ற ஜாகீர்தார்கள் ஔரங்கஜேப்பைக் குறை கூறி ஷாஜகானுக்குக் கடிதம் எழுதினார்கள்.

'நான் நிலங்களைத் தனித்தனியாகப் பிரித்து எடுக்கவில்லை. மஹால் (Mahals) முழுவதையுமாகத் தான் எடுத்துக் கொண்டுள்ளேன்' என்று ஔரங்கஜேப் தந்தைக்கு விளக்கம் அளித்த போதிலும் ஷாஜகான் அதனையும் ஏற்றுக் கொள்ளவில்லை.

நிதிப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காக தர்பாரில் விமர்சனம்

'ஷாஜகான், ஔரங்கஜேப்பிற்கு நிதிப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காக எலிச்பூர் (Elichpur), அங்காட் (Ankot) ஆகிய பகுதிகளை வழங்கினார். இதிலிருந்து கிடைத்திடும் வருவாயைக் கணக்கிட்டு அரசுக்கு வழங்கும் நிதியிலிருந்து அதனைக் குறைத்துக் கொள்கிறார். ஆனால் உண்மை நிலை என்ன தெரியுமா? இந்த இரு பகுதிகளிலிருந்தும் கிடைத்திடும் வருவாயைவிட அதிக அளவு வருவாய் வருவதாக நிர்ணயித்து அந்தத் தொகையை ஷாஜகான் கழித்துக் கொண்டார். எனவே ஔரங்கஜேப் எனக்கு இந்த இரு ஜாகீர்களும் வேண்டாம்; அதன் வருவாயும் வேண்டாம்; தாங்கள் நிர்ணயித்த தொகையை ரொக்கமாகவே தந்து விடுங்கள்' என்று கோரிக்கை வைத்தார். இந்தக் கோரிக்கையையும் ஷாஜகான் நிராகரித்தார். அதோடு நில்லாமல் தர்பாரில் ஔரங்கஜேப்பைப் பற்றி வெளிப்படையாகவும், பகிரங்கமாகவும் விமர்சித்தார்.

நிவர்த்தியும் நிராகரிப்பும்

கி.பி. 1654 இல் ஔரங்கஜேப்பிற்கு அளிக்கப்பட வேண்டிய 30 இலட்ச ரூபாய்க்காக மால்வா கஜானாவிலிருந்து 25 லட்ச ரூபாயை அனுப்பி வைத்தார். பாக்கித் தொகையான ரூபாய் ஐந்து இலட்சத்திற்கு "நந்தர்பர் பகுதியிலுள்ள (Nandurbar) அதிகாரிகள் வசமுள்ள நிலத்தை எடுத்து அதில் வரி வசூல் செய்து கொள்ளவும்" என்று ஷாஜகான் உத்திரவிட்டார். ஆனால் அந்தப் பகுதியிலிருந்து ஔரங்கஜேப் ரூ. 92,000 மட்டுமே வருவாயாகப் பெறமுடிந்தது. எனவே எஞ்சிய ரூ. 4,08,000 க்கு கூடுதல் நிலங்களை வழங்க வேண்டினார்; இந்தக் கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டது.* தந்தை ஷாஜகானுக்கும், தனயன் ஔரங்கஜேப்பிற்கும் இடையே இடைவெளி அதிகரித்துக்கொண்டே போயிற்று.

கருத்து வேற்றுமையென்னும் கரு உருவாகி மெல்ல மெல்ல வளர்ந்து கொண்டே வந்தது.

எதுவானாலும் எதிர்ப்புத்தானா?

ஔரங்கஜேப்பிற்கும், ஷாஜகானுக்குமிடையே எந்த விஷயமானாலும் எதிரும், புதிருமான நிலையே இருந்து வந்தது. இரண்டாவது தடவையாக ஔரங்கஜேப் தக்காணத்தில் வைசிராயாக நியமிக்கப்பட்டதிலிருந்தே ஷாஜகான் ஔரங்கஜேப் மீது கடிந்துகொண்டுதான் இருந்தார். இருவருக்குமிடையே கசப்புணர்ச்சியையும், இடைவெளியையும் அதிகரித்திடச் செய்திட ஔரங்கஜேப்பின் எதிரிகள் கண்ணுங் கருத்துமாகவே தொடர்ந்து காரியமியற்றி வந்தார்கள்.

துவக்கமும் வெறுப்பும்

சிந்து கவர்னர் பொறுப்பிலிருந்து தக்காண வைசிராயாக ஔரங்கஜேப் மாற்றப்பட்ட போது தக்காணத்தில் 17 லட்சம் ரூபாய் குறைவாகக் கடைக்குமாதலால், தனது வருமானம் குறைக்கப்பட்டு வேறு இடத்திற்கு மாற்றப்படுவதற்கான காரணம் என்ன என்று ஔரங்கஜேப் கேட்டதற்கும் சரியான பதில் தரப்படவில்லை. ஆனால் அதற்கு மாறாக, பெஷாவரிலிருந்து தக்காணத்திற்கு ஔரங்கஜேப் செல்ல நான்கு மாதங்கள் ஆனதை, மிகவும் மெதுவாகவே அங்கு சென்றார் என்று ஷாஜகான் ஔரங்கஜேப்பை கடிந்துகொண்டார்.

"காந்தகார் போரை முடித்துக்கொண்டு அப்போதுதான் படை வீரர்கள் தங்கள் ஜாகீர்களுக்குச் சென்று அங்கு தங்களது பணத்தை வசூல் செய்துகொண்டு, தக்காணத்திற்குப் புறப்பட்டுச்

செல்ல தாமதம் ஆயிற்று” என்றும், வேலைகள் அதிகமாக இருந்தது என்றும், பருவ மழை பொழிந்து கொண்டிருந்ததால் சாலைகள் மிக மோசமான நிலையில் இருந்ததாலும் தாமதம் ஏற்பட்டது’ என்றும் ஔரங்கஜேப் சொல்லிய காரணங்களை ஷாஜகான் ஏற்றுக் கொள்ளவில்லை; மாறாக எரிச்சலுற்று வெறுப்பைக் கொட்டவும் செய்தார்.

நீ ஒரு முஸல்மானா?

தக்காணத்திலுள்ள ஜாகீர்தார்கள் (ஒரு நபரின் தனித் திறமையைப் போற்றும் வகையில் அரசரால் அவருக்குக் கொடுக்கப்பட்ட நிலப்பகுதியே ஜாகீர் என்பது) தங்களிடமிருந்து ஔரங்கஜேப் நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு மேலே வசூல் செய்து விடுகிறார் என்று, தர்பாருக்குச் சென்று ஷாஜகானிடம் உண்மைக்கு மாறாகத் தெரிவித்துவிடுகின்றனர். எனவே ஷாஜகான் தக்காணத்திற்குப் பணம் அனுப்புவதை நிறுத்திவிடத் தீர்மானிக்கிறார்; ஆனால் நிதிப் பற்றாக்குறையிலிருக்கும் ஔரங்கஜேப் கூடுதல் நிதி கேட்கிறார்.

இந்த நிலையில் நிதி வசூல் விவரங்களைத் தவறுதலாகப் புரிந்துகொண்டு ஷாஜகான் கோபமுற்று ஔரங்கஜேப்பிற்குக் கடிதம் எழுதுகிறார்.

‘ஒரு பர்கானாவில் உள்ள நல்ல விளைச்சல் நிலமுள்ள கிராமங்கள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு, வருமானமில்லாத நிலங்களை மற்றவர்களுக்கு நீ வழங்குவது ஒரு அநியாயமான நடவடிக்கையாகும். ஒரு முஸல்மானுக்குத் தகுதியில்லாத செயலும் ஆகிறது”.

நான் முஸல்மான்தான்!

தந்தையின் கோபக்கனல் கொட்டிய கடிதத்திற்கு ஔரங்கஜேப் எழுதிய பதில் இதோ:

“நான் அல்லாவிற்குப் பயந்து சரியாகவே செய்துள்ளேன். எனது வாழ்வில் நான் அநீதியாக நடந்து கொள்ளவில்லை. நானாக யாருடைய நிலத்தையும் எடுக்கவில்லை. உங்களது அதிகாரிகள், உங்களின் உத்திரவின் பேரில் தான் நிலத்தைத் தருகிறார்கள். ஷெயிஸ்டகானுக்கு (Shaistakhan) உங்கள் அதிகாரிகள் என்ன உத்திரவைத் தந்தார்களோ, அதைத்தான் எனக்கும் தந்திருக்கிறார்கள். இதைப்பற்றியெல்லாம் உங்கள் அதிகாரிகள் உங்களிடம் ஏன் சொல்லவில்லை? என்னைத் தீரவிசாரிக்காமல், ஒரு புகார் வந்ததும் நீங்கள் முஸல்மான்

(Musalman) என்ற வார்த்தையெல்லாம் உபயோகப்படுத்தி விட்டீர்கள்; என்னைப் பற்றிக் குறை கூறியவர்கள் எனக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பளத்தை விட நான் அதிகமாக வாங்குகிறேன் என்று கூறியதைக் கேட்டு நீங்கள் எனது சம்பளத்திலும் ரூ. 50,000 குறைத்து உத்திரவிட்டுள்ளீர்கள். எனது சம்பளத்தைக் குறைத்ததற்குப் பதிலாக எனக்கு எதைத் தருகிறீர்கள் என்பதும் தெரியவில்லை" என்று ஔரங்கஜேப் தனது கடிதத்தில் குறிப்பிட்டார்.

ஔரங்கஜேப்பின் விளக்கங்களைக் கேட்கும் நிலையில் ஷாஜகான் இல்லை என்பதை நிரூபித்திடும் வகையில் சம்பவங்கள் தொடர்ந்தன.

நெசவுத் தொழிற்சாலையும் - நச்சுக் குற்றச்சாட்டும்

புரான்பூரிலுள்ள (Burhanpur) திறமை வாய்ந்த நெசவாளிகளை ஔரங்கஜேப் தனது சொந்தத் தொழிற்சாலையில் அமர்த்திக்கொண்டதால், அரசாங்கத்தின் ஆடை உற்பத்தி தொழிற்சாலைக்குத் தகுதி வாய்ந்த தொழிலாளர்கள் கிடைக்காது போயிற்று என்று ஔரங்கஜேப் மீது நச்சுக் குற்றச்சாட்டை ஷாஜகான் சுமத்தினார். ஆனால் இதனை ஆலம்கீர் ஔரங்கஜேப் மறுத்தார். ஷாஜகான் அந்த விளக்கத்தை ஏற்கவில்லை; புரான்பூரிலுள்ள அரசு அல்லாத அனைத்து தொழிற்சாலைகளையும் மூட உத்திரவிட்டார். வைசிராய் ஔரங்கஜேப்பின் நிலை குறித்து இகழ்ச்சியான எண்ணம் மக்கள் மத்தியில் ஏற்பட்டது. இப்படி தந்தைக்கும், மகனுக்கும் மனத்தாங்கல் வளர்ந்துகொண்டேவந்தது.

அத்தோடு நின்று விடாமல் ஔரங்கஜேப்பின் பிள்ளைகள் மீதும், ஷாஜகான் தனது வெறுப்பைக் காட்டினார் என்பதும் வரலாற்றில் மறுக்க முடியாத உண்மைகளாகும்.

பேரப் பிள்ளைகளும் புறக்கணிப்பும்

ஔரங்கஜேப்பை ஷாஜகான் புறக்கணித்ததோடு, ஔரங்கஜேப்பின் பிள்ளைகளையும் புறக்கணித்தார்.

ஒவ்வொரு ஆண்டும் ஷாஜகான், தனது மூத்த புதல்வர் தாராஷுக்கோவின் பிள்ளைகளுக்கு ஆபரணங்களையும் பரிசுகளையும் அளித்தார். ஆனால் ஔரங்கஜேப்பின் பிள்ளைகளுக்கு ஷாஜகான் பரிசு வழங்கவில்லை. ஒரே ஒரு தடவை மட்டும் பெயருக்கு ஔரங்கஜேப்பின் பிள்ளை ஒருவருக்குப் பரிசு வழங்கியதாகச் சொல்லப்படுகிறது.

ஔரங்கஜேப்பை புறக்கணித்தார்; ஔரங்கஜேப்பின்

பிள்ளைகளைப் புறக்கணித்தார்; அத்தோடு நின்றாரா ஷாஜகான்?

தூதுவர்களும் - தொல்லைகளும்

பிஜப்பூர், கோல்கண்டா சுல்தான்களின் அவையில் உள்ள முகலாயத் தூதுவர்களுக்குத் தக்காணத்தின் வைசிராயான நான்தான் உத்திரவுகள் பிறப்பிக்க வேண்டுமென்றும், சக்கரவர்த்தி ஷாஜகானுக்கும், அவரது தூதர்களுக்கும் இடையே உள்ள தொடர்பு வைசிராய் (ஔரங்கஜேப்) மூலமாகத்தான் இருக்க வேண்டுமென்றும் ஔரங்கஜேப் கோரிக்கை வைத்தார். ஆனால் ஷாஜகான் கடைசி வரையில் இதற்கு அனுமதி வழங்கவில்லை. இதில் ஏனோதானோ என்று நடந்துகொண்டார். (கடைசி நேரத்தில் ஓரளவு உத்தரவு அளித்தார்) அதனால் உறவின் விரிசலும் அதிகரித்துக்கொண்டே இருந்தது.

கற்பனையும் கண்டிப்பும்

விவசாயத்தையும் விவசாயிகளையும் மேம்படுத்த ஷாஜகான் தொடர்ந்து ஔரங்கஜேப்பை வலியுறுத்தினார். ஔரங்கஜேப்பும் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்தார்.

பத்து ஆண்டுகளாக சீரான நிர்வாகம் தக்காணத்தில் நடைபெறாததால் ஏற்பட்ட விளைவுகளை இரண்டு மூன்று ஆண்டுகளில் சரிசெய்துவிட முடியாது என்ற போதிலும், மூன்றாண்டு காலத்தில் பல மஹால்களில் (Mahals) வரிவசூலை நல்ல முறையில் செய்து வெற்றியடைந்தார் ஔரங்கஜேப். ஆனால் ஷாஜகான் ஔரங்கஜேப் நிர்வாகத்தில் தோல்வி அடைந்ததாக தானாகவே கற்பனை செய்து கொண்டு, தேவையில்லாமல் ஔரங்கஜேப்பைக் கண்டித்தார்; சம்பளத்தைக் குறைத்தார்; மிரட்டினார். இந்தக் காரணங்களினால் ஏற்பட்ட பகைமை உணர்ச்சிதான் பின்னர் அரசைக் கைப்பற்றும் வேளையில் சில கடுமையான நிலைகளை எடுத்திட ஔரங்கஜேப்பைத் தள்ளிற்று என்பதை எந்த வரலாற்றாசிரியராவது இல்லையென்று சொல்லிவிட முடியுமா?

வெந்த புண்ணிலே வேல்

‘தக்காணத்தில் விவசாய அபிவிருத்தியை ஏற்படுத்தி, செழிப்பான நிலையை உருவாக்கிட ஔரங்கஜேப் தவறிவிட்டார்’ என்று ஷாஜகான் குற்றம் சுமத்தினார்.

‘நான் விளைநிலங்களையும் வீடுகளையும் அதிகப்படுத்தவே எப்போதும் முயன்றிருக்கிறேன். ஆனால் என்னைப் பற்றித் தம்பட்டம் அடித்துக்கொள்ளப் பிரியமில்லாத நிலையினால்தான்

அவ்வப்போது உங்களுக்கு இதைப் பற்றி சொல்லவில்லை; இருபது ஆண்டுகளாக விளைச்சல் இல்லாதிருந்த ஒரு பர்கானாவை ஒன்றிரண்டு பருவங்களிலேயே எப்படி நான் மேம்பாடு அடையச் செய்துவிடமுடியும்? எனவே என்னைப் பற்றி இவ்வளவு குறுகிய காலத்தில் நீங்கள் எடை போடுவது தவறு' என்று ஔரங்கஜேப் பதிலளித்தார். ஆனால் இந்தப் பதிலில் திருப்தியடையும் நிலையில் ஷாஜகான் இல்லை.

மண உறவும் மனமாச்சரியமும்

ஔரங்கஜேப்பும், அவரது இளவல் ஷுஜாவும் (Shuja) தங்களது குடும்ப பந்த உறவுகளை வலுப்படுத்தி இறுக்கமாக்கிக் கொள்ள தங்களது பிள்ளைகளின் திருமண ஏற்பாடுகளைச் செய்தார்கள்.

ஔரங்கஜேப்பின் மூத்த புதல்வர் முகம்மது சுல்தானை (Muhammad Sulthan) அவரது இளவல் ஷுஜாவின் மகளுக்கு மணம் முடித்துக் கொடுத்திடவும்,

ஷுஜாவின் மகன் ஜெயினுல்தீனுக்கு (Zayn-al-Din) ஔரங்கஜேப்பின் மகளை மணம் முடித்திடவும் நிச்சயிக்கப்பட்டது.

இதனை அறிந்த ஷாஜகான், ஔரங்கஜேப்பிடம் உனது புதல்வன் முகம்மது சுல்தானுக்கு வேறு இடத்தில் திருமணம் செய்திட ஏற்பாடு செய்யச்சொல்லி வற்புறுத்தினார். அதற்கு தன் தந்தையாரிடம் ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட திருமண ஏற்பாட்டை ரத்து செய்துவிட்டு ஷுஜாவிற்குத் தான் கொடுத்த வாக்கிலிருந்து மாற முடியாத தனது நிலையை வெளிப்படுத்தினார் ஔரங்கஜேப். அதே வேளையில் ஷாஜகான், தனது மற்ற பிள்ளைகளுக்குத் திருமண ஏற்பாடுகளை எப்படி செய்யச் சொல்கிறாரோ அதன்படி செய்யத் தயாராக இருப்பதாகவும் ஔரங்கஜேப் தெரிவத்தார்.

ஆனால் ஷாஜகான் இந்தத் திருமண ஏற்பாட்டை தனது உத்திரவிற்குக் கீழ்ப்படியாத நடவடிக்கையாகவே எடுத்துக் கொண்டார். அதோடு ஔரங்கஜேப்பிடமிருந்து ஆசீர் (Asir) கோட்டையும் பிடுங்கிக் கொண்டார். இதனால் தந்தைக்கும் தனயனுக்கும் இடையே இடைவெளி மேலும் அதிகரித்துக் கொண்டே வந்தது.

ஆலம்கீர் அடக்க உணர்வு

இத்தனைக்குப் பிறகும் ஔரங்கஜேப் பொறுமையையே கடைப்பிடித்தார்.

“ஆசீர் கோட்டையைத் தன்னிடமிருந்து தனது தந்தை பிடுங்கிக்கொண்டதும், சக்கரவர்த்தி ஷாஜகான் சொன்னதை நான் ஏற்றுக் கொள்ளாததால்தான் ஆசீர் கோட்டையை பிடுங்கியதாகத் தெரிகிறது. நான் ஷாஜகானின் யோசனையை ஒத்துக் கொள்ளாததற்குத் தகுந்த காரணங்கள் இருந்தன. நான் தந்தையிடம் உண்மையைத்தான் எடுத்துரைத்தேன். இம்மாதிரியான தனிப்பட்ட காரியங்களில் சக்கரவர்த்திக்கு இந்த அடிமையின் மேல் அதிகாரம் செலுத்த உரிமை இல்லாவிட்டாலும், அப்போதே அவர் இறுதியான உத்திரவாகச் சொல்லியிருந்தால் அதற்கும் நான் கட்டுப்பட்டுத்தான் நடந்திருப்பேன்” என்று பொறுமையுடன் தந்தைக்குத் தகவல் அனுப்பினார் ஔரங்கஜேப்.

மாறுபட்ட உத்தரவும் மனத்தாங்கலும்

கோல்கண்டாவின் சுல்தான் ஆண்டுதோறும் முகலாய அரசுக்கு இரண்டு லட்சம் ஹன்களை **(Two Lakhs of Hun)** கப்பமாகக் கொடுத்திட ஒப்புக்கொண்டிருந்தார். செழிப்பும் வளமையும் நிறைந்த கோல்கண்டாவின் பகுதிகளை ஆட்சி புரிந்து வந்த சுல்தான், தான் ஒத்துக்கொண்ட தொகையினை ஒழுங்காகச் செலுத்தாமல் எட்டு லட்சம் ஹன்கள் நிலுவை ஏற்பட்டது. உடனே ஔரங்கஜேப், கோல்கண்டா சுல்தானிடம் தாங்கள் முகலாய்ப் பேரரசுக்குத் தரவேண்டிய எட்டு லட்சம் ஹன்களில் பாதித் தொகைக்கு தங்கள் பகுதியிலிருந்து யானைகளை அனுப்பினால் அதனை ஏற்றுக்கொள்ள சக்கரவர்த்தி ஷாஜகான் அனுமதித்திருக்கிறார். அவ்வாறே தாங்கள் பாக்கியினை உடனே செலுத்தக் கோருகிறேன் என்று வற்புறுத்தினார். பலமுறை முயன்றும் கோல்கண்டா சுல்தான் அதனைக் கண்டுகொள்ளவில்லை.

சிற்றரசுகளைக் கைப்பற்றும் மோகம்

கிருஷ்ணா நதிக்குத் தெற்கே தஞ்சாவூர் வரை உள்ள பகுதிகளில் விஜயநகர சாம்ராஜ்யத்தின் அழிவுற்ற பகுதிகளாகத் திகழந்துவந்த, பல இந்து சிற்றரசர்கள் ஆண்டு வந்த பகுதிகளைப் போரிட்டுக் கைப்பற்றிக்கொள்ள பிஜப்பூர், கோல்கண்டா சுல்தான்கள் திட்டமிட்டு காரியங்களை ஆற்றி வந்தனர்.

சந்திரகிரி சிற்றரசர் தன்னை பிஜப்பூர், கோல்கண்டா சுல்தான்கள் பயமுறுத்துகின்றனர். எங்கள் பகுதிகளைக் கைப்பற்றிக்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர். எனவே எங்களைக் காப்பாற்றினால் முகலாயப் பேரரசுக்கு விசுவாசமாக

நடப்பதுடன் உரிய கப்பத் தொகையையும் செலுத்துகிறேன் என்று ஔரங்கஜேப்பிடம் முறையிட்டார்.

சந்திரகிரி ரங்கராயலு

சந்திரிகிரி சிற்றரசர் ரங்கராயலுவின் வேண்டுகோளை, கோரிக்கையை மிகவும் ஆணித்தரமாகப் பரிந்துரைத்து ஷாஜகானுக்குத் தகவல் அனுப்பினார் ஔரங்கஜேப். உடனே ஷாஜகானும் சந்திரகிரிக்கு ஒரு ஆளை அனுப்பி ரங்கராயலு (Ranga Rayal) சொல்வது உண்மைதானா? என்பதைக் கண்டறிந்து வரச்சொல் என்று ஔரங்கஜேப்பிற்கு உத்திரவிட்டார். அதன் படி ஔரங்கஜேப்பும், முகம்மது மூமீன் (Muhammad Mumin) என்பவரைச் சந்திரகிரிக்கு அனுப்பி வைத்தார்.

ஷாஜகானின் இரட்டை வேடம்

தனது மகனும், தக்காணத்தின் ஆட்சியாளருமான ஔரங்கஜேப்பிற்கு மேற்சொன்ன முறையில் உத்திரவுகளை வழங்கிய ஷாஜகான், தான் பிறப்பித்த உத்திரவிற்கு நேர்மாறாக, பிஜப்பூர், கோல்கண்டா சுல்தான்கள் இருவரும் சந்திரகிரிப் பகுதியை நேரில் சென்று போரில் கைப்பற்றிக் கொள்ள உத்திரவையும் பிறப்பித்துவிட்டார்.

பிஜப்பூர், கோல்கண்டா சுல்தான்களிடமிருந்து விலை உயர்ந்த நாதர்ஸ் (Nadhrs) களைப் பெற்றுக் கொண்டு, முன்னர் பிறப்பித்திருந்த உத்தரவுகளையும் மறந்துவிட்டு ஔரங்கஜேப் மீது குற்றமும் சுமத்தினார் ஷாஜகான்.

முறையற்ற மடலும் மனக்கசப்பும்

‘சந்திரகிரி ராஜாவிற்கு நீ ஆள் ஆனப்பியது முறையற்றது; பிஜப்பூர், கோல்கண்டா சுல்தான்கள் இருவரையும் பயமுறுத்தி, தக்காணத்திற்கும், டில்லி தர்பாருக்கும் அவர்களை திரை செலுத்த நிர்ப்பந்தித்திருக்க வேண்டும்‘ என்று ஔரங்கஜேப்பிற்கு முறையற்ற மடலைத் தீட்டினார் ஷாஜகான்.

இதற்கும் கட்டுப்பட்டு ஔரங்கஜேப் மிகுந்த மனவேதனையோடு காரியமாற்ற வேண்டியதிருந்தது. பிஜப்பூர், கோல்கண்டா சுல்தான்கள் கர்நாடகப் பகுதிகளைத் தாக்கிக் கொள்ளையிட்டு அதிக அளவில் அந்தப் பகுதிகளிலிருந்து பொன்னும், பொருளும், இன்ன பிற செல்வங்களையும் எடுத்துச் சென்றிருக்கிறார்கள் என்று ஔரங்கஜேப் கடிதம் எழுதினார். ஆனால் கோல்கண்டா சுல்தானிடமிருந்து பெற்ற பரிசுப் பொருட்களை நீ தர்பாருக்கு அனுப்பி வைக்காமல் மறைத்தது ஏன்? என்று பெரும் பழி சுமத்தி ஔரங்கஜேப்பிற்கு வெந்த

புண்ணிலே வேல் பாய்ச்சும் வண்ணம் கடிதமொன்றை ஷாஜகான் எழுதினார்.

குற்றச்சாட்டுக்களால் குமுறல்

கோல்கண்டா வெற்றியில் அரசரிடமிருந்து விலை உயர்ந்த பரிசுப் பொருட்களைப் பெற்றுக் கொண்டு அவைகளை அரசுக்கு வரவேண்டிய வசூலில் கணக்கு வைத்திடாமல் ஔரங்கஜேப் மறைத்துவிட்டார் என்றும் ஷாஜகான் குற்றம் சுமத்தினார்.

ஷாஜகானால் தனக்குத்தர அனுமதிக்கப்பட்ட பொருட்களைத் தவிர வேறு எதையும் வைத்துக்கொள்ள விரும்பாத ஆலம்கீர் ஔரங்கஜேப்பிற்கு தந்தை ஷாஜகானின் கடிதம் வேதனையை மேலும் அதிகப்படுத்தியது.

பரிசுப்பொருட்களும் பாதக உத்திரவுகளும்

போரில் கிடைத்த ரொக்கப் பணம் அனைத்தும் தக்காண மாநில அரசுக்கும், நகை, யானை முதலியவற்றை மத்திய அரசுக்கும் எடுத்துகொள்வது என்றுதான் முதலில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதனை மனதில் கொண்டு, ஔரங்கஜேப் இராணுவச் செலவிற்காகக் கடன்களை வாங்கியிருந்தார். இந்த நிலையை அசட்டை பண்ணிவிட்டு, அத்துடன் முதலில் ஷாஜகான் பிறப்பித்த உத்திரவையும் மறந்துவிட்டு, எல்லாப் பொருட்களையும் ரொக்கப் பணம் உட்பட தௌலதாபாத் கஜானாவிற்கு அனுப்ப வேண்டும் என்று ஔரங்கஜேப்பைக் கட்டாயப்படுத்தினார் ஷாஜகான். இதனால் இராணுவச் செலவிற்காக வாங்கிய கடன்களினால் இருபது லட்ச ரூபாய் இழப்பிற்குள்ளானார் ஔரங்கஜேப் இந்த நிலையில் இதற்கு மேலும் ஒருபடி சென்றார் ஷாஜகான்.

‘ஔரங்கஜேப்பும் அவரது மகனும் கோல்கண்டா சுல்தானிடமிருந்து விலை உயர்ந்த பரிசுப் பொருட்களைப் பெற்றுக்கொண்டார்கள்’ என்ற புகாரை நம்பி ஔரங்கஜேப்பிற்க எச்சரிக்கையும் விடுத்தார்.

ஷாஜகானின் இத்தகைய நடவடிக்கைகளினால் மிகவும் வேதனைக்கு உள்ளான ஔரங்கஜேப், இம்முறை ஷாஜகானுக்கு கடிதம் எழுதிடாமல் டெல்லியில் வஜீராக (Wazir) நியமிக்கப்பட்ட மீர் ஜிம்லா (Mir Jumlah) விற்கும், தர்பாரிலுள்ள சில பிரபுக்களுக்கும் கடிதம் எழுதினார்.

தரங்குறைந்த வைரங்கள்

கோல்கண்டா அரசர் அளித்த பரிசுகள் மிகவும் குறைந்த

மதிப்பு உடையவை; அவர்கள் அளித்த வைரக்கற்களும் மிகுந்த குறைபாடுகளை உடையது; அவைகள் எனக்கும் அண்ணன் தாராஷுக்கோவிற்குமாக சொந்தமுறையில் அளிக்கப்பட்ட பரிசுகள் என்று ஔரங்கஜேப் தெளிவாகவே எடுத்துரைத்தார்.

மேலும் 'தான் வைத்துக் கொண்ட பொருட்கள், பரிசுப் பொருட்கள் மிகத் தரம் குறைந்ததாக உள்ளதாகவும், அது சக்கரவர்த்தி ஷாஜகானுக்கு அனுப்பி வைப்பதற்குத் தகுதியற்றதாகவே இருந்தன' என்பதையும் விளக்கி எழுதினார்.

பரிசுகள் பலர் முன்னிலையில்

அதற்கு மேலும், 'சுல்தானால் அளிக்கப்பட்ட யானைகள் விலை குறைந்ததாகவும், வைரங்கள் கருப்பாகவும் குறைபாடுகள் நிறைந்ததாகவும் இருந்தன என்றும், தனக்கு வந்த பரிசுப் பொருட்களை மறைந்திட வேண்டுமென்பது தனது எண்ணமாக இருந்திருக்குமானால், மீர்ஜீம்லா மற்றும் பிரபுக்கள் முன்னிலையில் அந்தப் பரிசுப் பொருட்களை வாங்கியிருக்க மாட்டேன்' என்றும் தெளிவாகப் பதில் தந்தார் ஔரங்கஜேப்.

ஔரங்கஜேப்பிற்குப் பதில் ஷுஜா

தக்காணத்தின் நிலையைச் சரிசெய்ய வைசிராயை மாற்றிட வேண்டும் என்று ஷாஜகான் எண்ணினார். 'தக்காணத்தில் திறம்பட ஆட்சி செய்ய ஔரங்கஜேப்பால் முடியவில்லை. எனவே தக்காணத்தின் சுபேதாரியை (Subahdari) ஷுஜா (Shuja) ஏற்றுக் கொள்வாரா?' என்றும் ஷாஜகான் கேட்டார். தந்தைக்கு எவ்வளவு விசுவாசமாக இருந்த போதிலும் தன் மீது வெறுப்பைக் காட்டுகிறாரே என்று ஔரங்கஜேப் மிகவும் மன வருத்தங்கொண்டார். 'சக்கரவர்த்தி என் மீது நம்பிக்கை இழந்து துவேஷமாக இருப்பதை அறிந்த தக்காண ஆட்சியாளர்கள் என் மீதோ நான் எழுதுவதற்கோ மதிப்பளிப்பதில்லை. அவர்கள் என்னை ஒரு பொருட்டாகவே நினைப்பதில்லை'. 'நான் கொடுக்கும் உத்திரவுகளுக்கு அவர்கள் கீழ்ப்படியவுமில்லை இனிமேலும் கீழ்ப்படியவும் மாட்டார்கள் என்று தான் தோன்றுகிறது' என்று எண்ணிய ஔரங்கஜேப் தந்தை ஷாஜகான் ஏற்படுத்திய அத்தனை இடைஞ்சல்களையும் கடந்து எடுத்த நடவடிக்கைகள் வரலாற்றில் முக்கிய இடம் வகிக்கிறது.

கோல் கொண்டா வெற்றி

அரை நூற்றாண்டுக்கு மேலாக தக்காண சுல்தான்களைத் தங்கள் ஆளுகையில் கீழ் கொண்டு வர முகலாயப் பேரரசு முயற்சித்தது. ஆனால் தக்காண சுல்தான்களோ முகலாயருக்கு

எதிராகவே இருந்தார்கள். எனவே அவர்களை முற்றிலுமாகத் தோற்கடித்து தங்கள் ராஜ்யத்தோடு இணைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயதிற்குள்ளானார்கள் முகலாயர்கள். தொலைநோக்குப் பார்வையும், தெளிவான சிந்தனையுங் கொண்ட ஔரங்கஜேப், இதனை அங்கிருந்த போது உணர்ந்து காரிய மாற்றிய போதுதான் தந்தை ஷாஜகான் மூத்த மகன் தாராஷுக்கோ மீது மோகங்கொண்டு ஔரங்கஜேப்பை இன்னலுக்குள்ளாக்கிதோடு அவரது திட்டங்களுக்கு அனுமதியும் தராமல் மனவருத்தமுறவும் செய்தார். கி.பி. 1656 இல் ஔரங்கஜேப் அத்தனையையும் கடந்து பெற்ற வெற்றிகள் கோல்கண்டாவின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது என்பது தெள்ளத் தெளிவானதாகும். (மீர்ஜிம்லா விஷயம் கோல்கண்டா வெற்றிகள் அதன் விவரங்களைத் தொடர்ந்து எழுதிடாமல், குற்றச்சாட்டுக்களின் விஷயத்தினைத் தொடர்வோம்)

பணமும் இல்லை; பரிசும் வாங்கவில்லை

தக்காணத்தில் இரண்டாவது தடவை ஐந்து வருடகாலமாக வைசிராயாக இருந்த ஔரங்கஜேப் ஒரு தடவை கூட டில்லிக்கு சக்கரவர்த்தி ஷாஜகானால் அழைக்கப்படவே இல்லை.

சக்கரவர்த்தியின் பிறந்த நாளன்று உயர்ந்த பரிசுகளை இளவரசர்கள் அளித்த போது, ஔரங்கஜேப் ஏதாவது ஒரு பரிசை தனது தந்தையும் சக்கரவர்த்தியுமான ஷாஜகானுக்கு அளித்ததாகவும் சரித்திரச் சான்றுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆலம்கீர் ஔரங்கஜேப், தனது தந்தை ஷாஜகானுக்கு எழுதிய கடிதமொன்றில்,

“சக்கரவர்த்தி அவர்களே, ‘தாரா’ கைப்பற்றிய அதிகாரத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, தாங்களே ஆட்சிப் பொறுப்பை நேரடியாகக் கவனிப்பீர்கள் என்று நம்புகிறேன்” என்று கேட்டுக் கொண்டார். இதற்கு ஷாஜகானிடமிருந்து திருப்தியான பதில் ஏதும் வரவில்லை.*

(* ஜாதுநாத் சர்க்கார், ஔரங்கஜேப் வரலாறு, பக். 8, பக். 72.)

ஜாபர்கானின் தூது

“தெற்கிலிருந்து புறப்பட்டு வந்து ஷாஜகானை நேரிலேயே சந்தித்து தன்னைப் பற்றிய அவதூறான வதந்திகளைப் பொய்யென்று நிரூபிப்பதற்காகத்தான் ஔரங்கஜேப் வருகிறார். ‘தாரா’ அதிகாரத்தைக் கைப்பற்றியதால் சாம்ராஜ்யத்தில் ஒழுங்கீனம் எப்படிப் பரவிற்று என்பதை விளக்க ஔரங்கஜேப்

வருகிறார்; தாரா ஔரங்கஜேப்பிற்கு இழைத்த அநீதிகளைப் பற்றிச் சொல்லத்தான் வருகிறார் என்ற செய்திகளைப் புதிய பிரதமர் ஜாபர்கான் (Jafarkhan) மூலம் ஔரங்கஜேப் அனுப்பிவைத்தார்.

தான் ஆக்ராவிற்கு வருவதை உறுதியாகத் தடுக்க முயன்றதால் தான் ஜஸ்வந்சிங்குடன் போராட வேண்டியதே அல்லாமல் அந்தப் போரை சக்கரவர்த்தியின் அதிகாரத்திற்கு எதிராக நடைபெற்ற போராகக் கருதக் கூடாது என்றும் ஔரங்கஜேப் செய்தி அனுப்பி வைத்தார்.

ஜஹானராவின் கடிதம்

ஔரங்கஜேப் சம்பல் பள்ளத்தாக்கைக் கடந்து வந்து கொண்டிருந்த போது, அவருக்குத் தனது மூத்த சகோதரி ஜஹானாராவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தில் ஷாஜகானின் கருத்துகள் தான் சொல்லப்பட்டிருந்தன. அதில்,

“சக்கரவர்த்தி பூரண குணமடைந்து, தானே சாம்ராஜ்யத்தைக் கவனித்து வருகிறார்; தான் சமீபத்தில் நோய்வாய்ப்பட்டிருக்கையில் அரசாங்கத்தில் எழுந்துள்ள ஒழுங்கீணங்களை அப்புறப்படுத்த முயன்று உள்ளார்; எனவே படையுடன் நீ முன்னேறி வருவது உன் தந்தைக்கு எதிராகப் போர் தொடுக்கும் நடவடிக்கையே ஆகும். உன்னுடைய நடவடிக்கைகள் தாராவிற்கு எதிராக எடுக்கப்பட்டாலும், உனது செய்கை பாவமானதுதான்” என்று குறிப்பிடப்பட்டு, ஜஹானாராவிடமிருந்து வந்த கடிதத்திற்கு ஔரங்கஜேப் நீண்ட கடிதத்தைப் பதிலாக எழுதினார்.

ஔரங்கஜேப்பின் கடிதம்

‘ஷாஜகானின் எல்லா அதிகாரமும், கட்டுப்பாடும் அற்றுப் போய்விட்டது. தாரா, தான் எல்லாவற்றையும் செய்து விட்டு தனது இளைய சகோதரர்களை அழிக்க முயற்சிக்கிறார். நான் பிஜப்பூரை வெற்றி கொள்ள முயலும் தருணத்தில் எனது முயற்சிகளைத் தோற்கடித்து, பிஜப்பூர்காரர்களுக்கு எனக்கு எதிராக நடக்கும் துணிவினை அளித்தவர் தாரா.

இத்தனைக்கும் மத்தியில் என்னை தற்காத்துக் கொள்ள நான் போராட வேண்டிய கட்டாயத்திற்குள்ளானேன். தந்தை ஷாஜகானின் சமூகத்திற்குச் சென்று இவைகளை யெல்லாம் நேரடியாக வெளிப்படுத்த வேண்டுமென்பதுதான் என்னுடைய ஒரே ஆசை. இதற்குத் தடையாக எந்த சக்தி வந்தாலும் உடைத்தெறிவேன். ‘தாரா’வை டில்லி தர்பாரிலிருந்து

வெளியேற்றி அவரை பஞ்சாப் மகாணத்திற்கு அனுப்பி வையுங்கள்' என்று ஔரங்கஜேப் எழுதினார். அதன்பின் ஔரங்கஜேப் தனது தந்தை ஷாஜகானுக்கு நேரடியாக ஒரு கடிதத்தை சாமுகாரிலிருந்து (Samugarh) எழுதினார்.

ஷாஜகானுக்கு எழுதிய கடிதம்

தனது பகைவர்களால், தன்மீது கட்டாயப்படுத்தப் பட்ட சமீபத்திய தன் நடவடிக்கைகளை மன்னித்திடுமாறு ஔரங்கஜேப் ஷாஜகானிடம் வேண்டிக் கொண்டார்.

(Excusing his late conduct af forced upon him by his enemies)

ஷாஜகானின் கடிதம்

இதற்குப் பின்னர் ஷாஜகான் தனது சொந்தக் கையெழுத்தால் எழுதிய பதில் கடிதத்தில், 'ஔரங்கஜேப்பை தனது சமூகத்திற்கு வருமாறு அழைத்தார்.

'உனது வயதான தந்தையார் உன்னைப் பார்க்க ஆர்வமாக இருப்பதாலும், நீ நானிருக்கும் இடத்திற்குச் சமீபத்தில் வந்து விட்டதாலும், தன்னைச் சந்திக்க வருமாறு ஔரங்கஜேப்பிடம் கேட்டுக் கொண்டார். ஷாஜகான்'

அரச குடும்ப அலுவல் உயர்அதிகாரி பாசீல்கான் (Fazilkhan), தலைமை நீதிபதி செய்யது ஹிதாயத்துல்லா (Syed Hedaitullah) ஆகிய இருவரும் ஔரங்கஜேப்பைச் சந்தித்து ஷாஜகானின் கடிதத்தைக் கொடுத்ததுடன், ஷாஜகான் வாய் வழியாகச் சொல்லி அனுப்பிய செய்திகளையும் தெரிவித்தனர். ஔரங்கஜேப் தனது தந்தையாரைக் காண வருவதாக அவர்களிடம் சொல்லியதும் அவர்கள் திரும்பிச் சென்றார்கள்.

பாசீல்கான் - செய்யது ஹிதாயத்துல்லா தூது

மறுநாள் பாசீல்கானும், செய்யது ஹிதாயத்துல்லாவும் ஷாஜகானிடமிருந்து ஏராளமான பரிசுப் பொருட்களையும், அன்பான செய்திகளையும் கொண்டு வந்து ஔரங்கஜேப்பைப் பார்த்தார்கள். விலை உயர்ந்த நகைகள் ஔரங்கஜேப்பிடம் ஷாஜகானின் சார்பில் வழங்கப்பட்டது.

உலகை வென்றவர்

ஆலம்கீர் (Conqueror of the Universe) 'உலகை வென்றவர்' என்று பொறிக்கப் பெற்ற புகழ் வாய்நத வாளினையும் அவர்கள் ஷாஜகானின் சார்பில் ஔரங்கஜேப்பிற்கு அளித்தார்கள்.

மூன்றாவது முறையாக பாசில்கான்

‘ஷாஜகான் இன்னும் தனது மூத்தமகன் தாராஷுக்கோவை நேசித்துக் கொண்டிருக்கிறார்; தாராவினுடைய நன்மையை மென்மேலும் அதிகரிக்கச் செய்ய சகல முயற்சிகளையும் மேற்கொள்கிறார். எனவே ஆக்ரா கோட்டைக்கு ஔரங்கஜேப்பை அழைப்பது அங்கு அவரைக் கைது செய்வதற்குத்தான’ என்று அவரது ஆதரவாளர்கள் ஔரங்கஜேப்பிடம் தெரிவித்துக்கொண்டிருந்தனர். இந்தச் சூழலில் மறுநாள் காலையில் மூன்றாவது தடவையாக நரைத்த தாடியை உடைய பாசில்கான், ஷாஜகானின் கடிதத்தை தாங்கியவாறு வந்தார்;

‘ஷாஜகான் மீது சந்தேகங்கள் தவறு என்றும், ஷாஜகானை நேரில் வந்து பார்த்து தந்தையின் பாசத்தையும் பரிவையும் கண்டுகொள்ள வேண்டும் என்றும் ஔரங்கஜேப்பை அழைத்தார் பாசில்கான்.

பாசில்கானுடன் (Fazilkhan) வந்திருந்த கலிலுல்லா கானை (K h a l i l u l l a h k h a n) ஔரங்கஜேப் தனது பக்கம் சேர்த்துக்கொண்டார். தந்தை ஷாஜகான் தனக்கு கெடுதல் எதுவும் செய்துவிட கூடாது என்பதற்காவே, அவர் வேறு எங்கும் நகர முடியாத நிலையை உருவாக்கி, அவரை அங்கேயே இருக்கச் செய்ய வேண்டும்‘ என்று ஔரங்கஜேப் தூதுவந்த இருவரிடமும் கேட்டுக் கொண்டார்.

அதன்பிறகு பாசில்கானிடம், ‘ஔரங்கஜேப் கோட்டைக்குள் வர மறுக்கிறார்’ என்று சொல்லிவிடுமாறு தெரிவித்தார்; பாசில்கானும் திரும்பிச் சென்று அந்தத் தகவலை ஷாஜகானிடம் அறிவித்தார்.

ஔரங்கஜேப்பிடம் நகரம், ஷாஜகானிடம் கோட்டை

‘மக்களின் உயிருக்கும் உடமைக்கும் எந்த விதமான சேதமும் ஏற்பட்டுவிடக்கூடாது’ என்ற நிபந்தனையுடன் ஆக்ராவைக் கைப்பற்ற ஔரங்கஜேப் ஆணை பிறப்பித்தார்.*

(* முற்கூறிய நூல், பக். 17.)

ஆனால் முராத்தின் படைகள் அதற்கு மாறாக நடந்துகொண்டன; மக்கள் பதட்டமடைந்தனர்; படைகளின் தவறான செயல்களால் பீதியுற்றனர். இதனை அறிந்ததும் ஔரங்கஜேப் மக்களைக் காத்திடவும் அமைதி நிலவிடவும் தனது மூத்த மகனை அனுப்பி வைத்தார். ஆக்ரா நகரினை ஔரங்கஜேப்பின் மூத்த புதல்வர் முகம்மது சுல்தான் கைப்பற்றிக்கொண்டார்.

ஆக்ரா நகரம் முழுவதும் ஔரங்கஜேப்பின் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்டது; ஆக்ரா கோட்டைக்குள் ஷாஜகான் இருந்தார்.

ஆக்ரா கோட்டை முற்றுகை

‘ஆக்ரா கோட்டையை ஔரங்கஜேப்பின் வீரர்கள் கைப்பற்றி, அதற்குமேல் தங்களின் எஜமானரிடம் நல்ல பெயர் வாங்கிட வேண்டுமென்பதற்காக, தன்னை யாரும் கொன்றுவிடக் கூடாதே என்று நினைத்து கோட்டைக் கதவுகளை அடைத்துக் கொண்டு கோட்டைக்குள்ளே இருந்தார் ஷாஜகான்.

உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்ய நினைத்திடாத, சாப்பிட்ட ‘உப்பிற்குத் துரோகம் செய்யாத Qalmaqs, அபிசீனியர்கள், துருக்கியர்கள் அடங்கிய ஆயிரத்தி ஐந்நூறு பேர்களை கோட்டையின் காவலாகவும் ஷாஜகான் நிறுத்திவைத்தார்.

பீரங்கிகளால் உடைக்க முடியாத கோட்டை

ஆக்ரா கோட்டையின் அடிப்பாகத்தை தாக்கி உடைத்தெறியுங்கள்’ என்று ஔரங்கஜேப் ஆணையிட்டார்.

ஜுல்பிகார்கான் (Zulfiqurkhan), பகதூர்கான் (Bahadurkhan) என்ற இருபடைத் தலைவர்கள் தங்களது படைப்பிரிவின் வீரர்களுடன் கோட்டை உடைப்புப் பணியினைத் துவக்கினார்கள். கோட்டையை உள்ளேயிருந்த தாராவின் மாளிகையை நோக்கி பீரங்கித் தாக்குதலையும் நடத்தினர்.

Aurangzeb laid siege and ordered his guns to batter the fort walls, but the fire proved ineffective as the fort was almost impregnable by assault.*

(* Ashirbadi Lal Srivastava, The Mughul Empire 1976, Agra, P. 319.)

தாக்குதல்களால் தகர்த்தெறிய முடியாத அக்கோட்டைச் சுவர்களைப் பீரங்கி வெடிகளால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

குடிதண்ணீர் இணைப்பு துண்டிப்பு

கோட்டையை உடைத்து முன்னேறுவதில் ஏற்படும் கால தாமதம் தனக்கு ஆபத்தாகவும், அபாயமாகவும் முடியலாம் என்று உணர்ந்த ஔரங்கஜேப் யமுனை ஆற்றிலிருந்து கோட்டைக்கு சென்று கொண்டிருந்த குடிதண்ணீர் இணைப்பைத் துண்டித்திட உத்திரவிட்டார்.

கோட்டைக்குள் பல கிணறுகள் இருந்தன; அவைகளில் தண்ணீரும் இருந்தன. ஆனால் அவைகள் குடிப்பதற்கு ஏற்ற நீர்

அல்ல. மேலும் ஷாஜகானுக்கு யமுனை ஆற்றின் குளிர்ந்த நீர் தான் மிகவும் பிடித்தமானது என்பதனை அறிந்திருந்த ஔரங்கஜேப், அந்த ஆற்றின் தண்ணீர் கோட்டைக்குள் செல்லவிடாமல் துண்டித்த சம்பவம் நடைபெற்றது போர்க்களத்தில்.

கோட்டைக் கதவுகளை இழுத்து மூடிவிட்டு பாதுகாப்பாக இருக்கும் ஷாஜகான்; கோட்டை வாசலைப் பீரங்கிகளால் கூட உடைத்திட முடியாத நிலையில் ஔரங்கஜேப்.

குடி தண்ணீர் செல்லும் இணைப்பைத் துண்டித்ததை ஔரங்கஜேப்பின் தவறு என்று சொல்வதா? போரில் வெற்றி பெறத் தேர்ந்தெடுத்த இராஜதந்திர வழிமுறை என்பதா?

யமுனைக் கரையில், போர்க்களத்தில் ஔரங்கஜேப் எடுத்த முடிவு சரியா? தவறா? என்பதை நடுநிலையாளர்கள் முடிவெடுத்துக் கொள்ளட்டும்.

மூன்று நாட்கள் நீடித்த நிலை

ஜூன் மாதத்திய கடுங்கோடையில் கோட்டைக்குள்ளே இருந்த கிணறுகளின் தண்ணீரைக் குடித்துத் தனது தாகத்தைத் தணித்துக்கொண்ட ஷாஜகான், 'தண்ணீரின்றித் தவிக்கும் படி என்னை விட்டிருக்கிறாய்' என்று ஔரங்கஜேப்பிற்கு மடல் எழுதினார்.

இந்த நிலை, 'உங்களுக்கு நீங்களே ஏற்படுத்திக் கொண்டது' என்று ஔரங்கஜேப் பதில் தந்தார். இந்த நிலை மூன்று நாட்கள் நீடித்தது.

நான்காவது தடவையாக பாசில்கான்

ஔரங்கஜேப்பிடம் பாசில்கான் நான்காவது முறையாக ஷாஜகானின் சார்பில் தூதராக வந்தார்.

"நான் தந்தைக்குக் கீழ்ப்படிபவன்தான்; ஆனால் இந்த நடவடிக்கை எனது பகைவர்களால் என்மீது கட்டாயமாகத் திணிக்கப்பட்டுவிட்டது. தாராவின் வஞ்சகமான நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் நான் தங்களுக்கு விசுவாசமாகவே இருந்திருக்கிறேன்; நடைபெற்ற ஒரு சில நிகழ்ச்சிகளினால் சக்கரவர்த்தியின் சமூகத்திற்கு வரதான் அஞ்சுகிறேன். சக்கரவர்த்தியவர்கள் ஆக்ரா கோட்டையின் வாயில்களைத் திறந்துவிட்டு, எனது ஆட்களையும் உள்ளே அனுமதித்து, எனது சந்தேகத்தைப் போக்கினால், அப்போது உங்களை நான் நேரிலே வந்து சந்தித்து, உங்களுடைய ஆசை

எதுவோ, அதற்கும் சம்மதித்து, உங்களுக்கு ஒரு கெடுதலும் செய்திடாமல், உங்களுக்குப் பிடித்தமில்லாத எந்தக் காரியத்தையும் செய்யாமலும் இருப்பேன்" என்று ஔரங்கஜேப் தூதுவந்த பாசில்கானிடம் சொல்லி அனுப்பினார். அதன்பின் கோட்டை வாயில் திறக்கப்பட்டது; அத்தோடு ஆக்ரா கோட்டையும் ஔரங்கஜேப்பிடம் சரண் அடைந்தது.

சொட்டு இரத்தம் சிந்தாமல் கிட்டிய கோட்டை

கி.பி. 1658 ஜூன் மாதம் 8ஆம் நாள் ஔரங்கஜேப்பின் மூத்த புதல்வர் சுல்தான் முகமது அடிதடி எதுவும் இல்லாமல், ஒரு சொட்டு இரத்தம் சிந்தாமல் கோட்டையைக் கைப்பற்றினார். அதோடு முந்தைய மூன்று முகலாயச் சக்கரவர்த்திகள் சேமித்து வைத்திருந்த சொத்துக்களான, நகைகள், கலைப்பொருட்கள் இன்ன பிற அத்தனையையும் கைப்பற்றிக் கொண்டார். பழைய அதிகாரிகள் பணிமாற்றம் செய்யப்பட்டு, புதிய அலுவலர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர்.

பரிசுகளுடன் பார்த்த பேரன்

ஔரங்கஜேப் தனது மகன் சுல்தான் முகம்மதுவை (Sultan Mahmoud) தனது தந்தை ஷாஜகானிடம் அனுப்பி, ஐந்நூறு அஸ்கரிப்ஸையும் (Asharfis), 4000 ரூபாய்களையும் அன்பளிப்பாக வழங்கிடவும், ஷாஜகானுக்கு செய்ய வேண்டிய அனைத்து வசதிகளையும் செய்துதரச் சொல்லியிருக்கிறார் என்ற தகவலையும் தெரிவித்திடவும் சொன்னார். பேரன் சுல்தான் முகம்மது தாத்தா ஷாஜகானை நேரில் சென்று சந்தித்தார். அவரை ஷாஜகான் அன்போடு வரவேற்கவும் செய்தார்.

ஜஹானாராவின் தூது

கி.பி. 1658 ஜூன் 10ஆம் நாள் ஔரங்கஜேப்பின் சகோதரியும், இளவரசியுமான ஜஹானாரா ஔரங்கஜேப்பைச் சந்தித்தார். தந்தை ஷாஜகான் ஔரங்கஜேப்பைப் பார்க்க விரும்புவதாகத் தெரிவித்தார், அதோடு

"தாராவிற்கு பஞ்சாப் பகுதிகளையும், முராத்பக்ஷிற்கு குஜராத் பகுதிகளையும், ஷுஜாவிற்கு வங்காளத்தையும், முகமது சுல்தானுக்கு தக்காணத்தையும் கொடுத்துவிட்டு, பேரரசின் பிறபகுதிகளை ஔரங்கஜேப் எடுத்துக் கொள்ளட்டும் என்றும், அரச சிம்மாசனத்திற்குரிய புலந் இக்பால் (Buland-iqbal) என்ற பட்டத்தையும் அவரே வைத்துக் கொள்ளட்டும் என்று ஷாஜகான் யோசனை சொல்லி அனுப்பியதாகவும் ஔரங்கஜேப்பிடம் தெரிவித்தார்.*

ஔரங்கஜேப்பிடம் நேரடியாகப் பேச வேண்டுமென்று ‘தான் மிகவும் விரும்புவதாகவும்’ சொல்லி அனுப்பியிருத்தார் ஷாஜகான்.

இத்தனைக்குக் பிறகும் ஷாஜகானை ஔரங்கஜேப் வீட்டுக் காவலில் வைத்திட உத்திர விட்டது நியாயமா? நம்பிக்கை துரோகமல்லவா? கேள்வி எழுகிறது. இதைப் பற்றிய உண்மையை மேலும் ஆராய வேண்டாமா?

சிம்மாசனமா? சிரசுதானமா?

ஷாஜகானின் நான்கு புதல்வர்களும் தங்களுடைய வாள் வலிமையை நிலை நிறுத்திட முயன்றனர் யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்களுக்கு கீரிடம், தோல்வியைத் தழுவுபவர்கள் உயிரிழந்தாக வேண்டும்; சிம்மாசனம் அல்லது சிரசுதானம் என்பதையும் நன்றாகவே அவர்கள் உணர்ந்திருந்தார்கள்.

தற்காப்பிற்கான போர்

தனது சகோதர்களில் யாராவது சிம்மாசனத்தைக் கைப்பற்றிவிட்டால், தான் சிறைப்பட்டு மடிய நேரிடும் என்பதை உணர்ந்திருந்த ஔரங்கஜேப் தனது தற்காப்பிற்காகத் தான் போர் செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதை வரலாற்றாசிரியர் லேன்பூல் தெளிவுபடுத்தியுள்ளார்.*

(*”But be must have known that the accession of any of his brothers meant drath or captivity for himself, and his mind must soon have been made up. In self-defence he was bound to make his bid for power,” Stanly Lane-Poole ‘Aurangzib’ P. 39.)

அஹில்கான்

ஔரங்கஜேப்பிடம் பணியாளராகப் பணியாற்றி சுதந்திரமான வரலாறொன்றை கி.பி. 1657 பிஜப்பூர் படையெடுப்பு முதல் மீர் ஜிம்லாவின் மறைவு வரை தெளிவாக எழுதியவர் அஹில்கான்.

ஷாஜகானின் எல்லாக் கடிதங்களையும், ஜஹானாராவின் கடிதங்களையும் விரிவாகக் குறிப்பிட்டு இந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் தெளிவாக எழுதியவர் இவர். இவர் எழுதிய பிரதிகள் இன்றும் ராம்பூரில் இருப்பதாக வரலாற்றாசிரியர் ஜாதுநாத்சர்க்கார் தெரிவித்திருக்கிறார்.

ஷாஜகானைப் பார்க்க விடாமல் ஔரங்கஜேப்பைத் தடுத்த பிரபுக்களை அஹில்கான், கெடுதி செய்பவர்கள், தொல்லை கொடுப்பவர் என்றும் கூறியிருக்கிறார். ஆனால் இத்தனைக்குப்

பிறகும், பிரபுக்கள் எவ்வளவு தான் தடுத்தாலும் ஔரங்கஜேப் தன் தந்தையை நேரில் சென்று காண வேண்டுமென்று பேரணியாக கோட்டைக்குள் வருகிறார். வழி நெடுகிலும் மக்கள் ஆரவாரத்துடன் அவரை வரவேற்கின்றனர்.

வந்தவர் சொன்ன செய்தி

கோட்டைக்குள் சென்று ஷாஜகானைச் சந்திக்கும் பேரணி சென்று கொண்டிருந்த போது திடீரென்று ஷெயிஸ்டகானும் (Shaishta Khan), சேக் மீரும் (Shaikh mir) ஔரங்கஜேப்பை ஷாஜகானைச் சந்திக்கச் செல்ல வேண்டாமென்று தடுத்து நிறுத்தினர்.

நாகிர்தில் தந்த கடிதம்

கி.பி. 1656 இல் ஆக்ராவின் கொத்வாலில் பணியாளராக நியமிக்கப்பட்ட, ஷாஜகானின் அடிமை நாகிர்தில் (Nahir-dil) 'தாரா' விடம், ஷாஜகான் கொடுக்கச் சொல்லி அனுப்பிய ரகசியக் கடிதமொன்றை ஔரங்கஜேப்பின் கரங்களில் கொண்டு வந்து சேர்ப்பித்துவிடுகிறார் அந்த அடிமை.

அக்கடிதத்தில் என்ன சொல்லப்பட்டிருந்தது?

"தாராஷுக்கோ! நீ டில்லியிலேயே தங்கியிரு. படைகளுக்கும், பணத்திற்கும் இங்கு பற்றாக்குறை இல்லை. அங்கிருந்து வேறு எங்கும் சென்று விடாதே! இங்குள்ள காரியங்களை நான் பார்த்துக் கொள்கிறேன்"*

(* Aqill Khan Razi, Waqaat-i-alamgiri P.63.)

கோட்டையின் கொலைச்சதி

'தன்னை வந்து பார்த்தால், ராஜாங்க நடவடிக்கைகளைப் பற்றிய ஒரு முடிவிற்கு வரலாம்' என்று சொல்லிக் கொண்டிருந்த ஷாஜகானை சந்திக்கத்தாயாரன ஔரங்கஜேப்; இந்தக் கடிதத்தின் வாசகங்களை தாராவின் மீது வற்றாத அன்பு கொண்டவரும், எந்நேரமும் ஷாஜகானுடன் உடனிருந்து கவனித்திடும் தனது சகோதரி ஜஹானாராதான் சொல்லியிருக்க வேண்டும் என்பதனை உணர்ந்து கொண்டார்.

கோட்டைக்குள் ஷாஜகானைச் சந்திக்கச் செல்லுமிடத்தில் அவரைச் சுற்றிப் பலம் பொருந்திய, கட்டுரம் வாய்ந்த தாத்தரிய அடிமைப் பெண்கள் ஆயுதங்களைத் தாங்கியவாறு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்.*

(* கி.பி. 1656 முதல் 1668 வரை இந்தியாவில் பயணம் செய்த

சம காலத்து ஆசிரியரான பிரான்சிஸ் பெர்னியர் கி.பி. 21670இல் எழுதி பாரிஸில் வெளியிட்ட நூலில் இந்த தகவலைத் தெரிவித்திருக்கிறார்.)

ஷாஜகானைக் காணச்செல்லும் ஔரங்கஜேப் மீது பாய்ந்து அவரைக் கொல்லவும் திட்டம் தீட்டப்பட்டிருந்தது என்ற தகவலைத் தான் கேள்விபட்டதாகச் சமகாலத்து ஆசிரியராகிய பெர்னியரே கூறியிருக்கிறார். ஔரங்கஜேப்பின் இன்னொரு சகோதரியான ரோஷினாரா பேகம் இந்த ரகசிய செய்தியினை ஔரங்கஜேப்பிற்கு அனுப்பி வைத்தார்.

“That princes also apprised him of the presence of the Tartar women, by whom it ws intended he should be assailed when he entered the castle”.

சரித்திர ஆசிரியர்கள் பலர் இக்கொலைத் திட்டத்தை உறுதி செய்து எழுதியிருக்கின்றனர்.

மௌலானா ஷிப்லி நுமானி

லக்னோவிலிருந்து வெளிவந்த அல்நத்வாஸ் (Al-Nadwas) இதழில் 1906, 1907, 1908ஆம் ஆண்டுகளில் ஆலம்கீர் (Alamgir) என்ற தொடரினை மறைந்த மௌலானா ஷிப்லி நுமானி (Maulana Shibli Nomani) உருதுவில் எழுதினார்கள். அதனை 1980ஆம் ஆண்டு செய்யது சகாப்பீன் அப்துர் ரஹ்மான் என்ற ஷிப்லி அகடமியின் செயலாளர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டார். அந்த நூலின் 58ஆவது பக்கத்தில் ஷாஜகான் தனது இன்னொரு மகன் ஷுஜாவிற்கு ஔரங்கஜேப்பை எதிர்த்து, அவருக்கு விரோதமாக இந்தியில் எழுதிய கடிதத்தைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்.

தந்தை ஷாஜகானிடம் சென்று மன்னிப்பு கேட்கத் தயாராக இருந்தார் ஔரங்கஜேப். ஆனால் ஷாஜகானின் செயல்கள், தாராமீது கொண்ட மங்காத பாசம், தாரா இழந்தவற்றை திரும்பப்பெற வேண்டுமென்ற தமக்கை ஜஹானாரா தந்தையுடனிருந்து கொண்டு எந்நேரமும் வற்புறுத்திடும் நிலை. இந்த நிலையில் இதோ இன்னொரு ரகசிய கடிதம். ஷாஜகான் காபூலின் கவர்னருக்கு எழுதியது.

கவர்னருக்கு எழுதிய கடிதம்

“என்னுடைய ஒடுக்கப்பட்ட மகன் தாராஷுக்கோ லாகூரை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறான். எனவே நீர் உம்முடைய படைகளுடன் லாகூருக்கு விரைந்து சென்று, அவனுடன் சேர்ந்து, என்னுடைய கடமையிலிருந்து வழுவிய மகன்களான ஔரங்கஜேப்பிற்கும், முராத்திற்கும் எதிராகப் படையெடுத்திட

வேண்டும்; என்னையும் விடுவித்திட வேண்டும்”

“மஹபத்கான் என்ற காபூலின் கவர்னருக்கு எழுதிய இந்தக் கடிதத்தையும் ஔரங்கஜேப் கைப்பற்றிக் கொண்டார்”.

பிள்ளைக்கு விரித்தவலை; பெற்றவரே விழுந்தநிலை!

சொந்த சகோதரனையே கொன்றுவிட்டு பதவிக்கு வந்த ஷாஜகான், ஆக்ரா கோட்டைக்குள் அடைபட்டவேளையிலும் ஔரங்கஜேப்பிற்கு எதிராக அனைத்து முயற்சிகளையும் செய்துகொண்டுதானிருந்தார். ஆனால் அவைகளை அறிந்துகொண்ட ஔரங்கஜேப் தனது புத்தி சாதுர்யத்தாலும், ராஜதந்திரத்தாலும் தப்பித்துக் கொண்டார் என்றால் அது மிகையாகாது.

‘தனது மகனுக்குத் தயாரித்த வலையில் தானே விழுந்துவிட்டார் ஷாஜகான்’ என்று டாக்டர் பெர்னியர் தெளிவாகவே தெரிவித்திருக்கிறார்.

மனதை உருக்கும் கடிதங்கள்

ஔரங்கஜேப்பின் ஜாகிர்கள் பலவற்றை எடுத்தும், அவரது வருமானத்தை தடுத்து நிறுத்தியும், ஔரங்கஜேப்புடன் இணைந்து பணியாற்றிய தளபதிகள் பலரையும் திரும்ப அழைத்துக் கொண்டும், அவருக்கு எதிராக 75,000 படை வீரர்களை அனுப்பியும், கோட்டைக்குள் இருந்து கொண்டே ஔரங்கஜேப்பிற்கு எதிராக காரியங்களை ஆற்றியும், எல்லாவற்றிற்கும் மேலாகக் கோட்டைக்குள்ளேயே தன்னைக் காண வரும் நேரத்தில் பலம் பொருந்திய, ஆயுதந் தாங்கிய தாத்தரியப் பெண்களால் கொலை செய்யவும் திட்டமிட்ட ஷாஜகானுக்குத்தான் ஔரங்கஜேப் தனது மகனைப் பரிசுகளுடன் அனுப்பி பார்த்திடச் செய்து மரியாதை செய்யவும் அனுப்பினார். தனது தந்தைக்கு ஔரங்கஜேப் எழுதிய கடிதங்கள் அவரது மனநிலையையும், பண்பையும் நமக்குப் பறைசாற்றுகின்றன.

“தங்களது மேலான சமூகத்திற்கு ஆக்ராவை நோக்கி நான் எனது படைகளுடன் வந்தபோது இஸ்லாமிய அரசாரன உங்களை பதவியிலிருந்த அகற்ற வேண்டிய எண்ணம் அறவே என்னிடம் கிடையாது. அம்மாதிரியான பாவகரமான தூய்மையற்ற எண்ணம் என் மனதில் ஒரு போதும் ஏற்பட்டதில்லை என்பதற்கு இறைவனே சாட்சி. இதனை நான் மறுபடியும் மறுபடியும் தெளிவாகவே தங்களுக்கு விளக்கியிருக்கிறேன்.

தாராவின் கையில் அதிகாரம்

நீங்கள் நோய்வாய்ப்பட ஆரம்பித்தபோது ஒரு முஸல்மானுக்குரிய எந்த அறிகுறியும் இல்லாத உங்களுடைய மூத்தமகன் தாரா அரசு அதிகாத்தைக் கையில் எடுத்துக்கொண்டு துன்மார்க்கமான காரியங்களில் ஈடுபட்டபோது அவரை பதவியிலிருந்து இறக்க வேண்டும் என்பதை நம்முடைய சமயக் கடமையாக நான் எடுத்துக் கொண்டேன்.

ஒரு தலைபட்சமான பார்வையினாலும், அரசியல் நிலைகளைப் பற்றி அக்கரை கொள்ளாமலும் கச்சரவர்த்தியவர்கள் மூத்த இளவரசரை அவரது போக்கிலேயே விட்டுவிட்டீர்கள். எனவே அவருக்கெதிராக ஜிஹாத் (புனிதப்போர்) மேற்கொள்ள வேண்டுமென்று முடிவெடுத்தேன். தவறு எதுவும் செய்தால், அதனைத் திருத்திக் கொண்டு உங்களைத் திருப்தி செய்யவே நான் நடந்து வந்துள்ளேன். ஆனால் முகஸ்துதி தவிர வேறு எதுவும் தெரியாத 'தாரா' வால் உண்மைகள் தங்களிடம் பொய்யாகக் காட்டப்பட்டது.

ஔரங்கஜேப் நம்பிக்கைக்கும் பாசத்திற்கும் பாத்திரமானவர் அல்ல என்ற எண்ணத்தை தாரா உங்களிடையே உருவாக்கியே வந்திருக்கிறார். தங்கள் கையில் அதிகாரம் இருந்தவரையில் உங்களுக்கு கீழ்ப்படிந்து நடப்பதைத்தான் என்னுடைய கொள்கையாகக் கொண்டிருந்தேன் என்னுடைய எல்லையை நான் ஒரு போதும் மீறவில்லை என்பதற்கு இறைவனே சாட்சி.

மறைக்கப்பட்ட உண்மைகள்

தாங்கள் நோய்வாய்ப்பட்ட போது தாரா அதிகாரத்தைத் தானே எடுத்தக் கொண்டு பிற சமயத்தைப் பரப்ப ஆரம்பித்தார். நபிகள் (ஸல்) மேல் உள்ள நம்பிக்கையை கெடுத்திடும் வகையில் அவர் நடந்த போது குழப்பமும் கலகங்களும் சாம்ராஜ்யத்தில் ஏற்டலாயிற்று. இதைப் பற்றிய உண்மையை ஒருவரும் உங்களிடம் சொல்லாமல் இருந்தார்கள். தானே சரியான மன்னர் என்று எண்ணிக் கொண்டு, தாரா உங்களைப் பதவியிலிருந்து இறக்கி விட்டார் என்பதை நான் ஏற்கனவே எனது முந்தையக் கடிதங்களில் தெரிவித்திருக்கிறேன். இந்தச் சூழ்நிலையில் நான் புரான்பூரிலிருந்து புறப்பட்டு வந்தேன். நாடு முழுவதும் ஏற்பட்டிருக்கிற குழப்பங்களைத் தடுத்து நிறுத்த நான் தவறி விட்டேன் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகாமல் இருக்கவே வந்தேன்.

இறைவன் அருளிய ஆசி

நமது மார்க்கத்திற்கு (இஸ்லாத்திற்கு) விரோதமான தாராவை ஆதரிப்பது உண்மையிலேயே பாவகரமான காரியமாகும். இறைவனுக்கு உண்மையாகக் கீழ்ப்படிந்து நடப்பதால், இறைவனின் உதவியில்லாமல் வெற்றி கிட்ட முடியாது என்ற உண்மையை, இறைவனின் அருள் எப்படி எனக்கு கிடைத்தது என்பதிலிருந்து நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

தங்களின் ஊக்குவிப்போடு தாராவின் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு உலகம் அவிசுவாசத்தால் இருள் அடைந்தது. தற்போதுள்ள சூழ்நிலையில் நடைபெற்றுள்ள நிகழ்ச்சிகளுக்காக விதியை நிர்ணயிக்கும் இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

என்னை வளர்த்து ஆளாக்கிய உங்களுக்கு இந்த எளியேன் காட்டக் கூடிய நன்றியினைச் சொல்ல வார்த்தைகள் இல்லை. எக்காரணத்தைக் கொண்டும் உங்களது அன்பையும், என்னுடைய பொறுப்புக்களையும் நாம் மறக்கமாட்டேன்.

உலகில் வாழப்போகும் மிகக் குறுகிய கால வாழ்விற்காக உங்களின் மனம் புண்படும்படியாக நடந்திட என்னை நான் அனுமதிக்கமாட்டேன். இது வரையில் நடைபெற்றவை இறைவனின் சித்தப்படியும் நாட்டின் நலனுக்காகவும் நடந்திருக்கின்றன.

இந்த சரித்திர உண்மைகளையும் மிக உயர்ந்த இலக்கிய நயத்தையும் கொண்ட கடிதம் ஷாஜகானுக்கு ஔரங்கஜேப்பால் எழுதப்பட்டது. ஷாஜகானுக்குப் பிடிக்காத விஷயங்களைப் பற்றிச் சொல்லும் போது கூட மிக மரியாதையாகவே ஔரங்கஜேப் அதுபற்றி சொல்லியிருக்கிறார்.

இறைவனால் நிகழும் காரியங்கள்

இதோ இன்னொரு கடிதம்: ஷாஜகானுக்கு ஔரங்கஜேப் எழுதுகிறார். “தங்களது மேலான சமூகத்திற்கு, உங்களுடைய அருமைக் கரங்களால் எழுதப்பட்ட கடிதம் மிகுந்த காலங்கடந்து எனக்கு கிடைத்தது. அதில் தாங்கள் எழுதியிருக்கிற செய்திகள் பல உண்மைகளைத் தெரிவிக்கின்றன. இந்த அடியேன் ஆரம்பத்திலிருந்தே ‘விதி’க்கும் ‘இறைவனால் நிகழும் காரியங்களுக்கும்‘, கட்டுப்பட பழகிக்கொண்டேன். தாங்கள் மிகவும் புத்திக் கூர்மை உள்ளவர்கள் காலத்தில் போக்கில் நடக்கும் நிகழ்ச்சிகளைப்

பற்றிய நல்ல அனுபவமிக்கவர்கள்.

நடப்பது யாவையும் இறைவனின் சித்தப்படியே நிகழ்கிறது என்பதை அறிந்த நீங்கள் இந்த அடியேனுடைய முயற்சிகளை முறியடித்திட முயற்சிக்கக்கூடாது; எனது எதிரிகள் மேலும் வளர்ச்சி பெற உதவிடவும் கூடாது. கலகங்களையெல்லாம் அடக்கிய பிறகு தங்களது நல்லெண்ணத்தைப் பெற்று இரு உலகங்களிலும் ஆசீர்வாதம் பெற வேண்டுமென்றுதான், நான் விரும்புகிறேன். நீங்கள் என் மீத கோபமும், தாபமும் கொண்டிருப்பதாக அறிகிறேன். அது எனக்கு மிகுந்த வருத்தத்தைத் தருகிறது. என்னுடைய அர்ப்பணிப்புப் பாதையிலேயே நான் சென்றுகொண்டிருக்கிறேன். எனக்கெதிராக நீங்கள் இருப்பதைப் பற்றிய பல செய்திகள் வந்தன. எல்லாவகையிலும் நாசமடைந்த ஷுஜாவிற்கு நீங்கள் இந்தியில் எழுதிய கடிதமும் அதனை உறுதி செய்கின்றது. எனவே தாங்கள் என்னுடைய நன்மையை விரும்பவில்லை என்பதனை அடியேன் நம்ப வேண்டியதிருக்கிறது.

முயற்சிகளும் முன் எச்சரிக்கையும்

ஏற்கனவே கைவிட்டுப்போன காரியங்களையெல்லாம் திரும்பவும் கொண்டுவர தாங்கள் எண்ணுகிறீர்கள். ராஜ்யத்தின் நிர்வாகத்தையும், சமயத்தின் (இஸ்லாம் மார்க்கம்) ஒழுங்கிணையும் திரும்பக் கொண்டுவர முயற்சிக்கும் இந்த அடியேனின் எல்லா முயற்சிகளையும் கெடுத்திடவும் முயற்சிக்கிறீர்கள். இந்த உங்களுடைய தொடர் முயற்சிகளை நீங்கள் கைவிடுவதாகவும் தெரியவில்லை. எனவே வேறு வழியின்றி நான் மிகவும் கவனமாகவும், எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

சர்வ வல்லமையாளனே சாட்சி

எனக்கு தொல்லை கொடுத்திட நினைப்பவர்களின் தொல்லைகளிலிருந்து என்னைக் காத்துக் கொள்ள நான் கவனமாக இருக்க வேண்டியதிருக்கிறது. எனவே தங்களை நேரில் வந்து காணுவதற்கு என்னால் இயலாத நிலையில் இருக்கிறேன். எல்லாம் வல்ல இறைவனே இந்த எனது உண்மையான வாக்குமூலத்திற்குச் சாட்சியாக இருக்கிறான்.

வரலாற்றாசிரியர் காபிகான் எழுதிய ‘தேர்ந்தெடுக்கப் பட்டதின் சாரம்’ என்ற நூலில் குறிப்பிட்டிருக்கிற இந்தக் கடிதத்தையும் ஷாஜகானுக்கு அனுப்பி வைத்தார் ஔரங்கஜேப்.

ரகசியக் கடிதங்கள்

தாராவை அழித்துக் கொண்டிருக்கிற ஔரங்கஜேப்பை, அதிகாரங்கள் பறிக்கப்பட்டுவிட்ட நிலையிலும் தன்னால் பழிவாங்கிட முடியுமென்ற சிறு நம்பிக்கை ஷாஜகானுக்கு இருந்தது. இதனை மனதில் கொண்டு தான் ஷுஜா, முராத், தாரா முகம்மத்கான் ஆகியோருக்கு ரகசியக் கடிதங்களை ஷாஜகான் அனுப்பிக் கொண்டிருந்தார். இவைகளைத் தெரிந்து கொண்டு ஷாஜகானின் நடவடிக்கைகளை கண்காணிக்கத் துவங்கிய ஔரங்கஜேப் இது பற்றி ஷாஜகானுக்கு கடிதம் எழுதினார்.

“நான் திரும்பத் திரும்ப இந்த மாதிரி கடிதம் அனுப்புவதை நிறுத்திக் கொள்ளுங்கள் என்று கூறினாலும் தாங்கள் அதுபற்றி அக்கரை எடுத்துக்கொள்ளாமல், ஒரு மகன் தன் தந்தையிடம் இருந்து எதை எதிர்பார்க்கலாமோ அதை உங்களிடமிருந்து நான் எதிர்பார்க்க இயலாது என்பதை நீங்கள் தெளிவாக்கி விட்டீர்கள். எனவே உங்களது கடிதங்களை ரகசியமாகக் கொண்டுசெல்லும் ‘அலி’களை அங்கிருந்து அப்புறப்படுத்தாமல் நான் என்ன செய்ய? எனவே இந்த எளியவன் மீது இரக்கங்கொண்டு சக்கரவர்த்தியவர்கள் இம்மாதிரியான நடவடிக்கைகளை கைவிட்டு மேலும் தொல்லைகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுங்கள்” என்றும் கேட்டுக் கொண்டார்.

அகற்றப்பட்ட ‘அலி’கள்

ஆனால் ஷாஜகான் இதனைக் கவனத்தில் கொள்ளவில்லை. தனது மகன் ஷுஜாவிற்கு இந்தியில் கடிதம் எழுதி அனுப்பியபோது அதனையும் இடையில் ஔரங்கஜேப் கைப்பற்றிக் கொண்டார்.

ஷாஜகான் எப்போதும் தங்கியிருக்கிற தர்பார் ஹாலுக்குப் பின்புறத்தில் அவரை இருக்கச் செய்து, வெளியில் செல்ல முடியாத நிலையையும் உருவாக்கி, துணையாக தனது மகனையும் அமர்த்தினார் ஔரங்கஜேப். ஷாஜகானின் நம்பிக்கைக்குரிய அலிகள் அங்கிலிருந்து அகற்றப்பட்டனர். (ஷாஜகான் அணியில் இருந்த பலர் ஔரங்கஜேப்பின் பக்கம் சேர்ந்து கொண்டேயிருந்தனர்)

வசதிகள் வழங்கிட வசீர்கானுக்கு ஆணை

ஆரம்பத்தில் பல தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தாலும், வெகு சீக்கிரத்திலேயே ஷாஜகான் நல்ல நிலையில் நடத்தப்பட்டார். அவருக்குத் தேவையான எல்லாவற்றையும் அளித்திடுமாறு வசீர்கானுக்கு ஔரங்கஜேப் உத்திரவிட்டார். தேவையான எச்சரிக்கை

நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்டு ஔரங்கஜேப் ஒன்றும் செய்யவில்லை. ஷாஜகானை எப்போதும் உரிய மரியாதையோடு நீக்கப்பட்ட வயதான அலிகள் மீண்டும் கோட்டைக்குள் அவரது பணிக்காக அனுப்பப் பட்டார்கள்.

பேரனுக்கு ஊட்டிய பேராசை

ஷாஜகானைக் கவனித்து வந்த ஔரங்கஜேப்பின் மகன் முகம்மது சுல்தானிடம் ஷாஜகான், 'நீ உனது தந்தை ஔரங்கஜேப்பை வென்று, சுதந்திரமாக நீயே பதவிக்கு வந்தால் என்ன? உனக்கு உதவி செய்ய நான் தயாராய இருக்கிறேன்' என்று பதவி ஆசை காட்டினார். ஆனால் ஔரங்கஜேப்பின் மகனும், ஷாஜகானின் பேரனுமாக முகமது சுல்தான் புத்திசாலித்தனமாக நடந்து, அதனைக் கண்டுகொள்ளவில்லை.*

(* Jadunath Sarkar, History of Aurangzib, Calutta, 1921, Vol. III. P. 123.)

மகனுக்கு காட்டிய பதவி ஆசை

வங்காளத்தில் வாழ்ந்து வந்த முகம்மது மசூம் (Muhammad Masum) என்ற வரலாற்றாசிரியர் ஷாஜகான் தனது இன்னொரு மகன் முராத் (Murad) திற்கு எழுதிய கடிதத்தைப்பற்றித் தெரிவித்திருக்கிறார். 'ஔரங்கஜேப்பையும் அவரது மகன் முகமது சுல்தானையும் ஒழித்து விட்டு, என்னையும் விடுதலை செய்துவிட்டு, பின்பு எனது பேரில் நீயே இந்த ஆட்சியை நடத்துவாயாக' என்று கடிதம் எழுதி ஷாஜகான் அனுப்பினார். அந்தக் கடிதத்தை 'முராத்' படித்து விட்டு கவனக் குறைவாக அரசாங்க நூலகப் புத்தகமொன்றில் வைத்துவிட்டார். பின் அந்தப் புத்தகத்தில் ஷாஜகானின் கடிதத்தைப் பார்த்த நூலகர் அதனை ஔரங்கஜேப்பிடம் கொண்டு போய் சேர்த்துவிட்டார்.

இந்தக் கடித விவரத்தை வரலாற்றாசிரியர் ஜாதுநாத் சர்க்கார் ஏற்றுக் கொள்ளவில்லையென்றாலும், ஷாஜகான் தாராவிற்கும், பிறருக்கும் ரகசியமாகக் கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்ததற்கு ஆதாரங்கள் இருக்கின்றன என்பதை ஒப்புக்கொள்கிறார்.

எப்படியாயினும், பேரனையோ, அல்லது மகனையோ தூண்டிவிட்டுக் கொண்டேயிருந்த ஷாஜகான் தனது நிலையிலிருந்து சிறிதும் மாறவேயில்லை.

தணிக்கைக்குள்ளான கடிதங்கள்

ஷாஜகான் இருந்த இடத்தைச் சுற்றியுள்ள வீடுகளும்,

அறைகளும் காலி செய்யப்பட்டு, அதிகாரிகளுக்கு அவை வழங்கப்பட்டது.

ஷாஜகானிடம் ஔரங்கஜேப் 'வெளியில் யாருக்கும் ரகசியக் கடிதங்களை எழுதாதீர்கள். மேலும், மேலும் குழப்பத்தை விளைவிக்காதீர்கள்' என்று கேட்டக்கொண்டார்.

'நான் உனது மகனா? உனது உத்திரவுகளுக்கு கீழ்ப்படிய' என்று கூறிய ஷாஜகான் அதனை மீறி ரகசியமாகக் கடிதங்களைத் தொடர்ந்து எழுதியதால் தனியாகக் கடிதம் எழுதுகிற உரிமை ஷாஜகானுக்கு மறுக்கப்பட்டது. ஆனால் ஔரங்கஜேப்பால் நியமிக்கப்படும் ஊழியரைக் கொண்டு ஷாஜகான் கடிதம் எழுதிட அனுமதி அளிக்கப்பட்டது. கடிதங்கள் அரசின் தணிக்கைக்குள்ளாக்கப்பட்டதால், தான் எழுதும் கடிதங்களில் ரகசிய விஷயங்களை எழுதுவதை நிறுத்த வேண்டிய நிலைக்கு ஷாஜகான் தள்ளப்பட்டார்.

பொன்னும் பொருளும் பொதுமக்களுக்குரியது

கோட்டைக்குள் இருந்த நகைகள் பற்றிய 'தாவா' எழுந்தது; ஷாஜகான் அந்த நகைகள் ஔரங்கஜேப்பிற்கு உரிமை உடையன அல்ல என்று தெரிவித்தார். ஆனால் ஔரங்கஜேப் அது அரசுக்குரியது என்று குறிப்பிட்டு ஷாஜகானுக்கு கடிதம் எழுதினார்.

"அரசுச் சொத்துக்களும், கஜானாக்களும் பொதுமக்களின் நன்மைக்காகவே இருக்கிறது. குடிமக்கள்தான் அதனை வழங்குகிறார்கள். அரசர் இந்தச் சொத்துக்களுக்கு இறைவனால் ஏற்படுத்தப்பட்ட காவலர்தான். அதனை மக்களின் நன்மைக்காகத்தான், இறைவனின் இந்தப் பொருட்கள் செலவளிக்கப்பட வேண்டும். தற்போது இருக்கிற அரசர் என்ற முறையில் இந்தப் பொன்னும் பொருளும் என்னிடம் தரப்பட வேண்டும். மேலும் உங்களின் ஓய்வு வாழ்க்கைக்கும், ஆன்மீக நிலைமைக்கும் நீங்கள் அணிந்து கொண்டிருக்கிற நகைகள் கூட உங்களுக்கு தேவையில்லை" என்றும் தெரிவித்தார். மேலும் ஷாஜகானிடம் தனது மகனை அனுப்பி நகைகளை வாங்கிவரப் பணித்தார் ஔரங்கஜேப்.

மயிலாசனம்

ஆக்ராவிலிருந்து தாரா தப்பித்துச் சென்ற போது ரூ. 27 இலட்சம் பெறுமான நகைகளை ஆக்ரா அரண்மனையில் உள்ள அவரது அறையில் விட்டுச் சென்றிருக்கிறார். அந்த நகைகளையும் ஒப்படைத்திட வேண்டுமென்றும் ஔரங்கஜேப்,

ஷாஜகானிடம் கேட்டு அனுப்பினார். முதலில் அதை மறுத்த ஷாஜகான் பின் பல நாட்கள் கழித்த நிலையில் வைரங்களை கழட்டி எடுத்துவிட்டு மயிலாசனத்தையும் தாராவின் நகைகளையும் வழங்கிவிட்டார்.

முத்துமாலை

ஷாஜகானிடமிருந்து நூறு முத்துக்களால் கோர்க்கப்பட்ட ஜெபமாலை (தஸ்பீஹ்), பெருவிரலில் அணிந்திருந்த நான்கு லட்சம் ரூபாய் மதிப்புள்ள வைரமோதிரம் ஆகியவற்றையும் ஔரங்கஜேப் ஒப்படைக்குமாறு கேட்டார்.

அரசாங்கத்தின் சொத்துக்கள் விஷயத்தில் இவ்வளவு கண்டிப்புடன் நடந்து கொண்ட ஔரங்கஜேப் தனது தந்தைக்கு வேண்டிய சௌகரியங்கள் அனைத்தையும் செய்து கொடுத்தார்.

கனிவும், கவனமும்

ஷாஜகானின் உடல் நிலையைக் கவனித்திட, ஔரங்கஜேப்பினால் தேர்வு செய்யப்பட்ட மருத்துவக்குழு அனுமதிக்கப்பட்டது.

அந்தப்புரத்தின் அறைகளில் ஷாஜகான் சுதந்திரமாகச் சென்று வர அனுமதிக்கப்பட்டது. பானம் அருந்தும் பாத்திரங்கள் அவருக்கென்றே தனியாக வைக்கப்பட்டு இருந்தன.

தனது மகன் முகமது சுல்தானிடம் ‘உனது தாத்தா தனது திருப்திக்காக தான் சேமித்து வைத்திருந்த விலை உயர்ந்த நகைகளையும் பொருட்களையும் பார்க்க விரும்புகிறபோது நீ அவரின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அந்தப் பொருட்கள், நகைகள் இருக்கும் அறையைத் திறந்துக்காட்டு. அவ்வேளையில் அவரது மனம் புண்படாத படி கவனமாக நடந்து கொள். நமது கண்காணிப்பினால் எந்தவிதத்திலும் அவரது மனம் புண்பட்டுவிடக்கூடாது’ என்றும் சொல்லியிருந்தார்.*

(* ஜாதுநாத் சர்க்கார், முற்கூறிய நூல், பக். 130.)

அதன்படியோ முகமது சுல்தானும் ஷாஜகானிடம் நடந்து கொண்டார்.

ஷாஜகானை அதன்பின் முதாமத் (Mutamad) என்பவர் சில காலம் கவனித்து வந்தார். அவர் ஷாஜகானை முறையாகவும் மரியாதையாகவும் கவனிக்கவில்லையென்றதால் அவர் அப்பொறுப்பிலிருந்து பின்னர் விடுவிக்கப்பட்டார்.

இசையும் நடனமும்

‘தன் வசம் நல்ல பெண் பாடகிகள் இல்லை ‘தாரா’ விடம் பணியாற்றிக் கொண்டிருந்த பெண் பாடகிகளை என்னிடம் அனுப்பிவை’ என்று ஷாஜகான் கேட்டார். ஔரங்கஜேப் அதற்கு அனுமதி அளித்தார். ஷாஜகான் விரும்பியவாறே பாடகிகளை அனுப்பி வைத்தார்.

இசை, ஆடல், பாடல்களை விரும்பாத ஔரங்கஜேப் தனது தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றும் விதமாகவே நடந்துகொண்டார்.

சம காலத்தில் முகலாயப் பேரரசில் பயணம் செய்த வெளிநாட்டவரான டாக்டர் பெர்னியர் இது குறித்து தெரிவித்துள்ள செய்திகள் ஔரங்கஜேப் தனது தந்தை ஷாஜகானிடம் நடந்து கொண்ட நல்ல தன்மைகளை நாட்டுக்கு அறிவிக்கின்றன.

வழங்கிய சலுகைகள்

“ஷாஜகான் தன்னுடைய முந்தைய மாளிகை அறைகளிலேயே தனது விருப்பமான மகள் ஜஹானாரா பேகத்துடனும்” மற்றும் ஆடல், பாடல் மங்கையர்கள், சமையற்காரர்கள் போன்ற பணியாளர்களுடனும் இருக்க அனுமதிக்கப்பட்டார் ஷாஜகானின் எந்த வேண்டுகோளும் நிராகரிக்கப்படவில்லை.

ஷாஜகான் மிகுந்த பக்தியையும், இறை வணக்கத்தையும் நாடியபோது, திருகுர்ஆன் வாசித்துக் கேட்பதற்காக மார்க்க மேதைகளை ஷாஜகான் இருக்குமிடத்திற்குச் சென்று வர ஔரங்கஜேப் அனுமதித்தார்.

மறிமான், குதிரைகள், கழுகு போன்ற அலகுடைய பறவைகள், முதலியவற்றை வைத்துக் கொண்டு அவைகள் சண்டையிடுவதைப் பார்த்துக்கொண்டு பொழுதைப் போக்கவும் ஷாஜகான் அனுமதிக்கப்பட்டார்.

இவ்வாறு ஷாஜகானுடன் அன்புடனும், மரியாதையுடனும் நடந்து தன்னைப் பெற்றவருக்கு அவரது வயதான காலத்தில் எல்லா வகையிலும் உதவிகளைச் செய்து வந்தவர் ஔரங்கஜேப்”.

பெர்னியரின் வார்த்தைகள்

ஷாஜகானை சிறையில் அடைத்துவைத்து ஔரங்கஜேப் கொடுமைப்படுத்தினார் என்று நாகூசாமல் சொல்லிவரும் சரித்திரப் புரட்டர்களின் பார்வைக்குப் பெர்னியரின் வார்த்தைகள் இதோ:

“He was permitted to occupy his former apartments, and to enjoy the society of Begum-Saheb and the whole of his female establishment, including the singing and dancing women, cooks, and others.

In these respects no request was ever denied him; and as the oldman became wondrously devout, certain Mullahs were allowed to enter his apartments and read the Koran.

He possessed also the privilege of sending for all kinds of animals, horses of state, hawks of different kinds, and tame antelopes, which last were made to fight before him. Indeed Aurengzeb’s behaviour was throughtout kind and respectful and he paid attention to his aged parent in every possible way.

பெண் பணியாளர்கள்

வரலாற்றாசிரியர் வின்சென்ட் ஸ்மித், “ஷாஜகானின் காமமிக்க சுவைகளைக் தணிப்பதற்காகப் பெண் பணியாளர்களும் அமர்த்தப்பட்டனர். அதற்கும் அனுமதி அளிக்கப்பட்டது” என்ற தகவலைத் தெளிவாகவே தந்திருக்கிறார்.

உலக வாழ்வை மகிழ்வுடன் கழித்திட அனுமதிக்கப்பட்ட ஷாஜகானின் மறு உலக வாழ்விற்கான நன்மைகளுக்கும் வழிவகைகள் செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.

திருகுர்ஆன் வாசித்தல்

ஷாஜகானுக்கு நெருங்கிய நண்பரான கன்னோசியைச் (Qauauj) சேர்ந்த செய்யது முஹம்மது (Sayyid Muhammad) திருகுர்ஆனில் கூறப்பட்டுள்ள விஷங்களையும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளையும் பற்றி விரிவாக ஷாஜகானிடம் எடுத்துரைத்திட அனுமதிக்கப்பட்டார். வெளியிலிருக்கும் ஏழை எளிய மக்களுக்கு பரிசுப் பொருட்களையும் ஷாஜகான் அனுப்பி வைத்திட அனுமதிக்கப்பட்டது.

இவ்வாறாக ஷாஜகானின் காலம் உலக விஷயங்களிலும் ஆன்மீகத்திலும் மகிழ்வுடன் கழிக்கப்பட அனுமதிக்கப்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் ஷாஜகானின் நலத்தைப்பற்றி விசாரித்தும், கேட்டும் ஔரங்கஜேப் கடிதங்களையும் எழுதினார்.

ஷாஜகானின் கடிதங்கள்

அடிக்கடி அழகிய பரிசுகளையும் ஷாஜகானுக்கு

ஔரங்கஜேப் அனுப்பி வைத்தார். இதனால் மனமகிழ்ச்சியுற்ற ஷாஜகான் ஔரங்கஜேப்பிற்கு அடிக்கடி கடிதம் எழுதவும் ஆரம்பித்தார்.

அரசாங்கத்தின் காரியங்கள் பற்றியும், சொந்த விஷயங்கள் பற்றியும் அந்தக் கடிதங்களில் ஷாஜகான் குறிப்பிட்டிருந்தார். ஆரம்பத்தில் பொன்னையும், முத்தையும், ஆபரணங்களையும் கேட்ட போது, 'அவைகளை அழித்துத் தூள் தூளாக்கி விடுவேன்' என்று சொன்ன ஷாஜகான் அந்த நிலையிலிருந்து மாறி அந்த ஆபரணங்களையெல்லாம் ஔரங்கஜேப்பிடம் சேர்த்திடவும் செய்தார்.

ஜஹானாராவின் கவனிப்பு

ஷாஜகானின் மகளும், மியான்மீர் (Mian Mir) என்ற தூய துறவியின் சிஷ்யையுமான ஜஹானாரா பேகம் கன்னியாகவே வாழ்ந்தவர். ஆக்ராவின் அந்தப்புரத்தில் தனது வயதான தந்தைக்கு ஆற்ற வேண்டிய பணிகளை ஒரு தாயைப் போலவும், ஒரு மகளைப் போலவும் கவனித்துக்கொண்டிருந்தார். இவ்வுலக வாழ்க்கையிலிருந்து தன்னை முழுவதுமாக விடுவித்துக் கொண்ட ஷாஜகான், மரணத்தின் பயமற்றுப் போய், அதனை வரவேற்கும் நிலையில் இருந்தார்.

மன்னிப்பும் ஆசிர்வாதமும்

தனது தந்தையிடம் ஔரங்கஜேப் மிகவும் வேண்டிய கேட்டுக்கொண்டிருந்த மன்னிப்பையும், ஆசிர்வாதத்தையும் தனது இறுதிக் காலத்தில் ஷாஜகான் வழங்கினார்.

இந்தச் சூழ்நிலைகளுக்குப் பின்னர் தான் ஷாஜகானின் இவ்வுலக வாழ்வின் இறுதி நேரம் நெருங்கியது.

இறுதி வேளையும் இரண சிகிச்சையும்

கி.பி. 1666 ஜனவரி 7ஆம் நாள்; ஷாஜகானுனக்கு காய்ச்சல் ஏற்பட்டது. மருத்துவர்களால் அதற்கான சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு தைலங்களும் தடவப்பட்டது. ஷாஜகான் வயிற்று வலியாலும் அவதிப்பட்டார்.

ஒன்பது நாட்களுக்கு பின் கி.பி. 1666 ஜனவரி 16 இல் பிரிந்தாபன் (Brindaban) என்ற மருத்துவர் ஷாஜகானுக்கு இரணசிகிச்சை செய்து, அவரின் வயிற்றிலிருந்து சிறு கட்டியையும் அகற்றி, ஷாஜகானைக் குணப்படுத்தினார். எனினும் எழுபத்தி நான்கு வயதான ஷாஜகான் பலவீனமான நிலையிலேயே இருந்தார் பனிக்காலத்தின் கடுங்குளிர் அவரது

சக்தியை மேலும் குறைத்துக் கொண்டிருந்தது. அவரின் உதடுகளும் நாக்கும் தாகத்திற்காக அருந்திய குளிர்ந்த சர்பத்திற்குப் பின்னும் வறண்டு போயிற்று. பலஹீனம் அவருடைய கால்களைப் பற்றிக் கொண்டது. மருந்துகளும் வைத்திய முறையிலான உணவுகளும் பலனற்றுப் போயிற்று.

மரண வேளையிலும் மற்றவருக்கு ஆறுதல்

கி.பி. 1666 ஜனவரி 22ஆம் நாள், திங்கள் கிழமை நிலைமை மிகவும் மோசமாகிப் போனது. மருத்துவர்கள் நம்பிக்கை இழந்தனர். தனது வாழ்க்கையில் தனக்குத் கிடைத்த நன்மைகளுக்காக இறைவனுக்கு நன்றி செலுத்திக் கொண்டு இறைவனின் கட்டளைக்குத் தன்னை ஒப்படைத்திட காத்துக்கொண்டிருந்தார் ஷாஜகான்.

ஷாஜகான் மிகவும் நிதானமாகவும், கவனமாகவும் தனது இறுதிக் காரியங்கள் (உடல் அடக்கம்) பற்றிய கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். தனது படுக்கையில் அமர்ந்து அழுது கொண்டிருந்த தனது மூத்த மகள் ஜஹானாரா, தனது மனைவிமார்கள் அக்பராபாடி மஹால் (Akabarabadi Mahal), பதேபூரி மஹால் (Fathpuri Mahal) ஆகியவர்களின் மனதைத்தேற்றிப் பேசிக் கொண்டிருந்தார்.

ஜஹானாராவின் ஒன்றுவிட்ட சகோதரி (half-sister) புர்னர்பானுவையும் (Purhunar Banu), மற்ற பிள்ளைகளையும் நன்கு கவனித்துக் கொள்ளும்படி ஜஹானராவிடம் ஒப்படைத்தார்; தனது உயிலையும் எழுதினார்; பின் தனது குடும்பத்தாருக்கும் ஊழியர்களுக்கும் ஷாஜகான் பரிசுப் பொருட்களையும் வழங்கினார்.

பிரார்த்தனையில் பிரிந்த உயிர்

ஷாஜகான் திருகுர்ஆனை ஓதிடுமாறு உத்தரவிட்டார். திருகுர்ஆன் அவருக்குப் பயபக்தியோடு படித்துக் காட்டப்பட்டபோது அவரைச் சூழ்ந்திருந்த மகளிரும், ஊழியர்களும் அழுது கொண்டிருந்த வேளையில், கடைசி வரையில் சுயநினைவோடு ஷாஜகான் இருந்தார். தன்னுடைய அன்புக்குரிய மனைவி மும்தாஜ் மஹால் துயில் கொள்ளும் இடத்தை நோக்கிக் கொண்டு, அங்கு தன்னை அடக்கம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டவாறு கலிமாச்* சொல்லிப் பிரார்த்தனை செய்தார்.

(*கலிமா :- ‘வணக்கத்துத் தகுந்தவன் அல்லாஹுத் தஆலாவைத் தவிர வேறு நாயகன் இல்லை. முஹம்மது நபி

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹுத்த ஆலாவின் திருத்தூதராக இருக்கிறார்கள் என்ற உறுதியை ஏற்றுக் கொண்டவர்களாக சொல்லப்படுவது.)

‘இறைவனே! இவ்வுலகத்திலும்

மறுவுலகத்திலும் எனது நிலையை

நன்மையாக்கி என்னை நரகத்தின்

நெருப்பிலிருந்து காப்பாற்றி அருள்வாயாக!’

என்று இறைவனிடம் மன்றாடிய ஷாஜகானின் உயிர் அன்று இரவு 7.15 மணிக்க பிரிந்தது.

உடல் அடக்கத்தின் போது உரிய மரியாதை தரப்பட்டதா?

காஜிகள் விதித்த கடுமையான அபராதம்

ஷாஜகானின் உடல் அடக்கத்திற்கு ஆக வேண்டிய காரியங்களை ஜஹானாரா கவனிக்கத் துவங்கினார். ஆக்ரா கோட்டையில் தளபதி ராடன்டஸ்கான் (Radandazkhan) பஹ்லால் (Bahlol) ஆகியோரை அவர் அழைத்து கோட்டைக் கதவுகளைத் திறந்து உள்ளே வரச்சொல்லி இறுதிக் கடமைகளைச் செய்ய வேண்டினார்.

கன்னோசியின் செய்யது முகம்மதுவையும், ஆக்ரா நகரத்து காஜி குர்பானையும் (Qazi Qurban) வரச்சொல்லி தகவல் அனுப்ப, அவர்களும் நள்ளிரவில் அங்கு வந்து சேர்ந்தார்கள்.

இஸ்லாமிய நெறிமுறைகளையும், நோன்பினையும் பிரார்த்தனைகளையும் உதாசீனப்படுத்திய குற்றங்களுக்காக ஷாஜகானுக்குக் கடுமையான அபராதத்தை மார்க்க அறிஞர்கள் விதித்தனர்.

சந்தனமரப் பெட்டியில் உடல்

ஷாஜகான் உடல் குளிப்பாட்டப்பட்டு, சுத்தம் செய்யப்பட்டு, டவர் பக்கத்திலுள்ள ஒரு அறைக்கு கொண்டு போகப்பட்டு, சந்தன மரச் சவப்பெட்டியில் வைக்கப்பட்டது. மறுநாள், தளபதிகள், பிரமுகர்கள் சூழ்ந்து வர, மாபெரும் பேரணி நடத்தி ஷாஜகானின் உடலை தாஜ்மாஹாலுக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்றும், அவ்வாறு இறுதி ஊர்வலம் செல்லுகிறபோது தங்க, வெள்ளி நாணயங்களை சாலைகளில் தூவிட வேண்டும் என்றும் ஜஹானாரா பெரிதும் விரும்பினார். ஆனால் அவரது விருப்பப்படி அவ்வாறு நடைபெறவில்லை.

ஔரங்கஜேப் ஷாஜகானின் உடல் அடக்கத்திற்கும் வரவில்லை. இளவரசர் முஆஜம் மிகவும் தாமதமாகத்தான் அங்கு வந்துசேர்ந்தார். கடைசி நேரத்தில் சாதாரண மனிதர்களாலும், அலிகளாலும் மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தி ஷாஜகானின் உடல் தூக்கிச் செல்லப்பட்டு, அடக்கஞ் செய்யப்பட்டது என்று ஔரங்கஜேப் மீது குற்றஞ் சுமத்தி வருகிறார்கள். பள்ளிப் பிள்ளைகளின் பிஞ்சு உள்ளங்களில் பதியும் உண்மை வரலாறு அவ்வாறே சொல்லிக்கொடுக்கப்படுகிறது. இதில் உண்மை நிலை என்ன? இதோ வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்.

தந்தையின் உடல்நிலை குறித்து தகவல் தரவேண்டிய தனயன்

ஹிஜ்ரி 1076 ரஜப் மாதம் 12 ஆம் நாள் திங்கள் கிழமை அன்றுதான் ஷாஜகானுடைய நோய்வாய்ப்பட்ட செய்தி ஔரங்கஜேப்பிற்கு முதன்முதலாக அறிவிக்கப்படுகிறது.

உடனடியான ஔரங்கஜேப் ஆக்ராவிலுள்ள ஹக்கீம் மாமீன் (Hakim Momin) என்பவருக்கு கடிதம் எழுதி சக்கரவர்த்தி ஷாஜகானுக்கு சிறந்த மருத்துவ ஏற்பாடுகளைச் செய்யுமாறு உத்திரவிட்டார். அதோடு தினந்தோறும் ஷாஜகானின் உடல் நலம் பற்றிய தகவலைத் தனக்குத் தெரிவிக்கும்படியும் கேட்டுக் கொண்டார்.

ஒரு சில நாட்களுக்குப் பின், ஷாஜகானுடைய உடல் நிலை மிகவும் ஆபத்தான நிலைக்கு வந்து கொண்டிருக்கிறது என்பதை மருத்துவர்கள் ஔரங்கஜேப்பிற்குத் தகவல் அனுப்பி தெரியப்படுத்தினார்கள். உடனே ஆக்ராவிற்குச் சென்று தந்தைக்கு மரியாதை செலுத்தி, அவர் இறக்கும் தருவாயில், அவரது அருகிலேயே இருக்க வேண்டுமென்று எண்ணினார் ஔரங்கஜேப். உடனடியாகத் தாம் புறப்பட்டுச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திடுமாறு மாளிகை நிர்வாகிகளுக்கு கட்டளையிட்டார் ஔரங்கஜேப்.

மறைவுச் செய்தியும் மன வேதனையும்

நோயுற்றிருக்கும் ஷாஜகானைச் சந்திக்கச் செல்லும், பயண ஏற்பாடுகள் துவங்குவதற்கு ஒரு சில நாட்கள் ஆன நிலையில், ஔரங்கஜேப் தனது மகன் முஆஜத்தை (Muazzam) உடனடியாக, விரைந்து ஆக்ராவிற்குச் சென்று தான் வரும்வரை ஷாஜகானின் அருகிலேயே இருக்க வேண்டும் என்று சொல்லி அவரை அனுப்பி வைத்தார். அதனைத் தொடர்ந்து வந்த செய்திகளின் மூலம் ஷாஜகானின் மரணவேளை நெருங்கிவிட்டது என்று ஔரங்கஜேப்பிற்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இளவரசர்

முஆஜம் ஆக்ரா சென்று அடையுமுன்பே, அவர் பயணத்தின் நடு வழியில் இருக்கும் போதே, ஷாஜகான் மரணமடைந்துவிட்டார்.

ஔரங்கஜேப் தனது தந்தை இறந்த செய்தியறிந்து மிகவும் மனவேதனைக்குள்ளானார். 'Aurangzeb who grieved much over his death' என்று அதுபற்றி வரலாற்றாசிரியர் காபிகான் தெரிவித்திருக்கிறார். இவ்வாறு இந்த நிலைமையில் தான் ஔரங்கஜேப் தனது தந்தை ஷாஜகானின் இறுதி அடக்கத்திற்கு நேரில் வர இயலாத நிலை ஏற்பட்டது என்று தெள்ளத் தெளிவான உண்மையாகும்.

இறுதி ஊர்வலம் பற்றி இஸ்லாம்

ஷாஜகானின் இறுதி ஊர்வலம் ஆடம்பரமாக நடத்தப் படவில்லை என்ற குற்றச்சாட்டும் ஔரங்கஜேப் மீது சொல்லப்பட்டு வருகிறது.

'ஒருவர் இறந்து விட்டால் எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அவரை ஆடம்பரமின்றி நல்லடக்கம் செய்திட வேண்டும்' என்பதுதான் இஸ்லாமியக் கோட்பாடு ஆகும். அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அதனைப் பெரிதும் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். இஸ்லாமிய நெறி முறைப்படி ஆட்சியினை நடத்தி வந்த ஔரங்கஜேப், அதனால்தான் ஷாஜகானின் இறுதி ஊர்வலத்தை ஆடம்பரமாக நடத்த அனுமதிக்கவில்லை. தனது இறுதி வேளையிலும் தனது உடல் அடக்கமும் மிகவும் எளிமையாகவே நடத்தப்பட வேண்டும் என்றுதான் ஔரங்கஜேப் கட்டளையிட்டிருந்தார். வெறும் மண் தரையாகக் கிடக்கும் ஔரங்கஜேப்பின் சமாதி இன்று அதற்குச் சரித்திரத்தில் சாட்சியாக இருக்கிறது.

ஷாஜகான் இறந்த மறுநாள் காலையில் அவரது உடல் அடக்கத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டது. அந்த குறுகிய இடைவெளிக்குள் பல்லாயிரக்கணக்கில் மக்களைத் திரட்டுவது என்பது சிரமமான காரியம். அத்தோடு இறுதி ஊர்வலத்தில் சவப்பெட்டியின் அருகில், வெறுங் கால்களுடனும், வெறுந்தலைகளுடனும் முஸ்லிம்கள் செல்வது என்பது வழக்கத்திற்கு மாறானதாகும். மேலும் இஸ்லாமிய முறைப்படி இறந்தவரின் உடலைப் பொது மக்களின் பார்வைக்கு வைத்திடவும் அனுமதி கிடையாது. இந்த நிலையில் பெரிய அளவில் பேரணி நடத்தி ஷாஜகானின் இறுதி ஊர்வலத்தை நடத்திட இயலாத நிலைமை ஏற்பட்டது.

அலிகளா? அரசு அதிகாரிகளா?

ஷாஜகானின் உடலை அவரது இறுதியாத்திரையின் போது, ‘சில அலிகள்’ எடுத்துச் சென்றார்கள்; இதற்கு ஔரங்கஜேப்தான் காரணம்; ஆலம்கீர் ஔரங்கஜேப்பின் மீது சுமத்தப்பட்டு வரும் இந்தக் குற்றச்சாட்டின் உண்மை நிலை தான் என்ன?

ஷாஜகானின் உடலை நீராட்டி உடலுக்குத் துணிகள் இஸ்லாமிய முறைப்படி அணிவிக்கப்பட்டது. அவரது உடலைத் தாங்கிய சவப்பெட்டி (சந்தூக்*) கோட்டைக்கு வெளியே எடுத்து வரப்பட்டது.

(* சந்தாக்கு - இறந்தவரின் உடலை எடுத்துச் செல்ல பயன்படுத்தப்படுவது, ‘சந்தூக்‘ என்ற சொல்லுக்கு ‘அரபி’ மொழியில் பெட்டி என்று பொருள். அது மருவி தமிழில் சந்தாக் என்றாகி விட்டது.)

நகரத்தின் சுபேதார் ஹோஸ்தர்கான் (Hoshdarkhan), அரசாங்கத்தின் உள்ளூர் அதிகாரிகள், சிவில் மற்றும் ராணுவப்பிரிவினர் ஷாஜகானின் சடலம் கொண்டு வரப்பட்டபோது உடன் வந்தனர். பொழுது விடியும் வேளையில் அவர்கள் யமுனை நதிக்கரையை அடைந்தனர். அங்கிருந்து ஷாஜகானின் உடலைத் தாங்கிய சந்தனப் பெட்டியை ஒரு படகிலே ஏற்றினார்கள். நதியைக் கடந்தார்கள். தாஜ்மஹாலை அடைந்தார்கள். இவர்களுடன் அப்போது சில அலிகளும் உடன் சென்றனர் என்பது உண்மை. ஆனால் ஷாஜகானின் உடலை ‘அலிகள்’ மட்டும்தான் தூக்கிச் சென்றார்கள் என்று சொல்லப்படுவது நியாயந்தானா?

சான்றோர் கூடியிருக்க உடல் அடக்கம்

நகரத்தின் காஜிமார்களும், பிரமுகர்களும் மூத்த குடிமக்களும், அறிஞர்களும், சமயத்தலைவர்களும் ஆக்ராவில் தாஜ்மஹாலின் அருகில் கூடியிருந்தனர்.

‘Here the qazis, respectable men, leading citizens, Scholars and holymen of Agra had assembled’*

(* H.C. A Brief Survey of Indian History, 1935, P. 194.)

அதன்பின் தாஜ்மஹாலில் மும்தாஜ்மஹாலின் கல்லறை அருகே ஷாஜகானின் உடல், இஸ்லாமிய முறைப்படி நல்லடக்கம் செய்யப்பட்டது.

‘ஜமீபந்தாஹே - இ - பாதுஷாகே’

‘ஜமீபந்தாஹே - இ - பாதுஷாகே’ (jamibandahai - i - badshahi)

அதாவது, இந்தப் பூமிக்குச் சொந்தக்காரர், இந்த நாட்டின் மன்னர்' என்று ஷாஜகானைப் பற்றி அவரது இறுதி ஊர்வலத்தில் வந்து கொண்டிருந்த அரசு ஊழியர்கள், சிவில் மற்றும் இராணுவத்தினர் புகழ்ந்து தெரிவித்ததைச் சான்றாகச் கொண்டு, ஷாஜகானின் உடல் அடக்கம் மிகுந்த மரியாதையுடன் நடத்தப்பட்டது என்று பேராசிரியர் ஜஹிருதீன் பரூக்கி தனது நூலில் தெளிவுபடுத்தி இருக்கிறார்.

இவைகளுக்குப் பிறகு விரைவிலேயே ஔரங்கஜேப் ஆக்ராவிற்கு வந்து, தமது சகோதரி ஜஹானராவைச் சந்தித்து, மரியாதை செலுத்தி, தந்தையாரின் காலத்தில் அவருக்கு வழங்கப்பட்ட கௌரவமும், அதிகாரமும், செல்வாக்கும் தொடர்ந்து வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

எதேல் ஆர்.ஸ்கைஸ்

ஷாஜகான் ஆக்ராவின் அழகிய அரண்மனையில் ஏழாண்டுகள் தனக்குத் தேவையான அத்தனை ஆடம்பர வசதிகளுடன் அமர்த்தப்பட்டிருந்தார்.

"He spent the last seven years of his life there, cared for by his faithful daughter, surrounded by every luxury and given everything he asked for"

இது எதேல் ஆர்.ஸ்கைஸ் என்ற சரித்திர ஆசிரியர் தெரிவித்திருக்கிற விஷயம்; பாடசாலைகளில் பயிலும் மாணவருக்காக 1951இல் எழுதப்பட்ட வரலாறு.

வரலாற்றாசிரியர் ஹெச்.சி.

"Where he lived a prisoner six years more, but was treated with respect and surrounded with comfort all those pleasures his heart desired"

ஷாஜகானின் இதயம் விரும்புகின்ற ஆடம்பரமிக்க, மகிழ்ச்சிக்குரிய அத்தனை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு மிகவும் மரியாதையுடன் ஔரங்கஜேப்பால் நடத்தப்பட்டார் என்று 1935 இல் ஹெச்.சி.என்ற ஆசிரியர் தெரிவித்திருக்கிறார்.

கிருஷ்ண அய்யங்கார்

'ஷாஜகான் சிறைவைக்கப்பட்டிருந்தபோதிலும் ஓர் குறைவுமின்றி மரியாதையுடன் நடத்தப்பட்டார். இவரைக் கவனித்து வருவதற்கு ஔரங்கஜேப் தம் சகோதரியை நியமித்தார்'. 'நமது தேச சரித்திரம்' என்ற நூலில் 1946 இல், எஸ்.கிருஷ்ண அய்யங்கார் தெரிவித்திருக்கிற விஷயம் இது.

சூரிய நாராயண சாஸ்திரி

“ஔரங்கஜேப் ஆக்ராவுக்குச் சென்று ஷாஜஹானைக் கைது செய்து இருந்தவிடத்திலேயேயிருக்கும்படி செய்து விட்டனன். ஆனால் அவனுக்கு வேண்டிய சௌகரியங்களும் மரியாதைகளும் செய்யப்பட்டன.

உலகசரித்திரம், பிரபஞ்சதாரை அல்லது மானிடர் முன்னேற்றம், தமிழ்நூற்பெருக்கம் ஆகிய நூல்களை இயற்றிய வை.சூரியநாராயண சாஸ்திரி என்ற பரிதிமாற் கலைஞர், ‘நமது பாரத கண்டம்’ என்ற நூலின் முதற்பாகத்தில் தெரிவித்திருக்கும் விஷயம் இது.

சுதந்திரம் பெறுவதற்கு முன்பு பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் போதிக்கப்பட்டு வந்த முகலாயர் வரலாற்றில் வேண்டுமென்று மெல்லமெல்லத் திருத்தி, ஔரங்கஜேப் ‘தனது தந்தையைச் சிறையில் அடைத்து கொடுமைப்படுத்தியது போல், வரலாற்றைச் சித்தரிக்க முயன்ற, ஔரங்கஜேப்பை ஒரு மனிதாபிமானற்ற மன்னராக காட்ட முயல்வது நியாயந்தானா? கல்லூரிகளிலும், பாடசாலைகளிலும் போதிக்கப்பட்டு வரும் துவேஷமான வரலாற்றுப் புரட்டுகளை அனுமதிக்கலாமா? நடுநிலையாளர்களின் நல்ல முடிவிற்கு இந்தக் கேள்வியை முன் வைக்கிறேன்.

3

சகோதர்களைக் கொன்று விட்டு சக்கரவர்த்தியா?

உலகத்தில் பொய்ப் பிரச்சாரம் மலிந்து விட்டது; பொதுமக்கள் பொய்யையும், மெய்யையும் பிரித்தறியக் கூடிய ஆற்றலை மெல்ல மெல்ல இழந்து வருகின்றனர். ஆளுகின்ற வர்க்கத்தினர் கட்டிவிடும் பொய்க் கூற்றுக்களை உண்மையென்று, பள்ளி மாணவர்கள், கல்லூரித் தோழர்கள் அப்படியே அங்கீகரித்தும் விடுகின்றனர்.

இந்தப் பொய்யான விஷயங்கள் நாளாக, நாளாக வேரூன்றி எவராலும் அசைக்க முடியாத பலத்தையடைந்தும் பொய்க் கூற்றுக்கள் பிரபலமடைந்தும் உலகில் பிரசித்தியடைந்தும் விடுகின்றன.

உலகப் பிரசித்தியடைந்தவை என்ற ஒரு காரணத்தால் மட்டும் பொய்யான அந்த விஷயங்கள், மெய்யான விஷயங்களாகக் கூறப்படுவதை எந்தச் சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது; ஏற்றுக் கொள்ள இயலாது; ஏற்றுக் கொள்ளக் கூடாது.

ஐம்பது ஆண்டுகள் அரசாட்சி புரிந்த ஒரு பேரரசரை, மத வைராக்கியம் பிடித்த கொடுங்கோல் அரசரென்று இந்தியாவிலுள்ள மாணவர்களுக்கு கல்வி நிலையங்களில், கலாசாலைகளில் போதிக்கப்பட்டு வருகிறது.

உலகில் உதயமான மன்னர்களில் எல்லாம், கொடுங்கோல்

அரசர்களிலும் மிகமிகக் கொடிய அரசராக ஔரங்கஜேப் ஆலம்கீரைச் சித்தரிக்கின்ற அவலமும் தொடர்கிறது.

மாமன்னர் ஔரங்கஜேப்மீது சுமத்தப்பட்டு சொல்லப்பட்டு வருகிற பழிகள் எண்ணற்றவை; இல்லாத செய்திகளை இட்டுக்கட்டி அபாண்டமாக அடுக்கப்பட்டு வரும் குற்றச்சாட்டுகள் கணக்கற்றவை!

வேற்றுமை விதையை விதைக்க நாட்டங் கொண்ட வெள்ளை ஏகாதிபத்தியத்தினர் இந்து-முஸ்லிம் என்ற இரு பெரிய சமூகத்தினரிடையே பிளவை உண்டாக்கினால் அன்றி, தமது ஆட்சியை இந்தியாவில் நிலைநிறுத்த முடியாது என்பதை உணர்ந்தனர். அதனை நிறைவேற்றிட எண்ணற்ற காரியங்களில் இறங்கினர்.

அதில் முதற்கட்டமாக வரலாற்றில் இல்லாததையும், பொல்லாததையும் திணித்தனர்.

இந்தியாவில் நடைபெற்ற இஸ்லாமியர் ஆட்சியின் பேரில் இந்துப் பெருமக்களுக்கு வெறுப்பை உண்டாக்கிடும் முயற்சிகளை வேகமாகச் செய்தனர்.

ஆலம்கீர் ஔரங்கஜேப்மீது அடிப்படையற்ற, ஆதாரமற்ற இல்லாத உண்மையற்ற, பழிகளைத் தூற்றினர். தனது மூத்த சகோதரர் தாராஷுக்கோவையும் மற்றும் இரு சகோதரர்களையும் கொன்று ஔரங்கஜேப் சக்கரவர்த்தி ஆனார் என்கிறார்கள்!

பதவிப் போட்டியும் பரிவுக் கடிதமும்

“ஆலம்கீர் ஔரங்கஜேப், தன் தந்தையைச் சிறையில் அடைத்தார்; அண்ணன் தம்பியரைக் கொன்றார்; அதன் பின் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தார்; இவைகள் சரித்திரச் சான்றுகள்தானே; சகோதரர்களைக் கொன்றுதானே சக்கரவர்த்தியானார்; இதற்குப் புதிய விளக்கம் என்ன தந்துவிடப் போகிறாய்?” என்றும் சிலர் கேட்கக் கூடும்

இந்த ஒரு குற்றச்சாட்டுக்கு அடிமுதல் நுனி வரை ஆராய்ந்து அதற்கான பதிலை மட்டும் எழுதினால் அதுவே ஒரு தனி நூலாகும் என்பதை நான் உறுதியாகச் சொல்லுகிறேன்; இதோ, அந்த விஷயத்திற்கும் வருகிறேன்.

ஷாஜகானின் உடல் நலம் குறைதல்

அபுல் முஸஃப்பர் ஸிஹாப்உத்-தீன் முகம்மது ஸாஹிப்-இ-கிரான் ஷாஜகான் பாதுஷா காஸி என்ற பெரும் பட்டப் பெயரைத்

தரித்துக் கொண்ட ஷாஜகான், 1657ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8ஆம் தேதி (ஹிஜ்ரீ 1067 ஹஜ்பிறை 7ல்) நோய்வாய்ப்பட்டார். மன்னர் மக்கள் மத்தியில் பலகணியில் நிற்கும் (ஜரோக்கா) தடைப்பட்டது. பொதுமக்களிடையே பீதியும், பொய் வதந்தியும் பரவ ஆரம்பித்தது.

பேரரசர் ஷாஜகானின் மக்கள் நால்வர். அதில் மூத்தவர் இளவரசர் தாராஷுக்கோ (43 வயது) அவருக்குப் பின் இளவரசர் ஷுஜா (41 வயது). அதற்கு அடுத்த இளவரசர் ஔரங்கஜேப்பிற்கு (39 வயது). இறுதியாக இளவரசர் முராத்பக்ஷிற்கு (33 வயது)

தாராஷுக்கோ, ஆக்ராவிலேயே தந்தையுடன் பல ஆண்டுகளைக் கழித்தவர். அவரது பதவியோ காபூலின் ஆளுநர். ஆனால் அவர் எல்லைப்புற மாகாணங்களுக்கோ, பஞ்சாபிற்கோ நேரில் சென்றது கிடையாது. தம் உதவியாளர்கள் மூலம் அதனை நிர்வகித்து வந்தார்.

ஷுஜா, ஒரிஸ்ஸா மாகாணத்தின் ஆளுநர். ஆலம்கீர் தக்காணத்தின் ஆளுநர். அதோடு பீஜப்பூர், கோல்கொண்டா சுதேச அரசர்களின் விவகாரத்தையும் கவனித்து வந்தார். முராத் பக்ஷ், மேற்க மண்டலத்தில் குஜராத் மாகாணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில்தான் ஷாஜகான் நோய்வாய்ப்பட்டதை அறிந்ததும் அரசகுமாரர்கள் அனைவரும் ஆட்சிப் பொறுப்பை கைப்பற்றத் துடித்தனர்.

ஷுஜா முடி சூட்டிக் கொள்ளல்

ஷுஜா தனது தலைநகரான ராஹ்மஹலில் (வங்காளம், பீஹார்) தாமே பேரரசர் என 1657 செப்டம்பரிலே பட்டம் சூட்டிக் கொண்டார். தனது தந்தையைத் தாரா, விஷம் வைத்துக் கொல்ல முயன்றதாகவும் குற்றமும் சாட்டினார். தாமே பட்டம் சூட்டியதைத் தொடர்ந்து வங்காளத்தில் தம் பெயரில் நாணயங்களையும் அச்சிட்டார். அதோடு ஆக்ராவின் மீது படையெடுக்கவும் முடிவு செய்தார்.

முராப்பக்ஷும் முடி சூட்டிக் கொள்ளல்

அண்ணன் ஷுஜாவைப் போன்று முராத் பக்ஷும் 1657 டிசம்பர் 5 ஆம் நாள் அகமத் நகரில் பேரரசர் எனப் பட்டம் சூட்டிக் கொண்டதோடு, நாணயங்களையும் வெளியிட்டார்.

தாராவும் - ஷாஜகானும்

ஷாஜகான் தனது மூத்தப் பிள்ளையான தாராவிற்கு மட்டும்

உயர் பதவிகளையும், சலுகைகளையும் அள்ளி அள்ளிக் கொடுத்தார். தனது அரியாசனத்திற்கு அருகிலேயே ஒரு சிறு சிம்மாசனம் தயாரிக்கப்பட்டு, அதில் தாரா அமர்த்தப்பட்டார். பேரரசருக்குப் பதிலாகப் பல நேரங்களில் தாராவின் ஆணைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. மேன்மைதங்கிய உயர்வுபெற்ற அதிர்ஷ்டசாலி மன்னன் (ஷா புலந்த இக்பால்) (Shah Buland Iquebal) என்றெல்லாம் அவருக்கு விருது அளிக்கப்பட்டது. அந்த வேளையில்தான் வாரிசுரிமைப் போரும் வந்தது. அப்போது தாரா என்ன செய்தார்? ஷாஜகான் நோயுற்ற செய்தியைப் பரவவிடாமல் தடுத்தார். தந்தையிடமுள்ள செல்வாக்கைப் பயன்படுத்தத் தொடங்கினார்.

தாராவின் தவறான செயல்கள்

ஆலம்கீர் ஔரங்கஜேப், பேரரசர் ஷாஜகானின் உத்தரவினை ஏற்று குல்பர்கா முற்றுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். வெற்றிக்கனியை விரைந்து பறிப்பதற்கு வெகுஅருகில் வந்துவிட்ட அந்த வேளையில் தான் தாராஷுக்கோ ஷாஜகானின் சார்பில் உத்தரவுகளை அனுப்பினார். ஆலம்கீர் ஔரங்கஜேப்பின் படையிலிருந்து பிரபுக்களைத் தலைநகருக்கு உடனே திரும்பிவரும்படி ஷாஜகானின் சார்பில் கட்டளையிட்டார் தாரா.

அவசர நிலையில் பீஜப்பூர் சுல்தானிடம் ஒரு கோடி ரூபாய் நஷ்டஈடு வாங்கிக் கொண்டு ஔரங்கஜேப் சமாதானம் செய்து கொண்டார். அது மட்டுமின்றி அப்போது சிவாஜியையும் அடக்கி ஒடுக்கும் முயற்சியும் நிறைவேறவில்லை. ஔரங்கஜேப் அனைத்தையும் அப்படியே விட்டு விட்டு தலைநகர் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தார்.

ஈஸாபேக்

தலைநகரில் ஔரங்கஜேப்பின் பிரதிநிதியாக இருந்து வந்த ஈஸாபேக் என்பவரை தாராஷுக்கோ கைது செய்ததுடன் அவருடைய வீட்டையும் ஜப்தி செய்தார். அது மட்டுமா?

ஜோத்பூர் ராஜாவான மகாராஜா ஜஸ்வந்த்சிங் என்பவரை பெரும் படையுடன் ஔரங்கஜேப்புடன் போர் தொடுக்கவும் அனுப்பி வைத்தார்.

இந்த நிலையில் ஔரங்கஜேப் என்ன செய்தார்?

ஔரங்கஜேப்பின் கடிதம்

மேற்கு மண்டலத்தில் முராத் பக்ஷ் சூரத் நகரைக் கைப்பற்றி

இணைத்துக் கொண்டதை அறிந்த ஔரங்கஜேப் தனது தம்பிக்கு எழுதிய கடிதம் இதோ:

நம்முடைய கைவிடப்பட்ட சகோதரரின் வெட்கமற்ற, தர்மமற்ற செயல்களை எதிர்த்து நீ என்ன முடிவெடுத்தாலும் என்னைக் கூட்டாளியாக சேர்த்துக் கொள்ளலாம். ஆனால், நம் தந்தை இன்னும் உயிருடன்தான் இருக்கிறார். நாம் இருவரும் அவருக்கு உதவி செய்யக் கடமைப்பட்டவர்கள், துரோகிகளின் செருக்கையும், துடுக்கையும் தண்டிக்கக் கடமைப்பட்டவர்கள்.

இவ்வாறு தனது சகோதரருக்கு கடிதம் எழுதியவர் ஔரங்கஜேப் . எவ்வளவு பொறுமையுடனும் நிதானத்துடனும் ஔரங்கஜேப் செயல்பட்டிருக்கிறார் என்பதையும் நாம் தெளிவாக உணரமுடிகிறது.

முராத்தின் மரணமும்; மரணத்தின் காரணமும்!

ஆலம்கீர் ஔரங்கஜேப்பின் வரலாற்றினை அவரது காலத்திலேயே எழுதிய காபிகான் தனது ‘முன்டகபுல் லுபாப்’ நூலில் பாகம் 2, பக்கம் 9ல் குறிப்பிட்டதை, ‘இந்திய வரலாறு’ நூல் பாகம் 7ல் சர்.எச்.எம்.எலியட், பேராசிரியர் ஜான் டௌசன் ஆகியோர் பக்கம் 217இல் தெரிவிக்கும் விஷயத்தின் துவக்கத்தில் கடிதம் ஒன்றைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அரச பதவியா? அல்லாஹ்வின் பாதையா?

அந்தக் கடிதத்தின் துவக்கத்தில், ‘நிலையில்லாத உலகத்தில் அரசாங்கப் பொறுப்புக்களுக்கு வர விருப்பம் இல்லை; நான் அல்லாஹ்வின் பொறுப்புக்களுக்கு வர விருப்பம் இல்லை; நான் அல்லாஹ்வின் ஆலயமான கஃபாவிற்குப் புனிதப்பயணம் செல்லவே விருப்பமுள்ளவனாக இருக்கிறேன்’ என்று எழுதியவர் ஔரங்கஜேப்.

‘I have not the slightest liking for or wish to take any part in the government of this deceitful and unstable world my only desire is that I may make the pilgrimage to the temple of God...’

வாரிசுரிமைப் போர்க்களக் காட்சிகளை விரிவாக விளக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்; ஏனெனில் இப்போதைய தேவை கடந்த காலப் போர்க்களக் காட்சிகளல்ல. ஆலம்கீர் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை ஆராய்வது மட்டும் இங்கு அவசியத் தேவையாகும்.

ஆக்ரா கல்லூரியில் பணியாற்றிய வரலாற்று ஆசிரியர் டாக்டர் ஏ.எல்.ஸ்ரீவத்ஸவா (ASHIRBADI LAL SRIVASTAVA)

1952ல் முகலாயப் பேரரசு ‘THE MUGHUL EMPIRE’ என்ற நூலினை எழுதி வெளியிட்டார். அதில் பல விஷயங்கள் உடன்பாடானவை அல்ல என்றாலும், அவரே கூறியுள்ள ஒரு கருத்தினை இங்கே மேற்கோள் காட்டுகிறேன்.

“முராதைப் போல் ஔரங்கஜேப் தன் தந்தை யாரையோ அல்லது மூத்த சகோதரரையோ வெளிப்படையாகப் பகைத்து அவர்களுடன் உறவை அறுத்துக்கொள்ள விரும்பவில்லை. பிணியுற்று இருக்கும் தந்தையைக் காணத்தான் ஆக்ராவிற்குச் செல்வதாக அவர் அறிவித்தார்.

பகைவருக்கருளிய பண்பாளர்

பீஜப்பூரையும், கோல்கொண்டாவையும் தனது நண்பர்களாக்கிக் கொண்ட ஔரங்கஜேப் , தக்காணத்தில் சிவாஜிக்கு ஏராளமான நிலக்கொடைகளையும் வழங்கினார்.

“He secured his object by converting Golkunda and Bijapur in to his friends and offering Shivaji grants of Lands in the Dakhin”*

(* A.L. Srivastava ‘The Mughul Empire 1976, P. 317.)

நோயுற்றிருக்கும் தந்தையைக் காண செல்கிறார். வரும் வழியில் பகை நாடுகளையெல்லாம் நட்புநாடுகளாக்கிக் கொள்கிறார். இந்த அளவிற்குப் பொறுமையைக் கடைப்பிடித்த ஔரங்கஜேப் தனது சகோதரர்கள் விஷயத்தில் நடந்து கொண்ட வரலாற்று உண்மை தான் என்ன?

முராத் பக்ஷ் **(Murad Bakhsh)**

33 வயதான முராத்பக்ஷ், ஆலம்கீர் தம்பி. வாரிசுரிமைப் போரில் இவரை ஔரங்கஜேப் கொன்றாரா? அல்லது அவரது மறைவு எப்படி ஏற்பட்டது?

முராத் பக்ஷ் ராஜகுடும்பத்தில் பிறந்த கறுப்பு ஆடு. அவர் அறிவிற் சிறந்தவருமல்ல; ஆனால் சுகவாசி. தக்காணம், குஜராத் ஆகிய போர்க்களங்களில் தோல்வியைத் தழுவிய போது தன்னைத்தானே திருத்திக்கொள்ளாதவர். தனக்கு உதவியாகத் தகுதி வாய்ந்தவர்களை நியமிக்கும் திறமையும் அவருக்கு இல்லை. தன்னைச் சூழ்ந்திருந்த துதிபாடிகளின் பேச்சிலே மயங்கிக் கிடந்தார். யோக்கியமானவர்களுக்கும், தன்மானமுள்ளவர்களுக்கும் அவரிடம் இடம் இல்லை. தலைமைப் பொறுப்பேற்க வேண்டிய நிலையிலிருந்த அவர், தளபதியின் வேலையைச் செய்யும் இடத்திலே தான் இருந்தார். இத்தகைய நிலையை உணர்ந்து கொண்ட மாமன்னர் ஷாஜகான்

தனது புதல்வருக்குத் தக்க ஆலோசனை சொல்ல மிகவும் திறமைவாய்ந்த நேர்மையான அலிநாகி (Ali Nagi) என்பவரை முராத் பக்ஷின் வருவாய்த்துறை அமைச்சராக அனுப்பி வைத்தார்.

அலிநாகி

சக்கரவர்த்தி ஷாஜகான், தன்னிடம் கொண்டுள்ள நம்பிக்கையைப் பற்றியும், தன்னுடைய நேர்மையையும் ஆற்றலையும் பற்றி நன்கறிந்திருந்தவர் அலி நாகி. முராத் பக்ஷின் தர்பாரில் உள்ள துதிபாடிகளைக் கண்டு வெறுப்படைந்தார். இளவரசரின் அறியாமை மற்றும் ஆடம்பரச் செலவுகளினாலும் இலாபம் அடைந்து வந்த பலர் அலிநாசியின் நேர்மையான, கடுமையான நடவடிக்கையினால் அவருக்கு விரோதிகளாக மாறினார்கள்.

குஜராத்திலிருந்த ஏனைய பிரபுக்களின் அரசுப் பொறுப்பு முழுவதும் அலிநாகியின் கட்டுப்பாட்டிற்குள் வந்ததினால், இன்னும் அதிகமாக அவர் மீது பொறமை கொண்டார்கள். நேர்மையான, கடுமையான அவரது நிர்வாகத்தினால் அவருக்கு அந்த பகுதியில் ஒரு நண்பர் கூட இல்லாத நிலைமை இருந்தது. அது எதிரிகளுக்குச் சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொடுத்தது.

இந்த வேளையில் தான் வாரிசுரிமைப் போரும் வந்தது. தாராஷுக்கோவிற்கு எதிராக முராத்பக்ஷ் ஆலோசனை செய்து கொண்டு இருந்தார்.

குத்புதீன்கான் கெய்ஸ்கி

(Qutbuddinkhan Kheshgi’ faujdar of Pattan)

அலிநாகியின் எதிரியான குத்புதீன்கான் கெய்ஸ்கி என்ற பேட்டன் பகுதி அதிகாரி சூது வலையை விரித்தார். ஷாஜகானின் மூத்த புதல்வர் தாராஷுக்கோவிற்கு ஆதரவு தெரிவித்து அலிநாகி எழுதியது போல் போலிக் கடிதம் ஒன்றைத் தயாரித்து, அதனை எடுத்துச் செல்கிறபோது, இளவரசர் முராத் பக்ஷின் வீரர்களிடம் அகப்படுவது போல் திட்டமிடப்பட்டது. அதன்படியே திட்டத்தை அப்படியே செயலாற்றினர்; வஞ்சகத்தை நிறைவேற்றினர். பின்னர் அலிநாகியின் பெயரால் எழுதப்பட்ட போலிக் கடிதத்தையும், அதனைக் கொண்டு சென்றரையும் திட்டப்படியே பிடித்து வந்து, தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்த முராத்பக்ஷிடம் ஒப்படைத்தார்கள்.

போலி ஆவணம்

முந்தைய இரவில் கேளிக்கைகளில் ஈடுபட்டுத் தூக்கமில்லாதிருந்த முராத்பக்ஷ் நிதானமிழந்து ஆத்திரப்பட்டு உடனே அலி நாகியைத் தன்னிடம் இழுத்துவர உத்தரவிட்டார். வீட்டில் திருகுர்ஆனை ஓதிக் கொண்டிருந்த வருவாய்த்துறை அமைச்சர் அலிநாகி, இளவரசரின் அழைப்பு வந்ததும் அவசர அவசரமாகத் தர்பார் உடையை அணிந்து கொண்டு முராத்பக்ஷிடம் வந்து சேர்ந்தார்.

கோபத்தை அடக்கிக் கொண்டு, ஒரு கையில் ஈட்டி (Spear)யுடன் ஆசனத்தில் அமர்ந்திருந்த முராத் பக்ஷ் அலிநாகியிடம்,

“தன் எஜமானனுக்குத் துரோகம் செய்யும் மனிதனுக்கு என்ன தண்டனை அளிக்கலாம்?” என்று கேட்டார். உடனே அலிநாகி எந்தவிதத் தயக்கமில்லாமல், ‘மரண தண்டனை அளிக்கலாம்’ என்று கூறினார்.

உடனே அலிநாகியைப் பார்த்து, முராத்பக்ஷ் போலிக் கடிதத்தை தூக்கி எறிந்தார்.

அலிநாகியின் அவல மறைவு

அதனைப் படித்துப் பார்த்த அலிநாகி அந்தக் கடிதத்திற்கும் தனக்கும் எள்ளளவும் சம்பந்தமில்லை என்ற உண்மையை உணர்ந்து கொண்டார். தனக்கு எதிராகத் தனது எதிரிகள் இம்மாதிரி போலி ஆவணத்தைத் தயாரித்து அனுப்பியதை, சதிகாரர்களின் சதியை உணர்ந்து கொள்ள முடியாமல் தன்னைத் தவறாக நினைத்து இப்படி இளவரசர் முராத்பக்ஷ் நடந்து கொள்கிறாரே என்று அவரிடமே அலிநாகி கடிந்து கொண்டார். வெகு நாட்களாக அலிநாகியின் மேல் ஆத்திர முற்றிருந்த முராத்பக்ஷ் நிதானமிழந்து தன்னுடைய ஈட்டியை அலிநாகியின் மேல் செலுத்தி, ‘துரோகியே... கேடு கெட்டவனே...’ என்று ஆத்திரத்துடன் வசைமாரி பொழியும் வேளையில் சுற்றி நின்றுக் கொண்டிருந்த இளவரசரது கைக்கூலிகள் அலிநாகியை முழுவதுமாகக் கொன்றுதீர்த்தார்கள். *

(* ஜாதுநாத் சர்க்கார், ‘ஔரங்கஜேப், பாகம்-1’, கல்கத்தா, 1912, பக்.320-322.)

குவாலியரில் நடந்த விசாரணை

அலிநாகியின் புதல்வரில் மூத்தவர், தந்தையின் மறைவிற்குப் பிறகு அது குறித்து வழக்குத் தொடுக்காமல் மனமொடிந்து இருந்து விட்டார். ஆனால் அவரது இளைய புதல்வர் தனது

தந்தை அலிநாகி, இளவரசர் முராத்பக்ஷால் அநீதியாகப் படுகொலை செய்யப்பட்டதற்கு விசாரணை செய்து தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று பேரரசரிடம் முறையிட்டார்.

குவாலியரில் (Gwalior) கிரிமினல் குற்றங்களை விசாரிக்கும் காஜிகளிடம் (Qazi) (Criminal Judges) வழக்கு விசாரணைக்கு வந்தது. நஷ்டஈடு எதுவும் இந்தப் படுகொலைக்குப் பரிகாரமாகப் பெற்றுக் கொள்ளமுடியாது என்றும் அலிநாகியின் இளைய புதல்வர் மறுத்துவிட்டார்.

அலிநாகியைப் படுகொலை செய்த இளவரசர் முராத்பக்ஷிற்கு மரண தண்டணையைக் குவாலியர் காஜிகள் விதித்தனர். இஸ்லாமியச் சட்ட விதிகளின் படி அதன்பின் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. கி.பி.1661 டிசம்பர் 4, புதன்கிழமை குவாலியர் கோட்டையில் துரோகிகளை அடக்கம் செய்யும் கல்லறைப் பகுதியில் (Traitors Cemetery) யில் முராத்பக்ஷ் அடக்கம் செய்யப்பட்டார்.*

(* ஜாதுநாத் சர்க்கார், ஔரங்கஜேப்,' பாகம்-1, கல்கத்தா, 1912, பக். 99-100.)

முராத்பக்ஷ் அலிநாகியைக் கொன்றதையும், அதற்குப் பதில் குவாலியர் காஜிகள் முராத்பக்ஷிற்கு மரணதண்டனை வழங்கியதும் வரலாற்றில் வெளிச்சத்திற்கு வரவேண்டிய உண்மைகள். முராத்பக்ஷ் விஷயத்தில் ஆலம்கீர் ஔரங்கஜேப் தவறிழைத்தாரா? முராத்பக்ஷின் மரணத்திற்கு காரணமானவரா? நடுநிலையாளர்களே நீங்களே முடிவெடுங்கள்.

பழங்குடியினரால் படுகொலைக்குள்ளான ஷுஜா (Shuja)

தர்மாட்டிலும், சமூகாரிலும் தாராஷுக்கோ அடைந்த தோல்வி, ஷுஜாவிற்குத் தைரியத்தை அளித்தது. கி.பி.1659 ஜனவரி 5இல் அலகாபாத்திற்கு அருகிலிருந்த காஜா (Khajwaha) என்ற இடத்தில் ஔரங்கஜேப் ஷுஜாவைப் படுதோல்வி அடையுமாறு செய்தபோது ஷுஜாவின் நம்பிக்கைகள் எல்லாம் தூள் தூளாயிற்று. பின்னர் கி.பி.1660 மே மாதத்தில் தனது படையைவிட ஐந்து மடங்கான பெரிய படையின் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல் டாக்காவிற்கு ஷுஜா தப்பி ஓடினார்.

பொருளை இழந்து, புகழை இழந்து டாக்காவில் தஞ்சம் புகுந்தார். ஜமீன்தார்களின், பெருந்தனக்காரர்களின் ஆதரவு அங்குமில்லாத நிலையில் டாக்காவை விட்டுக் கிளம்பி, கடலை நோக்கிச் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். அப்போதும் படகுக்காரர்களும், போர்வீரர்களும் ஷுஜாவைக்

கைவிட்டுவிட்டு பின்னர் ஓடினார்கள்.

‘மெக்’ பழங்குடிகள்

பின்னர் அரக்கான் (Arakan) அரசரிடம் உதவி கேட்டு தஞ்சம் புகுந்தார் ஷுஜா. அரக்கான் அரசரின் சிட்டகாங் (Chatgaon) கவர்னர் 51 கப்பல்களை ஷுஜவிற்கு வழங்கி உதவினார். அவ்வாறு இருந்த போதிலும் வங்காளத்தைத் திரும்ப மீட்போம் என்ற நம்பிக்கையை இழந்துவிட்ட ஷுஜா, மெக் (Meghs) என்ற பழங்குடியினர் வாழும் இடத்தில் அடைக்கலம் புகுந்தார்.

இந்தச் செய்கை அவரைப் பின்தொடர்ந்தவர்களுக்குப் பெரிதும் துயரத்தை அளித்தது. ஏனெனில், கண்ட மிருகங்களைச் சாப்பிடும் பழக்கம், காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகள், கொள்ளை போன்ற கொடூரச் செயல்களை ஆகியவைகளைக் கொண்டிருந்த இந்தப் பழங்குடியினரின் செயல்களைக் கிழக்கு வங்காளத்தில் அனைவரும் அறிவர்.

அரக்கான் அரசரிடம் தஞ்சம்

கி.பி.1660 மே 12இல் தனது மூதாதையர் ஆண்டு வந்த பல வருடங்களாகத்தான் ஆட்சி புரிந்து வந்த பகுதியை விட்டு விட்டு வேறு வழியின்றி ஷுஜா 40 பேர்களுக்கும் குறைவானவர்களுடன் தனது குடும்பத்தாரையும் அழைத்துக் கொண்டு, அரக்கானுக்குக் கப்பல் ஏறினார். அங்கு சென்றும் அவர் மகிழ்ச்சியாக வாழ முடியவில்லை. அவரது பேராசை அவருக்கும் பரிதாபகரமான முடிவையே கொடுத்தது.

அரக்கான், முகல், பத்தான் பகுதி மக்கள் அவருக்கு ஆதரவாகவே இருந்தார்கள். இதனைப் பயன்படுத்த எண்ணிய ஷுஜா அப்போது துரோகக் செயலில் இறங்கினார்.

ஷுஜாவின் துரோகம்

‘அரக்கான் அரசரைக் கொன்று, அவரது அரசாங்கத்தைக் கைப்பற்றி, அதன்பின், அங்கிருந்த வங்காளத்திற்குப் படையெடுத்துச் செல்ல வேண்டும்‘ என்ற சதித்திட்டம் ஷுஜாவின் மனதில் உருவானது.

அரக்கானின் அரசர் இதனைக் கேள்விப்பட்டு ஷுஜாவைக் கொல்லத் திட்டம் தீட்டினார். அதனை அறிந்ததும் ஒரு சில ஆட்களுடன் ஷுஜா தப்பிச் சென்று காட்டிற்குள் ஓடினார். ஆனால் ‘மெக்‘ இனப் பழங்குடி மக்கள் அவரைப் பின்தொடர்ந்து சென்று அவரைக் கண்டதுண்டமாக வெட்டிக் கொன்றார்கள். ஷுஜவின் மரணம் இவ்வாறு நிகழ்ந்தது.

ஆனால் வரலாற்றைப் பாடசாலைகளில் எப்படி சொல்லித் தருகிறார்கள்?

ஔரங்கஜேப் தனது சகோதரர்களை எல்லாம் கொன்றுவிட்டு, தான் பட்டத்திற்கு வந்தார் என்று!

‘Shuja once again fled to Bengal and then to Arakan. He was murdered by the Meghs’.

மெக் என்ற பழங்குடியினாரால் ஷுஜா கொல்லப்பட்டார் என்ற செய்தியை மேலோட்டமாகச் சிலர் சொல்லிச் சென்று விடுகின்றனர். தனக்கு அடைக்கலம் தந்த அரக்கான் அரசரைக் கொன்று, அவரது அரசைக் கைப்பற்ற எண்ணிய துரோகி ஷுஜா. அதனால் தான், மெக் இனப்பழங்குடி மக்களால் துண்டு துண்டாக வெட்டிக் கொல்லப்பட்டார் என்று சொல்லிக் கொடுக்க ஏன் மறுக்கிறார்கள்?

டச்சுக்காரர்களின் ஆவணம்

ஜான்டேக் (JANTAK) என்ற டச்சு வணிகர் ஔரங்கஜேப்பிற்கு தெரிவித்த செய்தி இதோ:

‘He planned an outbreak intending to slay the King and take his Kingdom and than advance once more to test his forturn in Bengal. The King of Arracan heard of the plot and “planned the assassination of Shah Shuja. Shah Shuja with a few men fied into the jungle. The Maghs... pursued the poor Prince... cutting his body into pieces’.

‘டச்சுக்காரர்களின் கி.பி.1661ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திய அறிக்கை’ இந்த வரலாற்றைத் தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கிறது. இந்த உண்மைகள் வரலாற்றின் வெளிச்சத்திற்கு வரவேண்டாமா?

ஆலம்கீர் ஔரங்கஜேப்பிற்கும், அவரது சகோதரர் இளவரசர் ஷுஜாவின் மரணத்திற்கும் எந்த விதத்திலும் சம்பந்தமிருக்கிறதா? நடுநிலையாளர்கள் நல்ல தீர்ப்பிற்கு இதையும் விட்டு விடுகிறேன்.

தாராவின் தவறான பாதை

‘நானா, அல்லது ஔரங்கஜேப்பா? என்று முடிவாக வேண்டிய தருணம் வந்து விட்டது; நேரடியாக யுத்த களத்தில் நாங்கள் மோதியாக வேண்டும் என்பது விதிக்கப்பட்ட ஒன்று’ என்று முழங்கிய தாராஷுக்கோ பெரும் படையைத் திரட்டிச் சென்று ஔரங்கஜேப்பை எதிர்த்தார். அனுபவமில்லாத படை; அவசரக்கோலத்தில் அகப்பட்டவர்களுக்கெல்லாம் போர்

உடை; அப்படி அழைத்துச் சென்ற படை, தாராஷுக்கோவின் படை.

போர்க்களங்கள் பலவற்றைக் கண்டு, வெற்றி பல பெற்ற, வீரமிக்க படை ஔரங்கஜேப்பின் படை.

கி.பி.1653 ஏப்ரல் 25 தார்மத் (Darmat) போர்க்களம்;

கி.பி.1658 ஜூன் 8 சாமூகார் (Samugarh) போர்க்களம்;

கி.பி.1659 ஏப்ரல் 12 தேவ்ராய்ப் (Deorai) போர்க்களம்;

அந்தப் போர்க்களக் காட்சிகளை இங்கு விவரிக்கப் போவதில்லை; களங்களிலே வழக்கம் போல் தோல்வியைத் தழுவி ஓடி ஒளிந்தவர் தாராஷுக்கோ; பிறகு ஜீவன்கான் (Malik Jiwan) என்பவரால் இறுதியாகப் பிடிக்கப்பட்டு கைதியாக ஔரங்கஜேப்பிடம் அழைத்துவரப்படுகிறார்...

பெற்ற தங்கமும் வைரமும்

கி.பி.1656 பிப்ரவரியில் ஔரங்கஜேப் இளவரசர்; கோல்கொண்டாவை முற்றுகையிட்டு வெற்றிக்கனியைப் பறிக்க இருந்த வேளையில் கோல்கொண்டா சுல்தான் குதுப்ஷாவின் ஆட்கள் டில்லிக்கு விரைகிறார்கள். தாராஷுக்கோவைப் பார்க்கிறார்கள். தங்கமும் வைரமும் கைமாறுகிறது.

தாராஷுக்கோ தந்தை ஷாஜகானிடம் போரை நிறுத்த வற்புறுத்துகிறார். உடனே 'படைகளை வாபஸ் வாங்கவும்' என்று அவசர ஆணை ஔரங்கஜேப்பை நோக்கிப் பறக்கிறது. கோல்கொண்டா சுல்தான் மன்னிக்கப்படுகிறார். அபராதத் தொகை மட்டும் அவரிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. இவ்வாறு தன்னை மீறி காரியங்கள் நடப்பதற்கு காரணம் தாராஷுக்கோ என்பதனை ஔரங்கஜேப் அறிந்திருந்தார்.

தந்தை ஷாஜகானை அண்ணன் தாரா தன் பிடியில் வைத்துக்கொண்டு, தம் இஷ்டம் போல் ஆட்டுவித்து, அடுக்கடுக்காய் பல தவறுகளைத் தொடர்ந்து செய்தும் வருகிறார் என்பதையும் ஔரங்கஜேப் நன்றாகவே அறிந்திருந்தார்.

பேரரசர் ஷாஜகான் நோய்வாய்ப்பட்ட போது முராத்பக்ஷ், ஔரங்கஜேப் , ஷுஜா இம்மூவருடைய பிரதிநிதிகள் டில்லியில் இருந்தார்கள்; அவர்களிடம் 'ஷாஜகானைப் பற்றி எவருக்கும் தெரியப்படுத்தக்கூடாது என்றும், அரசாங்க விஷயங்களைப் பற்றிப் பேசவும் கூடாது' என்றும் எழுத்து மூலமாக உறுதிப் பத்திரத்தை வாங்கிக் கொண்டவர் தாராஷுக்கோ.

தாராவின் தவறான செயல்கள்

ஷாஜகான் நோய்வாய்ப்பட்ட செய்திகளைப் பயணிகள் மூலம் பிறர் தெரிந்துவிடக் கூடுமென்று வங்காளம், குஜராத், தக்காணம் ஆகிய பிரதேசங்களுக்குச் செல்லும் பாதையை தடுத்துவிட்டவர் தாராஷுக்கோ.

ஔரங்கஜேப்பின் வக்கீல் ஈஸா பேக் வீட்டை ஜப்தி செய்ததோடு, அவரைக் கைதும் செய்தவர் தாராஷுக்கோ.

ஔரங்கஜேப் பீஜப்பூர் முற்றுகையில் இருந்தவேளை; (கி.பி.1657) எல்லைப்புறத்திலும், மத்திய ஆசியப் பகுதிகளிலும் இழந்த புகழையும் நற்பெயரையும் ஔரங்கஜேப் தேடிக்கொள்ள காரணமான அந்த வெற்றிப்போரின் போது, அவருடனிருந்த உயர் ராணுவ அதிகாரிகளை தலைநகருக்குத் திரும்ப அழைத்துக் கொண்டவர் தாராஷுக்கோ.

வாரிசுரிமைப் போரில் (War of Succession) இளவரசர்கள் முராத்பக்ஷ், ஷுஜா, ஔரங்கஜேப் ஆகிய மூவரையும் எதிர்த்திட சுலைமான் ஷுக்கோ, தளபதி காசிம்கான் தலைமையில் படைகளை அனுப்பியவர் தாராஷுக்கோ.

தம்பி பிள்ளைகளுக்கு தவறிழைத்த தாரா

மகாராஜா ஜஸ்வந்த்சிங்கை ஔரங்கஜேப்பிற்கு எதிராகப் பெரும்படையுடன் அனுப்பி வைத்தவர் தாராஷுக்கோ.

தந்தை ஷாஜகானுக்கும் தனயன் ஔரங்கஜேப்பிற்கும் இடையே நல்லுணர்வைக் குலைத்து அவர்களது உறவை விரிசலடையச் செய்தவர் தாராஷுக்கோ.

ஔரங்கஜேப்பின் எதிரிகள் அனைவருக்கும் அதிக அளவில் சலுகைகளை வழங்கியவர் தாராஷுக்கோ.

பீஜப்பூர், கோல்கொண்டா போர்களின் போது ஔரங்கஜேப்பிற்கு எதிராக வெளிப்படையாக வேலை செய்தவர் தாராஷுக்கோ. ஔரங்கஜேப் பின் பிள்ளைகள் தனது பாட்டனாரான ஷாஜகானிடம் சலுகைள் எதுவும் பெற விடாமல் தடுத்தவர் தாராஷுக்கோ.

ஔரங்கஜேப்பை இழிவுபடுத்துகின்ற அதிகாரிகளின் செயல்களை ஆதரித்து, அவர்களை ஊக்குவித்தவர் தாராஷுக்கோ.

அண்ணன் தம்பிக்கு இடையே நடந்த பனிப்போர் ஓராண்டல்ல; இரண்டல்ல; பதினாறு ஆண்டுகள் அனைத்தையும்

பொறுத்து, சகிப்புத்தன்மையுடன் காலத்தை கடத்தி வந்தவர் ஔரங்கஜேப் .

தாராவின் வேதாந்த நூல்கள்

தாராஷுக்கோ சிறந்த சமஸ்கிருத அறிஞர். 50 உபநிஷத்துக்களின் பாரசீக மொழிபெயர்ப்பாக சிர்ருல்அஸ்ரார் (Sirrul Asrar) (மகா ரகசியம்) என்ற நூலை வெளியிட்டார்.

இந்து வேதாந்தத்தின் கலைச் சொற்களும், தத்துவத்திற்கு ஈடான சூபி (Sufi) தத்துவக் கலைச்சொற்களின் தொகுப்பான மஜ்மு-உல்-பஹ்ரைன் (Majmual-Bahrain) என்ற நூலை எழுதியவர் தாராஷுக்கோ.

இந்து சமயக் கொள்கைகளை, பாபாலால்-தாராஷுக்கோ இருவருக்கும் இடையே நடக்கும் சம்பாஷணைகளை, 'பாபாவுடன் சொற்போர்' என்ற நூலாகவும், (Discussion with Babalal) (அதர்வ வேதத்தின் பாரசீக மொழியாக்கம்) சகீனத்துல் அவுலியா (Sakinatul Aulia) அவுலியாக்கள்-ஞான குருநாதர்களின் வரலாறு, இரு சமுத்திரங்களின் இணைப்பு (Mingling of Two Oceans) ஆகிய நூல்களையும் தாராஷுக்கோ எழுதினார்.

தாராவின் சிந்தனை சிறகடித்துப் பறந்தது. குறிப்பிட்ட சமய எல்லைக்குள் அது நிற்கவில்லை.

வேதங்களால் மன அமைதி

காஷ்மீரில் இருந்த போது சூகி முல்லாஷா (Sufi-Mullashah) வின் சிஷ்யராகி சூபியிசத்தைப்பற்றி நிறையப் படித்தறிந்தார் தாராஷுக்கோ. அதில் அவருக்குப் பலன் ஒன்றும் இல்லாமல் போய்விட்டது. அவர் தேடித் திரிந்த மன அமைதியை அதனால் அவருக்கு அளிக்க முடியவில்லை. வேதங்களையும், உபநிஷத்துக்களையும் படித்த போதுதான் அந்த மன அமைதி கிடைத்தது என்று தாரா நம்பினார்.

முஹம்மத் சகீ முஸ்தயித்கான் என்ற வரலாற்று ஆசிரியர் (Muhammad Sakhi Mustaiddkhan) 40 ஆண்டுகள் முகலாய ராஜியப் பேரவையில் பங்கு கொண்டவர்; அரசாங்கப் பேரேடுகளைப் பார்த்திடும் வாய்ப்பு பெற்றவர். இவர் எழுதிய ம-ஆசிரெ ஆலம்கீர் (Ma-A'siri A'lamgiri) நூலிலிருந்துதான் இந்த விவரங்கள் நமக்குக் கிடைக்கின்றன. இந்திய வரலாற்றை ஏழு பாகங்களாகத் தொகுத்த எலியட்-டௌசன் இரட்டையர்கள். தங்களது நூலில் ஏழாவது பாகத்தில் 179வது பக்கத்தில் இதனைத் தெரிவித்திருக்கிறார்கள். கல்கத்தாவிலிருந்து 1942அம் ஆண்டு வெளிவந்த ('Muslim Patronage To Sanskritic Learning') என்ற நூலில்

முதல் பாகத்தில் டாக்டர் சதீந்திர பிமல் சௌத்ரி (Jatindra Bimal Chaudhuri) பக்கம் 89ல் தெரிவித்திருக்கும் ஆங்கில வாசகங்களைத்தான் மேலே தந்திருக்கிறேன்.

மோதிரத்தில் தேவநாகரிச் சொல்

சமஸ்கிருத்தில் தாராஷுக்கோவிற்கு இருந்த ஆர்வம் காரணமாகவும், இந்துக் கலாச்சாரத்தின் மீது அவருக்கு இருந்த மிகுந்த பற்றின் காரணமாகவும் தனது வைர மோதிரங்கள், மற்றும் விலையுயர்ந்த பொருட்கள் மீது 'பிரபு' என்ற சொல்லைப் பொறித்தவர் தாராஷுக்கோ.

இந்தி எழுத்துக்களில் (வேதநாகிரி) இந்துக் கடவுளைக் குறித்திடும் பிரபு என்ற சொல்லைத் தனது வைர மோதிரத்தில் பதித்து அணிந்து கொண்டவர் தாராஷுக்கோ.

ஓவியத் தொகுப்பில் இந்து மதக் கருத்துக்கள்

தாராஷுக்கோவின் ஓவியத் தொகுப்பில் இந்து மதக் கருத்துக்கள், இந்து மதத்துறவிகள் பற்றிய விவரங்கள் இடம் பெற்றிருந்தன. இதனை அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் சாம் பிரகாஷ் வர்மா (Som Praksh Varma) தான் எழுதிய 'முகலாயர் கால ஓவியர்களும் அவர்களது பணிகளும் என்ற நூலில் பக்கம் 6ல் தெரிவித்துள்ளார். இதோ அவர் சொல்லியிருக்கும் வாசகங்கள்:

'The Album of Shahjahan's eldest son, Dara Shukoh,has survived. The miniatures repersenting ascetics and saints, both Musilm and Hindu reflect his Catholic ideas.

தாராவின் செயல்கள் இந்துமதக் கருத்துக்களை ஆதரிப்பதோடு மட்டும் முடிந்துவிட்டதா? இல்லை! இஸ்லாமிய மார்க்கத்திற்கு மாறாகவும், எதிராகவும் அவரது நடவடிக்கைகளும் செயல்களும் இருந்தன.

சமயப் பொறையா? சமயத்திலிருந்து மாறுபடுதலா?

'சமயப் பொறை என்பது வேறு' சமயத்தையே துறந்து, புறக்காட்சிகளிலும் நம்பிக்கை இழந்து, தம் சமயத்தின் வேர்களையே வாள் கொண்டு வெட்டி ஒதுக்குவதும், ஒதுங்கி நிற்பதும் வேறு. தாராஷுக்கோவிற்கு தாம் பின்பற்றிய இஸ்லாம் மார்க்கத்தின் மீது நம்பிக்கை இருந்ததா? அவர் இஸ்லாமிய சமயத்திலிருந்து முற்றிலும் பிறழ்ந்து விட்டாரென்றுதான் அக்காலத்திய மூலக் குறிப்பாளர்கள் கூறுகிறார்கள்' என்ற தகவலை பேராசிரியர் ஹச்.அமீர் அலி தெரிவிக்கிறார்.

தொழுகையை நிறுத்திய தாரா

வேதியர்கள், அந்தணர்கள், இந்துத் துறவிகள் ஆகியோருடன் கொண்டிருந்த நட்புக் காரணமாகத் தொழுகை, நோன்பு ஆகியவற்றை தாராஷுக்கோ நிறுத்தி விட்டார் என்று கி.பி.1688ல் மிர்ஜாமுஹம்மத் காசிம் என்பவர் எழுதிய 'ஆலம்கீர் நாமா' நூல் நமக்கு அறிவிக்கிறது.

நிர்வணச் சாமியாரை குருவாக ஏற்ற தாரா

மியான்மீர் (Mianmir) என்பவரின் சீடராகக் கருதப்பட்ட 'ஷா முகம்மது பதக்ஷி' என்பவரையும், அவரது சீடரான முகம்மது சையது என்ற சர்மத் (Sarmad) என்ற நிர்வணப் பக்கிரியையும் தாராஷுக்கோ குருவாக ஏற்றுக் கொண்டார்.

இந்த நிர்வாணச் சாமியார்கள் பெயளரவில்தான் முஸ்லிமாக இருந்தார்களே தவிர, அவர்களது கோலமும், செயல்களும் இஸ்லாமிய சமயத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாகவே இருந்தது.

நாடெங்கும் அலைந்து திரிந்த 'சர்மத்' துறவிக்கு தாராஷுக்கோ தனது தந்தை ஷாஜகான் மூலம் பரிசுகள் வழங்கவும் ஏற்பாடுகளைச் செய்தார்.

உமராக்களும் உலாக்களும் தாராவிற்கு எதிராக வழங்கிய தீர்ப்பு

கி.பி.1659ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் உமரா (Omrah) என்னும் பிரபுக்களின் சபை தாராஷுக்கோ மீது குற்றஞ்சாட்டியது. காரசாரமான விவாதங்களுக்குப் பிறகு உமராக்கள் சபையும், உலமாக்களும் தாராஷுக்கோவைக் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளித்தனர். Danishmandkhan என்பவர் மட்டும் தாராவிற்கு ஆதரவாக இருந்தார். ஷெயிஸ்டகான் (Shaistakhan), முஹம்மது அமீன்கான் (Muhammad Aminkhan), பகதூர்கான் (Bahadurkhan), ஹக்கீம் தௌத் (Hakim Daud) ஆகிய நால்வரும், அவரது சகோதரி ரோஷினாரா பேகமும் (Raushanara Begam) தாராவிற்கு மரண தண்டனை அளித்தேயாக வேண்டுமென்று உறுதியாக நின்றார்கள். தான் சார்ந்துள்ள சமயத்திற்கு மாறாகக் கருத்துக்களை ஏற்றும், ஓழுகியும் பரப்பவும் முயன்ற தாராஷுக்கோவிற்கு எதிராக மார்க்க அறிஞர்கள் தீர்ப்பு அளித்ததில் ஆச்சரியம் ஏதும் இல்லை என்று ஜாதுநாத் சர்க்கார் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீநிவாச்சாரி

He was put to death on the ground of his apostasy from Islam.

இஸ்லாத்திற்கு விரோதமாக அவரது கொள்கைகள் இருந்ததால் தாராஷுக்கோ கொல்லப்பட்டார் என்று ‘A History of India’ நூலில் அண்ணாமலைப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறை பேராசிரியர் சி.எஸ்.ஸ்ரீநிவாச்சாரி பக்கம் 213ல் தெரிவித்திருக்கிறார். தாராஷுக்கோவின் முடிவு இவ்வாறு நிகழ்ந்தது.

நடுநிலையாளர்களின் நல்ல கவனத்திற்கு

ஔரங்கஜேப்பின் சகோதரரான முராத் பக்ஷ், வருவாய்த்துறை அமைச்சர் அலிநாகியைக் கொன்ற குற்றத்திற்காகக் குவாலியர் காஜிகளால் மரண தண்டனை பெற்று மறைந்தார்.

அரக்கான் காடுகளில் அடைக்கலம் தந்த அரசனுக்கெதிராகத் துரோகம் புரிய முயன்ற, ‘மெக்’ இனப் பழங்குடி மக்களால் படுகொலைக்குள்ளானவர் ஔரங்கஜேப்பின் இன்னொரு சகோதரர் ஷுஜா.

இஸ்லாமிய மார்க்க விரோதியென்று உமராக்கள், உலமாக்கள் சபையால் தண்டிக்கப்பட்டு மரணத்தைத் தழுவியவர் தாராஷுக்கோ.

இவ்வாறு தன் உடன்பிறந்த சகோதரர்கள் மறைந்ததற்கு ஔரங்கஜேப் எப்படி முழுப் பொறுப்பை ஏற்க முடியும்?

முகலாய மன்னர்களும் சகோதரர்களும்

ஔரங்கஜேப் அவர்களை விரும்புவோரும் நிறைய இருக்கிறார்கள்; அவர்களை வெறுப்போரும் உள்ளார்கள். அவரைக் குறைகூறுவோரின் கூக்குரல் அவரைப் புகழ்வோரின் புகழொலியை மறைத்து நிற்கின்றது.

இந்தியாவில் ஆட்சிசெய்த முகலாய மன்னர்களில் ஹுமாயூன், தனது சிம்மாசனத்திற்கு எதிரியாகலாமென்று அஞ்சித் தன் சகோதரர் காம்ரான் என்பவரைக் குருடாரக்கினார். காம்ரான் ஹஜ் யாத்திரைக்குச் சென்று அங்கு இறப்பைத் தழுவினார்.

அக்பர் தனது அரசுக்கு காம்ரானின் மகன் உரிமை கொண்டாடலாம் என்று அஞ்சி அவரைக் குவாலியரில் தூக்கிலிட்டார். ஷாஜகான் பட்டத்திற்கு வந்தபோது, தனது அரியாசனத்தைப் பிடுங்கிக் கொள்வார்கள் என்று அஞ்சி தர்வா பக்ஷ், ஷாஹரியார் என்ற தனது சகோதரர்களைக் கொன்றார். அத்துடன் விடவில்லை. தனது சகோதரரின் புதல்வர்களையும் கொன்றார் என்பது முகலாயர்களின் கடந்த கால சரித்திரம். ஆனால் ஔரங்கஜேப் காலத்தில் நடந்தது என்ன?

அரக்கானியர்களால் கொல்லப்பட்ட ஷுஜா, பல ஆண்டுகளுக்கு முன் நடந்த கொலைக்குத் தண்டனையாகக் கொலை செய்யப்பட்ட முராத் பக்ஷ், உமராக்கள் சபையால் தண்டிக்கப்பட்டு மரணித்த தாரா... இப்படி ஏற்பட்ட இந்த சாவுகளுக்கு ஔரங்கஜேப் எப்படி பொறுப்பேற்கமுடியும்?

இயற்கையின் நீதி

ஆற்றலும் திறமையும் இல்லாதவராக ஔரங்கஜேப் இருந்திருப்பாரானால் அவரும் மரணத்தைத்தான் அன்றைய சூழ்நிலையில் தழுவியிருப்பார் என்பதில் எவருக்கும் ஐயம் இருக்க முடியாது.

தாராஷுக்கோவின் திறமையின்மை; போர்க்களத்தில் ஆற்றல் இல்லாத நிலை - ஔரங்கஜேப்பின் அபாரத்திறமை; அற்புதமான போர்க்கள ஆற்றல் இந்த இரண்டிற்கும் இடையே நடைபெற்ற போரில் ஔரங்கஜேப் வெல்வது என்பது இயற்கையின் நீதியாயிற்று.

இவைகளை விடுத்துவிட்டு, ஔரங்கஜேப் பதவிக்காகத் தனது சகோதரர்களைக் கொன்றார் என்பது சரியா? அல்லது பழிபோடும் செயலா?

உலக சரித்திரத்தில் மகா அலெக்சாந்தர், மகா அசோகர் என்று போற்றப்பட்டு வரும் மன்னர்களது செயல்கள்தான் என்ன?

அலெக்சாந்தரும் - அசோகரும்

கீழை ஐரோப்பாக் கண்டத்தின் நாடுகளில் ஒன்றாகிய மாசிடோனியாவின் கி.மு.356ல் பிலிப் - ஒலிம்பியாஸ் - ராஜ தம்பதியரின் மகனாகப் பிறந்தவர் அலெக்சாந்தர். தந்தை பேரில் கொல்லப்பட்ட பிறகு கி.மு.336ல் பட்டத்திற்கு வந்தார்; உலகின் பல நாடுகளை வென்றார். இந்தியாவிலும் மாபெரும் வெற்றிகளைக் குவித்தார். மகா அலெக்சாந்தர் என்றும் அழைக்கப்படுகிறார். அவரின் முழு வரலாற்றையோ, போர்களக்காட்சிகளையோ விவரிக்க வேண்டிய அவசியம் இங்கு இல்லை. ஆனால் மகா அலெக்சாந்தர் என்று போற்றப்படும் அவரது குண நலன்கள் சிலவற்றை வரலாற்றின் நடுநிலையாளர்கள் முன் வைக்கிறோம்.

‘அலெக்சாந்தர் தன்னை எதிர்த்து நின்றவர்களுக்கு எந்தக் கொடிய தண்டனையும் கொடுத்து விடுவான். தீப்ஸ் நகரைப் பிடித்ததும் அதை சுட்டெரித்து விட்டான். பண்டைப் பெருநகரங்களான டைர், காஸா போன்றவைகளையும் நெருப்புக்கு இரையாக்கினான். கோடிக்கணக்கான பொருள்

மதிப்புள்ள பாரசீக மன்னரின் அரண்மனையும் எரிக்கப்பட்டது. அவன் வெஞ்சினம் கொண்டுவிட்டால் பிறகு அதை அடக்கிக் கொள்ளவே முடியாது. அவற்றுடன் அளவுக்கு அதிகமான குடிப்பழக்கமும் சேர்ந்து கொண்டது.*

(* ப. ராமசுவாமி அய்யர், அலெக்ஸாந்தரும் அசோகரும், பக். 32.)

நகரத்தை நாசமாக்கியவர்

“அலெக்சாந்தர் தம்மை எதிர்க்கிறவர் விஷயத்திலோ கொஞ்சங்கூட இரக்கமில்லாமலே இருந்திருக்கிறார். தீப்ஸ் (Thebes) என்னும் கிரேக்க நகரத்தைத் துவம்சம் பண்ணி நிலமட்டமாக்கி, ஸ்தீரிகளையும் குழந்தைகளையும் அடிமைகளாக விற்றார். அதுபோலவே பாரஸீகத்திற்குச் சார்பாக நின்று போராடிய பினீஷியன் (Phoenician) நகரங்களாகிய டயர் என்பதையும் காஸா என்பதையும் பாழாக்கினார். பாடிஸ் (Batis) என்னும் எத்தியோப்பிய தளகர்த்தனொருவன் பாரஸீகத்தார் கட்சியை ஆதரித்துக் கொண்டிருந்தான். அவனைப் பிடித்து பாதங்களைத் துளைத்து வெண்கல வளையங்களை மாட்டி அவன் உயிர் போகிறவரையில் தரையில் இழுத்துக் கொண்டு போகச் செய்தான். பெஸ்ஸாஸ் (Bessos) என்பவனைக் கசையாலடித்து இரண்டு மரங்களோடு கட்டி, பின் அவன் கிழிந்து போகும்படி மரங்களை அகற்றி விட்டான்.

படுகொலை புரிந்த பாதகர்

பாரஸீகத்துக்கு அரசனான ஜெர்ஜெக்ஸ் (Xerxes) என்பவன் ஏதென்சு நகரத்து அரங்கத்திற்குத் தீ வைத்தற்குப் பழி வாங்கும் பொருட்டுக் கோடிக்கணக்கான பணம் செலவிட்டுப் பர்ஸி பாலிஸில் கட்டப்பட்டிருந்த மிக்க அதிசயமான அரண்மனையை சுட்டுச் சாம்பலாக்கினான்.

இளம்பிராயத்தில் இவருக்கு விளையாட்டுத் தோழனாயிருந்த கிளீடாஸ் (Kleiots) என்பவன் துடுக்குத்தனமாக இவரை நிந்தித்த குற்றத்திற்காக அவனைக் கொன்றார். பார்மீனியோவையும், அவனுடைய மகன் பிலோடாஸ் (Philotas) என்பவனையும் ராஜ துரோகத்திற்காக சிரச்சேதம் செய்வித்தார். அலெக்சாந்தருக்கு அஷ்டாங்க நமஸ்காரம் செய்ய மறுத்த சரித்திரக்காரன் காலிஸ்தீனிஸ் (Kallisthenes) என்பவனை ஆபத்துக்கிடமான ராஜ துரோகியெனக் குற்றஞ்சாட்டி கடுஞ்சிறையில் அடைத்தார்”*

(* ஏ.எஸ். பஞ்சாப்கேச ஐயர் எம்.ஏ., ஐ.சி.எஸ்., தமிழாக்கம்,

தி.அ. சாமிநாத ஐயர், ‘முப்பெரு வீரர்’, சென்னை, 1940, பக். 27-28.)

சில சரித்திரக்காரர்களால் மகா அலெக்சாந்தர் என்று போற்றப்படும் அலெக்சாந்தரின் இத்தகைய குணநலன்களை மேலும் விவரிக்க நாம் விரும்பவில்லை.

99 பேரைக் கொன்று பட்டத்திற்கு வந்த அசோகர்

பதினாறு மனைவியரைக் பெற்றிருந்த மௌரியப் பேரரசர் பிந்துசாரருக்கு நூற்றியொரு குழந்தைகள்.

சம்பா நகர அந்தணர் ஒருவரின் மகளான சுபத்திராங்கிக்கும் பிந்துசாரருக்கும் பிறந்தவர் அசோகர் என்ற செய்தியை ‘திவ்வியாவதானம்’ என்ற நூலும், ‘அசோகாவதானம்’ நூலும் அறிவிக்கின்றன.

அசோகர் ஆட்சிப் பொறுப்பைப் பிடிக்கும் போது, தம் உடன் பிறந்தோரில் ஒருவனைத் தவிர எஞ்சிய தொண்ணூற்றொன்பது பேரையும் கொன்று விட்டார் என்று சிங்கள பௌத்த நூலான ‘வம்சத்தபகாசினி’ அறிவிக்கிறது. இதனை வரலாற்று ஆசிரியர் ரொமிலா தாப்பர் (Romila Thapar) தனது ‘அசோகர்’ என்ற நூலில் பக்கம் 26ல் தெரிவித்திருக்கிறார்.

‘பிந்துசாரனுக்கு நூற்றியொரு பெருமை மிக்க பிள்ளைகள் பல்வேறு தாய்மார்களுக்குப் பிறந்த தொண்ணூற்றி ஒன்பது சகோதரர்களையும் கொன்று விட்டபின் அசோகன் ஜம்புத்வீபம் முழுமைக்கும் பிரிவினையற்ற அரசுரிமையைப் பெற்று விட்டான். கி.பி.ஆறாம் நூற்றாண்டில் இலங்ககைத் தீவின் புராதன வரலாற்றைக் கூறும் நூலான மகாநாமன் எழுதிய மகாவம்சத்தில் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது.

நான்கு ஆண்டுகள் கழித்து நடைபெற்ற முடிசூட்டு விழா

‘அசோகன் மகத சிங்காதனத்தைக் கைப்பற்றிக் கொண்ட பின்னரும் போராட்டம் தொடர்ந்ததாக இலங்கை வரலாறுகள் தகவல் தருகின்றன. இதன் விளைவாக அசோகனது முடிசூட்டு விழா அவன் ஆட்சியைக் கைப்பற்றி நான்கு ஆண்டுகள் சென்றபிறகே நடந்தது.*

(* கோ. அ. அன்தோனவா, கி.ம. பெர்ன்காரத் - லேவின் பக். 94, இந்தியாவின் வரலாறு.)

இரத்தப் பாதையில் சிம்மாசனமேறிய அசோகர்

கல்லத்தகா (Khallataka) ராத குப்தா (Radhagupta) என்ற

அமைச்சர்களின் உதவியுடன் வாரிசுரிமைப்போரில் வென்றவர் அசோகர்.

சகோதரர்களைக் கொன்று இரத்தப் பாதையில் நடந்து சிம்மாசனம் ஏறினார் என்று வித்யாதர் மகஜன் (Vidyadhar Mahajan) 'இந்திய வரலாறு' நூலில் பக்கம் 170-ல் தெரிவிக்கிறார்.

அசோகர் தம்முடன் விளையாடும் சிறுவர்களை எப்பொழுதும் தொந்தரவு செய்துக் கொண்டிருப்பார். அவர்களை எந்த வகையிலேயும் துன்புறுத்துவார். அவர் எந்த வேளையில் என்ன செய்வாரோ என்று பயப்பட்டுக் கொண்டிருப்பார்கள். அவருக்கு 'சண்டன்' என்னும் வசைப்பெயரிட்டும் அழைப்பார்கள்.

பல லட்சம் பேரை பழிவாங்கிய கலிங்கப்போர்

அசோகர் நடத்திய கலிங்கப் போரில் 'ஒரு லட்சம்பேர் கொல்லப்பட்டனர்; ஒன்றரை லட்சம் பேர் சிறைபடுத்தப்பட்டனர்' (இந்தியர் வரலாறு முதற் பாகம் 1943. எஸ்.கே.கோவிந்தசாமி பிள்ளை பக்கம் 102)

இது மட்டுமா? அந்தப் போரில் 'லட்சக்கணக்கான கலிங்கமக்களும் உயிரிழந்தனர்', (அசோகரும் அவருடைய காலமும் என்ற நூலில் எம்.எஸ்.கோவிந்தசாமி. 1973, பக்கம் 24)

சித்ரவதைச் சிறைக்கூடம்

சிறுபிராயத்திலும் சரி, அரியணையேறிய வயதிலும் சரி; மிக மூர்க்கமாகத்தான் அசோகவர்த்தனர் காணப்பட்டார். கொடுமை வாய்ந்தவராகவும், கொடுங்கோலராகவும் அன்பற்ற அரக்கரைப் போன்ற வாழ்க்கையை மேற்கொண்டும் தானே அரசு புரியத் தலைப்பட்டார்? அதன் எதிரொலியாகத் தானே நரகலோகம் என்ற அந்த சித்ரவரைச் சிறைக்கூடத்தைக் கட்டினார் என்ற கருத்தையும் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

ஆர்.சி.மஜும்தார்

பழங்கால இந்தியா (Ancient India) என்ற நூலில் பக்கம் 109 இல் வரலாற்றாசிரியர் ஆர்.சி.மஜும்தார் (R.C.Majumdar) அசோகர் தனது 99 சகோதரர்களைக் கொன்று குவித்தச் செய்தியைச் சொல்லுகிறார்.

'2500 Years of Buddhism' என்ற நூலில் (1956) P.V.Bapat என்பவர் எழுதிய கட்டுரையில் பக்கம் 56இல் உடன் பிறந்த சகோதரர்களைக் கொன்று குவித்து அசோகர் பட்டத்திற்கு வந்ததைத் தெரிவிக்கிறார்.

தேவானாம்பிரியம் - மூர்க்கன்

அசோகனுக்கு தேவானாம்பிரியன் என்ற பட்டம் உண்டு. ஸ்ரீமத் சங்கராச்சாரியார் பிரஹ்மஸுத்திர பாஷ்யத்தில் இந்த வார்த்தைக்குத் தரும் பொருள் அசடு, மூடன்; பாணினீயத்தில் 'தேவானாம்பிரிய என்பதற்கு 'மூர்க்கன்' என்றும் எழுதப்பட்டிருக்கிறது என்பதனையும் கவனத்தில் கொள்ள வேண்டுகிறேன்.

"அரண்மனையின் ஒருவேளை விருந்திற்காக வேண்டி ஆயிரக்கணக்காக உயிர்களைக் கொன்று குவித்தவர் அசோகர்"

இந்த வரிகளையும் கவனத்தில் கொள்ள வேண்டுகிறேன்.

இரத்த வெறியன் அசோகன்

"இரத்த வெறியன் அசோகன் கொல்லைப்புறமாக ஆட்சிக்கு வந்து எல்லையில்லா கொலைகளைச் செய்த இவனது வரலாறே ஒரு வேதனைக் களஞ்சியம்".

"சீறினான் அசோகன்! உருவினான் தன் உடை வாளை! வெட்டினான்... வெட்டினான்... வெட்டினான். அத்தனை பேரையும் தன் கரத்தாலேயே வெட்டி வீழ்த்தினான். அப்போதும் அசோகனின் இரத்தவெறித் தணியவில்லை. தன் கையாலேயே*, ஐந்நூறு பேரைக் கொலை செய்யும் கொடும்பாவியை... இந்த வரியையும் கவனத்தில் கொள்ள வேண்டுகிறேன்.

(* ப.உ. சண்முகம், இரத்த வெறியன் அசோகன், திருண்ணாமலை, 1953, பக். 27-28.)

சரித்திர பேதமும் சான்றும்

சில சரித்திர ஆசிரியர்கள் அசோகர் 99 சகோதரர்களைக் கொன்றிருப்பார் என்பதை மறுக்கிறார்கள். அசோகனின் தந்தையார் பிந்துசாரனுக்கு இவ்வளவு குழந்தைகள் இருப்பதற்கு சாத்தியமில்லை என்கிறார்கள்.

கி.பி.18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்திருந்த பர்மா நாட்டு மன்னன் தனது 75வது வயதில் 122 மக்களையும் 208 பெயரன்மார்களையும் விட்டுப்பிரிந்தார் என்பது வரலாற்றுச் செய்தி. எனவே பிந்துசாரனுக்கு 99 பிள்ளைகள் பிறந்திருக்குமா என்ற ஐயமும் அற்றுப் போகிறது.

உறவினர்களையும் கொன்ற சகோதரர்

அசோகர் பட்டத்திற்கு வருவதற்காக தனது சகோதரர்களை

மட்டுமின்றி, தனது உறவினர்களையும் கொன்று குவித்தார் என்று வரலாற்றாசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

கொடுங்கோலர் அசோகர்

சகோதரர்களைக் கொன்றும், பயங்கரமானதும் கொடுங்கோன்மையுமான ஆட்சியை முதல் எட்டு ஆண்டுகள் நடத்தியவர் அசோகர். சிறைக்கைதிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டு அவை நரகம் போல காட்சியளித்தது என்று வரலாற்று அறிஞர் கோஸாம்பி தெரிவித்து இருக்கிறார்.

அரசுரிமைப் போரினால் முடிசூட்ட தாமதம்

அசோகர் குடி, களியாட்டம் முதலிய செயல்களில் ஈடுபட்டிருந்தாரென்றும் கூறப்படுகிறது. சுமார் கி.மு.273இல் பிந்துசாரன் இறந்தவுடன் அரசுரிமைப் போராட்டம் ஏற்பட்டு முடிவில் அசோகன் வெற்றியடைந்தான். இதனால் சுமார் கி.மு.269இல் தான் அசோகன் முடி சூட்டிக் கொள்ள இயன்றதாக அறியப்படுகிறது.

அசோகரின் தந்தை இறந்த நான்கு வருஷங்களுக்குப் பிறகே அசோகர் முடிசூட்டிக் கொண்டதால், சகோதரர்களிடமும், உறவினர்களிடமும் வாரிசுப்போரில் அசோகர் ஈடுபட்டிருந்தார் என்பதனை மறுத்திட இயலாது.

எனவே அசோகரைப் பற்றிய செய்திகள் ‘முற்றிலும் தள்ளத்தக்கவையுமல்ல’ என்பது பலரது ஆய்ந்த முடிவுமாகும்.

சகோதரச் சண்டை

பழங்கால இந்தியாவில் மதுராவின் கம்சனும், மகதத்தின் ஜராசந்தனும், ஹஸ்தினாபுரத்தின் கௌவரர்களும் பெரிய சாம்ராஜ்யங்களை அமைக்க விரும்பி, அக்கம்பக்கத்துக் குலங்களுடன், மூர்க்கத்தகத்துடன் சண்டை போட்டும் தனக்கு போட்டியாக வரும் சொந்த இரத்தக் கலப்பு உறவினர்களை எதிர்த்தும், சகோதரச் சண்டை நடத்தியுமே காரியங்களைச் செய்தனர்.*

(* ‘பண்டைக்கால இந்தியா’, பக். 249, எஸ்.ஏ. டாங்கே, தமிழாக்கம் எஸ். ராமகிருஷ்ணன்)

இது கடந்த கால சரித்திரம் இதனையும் நாம் மறந்து விடலாகாது.

ஐரோப்பிய வரலாற்றில் பிரெஞ்சு, ஸ்பானிய, ஆஸ்திரிய, போலந்து நாடுகளில் வாரிசுரிமைப் போர்கள் இயல்பாகவே

நிகழ்ந்துள்ளதை உலக வரலாற்றில் காண முடிகிறது.

எட்வர்டு கொலை செய்யப்படுதல்

வரலாற்றில் 'அமைதிகாத்தவர்' என்று புகழ்பெற்ற இங்கிலாந்தின் (கி.பி. 959-965) எட்கருக்கு (Edgar) இரு மனைவிகள்; அவர்களுக்கு எட்வர்டு தியாகி (Edward the Martyr), எதல்ரெடு அன்ரெடி (Ethelred the unready) என்று ஆளுக்கொரு பிள்ளைகள்.

எட்கரின் மறைவிற்குப் பின் ஆர்ச்பிஷப்பால் முறைப்படி எட்வர்டு தியாகி கி.பி.975இல் முடிசூட்டப்பட்டார். முடிசூட்டி மன்னராக எட்வர்டு பதவிக்கு வந்த பிறகும் அவரது சிற்றன்னை எல்ப்பீடா உள்ளூரக் குமுறிக் கொண்டிருந்தார். கி.பி.978 மார்ச் மாதத்தில் ஒரு நாள் எட்வர்டு (தியாகி) மன்னர் வேட்டையாடி விட்டுத் திரும்பும் வழியில் தம் சிற்றன்னைக்கு சொந்தமான கார்பி (Corfe) கோட்டைக்குச் சென்று, தாகசாந்தி செய்துக் கொள்ள குடிப்பதற்குப் பானம் கேட்டார். சிற்றன்னையால் கொண்டு வந்து கொடுக்கப்பட்ட மதுரசத்தை (Wine) எட்வர்டு பருகிக் கொண்டிருந்த போது, சிற்றன்னையால் ஏவப்பட்ட வேலையாள் ஒருவன் முன்னேற்பாட்டின் படி அரசரை முதுகுப்புறமாகத் தாக்கி கொன்றான்; அதன்பின் கொலைகாரியின் மகன் எத்தல்ரெடு அன்ரெடி கி.பி.978-1016 ஆட்சிக்கு வந்தான். ஆங்கிலேயே வரலாற்றிலேயே படுமோசமான செயல் இது என வரலாற்றாசிரியர்கள் இது குறித்து எழுதி வைத்துள்ளனர்.

ரோஜப்பூ போர்கள்

லங்காஸ்டர் குடும்பத்தின் பிரதிநிதியான ஆறாவது ஹென்றிக்கும், யார்க் வம்சத்தினரின் பிரதிநிதியான ரிசார்டுக்கும் கி.பி.1455 இல் செயிண்ட் ஆல் பன்ஸில் நிகழ்ந்த சண்டை ரோஜாச் சின்னப் போர். மன்னர் குடும்பத்தைச் சேர்ந்த இரு கிளையினரான லங்காஸ்டியர்களும், யாக்கியர்களும் கலந்து கொண்டு ஆட்சிக்குப் போட்டியிட்டனர். முப்பதாண்டுகள் நடைபெற்ற இந்த போர் கி.பி.1485இல் பாஸ்வர்த்தில் முடிவடைந்தது. இந்த வாரிசுரிமைப் போரில், தேம்ஸ்படகோட்டிகள் எலிகளை வேட்டையாடுவது போன்று கொல்லப்பட்ட அரசியல் தலைவர்கள், வெள்ளமெனப் பெருக்கெடுத்தோடிய இரத்த ஆறுகள் குறித்து விரிவாக எழுதிடப் போவதில்லை.

ஐந்தாம் எட்வர்டு கொலை செய்யப்படுதல்

இங்கிலாந்தின் ஐந்தாம் எட்வர்டையும் (கி.பி.1483 ஏப்ரல் முதல் ஜூன்) அவரது தம்பி யார்க்ட்யூக் ரிச்சர்டையும், நான்காம் எட்வர்டின் தம்பி க்ளஸடர்-ட்யூக் ரிச்சர்ட் லண்டன் கோபுரத்தில் அடைத்து வைத்தான். அவர்கள் அநேகமாயக் கொலையுண்ட இறந்திருக்க வேண்டும்.

மூன்றாம் ரிச்சர்டு (கி.பி.1438-1485) என்று அரசுக்கட்டிலில் அமர்ந்த ட்யூக் ரிச்சர்ட் இரண்டு இளவரசர்களையும் கொலை செய்த செய்தியினை ஆர்தர் ஹசல் உறுதிப்படுத்தி எழுதியிருக்கிறார்.

வரலாற்றில் இப்படி அடுக்கடுக்காக வாரிசுரிமைப் போரில் நடைபெற்ற கொலைகளைச் சொல்லிக் கொண்டே செல்ல முடியும்.

தந்தையைக் கொன்று போடாத தனயன்

தமக்கு எதிரிகளாக வரக்கூடுமென்று, தான் நினைத்த எல்லோரையும் அழித்தவர் ஷாஜகான். ஆனால் பல்வேறு கொடுமைகளுக்கும், இன்னல்களுக்கும், போர்களுக்கும் தன்னை ஆளாக்கிய தந்தை ஷாஜகானை கொல்லாமல் விட்டவர் ஔரங்கஜேப்.

... atleast he was not a Parricide, of which we find numerous instances in the history of India and of other countries.

இந்திய வரலாற்றிலும், பிற நாடுகளின் வரலாற்றிலும் பல எடுத்துக்காட்டுகள் காணப்படுவதைப்போல் ஔரங்கஜேப் தமது தந்தையைக் கொல்லாமல் விட்டிருந்தது குறிப்பிடத்தக்கது என்று வரலாற்று ஆசிரியர்கள் ஆர்.ஜி.மஜும்தார். எச்.சி.ராய்சதுரி, கே.தத்தா கருதுகின்றனர்.

திருமண உறவுகள்

தன்னுடைய குடும்பத்திற்கும், தன்னுடன் சரியான உறவு இல்லாத சகோதரர்களின் குடும்பத்திற்குமிடையே பல திருமண உறவுகளை ஏற்படுத்தியவர் ஔரங்கஜேப் . தனது மூத்த மகன் முகமது சுல்தானுக்கு, தனது சகோதரன் ஷுஜாவின் மகள் குல்ரூக்பானுவை (Gulrukh Banu) கி.பி.1659இல் திருமணம் முடித்து வைத்தார். தனது இன்னொரு சகோதரரான முராத்பக்ஷின் மகளான தோஸ்தர் பானுவையும் (Dostdar Banu) கி.பி.1672இல் தனது மூத்த மகனுக்குத் திருமணம் முடித்து வைத்தவர் ஔரங்கஜேப் .

தாராவின் மகளை மருமகளாக்குதல்

தனது சகோதரரான தாராஷுக்கோவின் மகளான ஜகனப்பானுவை (Jahanzeb Banu) கி.பி.1669இல் தனது இளையமகன் முகமது ஆஜத்திற்கு (Muhammad Azam) திருமணம் செய்து வைத்தவர் ஔரங்கஜேப் .

தாராவின் பேத்தியும், சுலைமான் ஷுக்கோவின் மகளுமான சலீமாபானுவை (Salima Banu) கி.பி.1672இல் தனது இன்னொரு மகன் முகமது அக்பருக்கு (Muhammad Akbar) திருமணம் நடத்தி வைத்தவர் ஔரங்கஜேப் .

தனது பிள்ளைகளை மணமுடித்துக் கொடுத்தல்

ஔரங்கஜேப்பின் மூன்றாவது மகளான மெஹர்னிஷாவை (Mihr un-nissa) தமது சகோதரர் மூரத்பக்ஷின் மகன் ஈஸாத் பக்ஷிற்கு (Izad Bakhsh) கி.பி.1672இல் திருமணம் செய்து வைத்தவர் ஔரங்கஜேப். தமது சகோதரரான தாராவின் மகன் ஷிபீர்ஷுக்கோவிற்கு (Sipihrshukob) தனது ஐந்தாவது மகளான ஜீபுதத்துன்னிஷாவை (Zubat-un-nissa) கி.பி.1673இல் திருமணம் செய்து வைத்தவர் ஔரங்கஜேப்.

பேத்திகள் திருமணத்தை நடத்திய பேரரசர்

தனக்கு எதிராகப் பெருங்கலகம் செய்து ஓடிப்போன தமது மைந்தன் முகமது அக்பரின் இரண்டு பெண்பிள்ளைகளையும் தமது இன்னொரு மகனான ஷா ஆலமின் பிள்ளைகளுக்கு கி.பி.1695இல் திருமணம் செய்து வைத்தவர் ஔரங்கஜேப். இவ்வாறு தனது சகோதரர்களின் இரத்தக் கலப்பினால் மூன்றாவது தலைமுறையை உருவாக்கியவர் ஔரங்கஜேப்.

சகோதர வாரிசுகளை வாழவிட்டவர்

ஔரங்கஜேப் தமக்குச் சிம்மாசனம் நிலைத்து விட்டதென உறுதி கொண்டபிறகு அவசியமில்லாமலும் பாகுபாடின்றியும் இரத்தம் சிந்துவதில் அவருக்கு விருப்பம் இல்லை என்றே தோன்றுகிறது. ஏனெனில் தமது சகோதரர்களின் மகன்களிடமிருந்து இனி ஓராபத்தும் ஏற்படாது என்று தோன்றியதும் அந்த இளைஞர்களுக்கு ஒரு கெடுதியும் செய்யாமல் அவர்களை உயிருடன் வாழ்ந்து வருமாறு விட்டு வைத்தார் என்று சரித்திர ஆசிரியர்கள் காரெட்டும், சீதாராம் கோலியும் தெரிவித்திருக்கிற செய்தியையும் எண்ணிப் பார்க்க கடமைப்பட்டிருக்கிறோம். அதற்கும் மேலாக தனது மகன்களுக்கும், மகள்களுக்கும் தனது சகோதரர்களின் புதல்வர்களையும், புதல்விகளையும் திருமணம் செய்து வைத்தவர் ஔரங்கஜேப் .

வாரிசுரிமைப் போரில் எந்தவிதத்திலும் தனது சகோதரர்களின் சாவிற்கு நேரடியாகச் சம்பந்தப்படாதவர் ஔரங்கஜேப் . இவைகளை நடுநிலையாளர்களின் சிந்தனைக்கு வைக்கிறேன். ஔரங்கஜேப் குறித்து நீங்களே உங்களின் இதயத் தராசில் மதிப்பீடு செய்து கொள்ளுங்கள்.

4

ஜிசியா வரியால் இந்துக்களைத் துன்புறுத்தியவரா?

‘இது ஒருவருடைய சொல்லினாலேயே உறுதிப்படக் கூடியதல்ல; மேதாவிகளாயிருக்கும் ஆசிரியர்கள் இவ்விஷயங்களில் கவனம் செலுத்தி, இவற்றின் உண்மையைக்கண்டு விஷயத்தை நிலைநாட்ட வேண்டும். அப்போதே இதற்கு உறுதிப்பாடுண்டாகும் எனவே, நாம் நமக்கு மேற்பட்ட கல்வியறிவாளர்களுடைய பரிசீலனைக்கு இதை சமர்ப்பிக்கிறோம்’ என்று ஒரு சந்தர்ப்பத்தில் வடுவூர்.கே.துரைஸாமி ஐயங்கார் கூறிய வார்த்தைகளை இங்கே குறிப்பிட்டு விட்டு விஷயத்திற்கு வருவோம்.

வழங்கிய வரிச்சலுகைகள்

வட இந்தியா முழுவதும் ஆட்சித்துறையை குழப்பத்தில் ஆழ்த்திய வாரிசுரிமைப் போரினால் ஏற்பட்ட நிலைமைகளைச் சீர்திருத்தி, மறுமலர்ச்சிக்கான நடவடிக்கைகளை ஔரங்கஜேப் மேற்கொண்டார்.

கவர்னர்களையும், முக்கிய அராசங்க அதிகாரிகளையும் முறையான கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவந்து ஒழுங்கையும் அமைதியையும் ஔரங்கஜேப் நிலைநாட்டினார்.

அதனைத் தொடர்ந்து சட்ட விரோதமான வரிகள் பலவற்றை நீக்கினார்; மக்களின் வாழ்க்கையை இன்னல் நிறைந்ததாகச் செய்திருந்த பலவிதமான வரிகளையும் தீர்வைகளையும்

ரத்துசெய்தார்.

இந்துக்கள் மீது விதிக்கப்பட்டிருந்த பலவரிகளை நீக்கியவர் ஔரங்கஜேப். அறிகிறபோது ஆச்சரியப்படுகிறீர்களா? ஔரங்கஜேப் நீக்கிய வரிகளின் பட்டியல் இதோ:

கங்கையில் குளிப்பவர் செலுத்திய வரி ரத்து

கங்கை நதி தீரத்தில் நீராடுகையில் ஔரங்கஜேப் ஆட்சிக்கு முன் ஒவ்வொரு யாத்திரிகளிடமும் ஆறேகால் ரூபாய் வரி வசூலிக்கப்பட்டு வந்தது. கங்கை நதியில் குளிப்பவர்கள் செலுத்தி வந்த வரியை ஔரங்கஜேப் நீக்கியதை வரலாற்றாசிரியர் மனுச்சி தெரிவித்திருக்கிறார்.*

(* Manuoci, Storia do Mogor, 1653_1708, Vol. I II, Constrable and Smith edn. 1908)

கங்கையில் கரைத்திடும் அஸ்திக்கு செலுத்திய வரி ரத்து

எரிக்கப்பட்ட சடலங்கள் எலும்புகளையோ அல்லது அஸ்தியையோ இந்துக்கள் கங்கையில் கரைத்திடும் போது செலுத்தி வந்த வரியையும் நீக்கியவர் ஔரங்கஜேப்.

வறட்டி வரி ரத்து

பெரும்பாலான மக்கள் உபயோகித்து வந்ததும், இறந்தவர்களை எரிப்பதற்கு பயன்படுத்தியதுமான எரு வறட்டி மீதான வரியை நீக்கியவர் ஔரங்கஜேப் .

தீப அலங்கார வரி ரத்து

தீபாவளியின் போதும், முஸ்லிம் பண்டிகைகளான ஆஷுரா (முஹர்ரம்) பராஅத் இரவுகளின் போதும் ஏற்றப்பட்ட தீப அலங்காரங்களுக்காக விதிக்கப்பட்ட வரியையும் ரத்து செய்தவர் ஔரங்கஜேப்.

விழாக்கால வரி ரத்து

இந்துஸ்தானத்தில் பெரு வாரியான மக்கள் கூடுகின்ற திருவிழாக்களில் போது இந்து ஆலங்களின் அருகில் கூடும் பண்டிகைச் சந்தைகளின் ஜாத்ராவின் (Jatras) போதும் மக்கள் பொருட்களை வாங்குகிறபோதும், விற்கிறபோதும் வசூலிக்கப்பட்ட துவான்னா (Tuwanna) என்ற வரியை ரத்துச் செய்தவர் ஔரங்கஜேப்.

இந்து விதவையை மணப்பவர் செலுத்திய வரியும் ரத்து

ஒடுக்கப்பட்ட (கீழ் ஜாதியென்று கருதப்பட்ட) இந்து

விதவையைத் திருமணம் செய்து கொண்டவர் செலுத்தி வந்த வரியை நீக்கியவர் ஔரங்கஜேப்.

நீக்கப்பட்ட மற்ற வரிகள்

விற்பனை வரி, மீன்கள் பிடிப்பதற்கு விதிக்கப்பட்ட வரி, காய்கறிகள் மீதான வரி, எரி பொருட்கள் - விறகு முதலியவற்றின் மீதான வரி, பால் மீதான வரி, பாண்டங்கள் மீதான வரி, அடகு வைக்கப்பட்ட நிலங்கள் மீதான வரி, விற்கப்பட்ட நிலங்கள் மீதுள்ள வரி, கொத்தவாலுக்குரிய கமிஷன், வீடு விற்பனைகளின் போது அரசாங்க மதிப்பீட்டிற்கென்று செலுத்தப்பட்ட வரி, அடிமைகளின் விற்பனை வரி, சில்லறை வியாபார வரி, சாலை வரி, (ராஹ்தாரி Road Tax) அங்காடிகள் வரி, எண்ணெய் வரி ஆகியவற்றையும் நீக்கினார்.

மக்களை அவர்களின் பைகளையோ, பல்லக்குகளையோ சோதனைக்குட்படுத்தாதீர்கள் என்ற ஔரங்கஜேப்பின் ஆணையுடன் (“Mirat-I. Alam”, 287. Quoted by Sarkar in Mughal Administration) புகையிலை வரி ரத்து செய்யப்பட்டது.

ஏழை விவசாயிகளுக்கு தக்காவிக் கடன் வழங்கி, கடன்களுக்கு வட்டி எதுவும் கிடையாது என்று அறிவித்த ஔரங்கஜேப் அந்தக் கடன்கள் மீது விதிக்கப்பட்ட வரிகளையும் ரத்து செய்தார்.

காணிக்கைகள் ரத்து

சர்க்கரை தயாரிப்பதற்கு விதிக்கப்பட்ட வரி, வாய்க்கால் வறண்டு விடுமேயானால் அதற்குரிய மராமத்து வரி, ஓடக்காரர்கள் வரி, அரசாங்கத்தின் முத்திரைகள், நிறைகள் நிர்ணயிக்கப்படும் போது வசூலிக்கப்பட்டிருந்த வரி, நில உரிமை உறுதிப்பட விதிக்கப்படும் நிலவரி, பாகப் பிரிவினையின் போது நிலங்களை அளந்து கொடுப்பதற்கு விதிக்கப்பட்ட வரி, மேய்ச்சல் வரி, அரசாங்கத்திலிருந்து ஓட்டகங்கள், வாகனங்கள் பணியாளர்கள் வாடகைகள் அமர்த்தப்படும் போது விதிக்கப்பட்ட வரி, சுங்க வரி, காகித வரி, பேரரசருக்கு செலுத்தப்படும் வரி போன்ற காணிக்கைகள், அலுவலர் உயர் பதவிக்கு நியமிக்கப்படும் போது உயர் அதிகாரிகளுக்கும் பேரரசருக்கும் தரவேண்டிய காணிக்கைகள், கோட்டைக்குள் பொருள் நுழையும்போது அவற்றுக்கான வரி, தானியங்கள், கரும்பு, பழங்கள், பட்டுதுணி, ஆட்டிறைச்சி முதலியவற்றின் மீது விதிக்கப்பட்டிருந்த வரிகள் ஆகியவற்றையும் நீக்கினார்.

அரசாங்கம் ஏகபோக உரிமை கொண்டாடிய பொருள்கள், பன்னீர், வாசனைத் திரவியங்கள் முதலியவற்றின் மீதான வரியையும் நீக்கினார்.

கைத்தறித் துணிகளுக்கு வரி ரத்து

தொழில் வரி, கைத்தொழில் வரி, கூரைகளுக்கு வேயப்படும் ஓடுகள், தட்டிகள் மீதான வரி, கைத்தறித்துணிகள் மீதான வரி, தரகர்கள், கொல்லர்கள், தச்சர்கள் மீதான வரிகள், மல்பா, பேட், பாலாதஸ்தி ஆகிய வரிகளையும் நீக்கினார்.

ஆளுநர்களுக்கு அளிக்கப்படும் காணிக்கைகள் மீதான வரியை ரத்துச் செய்தார். முஹ்தர்ஃபா (Muhtarfa) என்னும் தலைவரியை ஔரங்கஜேப் கண்டித்து ஒழித்தார்.

மாகாணங்களை விட்டு வேறு மாகாணங்களில் பழங்கள் விற்பதற்கான விற்பனை வரியையும் (Inter-state Tax on fruits and Commodities) நீக்கினார்.

மாவட்ட ரெவின்யூ அதிகாரிக்கு அளிக்க வேண்டிய படித்தொகையை ஈடு கட்டுவதற்காகத் தாசில்தார் வரி (Tahsildar Tax) என்றொரு வரி வசூலிக்கப்பட்டு வந்தது. இது அப்வாப் வகையைச் சேர்ந்தது. இதனையும் ஔரங்கஜேப் நீக்கினார்.

ஔரங்கஜேப் ஆட்சிக்கு வந்ததும் தம் முன்னோர்களால் விதிக்கப்பட்டிருந்த 80 வரிகளுக்கு மேலாக நீக்கியதாக காஃபீகான் குறிப்பிடுகிறார். அறிஞர் மூர்லாந்து 60 வரிகளை நீக்கியதாகக் கருதுகிறார். நீக்கப்பட்ட பல வரிகள் ஔரங்கஜேப்பின் அதிகாரிகளால் வசூலிக்கப்பட்டும் வந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது. எப்படியாயினும் ஔரங்கஜேப் தான் ஆட்சிக்கு வந்ததும் பலவிதமான வரிகளை ரத்து செய்ததை எந்த வரலாற்றாசிரியரும் மறுக்கவே மறைக்கவோ முடியாது.

தண்டிக்கப்பட்ட அதிகாரிகள்

அராங்க ஆணைப்படி நீக்கிய வரிகளை எவரேனும், எங்கேனும் வசூலித்தால், அப்படி வசூலிப்பதை அறிந்த மாத்திரத்தில் அந்த அதிகாரிகளை கடுமையாகத் தண்டிப்பதிலும் ஔரங்கஜேப் பின்வாங்கியதில்லை என்பதற்கு எண்ணற்ற அவரது ஆணைகளை இன்றும் இந்தியா ஆபீஸ் நூலகத்தில் காணலாம்.

சான்றுகள் ஒன்று இதோ: 1662ம் ஆண்டில் ஒரிஸ்ஸாவின் சுபேதார் பேரரசர் ஔரங்கஜேப்பிடம் முறையிட்டார்.

ஓரிஸ்ஸாவின் திவான் முகம்மது ஹாஷக் கான் என்பவரது அசட்டையினாலும் சோம்பலனினாலும் அரசாங்க நிலங்கள் சீரழிந்து வருவதை கவனத்திற்கு கொண்டு வந்தார்.

“எப்போதாவது ஒரு கரோரியை (கணக்கர்) வேலைக்கு நியமித்தால், நிலங்களுக்குத் தீர்வை விதிக்கப்படுவதற்கு முன்பே அவரை வேலையில் அமர்த்துகிறார். பிறகு மற்றொருவரிடமிருந்து ஹாஷம்கான் லஞ்சம் பெற்றுக் கொண்டு, முதல் நபரை வேலையிலிருந்து நீக்கிவிடுகிறார். இவர் மூன்றாவது நபரிடமிருந்து மீண்டும் இலஞ்சம் பெறும்போது மூன்றாவது நபர் அதிகவரி வசூலித்துக் தருவதாக வாக்களிக்கிறார். இவ்வாறாக ஹாஷிம்கான் வெறும் ஏட்டளவில் அராசங்கத்திற்குரிய வரிகளையும் வருமானங்களை அதிகரித்துக் கொண்டே செல்கிறார். இதனால் குடியானவர்கள் தங்கள் கிராமங்களை விட்டே ஓடிவிடுகிறார்கள். இவ்விடங்களெல்லாம் காடாக மாறிவருகின்றன” என்று முறையிட்டதை அறிந்த மாத்திரத்தில் திவான் முகம்மது ஹாஷிமை வேலையிலிருந்து விலக்கினார் ஔரங்கஜேப் .

“ஜிசியா வரியால் கலகங்களா?”

வாஞ்சையோடு வாழ்ந்து வரும் இந்து - முஸ்லீம் மக்களிடையே வஞ்சகமாகப்பேசி, பிளவுகளை ஏற்படுத்திய வெள்ளை ஏகாதிபத்தியத்தின் வல்லமை, வளமார்ந்த நாட்டை வளைத்துக் கொண்டதோடு நில்லாமல், வரலாற்றில் முஸ்லீம் மன்னர்கள் மீது வீண்பழிகளையும் சுமத்திக் களங்கப்படுத்தினர்.

‘இந்துக்களையும் பிற மதத்தினரையும் துன்புறுத்தவும் அவர்கள் தங்கள் மதங்களைத் துறந்து இஸ்லாத்தைத் தழுகிக் கொள்வதற்கான மறைமுகமான கட்டாயத்தை வற்புறுத்துவதற்காகவும் இந்துக்களை இரண்டாந்தரப் பிரஜைகள் என்ற அளவிற்குத் தாழ்த்தி அவர்கள் மீது ஜிசியா தலைவரியை முகலாயப் பேரரசர் ஔரங்கஜேப் விதித்து துன்பங்களுக்குள்ளாக்கினார்’ இது மாமன்னர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு. இதில் உண்மை உண்டா?

அபாண்ட பழிசுமத்திய அந்த வரலாற்று ஆசிரியர்கள் அதனால்தான் ஜாத்துக்களும், சத்னாமியார்களும், சீக்கியர் கலகங்களும், மீவார்ப்போரும், சிவாஜியின் எழுச்சியும் நிகழ்ந்தது என்றும் எழுதி வைத்துக் சென்றுள்ளர்கள். இதில் உண்மை என்ன?

ஔரங்கஜேப்பின் 22வது ஆட்சியாண்டில் ஜிசியா வரி

விதிக்கப்பட்டதாக காஃபீகான் கூறுகிறார். ‘மஆஸிரே ஆலம்கீரி’யில் முஸ்தாயித்கான் ஹிஜ்ரி 1080 சஃபர் மாதத்தில் கி.பி.1679ல் அதாவது அவரது 22வது ஆட்சியாண்டில் ஜிசியா வரி விதிக்கப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்.

ஜிசியா வரி விதித்தது 2.4.1679ல்; ஜாத்துக்கள் ஔரங்கஜேப்பிற்கு எதிராக கலகம் புரிந்து 1669ல்.

சத்னாமியர்களின் கலகம் 1672 மே மாதத்தில் அதாவது அவரது ஜிசியா வரிவிதிப்பதற்கு 7 ஆண்டுகளுக்கு முன்; சீக்கியத்தலைவர் தேஜ்பஹதூருக்கு மரணதண்டனை 1675ல் அதாவது ஜிசியா வரி விதிப்பிற்கு 4 ஆண்டுகளுக்கு முன்;

ஔரங்கஜேப் மீவார்மீது போர்த்தொடுத்தது 1678ல். அதாவது ஜிசியா வரி விதிப்பிற்கு ஓராண்டுக்கு முன், வீர சிவாஜியின் எழுச்சி ஜிசியாவிற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே நிகழ்ந்தது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

ஔரங்கஜேப்பை குற்றவாளியாக்கியே தீரவேண்டுமென்னும் ஒரே குறிக்கோளுடன் அனேக வரலாற்று ஆசிரியர்கள் வரலாற்று உண்மைகளைத் திரித்தும், மெருகு பூசியும், தங்கள் இஷ்டத்திற்கு அதனை வளைத்தும், உண்மை நிலையை தலைகீழாக மாற்றிக் காட்டியும் விடுகிறார்கள்.

அதானல் ஜிசியா வரியால் எழுந்த கலகங்கள் என்று கால வேறுபாட்டைக் கூட கவனியாமல், உள்ளத்துக் கசப்பால், உள்ளதை மறைந்து எழுதி விடுகிறார்கள்; எழுதியும் வைத்துள்ளார்கள்.

இதோ வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப் ...

‘ஜிசியா’ என்றால் என்ன?

ஜஸா (Jaza) என்னும் மூலச் சொல்லில் இருந்து பிறந்த சொல்லே ஜிஸ்யா; ‘அவன் திருப்தியளித்தான்’ என்பதே அதன் பொருள்.

“முஸ்லிம் அரசிலுள்ள சுதந்திரமுள்ள குடிமக்களாக வாழும் முஸ்லிமல்லாத பிரஜைகளிடத்திலிருந்து வசூலிக்கப்படும் வரி இது; இவ்வரியைக் கொடுப்பதன் மூலம் இவர்கள் தங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் ஒப்பந்தத்தை வலுப்பெற செய்து கொள்கின்றனர்” என்று ‘லேன்ஸ் லெக்ஸிகன்’ எனும் அரப் அகராதி விளக்கம் தருகிறது.

‘பஹ்ருல்முஹீத்’ என்னும் நூல் “ஜிசியா வரி, முஸ்லிமல்லாதாருக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள

பாதுகாப்பிற்காக அவர்களால் வழங்கப்படும் ஈட்டுத்தொகை” என்கிறது.

அறிஞர் நிக்கலஸ் அக்னைடீஸ் (Nicolas Agnides) ஜிசியா எனும் சொல் ‘ஈடு’ (Jaza, Meaning Compensation) என்று தனது Mohammeda Theories of Finance and Taxation நூலில் பக்கம் 398ல் குறிப்பிடுகிறார்.

கஸீத் என்ற பாரசீகச் சொல்

கஸீத் (Gazith) என்ற பாரசீகச் சொல்லே அரபி மொழியில் ஜசியா என்றாகி, பொதுவாக வரியைக் குறிக்க ஜிஸ்யா என்று அரேபியர்களால் அழைக்கப்பட்ட தென்று டாக்டர் கே.ஏ.நிஜாமி தெரிவித்துள்ளார்.

“கி.பி.எட்டாம் நூற்றாண்டு வரையிலும் அதற்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பின்பும் கூட முஸ்லிம் அரசாங்கம் வரிவிதிப்பின் மூலம் கிடைத்த வருமானத்தை ‘ஜிஸ்யா’ என்னும் பொதுச் சொல்லாலே குறித்து வந்ததென்று இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் இரண்டாம் பாகத்தில்(Encyclopaedia of Islam, Vol . I I . P.P.902-903) தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நபிகள் (ஸல்) காலத்திய வரிகள்

அகிலத்தின் அருட்கொடையாம் அண்ணல் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் காலத்தில், இஸ்லாம் தோன்றிய சமயத்திலேயே ஒவ்வொரு குடிமகனும் ஒவ்வொரு ஆண்டும் தனது நிகர வருமானத்தில் இரண்டரை சதவீதம் ஜக்காத் வரியாக (தானம்) அரசாங்க கஜானாவில் செலுத்த வேண்டும். வயதுவந்த, உடல்நலம் பாதிக்கப்படாத ஒவ்வொரு ஆண்மகனும் இராணுவத்தில் அவர் அவரது தகுதிக்கு ஏற்றவாறு பங்கு பெற வேண்டும் என்பதும் நியதியாக்கப்பட்டது.

காவல் வரியே ஜிசியா

முஸ்லிம் அரசு செயல்படும் நாட்டில் முஸ்லிம் அல்லாதார் ஜக்காத் வரி கொடுக்க வேண்டியதில்லை; அன்னிய மதத்தவரை கட்டாயமாக இராணுவத்தில் சேருமாறு வற்புறுத்தவும் முடியாது. ஆனால் அனைவருக்கும் ஆளுகின்ற அரசு பாதுகாப்பு நல்கிட வேண்டும். அவர்களைக் காப்பாற்ற வேண்டும். எனவே முஸ்லிம் அரசாங்கம் ‘திம்மீ’ என்னும் அயல் மதத் தோழர்களை போற்றிக் காவல் காப்பதற்காக, அவர்களே வலிய மிகக் குறைவாக, அரசாங்கத்திற்கு கொடுத்த வரியே ஜிசியா ஆகும்.

பெண்கள், குழந்தைகள், அடிமைகள், குருடர், செவிடர்,

ஊமையர், துறவிகள், ஏழைகள், பிச்சைக்காரர்கள் ஆகியோர் இந்த வரியைச் செலுத்த வேண்டியதில்லை, விலக்கு அளிக்கப்பட்டிருந்தார்கள்.

முஸ்லிம் ஆட்சியில் முஸ்லிமல்லாதவர்கள் ஜக்காத் வரி செலுத்தாமல், இராணுவச் சேவையும் புரியாமல், சிறு தொகையை ஜிசியா வரியாகச் செலுத்தி தங்களைப் பாதுகாத்துக் கொண்டனர். இந்த இஸ்லாமிய முறையைத் தான், முன்னரே நாம் பார்த்த 80 வரிகளை நீக்கிய பேரரசர் ஔரங்கஜேப் அரியணை ஏறிய இருபத்திரெண்டு வருடங்கள் கழித்து விதித்தார்.

பாதுகாப்பு வரி

முஸ்லிமல்லாதார் தாங்கள் அரசாங்கத்திடமிருந்து பெற்ற பாதுகாப்பிற்கான கட்டணமாகத்தான் ஜிசியா வரியைச் செலுத்தினார்கள்.

கிறிஸ்தவர்கள் செலுத்திய வரி

ஒரு கிராமத்தினரோ அல்லது ஒரு சமுதாயத்தினரோ மொத்தமாக வழங்கிய வரி ஜிசியா. தித்திக்கும் திருமறையாம் திருகுர்ஆனில் 9வது அத்தியாயத்தில் 29வது வசனத்தில் அது பேசப்படுகிறது. ஆனால் வெறுமனே அந்த 29வது வசனத்தை மட்டும் எடுத்து வைத்துக் கொண்டு பொருளைப் பார்க்காமல், அந்த அத்தியாயம் முழுவதையும் படித்தறிந்தால்தான் ‘ஜிசியா’சின் முழுப்பொருளையும் புரிந்து கொள்ளமுடியும்.

டிரான்ஸ்சோ கொனியா (Transoscania) ஹிசாம் (Hisham) என்ற இடத்தில் கலீபாஉமயத் (UmayyidCaliph) காலத்தில் யூதர்களின் தலைமைக்குரு ராபி (Rabbi) வசூலித்துக் கொடுத்த வரி ஜிசியா, கிறிஸ்தவர்களிடமிருந்து அவர்களுடைய பிஷப்புகளும், மாஹியர்களிடமிருந்து (Magians) அவர்களுடைய மர்துபானும் (Marzuban) வசூலித்துக் கொடுத்த வரி ஜிசியா.

இராணுவச் செலவிற்கான வரி

“கிராமத்தின் குடிமக்கள் செலுத்தும் மொத்தவரியாக இருந்த ஜிசியா, பிற்காலத்தில் முஸ்லிம் அல்லாதவர்கள், முஸ்லிம் இராணுவத்தில் சேர முடியாதபடியால் அவர்களால் செலுத்தப்படும் சுங்கவரியாக மாறி, இராணுவத்தினரின் செலவுகளை ஈடுகட்ட விதிக்கப்பட்ட வரியாகத் தோன்றுகிறது”

இத்தாலி நாட்டைச் சேர்ந்த செய்தானி Caetani ‘Amalidelle Islam’ நூலில் நான்காவது வால்யூம் பக்.612, ஐந்தாவது வால்யூம்

பக்.449ல் சொல்லியுள்ள கருத்துகள்தான் இது.

தங்களுக்கு எதிராக யாராயினும் அவர்கள் முஸ்லிமாக இருந்தாலும் தங்களை ஒடுக்க நினைத்தால் அவர்களிடமிருந்து தங்களுக்கு பாதுகாப்பளிக்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் பெறப்பட்ட வரியே ஜிசியா.

நபி (ஸல்) அவர்களின் ஒப்பந்தம்

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் முஸ்லிம் அல்லாதார் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் (1) பகைவர்களிடமிருந்து பாதுகாக்கப்படுதல் (2) அவர்களாகச் சென்று வரி வசூலிப்பவரிடம் வரி செலுத்த வேண்டிய அவசியமில்லை (3) அவர்களது உயிர், சொத்துக்கள் பொருட்கள், நிலம் எல்லாம் பாதுகாக்கப்படும் (4) அவர்களுடைய மதகுருக்கள் அவர்களுடைய இடங்களிலிருந்து அப்புறப்படுத்தப்படமாட்டார்கள் (5) அவர்களது கோயில்கள் எந்தவிதத் தடையுமின்றி நடைபெற அனுமதிக்கப்படும் (Their Churches will be free from all interference) (6) அவர்கள் மத மாற்றத்திற்கு கட்டாயப் படுத்தப்படமாட்டார்கள் (They will not be forced to change their religion) என்ற நிபந்தனைகளின் அடிப்படையிலே ஜிசியா வரி பெற்றனர். (Kitab-ul-Kharaj by Abu Yusuf)

கலீபா உமர் (ரலி)

கலீபா உமர் (ரலி) காலத்தில், ஹீராக்குலியஸ் இரண்டு லட்சம் ரோமானியர்களோடு படையெடுத்து வந்தார். யர்மூக் போரில் ஸஹாபாக்கள் ஓராயிரம் பேர்கள், பத்ருகளம் கண்ட நூறு பேர்கள் உள்ளிட்ட முப்பது அல்லது முப்பத்தி ஐயாயிரம் பேர் முஸ்லிம்கள் பக்கத்தில். (நாயகத்தின் கலீஃபாக்கள் ஸையிதினா உமர் எம்.எஸ்.முஹம்மது தம்பி எழுதிய நூல் பக்.111)

முப்பதினாயிரம் ரோமானியர்கள் போர்க்களத்திலிருந்து ஓடும் எண்ணம் உள்ளங்களில் துளிர்க்கக்கூடாதென்று கால்களில் விலங்குளைப் பூட்டி வந்தார்கள். இந்தச் சமயத்தில் ஹலரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் தாங்கள் வென்றிருந்த நகரங்களின் ஆட்சியாளர்களுக்கு, மக்களிடமிருந்து வசூலித்த ஜிசியாவரிகள் அனைத்தையும் திரும்பக்கொடுத்து விடுங்கள் என்று கட்டளையிட்டார்கள்.

திரும்ப வழங்கப்பட்ட தொகை

“ஒரு பெரும்படை நம்மை நோக்கிப் படையெடுத்து

வருகிறது என்ற செய்தி அறிந்தமையால் நாங்கள் உங்களிடமிருந்து வசூலித்துக் கொண்ட பணத்தை இப்போது திரும்பக் கொடுத்து விடுகிறோம். நம்மிடையே உள்ள ஒப்பந்தப்படி உங்களைப் பாதுகாக்க வேண்டியது எங்களது பொறுப்பாகையால் இந்த சமயத்தில் இது எங்களால் கூடுமோ என்ற ஐயம் இருப்பதால் உங்களிடமிருந்து பெற்ற ஜிசியா வரியைத் திரும்பத் தந்து விடுகிறோம். ஆனால் எதிரிகளை நாங்கள் வென்று உங்களது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டு விட்டால், நம்முடைய ஒப்பந்தப்படி நீங்கள் அதனை திரும்பச் செலுத்துங்கள்" என்று மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

அதன்பின் அரசின் கருவூலத்திலிருந்து பெரும் தொகைகள் மக்களுக்குத் திரும்ப வழங்கப்பட்டது. அந்த வேளையில் கிறிஸ்தவர்கள் முஸ்லிம் தலைவர்களை ஆசீர்வதித்து, "கடவுள் உங்களைத் திரும்பவும் எங்களை ஆட்சி செய்ய அருளட்டும்; ரோமர்களை நீங்கள் வென்று வருவீர்களாக! இப்போது ரோமர்களாக இருந்திருந்தால் எங்களுக்கு எதுவுமே திரும்பவராது; மாறாக இருப்பதையும் அபகரித்து கொள்ளையடித்துச் சென்றிருப்பார்கள்" என்றனர்.*

(* Abu Yaiuf, Kitabal_Kharaj, Cairo, A.H.I. 102)

உமர் (ரலி) பெற்ற வெற்றி

"என் இஸ்லாமிய உடன்பிறப்புகளே! உமர் தன் ஸலாமைக் கொண்டு உங்களுக்குச் சோபனம் கூறுகிறேன். நீங்கள் முழு உறுதியோடு உங்கள் வரிகளை எதிர்த்துப் போரிடுங்கள். சிங்கங்களாக நீங்கள் சிலிர்த்து அவர்கள் மீது பாயும்போது அவர்கள் உங்கள் பார்வையில் சிற்றெறும்புகளை விட அற்பமாகத் தெரிய வேண்டும். இறைவனின் மேலான உதவியோடு இறுதியில் வெற்றியும் உங்கள் கரங்களிலே தரப்படுமென நான் உறுதியாக நம்புகிறேன்" என்று கலீபா உமர் படையினருக்கு அளித்த செய்தி, முஸ்லிம்கள் போரில் பெற்ற பெரும் பெற்றி, அதனைத் தொடர்ந்து

"வளம் கொழிக்கும் ஸிரியாவே! உனக்கு என் இறுதி வாழ்த்துகள். இதோடு நான் உன்னிடமிருந்து விடை பெறுகிறேன். இனி எந்த ரோமனும் உன்னிடம் எக்காலமும் வரப் போவதில்லை" என்று ஹிராக்குலியஸ் சொல்லியவராக கான்ஸ்டாண்டி நோபினை நோக்கிச் சென்றதும் யுத்தத்தின் பின்விளைவுகள்...

இராணுவப் பணியாளருக்கு இல்லாத வரி

முஸ்லிமல்லாத ஆரோக்கியமுள்ள ஆண்களிடமிருந்துதான் ஜிசியா வரி வசூலிக்கப்பட்டது. இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றிய இதர மதத்தவர்களுக்கு இந்த வரி கிடையாது.

மெகாரிசில் (Megaris) உள்ள அல்பேனியக் (Albania) கிறிஸ்தவர்கள், ஹித்தாரோன் (Cithacron) ஜெர்மியா (Geranea) மலைகளில் உள்ள கணவாய்களைப் பாதுகாப்பதற்கு படையை அளிக்க ஒப்புக்கொண்டதால் அவர்களுக்கு ஜிசியா வரி கிடையாது.*

ஹைதிராவின் (Hydra) கிறிஸ்தவர்கள் துருக்கி கடற்படைக்கு 250 வீரர்களை அனுப்பியதால் ஜிசியா வரி அவர்களுக்கும் இல்லை.

தெற்கு ருமேனியர்கள், போர்க்காலங்களில் ஒரு இராணுவப் பிரிவினை அளிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் படி அவர்களுக்கு ஜிசியா வரியிலிருந்து விலக்களிக்கப் பட்டிருந்தது.

கான்ஸ்டாண்டின் நோபிள் நகரத்தில் குடிதண்ணீர் விநியோகிக்கும் வேலையைச் செய்து வந்த கிரேக்க கிறிஸ்தவர்களுக்கு அந்தப் பணியின் காரணமாக ஜிசியா வரி கிடையாது.

முஸ்லிம்கள் செலுத்திய வரி

இராணுவத்திலிருந்து விலக்களிக்கப்பட்ட எகிப்திய விவசாயிகள், ஜிசியா வரியை கிறிஸ்தவர்கள்போல், அவர்களும் முஸ்லிமாக இருந்தும் செலுத்தவே செய்தார்கள்.

இவைகளை ஆர்னால்டு (T.W.Arnold) தனது 'இஸ்லாம் பரவியது எப்படி' என்ற நூலில் The Preachings of Islam 1961-ம் ஆண்டு வெளியான பதிப்பில் 60,61,62வது பக்கங்களில் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இஸ்லாமிய நெறிமுறைகள் அனைத்தையும் தெளிவாக அறிந்து, அதன்படி நடந்தவர் ஔரங்கஜேப் என்று எல்லா வரலாற்று ஆசிரியர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர். ஜிசியா பற்றிய இஸ்லாமிய நெறிமுறையை ஔரங்கஜேப்அறியாதவரா? எனவே ஔரங்கஜேப் ஜிசியா வரியை விதித்து இந்துக்களை கொடுமைப்படுத்தினார் என்பதில் உள்ள உண்மைதான் என்ன?

மார்க்கக் கட்டளையும், பற்றாக்குறையான கருவூலமும்

‘இஸ்லாத்தின் காவலன்’ எனறு போற்றப்பட்ட, புகழுப்பட்ட மாமன்னர் ஔரங்கஜேப்பிடம் இஸ்லாமிய சட்டப்படி ஜிசியா வரி விதிக்கப்பட வேண்டிய அவசியத்தை, இஸ்லாம் மார்க்கத்தின் முக்கியஸ்தர்கள் வலியுறுத்த ஆரம்பித்தார்கள். ஔரங்கஜேப்பும் அதற்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டிய நிலைக்குள்ளானார்.

இனாயத்துல்லாகான் என்பவரை (Enayathullashkhan) ஜிசியா வரிக்கான சட்டம் இயற்ற நியமித்தார் ஔரங்கஜேப்.

அரசுக் கருவூலத்திற்கு ஆண்டுக்கு 25 லட்சம் முதல் 30 லட்ச ரூபாயை அளித்து வந்த 80 விதமான வரிகளை ரத்து செய்த ஔரங்கஜேப் இந்து யாத்திரிகர்கள் புண்ணிய ஸ்தல யாத்திரைக்குச் சென்று திரும்புவதற்கு அரசுக்கு பலதரப்பட்ட வரியைச் செலுத்தியதை, அரசு வாங்குவதால் சிலை வணக்கத்தை நாமும் அங்கீகரிப்பதாக அமையும் என்றெண்ணி அந்த வரிகளையெல்லாம் ரத்துச் செய்த ஔரங்கஜேப் .

கங்கைக்கரையில் இந்துக்களுக்கு விதிக்கப்பட்ட பல வரிகளை ரத்துச் செய்தார் ஔரங்கஜேப் .

கருவூலத்திற்கு வருமானம் குறைந்த நிலையில் இஸ்லாமியச் சட்டப்படி போடப்பட வேண்டுமென்ற காரணமும் சேர்ந்து கொள்ளவே, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட இருபத்திரண்டு வருடங்களுக்குப்பின் ஜிசியாவை கொண்டு வந்தார்.

குடும்பச் செலவும், குறைந்த வரியும்

குடும்பச் செலவு போக ஆண்டுக்கு 52 ரூபாய் வருமானம் வந்தால் மூன்றரை ரூபாயும், 250 ரூபாய் வருமானம் வந்தால் ஆறரை ரூபாயும், 2500 ரூபாய் வருமானம் வந்தால் 13 ரூபாயும் ஜிசியா வரியாக விதிக்கப்பட்டது.

குடும்பச் செலவுகள் போக மீதி இருந்தால் மட்டுமே இந்த வரி விதிக்கப்பட்டது. நடுத்தர வர்க்கத்தினர் இரண்டு தவணைகளாகவும், ஏழை மக்கள் நான்கு தவணைகளாகக் கூட இந்த வரியைச் செலுத்த முடியும்.

பணமாக மாத்திரமின்றி பொருளாகக் கூட இந்த வரியைச் செலுத்தலாம். வரி வசூலிப்பவர்களின் கவனக் குறைவால் அல்லாமல் வேறு எந்தக் காரணங்களுக்காகவோ ஒரு ஆண்டு வரி வசூலிக்கத்தவறி அடுத்த ஆண்டு பிறந்து விட்டால் பழைய பாக்கியாக வரியை செலுத்த வேண்டியதில்லை.

வரி விலக்கப்பட்டவர்கள்

ஆறு மாத காலமாக ஒருவர் நோய்வாய்ப்பட்டிருந்தால் ஜிசியா வரி செலுத்த வேண்டியதில்லை.

இறந்து போன ஒருவருடைய சொத்துக்களிலிருந்து ஜிசியா வரிக்காக ஒரு போதும் எடுத்துக் கொள்ளப்படுவது கிடையாது.

17ம் நூற்றாண்டில் தொழிலாளிகள் சாதாரணமாக மாதத்திற்கு நான்கு ரூபாய்தான் சம்பளமாகப் பெற்று வந்தார்கள். அது அவர்களது குடும்பப் பராமரிப்புக்கும் போதுமானதாக இருந்தது. இவர்கள் தங்களது குடும்பப் பராமரிப்பிற்கான செலவு போக எந்தச் சூழ்நிலையிலும் ஆண்டிற்கு 52 ரூபாய் சம்பாதித்திட முடியாது. ஆகையால் ஏழை எளிய பாட்டாளித் தோழர்கள் அனைவரும் ஜிசியா வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாம் என்று Aurangzeb & His Times நூலில் Zahiruddin Faruki பக்கம் 154ல் தெரிவித்துள்ளார். (This assumption is based on The fact Servents and Peons in Gujarat were paid Rs.4/- Monthly in 1690. See, From Akbar to Aurangjeb by W.H.Moreland, P.173; A Vayage to surat by Ovington, P.392)

உழவர்கள் மீது இந்தவரி கிடையாது. தச்சர்கள், கொல்லர்கள், பொற்கொல்லர்கள், கொத்தனார்கள், கூலி வேலை செய்வோர் ஆகிய யாரும் ஜிசியா வரி செலுத்த வேண்டியதில்லை.

அரசு ஊழியர்கள் செலுத்தாத வரி

அரசாங்க ஊழியர்கள் சிறிய பணியில் இருந்தாலும் தளபதிகளாக இருந்தாலும் அவர்களுக்கும் ஜிசியா வரி கிடையாது.

I. H.Qureshi, 'Law applying to non Muslims in 'History and Culture of the People of India' Vol.VI; and The Delhi Sultarate Administation என்ற நூலிலும் இதன் விபரங்கள் காணக்கிடக்கின்றது.

"ஒன்றும் செய்ய இயலாத, வயது முதிர்ந்த கிழவர்கள், ஊனமுடையோர், குருடர், தங்களின் நியாயபூர்வமான எல்லாச் செலவும் போக இவ்வரியைக் கட்ட இயலாதவர்கள், துறவிகள், பூசாரிகள், தாமே சுயமாகச் சம்பாதிக்க இயலாதோர் தங்கள் நேரத்தையும், சக்தியையும் பூஜையில் செலவிடுபவர் ஆகியோரும் இதைச் செலுத்த வேண்டியதில்லை. பெண்கள், குழந்தைகள், உழவர்கள் ஆகியோரும் ஜிசியா வரியைக் கட்ட வேண்டியதில்லை என்று ஐ.ஹெச்.குரைஷி தெரிவித்துள்ளார்.

ஆனால் இராணுவச் சேவையில் ஈடுபடாதவர்கள், அரசாங்க

ஊழியத்திலும் ஈடுபட மறுத்தவர்கள், அரசுக்கெதிராக போர்க்கொடியை உயர்த்தும் வாய்ப்புக்களைப் பெற்றவர்களிடமிருந்தோ ஜிசியா வரிவசூலிக்க முயற்சிகள் ஔரங்கஜேப்பால் எடுக்கப்பட்டது.

இந்துத் துறவிகள் செலுத்தாத வரி

தன்னிடம் பணியாற்றிய நூற்றுக்கணக்கான இந்து மன்சப்தார்கள் ஜிசியா வரியைச் செலுத்தினார்களா? கிடையாது; ஔரங்கஜேப்பின் இந்து திவான் ரசிக்தாஸ் (Rasik Das) ஜிசியா வரி கட்டினாரா இல்லை; இல்லவே இல்லை.

இந்துத் துறவிகள் அனைவருக்கும் ஜிசியா வரி விலக்களிக்கப்பட்டிருந்தது என்பது உண்மை!உண்மை!!.

அந்தண குலத்தோருக்கும் அதே சலுகை அளிக்கப்பட்டிருந்தது என்பதும் அகிலம் ஒப்புக்கொள்ளும் விஷயம்.

பலுசிஸ்தானத்தில் ஜிசியா வரியைக் கட்டிய இந்துப் பெருமக்கள் மிகுந்த பாதுகாப்புடன், அவர்களின் மதப் பழக்கவழக்கங்களுக்கு எந்த விதமான இடையூறின்றியும் வாழ்ந்து வந்தனர்.

(their religion was tolerated; no one tampered with their customs' census of India, 1911, Vol.4, Balusistan, part I, P.175)

ஆனால் அதே வேளையில் முஸ்லிம்கள் இராணுவத்தில் சேராமல் 'கப்பாரா' செலுத்த ஒப்புக் கொண்டபோது ஔரங்கஜேப் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

அகமதாபாத் ஆளுநரும் அரச உத்தரவும்

மராத்தியர்கள் மீது ஔரங்கஜேப்போர் தொடுத்த காலகட்டத்தில், ஒவ்வொரு மாநில ஆளுநரும் ஓராயிரம் குதிரைகளை சக்கரவர்த்தியின் குதிரைப் படைக்கு அனுப்பி வைக்கச் சொல்லி உத்தரவு அனுப்பிய போது, எல்லோரும் குதிரைகளை அனுப்பினர். அகமதாபாத் ஆளுநர் சுஜாத்கான் தன்னுடைய மக்கள் அவ்வளவு தூரத்திற்கு வரவிரும்பவில்லை என்றும், ஆனால் அதற்குப் பதிலாக இரண்டு லட்ச ரூபாய் தரத் தயாராக இருக்கிறார்கள் என்று சொல்லி செய்தியை அனுப்பியபோது, அதிருப்தி அடைந்தார் ஔரங்கஜேப் . "உம்முடைய விரும்பத்தகாத யோசனைகளைத் தவிர்த்து உடனடியாக தேவையான இராணுவத்தை உம்முடைய வளர்ப்பு மகனுடன் அனுப்பி வையுங்கள்" என்றும் உத்தரவிட்டார்.

இவைகளின் மூலம் இராணுவக் கட்டாயம் முஸ்லிம்களுக்கும், தங்களின் பாதுகாப்பிற்கும் ஜிசியா வரி சக்தி வாய்ந்த இந்துக்களுக்கும் கட்டாயம் என்பதை தெளிவாக நாம் தெரிந்து கொள்ளலாம்.

கட்டணத் தீர்வையும், கட்டிவிட்ட கதையும்

பெரும்பாலான குடிமக்கள் தங்கள் பாதுகாப்பிற்காகவும், நன்றியறிவிப்பாகவும், கட்டணத்தீர்வையாகவும், மனத்திருப்தியுடனும் கொடுத்து வந்த ஜிசியா வரியைப் பற்றி பிரிட்டிஷ் பேரரசை விசாலமாக்கிக் கொண்ட ஆங்கிலேயர்கள் தங்கள் கற்பனைகளையும் விரித்து இந்துக்களிடையேயும் முஸ்லிம்களிடையேயும் பிளவு ஏற்படுத்த கட்டிவிட்ட கதையை இன்று ஒரு கூட்டத்தார் சொல்லி சொல்லி மதத் துவேஷத்தை இந்த நாட்டிலே வளர்த்து வருவது நியாயமா?

எந்த மதத் தலைவர்களானாலும் அவர்கள் அனைவருக்கும் ஜிசியா வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தது முனிவர்கள், பிஷப்புகள் மீதும் இது விதிக்கப்படவில்லை.

ஆக்ராவிலுள்ள கிறிஸ்தவக் குருமார்கள் ஜிசியா வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தார்கள். ஔரங்கஜேப்பின் 37வது ஆட்சியாண்டின் பர்வானா இதைச் சொல்கிறது. The Christian Priests of Agra had been exemped from the Poll-tax. In the 37th years of Aurangazeb's reign a Parwanah was issued reaffirming their old Privilege.*

(* Journal of the Punjab Hiostorical society, P.30.)

பாதுஷாப்பூர் பர்கானா

பாதுஷாப்பூர் என்ற பர்கானாவில் 1680-81ஆம் ஆண்டில் ஜிசியா வரி மூலம் வசூலான தொகை விவரங்கள் அக்காலப் பதிவேடுகளில் இப்படி வழங்கப்படுகிறது.

பாதுஷாப்பூர் பர்கானாவில் முஸ்லிமல்லாத மக்கள் தொகை 1855.

ரூ.3-2-0 செலுத்தியவர்கள் 302 பேர்

செலுத்திய தொகை 943-12-0

ரூ.6-4-0 செலுத்தியவர்கள் 145 பேர்

செலுத்திய தொகை 906-4-0

ரூ.12-8-0 செலுத்தியவர்கள் 88 பேர்

செலுத்திய தொகை 1100-00

ஆக 535 பேர் செலுத்திய மொத்தத் தொகை 2950-00

ஒரு பர்கானாவில் கிடைத்த மொத்த தொகையே ரூ.2950 என்பதையும் அது எவ்வளவு சிறுதொகை என்பதையும் உணரலாம். ஒவ்வொரு பர்கானாவிலும் இதனை வசூலிக்கவா ஔரங்கஜேப் மக்களை கொடுமைப்படுத்தியிருப்பார்?

ஔரங்கஜேப் அனைத்து முஸ்லிம்களுக்கும் சலுகைகளையும் வழங்கிடவில்லை; அனைத்து இந்துக்களையும் கொடுமைகளுக்கு உள்ளாக்கிடவும் இல்லை என்பதை அவருடைய நூற்றுக்கணக்கான கடிதங்களும் வரலாற்று ஆதாரங்களும் சொல்லிக் கொண்டிருக்கின்றன.

டாக்டர் சி.கே.கரீம்

புரோகிதரல்லாத, உத்தியோகஸ்தர்கள் முதலியோர் பிராமணர்களுடன் சேர்ந்து ஜிசியா வரியில் விலக்களிக்கப்பட்டிருந்தனர். முதன்முதலில் ஜிசியா வரி விதிக்கப்பட்ட போது பிராமண குலத்தினர் அவர்களுடைய புரோகிதத் தொழில் காரணமாகவும், கல்வித்துறை ஈடுபாட்டின் காரணமாகவும் விலக்களிக்கப்பட்டிருந்தனர். காலப்போக்கில் உண்மையிலேயே புரோகிதர்களாக இல்லாத வேறு தொழில்களைப் பார்த்து வந்த பிராமணர்கள் இராணுவத்தில் சேர்ந்து பணியாற்ற வேண்டும் என்று ஆட்சியாளர்களால் வற்புறுத்தப்படும் சந்தர்ப்பங்கள் வந்தன. இந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் ஜிசியா வரி செலுத்த வேண்டுமென்று ஃபிரோஜ்ஷா துக்ளக்கும், மாமன்னர் ஔரங்கஜேப்பும் வற்புறுத்தி, கட்டாயமாக்கி, கடைப்பிடிக்க வேண்டிய கட்டம் வந்ததும், அது அந்தணர் கூட்டத்திடையே அவர்களது, உள்ளத்திலேயே பெரும் புரட்சியையும் கிளப்பிவிட்டது என்று டாக்டர் சி.கே.கரீம் தனது “What happened in Indian History” நூலில் Pai & Co வெளியிட்ட 1907வது வருடப் பதிப்பில் பக்கம் 81ல் தெரிவித்திருக்கிறார்.

பேராசிரியர் ஹெச்.அமீர் அலி

“இதுவே உண்மை. எதுவரை அந்தணர் குலம் முழுதும் விலக்குப் பெற்றிருந்ததோ அதுவரை ஜிசியாவைப் பாராட்டிய பிராமணர்கள், தாங்களும் ராணுவச் சேவையைப் புரிய வேண்டும் அல்லது ஜிசியா வரிக் கட்டணம் செலுத்த வேண்டும் என்னும் கட்டத்தை எட்டியவுடன் எதிர்ப்புத் தெரிவிக்க முற்பட்டனர்” என்பர் வரலாற்றுத்துறை பேராசிரியர் ஹெச்.அமீர்அலி.*

விலக்களிக்கப்பட்ட சில பிராமணர்கள் வரிவிதிப்புக்கு உள்ளான போது இராணுவச் சேவைக்கு கட்டாயப்படுத்தப் பட்டபோது நீலாப்பிரபு மூலம் தங்களது கண்டனக் கடிதத்தை ஔரங்கஜேப்புக்கு எழுதினார்கள்.

ஜிசியா வரி தன்னளவில் கொடுமையான வரி இல்லை. இல்லவே இல்லை. ஆனால் விலக்களிக்கப்பட்டிருந்த இனத்தினர் மீது வரி விதிப்பு செய்த போதும், அதை விதித்திட்ட முறையும், காலமும் ஔரங்கஜேப்பின் அரசியல் வாழ்வில் குற்றத்தை சுமத்திட வழிவகுத்தது.

பெயரளவிற்குப் பெற்ற வரி

பெயரளவிற்காகப் பெற்ற சிறுவரி, பாதுகாப்பிற்காகப் பெற்ற ஜிசியாவரி அவரது வாழ்வில் பெருங்குற்றமா? பெயரளவா என்பது பற்றி வரலாற்றுப் பேராசிரியர்களிடையே கருத்து வேற்றுமைகள் இன்றும் இருக்கவே செய்கிறது.

இஸ்லாமிய அரசிலுள்ள முஸ்லிமல்லாத பிரஜைகளுக்குக் கட்டாய ராணுவச்சேவை கிடையாது. முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் போருக்குச் சென்று உயிரை அர்பணம் செய்யத் தயாராக வேண்டும் ஆனால் முஸ்லிமல்லாத மக்கள் (ஸிம்மிகள்) (Zimmi) தங்கள் பாதுகாப்பிற்காக அரசுக்கு செலுத்திய வரி ஜிசியா.

அதோடு சகட்டுமேனிக்கு இந்த வரி விதிக்கப்படாமல் மக்களின் பொருளாதார வசதியும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு விதிக்கப்பட்ட வரி ஜிசியா.

இன்றும் விதிக்கப்படுகிற வரிகள்

இன்னும், பெண்கள், சிறுவர்கள், உழைக்க முடியாத முதியவயதினர், பைத்தியக்காரர்கள் மற்றும் அனைத்து மதத்தின் துறவிகள் இப்படி பலருக்கும் விலக்களிக்கப்பட்ட வரி ஜிசியா.

மேலும், இந்த வரியைச் செலுத்துவதன் மூலம் மக்களின் வழிபாட்டு உரிமைகள் காக்கப்பட்டது. அவர்களது ஆலயங்களும் பாதுகாக்கப்பட்டன. அவர்களது சொத்துரிமையையும் பேணப்பட்டது அன்று. இன்றோ நாம் செலுத்துகிற சொத்துவரி, விற்பனை வரி, வருமான வரி, சாலை வரி, தண்ணீர் வரி என்று நேரடியாகவும், நெருப்புப்பெட்டி முதல் தொலைக்காட்சி பெட்டி வரை வாங்குகிறபோது மறைமுகமாகவும் இப்படி எத்தனையோ வரிகள். அமைதியான உள்நாட்டு நிர்வாகத்தினை நடத்திடவும், வெளிநாட்டு

ஆக்கிரமிப்பைத் தடுக்கவும் அரசாங்கம் வாங்குகிற மக்கள் தாங்க முடியாத எத்தனை வரிகளை இப்போதும் நாம் செலுத்திக் கொண்டு தானே இருக்கிறோம்.

முடிவாக

அரசுக்கு குறைந்த வருமானத்தையே அளித்த ஜிசியா வரியை கட்டாயத்தின் பேரில் கண்டிப்புடன் நிறைவேற்றியதால் குறை சொல்கிற அளவுக்கு ஔரங்கஜேப் கொண்டு செல்லப்பட்டார்; கடுகை மலையாக்கும் கூட்டம் குற்றஞ்சொல்லியே அவரை களங்கப்படுத்தி, கொடுமைக்காரராகவும் சித்தரித்து விட்டது.

இந்துக்களையும், இதர மக்களையும் இம்சைப்படுத்த வேண்டும். இன்னலுக்குள்ளாக்க வேண்டுமென்று, தனது ஆளுகைக்குட்பட்டிருந்த இந்துக் பெருமக்களிடம் தலைவரி விதித்து துன்புறுத்தியிருந்தால், அந்தப் பெருமக்கள் வெள்ளமென ஒன்று சேர்ந்திருந்தால், அவர்கள் போராடியிருந்தால், கி.பி.1679ல் விதிக்கப்பட்ட ஜிசியா வரிக்குப் பின்னும் 28 ஆண்டுகள் 1707 வரை இந்துக்களை பெரும்பான்மையாகக் கொண்ட, இந்துக்கள் பெரும்பான்மையிராக வாழ்ந்து வருகின்ற இந்தியத்திரு நாட்டை ஔரங்கஜேப் அமைதியாக ஆட்சி புரிந்திருக்கத் தான் முடியுமா?

இந்துக்களைக் கட்டாயப்படுத்தி முஸ்லிம்களாக்கி இஸ்லாத்தைப் பரப்பிட வேண்டுமென்று, முஸ்லிம் மார்க்கக் கட்டளைகளுக்கு மாறாக ஔரங்கஜேப் தான் முயற்சி செய்திருப்பாரா? அவ்வாறு வேகமாக அவர் முயன்றிருந்தால் உயிரோடு ஔரங்கஜேப் உலவியிருக்கத் தான் முடியுமா? என்ற கேள்வியினை மாத்திரம் இங்கு வைத்து, நடுநிலையாளர்கள் தங்களின் இதயத்தராசில் இவைகளை சீர் தூக்கிப் பார்த்திடக் கோருகிறேன்.

5

இந்துக்களை வேலை நீக்கம் செய்தவரா?

“ஔரங்கஜேப் தனது ஆட்சிக் காலத்தில் அயல்மதத்தைச் சார்ந்தவர்களை அரசுப் பணிகளிலிருந்து அடியோடு நீக்கினார்; இஸ்லாம் அல்லாத பிற மதத்தைச் சேர்ந்தவர்களைப் பொறுப்புகளிலிருந்து விரட்டினார்; குறிப்பாக இந்துக்களை அரசாங்க வேலைகளிலிருந்து அப்புறப்படுத்தினார்;” இவ்வாறு சொல்லப்படுகிறது; எழுதப்படுகிறது; கற்பிக்கப்படுகிறது. இந்த விஷயத்தில் வரலாறு உண்மைதான் என்ன? இதோ.... வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்...

மன்ஸப்தார்கள்

முகலாயப் பேரரசில் மன்ஸப்தார்கள் (Mansabdars) ஆளும் குழுவினராகத் திகழ்ந்தார்கள். அதிகாரவர்க்கத்திலும், ராணுவப்படித்தரக் குழுக்களிலும் அவர்கள் இடம் பெற்றிருந்தார்கள். பத்து ‘ஸாவர்’களுக்கு அதிபர்களானாலும், 5000 ‘ஸாவர்’களுக்கு (குதிரைச்சவாரி வீரர்கள்) அதிபர்கள் என்றாலும் எல்லா மன்ஸப்தார்களும் மன்னருக்குக் கிழே நேரடிச் சிப்பந்திகளாகப் பணியாற்றினார்கள். மன்ஸப்தார்கள் தமக்குக் கீழ் பணியாற்ற 1000 குதிரை வீரர்கள், 5000 குதிரை வீரர்கள் என்று தகுதி பெற்றிருந்தார்கள். ஆனால் 5000 குதிரை வீரர்களைக் கொண்ட ஒரு மன்ஸப்தாரை அடக்கி வைத்திட முடியாது.

இந்து மன்ஸப்தார்கள்

ஔரங்கஜேப் அரச பொறுப்பிற்கு வந்ததற்குப்பின் பணியாற்றிய முஸ்லீம்கள் அல்லாத இந்து மன்ஸப்தார்களின் (கி.பி.1658-1678) பட்டியல் இதோ :

7000 குதிரை வீரர்களைக் கொண்ட மன்ஸப்தார்கள்

ராஜபுத்திர ஜமீன்தார் உம்தத்துல்முல்க் மிர்ஜா ராஜா ஜெய்சிங்கர் வாஹா, ராஜபுத்திர ஜமீன்தார் மஹாராஜா ஜஸ்வந்த்சிங் ராத்தோடு.

6000 குதிரை வீரர்களைக் கொண்ட மன்ஸப்தார்கள்

ராஜபுத்திர ஜமீன்தார் ராணாராஜ்சிங், மராட்டிய சாம்பாஜி, தக்காண ஜமீன்தார் கஜ்நாயக்.

5000 குதிரை வீரர்களைக் கொண்ட மன்ஸப்தார்கள்

ராஜபுத்திர ஜமீன்தார் ராஜா ராம்சிங் கச்வாஹா, ராஜபுத்திர ஜமீன்தார் ராஜா ராய்சிங் சிசோடியா, சம்பத்புந்தேலா, மராட்டிய நேத்தோஜீ, மாலுஜீ தக்காணி.

4000 குதிரை வீரர்களைக் கொண்ட மன்ஸப்தார்கள்

ராஜபுத்திர ராய்சிங்ராத்தோ, யஷ்வந்த்ராவ், ராவ்பாவோசிங் ஹாரா, இந்தர்மான தண்டேரா, மராட்டா ஜமீன்தார் ஜாதவ்ன்ராய் தக்காணி, தாமாஜி.

3500 குதிரை வீரர்களைக் கொண்ட மன்ஸப்தார்கள்

ராஜபுத்திர ஜமீன்தார் ராஜா ராஜரூப் நூர்ப்பூரி, ராஜா கஜன்சிங் புண்டேலா, ராவ்கரண் பாரத்தீயா.

3000 குதிரை வீரர்களைக் கொண்ட மன்ஸப்தார்கள்

மராட்டியர் பார்சோஜி தக்காணி, தத்தாஜீ தக்காணி, சுக்ஜீவன் உதாஜிராம், அந்த்தாஜீ கண்டகாலா, ராஜபுத்திரர் கிராத்சிங், கிர்தார்தாஸ் கௌர், பைராம் தேவ் சிசோடியா, ரகுநாத்சிங் சிசோடியா சந்திரவத்.

2500 குதிரை வீரர்களைக் கொண்ட மன்ஸப்தார்கள்

ராஜபுத்திர ஜமீன்தார் ராஜாதேவிசிங் புந்தேலா, அனூப்சிங், சுப்ஹுகரன் புந்தேலா, சத்தர்சால் ஹாரா பக்வத்சிங், ராவ்அமர்சிங் சந்திரவத், சபல்சிங் சிசோடியா, ராஜாபிக்ரம்சிங், மராட்டிய பாபாஜீபான்ஸ்லே, மானாஜீ பான்ஸ்லே, ருஸ்தம்ராவ், திரிம்பக்ஜீ பான்ஸ்லே.

2000 குதிரை வீரர்களைக் கொண்ட மன்ஸப்தார்கள்

ராஜபுத்திர ஜமீன்தார் ராஜா நரசிங்கௌர், இராஜா தோடர்மால், ஜகத்சிங்ஹாரா, பூரண்மல் புந்தேலா, ஸ்ரீநகர் மோத்னிசிங், பீரித்திசிங், மராட்டிய நாருஜீ தக்காணி, வியாசராவ் என்ற பியாஸராவ், தாதாஜீ, தானுஜி.

1500 குதிரை வீரர்களைக் கொண்ட மன்ஸப்தார்கள்

ராஜபுத்திர ஜமீன்தார் பஹார்சிங்கௌர், கோபால்சிங், ஜகத்சிங், கேசரிசிங் பாரத்தியா, போஜ்ராஜ் கச்வாஹா, மித்ரசேன் பந்தேலா, ராஜாமான்சிங், ஹர்ஜீஸ்கௌர், சதுர்புஜசௌஹான், ராஜா அமர்சிங் நரோரி, ராஜா கிஷன்சிங், தௌனுர், உதயபான் ராத்தோடு, மான்சிங் ராத்தோடு, ஜகராம் கச்சவாஹா,ரகுநாத்சிங் பாரத்தியா, ரகுநாத்சிங் மீரத், மஹேஷ்தாஸ் ராத்தோடு, ரகுநாத்சிங் ராத்தோடு, கரன்கச்சி, ராஜாபிரீதிசந்த், மராத்திய பாகூஜீ தக்காணி, ரம்பாஜீ தக்காணி, தக்கூஜி, ராகோஜி, ஷர்ஜா ராவ்காவா, ஜமீன்தார் சாங்தார், ராய்மக்ரந்த்.

1000 குதிரை வீரர்களைக் கொண்ட மன்ஸப்தார்கள்

ராஜபுத்திர ஷேர்சிங் ராத்தோடு, இந்தர்சிங், ராஜா மஹாசிங் பஹ்தூரியா, ராம்சிங், மான்தத்தா, ராஜா ஜெய்சிங், ராஜபரூஜ், சூரஜ்மல்கௌர், இந்தர்மன் பந்தேளா, தாமாஜி, பீம்சிங், சௌன்சிங், கல்யாண்சிங், பாவோசிங், மனோகர்தாஸ் சிசோடியா, ஷேர்சிங், பனவாலிதாஸட பாரததியா, பக்வந்த் ராஜாஜஸ்வந்த்ங்சி, பந்தேலா, மணிராம், முகம்சிங், சத்ர்சிங், மராத்திய சத்ருஜி, தக்காணி, மானாஜி, கார்க்கூஜி, ரகுஜிகோப்பரே, பஹ்லாவிஜய்.

இங்கு குறிப்பிடப்பட்ட மன்சப்தார்கள் கி.பி.1658 முதல் 1673 வரை ஔரங்சீப்பிடம் பணியாற்றியவர்கள். மொத்தம் பணியாற்றிய 486 மன்ஸப்தார்களில் 105 மன்ஸப்தார்கள் இந்துக்கள். அதாவது 21.6% இடத்தை இந்துக்கள் பெற்றிருந்தார்கள்.

ஜிஸ்யா வரி விதிப்பிற்குப் பின்னால்

ஜிஸ்யா வரியை விதித்து ஔரங்கஜேப் இந்துக்களையும் இன்னும் பிற மதத்தினரையும் கொடுமைப்படுத்தியதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்களே... அந்தக் கால கட்டத்தில், அதாவது கி.பி.1679 முதல் ஔரங்கஜேப்பின் இறுதிவரையில் (கி.பி.1707) ஔரங்கஜேப்பிடம் பணியாற்றிய இந்து மன்ஸப்தார்களின் பட்டியல் இதோ :

7000 குதிரை வீரர்களைக் கொண்ட மன்ஸப்தார்கள்

மராட்டிய ராஜா சாஹூ

6000 குதிரை வீரர்களைக் கொண்ட மன்ஸப்தார்கள்

ராஜபுத்திர ஜமீன்தார் ராணா ராஜ்சிங், மராட்டிய கன்ஹூஜிஷர்க்கே, ஸத்வர்த்தஃபால்யா, சம்பாஜீ மைந்தர் மான்சிங், ராய்பன்.

5000 குதிரை வீரர்களைக் கொண்ட மன்ஸப்தார்கள்

ராஜபுத்திர ராஜா ராம்சிங் கச்வாஹி, ராணா ஜெய்சிங், ராணா அமர்சிங் மிமி, ராஜா பீம்சிங், மராட்டிய அச்லாஜீ திம்பல்கார் தக்காணி, மாலூஜீ, நாகூஜீமானே என்ற ராகுஜி, பஹ்ராஜி பாந்த்ரே, பரசுராம், கேவ்ஜி, கஜான் ராவ் என்ற சிவபானுராவ், ராணாஜி ஜனார்தன், ஜான்கூஜீ நாத்தூஜீ தக்காணி.

4000 குதிரை வீரர்களைக் கொண்ட மன்ஸப்தார்கள்

மராட்டிய யஷ்வந்த் என்ற பஷ்வந்த் ராவ் தக்காணி, பாஜீசவான் தா1ப்லே, சீவாஜீ, ராஜபுத்திர 4மீன்தார் ராவ்பாவோ சிங்ஹாரா ராஜா சத்தர்லால் புந்தேலா.

3000 குதிரை வீரர்களைக் கொண்ட மன்ஸப்தார்கள்

ராஜபுத்திர ஜமீன்தார் புந்தீயைச் சார்ந்த அனுருத்ஹாரா, அனுப்சிங், இந்தர்சிங், ராஜா உதத்சிங் புந்தேலா, உதயசிங் புந்தேலா, ராஜா பாரத்சிங், தன்பத் ராவ் புந்தேலா, துர்காஸ்ராத்தோடு, இந்தர்சிங், ராஜா உதத்சிங் பதூரியா, மராட்டிய ஜமீன்தார் ஜக்கியா தேஷ்முக், தர்ஸூஜீ என்ற பர்சுஜீ, தாக்கூஜி, நேத்தாஜி, தோலூஜி, அனந்தராவ், பன்புரோஹித், கிருஷ்ணாஜீ.

2000 குதிரை வீரர்களைக் கொண்ட மன்ஸப்தார்கள்

மராட்டிய பத்தங்ராவ், பத்தங்கராவ், ஜத்ரவத், ஜீவாசீபண்டிட் பதர்ஜீ என்ற பாதாஜீ, ராஜபுத்திர ஜமீன்தார் மான்சிங், ராவ்ராம்சிங் ஹாரா.

1000 முதல் **1500** குதிரை வீரர்களைக் கொண்ட மன்ஸப்தார்கள்

மராட்டிய பாஜிராவ், ஜாதவ்ன்ராய், தக்காணி ஜகத்ராய் தேஷ்முக், மாங்கூஜீ, மஹான்ஜீ, சாம்பாஜீ, சாதூஜீ, பாலிராவ், நாரோஜீராகவ், மஹத்ஜீமானே, ரகூஜீ, கோண்டாஜீ, காஹ்தானூனின் ஜமீன்தாரும் தானேதாருமான ராம்சந்த், மஹ்மான்ஜீ, மானாஜீ, ராவ் தேனாஜி சால்வி.

தீமாஜி, இகூஜீ, அர்ஜூஜீ, மாக்கூஜீ, ராவ்ஜீ, தாலஜீ, ஜாவுஜீ,

மாதவ்ஜீ, நாராயண், மாரூஜீ மைந்தர் சிவாஜி, தௌந்திராவ் என்ற போன்பீர்ராவ், கான்ராவ என்ற கிஷன்ராவ், ராணாஜீ, சிவ்ஜீ ரேல்கார் மகன் சாதுஜீ, பூர்ஜீமைந்தர் துக்கூஜி, அவுச்சி அவுஹல், ஜாலுஜீ, அக்கூஜீ, பாலிராவ், மாலுஜீ, ஜான்ராவ் மைந்தர் பஜே, சிவாஜீ, யஸாஜீ, தாலூஜீ, பஹார்ஜீ, அன்பாஜீ, நபாஜீ, மானாஜீ, மாக்காஜீ மைந்தர் அன்பாஜீ, ராம்ராவ் நாகூஜீ மைந்தர் மானாஜீ, ஜாவோஜீ மைந்தர் காண்டுஜீ, மங்க்கூஜீமந்தர் தேவுஜீ, மாலூஜீ, சிவ்ஜீ, பஹர்ஜீ, பீர்பன், காண்டுராவ் மகன் நேத்தாஜீ, பாயாஜீ, சாந்துஜீ, ராவ்ஜகத், பிர்மூஜீ, ராவ்மானசிங், வியாங்கத் ஜகதேவ் ராய், தேவ்ஜீ, மதன்சிங், கேலுஜீ, ராமாஜீ, ஜானுஜீ, மல்ஹீராவ்.

ராஜபுத்திர மன்ஸப்தார்கள்

ராஜபுத்திர ஜமீன்தார் ராஜா பிஷன்சிங், ராஜா தேபிசிங் புந்தேலா, கிஷோர்சிங் ஹாரா, சுப்ஹ்காண்புந்தேலா, ராஜா ராம்சிங்சி சோடியா ராவ்புத்துசிங், கிஷண்சிங், ராவராம்சந்த் ஜெயசிங் சவாயீ, ராம்சிங், சிவசிங், ஜகத்சிங் ஹாரா, கஜன்சிங், ராஜா துரக்சிங் மனோஹர்தாஸ் கலாதார், ராஜா ஜஸ்வந்த்சிங் பஹாடுசிங் கௌர், கோபால்சிங், நூர்சிங் பிஜய்சிங், முஹ்கம்சிங், பீஹாரி சந்த், நூர்சிங் மைந்தர் சிவசிங் ஹிர்தய்ஸா புந்தேலா, பரமதேவ், சத்தர்சால்ராத்தோடு, ரகுநாத்சிங், சரூப்சிங், பதம்சிங் புந்தேலா, ஜஸ்வந்த்சிங் ரவால், குமான்சிங், ராஜா சரூப்சிங், ராஜா மஹாசிங் கப்பூர்சிங் ஹாரா, ராஜா மன்தத்தா ரவால் ராம்சிங், கல்யாண்சிங், கோபால் சிங் இந்தர்மன், சுல்தான்சிங், ராஜா உதயசிங் பதாவார்.

ஜமீன்தார், ராஜா கல்யாணிசிங், ராஜா பகவந்த்சிங், ராஜா சூரஜ்மல், பஹாதுர்சிங், ராஜா மனோஹர்தாஸ்தில்சிங், சேத்சிங், ராஜா உதயசிங், பாவோசிங், புருஷோத்தமசிங், பதம்சிங், ஷோலாப்பூர்கலாதார் கிஷோர்தாஸ், அஜீத்சிங்ராத்தோடு, மேலும் பிடியா நாயக்கின் சிறிய தந்தை பாம்நாயக், ஜக்னாநாயக், பர்யநாயக், சத்லான்காராவின் ஜமீன்தார் பாசுதேவ், ஸீமேராயக், அனிராய் பிரஹ்மான், லக்ஷ்மண்பட்டி ஆகியவர்களும் மன்ஸ்ப்தார்களாக ஔரங்கஜேப்பிடம் பணியாற்றியவர்கள் என்பது மறுக்க முடியாத வரலாற்று உண்மையாகும்.

மேலே குறிப்பிட்ட மன்ஸப்தார்கள், உயர் அந்தஸ்து பெற்றிருந்த அதிகாரிகள் 575 பேர்களில் 182 பேர்கள் இந்துக்கள். அதாவது 31.6%. ஔரங்கஜேப்பதவிக்கு வந்தபோது அவரிடம் பணியாற்றிய மன்ஸப்தாரி இந்துக்கள் 21.6%. ஔரங்கஜேப்இந்துக்களை பொறுப்புக்களிலிருந்து

விடுவித்ததாகச் சொல்லப்படுகிற கால கட்டத்தில் அவரிடம் பணியாற்றிய மன்ஸப்தார்களில் இந்துக்கள் 31.6%.

ஔரங்கஜேப்பின் ஆட்சியில் முகலாய பிரபுகுலம்

The Mughal Nobility Under Aurangazeb என்ற தலைப்பில் 1961 ஆம் ஆண்டில் அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகத்தில் "டாக்டர்" பட்டத்திற்காக , பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் எம். அத்தர் அலி (M. ATHAR ALI) சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரை, 1989இல் 556 பக்கங்களைக் கொண்ட நூலாக வெளிவந்திருக்கிறது.

நியூதில்லி இந்தியன் கவுன்சில் ஆப் ஹிஸ்டாரிகல் ரிசர்ச் குழு மற்றும் சென்னை நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் நிலையத்தாரும் இணைந்து வெளியிட்ட நூலை திரு உஸ்மான்ஷெரீப் தமிழாக்கியிருக்கிறார்.

பேராசிரியர் அத்தர் அலி

வரலாற்றுக்குறிப்புக்கள், அகராதிகள், நிர்வாக ஏடுகள், கணக்கு முதலிய நிர்வாகக் கையேடுகள், ஐரோப்பிய மூல ஆதாரங்கள், குறிப்பேடுகள், சேகரித்து வைக்கப்பட்டுள்ள தஸ்தாவேஜிக்கள், கடிதங்களின் சேகரிப்புக்கள், வாழ்க்கை வரலாறுகளும், தஜ்கீராக்களும், பலதரப்பட்ட நூல்கள், தற்காலப் புதுநூல்கள் போன்ற இருநூற்றுக்கும் மேற்பட்ட சான்றுகளுடனும், ஆதாரங்களுடனும் உருவாக்கப்பட்ட அந்த நூலில் ஔரங்கஜேப்பிடம் பணியாற்றிய அனைத்து மன்ஸப்தார்களின் பட்டியல் தெளிவாக் குறிப்பிட்டிருக்கிறது.

இந்துக்களை அரசாங்கப் பொறுப்புக்களிலிருந்து அடியோடு ஔரங்கஜேப் நீக்கினார் என்று சொல்லிவரும் சரித்திர ஏமாற்றுக்காரர்களின் முகமூடியை டாக்டர் அத்தர் அலி வரலாற்றின் மூல ஆதாரங்களைக் கொண்டு கிழித்தெறிந்திருக்கிறார்.*

(* எம். அமீர் அலி, ஔரங்கஜேப்பின் ஆட்சியில் முகலாய பிரபு குலம், பக். 340-487.)

ஒரு பானைச் சோற்றுக்கு....

"ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பதைப்போல ஔரங்கஜேப்பிடம் பணியாற்றிய மன்ஸப்தார்கள் விஷயத்தை தெளிவாகப் பார்த்துவிட்டோம்.

பேரரசர் ஔரங்கஜேப் பிற மதத்தவர்களை பொறுப்புக்களிலிருந்து விலக்கியவரா?

அரசாங்க வேலைகளிலிருந்து அயல் மதத்தினரை அப்புறப்படுத்தியவரா?

அல்லது அனைவருக்கும் நடுநிலையோடு இருந்தவரா? நீங்களே முடிவெடுத்துக்கொள்வீர்களாக!

6

அப்ஸல்கானை அனுப்பி சிவாஜியை அழிக்க முயன்றவரா?

ஔரங்கஜேப் தமது அரை நூற்றாண்டு கால ஆட்சியில் முதற்பகுதியை வடஇந்தியாவில் கழித்தார் என்றால், அவரது வாழ்நாளின் பிற்பகுதியை மராத்திய மண்டலத்திலேயே கழிக்க நேர்ந்தது. 'ஔரங்கஜேப்பின் கொள்கைகள், செயல்கள்தான் மராத்தியர்களிடம் எழுச்சியைத் தோற்றுவித்தது என்று சொல்லப்படும் கருத்து ஏற்புடையதா? 'மராத்தியர்களின் எழுச்சி அவர்களின் தலைவர் வீரசிவாஜியுடன் பிறந்தது' இதில் எவருக்கும் சந்தேகம் இல்லை. ஆனால் இந்த எழுச்சி எப்போது ஏற்பட்டது? ஔரங்கஜேப்பின் ஆட்சி தொடங்கிய பிறகா? அல்லது அதற்கு முன்பா? ஔரங்கஜேப்பின் ஆட்சி மற்றும் சமயக் கொள்கைகளுக்கும் சிவாஜியின் எழுச்சிக்கும் நேரிடையான, நெருங்கிய சம்பந்தம் உண்டா? முகலாயப் பேரரசர்களைவிடச் சகிப்புத் தன்மையில் குறைந்து காணப்பட்ட பாமினி அரசர்களை எதிர்த்து கி.பி. 14, 15 ஆம் நூற்றாண்டுகளில் மராத்தியர்கள் ஏன் எழுச்சி பெறவில்லை? 17 ஆம் நூற்றாண்டில் மராத்தியர்களிடையே பேரெழுச்சி ஏற்பட்டது எதனால்?

பெர்ஸீவல் ஸ்பியர்

'என்னைப் பொறுத்தவரை மராத்தியர்களின் எழுச்சி இந்திய வரலாற்றில், வரலாற்றுப்புதிர்களுள் ஒன்றாகவே உள்ளது' என்று பெர்ஸீவல் ஸ்பியர்* கூறியிருப்பது எதனால்?

(* Perceval Spear, History of India, Vol. II மேற்கோள், பி.அமீர் அலி, ஔரங்கஜேப், பக். 133.)

வீரசிவாஜியின் முதல் தாக்குதல் முகலாயப் பேரரசரை எதிர்த்ததா? இல்லை. இல்லவே இல்லை. மாறாக சிவாஜியின் அரசியல் பிரவேசம் பீஜப்பூர்த் தனி அரசை எதிர்த்துத்தான் தொடங்கியது. சிவாஜி பீஜப்பூரின் கோட்டையை முதன்முதலில் தாக்கியது தனது 19-வது வயதில் கி.பி.1646 ஆம் ஆண்டில்; ஔரங்கஜேப் அரியணையை ஏறியது கி.பி.1658 இல். பின் எதனால் ஔரங்கஜேப்பையும், சிவாஜியையும் இணைத்து குற்றஞ் சுமத்துகிறார்கள்? அப்சல்கான் என்ற படைத்தளபதியை அனுப்பி வைத்து ஔரங்கஜேப், சிவாஜியை ஒழிக்கத் திட்டமிட்டார்; சிவாஜி வீரத்துடன் போராடி அப்சல்கானை அழித்தார். இது சிவாஜி - ஔரங்கஜேப் பற்றி சொல்லப்பட்டு வரும் முதல் குற்றச்சாட்டு. இதில் உண்மைநிலை என்ன?

ஆலம்கீர் ஔரங்கஜேப்பிற்கும், வீர சிவாஜிக்கும் இடையே பல்வேறு விதமான கருத்துக்களை பாரெங்கும் தொடர்ந்து பரப்பி துவேஷத்தை வளர்த்து வரும் நிலைமை இன்றும் இருந்து வருகிறது. எனவே, ஔரங்கஜேப் - சிவாஜி குறித்து சொல்லப்பட்டு வருகின்ற விஷயத்தினை விரிவாக ஆராய்வோம்.

சிவாஜியின் வம்சமும், முஸ்லீம்களும்

அரவல்லி மலைத் தொடருக்குத் தெற்கேயும், உஜ்ஜினி மாநகரத்திற்கு வடக்கேயும் அமைந்திருந்த சித்தூரைத் தலைநகராகக் கொண்டிருந்த 'ரீவார்' நாட்டை பல்லாண்டுகளாக ஆட்சிபுரிந்து வந்த இராணா என்ற அரசகுல மரபில் தோன்றியவர் ராணாலட்சுமணசிங். இவரது மகன் சோண்டா என்பவருக்கு மந்தவார தேசத்து அதிபதியின் மகளைத் திருமணம் செய்திட முடிவெடுத்து அதற்கான நிச்சயதாம்பூல நிகழ்ச்சிக்காக மணப் பெண்ணின் அண்ணன் இரான்மால் தனது பரிவாரங்களுடன் வந்தார். அப்போது அவரிடம் 'கிழவனான எனக்கு நிச்சயதாம்பூலம் கொடுக்க மாட்டீர்கள் அல்லவா?' என்று லட்சுமணசிங் சொன்னதைக்கேட்டு எல்லோரும், அவருக்கும் திருமண விருப்பம் இருப்பதை அறிந்து மகனுக்குப் பேசி முடித்த பெண்ணையே தந்தைக்கு திருமணம் செய்து வைத்தார்கள்.*

(* கிருஷ்ணசாமி சர்மா, இராஜபுத்திர வீரர் குமுபமஹாராஜா, 1983, சென்னை, பக். 4-8.)

சிவாஜியின் மூதாதையர் சாஜான் சிங்

ஆப்கானிய சக்கரவர்த்தி கில்ஜி வம்சத்து அலாவுதீன் டில்லியை ஆண்டு வந்தபோது (கி.பி.1296-1316) சித்தூருக்கு விரோதமாகப் படையெடுத்தார். அப்போது நடைபெற்றப் போரில் லட்சுமணசிங் கொல்லப்பட்டார். அவரின் பிள்ளைகளில் பதினோரு பேரும் அப்போது மாண்டனர். கோட்டையும் பிடிபட்டது. அவரது இரண்டாவது மகனான அஜித்சிங் மாத்திரம் அப்போரில் தப்பி ஓடிவிட்டார். அவரும் இறுதிவரை போராடிப் பார்த்தும் இழந்த கோட்டையைக் கைப்பற்ற முடியாமல் தனது மூத்த சகோதரரின் மகனான ஹமீர் என்பவருக்குப் பட்டம் சூட்டிவிட்டு இறந்தார். இந்த நிலையில் அஜீத்சிங்கின் இரு புதல்வர்களில் ஒருவரான ஆஜாம்சிங், மீவார் அருகே காட்டில் நடைபெற்ற போரில் கொல்லப்பட்டார். அவரது சகோதரரான சாஜான்சிங் சில படையினரோடு சேர்ந்து கொண்டு, தென்னாடு சென்று தன்இஷ்டப்படி பொருள்தேட அனுப்பப் பட்டார். இந்த சாஜான்சிங் என்பவரே சிவாஜியின் மூதாதையர் ஆவார். இவரின் சந்ததியார் ஆமத் நகரத்தை ஆண்டு வந்த அரசர்களின்கீழ் பணி புரிந்தனர். அந்த மரபில் வந்த பாபாஜி பொருள் திரட்டி தௌலதாபாத்திற்கு அருகிலுள்ள வெருள் (Verul) என்ற கிராமத்தில் தலைமை பதவியை (Patilki) விலைக்கு வாங்கி அங்கே வாழ்ந்து வந்தார். அவருக்கு மாலோஜி, விதோஜி என்ற இரண்டு புதல்வர்கள் இருந்தனர். ஒருநாள் காட்டில் மாலோஜி கடவுளைக் கண்டதாகவும், காட்டிலிருந்து பெரும் புதையலைப் பெற்றதாகவும், அதனைக் கொண்டு போய் சேஷாஜி நாயக்கிடம் ஒப்படைத்ததாகவும் அவர் அந்தப் பணத்தின் ஒரு பகுதியைக் கொண்டு ஷிங்கணபுரத்தில் கோயில் கட்டவும், குளம் வெட்டவும் செலவு செய்தது போக மீதமிருந்த பணத்தைக் கொண்டு போய் குதிரைகளும், ஆயுதங்களும் வாங்கி போர்வீரர்களாக மாறியதாகவும் வரலாறு சொல்கிறது.

(ஆமத் நகர முஸ்லிம் அரசர்களின் அட்சிக் காலத்தில் புதிய கோயில்கள் கட்டப்பட்டது என்பதற்கு சேஷாஜி நாய்க் ஷிங்கணப்புரத்தில் கட்டிய கோயில் வரலாற்றில் மறைந்து கிடக்கும் விஷயம். இவை போன்ற செய்திகள் வெளிச்சத்திற்கு வந்தாக வேண்டும்.)

முதலாம் மூர்த்தஜா நிஜாம்ஷா

வணங்கபால் நிம்பல்காரிடம் மாலோஜியும், விதோஜியும் படைத் தலைவர் பொறுப்பில் வேலைக்குச் சேர்ந்தனர். அதிவீரம்காட்டி புகழ் பெற்ற இவர்களை ஆமத் நகர மன்னர் முதலாம் மூர்த்தஜா நிஜாம்ஷா வரவழைத்து தனது படையில் உயர்ந்த பதவியும் வழங்கினார். ஆமத்நகர முஸ்லிம் அரசின்

உதவியினால் மாலோஜியின் அந்தஸ்து உயர்ந்தது. தான தருமங்களைச் செய்தார். கோயிலும் குளமும் கட்டினார். *

(* அ.லெ. நடராஜன், 'வீர சிவாஜி', 1985, பக். 25.)

மாலோஜி ஆமத் நகர அரசரிடம் பணியாற்றுகிறபோது மகாராஷ்டிர பிரபு லக்காஜி தாதவராவின் நட்பைப் பெற்றார். அவரின் உதவியோடு, வணங்கபால் நிம்பல்க்காரின் சகோதரியான தீதாபாய் என்பவரை மாலோஜி திருமணம் செய்துகொண்டார். பல ஆண்டுகளாகியும் குழந்தைப் பாக்கியம் இல்லாதநிலையில், கணவனும் மனைவியும், ஷாஷரீப் என்ற முஸ்லிம் மகானின் அடக்கஸ்தலம் உள்ள பகுதிக்குச் சென்று பிரார்த்தனை செய்து வந்தனர். கி.பி.1591-ல்* மாலோஜி -தீதாபாய் தம்பதியருக்கு முஸ்லிம்கான் ஷாஷரீப் அவர்களின் ஆசியால் ஆண்குழந்தை பிறந்ததால், அந்தக் குழந்தைக்கு, முஸ்லிம்மகானின் நினைவாக 'ஷாஹாஜி' என்று பெயரிட்டனர். இந்த ஷாஹாஜி தான் சிவாஜியின் தந்தை ஆவார். (* கி.பி. 1602 என்றும் சொல்வர்)

ஷாஹாஜீ - ஜீஜாபாய்

ஆமத் நகர (அஹ்மத் நகர) அரசப் பணியாளரான லக்காஜி யாதவராவுடன் ஹோலிப் பண்டிகை விழாவிற்காக மாலோஜி சென்றிருந்தார். அங்கு விளையாடிக் கொண்டிருந்த ஷாஹாஜீயையும், லக்காஜியின் மகளான ஜீஜாபாயையும் பார்த்து, 'இவ்விருவரும் நல்ல ஜோடியாக இருப்பார்கள்' என்று யாதவராவ் வேடிக்கையாகச் சொன்னதை வைத்துக் கொண்டு மாலோஜி (சிவாஜியின் தாத்தா) "பாருங்கள், லக்காஜி தம்மகள் ஜீஜாபாயை என் மகன் ஷாஹாஜிக்கு மணமகளாக நிச்சயம் செய்துவிட்டார்" என்று சந்தோசத்துடன் சொன்னார். ஆனால் லக்காஜி அதனை முதலில் ஏற்றுக் கொள்ளவில்லை. அவரது மனைவி 'மால்சபாய்' இந்த திருமணத்திற்கு சம்மதம்தர மறுத்துவிட்டார். இந்த நிலையில் ஆமத் நகர முஸ்லிம் அரசர் இரண்டாம் முர்த்தஜா அதனைக் கேள்விப்பட்டு சிவாஜியின் தாத்தாவான மாலோஜியை 5000 குதிரைகள் அடங்கிய படைக்குத் தலைவராக நியமித்தார். அது மட்டுமா? பூனா, சூபா என்ற பட்டணங்களையும் மானியமாகத் தந்தார். ராஜா என்ற பட்டத்தையும் அளித்தார். அத்தோட நின்றவிடாமல் சிவகேசி , சாக்கான் என்ற இரண்டு கோட்டடைகளுக்கும் அதிபதியாக்கினார். மாலோஜியின் அந்தஸ்து ஆமத் நகர முஸ்லிம் அரசின் உதவியோடு உயர்ந்தது. அதன்பின்னரே லக்காஜி திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தார். ஷாஹாஜி - ஜீஜாபாய் திருமணம் நடைபெற்றது.

வீர சிவாஜி

அவர்களின் முதல் புதல்வராக 1623-ல் சாம்பாஜி பிறந்தார். கி.பி.1627 ஏப்ரல் 10 திங்கட்கிழமை சிவனேர் கோட்டையில் வைத்து சிவாஜி பிறந்தார். சிவை தேவியின் அருளால் பிறந்த குழந்தை என்பதாலும், 'ஜி' என்னும் மரியாதைச் சொல்லையும் இணைத்து சிவாஜி என்று பெயரிட்டனர். குழந்தை பிறந்தபோது ஷாஹாஜி உடன் இருக்கவில்லை. அவர் நெடுந் தொலைவில் இருந்தார். சிவாஜி வளர்ந்தபோதும் அதே நிலைதான்.

சிவாஜி பிறந்த வருடம் தேதி குறித்து கருத்து வேறுபாடு நிலவுகிறது. சிவாஜி பிறந்தது 1627 பிப்ரவரி 19 என்று கின்கெயிடு சொல்கிறார். 1630லே பிறந்தார் என்று மராத்திய ஆசிரியர்கள் சொல்கிறார்கள். சிவாஜி பிறந்த ஆண்டு மாதம், தேதியில் மட்டுமே கருத்து வேற்றுமைகள்; மாறுபட்ட செய்திகள்-?

முதலாம் மூர்த்தாஜா நிஜாம்ஷா படையில் உயர்ந்த பதவி அளிக்கப்பட்டும், அவரின் உதவியால் செல்வாக்கும் அந்தஸ்தும் உயர்த்தப்பட்டும், ஷாஷரீப் என்ற முஸ்லிம் ஞானியரின் ஆசியால் பிள்ளைப் பாக்கியம் பெற்றும், இரண்டாம் மூர்த்தஜா என்ற முஸ்லிம்அரசால் ராஜாவாக ஆக்கப்பட்டும் முஸ்லிம் தொடர்பால், உதவியால், உன்னத நிலைக்கு வந்தவர்கள் சிவாஜியின் மூதாதையர்களாள தாத்தா, தநதை ஆகியோர். இநத உண்மைகள் இன்று சொல்லப்படுகிறதா? வரலாற்றுப் பாடங்களில் இடம்பெறுகிறதா இல்லையே!

ஆலம்கீர் ஔரங்சீப்பிற்கும், சிவாஜிக்கும் இடையே நடைபெற்றதாக எத்தனை அபாண்டப் பழிகள்? நியாயமான மன்னரை அநியாயக்காரர் என சித்தரித்திட எத்தனை திட்டமிட்ட முயற்சிகள்! கட்டுக்கதைகள்! அப்பப்பா! வரிசையாக அவைகளுக்கு விடை காண வேண்டாமா? இதோ வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப் .

உண்மையின் வெளிச்சத்தில்

வீரமும், விவேகமும், இராஜதந்திரமும் நிறைந்த சிவாஜியின் வாழ்க்கை வரலாற்றைச் சுருங்கக் கூறினால்தான், அவர் நடந்து கொண்ட, நடத்திய செயல்களின் தாக்கத்தை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும். வீர சிவாஜியின் வரலாற்றைக் குறைத்து மதிப்பிடுவதற்கு முயலவில்லை. ஆனால் முகலாயப் பேரரசர்களையும், முஸ்லிம் மன்னர்களையும் தரக்குறைவாகவும் இல்லாததும் பொல்லாததுமான விஷயங்களை இட்டுக்கட்டி

எழுதுகிறார்கள்.

வரலாற்றில் உண்மையை மறைத்து ஒரு பக்கத்தை உயர்த்தவும், மறு பக்கத்தைத் தாழ்த்தவும் ஒரு சிலர் முயன்று வருகிறார்கள். தொடர்ந்து முயற்சிகளில் இறங்கிக் கொண்டேயிருக்கிறார்கள்.

அவர்கள் ஒரு பக்கத்தை உயர்த்திச் சொல்வதால் ஒன்றும் நட்டமில்லை தான். ஆனால் மறுபக்கத்தை தாழ்த்திச் சொல்லி, அதிலும் உண்மைக்கு மாறாகச் சொல்லி துவேஷத்தை வளர்க்கிற போதுதான் உண்மையை உள்ளபடி உரைக்க வேண்டிய நிலைக்கு உந்தப்படுகிறோம்.

ஜீஜாபாய்

சிவாஜியின் தந்தை ஷாஹாஜி முதலில் ஆமத் நகர அரசரிடம் பணிபுரிந்தார்; பின்பு அங்கிருந்து பீஜபுரம் அரசரிடம் போய்ச் சேர்ந்தார். எனவே மூத்த மகன் சாம்பாஜியைத் தன்னுடன் அழைத்துச் சென்று பீஜபுரத்தில் வசித்து வந்தார்.

சிவாஜியோ தன் தாயார் ஜீஜாபாயுடன் புனாவிலே வாழ்ந்து வந்தார்.

துர்க்காபாய் மோஹயிட் என்ற உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்திராத பெண்ணை ஷாஹாஜி இரண்டாவது மனைவியாக மணம் புரிந்து கொண்டார். அதையறிந்து சிவாஜியின் தாயார் ஜீஜாபாய் துயரடைந்தார்; பெயருக்கு ஷாஹாஜியின் மனைவியென்றிருந்தாரேயொழிய அவருடன் அதன்பின் வாழ்க்கை நடத்தவேயில்லை.

பத்து வயது நிறைந்த சிவாஜிக்கு பீஜபுரத்து விதோஜி நிவாஸ்க்காரின் எட்டு வயது மகளான சாயாபாய் என்பவரைத் திருமணம் செய்து வைத்திட பீஜபுரத்திற்கு சிவாஜியை அழைத்துவரச் சொன்னார் ஷாஹாஜி. ஜீஜாபாய் சிவாஜியை பீஜபுரத்திற்கு அழைத்துச் சென்றார். பீஜபுரம் அரசரின் அவையில் சிவாஜி நடந்து கொண்ட முறை ஷாஹாஜிக்குப் பிடிக்கவில்லை.

“நீ உன் மகனை அழைத்துக் கொண்டு பூனாவுக்குப் போ. அங்கே தக்காணத்திலுள்ள என் சொத்தை வைத்துக் கொண்டு பிழைத்துக் கொள்” என்று சொல்லி ஜிஜாபாயை ஷாஹாஜி அனுப்பி வைத்துவிட்டார்.

சிவாஜியின் பூர்வீக சொத்து

“அந்த சொத்தோ வெகு கேவலமான ஸ்திதியிலிருந்தது.

முஸ்லிம் சேனைக்கு கடைசியாக தளகர்த்தனாயிருந்தவர் அந்தக கிராமத்தின் வழியாகப் போகும்பேது அங்கிருந்த வீடுகள் யாவையும் இடித்துத் தள்ளி கழுதைகளைக் கொண்டு அந்த நிலத்தையும் உழுது விட்டார். அந்த ஸ்தலத்தைச் சபித்துவிட்டு, அது சபிக்கப்பட்ட ஸ்தலம் என்று பிறர் அறியும்படி அதற்கு அறிகுறியாக ஒரு இரும்பு ஸ்தம்பத்தையும் நாட்டினார். அங்கிருந்து குடியானவர்கள் யாவரும் அதை விட்டு ஓடிப் போய் விட்டார்கள். அதற்கருகில் கூடுகின்ற 'மூதா', 'மூலா' என்ற இரு நதிக்கரையோரங்களில் சில செம்படவர்கள் மாத்திரம் அரைப்பட்டினியில் காலங்கழித்து வந்தனர். ஜீஜாபாயும், அவளுடைய குமாரனும் (சிவாஜியும்) வாழ்க்கை நடத்துவதற்கு ஆதாரமான வருவாய் ஒன்றும் அந்தச் சொத்திலிருந்து கிடைக்கவில்லை." இது சி.ஏ.கீன் கேயிட், சிவாஜியின் பூர்வீகச் சொத்து குறித்துச் சொல்லியுள்ள வாசகங்கள்.

தாதாஜி காண்டதேவ்

தாதாஜி காண்டதேவ் என்ற திறமை வாய்ந்த பிராமணர் ஒருவரை ஷாஹாஜீ ஜீஜாபாயுடன் அனுப்பி வைத்திருந்தார். அவர்தான் ஓடிப்போன 'மாவல' என்ற விவசாயிகளை மீண்டும் அழைத்து, வரியைக் குறைப்பதாக வாக்களித்து நிலத்தைப் பண்படுத்த ஏற்பாடு செய்தார். தனத சொந்தப் பணத்தைக் கொண்டு நிலத்தை சீர்திருத்தினார். இதையறிந்த ஷாஹாஜி பூனா, சூபா, என்ற ஊர்களுடன் பராமதி, இந்துபுரம் என்ற வேறிரண்டு தாலுகாக்களையும் சேர்த்துக் கொடுத்தார்.

சிவபுரி

தாதாஜி காண்டதேவ்வின் அரிய முயற்சியால் நினைத்ததற்கு மேலாகப் பலன் கிடைத்தது. புதிய கிராமத்தை உருவாக்கி 'சிவபுரி' என்ற பெயருமிட்டார்.

கொங்கண நாட்டின் உம்ராத கிராமத்தைச் சேர்ந்த தானாஜிமாலுசரே, மோஸே பள்ளத்தாக்கிலுள்ள தேஷ்முக்கான பாஜிகாஸல்க்கார், சகாயதிரிஸிலுள்ள மிராஸ்தாக ஈஸாஜிகங் ஆகிய சிறுவர்கள்தான் சிவாஜிக்கு பால்ய நண்பர்கள். இவர்கள் அனைவருக்கும் தாதாஜிகாண்டதேவ் தான் ஷாஹாஜியிடம் சேவையாற்றியபோது புரிந்த வீரப்போர்களைப் பற்றியும், காடுகள், மேடுகள், பள்ளத்தாக்குகள் பற்றியும் எடுத்துரைத்தார்; பயிற்சியும் தந்தார்.

தாதாஜி காண்டதேவ் சிறந்த படிப்பாளர். பிராமண

குடும்பத்தைச் சேர்ந்தவர். ‘தியான தேவருடைய மார்க்கக் கொள்கைகளையும் பண்டரிபுரத்திலுள்ள கவி பக்தர்களின் போதனைகளையும் சிவாஜிக்குப போதித்தார். பாண்டவருடைய அரும்பெரும் செய்கைகளைப் பற்றியும், இராமர் சீதையைத் தேடி வனஞ்சென்ற கதையையும் வடமொழியில் இருந்துமொழிபெயர்த்து சிவாஜிக்குப் போதித்தவர் தாதாஜி.

வீரமூட்டியவர் தாயாரா? தாதாஜியா?

சிவாஜியின் தாயாராகிய ஜீஜாபாய் , “தான் உதயபுரி சானாவின் மரபில் உதித்தவன் என்றும், தனது தந்தை வழியாக தேவகிரி யாதவ மன்னர்களின் மரபில் தோன்றியவள்” என்பதையும் சிவாஜிக்கு தனது குலப் பெருமையை எடுத்துக் கூறி வந்தாள், தனது மகனை தெய்வபயமுள்ள பிள்ளையாக வளர்க்க விரும்பி சிவாஜியை அடிக்கடி கோவிலுக்கு அழைத்துச் செல்வார். கிராமக் கோவிலில் கதாப் பிரசங்கம் செய்பவர்களையும், புராணிகர்களையும் வரவழைத்து, வெகு தெளிவாக கிருஷ்ணரின் சிறந்த குணங்களை இதிகாசங்களிலிருந்து மொழி பெயர்த்து விளக்கிக் காட்டிட ஏற்பாடு செய்தார்.

சிவாஜிக்கு இளமையில் பயிற்சி அளித்தது - சிறந்த பிராமணரான தாதாஜி மற்றும் கோவில் குருக்கள்தான். ஆனால் இன்று என்ன சொல்லிக் கொடுக்கப்படுகிறது பள்ளிக்கூடங்களிலே, கலாசாலைகளிலே ‘சிவாஜியின் தாயர்தான் சிவாஜிக்கு வீரக் கதைகளை ஊட்டி வளர்த்தார் என்று. அடிப்படையிலே உள்ள இந்த விஷயத்தைக்கூட வரலாற்றிலே மாற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

கோட்டைகளைக் கைப்பற்றிய கயமை

பூனாவிற்கு இருபது மைல் தொலைவில் கற்களால் ஆன கரடுமுரடான கோட்டை ஒன்று பிஜப்பூர் அரசுக்குச் சொந்தமாக இருந்தது. கணவாயைப் பாதுகாக்கும் பொருட்டு அங்கு மடை வைக்கப்பட்டிருந்தது. மழைக் காலத்தில் பெருமழைப் பொழிவதால் ‘தோரண’ மென்ற அந்தக் கோட்டையில் படை வீரர்கள் தங்குவதில்லை. முஸ்லிம் படைத் தலைவருடன் படை வீரர்கள் குளிருக்குப் பயந்து பள்ளத்தாக்கில் சென்று தங்குவார்கள்.

யாரும் போகாத நேரத்தில், ஆளில்லாத வேளையில் மாவீரர் சிவாஜி ஈஸாஜிகங், தானாஜிமாலுசரே, பாஜி பாஸல்க்கார் ஆகியோருடன் ஆயிரக்கணக்கான மலைவாசிகளையும்

அழைத்துக் கொண்டு தோரணக் கோட்டையைக் கி.பி.1646-ல் கைப்பற்றிக் கொண்டார். (பிச்சைக்காரர்கள் வேடத்தில் இருவரை அனுப்பி, உளவறிந்து கோட்டையில் பாதுகாப்பு குறைவாக இருப்பதைக் கண்டு, திடீர் தாக்குதல் நடத்தி கோட்டையைக் கைப்பற்றியதாக இப்போதைய வரலாற்றில் சொல்கிறார்கள்).

ஏமாற்றுத் தந்திரம்

பிஜப்பூர் சுல்தான் நோய்வாய்ப்பட்டு இருந்ததால் உடனே சிவாஜி மீது நடவடிக்கை எடுக்கவில்லை.

முஸ்லிம் தளபதியோ வெகு வெகுளியுடன் இதனை அரசருக்கு எழுதினார். சிவாஜியோ,

‘தோரணக் கோட்டையின் தளபதி மிகச் சோம்பேறி. அமைதியான காலத்திலேயே கோட்டையைப் பாதுகாக்க இயலாதவர். எனவே, அவரைநீக்கிவிட்டு புதிய தளபதியை நியமியுங்கள்’ என்று ஆலோசனையோடு கூடிய கடிதத்தை பிஜப்பூர் அரசருக்கு எழுதினார். இதன் விளைவு என்ன தெரியுமா? பிஜப்பூர் முஸ்லிம் தளபதி நீக்கப்பட்டு, சிவாஜி அநத இடத்திற்குப் பொறுப்புக்கு வந்தார். அதோடு தோரணத்தைச் சுற்றியிருந்த நிலங்களுக்குப் பெரும் பகுதித்தொகையை தான் கட்டுகிறேன் என்று பிஜப்பூர் அரசரிடம் வாக்குக் கொடுத்ததால், அந்த இடங்களையம் பெற்றுக் கொண்டார். ஏற்கனவே தந்தையார் கொடுத்த இடமும் சேர்ந்திருந்தது.

தாதாஜியின் மறைவு

‘தோரண’க் கோட்டையிலிருந்து ஆறு மைலுக்கப்பால் உள்ள ‘மூறும் தேவா’ என்ற குன்றைப் பிடித்துக் கொண்டு ‘ராஜ்கடம்’ என்று பெயர் மாற்றி, அதனைக் கோட்டையாகவும் சிவாஜி ஆக்கிக் கொண்டார்.

இத்துஷ்டச் செயல் தாதாஜி காண்டதேவுக்குக் கூடப் பிடிக்கவில்லை. சிவாஜியின் இந்தச் செயல் அவரை சற்றுக் கோபப்படுத்திவிட்டதென்றே சொல்ல வேண்டும். தாதாஜி (சிவாஜியின் குருநாதர்) தன்னுடைய சிஷ்யனான சிவாஜியின் பேரில் அன்பு பூண்டவர். எனினும் இத்தகைய துஷ்ட வழிகளில் சென்றுவிட்டாரே என்று அவர் மனம் நொந்தவரானார். சிவாஜியைக் கடிந்து கொண்டார். அது வீண் என்று கண்டதால் சிவாஜியின் தந்தை ஷாஹாஜிக்கு விஷயத்தை எழுதி அனுப்பினார். தந்தையுடைய பதில் தாதாஜிக்கு திருப்தி அளிக்கவே இல்லை. பாவம், வயோதிகரான தாதாஜி

கவலையினால் நோய்வாய்ப்பட்டு அதனால் 1647 மார்ச் ஏழாம் நாள் மறைந்தார்.

தாதாஜி இறந்ததற்குப் பின், ஷாஹாஜியின் பாதி பாகத்தைச் சேர்ந்த சூபாக்களுக்கு சிவாஜி சொந்தம் கொண்டாடினார்.

சிவாஜியின் தந்தையின் இரண்டாவது மனைவியான துர்க்காபாயின் சகோதரர் சாம்பாஜி மோஹயிட், சிவாஜியிடம், 'நீ உனது அப்பாவிடமிருந்து கடிதம் கொண்டு வந்தாலொழிய உனக்கு இங்கு சுதந்திரம் உண்டென்பதை அங்கீகாரம் செய்ய மாட்டேன்' என்று எதிர்ப்புக் குரல் கொடுத்தார்.

சாம்பாஜி மோயிட்டின் படுக்கை அறைக்குள் நுழைந்து அவரது காவலாட்களின் உதவியாலேயே சிறைப்பிடித்து பெங்களூருக்கு அவரை அனுப்பிவிட்டார் சிவாஜி.

தக்காண சொத்தின் அதிபதி

பாராமதி, இந்துப்பூர் பட்டணங்களில் இருந்த அதிகாரிகள் சிவாஜியை எதிர்க்கத் துணியவில்லை. எனவே தனது தந்தையின் தக்காணச் சொத்திற்கு தானே அதிபதியானார் சிவாஜி.

பூனாவிற்கு வடக்கே இருந்த 'சாகன்' என்ற கோட்டை 'நர்சலா' என்பவரின் பொறுப்பில் இருந்தது. முஸ்லிம்அரசுக்கு விரோதமாக செயல்பட்டதால், அரசுக்குப பயந்து நர்சலா தலைமறைவானபோது அந்தக் கோட்டையையும் சிவாஜி தனது ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வந்து விட்டார்.

இலஞ்சத்தால் பெற்ற கொண்டா கோட்டை

எஞ்சிய ஒரே ஒரு கோட்டை, கோட்டைகளில் எல்லாம் சிறந்ததான புரந்தர் கோட்டை ஒன்றுதான். பூனாவிற்குத் தென்கிழக்கே 18 மைல் தொலைவில் அமைந்திருநத புரந்தர் கோட்டை பிஜப்பூர் அரசருக்கு உரியது. 'மகத்ஜி' என்னும் பிராமணர் அதனை நிர்வகித்து வந்தார். இனாம் கிராமத்திலே அந்தக்கோட்டை இருந்ததால் அதில் கிடைக்கும் வருவாயைக் கொண்டு அந்த பிராமணர் வாழ்ந்து வந்தார். அவர் இறந்த பிறகு, அவரது பிள்ளைகள் மூன்று பேரில், மூத்தவரான 'நிலோஜி' தன் தம்பியர் இருவருக்கும் கிராமத்தின் வருவாயைப் பங்கிட்டுக் கொடுக்க முன்வரவில்லை. இதனால் மூன்று சகோதரர்களுக்கிடையில் சச்சரவு மூண்டது.

இந்தக் கோட்டையின் மீது ஒரு கண் வைத்திருந்த சிவாஜி, அந்தக் கோட்டைக்குரிய மூன்று சகோதரர்கள்

சண்டையிடுவதைத் தெரிந்து கொண்டு, நிலோஜியிடம் தான் புரந்தர்கோட்டை அடிவாரத்தில் தங்க விரும்புவதாகவும், அதற்கு அனுமதியளிக்குமாறு அனுமதி வேண்டிப் பெற்றுக் கொண்டு, புரந்தர்கோட்டையின் அடிவாரத்தில் சென்று தங்கினார்.

நம்பிக்கைத் துரோகம்

நிலோஜியின் சகோதரர்கள் இருவரும் சிவாஜியை அணுகி தங்களுக்கும், தங்கள் அண்ணனுக்கும் சொத்து விஷயமாகத் தகராறு இருப்பதைத் தெரிவித்து அதனைத் தீர்த்து வைக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

மழைக்காலத்தில் பாமர மக்கள் கூரைகள் மேய புற்கட்டுகள் எடுத்துச் செல்வதைப் பார்த்த சிவாஜி தனது வீரர்களைப் புற்கட்டுகள் சுமந்து செல்லும் கோலத்தில் கோட்டைக்குள் அனுப்பி அதன்மூலம் ஆயுதங்களைக் கோட்டைக்குள் கொண்டு சென்று, தூங்கிக் கொண்டிருந்த நிலோஜியைக் கைது செய்து சிறைப்படுத்தினார். தமையனைக் காட்டிக் கொடுத்த சகோதரர்கள் இருவரையும் சிறையில் அடைத்தார். பின் தனது படையில் அவர்களை வீரர்களாகச் சேர்த்துக் கொண்டார். மூவரையும் ஏமாற்றிய சிவாஜி தந்திரமாகக் கோட்டையைப் பிடித்துக் கொண்டு, கோட்டையில் பறந்து கொண்டிருந்த பிறைக் கொடியை இறக்கிவிட்டு, காவிக் கொடியை ஏற்றினார். சொட்டு ரத்தம்கூடச் சிந்தாமல் புரந்தர் கோட்டை சிவாஜிக்குக் கிடைத்தது.

சதிகளால் பெற்ற ஜாவுளி

மோரே குடும்பத்தைச் சேர்ந்த மராத்தியர்கள் ஆண்டு வந்த மலைப்பாங்கான பிரதேசம் ஜாவுளி. பிஜப்பூர் அரசருக்குச் சொந்தமான இந்தப் பிரதேசத்திற்கு மோரே குடும்பத்தாரைப் பாளையக்காரர்களாக்கி அதை நிர்வகிக்கும் பொறுப்பு முழுவதையும்அவர்களிடமே விட்டு விட்டது பிஜப்பூர் அரசு.

செழிப்பாகவும், வசதியாகவும் உள்ள இந்தப் பிரதேசத்தை அபகரிக்க சிவாஜி முயன்றார். ஜாவுளிப் பிரதேசத்து அதிபதி சந்திரராவ் என்பவரைக் கொலை செய்யாதவரை தமது விருப்பம் நிறைவேறாது என்பது அறிந்த சிவாஜி அந்தக் கொலைச் செயலுக்கு ரகுநாத் பலால் கொர்ரே என்பவரை அனுப்பிவைத்தார்.

உரையாடலும் உயிரை வாங்கலும்

முதல்நாள் நட்புறவுடன் உறவாடிவிட்டுத் திரும்பிய ரகுநாத்

பலால் கொர்ரே, மறுநாள், சந்திரராவ் கவனக் குறைவாக இருந்த சமயத்தில் அவரைக் குத்து வாளால் குத்திக் கொன்றுவிட்டு காட்டுக்குள் தப்பி ஓடினார். உடனே, திட்டப்படி, 1656-ல் ஜாவுளி பிரதேசத்தின் மீது சிவாஜி பேர் தொடுத்தார். சந்திரராவின் உறவினரான சந்திராவ் மோர்ரே என்பவர் படை திரட்டி சிவாஜியை எதிர்த்து நின்றார்.

அவரையும் தந்திரமாக ஒழித்துக்கட்ட விரும்பிய சிவாஜி ஹனுமந்தராவின் புதல்வரின் திருமணம் குறித்துப் பேசிட, தன் அதிகாரி சம்பூஜீ கவிஜி என்பவரை அனுப்பி வைத்து, திருமணப் பேச்சுப் பேசுவதுபோல் நடித்துக் கொண்டிருக்கும்போதே அவரையும் குத்திக் கொன்றார்கள்.

ஜாவுளி பிரதேசம் சிவாஜி கைவசமாயிற்று-

வரலாற்றின் நடுநிலையாளர்களே, அற நோக்குக்குப் புறம்பாக, நெறி தவறிய வழியில் சென்று நயவஞ்சகமாக கொலை, கொள்ளை அத்தனையும் செய்து, மோசடிகளால் தனது ஆதிக்கத்தை வளர்த்துக் கொண்ட சிவாஜியின் செயல்களுக்கு நீங்கள் தரப்போகும் பதில் என்ன?

புதிது புதிதாக வஞ்சகமாகப் பல கோட்டைகளைக் கைப்பற்றி தனது ஆதிக்கத்தைப் பெருக்கிக் கொண்ட சிவாஜி, அவைகளைப் பராமரிக்கப் பணத்திற்கு என்ன செய்வது என்று யோசிக்க ஆரம்பித்தார்.

கணவாயில் பெற்ற பொக்கிஷம்

கொள்ளையடிப்பதைத் தவிர வேறு வழியேது?

கொள்ளையடிக்கத் துவங்கினார்.

‘தானா’ ஜில்லாவின் ‘கல்யாணி’ என்பது செல்வந்தர்கள் நிரம்பிய பட்டணம். முல்லணா ஆமது என்ற முஸ்லிம் அதிபதியின் பொறுப்பில் அது இருந்தது. அவர் விதிப்படி சேகரிக்க வேண்டிய சர்க்கார் கிஸ்திப் பணத்தைச் சேர்த்து பிஜபூரத்திற்கு அனுப்புவது வழக்கம். அப்படிப் பொக்கிஷங்களை ஏற்றிய வண்டிகள் கொங்கணத்திற்குச் செல்கிறபோது போர் (ஙிலீஷீக்ஷீ) என்னும் கணவாய் வழியாய் பூனாவிற்குப் போய் திடீரென வழிமறித்து வண்டிகளைத் தாக்கி எதிர்த்து நின்ற அதிகாரிகளை வெட்டி வீழ்த்தி, சிவாஜி அந்தப் பொக்கிஷத்தைக் கைப்பற்றினார்.

கடிதமும் விடுதலையும்

ஆத்திரம் கொண்ட பிஜப்பூர் அரசர் கோபம் கொண்டார்.

தன்னிடம் உயர்ந்த சேவகம் புரியும் ஷாஹாஜியின் புதல்வரான சிவாஜி, இபபடி துர்நடத்தையில் ஈடுபடுகிறானே என்று உடனே பிஜப்பூரத்திற்கு வரச் சொல்லி கடிதம் எழுதினார். சிவாஜி வர மறுத்தார். தந்தை ஷாஹாஜியின் வேண்டுகோளையும் புறக்கணித்து ஒதுக்கினார். இந்த சந்தர்ப்பத்தில் ஷாஹாஜியை பிஜப்பூர் அரசர் காவலில் வைத்தார்.

தந்திரத்தையே முழுச் சொத்தாக வைத்துக் கொண்டிருந்த சிவாஜி, முகலாயச் சக்கரவர்த்தி ஷாஜகானுக்கு கடிதம் எழுதினார். தனது குமாஸ்தாவான ரகுநாத பந்துலுவை டில்லிக்கு அனுப்பினார். “முகலாயப் பேரரசின் கீழ் நாங்கள் பணியாற்றுகிறோம். எங்களைக் காப்பாற்றுங்கள்” என்றுச் சொல்லி அனுப்பினார். முகலாய மன்னரும் ஷாஹாஜியை பிரபுவாகவும், சம்பாஜியை அவரது சேவையிலும் நியமித்து, கௌரவ அங்கியையும் அனுப்பி வைத்தார். சிவாஜி முகலாயப் பேரரசின் ஆதரவைப் பெற்றுக் கொண்ட நிலையில், பிஜப்பூர் அரசர் மேல் நடவடிக்கை எடுக்காது நின்றார். ஷாஹாஜியை விடுதலை செய்தார். இதிலும் உண்மை மாற்றப்பட்டுள்ளது.

ஜாதுநாத் சர்க்கார்

முகலாய மன்னர் ஷாஜகானின் தலையீட்டால் ஷாஹாஜி விடுதலை செய்யப்படவில்லை என்றும், அவர் சிறைப்படுத்தப்பட்ட காரணம், செஞ்சிக் கோட்டை முற்றுகைக்கு தளபதி முஸ்தாபாகான் சென்றிருந்த போது, அவருடன் சென்ற ஷாஹாஜி நடித்துக் கொண்டே இருந்த நிலையில் ஊர் திரும்ப முடிவெடுத்ததாகவும், அதனால் முற்றுகைப்போர் பாதிக்கும் என்பதால், ஷாஹாஜியைக் கைது செய்ததாகவும், பாஜிராவ் கோர்பாரே, ஜஸ்வந்த்ராவ் அஸ்வத்கானி ஆகிய இரு இந்து வீரர்களே ஷாஹாஜியைச் சிறைப்பிடித்தனர் என்றும், நடைபெற்ற போர்களில் மராத்தியப் படைகளிடம் பிஜப்பூர் படைகள் தோற்றுப்போன நிலையில் ஷாஹாஜியை பிஜப்பூர் அரசர் விடுதலைசெய்தார் என்றும், ஷாஹாஜி அடைந்த விடுதலை பேரரசர் ஷாஜகான் தலையீட்டினால் கிட்டிய விடுதலை அல்ல என்றும் ஜாதுநாத் சர்க்கார் தெரிவிததிருக்கிறார். அந்த விவரத்திற்குள் செல்லாது விசயத்தைத் தொடர்கிறேன்.

ஔரங்கஜேப்பின் பிஜப்பூர் முற்றுகை

பிஜப்பூர் சுல்தான் நெடுங்காலம் நோய்வாய்ப்பட்டு கி.பி.1636 நவம்பரில் இறந்தார். அவரது மகன் இரண்டாம் ஆலி ஆகிஷா அரசரானார். அரசியல் அனுபவம் இல்லாத பத்தொன்பது வயதே

நிரம்பிய அவரால் திறமையாக அரசை நிர்வகிக்க முடியாத நிலை ஏற்பட்டது. இளவரசர் ஔரங்கஜேப் பிஜப்பூருடன் பேர் தொடுத்தார். பிஜப்பூரை ஒழித்துக் கட்ட இதுவே தருணம் என்று கருதிய சிவாஜியும் ஔரங்சீப்புக்கு ஆதரவாகவே நடந்து கொண்டார். தன்னிடம் படைபலம் இல்லை. மொகலாயப் படைகளோடு மோத முடியாது என்று ஒதுங்கிக் கொண்டார் சிவாஜி.

திறமையாக ஔரங்கஜேப் முற்றுகையிட்டபோது, மொகலாய அதிகாரிகள் கவனக்குறைவாக இருந்தபோது, மொகலாயப் படைகளின் ஆயிரம் குதிரைகளை நயவஞ்சகமாக சிவாஜி அபகரித்துக கொண்டார். ஔரங்கஜேப் இதுகுறித்து ஆத்திரங் கொண்டார். மேல் நடவடிக்கை எடுக்கும் வேளையில், டில்லியில் ஷாஜகான் உயிருக்குப் போராடுவதாலும், வாரிசுகளிடையே போட்டி ஏற்பட்டதாலும், ஔரங்கஜேப் பொறுப்புக்களை அதிகாரிகளிடம் விட்டுவிட்டு டில்லிக்கு விரைந்தார்.

(காலச் சூழ்நிலை அன்று அப்படி அமைந்தது. பிஜப்பூரிலேயே ஔரங்கஜேப் சில காலம் தங்கியிருக்கும் நிலை ஏற்பட்டிருந்தால் பிஜப்பூர் தளபதி அப்ஸல்கான் ஒரு வேளை சிவாஜியை ஆரம்பத்திலேயே முழுவதுமாக அடக்கியிருக்கக் கூடும்.)

கவர்னர் பதீகான்

கொங்கான் பிரதேசத்தின் வடபகுதி போர்த்துக் கீசியர்களிடமும், மெகலாயர்களிடமும் இருந்தது. நடுப்பகுதியில் ‘கல்யாண்’ முல்லா அஸ்மதுவின் பொறுப்பில் இருந்தது. மற்றொரு பாளையமான ஜாஞ்சீரா சித்திகளின் பொறுப்பில் இருந்த பகுதி என்பதை அறிந்த சிவாஜி, அதனைக் கைப்பற்ற தனது பிரதம மந்திரி சாம்ராஜி ரஞ்சேக்கரை அனுப்பி வைத்தார். ஆனால் அந்தத் தீவின் கவர்னரான பதீகான் சிவாஜியின் படைகளை முறியடித்து வெற்றி பெற்றார். இந்த வெற்றி பீஜப்பூர் அரசருக்கு உற்சாகத்தை அளித்தது. தன்னை எதிர்க்கும் பாளையங்களை அடக்கிட முடிவெடுத்தார். குறிப்பாக சிவாஜியை அடக்கிட அரச சபையில் முடிவெடுத்தார். அப்போது தனது தாயின் (பேகம் சாகிபா) சகோதரி மகனும், தனது தம்பியுமான அப்ஸல்கான் அந்தப் பொறுப்பை நிறைவேற்ற நான் செல்கிறேன் என்று சொல்லி போருக்குப் புறப்பட்டார்.

எத்தனை எத்தனைக் கோட்டைகள், அத்தனையும் நயவஞ்சகமாக, மோசடியாக, நம்பிக்கை துரோகமாக, இலஞ்சம் கொடுத்தவன் மூலமாகப் பெற்றுக் கொண்ட சிவாஜி,

பிஜப்பூர் அரசின் பொக்கிஷங்களைக் கொள்ளையடித்துக் கொண்டு போனார். பிஜப்பூர் அரசரை வீழ்த்தும் முயற்சியில் இறங்கிய நிலையில் சிவாஜியை அடக்க பிஜப்பூரின் அரசரின் சார்பில் அப்ஸல்கான் புறப்பட்டார். அவர் கொல்லப்பட்டது எப்படி? வரலாற்று உண்மைதான் என்ன?

அப்சல்கான் - சிவாஜி சந்திப்பு

மாமன்னர் ஔரங்கஜேப்பிற்கும், மாவீரர் சிவாஜிக்கும் இடையே நடைபெற்ற சரித்திரச் சம்பவங்களுக்கு முன்னர் நடைபெற்ற சரித்திரப் பிரசித்தி பெற்ற கொலை அப்சல்கான், சிவாஜியால் படுகொலை செய்யப்பட்ட விஷயமாகும்.

அப்சல்கானை சிவாஜி படுகொலை செய்தார் என்று மேனாட்டு அறிஞர்கள் அனைவரும் ஏகோபித்தவண்ணமாகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் இந்திய வரலாற்று அறிஞர்களோ இதற்கு நேர்மாறான கருத்தைச் சொல்கிறார்கள். இதில் எது உண்மை?

ஔரங்கஜேப்பின் வரலாற்றில் சிவாஜி முக்கிய இடத்தை வகிப்பது போல சிவாஜியின் வரலாற்றில் அப்சல்கான் முக்கிய இடத்தை வகிக்கிறார்.

பிஜப்பூர் படைத் தளபதி அப்சல்கான்

சிவாஜியை ஒழித்துக்கட்ட ஔரங்கஜேப்பால் அனுப்பி வைக்கப்பட்ட அப்சல்கானை சிவாஜி புலி நகத்தால் வயிற்றைக்கீறிக் கொன்றார் என்பது போல இன்றைய நிலையில் வரலாறு சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

அப்சல்கான் யார்?

அவர் முகலாய படைத்தளபதியே அல்ல!

பின் அவர் யார்?

அப்சல்கான் பிஜப்பூர் அரசரின் படைத்தளபதி.

இதனைக் கூட விரிவாகச் சொல்லாமல், துவேஷத்தை வளர்க்கத் திட்டமிட்டே செயலாற்றிக் கொண்டிருக்கும் கூட்டத்தார் இந்திய வரலாற்றை, குறிப்பாக அப்சல்கான்-சிவாஜி விஷயத்தை எப்படியெல்லாம் திரித்தும், மாற்றியும் சொல்லியிருக்கிறார்கள் என்பதனை நாம் காண வேண்டாமா? அதிலும் இந்திய சரித்திரத்தின் மிகப்பெரிய சரித்திர வல்லுநர்கள் எவ்வளவு தில்லுமுல்லுகளை, சாமர்த்தியமாக நுழைந்திருக்கிறார்கள், செய்திருக்கிறார்கள் என்பதனை நாம்

தெரிந்து கொள்ள வேண்டாமா?

அப்துல்லா பதாரி (Abdulla Batari) என்ற இயற்பெயருடையவர் அப்சல்கான். அனுபவமும் ஆற்றலும் மிக்க தளபதி. உருவத்தில் கம்பீரமானவர். தோற்றத்தில் பருமனாகவும் நெட்டையாகவும் உள்ளவர். பிஜப்பூர் அரசுப் பகுதிகளில் புகுந்து கொள்ளையடித்தும், நயவஞ்சகமாக கோட்டைகளைக் கைப்பற்றியும் வளர்ந்து வந்த சிவாஜியை அடக்குவதற்காக 10,000 படை வீரர்களோடு அப்சல்கான் அனுப்பி வைக்கப்பட்டார்.

துவேஷத்தை வளர்க்கத் தூபம்

இதுவரையில் வரலாற்றில் இருதரப்பினரும் இவ்வாறே சொல்கின்றனர். இதற்குப் பின்தான் மாறுபட்ட செய்திகள்!

அதாவது துவேஷத்தை வளர்க்கத் தூபம் போடுகின்றார்கள்.

‘சிவாஜியை உயிரோடு பிடித்து தன் சொந்தக் குதிரைச் சேணத்தில் கட்டித் தலைநகரத்திற்கு கொண்டு வருவதாக’ அப்சல்கான் வீரப்பிரதாபமாகச் சொல்லிக் கொண்டு கிளம்பினார்’. பிஜப்பூர் ஆதில்ஷா மன்னரிடம் சூளுரைத்தார் என்று சொல்கிறார்கள்.

இதற்கு சரித்திர ஆதாரம் உண்டா? இல்லை, இல்லவே இல்லை.

சிவாஜியை நயவஞ்சகமாகக் கொலை செய்யத் திட்டமிட்டுக் கிளம்பினார் அப்சல்கான் என்று சொல்கிறீர்களே, உங்கள் வாதப்படியே வைத்துக் கொண்டாலும், நயவஞ்சகமாக ஒருவரை வீழ்த்தச் செல்லும் ஒருவர் எப்படி பகிரங்கமாக அறிவித்து விட்டுச் செல்வார்? அப்படியே அறிவித்து விட்டுச் சென்றார் என்றால் அது எப்படி நயவஞ்சகமாக முடியும்? நயவஞ்சகமாகக் கொல்லச் சொல்பவர் 10,000 படை வீரர்களுடன் செல்ல வேண்டியது அவசியமா?

கி.பி. 1659ல் சதாராவிலன் (Satara) வடக்கே இருபது மைல் தூரத்திலிருந்த வைய் (கீணீவீ) என்ற இடத்தைப் பதினைந்து நாள்களுக்குள் அடைந்த அப்சல்கான், சிவாஜி பிரதாப்கர் கோட்டையில் இருந்ததை அறிந்தார். சிவாஜியைத் தாக்கி கைப்பற்ற நினைத்திருந்தால், தம்மிடமுள்ள 10,000 படை வீரர்களுடன் தாக்குதல் மேற்கொண்டு நிச்சயமாக சிவாஜியை பிடித்திருக்கக் வடும். ஆனால் அவ்வாறு அவர் செய்யவில்லை.

கிருஷ்ணாஜி பாஸ்கர்

கிருஷ்ணாஜி பாஸ்கர் என்னும் ஓர் அந்தணரைத் தனது தூதராக சிவாஜியிடம் அனுப்பி வைக்கிறார் அப்சல்கான்.

‘தூதனான கிருஷ்ணாஜி பாஸ்கரை சிவாஜி தனியாக சந்தித்து, அப்சல்கானின் நோக்கம் வஞ்சனையானது என்று தெரிந்து கொண்டார்” என்கிறார்கள்.

அதே நேரத்தில் சிவாஜியின் தூதரான பந்தாஜி கோபிநாத் (Pantaji Gopinath) சிவாஜியை கைது செய்ய அப்சல்கான் திட்டமிட்டு இருக்கிறார் என்று தகவல் சொன்னார் என்கிறார்கள்.

இதிலே எழுகிற கேள்வி என்ன தெரியுமா? அப்சல்கானுக்கும் கிருஷ்ணாஜி பாஸ்கருக்கும் மட்டுமே தெரிந்ததாகச் சொல்லப்படும் நயவஞ்சகத் திட்டம் சிவாஜியின் தூதரான பந்தாஜி கோபிநாத்திற்கு எப்படித் தெரிந்தது?

அடுத்து சரித்திரத்தைத் தொடர்வோம். சிவாஜியின் தூதர் அப்சல்கானிடம் பதினைந்து நாட்களுக்குப்பிறகு தன்னைச் சந்திக்க வரவேண்டும் என்று சிவாஜி சொல்லியனுப்பியதாகச் சொல்கிறார்.

இந்த பதினைந்து நாட்களில்தான் சிவாஜி தனது படைகள் செல்ல பாதை அமைத்தார். தற்போது ‘பம்பாய் புள்ளி’ என்றழைக்கப்பட்டு வரும் பெரும்பாதையாய் ‘ராத் தோண்டி’ என்ற குன்றின் மேல் ஏறி வரத்தக்க வகையில் புதிதாக ஏற்பாடு செய்தார். வேண்டிய உணவுப் பொருட்களைச் சேர்த்து வைத்துக் கொண்டார்.

‘அப்சல்கானோ, தன் பலத்தையும் இராணுவ பலத்தையும் நம்பிக் கொண்டு, சிவாஜி அனுப்பிய அழைப்பைத் தாமதமின்றி ஏற்றுக் கொண்டு, ராத்தோண்டி வழியாக மகா பலேஷ்வரம் பீடபூமியைக் கடந்து பிரதாப்கரின், அடிவாரத்திலுள்ள பார் என்ற சிறு கிராமத்தை அடைந்தார். அடுத்த நாள் சிவாஜியும் அப்சல்கானும் சந்திக்க வேண்டிய தினம்.

பிரதாபகோட்டை மதில்களிலிருந்து கால்மைல் தூரத்துக்கப்பால் மலை சார்பிலுள்ள ஓர் இடத்தில் சந்திப்பதற்கென்று கூடாரம் ஒன்று போடப்பட்டிருந்தது. அதில் விலை உயர்ந்த கம்பளங்கள் விரிக்கப்பட்டிருந்தது. அழகிய தொங்கு திரைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

இது அப்சல்கான் இருந்த இடத்தில் நடந்த ஏற்பாடுகள்.

சிவாஜி என்ன ஏற்பாடுகளைச் செய்தார் தெரியுமா?

சேனையைத் தாக்க ஆணை

தனது தோழர்களான தானாஜி, பீங்களே, நேந்தாஜி பால்கார் ஆகிய மூவரிடமும் அப்சல்கானின் சேனைகள் தப்பி ஓடிவிடாதபடி தடுப்பதற்காக அந்த சேனைகளுக்குப் பின்னும், இரு பக்கங்களிலும் மகாராஷ்டிரப் படைகளை திரட்டி வைக்கும்படி கட்டளையிட்டார். அத்துடன் சங்கினால் தான் எக்காளம் ஊதினவுடனே அப்சல்கானின் சேனையைத் தாக்கிச் சின்னாபின்னப் படுத்த வேண்டுமென்றும் சொன்னார்.

அதுமட்டுமா? ஒரு வேளை தான் இறந்து போனால் தனது குமாரன் சம்பாஜி வயதுக்கு வருகிற வரையில் நேத்தாஜி பால்க்கார் தனது இராஜ்யத்தை பிரதிநிதியாக இருந்து ஆளவேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

கடைசியாக தன் தாயாரிடம் சென்று ஆசிபெற்றார். அவர்களும், “மகனே உனது தமயனைக் கொன்ற அப்சல்கானை, அந்தப் பாவத்திற்காகப் பழிவாங்கு’ என்று சொல்லி ஆசீர்வதித்து அனுப்பி வைத்தார்கள்.

பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் சிவாஜி

சிவாஜி எஃகு வளையங்களால் செய்யப்பட்ட ஒரு கவசத்தை அணிந்து கொண்டார். அதற்கு மேல் தங்க சரிகை நிறைந்த மேலங்கி ஒன்றைப் போட்டுக் கொண்டார் தலைமேல் உருக்குக் குல்லாவைத் தரித்து அதைச் சுற்றி தலைப்பாகையைக் கட்டிக் கொண்டார். தன் இடது விரல்களில் யாரும் காண முடியாத புலிநகம் (Bag Nakh) போன்ற இரும்பு ஊசிகளை, கீழே விழாமல் இருக்க தனது விரல்களில் அணிந்திருந்த இரண்டு மோதிரங்களில் அதை இணைத்திருந்தார். தன் சட்டையின் வலது கைக்குள், தேள் அல்லது ‘பிச்சு’ என்ற சிறிய குத்து வாளை மறைத்து வைத்துக் கொண்டார்.

ஜீவபா மஹாலா, சாம்பாஜி காவாஜி, பேர் தெரியாத இன்னொருவனுடன் சிவாஜி வருகிறார். காலாட்படையினருடன் அப்சல்கான் வருகிறார். சிவாஜி தரப்பில் மூன்று பேர்கள் தான் இருக்கிறார்கள் என்பதை அறிந்ததும், தானும் மூவரை மாத்திரம் வைத்துக் கொண்டு மற்றவர்களை அனுப்பி விடுகிறார் அப்சல்கான்.

உடனே சிவாஜி, அப்சல்கானுடன் வரும் பிரபல வாள் வீச்சக்காரரான ஸையத் பந்தனை அனுப்பி விடவேண்டும் என்றும், தானும் ஒருவரை அனுப்பி விடுகிறேன் என்றார். அதற்கும் அப்சல்கான் ஒத்துக் காண்டார். இருவரும்

சந்திக்கிறார்கள். இதற்குப் பிறகும் இருவரும் “கட்டித் தழுவுகிறபோது, அப்சல்கான் சிவாஜியைக் கொல்ல முயன்றார். உடனே சிவாஜி சுதாரித்துக் கொண்டு அப்சல்கானை புலி நகத்தால் வயிற்றைக்கீறிக் கொன்றார்.”

என்று இந்திய வரலாற்றில் இந்து - முஸ்லீம் நல்லிணக்கத்திற்கு விரோதமாக துவேஷத்தை வளர்க்கும் வகையில் வரலாற்றைத் திரித்து கூறுகிறார்கள். கூறி வருகிறார்கள்.

அப்சல்கான் சிவாஜியைக் கொலை செய்ய முயன்றாரா? அல்லது அவர் சிவாஜியால் கொலை செய்யப் பட்டாரா?

அப்சல்கான் கொலை

“கடைசியில் தக்காணத்தில் உள்ள பெரிய பட்டாணிய விஜயபுரியின் அதிபதியானவன் தன் கிராமங்களில் சிவாஜி கொள்ளைடித்தானென்று கேள்வியுற்று அவனை எதிர்த்துப் போர்புரியுமாறு அப்சல்கான் என்னும் தலைவனை ஒரு படையுடன் அனுப்பினான். ஆனால் சிவாஜி அப்சல்கானைக் கொன்று அவனுடைய படையையும் துரத்தி விட்டான்.”

மேற்சொன்ன வரிகள் முஸ்லீம் எழுத்தாளர்களால் எழுதப்பட்டதல்ல.

மாக்மில்லன் கம்பெனியார் 1923-ல் பத்தணா விலையில் வெளியிட்ட (E/ MARSDAN) என்பார் எழுதிய ‘இந்துதேச கதாமஞ்சரி’ நூலில் பக்கம் 108, 109-ல் சொல்லியுள்ள வாசகங்களைத்தான் அப்படியே தந்துள்ளேன்.

ஆனால் ‘இன்றைய நிலை என்ன?’ இந்தியாவில் இளம் சிறார்களுக்கு பள்ளி மாணவர்களுக்குப் போதிக்கப்படும் பாடத்தில் சொல்லிக் கொடுக்கப்படுவது என்ன?

மனதிலே எடை போடுங்கள்

வி. மரிய அந்தோணி எழுதிய ‘சிவாஜி’ நூல் என்றாலும், வித்வான் ந. சுப்பிரமணியனின் ‘வீர சித்திரங்கள்’ ஆனாலும், டாக்டர் பூவண்ணனின் ‘சிவாஜி கதைகள்’ ஆனாலும், நாரண துரைக்கண்ணனின் ‘மகாராஷ்டிர சாம்ராஜ்ய ஸ்தாபகர் சிவாஜி மகாராஜா’ நூல் ஆனாலும், அ. லெ. நடராஜனின் ‘வீர சிவாஜி’ நூல் ஆனாலும் அதிலே சொல்லப்படுவது,

‘சிவாஜியை அப்சல்கான் வஞ்சனையாக கொல்ல முயன்றபோது, அதனைத் தடுக்கவே சிவாஜி அப்சல்கானைக் கொன்றார்’ என்கிறார்கள்.

வரலாற்றின் பின்னே கொஞ்சம் செல்வோம்! வரலாற்று நடுநிலையாளர்களே, உங்களின் சிந்தனைக்கு கீழ்கண்ட செய்திகளை வைக்கிறேன். நீங்களே முடிவுக்கு வாருங்கள். யார் யாரைக் கொன்றார்கள்? என்று! யார் நயவஞ்சகர் என்று! உங்கள் மனதிலே எடைபோட்டுப் பாருங்கள். இதோ வருகிறேன். விஷயங்களை அப்படியே தருகிறேன்.

ஜி.யூ.போப்

லாங்குமன்ஸ் புத்தக சங்கத்தார் பாடசாலைகளுக்காக பிரசுரம் செய்த, 'இந்து தேச சரித்திரம்'. இஃது ஆக்ஸ் போர்டு ஸர்வ கலாச்சாலையில் டி.டி.விருது பெற்று, சில காலம் சென்னை ராஜதானி கலாசாலையில் அத்தியட்சராயிருந்த ரெவ. ஜி.யூ.போப்பு அவர்களால் இயற்றிய ஆங்கில பிரதியின் மொழி பெயர்ப்பு, எஸ்.பி.சி.கே பிரஸ் வேப்பேரியில் கி.பி. 1895-அச்சிடப்பட்டது. அதில் பக்கம் 124-ல் வரும் வரிகள் இதோ,

அப்சல்கானைக் கபடமாகக் கொலை செய்தது **1659**

"1659-ல் பீஜாபுர துரைத்தனத்தார் சிவாஜியின் கொழுப்பை அடக்கப் பிரயத்தனப்பட்டார்கள். அந்த முயற்சியையும் சிவாஜி தனது தந்திரத்தினால் வீணாக்கி விட்டான். அந்த மோசச் செய்கை மகாராட்டிரா சரித்திரத்தில் மிகப் பிரசித்தமானது. அதாவது அப்சல்கானை கொலை செய்ததாம்.

சிவாஜி தான் மிகுந்த வணக்கமுடையவனாக வேஷம் போட்டதைப் பார்த்து மோசம்போய் அப்சல்கான் என்னும் உத்தியோகஸ்தன், பிரதாபகடிக்குச் சமீபத்தில் அப்போது சிவாஜி வசித்துக் கொண்டிருந்த ஒரு காட்டுப் பிரதேசம் போய்ச் சேர்ந்தான். பிறகு சிவாஜி அப்சல்கானுடைய தூதரான ஒரு பிராமணனுக்குப் பரிதானங்கள் கொடுத்து தான் கலந்து பேசவேண்டுமென்று அக்கோட்டையின் கீழ் ஓரிடத்திற்கு வந்த உத்தியோகஸ்தனை வரும்படி போதிக்கச் செய்தான். அவ்விடத்திலிருந்த காடுகளெல்லாம் இதற்காக வெட்டி சீர்படுத்தப்பட்டன. துர்பாக்கியனும், சுயபுத்தியில்லாதவனுமான அப்சல்கான் அந்த போதனையைக் கேட்டு அவ்விடம் போய்ச்சேர சிவாஜி ஆசைப் பெருக்கினால் அணைத்துக் கொள்பவன்போல அப்சல்கானை ஒரே கட்டாகக்கட்டி பரலோகமனுப்பி விட்டான்'

இந்த வரிகள் ஜி.யு. போய் கூறியுள்ள வாசகங்கள்.

ஆனால் இன்று அதற்கு நேர் மாற்றமாக பாடங்கள் போதிக்கப்படுவதுடன், இந்துக்களும்,

முஸ்லீம்களுக்குமிடையே துவேஷ உணர்வை வளர்க்கும் நோக்கத்தில் சில சதிகாரக் கும்பல்கள், அப்சல்கான் வஞ்சனையாக சிவாஜியைக் கொல்ல முயன்றதாகவும், தற்காப்பிற்காக வீர சிவாஜி, அப்சல்கானை கொன்றதாகவும் உண்மைக்கு மாறாக எழுதியும், பேசியும் வருகிறார்கள். இது நியாயமா? சரிதானா?

குமாரசாமி நாயுடு

கி.பி. 1915-ல் சி. குமாரசாமி நாயுடு சன்ஸ் 5 அணா விலையில் வெளியிட்ட 178 பக்கங்களைக் கொண்ட 'சிவாஜி' என்ற நூலில் பக்கம் 8-ல்

'சிவாஜியும், அப்சல்கானும்' என்ற தலைப்பில், சிவாஜி அவனுக்கு (அப்சல்கானுக்கு) அதிக வணக்கமாக வந்தனஞ் செய்து தன் துர்நடத்தைக்காக மிகத் துயரமுற்றதாகச் சொல்லி அன்பாகப் பேசும்படி அப்சல்கானைத் தனிப்பட வரக்கேட்டுக் கொண்டான். அப்சல்கானைச் சந்தித்தபோதே சிவாஜி அவனைக் குத்தி கொன்று போட்டான்.

இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. 1915-ல் இப்படிச் சொல்லப்பட்ட சரித்திரத்தை இன்று ஏன் மாற்றி எழுத முற்படுகிறீர்கள்?

மரகதவேலு-அருணகிரிநாதர்

மதுரை இ.மா.கோபாலகிருஷ்ணக்கோன் பதிப்பித்த தொண்டை மண்டலம் துளுவ வேளாளர் உயர்நிலைப்பள்ளி தமிழாசிரியர்கள் இ.என். மரகதவேலு, எஸ்.எஸ். அருணகிரிநாதர் இருவரும் கூட்டாகச் சேர்ந்து எழுதி 1939-ல் பத்தரை அணா விலையில் வெளிவந்த சென்னை மாகாண பாடநூல் கமிட்டியார் ஒப்புக் கொண்ட, 'ஔரங்கஜோப்' என்னும் நூலில் பக்கம் 47-ல் கூறியிருப்பது இதோ'

"தாம் குறித்த மண்டபத்தில் வீற்றிருந்த அப்சல்கானைக் கண்ட சிவாஜி கண்ணீர் விட்டு அழுது, மிகப் பயந்தவர் போல் பாசாங்கு செய்து வெகு வினயத்துடன் அவனுக்குச் சலாம் செய்கையில், பிஜப்பூர் சுல்தானிடம் தான் சொல்லிவந்த சபதம் நிறைவேறும் காலம் நெருங்கிற்று என்றும் இறுமாப்புக் கொண்டு ஒருவாறு சந்தோஷத்தால் தன்னையே மறந்திருந்த அப்சல்கானை சிவாஜி திடீரெனத் தம் கையில் மறைத்து வைத்திருந்த புலி நகம் என்னும் ஆயுதத்தால் குத்திக் கொன்றார். சிவாஜி அப்சல்கானைக் கொன்ற செய்கை அவரையொத்த வீரருக்கு அழகல்லவென்று அநேக முஹம்மதிய சரித்திர

ஆசிரியர்கள் இகழ்ந்து கூறுகின்றனர். இந்திய சரித்திரம் எழுதியுள்ள அநேக ஆங்கிலேய சரித்திராசியர்களும் அவர்கள் அபிப்ராயத்தையே ஆமோதிக்கின்றனர்.”

அப்சல்கானைக் கொன்ற சிவாஜி

அப்சல்கான் சிவாஜி சந்திப்பின்போது நடந்தது என்ன? “சிவாஜி அப்ஸல்கானுக்கு அதிகமாய்ப் பயப்படுபவன்போல் பாசாங்கு பண்ணி கோட்டைக்குள் தன்னைத் தனியாகச் சந்திக்கும்படி அவனைக் கேட்டுக் கொண்டான். அவ்ஸல்கான் (அப்சல்கானைத்தான் அப்படிக் குறிப்பிடுகிறார்.) அவ்விடத்திற்குப் போனவுடன் சிவாஜி கிட்ட வருவதைக் கண்டான். சிவாஜி நிராயுதபாணிபோற் காணப்பட்டாலும் அவனுடைய வெள்ளை உடுப்பின் கீழ் ஒரு வாளைத் தரித்திருந்தான். இடது கையில், ‘புலி நகம்’ என்று சொல்லப்படுகிற பயங்கரமான இரும்பு முள்ளை மாட்டியிருந்தான். (அப்சல்கானின்) காலில் விழுந்து நமஸ்காரம் செய்த சிவாஜியைத் தூக்கிவிடுவதற்காக அவ்ஸல்கான் குனியவே சிவாஜி புலிநகத்தால் அவ்ஸல்காளைக் கிழித்து, பவானி தேவதைக்கென்று பிரதிஷ்டை செய்து வைத்திருந்த தன் வாளுக்கிரையாக்கினான். அப்பால், காட்டில் மறைந்திருந்த சிவாஜியுடைய சைனியங்கள் ஓடிவந்து பிஜப்பூர் சைனியத்தை (படைகளை) எதிர்த்துத் தோற்கடிக்கவே எல்லாம் மராட்டியர் கைவசப்பட்டது.”

இராசரத்தினம் பிள்ளை

1913-ல் வெளிவந்த, ஈ.டபிள்யூ.தொம்சன் ஐயரால் இயற்றப்பட்டு (E.W. Thompson) தெ.ஆ.ராசரத்தினம் பிள்ளை அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு ‘இந்து தேச சரித்திரம் (History of Indian) நூலில் உள்ள 127-ல் ‘அவ்ஸகனைக் கொன்றது’ என்ற குறுந்தலைப்பில் கூறப்பட்டதை அப்படியே மேலே தந்திருக்கிறேன்.

காலில் விழுந்து வணங்கிய சிவாஜியை தூக்கிட குனிந்த அப்சல்கானை சிவாஜி புலி நகத்தால் குத்திக் கொன்றதை இங்கு தெளிவாகச் சொல்லி இருக்கிறார்.

வரலாற்றுச் சான்றுகள்

கபீகான் என்ற பட்டப் பெயருள்ள முஹம்மது ஹாஷிம் என்பவர் எழுதிய ‘முன்தகபுல்லுபாப்’ என்ற நூலின் இரண்டாவது பாகமும், கிழக்கிந்தியக் கம்பெனியாரின் பதிவேடுகளும், ‘பார்த்த வமீகார்’ என்ற பிரெஞ்சு நூலின் இரண்டாவது பாகமும்,

‘காஸ்மாடா கார்டு’ என்ற போர்த்துக்கீசிய நூலும், ‘சவானத்து’ ‘கிருஷ்ணாஜி’ ஆனந்த் என்ற மராட்டிய நூல்களும் ‘சட்லன்ஜ்’ ‘ஜீவதக்பஜே’ ‘சத்தாரா கீதம்‘ என்ற மராட்டியப் பாடல் நூல்களுமே சிவாஜி, அப்சல்கானைப் படுகொலை செய்தது குறித்துச் சொல்லப்படுகின்ற வரலாற்று ஆதாரங்கள் ஆகும்.

கிழக்கிந்தியக் கம்பெனியின் பதிவேடுகள்

சூரத்திலும், ராஜப்பூரிலும் தங்கியிருந்த கிழக்கிந்திய வணிகக் கம்பெனிக்காரர் தங்களுடைய வியாபார விஷயமாகவும், கொடுக்கல் வாங்கல் செய்வது பற்றியும் எழுதிய கடிதங்களிலே அப்சல்கான், சிவாஜி ஆகியவர்களைப் பற்றிச் சொல்லி இருக்கிறார்கள்.

10-12-1659

ராஜப்பூரிலிருந்து கம்பெனி ஊழியர்கள் சூரத்திலிருந்த கம்பெனி ஊழியர்களுக்கு எழுதியதில் சொல்லப் பட்டிருப்பது:

“சிவாஜி என்பவர் ஒரு பலமான ராஜபுத்திரர். இன்னும் இதைப் பார்க்கிலும் பன்மடங்கு அதிகமான பிஜப்பூர் சுல்தானுக்கு விரோதியாக உள்ளவர். (அப்சல்கான் படுகொலை செய்யப்பட்ட பின்னர், சிவாஜி பனீலாக் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டிருக்கிறார். நாம் இவர் வெற்றி அடைவதை முழு மனதுடன் விரும்புகிறோம். ஏனென்றால் இம்மனிதரால் கம்பெனிக்கு இலாபமிருக்கிறது”. அதே தேதியில் அவர்கள் எழுதிய அடுத்த கடிதத்தில் சொல்லி இருப்பது இதோ :

“இவ்வருஷம் பிஜப்பூர் சுல்தான், சிவாஜியை எதிர்ப்பதற்காக அப்சல்கானை 10 ஆயிரம் குதிரைப் படை, காலாட் படைகளுடன்அனுப்பி இருக்கிறார். இவ்வளவு பட்டாளம் இருந்தாலும் பகைவர்களை எதிர்த்து யுத்தம் செய்து அடக்கிவிட முடியாது என்பதை உணர்ந்த அரசர், பகைவருடன் சிநேகம் பாராட்டுவதாக நடிக்கும்படி ஆலோசனை கூறி இருந்தார். அப்சல்கான் இதன்படி நடந்து கொண்டார்.

மூவாயிரம் முஸ்லிம்கள் பலி!

சிவாஜியின் கட்சியார் இவ்விஷயத்தை முகக்குறியால் யூகித்துத் தெரிந்து கொண்டார்களோ அல்லது சந்தேகம் கொண்டார்களோ என்னவோ அப்சல்கான்பால் தங்களுக்குள்ள சிநேகப் பான்மையான எண்ணங்களை வெளியிட்டனர். இதை நம்பச் சொல்வதற்காக தங்களுடைய தாயாரை அப்சல்கானிடம் சிவாஜி ஜாமீனாக அனுப்பினார். தன்னுடைய விசுவாசத்தையும், ராஜ பக்தியையும் பற்றிக் கூறினார். இதுபோல அப்சல்கானும்

முன்னேறி வந்தார். இரண்டு தரப்பின் படைகளும் ஒன்றையொன்று எதிர்த்துக் கொஞ்சதூரம் அப்பால் நின்றன.

இதற்கிடையில் இருதரப்பிலிருந்தும் சில மனிதர்கள் சமாதானத்துக்கான பேச்சு வார்த்தைகளை இங்கும் அங்கும் வந்துபேசிக் கொண்டிருந்தனர். பகிரங்கமான பேச்சுவார்ததை நடத்திய பின் தனிமையில் கண்டு பேச விரும்பினர். இந்த சமயத்தில் சிவாஜி தன்னுடைய நெஞ்சில் மறைத்து வைத்திருந்த ஒரு ஈட்டியை எடுத்து அப்சல்கானின் இருதயத்தின் மீது குத்தினார். பின்னர் சமிக்ஞையை அறிந்தவுடன் ஹிந்துக்களாலும், ராஜபுத்திரர்களாலும் திரட்டப்பட்ட சிவாஜியின் படைகள் முஸ்லிம்கள் மீது அமர்ந்தேறி வெட்டி 3000 பேர்களை வெட்டிக் கொன்றுவிட்டனர்.”

4-2-1660

“ராஜப்பூரிலுள்ள கிழக்கிந்தியக் கம்பெனி ஊழியர்கள் சூரத்திலுள்ள தங்களின் சகாக்களுக்கு எழுதிய கடிதத்தில், “அப்சல்கானை சிவாஜி கொன்று விட்டான்” என்று எழுதி இருக்கிறார்கள்.

20-7-1663

சூரத்திலுள்ள ஆங்கிலேயக் கம்பெனி உழியர்கள் தங்களின் தலைமை அலுவலகத்திற்கு எழுதிய கடிதத்தில், “அப்சல்கானை சிவாஜி என்பவர் ஜீலி என்ற இடத்தில் கொலை செய்து விட்டார்” எனறு எழுதி இருக்கிறார்கள்.

ஔரங்கஜேப் பற்றியும், சிவாஜிபற்றியும் பல்லாண்டு காலம் ஆய்வு செய்து பல பாகங்களாக அதனை வெளியிட்டுள்ள ஜாதுநாத் சர்க்கார் மேலே சொல்லப்பட்ட கடிதங்களுக்கு என்ன சொல்கிறார்?

சூரத் கன்சல்டேசன்ஸ்

சூரத் கன்சல்டேசன்ஸ் (அறவுரை கோருதல், கலந்து பேசுதல், ஆழ்ந்து ஆராய்தல்) (State letters) ராஜப்பூர் (Rajapur), சூரத் (Surat), பம்பாய் (Bombay), செயின்ட் ஜார்ஜ் கோட்டை (Fort. St George) பாக்டரி ரிக்கார்டுகள் (Factory Records) இவைகளை எல்லாம் தெளிவாக ஆராய்ந்து அவைகளில் இருந்து தனது அரிய முயற்சியினை ஆண்டுக்கணக்கில் செய்து உருவாக்கி சரித்திரத்தில் இந்தக் கடிதங்களைப் பயன்படுத்தி இருக்கிறார். ஏனென்றால் அவரே சொல்வார், இந்த ஆங்கில ஆவணங்கள் மிகவும் பயனள்ளவை; மதிப்புள்ளவை என்று. இதோ அது

The English records are extremely valuable, being absolutely contemporary with the events discribed and preserved without any change or garbling. The English traders sometimes engaged spies to get correct news of Shivaji. There is no such old or authentic material in Marathi!

ஆங்கில ஆவணங்கள் வரலாற்றுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பது பற்றி ஜாதுநாத் சர்க்கார் தனது 'Shivaji and His times' என்ற நூலில் (1920) பக்கம் 456-ல் சொல்லியிருக்கிறார்.

சொன்னதும், சொல்லாமல் விட்டதும்

அதே நூலில் 79வது பக்கத்தில் ராஜப்பூரிலிருந்து 10-12-1659 இல் எழுதிய கடிதம் குறித்துச் சொல்லியிருக்கிறார். ஆம், முதல் பகுதியை மட்டும் அதில் குறிப்பிட்டுவிட்டுச் சென்று விடுகிறார். 'சிவாஜி' என்ற நூலில் அவர் குறிப்பிடாமல் விட்டுவிட்ட பகுதியின் வாசகங்கள் எது தெரியுமா? "சிவாஜி அப்சல்கானைக் கொலை செய்து விட்டார்" என்று தெளிவாகச் சொல்லப்படும் வரிகளை விட்டு விட்டார்.

விவாதத்திற்குரிய இந்தக் கொலையில் மராட்டியர் சரித்திரத்தை மாத்திரமே தன்னுடைய பதமாக, வரிவரியாக எடுத்துப் பின்பற்றி எழுதியிருக்கிறார்.

மராட்டிய ஆசிரியர்களின் புத்தகங்கள் சரத் சந்திர சட்டர்ஜியின் கதைப் புத்தகங்களைவிட அதிக மதிப்பு வாய்ந்தவை அல்ல என்று சொல்கிற பேராசிரியர் ஜாதுநாத் சர்க்கார்தான். இந்த விசயத்தில், அரசியல் உலகில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க படுகொலை குறித்து எழுதுகிற போது முழுக்க முழுக்க மராட்டிய சரித்திர ஆவணங்களைப் பின்பற்றியே எழுதி முடித்து விட்டார் என்கிறபோது இதை நாம் என்னவென்று சொல்வது?

மறைத்து வைத்த தஸ்தாவேஜுகள்

ராஜப்பூரிலிந்து கிழக்கிந்தியக் கம்பெனியார் எழுதிய 25-வது நம்பர் கடிதத்தின் முதல் பகுதியில் வருகிற "அவர் நம்முடைய பகைவருடனும் சிநேகம்போல் நடிக்க வேண்டும் என்று பிஜப்பூர் சுல்தான் ஆதில்ஷா கூறியதின்படி அப்சல்கான் நடந்து கொண்டார்" என்ற விஷயத்தை மட்டுமே விளக்கிச் சொல்லிவிட்டு 'சிவாஜி அப்சல்கானைக் கொலை செய்து விட்டார்' என்ற வரிகளைச் சொல்லாமல் மறைத்தே விட்டார்.

இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக இருந்த லாரன்ஹேஸ்டிங் மீது குற்றம் சுமத்தி விசாரணை நடந்தபோது

பேசிய பர்க் (Burke), “லாரன்ஹேஸ்டிங்ஸின் நாசகரமான கைகளினால் பத்திரப்படுத்தி வைக்கப்பட்ட தஸ்தாவேஜுகள்தாம் அவரின் அழிவுக்குப் போதிய சாட்சியங்களாக இருக்கின்றன” என்று சொல்லியிருப்பதைப் போல, சிவாஜி-அப்சல்கான் சம்பந்தமாக பேராசிரியர் சர்க்கார் மறைத்து வைத்த தஸ்தாவேஜுகள் தாம் அவரைப் பொய்யர் என்று குற்றஞ்சாட்டப் போதுமான ஆதாரமாக இருந்து வருகிறது.

போர்த்துக்கீசியரின் சான்றுகள்

1659 நவம்பர் 10-ல் அப்சல்கான் கொலை செய்யப்பட்டார். அதிலிருந்து 36 வருஷங்களுக்குப் பின் அதாவது கி.பி.1695-ல் ஜியாக்டா என்பவர் சிவாஜியின் வரலாறு குறித்து தகவல் தந்துள்ள போர்த்துக்கீசியர் ஆவார்.

மராட்டிய மக்களின் மத்தியில் வாழ்ந்து அவர்கள் சொல்லிய விஷயங்களின் அடிப்படையிலேயே அந்த வரலாற்றை அவர் எழுதி இருக்கிறார்.

அவர் அப்சல்கான் கொலை செய்யப்பட்டார் என்றே சொல்லியிருக்கிறார். சிவாஜிக்கு விரோதமாக அனாவசியமான குரோதத்தையோ அல்லது பொருத்தமற்ற துவேஷத்தையோ அப்சல்கான் தனது இருதயத்துக்குள் மறைத்து வைத்துக் கொண்டிருந்தார் என்று சமிக்ஞையாகவோ அல்லது ஜாடையாகவோ கூட இந்த சரித்திர ஆசிரியர் எழுதவில்லை.

“அப்சல்கானை சிவாஜி கொன்றுவிட்டதாகவே” ஜியாக்டர் தனது ‘சிவாஜி’ என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஆக போர்த்துக்கீசிய ரிக்கார்டுகளும் சிவாஜி அபசல்கானைக் கொன்றதாகவே தெளிவுபடுத்துகின்றன.

பிரெஞ்சு சான்றுகள்

அப்சல்கான் கொலையுண்ட 14 வருஷங்களுக்குப் பின் ஏபேத்கார் என்ற பிரெஞ்சு யாத்திரிகர் தட்சணத்து மக்களிடம் தாம் கேள்விப்பட்டதையும், நேரில் பார்த்ததையும் வைத்து இதுபற்றி எழுதி அதனை கி.பி.1669 ஆம் வருஷத்தில் பாரிஸ் நகரத்தில் பிரசுரிக்கச் செய்தார்.

‘கி.பி.1673-ல் தான் செய்த பயணத்தின்போது சூரத்திலிருந்து செயின்ட் தாமஸ் மலைக்கு (பரங்கிமலை) தரை மார்க்கமாகப் பயணம் சென்றேன். அப்சல்கான் கவர்னராக இருந்த அப்ஜல்பூரில் தங்கினேன். அவருடைய மாளிகையைப்

பார்ப்பதற்காக அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கே அப்சல்கானின் மக்பரா (அடக்கஸ்தலம்)வுக்காக கல் இழைத்துக் கொண்டிருந்த அநேக வேலைக்காரர்களை நான் பார்த்தேன்'....

"இரு கட்சிப் படையினரும் ஒருவரையொருவர் தாக்குவதற்கு எத்தனிக்கும் சமயத்தில் அவரைப் பார்க்க விரும்புவதாகக் கேட்டுக் கொள்ளவேண்டும். இதைப் புகலாகக் கொண்டு அப்சல்கானைக் கொன்றவிட வேண்டும்" என்று சிவாஜியினுடைய ராணுவ உத்தியோகஸ்தர்கள் அவனுக்கு யோசனை கூறினார்கள்.

சிவாஜியும் இவர்களின் இவ்வாலோசனையை ஒப்புப் கொண்டு விட்டார். கொலைக்கும், பாதகத்துக்கும் சிவாஜி எப்பொழுதும் பயந்தவர் அல்ல. சிவாஜி ஒரு தூதரை அப்சல்கானிடம் அனுப்பினார். "சிவாஜியுடன் நேருக்குநேர் சந்தித்துப் பேசுவதற்காக தன்னுடைய பட்டாளத்தின் தலைவர் என்ற முறையில் தன்னந்தனியே வரவேண்டும்" என்பதுதான் இந்த தூது அனுப்பியதன் நோக்கம்.

சிவாஜியின் வாக்குறுதி

இதுபோலவே சிவாஜியும் தன்னந்தனியே வருவார் என்றும், அப்சல்கான் நிராயுதபாணியாக வந்தால், சிவாஜியும் நிராயுதபாணியாக வரத் தயாராக இருக்கிறார் என்றும், அப்சல்கானிடம் அறிவிக்கும்படி தூதுவரிடம் சிவாஜி சொல்லி இருந்தார்.

சிவாஜியின் இவ்வேண்டுகோளை அப்சல்கான் அங்கீகரித்து சிவாஜியின் வாக்குறுதியையும், சொல்லையும் புத்தி இல்லாமல் நம்பி தன்னந்தனியே சிவாஜியைக் கண்டு பேச வந்தார். சிவாஜி உண்மையுள்ள மனிதர் என்று அப்சல்கான் எப்பொழுதும் நம்பிக் கொண்டிருந்தார். சிவாஜி தன்னுடைய வாக்குறுதியின்படி நிலைநிற்க மாட்டார் என்று அப்சல்கான் கனவிலும் கருதவில்லை. ஆனால், சிவாஜி தன் மேல் ஒரு ஈட்டியை மறைத்து வைத்திருந்தார். இந்த ஈட்டியை உபயோகிப்பதால் நீண்ட காலம் வெற்றி கிடைக்கும் என்ற உறுதியில்லாததுமான யுத்தம் இன்றுடன் முற்றுப்பெற்றுவிடும் என்பதை சிவாஜி நன்கு உணர்ந்திருந்தார்.

எனவே சிவாஜியும், அப்சல்கானும் ஒருவரை ஒருவர் சமீபத்தபோது சிவாஜி சம்பாஷனை செய்வது என்பதை விட்டுவிட்டார். அப்சல்கான் தன்னுடைய பழைய சிநேகம்

முதலியவைகளைப் பிரஸ்தாபித்தார். ஆயினும் சிவாஜி அவைகளை மாற்றிக் கொண்டு, ஈட்டியைப் பிரகாசிக்கச் செய்து ஒரு நொடிக்குள் அப்சல்கானின் வயிற்றைக் கிழித்துவிட்டார். இப்படித்தான் பிரஞ்சுக்காரர் எழுதியிருக்கிறார்.

காபிஃகான்

'முன்தகபுல் லுபாப்' **(Muntakhabbul Lubab)** என்ற நூல் ஔரங்கஜேப்பின் வரலாற்றை அறிய உதவுகிறது. இந்நூலை 'காஃபிகானின் வரலாறு' என்றும் சொல்வர். "ஆயிரம் பக்கங்களுக்கு கொஞ்சம் குறைவான இந்த நூல் முழுமையானதும், திரிபு இல்லாததும் நடுநிலை கொண்டும் எழுதப்பட்டது."

முஹம்மத் முராத் பக்ஷ் என்ற இளவரசரிடத்தில் உயர்பதவி வகித்து வந்த காஜாமீர் என்பவரின் புதல்வர் முஹம்மத் ஹாஷிம் அல்லது முஹம்மத் ஹாஷிம் அலீகான், அவர்தான் காஃபிகான் என்ற பின்னாளில் அழைக்கப்பட்டார்.

இளவரசர் முஹம்மத்முராத் பக்ஷ்ஷின் மறைவிற்குப் பின் தங்களது வாழ்வைக் கழித்திட காபிஃகானும் அவரது தந்தையும் ஔரங்கஜேப்பிடம் நாடி வந்தனர். குஜராத் கவர்னர் காபிஃகானை பம்பாயில் இருக்கும் ஆங்கிலப் பண்டகச்சாலைக்குத் தூதுவராக நியமித்து அனுப்பினார். இவருக்குக் கிடைத்த வாய்ப்பு வேறு எவருக்கும் கிடைத்திருக்க முடியாது.

ஔரங்கஜேப்பின் நன்மதிப்பைப் பெற்றிருந்த காபிஃகான், முகலாயப் பேரவையில் வீற்றிருக்கவும், அலுவலகங்களிலும், பதிவேடு அறைகளிலும் ஆவணங்களைப் பார்வையிடவும் வாய்ப்புப் பெற்றிருந்தவர். பாபர் சகாரவர்த்தியின் படையெடுப்பிலிருந்து ஷாஜஹான் ஆட்சி வரைக்கும் நடந்த சம்பவங்களை அந்த ஆவணங்களின் அடிப்படையில் எழுதினார். அதனைத் தொடர்ந்து ஔரங்கஜேப்பின் ஆட்சியில் பணியாற்றியபோது தான் நேரில் பார்த்தவற்றை அடிப்படையாகக் கொண்டு வரலாற்றை எழுதத் துவங்கினார்.

மிர்ஜா முஹம்மத் காசிம்

மிர்ஜா முஹம்மத் காசிம் என்பவர் ஔரங்கஜேப்பின் பத்தாண்டு கால ஆட்சி குறித்து எழுதிய 'ஆலம்கீர் நாமா' என்ற நூலை, ஔரங்கஜேப் படித்துப் பார்த்தபோது ஔரங்கஜேப்பை மிக மிக உயர்வாக ஏற்றிப் புகழ்ந்து "ஒரே அம்பால் ஆறு யானைகளைக் கொள்வார்" என்ற வகையில்

எழுதப்பட்டிருப்பதை அறிந்தார். எனவே தன்னைப் பற்றிய வலாற்றை யாரும் எழுதக்கூடாது என்று மாமன்னர் ஔரங்கஜேப் உத்தரவிடும் நிலை ஏற்பட்டது.

எனவே இந்தச் சூழ்நிலையில் காபிஃகான், ஔரங்கஜேப்பின் வரலாற்றை மறைவாகவே எழுதி வந்தார். ஔரங்கஜேப்பின் மறைவிற்குப் பின் கி.பி.1770-ல் இந்த நூலை டில்லியில் வெளியிட்டார். அதன் பின்னும் கி.பி. 1733 ஆம்ஆண்டு வரை தொடர்ந்து வராலற்றை எழுதினார். எல்பின்ஸ்டன் என்பவரும், டௌசன் என்பவரும் அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார்கள். அப்ஸல்கான் சிவாஜியால் கொலை செய்யப்பட்ட விஷயத்தைக் காபிஃகான் அதில் தெளிவுபடுத்தி இருக்கிறார்.

பொறுக்கி எடுக்கப்பட்ட சாரம்

'பொறுக்கி எடுக்கப்பட்ட சாரம்' என்ற முன்தகப்புல் லுபாப் நூலில்(Muntakhabu-Lubab) காபிஃகான் சொல்வதாவது:

அப்ஸல்கானுடன் முறையாகப் போரிட்டு மீள முடியாது என்று நன்கு உணர்ந்த சிவாஜி தன்னுடைய ஆட்களில் சிலரை அப்ஸல்கானிடம் அனுப்பி, செய்த குற்றங்களுக்குத் தான் வருந்துவதாகவும், தன்னை மன்னித்து விடும்படியும் கேட்டுக் கொண்டார்.

பேச்சுவார்த்தைகளுக்குப் பின் மூன்று அல்லது நான்கு ஊழியர்களுடன் மட்டும் ஆயுதம் எதுவும் தரிக்காமல் சிவாஜி தன்னுடைய கோட்டையின் அடிவாரத்திற்கு வந்து, அப்ஸல்கானை சந்திக்க வேண்டுமென்ற ஒரு ஒப்பந்தத்தை, சிவாஜி அனுப்பி வைத்த தந்திரமான பிராமணர்கள் (the deceitful brahmans) ஏற்படுத்தினார்கள். அதேபோன்று நான்கு அல்லது ஐந்து ஊழியர்களுடன் ஆயுதம் தரிக்காமல் அந்த இடத்திற்கு வரவேண்டுமென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

வஞ்சக வலை

சிவாஜி தன்னுடைய மரியாதைகளைச் செலுத்தி வாய்மொழி ஒப்பந்தங்கள் முடிந்தபின், அவருக்கு ஒரு கிலாத் (Khillat) அளிக்கப்பட்டு அவர் அனுப்பப்படவேண்டுமென்றும் ஏற்பாடு ஆகியது.

சிவாஜியிடமிருந்து அப்ஸல்கான் வரி (Peshkash) முதலானவற்றைப் பெற்றுக் கொண்ட பின் சிவாஜி அப்ஸல்கானுக்கு விருந்தளித்து, அவரை பிஜப்பூருக்கு திருப்பி அனுப்பி வைக்க வேண்டுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த ஏமாற்றுக்கார சிவாஜி பல பரிசுகளையும் தன் நாட்டிலுள்ள பழங்களையும் அனுப்பி தான் மிகவும்பணிந்து அடங்கிப் போனவன்போல காண்பித்ததில், அப்ஸல்கான் அவன் வலையில் விழுந்து, அவனுடைய பொய்க்கூற்றுகளை எல்லாம் நம்பி அறிவாளிகள் எடுக்க வேண்டிய முன் எச்சரிக்கை ஒன்றையும் அப்ஸல்கான் எடுத்துக் கொள்ளவில்லை.* ஆயுதம் ஒன்றுமில்லாமல் பல்லக்கில் ஏறி, குறிப்பிட்ட கோட்டையின் அடிவாரத்திற்கு வந்து, அம்பு எறியும் தூரத்தில் தனது ஊழியர்களை நிறுத்திவிட்டு, கவசம்கூட அணியாமல், மெல்லிய ஆடையுடன் அப்ஸல்கான் வந்து சேர்ந்தார்.

(* The History of India as told by, as own Historians, Vol. VII. P. 25.)

பயப்படுவதுபோல் பாசாங்கு

கோட்டையில இருந்த ஏமாற்றுக்கார சிவாஜி நடந்தே கீழிறங்கி வந்து தான் மிகுந்த பயத்தில் இருப்பதுபோலவும், பணிவாக இருப்பது போலவும் ஒரு தோற்றத்தை உண்டுபண்ணினார். அடிவாரத்தை வந்து அடைந்தவுடன் ஒவ்வொரு மூன்று அல்லது நான்கு அடிகள் எடுத்து வைக்கும்போது தன்னுடைய குற்றங்களை ஒப்புக் கொண்டு மன்னிப்பு கேட்டுக் கொண்டு, கால்கள் நடுங்க அடிஎடுத்து வைத்து வந்தார். அப்போது அப்ஸல்கானுடன் வந்த ஊழியர்களும் ஆயுதம் ஏந்தியவர்களும் இன்னும் சற்றுத் தள்ளவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார் சிவாஜி.

சுற்றிச் சூழ்ந்துள்ள மலைகளிலும் மரங்களின் மத்தியிலும் ஆயுதங்கள் ஏந்திய பலரை மறைவாக நிற்க வைத்தார் சிவாஜி. கோட்டை வாயிற் படிக்கட்டுகளில் ஒரு எக்காளம் ஊதுபவனை நிறுத்திவைத்து அவனிடம் ‘இந்த புலி நகத்தால் என்னுடைய விரோதியைக் கொல்லப் போகிறேன். நான் அவனைத் தாக்குகின்ற வினாடியில் நீ என்னைப் பற்றி ஒன்றும் கவலைப்படாமல், நீ உன்னுடைய எக்காளத்தை எடுத்து ஊதி நமது வீரர்களுக்குச் சைகை அறிவிப்புக் கொடு என்று சொல்லிவிட்டு வந்தார் சிவாஜி.

எக்காளமும், எதிரிகளைத் தாக்குதலும்

தன்னுடைய படைவீரர்களுக்கு எக்காளச் சப்தம் கேட்டதும், அவர்கள் எல்லோரும் ஓடி வந்து அப்ஸல்கானின் ஆட்கள் மீது பாய்ந்து தாக்கி வெற்றி பெறுவதற்கு தங்களால் ஆன எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

தன் வீரத்தில் முழு நம்பிக்கை வைத்திருந்த அப்ஸல்கான், சிவாஜி ஆயுதம் இல்லாமலும் பயந்து நடுநடுங்கிக் கொண்டு வருவதைக் கண்டார். எனவே தன்னுடன் வ்நத ஆட்களை இன்னும் வெகு தொலைவிற்குத் தள்ளிச் செல்லும்படி அப்ஸல்கான் பணித்தார்.

அந்தத் துரோகியான பகைவர் சிவாஜி அப்ஸல்கானிடம் நெருங்கி அவர் காலில் விழுந்து அழுது புலம்பினார். அப்ஸல்கான் சிவாஜியின் தோளின்மேல் தன் கைளை வைத்து அவரை அன்புடன் அணைத்துக் கொள்ள எத்தனித்தார். அந்த நேரத்தில் தான் மறைத்து வைத்திருந்த புலி நகத்தால் அப்ஸல்கானின் வயிற்றைக் கொடூரமாகத் தாக்கவே அப்ஸல்கான் மூச்சுப்பேச்சின்றி அந்தக்கணமே இறந்து விழுந்தார். சிவாஜியின் உத்தரவுப் பிரகாரம் அந்த எக்காளம் ஊதப்பட்டது. மறைந்திருந்த சிவாஜியின் ஆட்கள் பாய்ந்து வந்து அப்ஸல்கானின் படைமீது தாக்கி, அதில் பலரைக் கொன்று நிர்மூலப்படுத்தினார்கள்.

இரத்தவெறி பிடித்த கொலைகார சிவாஜி (The blood thirsty assassin) * பாதுகாப்பாக அங்கிருந்து சென்று தன்ஆட்களுடன் சேர்ந்து கொண்டார். அப்ஸல்கானின் படையிலிருந்த குதிரைகள், யானைகள் மற்ற எல்லாப் பொருட்களையும் கவர்ந்து கொண்டார் சிவாஜி.

(* Khafikhan, Muntakhabul Lubab, Vol. II, P. 110.)

உண்மையை மறைத்தது ஏன்?

காபிஃகான் சொல்லிச் சென்றுள்ள இந்த வரலாற்று உண்மையைத்தான் இன்று முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதுபோல் மறைத்து விட்டார்கள். இந்த உண்மையை மறைத்ததோடு அவர்கள் நின்றிருந்தாலும் பரவாயில்லை. “அப்ஸல்கான்தான் சிவாஜியைக் கொல்லப் போனார். தற்காப்புக்காக சிவாஜி அப்ஸல்கானைக் கொன்றார்” என்ற பழியையும் போட்டுவிட்டார்கள். பாடசாலைகளிலும், பள்ளி மாணவர்களிடமும் பாதகமான வரலாற்றைப் புகுத்தி துவேஷ உணர்வை வளர்த்து, வகுப்பு மோதல்களுக்கான வித்துக்களையும் விதைத்து, வெற்றியும் கண்டு வருகிறார்கள்.

ஜே.டி.ரீஸ் டேவிட் சிங்ளர்

டேவிட் சிங்ளர் (David Singlair) எழுதிய இந்திய வரலாற்று நூல் (History of India) 1906-ல் வெளிவந்தது. அதில் பக்கம் 101-ல் இதனையேதான் அப்படியே சொல்லி இருக்கிறார். விரிவஞ்சி

அதனைத் திரும்பவும் எழுதிடவில்லை. முஹம்மதியர்கள் என்ற ஜே.டி.ரீஸ் (The Muhammadens J.D.REES I.C.S.) 1912-ல் எழுதிய நூலில், பக்கம் 143-ல் இதனையோ தெரிவித்திருக்கிறார். (விரிவஞ்சி அதனையும் திரும்பவும் குறிப்பிடவில்லை.)

மாரிஸ் துரை தரும் மகத்தான உண்மை

இந்துதேச சரித்திரம், பாடசாலைகளில் கற்கின்ற மாணாக்கரின் உபயோகத்திற்காக ஹென்றி மாரிஸ் துரையவர்கள் ஆங்கிலேயே பாஷையில் செய்து போப் ஐயரவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு கி.பி.1862-ல் வெளிவந்த நூலில் சொல்லப்பட்டிருக்கும் போப் ஐயரின் வார்த்தைகள் அப்படியே இதோ :

‘அவன் (சிவாஜி) தேசத்துக்கருகிலிருந்த விஜயபுர (பூஜப்பூர்) துரைத்தனத்தார் அவனை செயிக்கவும், அவனுடைய பலம் விர்த்தியடையவொட்டாமல் தடுக்கவும் எத்தனித்தார்கள். அவர்கள் அவனோடு சண்டைக்கு அனுப்பிய சேனை வென்றுவிட்டது. எப்படியென்றால், தான் பயப்பட்டுக் கீழ்ப்படிய சித்தமாயிருப்பதுபோலப் பாவித்து எதிரே சேனாதிபதியோடு சமாதானம் பேசவேண்டும் என்றும், அதற்காக இரு திறத்தாரும் யாதொரு ஆயுதமுமின்றி ஒரே சேவகனோடு மாத்திரம் வந்து இரகசியமாய்க் கூடிப் பேச வேண்டும் என்றும் சொல்லியனுப்பினான். இதற்கு எதிரி (அப்சல்கான்) ஒப்புக் கொண்டு ஆயுதமின்றி வந்தான். சிவாஜி மாத்திரம் தன் தலைப்பாகையின் கீழ் சீராவும், நெடும் அங்கிக்குள் இலேசான பின்னற் கவசமும் பூண்டு, மிருகத்தின் நகம் போன்ற ஆயுதமொன்ற கைக் கவசத்துக்குள் கக்கை வாளும் வைத்துக் கொண்டு போனான். துலுக்கன் (அப்ஸல்கான்) கிட்ட வரும்போது, மகாராஷ்டிரன் (சிவாஜி) பயப்படவதாகப் பாசாங்கு செய்ய, அவன் இவனைத் தழுவ வந்தான். அப்போது ஆயுதம்பூண்ட தன் நகங்களாலே அவனைப் பிடித்துத் துண்டு துண்டாய் வெட்டி விட்டான். பின்பு அவன் சேனையானது சண்டை நடக்குமென்ற கனவிலும் நினையாதிருந்த எதிரியின் சேனைமேலே பாய்ந்து அதை முறியடித்து விட்டது.” *

(* Henry Morris, The History of India, Madras, தமிழாக்கம், Rev. G.U. Pope, 1862, P. 39 - 40.)

வருஷங்கள் மாறினால் வரலாறும் மாறுமா?

அவனுடைய துரோகத்தையும் கபடத்தையும் காட்டிய ஒரு உதாரணம் என்று சிவாஜியைப் பற்றி ஹென்ரி மாரிஸ் எழுதி,

போப் ஐயர் மொழிபெயர்த்துத் தந்தது கி.பி.1862-ல்.

வருடங்கள் மாறினால், வரலாறும் மாறுமா என்ன? ஏன் வரலாற்றை மாற்றினார்கள்? ஏன் துவேஷத்தை வளர்க்கிறார்கள்? ஏன் உண்மைக்கு மாறாகச் சொல்லி உள்ளதை மாற்றிப் பரீ தூற்றுகிறார்கள்? ஆளும் அரசாங்கங்கள் தங்கள் கல்விச்சாலைகளில் தவறான சரித்திரத்தைப் போதித்து வரும் மர்மம் என்ன? இந்தத் தவற்றைத் தெரிந்துதான் செய்கிறார்களா? அல்லது தெரியாமல்தான் செய்கிறார்களா? இதற்கு விடிவே கிடையாதா, இதனை மாற்றிட வழியே கிடையாதா? உண்மை வரலாற்றை அறிந்திடவும், இளம் பள்ளிப் பாலகர்கள் புரியவும் வாய்ப்பு இந்தியாவில் திரும்பவும் வழங்கப்படும் நிலைமை வருமா? ஆளுகின்ற அரசுகள் அதற்கென துரித நடவடிக்கைகளை எடுக்குமா?

வரலாற்றில் சொல்லப்படும் இருதரப்புக் கருத்துக்களையும் கூறாமல் ஒரு தரப்புக் கருத்தை மட்டுமே கூறி, அதனையே விளம்பரம் செய்து துவேஷத்தை வளர்க்கும் கூட்டத்தாரின் செயலைத் தடுத்து நிறுத்துமா?

எழுந்த சந்தேகம்

'ஜமாஅத்துல் உலமா'வில் மாமன்னர் 'ஔரங்கஜேப்' வரலாற்றுத் தொடரைப் படித்து வரும்போது எனது மைத்துனர் கால்நடை மருத்துவர் ஷி.வி.கி.ளி. ஜெய்லானி என்னிடம் 'அப்ஸல்கான், சிவாஜி சம்பந்தப்பட்ட விஷயங்களை அலசி ஆராய்ந்து எழுதி இருக்கிறீர்கள். ஆனால் எனக் ஒரு சந்தேகம். ஒரு விஷயத்தைப் பற்றி எங்கு சொல்லவில்லையே ஏன்?' என்று கேட்டார்கள்.

சிவாஜி அப்ஸல்கானை சந்திக்கச் சென்றபோது அவரது தயாரிடம் ஆசீர்வாதம் பெற்றுச் செல்கிறார். அப்போது சிவாஜியின் தயார், சிவாஜியிடம், "மகனே, உனது அண்ணன் சாம்பாஜியைக் கொன்று போட்ட அப்ஸல்கானைப் பழிவாங்க இதுதான் சந்தர்ப்பம். போ, உனது பழியைத் தீர்த்துக் கொள்" என்று சொல்லி அனுப்புகிறாரே அந்த விஷயம்தான் என்ன? சாம்பாஜியை அப்ஸல்கான் கொன்றாரா? என்பது பற்றி நீங்கள் எதுவும் சொல்லவில்லையே என்று கேட்டார்.

அன்னையின் ஆணை

அதுபற்றி ஸ்ரீ சிவாஜி என்ற 156 பக்கங்களைக் கொண்ட நூலில் பக்கம் 49-ல் சொல்லப்பட்டிருப்பதாவது :

"அன்னை ஜீஜாபாயிடம் சென்று அடிவணங்கி ஆசி

வேண்டினார். அவ்வீரத்தாய் உள்ளத்தே கவலையும் களிப்பும் ஒருங்கே கொண்டு, “மைந்தா! முன்னம் நம் குமாரர் ஐவரையும் குத்தி குருக்ஷேத்திரத்திற்கு அனுப்பியது போல் இன்று யானும் உன்னைச் சமர்முனைக்கு அனுப்புகின்றேன். கண்ணபிரான் அருளால் ஐவரும் வெற்றிச்சூடித் திரும்பியதுபோல் பவானியின் அருளால் நீயும் வாகை சூடி வருவாயாக! மேலும் உனது அண்ணன் சாம்பாஜியைக் கொல்வித்தவன் அப்ஸல்கான் என்பதை மறவாதே! அவனைப் பழிவாங்காமல் உன் தந்தை விட்டுவிட்டார். ஆதலின் இச்சமயம் அப்ஸல்கானைப் பழிவாங்குதல் உனது கடமை” என்று ஆசிகூறிக் குலதெய்வத்தைத் துதித்து விடை கொடுத்தனள்.

பழிவாங்கத் திட்டம்

“கடைசியாக தன்தாயாகிய ஜீஜாபாயை போய்ப் பார்த்தார். அவள் முதலில் அப்ஸல்கானை சந்திக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். என்றாலும் தன் மூத்தகுமாரனாகிய சாம்பாஜியைக் கொன்றவன் அப்ஸல்கான்தான் என்று ஞாபகம் வந்ததும் - “மகனே, மிகவும் ஜாக்கிரதையாயிரு. உன் தமையனைக் கொன்றபாவத்திற்கு பழிவாங்கு” என்று சொல்லி ஆசீர்வதித்து அனுப்பினாள்” என்றும் கூறப்பட்டிருக்கிறது.*

இதிலிருந்து என்ன தெரிகிறது மகனே! நீ எப்படியாவது அப்ஸல்கானைக் கொன்று விடு என்று சிவாஜியின் தாயாரே ஆசீர்வதித்து சிவாஜியை அனுப்பி வைத்திருக்கிறார் என்பத தெள்ளத் தெளிவாகிறது. தயாரின் ஆசியோடு, ஏற்கனவே திட்டமிட்டுத்தான் சிவாஜி அப்ஸல்கானை சந்திக்கச் சென்றார் என்பதும் உறுதியாகிறது.

அடுத்து இதில் மறைக்கப்பட்ட விஷயம் என்ன? சாம்பாஜியைக் கொன்றது யார்? சிவாஜியின் அண்ணன் சாம்பாஜி எப்போது இறந்தார்? எப்படி இறந்தார்? உண்மை வரலாறுதான் என்ன?

சாம்பாஜி

சிவாஜியின் தந்தை ஷாஹாஜிக்குச் சொந்தமான, ஆட்சிப் பொறுப்புக்குட்பட்ட சில பகுதிகள் இருந்தன. ஷாஹாஜியின் பொறுப்பில் இரந்த பகுதிகளை அவரது புதல்வர் சாம்பாஜி கவனித்துக்கொண்டு வந்தார். சிவாஜியின் தந்தை ஷாஹாஜி பிஜப்பூர் அரசில் பணியாற்றிக் கொண்டிருந்ததால் தனதுஆதிக்கத்தின் கீழ் உள்ள பகுதிகளைச் சரிவரக் கவனிக்க இயலாத நிலையில் இருநதார். அதனால் அந்தப் பகுதியிலிருந்து

சிறுசிறு பாளையக்காரர்கள், ஷாஹாஜியை எதிர்த்துக் கலகம் செய்தனர். அந்தக் கலகத்தை அங்கே மேற்பார்வையிலிருந்த சாம்பாஜியால் அடக்கிட முடியவில்லை. இதைக் கேள்விப்பட்ட ஷாஹாஜி, பிஜப்பூர் அரசர்களிடம் தான் தனது சொந்த ஜாகீருக்குச் செல்ல வேண்டும். உடனடியாக அதற்கு அனுமுதி தாருங்கள் என்று கேட்டுவிட்டு அதற்கான அனுமதியையும் பெற்ற தனது ஆளுகைக்குட்பட்ட பகுதிகளுக்கு வருகிறார்.

ஜேம்ஸ் கிராண்ட் டப்

மராட்டியர்களின் சரித்திரத்தை முதன்முதலாக எழுதியவர், ஜேம்ஸ் கிராண்ட் டப் (A History of The Mahrattas, James Grant Duff) கி.பி. 1826-ல் இதனை எழுதினார். அதன் முதல் பதிப்பு இங்கிலாந்தில் வெளியானது. அந்த நூலின் மறுபதிப்புக்கள் தொடர்ந்து வெளிவந்தன. இப்போது அந்த நூல் மறுபதிப்பு செய்யப்படுவதாகத் தெரியவில்லை. அந்த நூலில் சொல்லப்படுவது, இதோ : "கர்னாடகத்திற்குத் திரும்பியபோது, நாட்டினுடைய அவலநிலையைப் பற்றி தன்னிடம் கூறப்பட்டது மிகைப்படுத்தப்பட்டதல்ல என்பதை ஷாஹாஜி கண்டு கொண்டார். ஒவ்வொரு சிறிய தலைவனும் தன்னைச் சுற்றியுள்ள தலைவர்களைக் கொள்ளையடித்தும், பொருட்களைக் கைப்பற்றியும், அவர்களைப் பலவீனப்படுத்தி தன்னுடைய பலத்தை அதிகரித்துக் கொள்ள முயன்றுக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய சொந்த ஜாகீரிலேயே இம்மாதிரியான அட்டகாசங்கள் நடந்து வந்தன. இதுபோன்ற அட்டகாசம் செய்து வந்த கணிகிரி தாரைத் (Kallidar of Kanikgeeree) தண்டிப்பதற்காக ஷாஹாஜி மூத்த மகனான சாம்பாஜியை அனுப்பி வைத்தார். அந்தப் பணியில் சாம்பாஜி கொல்லப்பட்டு, அவருடையப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. பின்னதாக ஷாஹாஜி கணிகிரியைத் தாக்கி தன்னுடைய மகனின் கொலைக்குப் பழிவாங்கிக் கொண்டார்.

'His own jaheer had been subject to depredations; and he sent his elder son Sumbhajee tp punish one of these aggressions on the part of the Killidar of Kanikgeeree. On this service sumbhajee was killed, and his detachment defeated. Shahajee and his wards took Kanikgeeree by assaualt, and avenged his death;' *

(* James Grant Duff. A History of the Maharastras, Vol.I, 1912, Calcutta, P. 116.)

எவ்வளவு தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கணிகிரி பாளையக்காரரை அடக்கச் சென்ற போரில் சாம்பாஜி

கொல்லப்பட்டார். இதில் என்ன அப்ஸல்கான் தலையீடு? இதிலே அப்சல்கான் எதற்கு வருகிறார்?

வினாயக தாமோதர சாவர்க்கர்

'பாரத நாட்டின் வரலாற்றில் ஆறு பொன்னேடுகள்' என்ற நூலை ஸ்வதந்திரவீரர், இந்து முன்னணியின் தலைவர் வினாயக தாமோதர சாவர்க்கர் மராட்டியில் எழுதினார். தமிழ்நாட்டில் அதனை ஜனசேவா பதிப்பகம் வெளியிட்டிருக்கிறது. பேராசிரியர் இராம. அண்ணாமலை அதனைத் தமிழ்ப் படுத்தியிருக்கிறார். அதில் நான்காம் பாகத்தில் 66வது பக்கம் முதல் 76வது பக்கம் வரை மகாராஷ்டிரா வரலாற்றைப் புதிதாக சர்தேசாய் என்பவரைக் கொண்டு எழுதிய வரலாற்றைப் பற்றிச் சொல்லி இருக்கிறார்.

சாம்பாஜியின் உதவிக்குச் சென்ற அப்ஸல்கான்

புதிதாக எழுதப்பட்ட வரலாறு 'New History of the Marathas Govind Sakharam Sardesai எழுதியது. அதில் சொல்லப்படுவது, 'கணிகிரி பாளையக்காரர் அப்பா கான் கலகம் செய்ய ஆரம்பித்தபோது அவரை ஒடுக்குவதற்கு ஷாஹாஜியாலும், சாம்பாஜியாலும் முடியவில்லை. எனவே கி.பி. 1654 ஆம் ஆண்டு பிஜப்பூர் சுல்தான்அடில்ஷா, சிவாஜியின் தந்தைக்கும், தனயனுக்கும் உதவியாக, அவர்களது படைகளுக்கு உறுதுணையாக இருக்க அப்ஸல்கானை அனுப்பி வைத்தார். சாம்பாஜிக்கும், ஷாஹாஜிக்கும் உதவியாகப் படைகளுடன் அனுப்பப்பட்டவர் அப்ஸல்கான், அந்தப் போரில் தான் சாம்பாஜி கொல்லப்படுகிறார். இதிலே அப்ஸல்கான் சாம்பாஜிக்கு உதவிக்குச் சென்றவர். ஆனால் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

கோவிந்த சாகரம் சர்தேசாய்

போர் மும்மரமாக நடந்து கொண்டிருந்தபோது, இக்கட்டான கால கட்டத்தில் சாம்பாஜிக்குத் தேவையான படைகளை அனுப்பிடாமல், வேண்டுமென்றே அப்ஸல்கான் தன்னுடைய கடமையை உதாசீனப்படுத்தியதால் தான் சாம்பாஜி கொல்லப்பட்டார் என்று நம்பப்படுகிறது என்று சர்தேசாய் எழுதுகிறார்.

Sambhaji was killed, as was supposed, through the deliberate neglect of Afzul Khan to rein force Sambhaji at acritical moment.*

(* Govind Sakharam Sardesal, New History of The Marathas, Vol.I, shivaji & His Live (1600-1707) Bombay, 1946, P. 81)

வரலாற்றை எப்படி மாற்றுகிறார்கள் பார்த்தீர்களா? முதலிலேயே தெரிவித்தபடி அப்ஸல்கான் பற்றி, கிராண்ட் டப் எதுவுமே சொல்லவில்லை. அப்ஸல்கானைப் பற்றி இந்தப் போரில் அவர் குறிப்பிடவேயில்லை. புதிதாக மராட்டிய வரலாற்றைத் திருத்தி எழுதியவர்கள் பதில் ஏதும் சொல்லிட முடியாமல் சாம்பாஜிக்காக, போரில் உதவிக்கு வந்த அப்ஸல்கானை உரிய நேரத்தில் வந்து உதவவில்லை' என்று குற்றம்சாட்டுகிறார்கள்.

அப்ஸல்கான் சாம்பாஜியைக் கொல்லவில்லை

அன்றையப் போரில் என்ன சூழ்நிலையோ? ஏதோ! அப்படியிருந்ததால், சாம்பாஜியை அப்ஸல்கான் கொன்றதாக எங்கேனும் குறிப்பு இல்லை. 'சாம்பாஜிக்கு உதவவில்லை உரிய நேரத்தில்' என்று மட்டுமே பிற்காலத்தில் சொல்கிறார்கள். சாம்பாஜியை அப்ஸல்கான் கொன்றதாக எங்கேனும் காட்ட முடியுமா? இல்லாததை வைத்துக் கொண்டு, பின்னாளில் எவ்வளவு கற்பனை? சிவாஜி அப்ஸல்கானைச் சந்திக்கச் செல்லும் வேளையில், மகனே உன் அண்ணனைக் கொன்ற அப்ஸல்கானை பழிவாங்கு என்று ஆணையிட்டார் அவரின் தாயார் என்று வரலாற்றில் எப்படி அபாண்டமான கட்டுக்கதை! உதவிக்குச் சென்றவரையே கொலை செய்ததாகக் குற்றம் சாட்டுகிறார்கள்.

வரலாற்று நடுநிலையாளர்களே! இந்த உண்மைகளை இந்திய வரலாற்றில் மறைத்திருப்பதை ஏன் எழுதிட மறுக்கிறார்கள்? ஏன் தவறைத் திருத்த மறுக்கிறீர்கள்? நியாய உணர்வே அண்ணல் காந்தி பிறந்த பாரதத்தில் மறைந்துபோய் விட்டதா? என்னுள் எழுத இந்தக் கேள்வி நியாயமானதா? நீங்களே முடிவெடுங்கள்.

பிஜப்பூர் தளபதி அப்ஸல்கான், மாவீரர் சிவாஜியால் படுகொலை செய்யப்பட்ட விஷயங்குறித்த சரித்திரச் செய்திகளைப் பார்த்தோம். தொடர்ந்து, மேலும் சில செய்திகளை அது குறித்து நடுநிலையாளர்களின் முன் வைக்கிறேன்.

அப்ஸல்கான் சிவாஜிக்கு எழுதிய கடிதம்

"கண்டோறாவ் யென்கிற மூற்தி ஆச்சரியமான (சமனத்காரமாகி) திஷ்டாந்திரங்களை காண்பிவித்ததினாலே உபத்திரவம் ஒண்ணும் பண்ணாமல் அங்கேயிருந்து வைகில் கிருஷ்ணாசி பண்டிதரை அழைப்பிவிச்சு சிவாஜி ராஜாவுக்கு

சாந்தி சமாதானம் பண்ணவெணுமென்று சொல்லி ராசா பேருக்கு அப்ஸல்கான் எழுதின கடுதாசியின் வயணம்.”

தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு தரும் தகவல்

“நீர்யொத்தனையானாலும் அல்லியெதல்ஷா பாச்சாவுக்கு விரோதம் பண்ணினீர். உம்முடைய சினேகத்துக்கு அப்படி பண்ணப்போகாது. உம்முடைய தொகப்பனார் சாஜிறாஜா பண்ணின காரியங்களை நீரும் கேள்விப்பட்டுயிருப்பீரே இப்போதும் நீர் பாதுஷாவுடைய கோட்டைகளையெல்லாம் கட்டியிருக்கிறீர். பாதுஷாவுடைய மனசுபெதாரையெல்லாம் அடித்துப் போட்டீர் கசானாவையுங் கொள்ளையிட்டீர். ரத்தின சிம்மாசனம் ஒண்ணு பண்ணி அதின் பேரிலே பாச்சாவாய் உளுக்கார்ந்தீர்.

இதுவுமில்லாமல் துளுக்காளுடைய மதத்தை நிந்தனை பண்ணுகிறீர், மசீதுகளெல்லாம் இடித்துப் போட்டீர். இப்படிக்கெல்லாம் திவெஷம் வளறுகிறபடியினாலே நீர் பாச்சாயிக்கு குத்தவாளியாகப் போனீர். அல்லியெதல் ஷாவுடைய மனசிலே உமக்கு ரொம்பவும் கஸ்தி படுத்த வெனுமென்று தோணியிருக்குது. சாஜிராஜாவுடைய சினேகத்தினாலே பாதுஷாவுக்கு னானாவிதமாய்ச் சொல்லி இப்போ நீர் கட்டியிருக்கிற சிம்மகெடி பீமநதி புரந்தர் கெடி செயவல்லி இதுகளை விட்டு விடுகிறது. யெதாபிறகாரமாய் உம்முடைய தேசத்தலே நீர் சுகமாயிருக்கிறது என்று தீர்த்துக்கொண்டு னாம் வந்திருக்கிற படியினாலே உமக்கும் நமக்கும் பேட்டியான பிற்பாடு மைத்த சேதிகளும் தெரியவருமென்று கடுதாசியெழுதி வைக்கில் கிருஷ்ணாசி பண்டிதர் கையில் கொடுத்து கபடபுத்தியும் போதினை பண்ணி சிவாஜி ராஜாகிட்ட அனுப்பி வைத்தார்”.*

(* கே.எம். வேங்கடராமையா, பதிப்பாசிரியர், தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு (மெக்கன்சி சுவடி, டி 3180) (ஒப்பீட்டாய்வு) வரலாற்று ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் , தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1987, பக். 50-51.)

சிவபாரத சரித்திரம் சொல்லும் செய்தி

“அதன்பிறகு சிவாஜி ராஜா ஒருவருக்கும் தெரியாமல் ஜெயவல்லி நகரத்திலே வந்து சேர்ந்து தன்னோடு சண்டைபோட வேண்டுமென்று தயாராயிருக்கிற சமாச்சாரம் அப்சல்கான் கேட்டு சிவாஜி ராஜாவுக்கு காகிதம் எழுதி அனுப்பி வைத்தான்.

அது என்னவென்றால் ஓய் சிவாஜி ராஜாவே! நீ பண்ணுகிற

துடுக்குத்தனம் சோறாவரியெல்லாம் எதிலிஷாவுக்கு வெகு கோபமாயிருக்கிறது. நிஜாமன் நாசத்தை அடைந்தபடியினாலே உனக்கு நல்லதாயிற்று. மொகலானுக்கு எதிலிஷா வெகு சீமையை கொடுத்திருக்கிறார். அந்தச் சீமையை நீ காட்டினாய். இராசபுரியீசுவரனென்கிறவன் உன் போலே வெகு கோபமாயிருக்கிறான். சந்திர ராஜாவை அடித்துப் பலவந்தமாய் அவனுடைய சீமையைக் கட்டிக் கொண்டாய். கலீயாணபுரம் வாங்கினால் பீமபுரியும் வாங்கினாய். துலுக்கருடைய ஷ்தலங்கள் எது எது உண்டோ அவற்றையெல்லாம் நாசம் பண்ணினாய்.* அணிகளல்லாம் உன் பேரிலே வெகு கோபமாயிருக்கிறார். துலுக்கருடைய மதத்தை நடக்க வொட்டாமல் பண்ணினாய்.....”

(* எம். சீராளன், பதிப்பாசிரியர், சுவீந்தர் பரமானந்தர் இயற்றிய சிவபாத சரித்திரம், சரஸ்வதி மஹால் நூல்நிலையம், தஞ்சாவூர், 1990, பக். 59-60.)

போன்ஸ்லே வமிச சரித்திரம் சொல்லும் செய்தி

‘அப்சல்கான்அங்கிருந்தபடியே சிவாஜி ராஜாவின் பேருக்கு ஒரு கடிதம் எழுதி அதில் அவரைப் பேட்டி காண வரும் படியாக கிருஷ்ணாஜிபந்த் வக்கீலிடம் சொல்லியனுப்பினார். அக்கடிதத்தில் எழுதி இருந்ததாவது:

தாங்கள் எப்பேர்ப்பட்டவர்களாக இருந்தாலும் அல்லியலதில்ஷா பாதுஷாவிற்கு விரோதத்தைச் செய்திருக்கிறீர்கள். தங்களுடைய உறவினர்கள் அவ்விதமில்லை. தங்களுடைய தந்தைஷாஹஜி ராஜா செய்த காரியங்களையும் கேள்விப்பட்டிருப்பீர்கள். இப்பொழுது தாங்கள் பாதுஷாவின் கோட்டைகள் எல்லாவற்றையும் பிடித்துக் கொண்டீர்கள். மேலும் பாதுஷாவின் சுபேதார்களையும் கொன்று விட்டீர்கள். பாதுஷாவின் கஜானாவைக் கொள்ளையடித்தீர்கள். ரத்தினங்களால் இழைக்கப்பட்ட சிம்மாசனம் ஒன்று செய்து அதன்மேல் பாதுஷாவாகி உட்காருகிறீர்கள். இதைத் தவிர முகமதிய மதத்தைப்பற்றி சிந்திக்கிறீர்கள். ஆங்காங்குள்ள மசூதிகளை இடிக்கிறீர்கள். இவ்விதமான பலவித துவேசங்களை எழுப்புகிறீர்கள்....’*

அப்ஸல்கான் சிவாஜிக்கு எழுதிய கடிதங்களின் விவரங்களைப் பார்க்கிற போது இஸ்லாமியரின் வழிபாட்டுத்தலங்களை (பள்ளிவாசல்களை) சிவாஜி இடித்த செய்தி உறுதியாகிறது. முஸ்லீம் மதக்கோட்பாட்டினை சிவாஜி நிந்தித்த செய்தியும் புலனாகிறது என்று ‘சிவபாரத சரித்திரமும்’, ‘தஞ்சை மராட்டிய போன்ஸ்லே வம்ச சரித்திரமும்,’ தஞ்சை

மராட்டிய மன்னர் வரலாறும்‘ தெரிவிக்கிற செய்திகள் வரலாற்றின் வெளிச்சத்திற்கு வர வேண்டிய விஷயங்களன்றோ!

வீரசிவாஜி ‘இஸ்லாம் மதத்தை நிந்தனை பண்ணியதையும், பள்ளிவாசல்களையெல்லாம் இடித்துப் போட்டது பற்றியும், அப்ஸல்கான் கடிதத்தில் குறிப்பிட்ட விஷயங்கள் குறித்து, நடுநிலையாளர்கள் என்ன முடிவெடுக்கப் போகிறீர்கள்? என்ற கேள்வியை மாத்திரம் இங்கு வைக்கிறேன்.

“சமயத்திற்காக (மதத்திற்காக) ஒருவன் சாகத் தயாராக இருக்க வேண்டும். ஆனால் சாகும் முன்னர் பகைவர்களைக் கொல்ல வேண்டும். அங்ஙனம் கொன்ற பின்னர் அவன் தன் சொந்த ராஜ்யத்தைத் திரும்பப் பெற வேண்டும்‘ இது இராமதாஸ் சுவாமிகளின் அருள் வாக்கு” *

(* வீர சவர்க்கார், தமிழாக்கம் இராம. அண்ணாமலை, பாரத நாட்டின் வரலாற்றில் ஆறு பொன்னேடுகள், 4-ம் பாகம், சென்னை, 1991, பக். 84.)

இதனை நன்கு அறிந்த சிவாஜி அதன்படியே செயல்பட்டார் என்பதனை எவரும் மறுத்திட இயலாது.

அன்னையிடம் கொடுத்த வாக்குறுதி

“அம்மா! கவலைப்படாதீர்கள். உறுதியாகச் சொல்கிறேன். இந்த 32 பல் ஆட்டை இன்று பவானி மாதாவின் பலி பீடத்தில் பலி கொடுக்கிறேன்” இவ்வாறு தனது அன்னை ஜீஜாபாயிடம் வாக்குறுதி தந்துவிட்டு அப்ஸல்கானை சந்திக்க வந்தவர் சிவாஜி.

கொலைக்குப் பின் நடந்த கொடூரமும், கொள்ளையும்

for two prahars (6 hours) a frightful battle was fought. Several died camels killed. A heay srlaughter was made as they fought. The dead could not be numbered, Blood flowed like river. A desperate fighting took place.

Elephants male and female	-	65
Horses	-	4000
Camels	-	1200
Jewels worth Rs.	-	3,00,000
Clothes	-	2000 bundles
Coins, Mohors, and Gold Coins worth	-	7,00,000

All the guns and artillery were captured. The Officers were captured.

அப்ஸல்கான் படுகொலை செய்யப்பட்டதற்குப் பின்பும் 6

மணி நேரம் கடுமையான சண்டை நடைபெற்றது. இரத்தம் ஆறாக ஓடியது. இறந்தவர்களின் எணணிக்கைக்கு அளவே இல்லை. யானைகளும், குதிரைகளும் , ஒட்டகங்களும், தங்க நாணயங்களும் இன்ன பிற பொருட்களையும் சிவாஜி கைப்பற்றிய செய்தியினை சுரேந்திரநாத் சென் என்ற வரலாற்றாசிரியர் தெரிவித்திருக்கிறார்.

சிவாஜி அப்ஸல்கானைப் படுகொலை செய்ததற்கு இன்னும் எண்ணற்ற சான்றுகளைச் சொல்லிக் கொண்டே செல்லலாம்.

கிருஷ்ணஸ்வாமி சர்மா

சுதந்திரப் போர்க்களத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட தியாகசீலர் கிருஷ்ணஸவாமி சர்மா. செக்கிழுத்த செம்மல் வ.உ.சி.யின் காலத்தில் போராடியவர். கவுண்ட்லியோ டால்ஸ்டாய், இந்திய மாதர்களின் நிலைமை, இந்தியாவின் கல்வி முதலிய நூல்களின் ஆசிரியர். அவர் 1919இல் “சிவாஜி மஹாராஜா” என்றும் நூலை வெளியிட்டார். அதில் அப்ஸல்கான் படுகொலை குறித்து சொல்லியிருக்கும் விஷயத்தை பார்ப்போம்.

“வாசா ஞானத்தையே சாதாரணமாக அவலம்பித்து வரும் கேவல தத்துவநீதியர்கள் எளிதில் முடிவுக்கு வரக்கூடும். கீரியா ஞானத்தையே அனவரதமும் அவலம்பித்து வரும் லௌகீக தத்துவ நீதியர்கள் அவ்வளவு சீக்கிரத்தில் முடிவுக்கு வரமாட்டார்கள்.

எக்காலத்திலும் தோஷமில்லாமல் ஒருவர் இருக்க முடியாது. சிவாஜி சுயஸம்க்ஷண நிமித்தமே செய்த இக்காரியம் குற்றமாக மாட்டாதென்பதே எமது அபிப்பிராயம். சிவாஜி காலத்தில் நீதிமுறைகள் இப்பொழுது இருப்பது போலில்லை. சாமானியமான நீதிமுறைமைக்கும், இராஜநீதி முறைமைக்கும் வித்தியாசமுண்டு. சத்ருக்களை வஞ்சகமாய்க் கொல்லுதல் முதலிய காரியங்கள் தோஷமற்றவையெனக் கூறுவர் சில ராஜதந்திரிகள். உபாயத்தினால் சத்ருக்களை வெல்லுவதும் தோஷமற்றவையே”.

ராமனுக்கு வாலி - கிருஷ்ணனுக்கு துரியோதனன்

ஸ்ரீ ராமபிரான் பூர்வம் மரம் மறைவில் இருந்து வாலியைக் கொன்றதும், மகாபாரத யுத்தத்தின் கடைசியில் - கிருஷ்ணபகவான் பீமனுக்குத் தன் தொடையைக் காட்டித் துரியோதனைக் கொல்ல வைத்ததுமான இவ்விஷயங்களை சிவாஜி தன் சிறு வயதினின்றுமே கேட்டுக் கொண்டிருந்த படியால் அப்ஸல்கானை வதைத்தது நியாய விரோதமென்று

அவருக்குத் தோன்றவில்லை. இதெல்லாமல் சிவாஜி காலத்தில் பகைவர்களை வஞ்சித்துக் கொல்வதே இயற்கையாயிருந்தது. பீஜாபூர் சமஸ்தானத்தில் இத்தகைய கொலைகள் காரணமாக சம்பவித்திருந்தன. சத்துரு விநாசம் முக்கியமாக அக்காலத்தில் உபாயத்தினாலும், வஞ்சனையினாலுமே நடந்து வந்தது.

கிருஷ்ணஸ்சுவாமி சர்மா அவர்களின் அபிப்பிராயத்தை நடுநிலையாளர்கள் எண்ணிப் பார்க்கட்டும். தங்களின் மனதிற்குள்ளேயே அப்ஸல்கான் குற்றவாளியா? சிவாஜி குற்றவாளியா? என்பது பற்றி முடிவெடுத்துக் கொள்ளட்டும்.

ஷையிஸ்ட்கானும் சிவாஜியும்

அப்ஸல்கானை சிவாஜி துரோகமாக, நயவஞ்சகமாக படுகொலை செய்ததற்குப் பின்னர் பீஜப்பூர் ராஜ்யம் முழுவதும் கலக்கமும், கவலையும் குடிகொண்டன.

பீஜப்பூர் அரசர் நம்பிக்கை இழந்து மனத் தளர்ச்சியாய் இருந்தாலும் சிவாஜியை எதிர்ப்பதென்று முடிவு செய்து எங்கும் உள்ள தனது சேனைகளைத் திரட்டினார்.

சித்தி ஜோகர்

சித்தி ஜோகர் என்ற அபீசினியா தேசத் தளபதியை தமது படையின் தளகர்த்தராக நியமித்தார். அவருக்குத் துணையாக இரண்டாம் தளகர்த்தராக கொல்லப்பட்ட அப்சல்கானின் மகன் பாஜல் முஹம்மதுவை அனுப்பி வைத்தார்.

ஜாஞ்ஜிரா கோட்டைத் தலைவரான பதீகான் (Fateh Khan) என்பவரை மேற்கே கடற்கரையிலுள்ள கொங்கன் (Konkan) தேசம் முழுவதையும் கைப்பற்றக் கட்டளையிட்டார்.

பெரிய நிலச்சுவான்தாரரான, சவந்தவாடியின் (Sawantwadi) தலைவனுமான சவந்தனை தெற்கிலிருந்து சிவாஜியைத் தாக்கும்படி கட்டளையிட்டார் பீஜப்பூர் அரசர்.

சித்தி ஜோகர் மிக்க அனுபவம் பெற்றவர். அவர் சிவாஜியை பன்ஹலக் (Panhala) கோட்டையை விட்டு வெளிவராதபடி அடைத்துக் கொண்டார்.

சிவாஜியின் படைப்பிரிவில் நேத்தாஜி பால்க்கார் தன்னிடமிருந்த குதிரைப் படையைக் கொண்டும் சித்தி ஜோக்கரை எதிர்த்து போர் புரிந்தபோதும், சித்தி ஜோகர் பயப்படாமல் எத்தனை சேனைகள் தன்னை எதிர்த்து வந்தபோதும் அத்தனையையும் துரத்தியடித்து முற்றுகையை நடத்தி வந்தார்.

தொடரும் ஏமாற்று வேலை

பல்வேறு நிலைகளில் பிறரை ஏமாற்றி ஏமாற்றி தனது படைச் செல்வாக்கை உயர்த்திக் கொண்ட, வளர்த்துக் கொண்ட சிவாஜி மீண்டும் அதே வேளையில் இறங்கினார். 'தான் சரண்அடைய விரும்புவதாகவும், பன்ஹலர் கோட்டையை சித்திஜோகர் கையில் ஒப்படைக்கச் சித்தமாய் இருப்பதாகவும் தெரிவித்தார் சிவாஜி. தான் நேரில் வந்து சந்தித்துப் பேச அனுமதி அளிக்குமாறும் வேண்டினார். 'படையெடுப்பு காரியம் எளிதாக முடிந்தது' என்ற கருத்துடன் சித்தி ஜோகர் அதற்குச் சம்மதித்தார்.

ஒரு நாள் இரவில் இரண்டு துணைவர்களுடன் சிவாஜி சித்தி ஜோகரைச் சந்தித்தார். சரண் அடைவதற்கான நிபந்தனைகளைப் பற்றி பகல் முழுவதும் பேசினார்கள். சிவாஜியும் சித்தி ஜோகரும். ஆனால் இரவோடு இரவாக, பீஜப்பூரின் சைனியம் மறுநாளைய சமாதானத்தை எண்ணி அன்று இரவு கண்காணிப்பைச் சிறிது தளர்த்தி கவனக் குறைவாக இருந்தபோது ஒரு சில துணைவர்களுடன் பன்னாலாவை விட்டு யாரும் அறியாதபடி வெளியேறி, வடக்கே மராட்டிய சைனியம் முகாமிட்டிருந்த ரங்கானா கணவாயை நோக்கி சிவாஜி விரைந்தார்.'

சிவாஜியைத் துரத்திக் கொண்டு, ஏமாற்றப்பட்ட சித்தி ஜோகர் சென்றார். ரங்கானாவிலிருந்து மராட்டியப்படை மிகச் சிறியது. எனவே பீஜப்பூர் படையோடு போரிட்டு வெல்ல முடியாதென்ற நிலையில் சிவாஜி மேலும் பின் வாங்கி ஓடினார். போர்கள் தொடர்ந்தன. நாட்கள் பல கடந்தன.' போர் செய்து களைத்திருந்த சிவாஜியும், பீஜப்பூர் அரசினரும் நிரந்தர சமாதானத்திற்கு வந்தனர். சிவாஜியின் கோரிக்கைகள் ஏற்கப்பட்டன.

பம்பாயிலிருந்து கோவா வரையுள்ள கடற்கரைப் பகுதியும், தட்சிணப் பீடபூமியில் கிழக்கே இந்தாப்பூர் வரையுள்ள பிரதேசமும் கைப்பற்றிய கோட்டைகளும் அடங்கிய பூமிக்கு சிவாஜி சுதந்திர ஆட்சித் தலைவராக அங்கீகரிக்கப் பட்டார்.

மொகலாயப் பேரரசுடன் போர்

மௌரிய சாம்ராஜ்யத்திற்குப் பின்னர் மொகலாயப் பேரரசுக்கு இணையான ஒரு பேரரசு இந்திய மண்ணில் தோன்றவில்லை.

ஆற்றல், பெருமை, திறமை, கட்டிடக்கலை, தோட்டக்கலை

சமயற்கலை, ஆகிய அனைத்திலும் மொகலாயப் பேரரசு ஒப்புயர்வற்று விளங்கிற்று.

முகலாயப் பேரரசின் பகுதிகளான அவுரங்கபாத் வரையிலுள்ள பகுதிகளை சிவாஜி கொள்ளையிட்டார். இதை அறிந்த மாமன்னர் ஔரங்கஜேப் சிவாஜியை அடக்கத் திட்டமிட்டார்.

மெகாலய சாம்ராஜ்யத்தின் முதன்மையான பிரபுவும், தனது மாமனுமான ஷெயிஸ்ட்டகானை ஔரங்கஜேப் தட்சிணத்திற்கு அனுப்பி வைத்தார்.

நூறாயிரம் குதிரை வீரர்களும், ஒரு பட்டாணியக் காலாட் படையும், அநேக பீரங்கிகளும் அவருடன் சென்றன. ஔரங்கஜேப்பின் தளபதியான ஜஸ்வந்த் சிங், ஷெயிஸ்ட்டகானுக்குத் துணை புரியும் 10,000 படை வீரர்களுடன் காத்திருந்தார்.

ஷெயிஸ்ட்டகான் பரண்டோ என்ற கோட்டையைக் கைப்பற்றினார். முகலாய உப தளபதி கர்த்தலப்கான் (Kartalap khan) உதவியுடன் கல்யான் பகுதியை விடுவித்தார். ஷெயிஸ்ட்டகானின் படைகள் தெற்கு நோக்கி வருவதைக் கண்ட சிவாஜி தெற்கு நோக்கி நகர்ந்து கொண்டே சென்றார்.

ஷெயிஸ்ட்டகான் சகணத்தை விட்டு பூனாவிற்குச் சென்றார். அங்கு சிவாஜியின் மாளிகையிலே தங்கிக் கொண்டார்.

மாறு வேஷத்தில் நடந்த மோசடி

பூனாவிற்குச் செல்லும் பாதைகள் அப்போது பலமாகக் காவல் புரியப்பட்டு வந்தது. மற்றவர்கள் எவரும் பூனாவிற்குள் நுழையவோ, அந்நகரத்தைவிட்டு வெளியேறவோ முடியாதபடி எல்லாக் கோட்டை வாசல்களையும் வீரர்கள் இரவும் பகலுமாக காவல் புரிந்து வந்தனர்.

மொகலாயப் படையில் சேவை செய்து வந்த இந்து வீரர்கள் சிலர், நகர நிர்வாக அதிகாரியிடம் வந்து, தங்கள் நண்பன் ஒருவனுடைய திருமண ஊர்வலத்தை இந்து சம்பிரதாய முறைகளுடன் அந்த நகரத்திற்குள் அனுமதிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டபோது, அவர்களுடைய வேண்டுகோளை அங்குள்ள மொகலாயக் கவர்னரால் மறுக்க முடியவில்லை. அதற்கு அனுமதி தந்தார். அந்த அனுமதியின் அடிப்படையில் தான் திருமண ஊர்வலம் உள்ளே நுழைந்தது. கோட்டை வாயிலில் நின்ற காவலர்கள் சந்தேகம் கொள்ளாது திருமண ஊர்வலத்தை நகருக்குள் அனுமதித்தனர்.

இந்துக்களின் உணர்வைப் பாதுகாத்த முகலாய அரசு

இந்துக்களின் திருமண நிகழ்ச்சிக்காக அவர்களது பழக்க வழக்கங்களின்படியும், பண்பாட்டின்படியும் ஊர்வலமாகச் செல்ல அவர்களுக்கு அனுமதி வழங்கியவர் மொகலாயக் கவர்னர்.

மாமன்னர் ஔரங்கஜேப்பின் ஆட்சிப் பொறுப்பின் கீழ் இருக்கும் பகுதியில் தான் பிற மதத்தவர்களையும் மதித்து அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றிடும் செயலில் ஔரங்கஜேப்பின் ஆட்சியாளர்கள் இருந்தார்கள் என்பதற்கு சிவாஜியின் வரலாற்றில் இது ஒரு அசைக்க முடியாத சான்றாகும்.

ஔரங்கஜேப் மதவெறி பிடித்தவர் என்று துவேஷ உணர்வுடன் சொல்பவர்கள், அவர்களையறியாமலேயே ஔரங்கஜேப் ஆட்சியின் சமயப் பொறையை ஒப்புக்கொள்கின்ற சம்பவம் இது.

சூரத்தை சூறையாடிய சிவாஜி

‘சிவாஜி இராஜ தந்திரத்தில் மகா நிபுணர். தம்முடைய காரியம் ஜெயமடைவதாயிருந்தால் அவர் பின் விளைவுகளைச் சிறிதும் கவனிக்கமாட்டார். தாம் செய்த சண்டைகளிலெல்லாம் ராஜ தந்திரத்தையும், புத்தி சாதுர்யத்தையும் உபயோகித்து அவர் வெற்றியடைந்தாரேயல்லாமல் அதிகமான படைகளின் உதவியாலும், தேகக் கஷ்டத்தாலும் வெற்றியடையவேயில்லை என்பது நிச்சயம்.’ சூரத் கொள்ளை விஷயத்திலும் சிவாஜி அவ்வாறே நடந்து கொண்டார்.

சூரத் நகரம்

சூரத் நகரம் இந்தியாவிலேயே அதிகமான செல்வம் படைத்த வணிக நிலையமாக விளங்கியது. அங்கிருந்து ஆண்டுதோறும் பெரிய பயணக் கப்பல்கள் புனித ஹஜ் பயணத்திற்காக மக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றன. அராபியக் கப்பல்களும், சீன மரக்கலங்களும் பிரான்ஸ், இங்கிலாந்து, ஹாலந்து, போர்ச்சுக்கல் முதலிய நாடுகளைச் சேர்ந்த நாவாய்களும் அந்நகரத்தின் முக்கிய கடைகளில் வாணிபம் செய்யும் பொருட்டு, ஐரோப்பிய, ஆப்பிரிக்கக் கண்டங்களிலிருந்து பண்டங்களையும், பல்வேறு இனங்களைச் சேர்ந்த வணிகர்களையும் ஏற்றிச் கொண்டு அங்கு வந்தன.

‘அந்நகரத்தின் சுங்க வருமானம் மட்டும் ஆண்டொன்றுக்கு ஏழாயிரத்துக்கும் அதிகமானபவுன்களாக இருந்தது’ என்று சரித்திர ஆசிரியர் டென்ஸ்கின் கெண்டு குறிப்பிடுகிறார்.

மொகலாய சாம்ராஜ்யத்தின் வாசல் போன்று விளங்கியது சூரத்.

கி.பி. 1663 டிசம்பர் 6-இல் ராஜ்கரிலிருந்து சிவாஜி புறப்பட்டு, 1664 ஜனவரி 5, செவ்வாய்க்கிழமை சூரத் அருகே முகாமிட்டார்.

பணயக்கைதிகளும், பணம் பறிப்பும்

சூரத் நகரம், பீஜப்பூர் அரசருக்குட்பட்டதல்ல, மொகலாயப் பேரரசுக்குட்பட்ட துறைமுகம் என்பதனை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். 1664 ஜனவரி 10-இல் இந்நகரை சிவாஜி கொள்ளையிட்டார். முதல் நாள் 12 லட்ச ரூபாய் கிட்டியது சிவாஜிக்கு.

‘சூரியனையே இருள் கவ்வும் அளவுக்குப்பெரிய மேகக் கூட்டத்தைப் போல் திரண்டெழுந்த புகை மண்டலமானது, தொடக்கத்தில் பகலை இரவாக மாற்றியதைப் போல, நெருப்புச் சுவாலையானது. பின்னர் இரவைப் பகலாக மாற்றிற்று’ என்று சூரத் நகரம் இந்தக் கொள்ளையின் போது தீப்பற்றி எரிந்ததை ஆங்கிலேய மதகுரு ஒருவர் எழுதி வைத்துள்ளார்.

ஹென்றி ரெவிங்க்டன் (Henty Revington) ரிச்சர்ட் டெய்லர் (Richard Tayler)) ராண்டல்ப் டெய்லர் (Randolph Tayler) ஃபிலிப்கிப்பர்ட் (Philip Gybbord) எனும் கிழக்கிந்தியக் கம்பெனியின் 4 காரணிக்கர்களை சிவாஜி கைது செய்தார். பின் அவர்களை விடுதலை செய்ய பெருந்தொகை கேட்டார்.

பஹர்ஜி போரா (**Baharji Bohrah)**

போரா வம்ச இஸ்லாமிய இனத்தலைவர் பஹர்ஜி போரா. இவரது வீடு கொள்ளையடிக்கப்பட்டு, 80 இலட்ச ரூபாய்களை இவரிடமிருந்து சிவாஜி எடுத்துக் கொண்டார்.

ஹாஜி பேரு

ஹாஜி செய்யது பேருவின் மாளிகை ஆங்கிலேயர்களின் தொழிற்சாலையை அடுத்து இருந்தது. அவரின் மாளிகைக்குள் புகுந்து அங்குள்ள செல்வம் அனைத்தையும் மராத்தியர்கள் கொள்ளையிட்டனர். அதோடு அவரது மாளிகையையும் தீ வைத்து சாம்பலாக்க முயன்ற போது அதனை ஆங்கிலேய வீரர்கள் தடுத்துக் காத்தனர். காரணம் முஸ்லிம் பிரமுகரின் மாளிகை தீப்பற்றி எரிந்ததால் அடுத்து இருக்கும் தங்கள் தொழிற்சாலையும் தீக்கிரையாகிவிடும் என்று அஞ்சியே அவர்கள் அவ்வாறு செய்தனர்.

ஹாஜி காசீம்

சூரத்தில் பெரும் பணக்காரரான ஹாஜி காசீம். இவரது வணிக நிலையமும், வீடும் மராத்திய சேனையால் திட்டமிட்டு கொள்ளையடிக்கப்பட்டது.

ஹஜ் யாத்திரைக் கப்பலும் கொள்ளை!

சூரத்திற்கு அருகிலிருந்த ஜுயூல், பாயல் துறைமுகங்களைச் சூறையாடிய சிவாஜி பொது மக்களையும், முஸ்லிம் தனவந்தர்களையும் கொள்ளையடித்ததோடு மட்டுமல்லாமல், மக்காவிற்கு ஹஜ் புனித யாத்திரை செல்லும் முஸ்லிம்களின் கப்பலையும் கொள்ளையடித்தார். He had seized the ports of jiwal, Pabal ant others near Surat ant attacked the vessels of Pilgrims bound to Mecca என்று காபிகான் தனது 'Muntakhadul Lubab' இரண்டாவது வால்யூம் பக்கம் 177-ல் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

.....Thy took some Moghul ships bound to Mecca and extracted ransoms from all the rich pilgrims proceeding to the Shrine of their Prophet.

மக்காவிற்குச் செல்லும் முஸ்லிம் புனித யாத்திரிகளின் கப்பல்களை சிவாஜி சூறையாடிய செய்தியினை மராத்திய வரலாற்றை எழுதிய ஜேம்ஜ்கிராண்ட்டம் உறுதிப்படுத்துகிறார்.

கொள்ளையில் இறங்கி பெரும் பணத்தை அபகரித்துக் கொண்ட சிவாஜி தனக்குத் தேவையான பணம் சூரத் நகரத்திலேயே கிடைத்து விட்டதால் சூரத்திலிருந்து திரும்பும் நோக்கத்திலேயே இருந்தார்.

கோடிக்கணக்கில் கொள்ளை

'கொள்ளை', 'சூறை', 'சூறைப் பொருள்', 'கொள்ளைஆதாயம்', 'கொள்ளையிடு', 'சூறையாடு', 'போரில் பறி', 'திட்டமிட்டுப் பறி', 'பிறர் பொருளைக் கையாடு', 'கப்பலில் சரக்குகளைத்திருடு', என்று பொருள்படும் 'Plunder' சூரத்தில் நடந்தது. இதனை நடத்தியவர் சிவாஜி. சூரத் கொள்ளையின் வாயிலாக சிவாஜி கோடிக்கணக்கான பணத்தை கைப்பற்றிக் கொண்டாரென்று பேராசிரியர் ஜாதுநாத் சர்க்கார் தெரிவித்திருக்கிறார்.

சிவாஜியின் சரணாகதி

'புராதன சரித்திர விவரங்கள்' என்ற பழைய நூலில் பக்கம் 18இல் சிவாஜியின் சூரத் கொள்ளையைப் பற்றிப் குறிப்பிட்டுள்ள செய்தியை இங்கே மேற்கோள்காட்ட வேண்டிய

அவசியமாகிறது.

‘ஆயினும் 1664-ம் வருஷத்தில், செல்வமும் சமாதானமுமே பெரிதாக நினைத்து ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் சூரத்திலே வர்த்தகம் செய்து கொண்டிருக்கையில், மராட்டிய ராஜ்யத்தை ஸ்தாபித்த மூலபுருஷனான சிவாஜி என்பவன் அந்நகரத்தை மொகலாய ராஜாக்களிடத்தினின்றும் அபகரித்துக் கொள்ள வேண்டுமென்று முயலவே அந்த சந்தர்ப்பத்தில் அதைக் காத்துக் கொள்ள தங்கள் வீரத்தைக் காட்டும்படி நேரிட்டது. அதுதான் ஆங்கிலேயர் ஆயுதமெடுத்ததற்கு ஆரம்பம். அதுமுதல் இத்தேசத்தில் வசிக்க ஆங்கிலேயருக்கும் சைனியம் அவசியமாயிற்று’. (இதன் நூலில் முகப்பு பக்கம் கிடைக்கவில்லை, ஆனால் இது சென்னை சுதேசமித்திரன் பிரஸில் அச்சடிக்கப்பட்டு, திருச்சிராப்பள்ளி எஸ்.சி. ராமானுஜலு நாயுடு அவர்களால் வெளியிடப்பட்டநூல் ஆகும்.) சிவாஜியின் சூரத் கொள்ளையானது ஆங்கிலேயரை மட்டுமின்றி, ஆலம்கீர் ஔரங்கஜேப் அவர்களையும் போர்க்கோலம் பூணச் செய்தது.

மனதிலே ஒன்று மடலிலே வேறொன்று

ஆனால் இவ்வளவையும் செய்து விட்டு சிவாஜி, மீண்டும் ஔரங்கஜேப் அவர்களுக்கு தன்னை மன்னிக்க வேண்டும், காப்பாற்ற வேண்டும் என்று கடிதம் எழுதினார். ‘மிகுந்த மரியாதையுடன் சமர்ப்பிக்கிறேன்’ என்று துவங்கும் கடிதத்தை 1665 ஜூன் மாதம் எழுதினார் சிவாஜி. 33 வரிகள் உள்ள அந்த கடிதத்தின் சில வரிகளை இங்கே சுட்டிக் காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

‘He hopes that out of store-house of (your majesty’s) grace, Pardon of offences and cherishing of offenders, life to this slave may be granted, and an imperial farman may be issued pardoning his offences. Granding security to his house and family and bestowing life on him, (SIR JADUNATH SARKAR. ‘House of Shivaji’ Studies and documents of Maraths History Royal Period 1948. Pages 149.

கடிதத்தை நம்பத் தயாராக இல்லாத நிலையில் ஆலம்கீர், முகலாயத் தளபதி ஜெய்சிங் என்பவரைத் தக்காணத்தின் ஆளுநராக நியமித்தார். சிவாஜிக்கு எதிரான போர் நடவடிக்கைகளில் இறங்கிட உத்தரவிட்டார்.

புரந்தர் பிடிபடல்

1665 மார்ச் 31இல் சிவாஜியைக் கைது செய்யும்

நோக்கத்துடன் புரந்தர் கோட்டை முற்றகையிடப்பட்டது. திலேர்கான் (Diler khan) உதவியுடன் பஜ்ராஹர் கோட்டை கைப்பற்றப்பட்டது. புரந்தர் கோட்டை முற்றுகை தொடர்ந்தது. முகலாயர் தரப்பில் 4,00,000 குதிரைப் படையும், 500 யானைகளும், 30 இலட்சம் ஒட்டகங்களும், போர் வீரர்களுக்கு வேண்டிய பொருட்களை ஏற்றிக் கொண்டு சென்ற ஒரு கோடி காளைகளும் சென்றன. முகலாயப் பெரும்படையைக் கண்டு, வழக்கம் போல சிவாஜி சமாதானத்திற்கு வருவதுபோல தகவல் சொல்லி அனுப்பினார். அத்தோடு பரிசுப் பொருட்களையும் அனுப்பி வைத்தார். சிவாஜியை நம்பாத நிலையில் முகலாயத் தளபதி ஜெயசிங்கோ அதனைத் திருப்பி அனுப்பினார்.

1665 ஜூன் 2-இல் புரந்தர் கோட்டை முற்றுகைக்குள்ளானது. இறுதியாக ஜூன் 11 காலை 9 மணிக்கு ஜெங்சிங்கும் - சிவாஜியும் சந்திக்க ஏற்பாடாயிற்று.

மன்னியுங்கள் அல்லது கொல்லுங்கள்

‘நான் குற்றம் புரிந்த அடிமையைப் போன்று மன்னிப்பை நாடி வந்துள்ளேன். உங்கள் விருப்பத்தின் பேரில் நீங்கள் என்னை மன்னியுங்கள். அல்லது கொல்லுங்கள். நான் முகலாயப் பேரரசர் ஔரங்கஜேப்பின் அதிகாரிகளிடம் கொங்கணில் உள்ள கோட்டைகளை ஒப்படைத்து விடுகிறேன். நான் என்னுடைய மகனைப் பேரரசின் பணியில் சேருவதற்கு உங்களுடன் அனுப்புகின்றேன். என்னைப் பொறுத்தவரை ஓர் ஆண்டு இடைவெளிக்குப் பிறகு, பேரரசருக்கு என்னுடைய மரியாதைகளைத் தெரிவித்த பின்னர், அரசின் பிற பணியாட்களைப் போல அவரவர் தத்தம் மாகாணங்களில் அதிகாரத்தைச் செலுத்துவது போன்று, நானும் என்னுடைய மனைவி மக்களுடன் ஓரிரு கோட்டையில் வாழ அனுமதிக்கப்படுவேன் என்று நம்புகிறேன். எப்பொழுதும் எங்கு இருப்பினும் என்னுடைய பணிகள் தேவைப்பட்டால், உத்தரவு வந்ததும், விசுவாசத்துடன் நான் என்னுடைய கடமைகளைச் செய்வேன்’ என்று குழைவான சொற்களால் முகலாயத் தளபதி ஜெய்சிங்கை நம்ப வைத்தார்’ சிவாஜி.

பெருங்கருணையும், பரிசளிப்பும்

அதன்பின் முற்றுகை முடிவுக்கு வந்தது.

திலேர்கான் சிவாஜிக்கு வாள் ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார். சிவாஜி ஒரு நொடியில் வாளின் மீது பிரமாணம் செய்து முகலாயப் பேரரசுக்கு நன்றி உள்ள பணி செய்வதாக

வாக்குறுதி அளித்தார்.

சிவாஜியை மன்னிக்க வேண்டுமென்று ஜெய்சிங், ஆலம்கீர் ஔரங்கஜேப் பிறகு மடல் தீட்டினார். உடனே அவரை மன்னித்தும், அவருக்கு பட்டாடை ஒன்றைப் பரிசாகவும் ஔரங்கஜேப் அனுப்பி வைத்தார்.

சிவாஜியின் எட்டு வயது மகன் சாம்பாஜிக்கு முகலாயப் படையில் 5000 குதிரை வீரர்களுக்குத் தலைவன் என்ற அந்தஸ்து வழங்கப்பட்டது.

சிவாஜி தனது குடும்பத்தோடு குன்றுகளில் வாழ அனுமதி அளிக்கப்பட்டது. பேரரசரின் படைகளுக்கு தேவைப்பட்டால் சிவாஜி வர வேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுப்பப்பட்டார்.

ஜெய்சிங்கின் முயற்சியின் காரணமாக சிவாஜியும் அவரது மகன் சாம்பாஜியும் ஆக்ரா சென்று பேரரசர் ஔரங்கஜேப்பைச் சந்திக்க ஏற்பாடு ஆனது.

1666 மார்ச்ச 5ல் 4000 படை வீரர்களுடன், சிவாஜியும், சாம்பாஜியும் புறப்பட்டு ஆக்ரா நோக்கி விரைந்தனர்.

பிஞ்சு உள்ளங்களில் நஞ்சு

முகலாய சர்க்கரவர்த்தி ஆலம்கீர் ஔரங்கஜேப்பை ஆக்ராவிற்கு நேரிலேயே சென்று சந்தித்தார். மாவீரர் சிவாஜி, ஔரங்கஜேப்பை சிவாஜி சந்தித்தபோது வரலாற்று ஆசிரியர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். மாறுபட்ட கருத்து அதிலேதுமில்லை. அனால் ஔரங்கஜேப்பை சிவாஜி சந்தித்தபோது, சிவாஜிக்குரிய மரியாதையை ஔரங்கஜேப் வழங்கவில்லை. அவமானப்படுத்தினார். அதனால் அத்திரங்கொண்டார் சிவாஜி. உடனே ஔரங்கஜேப் அவரை சிறையில் அடைத்தார் என்றும், சிறையிலிருந்து பழக்கூடைகள் மூலம் சிவாஜி ஔரங்கஜேப்பை ஏமாற்றி தப்பிச் சென்றார் என்றும் பள்ளிகளில் போதிக்கப்படுகிறது. கல்விக் கூடங்களில் கற்றுத் தரப்படுகிறது. பிஞ்சு உள்ளங்களில் நஞ்சைத் தூவுகிறார்கள். இளம் நெஞ்சங்களில் இன துவேஷத்தை வளர்க்கிறார்கள்.

இது நியாயம்தானா? நடுநிலையாளர்களே, நல்லவர்களே உங்கள் நெஞ்சத் தராசில் நான் தரும் விஷயங்களை நடுநிலையோடு எடைபோட்டுப் பாருங்கள். நல்ல முடிவுக்கு வாருங்கள். உண்மை வரலாற்றை அப்போது உணருங்கள்.

பகவதி சரண் மிஸ்ரா

சிவாஜி, தனது ஒன்பதாவது வயதான மூத்த மகன் சம்பாஜி 500

மெய்க்காவல் குதிரை வீரர்கள், பல்லக்கு தூக்கிகள் சில பணியாட்கள், துபாஷிகள், பூஜை செய்விக்கும் புரோகிதர்கள் ஆகியோர்களுடன் ஔரங்கஜேப்பைச் சந்திக்க புறப்பட்டார்.

கி.பி. 1666 மார்ச், புனா மண்டலத்துக்கு நீலாங்கோ பேரூரில்பாடி வீடு அமைத்துத் தங்கியிருந்தார் ராஜா ஜெயசிம்மர். அந்த வழியாகச் சென்ற சிவாஜி, ராஜா ஜெயசிம்மரைச் சந்தித்தபோது, உவகையும், மரியாதையும் மேலிட சிவாஜி வரவேற்கப்பட்டார். மாமன்னர் ஔரங்கஜேப் ஆக்ரா தர்பாரிலிருந்து அனுப்பிய அனுமதிக் கடிதமும், பட்டம், பரிசுகளும் அப்போது சிவாஜியிடம் கொடுக்கப்பட்டது. சிவாஜியின் வழிப்பயணச் செலவிற்காக ஒரு இலட்ச ரூபாய் பணமும் ஔரங்கஜேப் சார்பில் அளிக்கப்பட்டது.

பேரரசரைச் சந்திக்கப் புறப்பட்ட குழுவில், ராஜா ஜெயசிம்மரின் இளைய மகன் கீர்த்திசிங் அனுப்பி வைக்கப்பட்டார்.

ஆக்ராவில் மிகச் செல்வாக்குடன் இருக்கும் அவரது மூத்த மகன் ராம்சிங்கிற்கு சிவாஜியின் வருகை குறித்து முன்கூட்டியே தகவலும் சொல்லி அனுப்பப்பட்டது.

முறையான வரவேற்பு

கி.பி. 1666 மே மாதம், ஆக்ரா கோட்டைவாசலில் ராஜா ஜெயசிம்மரின் மகன் ராம்சிங், பெரும் வணிகர் கிர்தாரீலால், முகலாய தளபதிகள் ஃபிதாயீகான், முக்லிஸ்கான் முதலியவர்கள் சிவாஜியை மரியாதையுடன் வரவேற்றார்கள். ஆக்ரா நகருக்குள் மூலக்சந்சராங் பகுதியில் கூடாரங்களும் மாளிகையும் கொண்ட தோட்டத்தில் சிவாஜியை பரிவாரங்களுடன் தங்க வைத்தார்கள். சிவாஜி வந்த செய்தி குறித்து ஔரங்கஜேப்பிற்கு தகவல் தரப்பட்டது.

‘நாளை தர்பாரில் உங்கள் வரவை பேரரசரிடம் விண்ணப்பித்து, நேர் தரிசனத்திற்கு நாள், நேரம் அனுமதி வாங்கி வருகிறேன். அடுத்த வாரம் பாதுஷாவின் பிறந்த தினவிழா தொடங்குகிறது. பெரிய தர்பார் கூடும். பிரமுகர்களை அப்போது பாதுஷா சந்திப்பதும், பட்டம் பரிசு வழங்குவதும் வழக்கம். உங்கள் காணிகைகளுடன் ஆயத்தமாக இருங்கள்’ என்று சிவாஜியிடம் கூறிவிட்டு, தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்து விட்டு ஔரங்கஜேப்பின் பிரதிநிதி சென்றார்.

சௌரி

இதுவரை சொல்லப்பட்டுள்ள செய்திகள் இஸ்லாமிய

எழுத்தாளர் யாரோ எழுதியதிலிருந்து எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது என்று எண்ணி விடாதீர்கள்.

பொள்ளாச்சி, நா.மகாலிங்கம் அவர்களை கௌரவ ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் 'ஓம் சக்தி' என்ற மாத இதழில், 1989 மே இதழில் 'ஜெய ஜெய பவானி' என்ற சரித்திரத் தொடர் ஆண்டுக் கணக்கில் வெளிவந்தது.

'பகவதிசரண் மிச்ரா' என்பவர் ஹிந்தியில் எழுதி, ஆய்வாளரும், எனது நண்பருமான திரு. சௌரி அவர்கள் தமிழில் மொழிபெயர்த்த அந்தத் தொடரில் ஆகஸ்ட் 1993இல் 'சிவாஜியின் ஆக்ரா பயணம்' 1998 செப்டம்பரில் 'கூண்டுப்புலி' என்று இரு அத்தியாயங்களிலிருந்தே மேலே சொன்ன விஷயத்தை எடுத்து தந்துள்ளேன்.

இரா. சாம்பசிவசர்மா

சென்னை ஜார்ஜ் டவுண் 1-1, செம்புதாஸ் தெரு, டி.வி. செல்லப்ப சாஸ்திரி அண்ட் சன்ஸ் நிறுவனத்தாரால் 31-8-1932 இல் 10 அணா விலையில் வெளிவந்த நூல் 'சிவாஜி' மராத்திய குலோத்தாரணன்' இது சென்னை அர்ச் காபிரியேல் உயர்தரக் கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் இலந்தையடிக் கவுணிய இரா.சிவ.சாம்பசிவ சர்மா அவர்களால் எழுதப்பட்டது. அதிலே அவர்கள் சொல்லுவதாவது -

வழிச்செலவிற்கு வழங்கிய தொகை

'....பின் இராஜகாரிலுள்ள தன் குடும்பத்தாரிடமும் முழு உத்தரவு பெற்றுக் கொண்டு, குமாரன் சம்பாஜியுடன் நம்பிக்கையுள்ள ஏழு தலைவர்கள் நான்காயிரம் வீரர்கள் புடைசூழ 1666 மார்ச் 5-ம் தேதி சிவாஜியுடன் ஆக்ரா செல்லப் பறப்பட்டனர். மொகலாயரும் ஒரு லட்சம் ரூபாய் வழிச் செலவிற்குக் கொடுத்து காஸீபெக் என்பவரை வழித்துணைக்கும் அனுப்பினர். செல்லும் வழியில் ஆக்ராவில் ஒரு வரவேற்புப் பத்திரம் பாதுஷாவிடமிருந்து சிவாஜிக்கு வந்தது. ஔரங்காபாத் சென்ற அங்கு பிரநிதியாயிருந்த சாப்ஷின்கானைக் கண்டு கொண்டு வழியெல்லாம் பாதுஷாவின் (ஔரங்கஜேப்) கட்டளைப்படி வெகுமானங்களையும், நன் மதிப்புக்களையும் பெற்று ஆக்ராவை அடைந்தான் (சிவாஜி). அடைந்ததும் ஔரங்கஜேப் கட்டளைப்படி இராமசிங்கும் மற்றொரு மொகலாயத் தலைவனும் எதிர்கொண்டழைத்து வந்து சிவாஜி தங்குவதற்கென அமைக்கப்பட்ட மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பன்னிரெண்டாந் தேதி பாஷாவும்

(ஔரங்கஜேப்) சிவாஜியும் சந்திக்கும் தினமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. நிவானியம் என்னும் அச்சபையில் சிவாஜியும், சாம்பாஜியும் மற்றும் பத்து தலைவர்களும் கமார் இராம்சிங்கினால் அழைத்து வரப்பட்டனர்.

மராத்திய தலைவனது (சிவாஜியின்) விஜயத்தின் பொருட்டு ஆயிரத்தைந்நூறு பொற்காசுகளும், ஆறாயிரம் ரூபாய்களும் தானமாக வழங்கப்பட்டன.

வெறுப்பா? வரவேற்பா?

ஔரங்கஜேப் , “சிவாஜி ராஜா வருக!” என்று கூறி வரவேற்றான். சிவாஜி சிம்மாசனத்திற்குச் சென்று மும்முறை (ஔரங்கஜேப்பிற்கு) சலாம் செய்தான். பின் அவனுக்காக தனிமையாக ஏற்படுத்தியிருந்த இடத்தில் சாதாரணத் தலைவர்களுடன் அவன் அமரத் தர்பார் நடந்தேறியது.”

இரா.சிவ. சாம்பசிவசர்மா சொல்லியுள்ள விஷயம் இது.

‘He was received by Aurengzeep with much courtesy.’

சிவாஜி நல்ல மரியாதைகளுடன் ஔரங்கஜேப்பால் உபசரிக்கப்பட்டார். வரலாற்று ஆசிரியர் ராபர்ட் ஓர்ம் எழுதி கி.பி.1805-ல் வெளிவந்துள்ள நூலில் காணப்படும் விஷயம் இது.

சிவாஜியிடம் ஔரங்கஜேப் நடந்து கொண்ட இந்த முறையானது வரவேற்பா? அல்லது வெறுப்பைப் பாட்டிய செயலா? உங்களின் சிந்தனைக்கே இதை விட்டுவிடுகிறேன்.

கனிவான வரவேற்பும் கயமையான கட்டுக்கதையும்

மாமன்னர் ஔரங்கஜேப் பின் வரலாற்றை விரிவாக எழுதிய வரலாற்றப் பேராசிரியர் ஜாதுநாத் சர்க்கார், சிவாஜி ஔரங்கஜேப்பின் தர்பாருக்குச் சென்றபோது, நடந்தது பற்றி என்ன சொல்லி இருக்கிறார்?

1919-ல் பீஹாரில் இந்திய அரசின் கல்வித்துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த போது ஔரங்கஜேப்பின் வரலாற்றின் நான்காவது பாகத்தை, மூன்று ரூபாய் எட்டணா விலையில் ஜாதுநாத் சர்க்கார் 420 பக்கங்களில் வெளியிட்டார். அந்த நூல் எம்.ஜி.சர்க்கார் அன் சன்ஸ் நிறுவனத்தால் கல்கத்தாவிலிருந்துவெளிவந்தது. அதில் 84-வது பக்கத்தில் -

Aurangzib graciously Cried out, “Come up, Shivaji Rajah!” Shivaji was let to the foot of the throne and made threes alams, சொல்லியுள்ள விஷயம் இது.

இன்முக வரவேற்பு

ஔரங்கஜேப் ‘graciously cried out’ என்றுச் சொல்லுகிறார். ஆங்கிலப் பேரகராதி இந்த வார்த்தைகளுக்குத் தரும் பொருளென்ன? ஆங்கிலம் - -தமிழ் சொற்களஞ்சியம், சென்னை பல்கலை கழகம் 1965-இல் வெளியிட்டது. தலைமைப் பதிப்பாசிரியர் டாக்டர் அ. சிதம்பரநாதர் செட்டியார் முகவுரை எழுதியது. டாக்டர் ஆ. லெட்சுமணசாமி முதலியார், அதில் பக்கம் 449-இல் ரீகூஸீணீநீவீஷீs என்ற வார்த்தைக்கு தந்துள்ள தமிழ் அர்த்தம் இதோ,

அன்புள்ள இன்முகமார்ந்த, கனிவார்ந்த அற ஆர்வமுடைய, நய ஆதரவான, பண்பமைதியுள்ள, அருள்பாலிக்கிற, கருணை நிறைந்த, மதிப்பு விட்டிறங்கிச் செயலாற்றுகிற, சலுகை தரும் பான்மை மேற்கொண்ட, தகவார்ந்த, சாதகமான சார்வு நலமுடைய என்று சொல்லப்பட்டிருக்கிறது. தன்னைக் காண வந்த சிவாஜியை, சிவாஜி ராஜா வருக’ என்று இன்முகத்துடன் வரவேற்றார் ஔரங்கஜேப் .

ஔரங்கஜேப் தன்னை நேரில் சந்திக்க வந்த சிவாஜியிடம் கனிவோடு நடந்து கொண்டார். ஆனால் இன்று சரித்திரம் இளம் நெஞ்சங்களில் நேர்மாறாகப் பதியும் வண்ணம் கற்றுத் தரப்படுகிறது என்பதையும் எண்ணிப் பாருங்கள்.

1939-இல் ஔரங்கஜேப்பின் சுருக்கமான வரலாறு என்ற நூலை 510 பக்கங்களின் வெளியிட்ட ஜாதுநாத் சர்க்கார் பக்கம் 213-இல் இதோ சம்பவத்தை அவ்வாறே தெரிவித்துள்ளார். 1920-இல் ‘SHIVAJI AND HIS TIMES’ (சிவாஜியும் அவரது காலமும்) நூலின் பக்கம் 157-இல் ஜாது நாத் சர்க்கார் இதோ சம்பவத்தை அவ்வாறே தெரிவித்துள்ளார்.

இவ்வளவிற்குப் பிறகும் சிவாஜியை வரவேற்காது ஔரங்கஜேப் அவமதித்தார் என்று சொல்கிறார்கள். ஏன்? உண்மையை மறைப்பது துஷேத்தை வளர்க்கத்தானே! இந்து முஸ்லிம் ஒற்றுமை உணர்வை குலைக்கத்தானே!

மன்சப்தார் பதவிகள்

ஜெயிசிங்கின் மகன் குமார் ராம்சிங், பேரரசருக்குச் சிவாஜியை அறிமுகப்படுத்தினார். பேரரசர் ஔரங்கஜேப் ஜெய்சிங்கிடம் ஆலோசித்த பின் சிவாஜிக்கு 5000 படை வீரர்கள் கொண்ட மன்சப்தார் எனப் பட்டம் சூட்டிக் கௌரவித்தார். ஆனால், “தனக்கு 7000 அந்தஸ்துள்ள மன்சப்தார் பதவியோ அளிக்கப்படவில்லை. மாறாக 5000 அந்தஸ்துள்ள மன்சப்தார்

பதவியே அளிக்கப்பட்டதுதமக்கு கௌரவக் குறைச்சல், ஔரங்கஜேப் தம்மை அவமானப் படுத்தி விட்டார்” என்று சிவாஜி ஆத்திரங் கொண்டார் என்ற சொல்கிறார்கள்.

ராஜ ஜெய்சிங் சிவாஜியுடன் செய்துகொண்ட பரந்தர் உடன்படிக்கையின்படி சிவாஜி இத்தகைய கௌரவமிக்க மன்சப்தாராகவே நியமிக்கப்படுவார் என்பதை ஏற்கனவே அறிவித்திருந்தார். இதில் அவருக்கு ஏமாற்றத்திற்கு இடமேதுமில்லை. அவமரியாதை என்பதற்கு அர்த்தமுமில்லை.

ஏனெனில் மன்சப்தார் பதவி பத்திலிருந்து, பத்தாயிரம் வரை இருப்பினும் முகலாய அரச பாரம்பரியத்தில் வந்தவர்களுக்கும் இளவரசர்களுக்கும் அன்றிப் பிறரொவருக்கும் 5000 க்கும் மேற்பட்ட மன்சப்தார் பதவி அளிக்கப்பட்டதில்லை.

சிவாஜியின் தந்தை ஷாஜி பான்ஸ்லே பேரரசர் ஷாஜிகான் 5000 அந்தஸ்துள்ள மன்சப்தார் பதவியே வழங்கியிருந்தார்.

ஔரங்கஜேப்பின் இந்துப்படைத்தலைவர்கள், முக்கியத் தளகர்த்தர்கள் பலருக்கு 5000 அந்தஸ்துள்ள மன்சப்தார் பதவியே வழங்கப்பட்டிருந்தது.

ராஜா ஜெய்சிங்

ராஜா ஜெய்சிங் ஜெய்பூரின் மன்னர். ஆலம்கீர் ஔரங்கஜேப்பின் தர்பாரில் மிகச் சிறந்த பிரபு. அதைவிட அவருக்கு அதிகமான சிறப்பு, அவர் மாவீரர் சிவாஜியை போரில் வெற்றி பெற்றவர். இவ்வளவுக்குப் பிறகும் அவரது தகுதியே 5000 மன்சப்தார் பதவிதான்.

மாவீரர் சிவாஜியை வெற்றி பெற்றதற்குப் பின்னர் ராஜா ஜெய்சிங்கிற்கு மன்ஸப்தார் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. ஆனால் சிவாஜிக்கு 5000 மன்சப்தார் பதவி அளிக்கப்பட்ட வேளையில் ராஜா ஜெய்சிங்கும் 5000 மன்சப்தார் பதவியின் நிலையிலேயே இருந்தார்.

முஹம்மது அமீன் முன்ஷி என்பவரின் மகன் மிர்ஜா முஹம்மத் காசிம் (Mirza Mohamed Kazim) கி.பி. 1688-இல் இயற்றி 1100 பக்கங்களைக் கொண்ட பெர்சிய மொழியில் எழுதப்பட, ‘ஆலம்கீர் நாமா’ (Alamgir Nama) நூலை வான்சிடார்ட், அறிஞர் எலியட் ஆகியோர் மொழி பெயர்த்துள்ளர்.

அந்த நூலின் பக்கம் 907-இல் வந்துள்ள செய்தியை மௌலானா ஷிப்லி நுஃமானி (MAULANA SHIBLI NOHMANI) ‘ஆலம்கீர்’ என்ற உருது நூலில் மேற்கோள் காட்டுகிறார்.

செய்யது சகாப்தீன் அப்துர் ரஹ்மான் அந்த நூலை ஆலம்கீர் (கிலிகிவிநிமிஸி) என்று ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். அந்த நூலில் பக்கம் 15-இல்.

“Our blased historian seems however ignorant of the fact that Raja Jaisingh himself didnot enjoy at time a higher rank. He was promoted to the rank of seven thousand as result of his triumphant victory over Sivaji...” (Alamgirnamah P.907)

பிரதமர் ஃபஜல்கான்

என்று ராஜா செய்சிங்கிற்கு சிவாஜியை வெற்றி பெற்றதற்காகப் பதவி உயர்வு அளிக்கப்பட்டதையும், ஆனால் அதேவேளையில், அவர் 5000 மன்சப்தார் நிலையிலேயே இருந்ததையும் தெளிவுப் படுத்துகிறார். ஔரங்கஜேப்பின் பிரதமராக இருந்த ஃபஜல்கான் (Fazalkhan) உதயப்பூரின் ராஜாராய்ச்சரண் போன்ற மிக மிக முக்கியமானவர்கள் கூட ஔரங்கஜேப்பின் படையில் 5000 மன்சப்தார்கள் நிலையில்தான் இருந்தார்கள்.

முகலாயப் படையிடம் தோற்று தனது கோட்டைகளை இழந்து ஹிஜ்ரீ 1075 துல்ஹஜ் மாதம் ஏழாம் நாள் முதல், வாளைக்கூட இடுப்பில் கட்டிக்கொள்ளாமல் இருந்து, ரபீயுல் அவ்வல் 26-ஆம் நாள் அதாவது ஏறத்தாழ நான்கு மாதங்களுக்குப் பிறகு ராஜா ஜெய்சிங்கின் உத்தரவின்படி, தனது இடுப்பில் வாளைக் கட்டிக் கொள்ள அனுமதி பெற்ற மாவீரர் சிவாஜியை, அதே ராஜா ஜெய்சிங்கின் வரிசையில் வைத்து கண்ணியப்படுத்தி, பெருமைப் படுத்தியவர் ஔரங்கஜேப். தனது அரச சபைக்கு வருவதற்கு இலட்ச ரூபாய் நிதி வழங்கியவர் ஔரங்கஜேப். ‘சிவாஜி ராஜா வருக’ என்று வரவேற்றவர் ஔரங்கஜேப்.

இதைவிட வேறென்ன சிறப்பை ஔரங்கஜேப்பிடம் எதிர்பார்த்தார் என்பது புரியவில்லை. கனிவான வரவேற்பில் கூட கயமையான கட்டுக்கதையைப் புகுத்தி, இல்லாததையும், பொல்லாததையும் எழுதி இட்டுக்கட்டி மத துவேஷத்தை வளர்க்கிறார்கள். இது நியாயந்தானா? என்கிற கேள்வியை உங்கள் முன் வைக்கிறேன்.

அடுத்து சிவாஜியை சிறை வைத்தார் ஔரங்கஜேப் . அதிலிருந்து தப்பினார் சிவாஜி என்கிறார்களே... அதிலே உள்ள உண்மைகள் என்ன?

அரச மரியாதை

மாமன்னர் ஔரங்கஜேப்பின் தர்பாரில் அலுவல்கள் துவங்கப்படுகிறபோது பிரதம அமைச்சர் உம்நாத்-உல்-முல்க் முதலில் அழைக்கப்படுவார். அவர் வந்ததும் வலது புறங்கையைத் தரையில் பதித்துப் பிறகு அதை மெதுவாக உயர்த்தியபடி எழுந்து நின்ற உள்ளங் கையால் உச்சந் தலையைத் தொடும் 'தஸ்லிம்' முறையில் அரசருககு மரியாதை செய்வார். இதுவே சக்கரவர்த்திக்கு மரியாதை செலுத்தும் முறை. இந்த முறையைச் செய்திடாமல், இலேசாகக் குனிந்தவாறு விரிந்த கரத்தினால் தனது நெற்றியை மும்முறை தொட்டு சர்க்கரவர்த்தி ஔரங்கஜேப்பிற்கு மரியாதை செலுத்தினார் சிவாஜி. அரண்மனை தர்பார் மண்டபத்தில் அப்படியொரு மரியாதை செலுத்தும் முறை அங்கே அது வரை நடைபெற்றதில்லை. அதற்கும் பிறகுதான் சிவாஜி 5000 மன்சப்தாராக நியமிக்கப்பட்டார்.

அரண்மனையில் காவல்

இதன்பின்னர்தான் சிவாஜியை ஜெயபுரி மாளிகைக்கு இராம்சிங் அழைத்துச் சென்றார். ஜெபுரி மாளிகையை அவர்கள் அடைந்ததும் சிறிது நேரத்திற்குள் குதிரைப் படைப்பிரிவு ஒன்று அம்மாளிகையை வளைத்துக் கொண்டது.

அம்மாளிகையை வளைத்துக் கொண்டிருந்த வீரர்கள் காவல்துறைத் தலைவர் போலத்கானின் (புலாத்கான்) (Fulad khan) நேரடிப் பார்வையில் இருந்தனர். அழைக்கப்பட்டாலெழிய அரண்மனைக்கு வரக் கூடாது என்றும் சிவாஜிக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ராகுநாதபந்துலு கோர்படே (Raghunath Pantulu korpade) என்பவரை ஔரங்கஜேப்பிடம் தூதாக அனுப்புகிறார் சிவாஜி. அவரது மூலம் "தன் சொந்த நாட்டிற்கு தன்னை அனுப்ப வேண்டுமென்றும், தான் பீஜப்பூர், கோல்கொண்டா நாடுகளைத் தாக்குவதில் ஔரங்கஜேப்பிற்கு உதவிகள் செய்கிறேன் என்றும்" செய்தியினை அனுப்பினார் சிவாஜி.

'சிவாஜி தன்னுடைய குமாரன் சாம்பாஜியை பிணையாக ஆக்ராவில் விட்டுப் போனால் மாத்திரம் விடுதலை கொடுப்பதாக' ஔரங்கஜேப் பதில் சொல்லியனுப்பினார். இதை ஒத்துக்ª காள்ள சிவாஜிக்கு சம்மதமில்லை'.*

ஆலம்கீர் அனுப்பிய பரிசுப் பொருட்கள்

'அம்மாளிகையை விட்டு வெளியேறக் கூடாது என்று சிவாஜிக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த போதிலும்,

ஔரங்கஜேப், சிவாஜிக்கு அன்புகலந்த செய்திகளையும், பரிசாகப் பழங்களையும் கூட அனுப்பி வந்தான்' என்பதிலிருந்து சிவாஜியை ஔரங்கஜேப் கைதியாக நடத்தியதாகத் தெரியவில்லை. அது மட்டுமா?

சக்கரவர்த்தி ஔரங்கஜேப் அன்புகூர்ந்து அனுப்பிவைக்கும் பழங்கள், திண்பண்டங்கள் முதலியவற்றிற்காக தான் மிக்க நன்றியுடையவனாக இருப்பதாகவும் சிவாஜி சொல்லிக் கொண்டார்.

ஆலம்கீர் அளித்த அனுமதி

தன்னுடைய அன்னையையும், தனது மனைவியையும் ஆக்ராவிற்கு வந்து தன்னுடன் வாழ்வதற்கு சிவாஜி ஔரங்கஜேப்பிடம் அனுமதி கோரினார். அதற்கும் உடன் அனுமதி அளிக்கப்பட்டது.

சர்க்கரவர்த்தி ஔரங்கஜேப்பின் அனுமதி கிடைத்த பின்னும் சிவாஜியின் அன்னையும், மனைவியும் என்ன காரணத்தினாலோ ஆக்ராவிற்கு வராமலிருந்தனர்.

சிவாஜி ஔரங்கஜேப்பைக் காண வந்த போது தன்னுடன் 400 போர் வீரர்களை (1500 வீரர்கள் என்ற கருத்தும் உண்டு.) அழைத்து வந்திருந்தார்.

கி.பி. 1666 ஜூன் மாதம் 7-ஆம் தேதி ஔரங்கஜேப்பிற்கு ஒரு விண்ணப்பத்தை செய்தார் சிவாஜி. 'தன்னுடன் வந்திருக்கும் அதிகாரிகளையும, குதிரைப் படையினரையும், சிப்பந்திகளையும் ஊருக்குத்திருப்பி அனுப்பிவிடத் தான் விரும்புவதாகவும், அதற்குப் பேரரசர் அனுமதி தர வேண்டும' என்றும் கேட்டுக் கொண்டார்.

சிவாஜியின் கோரிக்கையை அப்படியே ஏற்றுக் கொண்ட ஆலம்கீர் ஔரங்கஜேப், சிவாஜியின் படை வீரர்களைத் திருப்பி அனுப்பிட அனுமதி அளித்தார். சிவாஜியின் ஊழியர்களும், அதிகாரிகளும் புறப்பட்டுச் சென்றனர். சிவாஜியும், அவரது புதல்வரும், நாலைந்து அதிகாரிகள் மட்டுமே சிவாஜியுடன் இருந்தார்கள்.

காவல் குறைந்தது

'சிவாஜி கேட்டபடியே சர்க்கரவர்த்தியிடமிருந்து உத்தரவு கிடைத்தது. உடனே அவர்கள் எல்லோரும் புறப்பட்டுப் போனார்கள். பிறகு சிவாஜிக்காகவும் அவன் மகனுக்காகவும் வைத்திருந்த காவல் குறைந்தது.

‘ஒன்றிரண்டு வேலையாட்களைத் தவிர சிவாஜிக்குத் துணையாக இப்போது யாரும் அங்கு இல்லை. பொறுக்கி எடுத்த சேனா வீரர்கள் இராப்பகலாக காவல் புரிய மொகலாயருடைய தலைநகரில் அவன் தன்னந்தனியனாய் இருந்தான். அந்நிலையில் அவனைக் கண்டு அஞ்சுவதற்கு எவ்விதக் காரணமும் இருக்கவில்லை. அத்துடன் அவன் வடநாட்டு வாழ்க்கை முறையினைப் பின்பற்றி வருவது போலவும் உள்ளபடியே அதில் திருப்தி காணுவது போலவும் தெரிந்தது. பாரசீக பழக்க வழக்கங்களையும் இப்போது அவன் பயின்று வந்தான். திண்பண்டங்கள். பழங்கள் முதலிய பரிசுகளையும், அவற்றுடன் மிகவும் விரிவாக ஆனால் அசட்டுப் பிசட்டென்று எழுதப்பட்ட புகழ் மொழிகளையும் அரசவைப் பிரபுகளுடன் அவன் பரிமாறிக் கொண்டான்.

பண்டங்கள் பரிமாற்றம்

தனது சமையற்காரன் மராட்டிய முறையில் ஆக்கிய உணவு வகைகளை மொகலாய அதிகாரிகளின் வீடுகளுக்கு அனுப்பி வைத்தான். தமக்குப் பழக்கமான சுவைமிகுந்த புலால் உணவை உண்டுகளித்த அவர்களுக்குத் தென்னாட்டுக்காரன் ஒருவன் அனுப்பிய எளிய உணவு அவ்வளவு சுவையானதாக இருந்திருக்க முடியாதுதான். எனினும் சிவாஜியின் அன்புள்ளத்தைப் பாராட்டும் வகையில் பதிலுக்கு (முகலாய அரசவைப் பிரபுக்கள்) தம்முடைய வீடுகளிலிருந்து நல்ல நல்ல உணவுகளை அவனுக்கு (சிவாஜிக்கு) அவர்கள் அனுப்பினார்கள்.

ஜெயபுரி மாளிகைக்குள் வந்துபோய் கொண்டிருந்த அக்கூடைகள், தட்டுகள், கொப்பரைகள், ஜாடிகள் ஆகியவை அனைத்தும் ஆரம்பத்தில் வீரர்களால் மிக்க கவனத்துடன் பரிசோதிக்கப்பட்டன.

கூடைகள் - கொப்பரைகள்

உணவு வகைகளை ஒரு பாத்திரத்திலிருந்து மற்றொரு பாத்திரத்திற்கு மாற்றுவதிலும், மாம்பழக் குவியல்களையும் சூடான குழம்புச் சாடிகளையும் அலசி ஆராய்வதிலும் வெகு சீக்கிரமே போலத் காணுக்கும், அவரது வீரர்களுக்கும் சோர்வு தட்டியது. ஆகவே, அவர்கள் உணவுப் பொருள்களுடன் வரும் வேலையாட்களிடம் அசட்டையாக கேள்வி கேட்பதிலும் ஏதாவதொரு கூடையின் மூடியைத் திறந்து கொண்டு அதனுள் எட்டிப் பார்ப்பதிலும் மூங்கில்களில் தொங்க விட்டவாறு கூலிக்காரர்கள் சுமந்து வந்த கூடைகளும், கொப்பரைகளும்

சிவாஜி இருந்த மாளிகைக்குள் வந்து போவதை முகலாயப் படைவீரர்கள் அனுமதிக்கலாயினர். இப்படித்தான் சிவாஜி தங்கிருந்த மாளிகைக்குள் கொப்பரைகள், பெரிய கூடைகள் வர ஆரம்பித்தன.

சிறைவாசமா? சிறப்பான உபசரிப்பா?

சிவாஜி முகலாயப் பிரபுக்களுக்கு அனுப்பிய எளிய மராட்டிய உணவு வகைகளுக்குப் பதில், மிகச் சிறந்த உணவுகளை மெகலாயப் பிரபுக்கள் சிவாஜிக்கு அனுப்பிக் கொண்டிருந்தனர். ஆனால் சிவாஜியோ அத்தகைய உயர்வகைப் புலால் உணவைச்சாப்பிட்டுப் பழகியவர் அல்ல. எனவே அவருக்கு 1666 ஆகஸ்ட் மாத மத்தியில் கல்லீரலில் கோளாறு கண்டு, அதன் காரணமாக நோயுற்றார். உடம்பு முழுவதும் நடுநடுங்க சுரவெறியில் சிவாஜி பிதற்றியது மொகலாய வீரர்கள் காதுகளில் விழுந்தது. சிவாஜியின் உடல் வீங்கியிருந்தது. அவரது சிக்சைக்காக வெளியிலிருந்து மருத்துவர்கள் வரவழைக்கப்பட்டனர். அவருக்கு உயர்ந்த மருதுவ சிகிச்சை அளிக்கப்பட்டதோடு, எல்லாவிதமான மருத்துவ வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டது. இவைகளை சரித்திர ஆசிரியர் டெனிஸ் கின்கெய்டு தனது நூலில் தெளிவாகச் சொல்லியுள்ளார்.

சிவாஜி சிறைக் கைதியைப் போல நடத்தப்பட்டாரா? அல்லது சிறப்பான உபசரிப்பு வழங்கப்பட்டதா? சகல வசதிகளுடன் தங்கியிருந்தாரா? என்பதை நடுநிலையாளர்களே, நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

இந்து சமய உணர்வைப் போற்றிய ஆலம்கீர்

வீரசிவாஜியின் கல்லீரலில் ஏற்பட்ட கடுமையான கோளாறு காரணமாக பலவித மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. அமைதியாகப் படுக்கையில் படுத்தவாறு எல்லா மருந்துகளையும் சாப்பிட்டார். மருத்துவ ஆலோசனைப்படி சிவாஜியின் உடம்பு பிடித்து விடப்பட்டது.

‘முழுக்க முழுக்க மனிதனின் முயற்சிகளை மட்டும் நம்புவதால் பயனில்லை, என்றும், ஆக்ராவுக்கும் டில்லிக்கும் மத்தியிலிருந்த இந்துக்களின் மாபெரும் புண்ணிய ஸ்தலமான வடமதுரை (மதுரா) யிலுள்ள கிருஷ்ணன் கோவிலுக்குச் சில குதிரைகளைக் காணிக்கையாக அனுப்பி வைக்க விரும்புவதாகவும், அதற்காகத் தனது இரண்டு வேலையாட்களை வெளியே செல்ல அனுமதிக்க வேண்டுமென்றும் ஒரு நாள் சிவாஜி காவல்துறைத் தலைவர் போலத்கானிடம் அனுமதி கேட்டார்.

இந்து மத நம்பிக்கையை மதித்து, ஔரங்கஜேப்பின் ஆட்சியில், அவரது காவல்துறைத் தலைவர் போலத்கான் சிவாஜியின் கோரிக்கைக்கு சம்மதம் தெரிவித்தார்.

சிவாஜியின் பணியாட்கள் இருவர் வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

பிராமணர் பிரார்த்தனைக்கு அனுமதி

“மதுராபுரி பிராமணர்களின் பிரார்த்தனையினால் தனக்கு சுகம் கிடைத்ததென்றும், ஆகையால் அவர்களுக்கு இனாமாக கொடுப்பதற்கென்று மூன்று குதிரைகளையும் கிரயத்திற்குக் கொண்டார்.

அவ்விரு வேலையாட்களும் வெளியேச் சென்று இந்துக் கோயில்களில் பணியாற்றும் பிராமணர்களுக்குத் தானங் கொடுப்பதற்கென்று அனுமதிபெற்று மூன்று குதிரைகளை விலைக்கு வாங்கி, சிவாஜியின் திட்டப்படி தான் தப்பி வரும் வேளையில் குறிப்பிட்ட பாதையில் அந்தக்குதிரைகளை நிறுத்தி வைத்திருக்கக் சொல்லியிருந்தார்.

ஆலம்கீர் ஔரங்கஜேப் மதவெறியர், ‘பிற மதப்பண்புகளை வெறுப்பவர், என்று நாகூசாமல் சொல்பவர்களே, எழுதி வருபவர்களே, உங்களைப் பார்த்துக் கேட்கிறேன். உடல் நலமின்றி இருக்கும் சிவாஜியின் வேண்டுகோள் என்ன? மதுரா கிருஷ்ணன் கோயிலில் பணியாற்றும் பிராமணர்களுக்கு குதிரைகளைத் தானம் வழங்க வேண்டும் என்று!

அதனை மறுத்தாரா? பிறமதத்தவரின் மத நம்பிக்கையில் தலையிட்டாரா? இல்லை. இல்லவே இல்லை. மாறாக பிற மதத்தவரின் நம்பிக்கைக்கு மதிப்பளித்து அதனை நிறைவேற்றிட அனுமதி வழங்கியவர் ஔரங்கஜேப் என்பதை வரலாற்று நடுநிலையாளர்கள் எண்ணிப்பார்த்திட வேண்டும். அது மட்டுமா?

பிராமணர்களுக்கு வழங்கிய தானம்

இன்னொன்றையும் இங்கே குறிப்பிடுவது மிகமிக அவசியமாகிறது.

தனது நோய் நீங்கிட தானதர்மங்கள் செய்வதன் மூலம் தனது நோய் நீங்கக் கூடும் என்று தான் நினைப்பதாகக் கூறிய சிவாஜி, அதன் காரணமாக நாள்தோறும் இனிப்புத் திண்பண்டங்களை கூடைகளில் வைத்து வெளியே அனுப்ப விரும்புவதாகவும் அனுமதி கேட்டார்.

அந்த இனிப்புத் திண்பண்டங்கள் வெளியே யாருக்கு கொடுக்கப்பட அனுமதி கோரப்பட்டது தெரியுமா?

‘He (Shivaji) feigned illness and began to send out of his house every sweet meats for Brahmans, religious mendicants, and, courtiers.’

பிராமணர்கள் மத நம்பிக்கையுள்ள இரவலர்கள், இவர்களுக்கு வழங்கப்படத்தான் அனுமதி கேட்கப்பட்டது; அதற்கான அனுமதியும் வழங்கப்பட்டது.

மறைக்க முடியாத உண்மைகள்

ஔரங்கஜேப் பிறமதத்தவர்கள் மீது தீராத வெறுப்பு கொண்டவர் என்று காலங்காலமாக கதை அளந்து கொண்டிருக்கிற கயமைக் கூட்டம் இந்த உண்மைகளையெல்லாம் மறைக்கப் பார்க்கிறது.

தனது நோய் நீங்கிட மதுரா கிருஷ்ணன் கோயிலில் பணிபுரியும் பிராமணர்களுக்கு குதிரைகளைத் தானம் வழங்க வேண்டுமென்றும், பிராமணர்களுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கப்பட வேண்டுமென்றும் சிவாஜி அனுமதி கேட்டதற்கு உடனே அனுமதி வழங்கியதிலிருந்து, பிறமதத்தவரின் சமய நம்பிக்கையையும் மதித்துப் போற்றியவர் மாமன்னர் ஔரங்கஜேப் என்பதனை நாம் தெள்ளத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. இவை வரலாற்றின் வெளிச்சத்தில் தெளிவாக மக்கள் மத்தியிலே விளக்கப்பட வேண்டிய செய்திகள் ஆகும். அப்போது தான் நடுநிலையாளர்கள் மனதில் உண்மைகள் பளிச்செனப் புலப்படும்.

நோய் அதிகரிப்பும் காவல் குறைப்பும்

“நாள்தோறும் திண்பண்டக் கூடைகளை பிராமணர்களுக்கு அனுப்பி, சிவாஜியின் நோய் அதிகரித்ததே தவிர குறையவில்லை. இதை அறிந்த காவல் வீரர்கள் கேலி செய்து சிரித்தார்கள். ஆகவே கூடைகளை பரிசோதிப்பதை அவர்கள் குறைத்துக் கொண்டார்கள். சில சமயங்களில் சோதனை போடாமலே வெளியே அனுப்பினார்கள்.”*

(* அ.லெ. நடராஜன், வீர சிவாஜி, 1985, பக். 138.)

இதை அறிந்து கொண்ட சிவாஜி தக்க நேரம் வந்து விட்டது என்பதை உணர்ந்தார்.

தன்னைப்போல சாயலுள்ள ஹிரோஜி பாச்சந் (Hiraji Farzand) என்பவரை தனது படுக்கையில் படுக்க வைத்து விட்டு, மிட்டாய் கூடைகளில் மறைத்து வெளியேறினார். வழக்கம்போல

மிட்டாய்க் கூடைகளை சோதித்துப் பார்க்காமல் அனுப்பும் காவலர்களின் அசட்டையினால் தப்பிச் சென்றார். சிவாஜி தப்பிச் சென்றதற்கு உதவியவர்கள் யார்? யார்? அதன் பின்னணி என்ன? அது பற்றிச் சொல்லப்படும் சரித்திரச்செய்திகள் என்ன? மறைந்திருக்கும் உண்மைகள் என்ன?

ராம்சிங்கின் துரோகம்

அரண்மனையில் அரசாங்கப் பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருந்த சிவாஜியை பத்திரமாகப் பாதுகாக்கும் பொறுப்பை மாமன்னர் ஔரங்கஜேப், இராம்சிங்கிடம் ஒப்படைத்திருந்தார்.

எப்போதும் கலகலவென்று பேசிடும் இயல்பாலும், தனது அறிவுத்திறனாலும் ஆலம்கீரின் அபிமானத்தைப் பெற்றிருந்த இராம்சிங், சிவாஜி தப்பி ஓடிய செய்தியை ஔரங்கஜேப்பிற்கு அறிவிக்க வரும்போது தனது கண்களைத் தரையில் பதித்தவராய், கை கட்டி வாய் புதைத்தவாறு நின்றார்.

ஆழ்ந்து சிந்திக்கும் ஆலம்கீர்

ஆனால் சிவாஜி தப்பித்துச் சென்றதற்குப் பிறகும், ராம்சிங்கின் உடந்தைதான் காரணம் எனச் சந்தேகித்த ஔரங்கஜேப், ராம்சிங்கின் பதவியை மட்டுமே பறித்தார்.

ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுக்கும் ஔரங்கஜேப், 1663-64 ஆம் ஆண்டுகளில் தனது பரிவாரத்துடன் காஷ்மீருக்குச் சென்று கொண்டிருந்த போது லாகூருக்கு அருகில் வெடி விபத்து ஏற்பட்டு ஊரே தீப்பற்றி எரிந்தது. “இதற்கு முன் போருக்குச் சென்றபோது குறிப்பிட்ட இடத்தில் வெடி மருந்துகளை அரசாங்கத் துருப்புக்கள் வைத்திருந்தது. அவை அகற்ற படாமலே இருந்ததால் தீப்பற்றியது” என்பதை விசாரணையில் தெரிந்து கொண்ட ஆலம்கீர், இதற்குப் பொறுப்பாக இருந்தவர்களைத் தண்டிக்கும் வகையில் அவர்களின் உத்தியோக அந்தஸ்தை மாத்திரமே குறைத்திட உத்தரவிட்டார். இவ்வாறு எதையும் ஆழ்ந்து சிந்தித்தே ஆலம்கீர் முடிவெடுத்தார்.

சிவாஜி தப்பிச் சென்றதற்கு இராம்சிங் எந்த வகையில் காரணம்? அவரை ஆலம்கீர் தண்டித்தது எந்த வகையில் நியாயம்? ஔரங்கஜேப் குறுகிய நோக்கத்துடன் நடந்து கொண்டார் என்று குற்றச்சாட்டுக்கள் சொல்லப்படுகிறது. அதற்குரிய பதில் என்ன?

பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த மருத்துவர் பெர்னியர். (Bernier)

கி.பி. 1658ஆம் ஆண்டிலிருந்து 1667 வரை இந்தியாவில் தங்கியிருந்து, ஷாஜகானுடனும், ஔரங்கஜேப்புடனும் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றிருந்த இவர், பிரெஞ்சு நாட்டில் நிதியமைச்சராக இருந்த கால்பெருக்கு (Monseigneur Colbert) இந்தியாவில் கண்டறிந்தவர்களை விளக்கி கடிதம் எழுதினார். பெர்னியரின் குறிப்புக்கள் பிரெஞ்சு நாட்டில் கி.பி. 1670 ஏப்ரல் 25-ல் அச்சிட அனுமதி அளிக்கப்பட்டு, பார்பின் (Claube Barbin) என்பவரால் அச்சிடப்பட்டு நூலாக வெளியிடப்பட்டது.

பெர்னியரின் பிரயாணக் குறிப்புகள்

“Travels in the Mogul Empire” என்ற அந்த நூலை கி.பி. 1891-ல் கான்ஸ்டபில் (ARCHIBALD CONSTABLE,) என்பவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அதனை 1914-ல் பேராசிரியர் வின்ஸ்டன் சுமித் (VINCENT. A. SMITH) மறுபதிப்பாக வெளியிட்டார். அந்த நூலில் பக்கம் 190-ல் சொல்லப்பட்டிருக்கும் செய்தி இதோ:

“The result was that Seva-Gi, observing that his tents were watched by three or four omarahs.

(சிவாஜி ஆக்ராவில் சிறை வைக்கப்பட்டார் என்று டாக்டர் பர்னியர் கி.பி.1670-ல் தெரிவிக்கவில்லை. கண்காணிக்கப்பட்டார் என்று மாத்திரமே தெரிவித்துள்ளதையும் சுட்டிக் காட்ட கடமைப்பட்டுள்ளேன்.) Effected his escape in disguise under favour of night. This circumstance caused great uneasiness in the Palace, and Jesseingue’s eldest son, (ராம்சிங்) being strongly suspected of having assisted Seva-Gi in his flight was forbidden to appear at Court.

சிவாஜி தப்பிச் சென்ற சம்பவத்தைப் பற்றி இரண்டு அல்லது மூன்று வரிகளில் மாத்திரமே பெர்னியர் சொல்லிச் சென்று விடுகிறார். சிவாஜி தப்பிச் சென்றதற்கு ராம்சிங் உடந்தையாக இருந்தார் என்று சந்தேகப்பட்டதையும் தெரிவித்துள்ளார்.

மராட்டிய வரலாற்றுக்கு மூல ஆதாரமான ஜேம்ஸ் கிராண்ட்டப் எழுதி (JAMES GRANTDUFF) கி.பி. 1826-ல் வெளிவந்த மராத்திய வரலாறு நூலின் முதற்பாகத்தில் சொல்வதாவது :

Sivajee exulted in the greater facility it afforded of effecting this own escape. Ramsing was privy to his design, and on account of the pledge given by his father, connived at it.” (கல்கத்தா பதிப்பு, 1912இ பக். 182)

கடுமையான காவல் ஏதுமில்லாத நிலையில் சிவாஜியை ராம்சிங் அடிக்கடி சென்று பார்த்திட தடை ஏதுமில்லாத நிலை இருந்தது. எனவே ராம்சிங் மூலமாக ஔரங்கஜேப்பின் அரச சபையில் உள்ள பெரியவர்களுக்குப் பரிசுகளை அனுப்பிய சிவாஜி, அவர்களிடம் நல்ல முறையில் பழகிக் கொள்ளவும், தான் தப்பிச் சொல்லவும் ராம்சிங்கை உடந்தையாக்கிக் கொண்டார் என்பதும் தெளிவான வரலாற்றுச் செய்திகள்.

ஔரங்கஜேப் , சிவாஜி ஆகியோர் வரலாற்றை முழுமையாக ஆராய்ந்த பேராசிரியர் ஜாதுநாத் சர்க்கார், இது குறித்து என்ன சொல்கிறார். (1919-வது வருடப் பதிப்பு பக்கம் 92, 93)

சிவாஜி தப்பிச் சென்றதையறிந்தும் நாட்டின் சாலைகள் சோதனைக்குள்ளாகின்றன. சில மராத்தியப் பிராமணர்கள் கைது செய்யப்படுகிறார்கள். அவர்கள் சிவாஜி தப்பிச் சென்றதற்கு இராம்சிங் உடந்தையாக இருந்தார் என்பதை ஒப்புக் கொண்டார்கள்.

“Some of the Maratha Brahmans who were caught admitted, probably under, that their master had fled with the connivance of Ram Singh.” என்று சர்க்காரும் ராம்சிங்கின் உடந்தையை தெளிவாகச் சொல்லிவிட்டார்.

இந்துக்களை மதித்திடும் ஆலம்கீர்

இந்திய சுதந்திரப் போரில் ஆபத்தான வேளைகளில் தப்பிச் சென்ற வங்கத்துச் சிங்கம் நேதாஜி, வ.வே.சு. அய்யர், ஓட்டப்பிடாரம் மாடசாமிப்பிள்ளை ஆகியோர் முஸ்லிம் வேஷத்தில் தப்பிச் சென்றதையே சரித்திரத்தில் படிக்கிறோம்.

சிவாஜி ஆக்ராவில் இருந்து தப்பிச் சென்ற போது சாமியார் வேஷத்தில் சென்றார். (Like Hindu Ascetics) ஆளுகின்ற அரசுகள் குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்தவர்களை மதித்துப் போற்றுகின்ற போதுதான் அந்த மதத்தவரின் தோற்றம் மதிப்பளிக்கப்படுகிறது என்பதை உணர்ந்து தான் நேதாஜியும், வ.வே.சு. அய்யரும், ஓட்டப்பிடாரம் மாடசாமிப்பிள்ளையும் தப்பிச் சென்ற போது, முஸ்லிம் வேஷத்தில் தப்பிச் சென்றார்கள் அதே போல்.

ஆலம்கீர் ஔரங்கஜேப் ஆட்சியில் இந்துத் துறவிகள் மதிக்கப்பட்டார்கள், போற்றப்பட்டார்கள் என்பதால்தான், அரசாங்கத்தால் மதிக்கப்படுகிற இந்து சாமியாரின் வேஷத்தில் சிவாஜி தப்பிச் சென்றார் என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது. வரலாற்றுப் புரட்டர்களும் இதனை புரிந்து கொள்ள வேண்டும்.

ராம்சிங்கின் உடந்தையால் சிவாஜி தப்பித்துச் சென்றது தெளிவாகத் தெரிகிற நிலையில், இந்த வரலாற்றில் இன்னொரு அபாண்டத்தையும் தூக்கிப் போடுகிறார்கள். ஔரங்கஜேப்பின் மகன்தான் சிவாஜிக்கு உதவினார். அதனால்தான் சிவாஜி தப்பித்துச் சென்றார் என்கிறார்கள்.

வரலாற்று வல்லுநர்களின் குளறுபடிகள்

வீர சிவாஜி ஆக்ராவிலிருந்து பழக்கூடையில் மறைத்து தபபிச் சென்றது பற்றிய சம்பவங்கள், தன் நாட்டை அடைவதற்குள் நடைபெற்ற சம்பவங்கள், அதுபற்றிச் சொல்லப்படுகின்ற கதைகள், சொல்லாமல் மறைக்கப்பட்டிருக்கின்ற சரித்திர உண்மைகள், ஆகிய இந்த விஷயங்களில் வரலாற்று வல்லுநர்கள் விளைவித்திருக்கிற குளறுபடிகள் ஏராளம், ஏராளம்!

பெர்னியரின் பிழைகள்

சிவாஜி, ஔரங்கஜேப்பை ஆக்ராவில் சந்தித்தார். ஆனால் மொகலாயச் சக்கரவர்த்தி ஔரங்கஜேப்பைச் சந்திக்க டில்லிக்கு சிவாஜி சென்றதாக பெர்னியர் குறப்பிடுகிறார். ... as to induse him to meet the mogal at Delhi..? அடுத்த பெர்னியர் செய்துள்ள இன்னொரு பிழை இதோ :

‘Confirm many persons in the opinion that Seva-Gi did not escape without the conviance of Aurangzebe himself.*

(* பெர்னியர், Travels in the Mogul Empire, பக். 190.)

சிவாஜி தப்பிச் செல்வதற்கு ஔரங்கஜேப்பே உதவி புரிந்தார் என்ற கருத்தையும் பெர்னியர் வெளியிட்டு உள்ளார்.*

(* பெர்னியர், Travels in the Mogul Empire, பக். 199.)

இவைகளை நடுநிலையாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுகிறேன்.

ஜாதுநாத் சர்க்காரின் தவறு

“ஆக்ராவிலிருந்து தென்மேற்குத்திசையை நோக்கிப் புறப்படவேண்டியதிருக்க, அதற்குப் பதில் சிவாஜி கிழக்கு நோக்கி வடமதுரைக்கு கிளம்பினார்.”

வடமதுரை ஆக்ராவிற்கு மேற்கே இருக்கிறது. ஆனால் ஆக்ராவிலிருந்து கிழக்கு நோக்கி வட மதுரைக்கு சிவாஜி கிளம்பினார் என்று வரலாற்று வித்தகர் ஜாதுநாத் சர்க்கார் சரித்திரத்தில் தவறிழைத்துள்ளார் என்பதனையும் கவனத்தில்

கொள்ள வேண்டுகிறேன்.

பாதிரியார் ஹாபர்ட் ஹண்டர்

தகுதிக்குறைவான ஒருவர் தகுதி நிறைந்தவர் என்ற புகழப்படுவதில் கூட ஆட்சேபணையில்லை; அதனால் யாருக்கும் பாதகம் அதிகம் நேராது. ஆனால் தகுதி நிறைந்த ஒருவரைத் தகுதி குறைந்தவர் என்று தாக்கப்படுகிறபோது, உண்மைகள் மறைக்கப்படும்போது, உலகத்திற்கு இந்த உண்மைகளை உரைத்திடவேண்டிய அவசியம் காலத்தின் கட்டாயம் ஆகும். 'THE ROMANCE OF HISTORY INDIA' என்ற நூல் இலண்டனில் பிரெடரிக் வார்ன் கம்பெனியாரால் (PREDERICK WARNE) வெளியிடப்பட்டது. பாதிரியார் ஹாபர்ட் ஹண்டர் எழுதியது : (the rec. HOBART CAUNTER B.D.) 5/4 பக்கங்களைக் கொண்டது. தாள்கள் அப்பளம்போல் நொறுங்கிவிழும் நிலையிலுள்ள அந்த நூலில் 7-7-1926-ல் அதனை வைத்திருந்தவர் கையொப்பம் இட்டிருக்கிறார். எனவே நிச்சயம் 1926-ம் ஆண்டுக்கு முன்பு அது வெளியான நூலாக இருக்கும் என்று நாம் நம்பலாம்.

அரசிளங்குமரி மீது அபாண்டப் பழி

அந்த நூலில் பக்கம் 497-503 வரை சிவாஜி, முகலாய இளவரசி ரோசினாராவின் (Rochinara) உதவியால் அவரளித்த தங்கக் காசுகளினால் தப்பித்துச் சென்றதாகக் குறிப்பிடுகின்றார். "but the gold of Rochinara and the promise of remuneration made by the Mahratta, corrupted the integrity of the vendor of flowers, and he finally became instrumental to one of the most extraordinary escapes which the pen of history records.

அதனைத்தொடர்ந்து அதற்கும் மேலே சென்று, சிவாஜியின்மீது காதல் கொண்டு, இளவரசி உதவியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ராபர்ட் ஓர்ம்

'HISTERICAL FRAGMENTS OF THE MOGUL EMPIRE OF THE MORATTOES, AND OF THE ENGLISH CONCERNS IN INDOSTAN, BY ROBERT ORME ESQ F.A.S. என்ற நூல் முகலாயப் பேரரசு குறித்து ஆங்கிலேய இராபர்ட் ஓர்ம் என்பவரால் எழுதப்பட்டு 193 ஆண்டகளுக்கு முன்பு லண்டனில் வெளிவந்த மிகப் பழமையான நூல்; அதில் பக்கம் 193-ல், "சிவாஜியின் அழகாலும், கவர்ச்சியாலும், வீரத்தாலும் கவரப்பட்ட ரோஸினாரா பேகம், ஔரங்கஜேப்பின் காலில் விழுந்து இதற்காக மன்றாடினாள்

என்று சொல்கிறார்கள். ஆனால் இதனை ஏற்க முடியாது" என்று ஓர்ம் திட்டவட்டமாக மறுக்கிறார். தொடர்ந்து,

'ஔரங்கஜேப்பின் நெருங்கிய உறவினரும், ஔரங்கஜேப்பின் இராஜாங்கத்தின் முதன்மையான உறுப்பினருமான ஷெயிஸ்டகானின் குடும்பத்தினருக்கு இழைக்கப்பட்ட கொடுமையை கருத்தில் கொணடால் சிவாஜி போன்ற அந்நியருக்காக ரோஸினாரா அவ்விதம் மன்றாடி இருப்பாள் என்று சொல்வதற்கு இல்லை' என்று கூறிய ஓர்ம் மேலும் சொல்கிறார்.

"சிவாஜியின் தோற்றம் இளவரசி ரோஸினாரா பேகத்தை கவர்ந்திருக்கும் என்பதை நம்புவதற்கில்லை. ஏனெனில் சிவாஜி அழகான தோற்றத்தைப் பெற்றிருந்தவரல்ல" என்ற இராபர்ட் ஓர்ம் தெரிவித்திருக்கிறார்.

வரலாற்றில் உண்மைக்கு மாறான செய்திகள் இடையிடையே புகுத்தப்படுதலும், அவைகளுக்கு சில மறுப்புக்களும் அவ்வப்போது சொல்லப்பட்டிருப்பதையும், காலகதியில் அவைகள் வரலாற்றில் மறைக்கப்படுவதையும் நடுநலையாளர்கள் எண்ணிப் பார்த்திட வேண்டுகிறேன்.

ஆக்ராவிலிருந்து ராம்சிங்கின் துரோகத்தால் சிவாஜி தப்பித்துச் சென்றார். அப்போது சிவாஜி நேராக ராய்கர் கோட்டையைச் சென்று அடைந்தாரா? அவர் செல்லும் வழியில் குறிப்பிடத்தக்க சம்பவங்கள் எதுவும் நடைபெற்றதா? கல்விச்சாலைகளில் மாணவர்களுக்கு போதிக்கப்படுகிறதா? அதிலே மறைந்து கிடக்கும் விஷயங்கள் என்ன?

கோல்வல்கரின் கொடூர வார்த்தைகள்

1947-ல் இந்து முன்னணித் தலைவர் ஸ்ரீ குருஜி கோல்வல்கர், சத்ரபதி சிவாஜி அரியணை அமர்ந்த நாளைக் கொண்டாடும் வகையில் நடைபெற்ற விழாவில் பேசியதை 'இந்து சாம்ராஜ்ய ஸ்தாபகர் சத்திரபதி சிவாஜி' என்ற சிறு நூலாக தமிழக ஹிந்து முன்னணி திரு. இராம.கோபாலன் அவர்களின் முன்னுரையுடன் வெளியிட்டிருக்கிறது. அதில் பக்கம் 30-ல் தெரிவித்திருப்பதாவது :

"முகலாய சாம்ராஜ்யத்தை வேரோடு பறித்தெறிந்து விட்டு டில்லியில் ஹிந்து சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்பது (சிவாஜியின்) துணிச்சலான திட்டம். அதை நிறைவேற்றுவதற்காகத்தான் அவர் டில்லிக்குச் சென்றார். தர்பாருக்குள் இவர் நுழைவதைப் பார்த்த உடனேயே

ஔரங்கஜேப் சிம்மாசனத்திலிருந்து இறங்கி, குதித்து ஓடி குளியலறைக்குள் நுழைந்து கொண்டான். சிவாஜி மகாராஜாவின் அந்தப் புரட்சிகரத் திட்டம் நிறைவேறவில்லை. மாறாக அவர் கைது செய்யப்பட்டார். ஆனால், அவர் ஔரங்கஜேப்பை தந்திரத்தின் மூலம் ஏமாற்றி நலமாக ஊர் திரும்பினார். இந்த சந்திப்பின்போது ஔரங்கஜேப்பின் கோழைத்தனத்தால்தான் அவருடைய உயிர்த்தப்பியது. சிவாஜியின் இந்த வீரதீரச் செயல் பற்றிய செய்தி பாரத நாடு முழுவதும் பஞ்சாப் வரையும்கூடப் பரவியது.”

மேற்சொன்னவை கோல்வல்க்கரின் வார்த்தைகள்.

ஆக்ராவில் ஔரங்கஜேப் தர்பாரில் மயங்கி விழுந்தவர் மகாவீரர் சிவாஜி. அதனை சரித்திரம் அறியும். ஆனால் நேர்மாறாக ஔரங்கஜேப் ஓடிஒளிந்ததாக மாற்றிச் சொல்லுகிறீர்களே, இது நியாயமா?

சிவாஜியை வீரர் என்றும், வீராதி வீரர் என்றுமு புகழுங்கள். ஆட்சேபனையில்லை. ஆனால், ஔரங்கஜேப்பை கோழையைப் போல சித்திரிக்கிறீர்களே, இது நியாயமா? வரலாற்றின் நடுநிலையோடு இவற்றுக்குப் பதில் சொல்ல வேண்டியது தார்மீகப் பணியல்லவா? துவேஷச் செயல்களைத் தடுத்து நிறுத்த வேண்டியது தார்மீகப் பணியல்லவா? கோவல்கர் கூறியதைப் பொருட்படுத்த வேண்டுமா? கேட்பது புரிகிறது. அது மட்டுமா?- பிரபலமான வார இதழான ‘ஜூனியர் விகடனில்’ பல வாரங்கள் தொடராக வந்து, பல்லாயிரக்கணக்கில் விற்பனையான மதன் எழுதிய ‘வந்தார்கள்... வென்றார்கள்’ என்ற தொடரில் 47-வதுஅத்தியாயத்தில் இதுபற்றி என்ன சொல்கிறார்?

‘மதன்’ மறைத்த செய்திகள்

“சிவாஜி தப்பிய உடனேயே நாடெங்கும் மொகலாய காவல் அதிகாரிகள் உஷார்படுத்தப்பட்டனர். சிவாஜியைப் பிடிப்பதற்கு குதிரைப்படையினர் அனுப்பப்பட்டனர். ஆனால் தப்பித்தவுடன் காவி உடை அணிந்து விரித்த தலைமுடியுடன் உடலில் சாம்பலைப் பூசிக்கொண்டு ஒரு சந்தியாசி போன்ற மேக்அப்புடன் போய்க் கொண்டிருந்த சிவாஜியை யாருக்கும் அடையாளம் தெரியவில்லை. வழியெங்கும் மொகலாய காவல் அதிகாரிகள் தன்னை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள் என்று கணக்கு போட்ட சிவாஜி, நேரடியாக மகாராஷ்டிரம் செல்லும் ‘ரூட்’டைத் தவிர்த்து அலஹாபாத், காசி, கயா, தெலுங்கானா என்றுச் சுற்றிவளைத்துக் கொண்டு ஆந்திரம் வழியாக பூனேவுக்கு வெற்றிகரமாகத் திரும்பினார்’ என்ற எழுதுகிறார்.

இது உண்மையா? ஊர் திரும்பும்வரையில் சிவாஜியை யாரும்அடையாளம் கண்டுகொள்ளவும், கைது செய்து பிடிக்க முடியாத அளவிற்கு மொகலாயப் படை அவ்வளவு கேவலமாகவா இருந்தது, வரலாற்றில் நடந்தது என்ன?

துரோகி அலி குலிகான்

இந்து சந்நியாசிகள் மூன்று பேர் வருகிறார்கள். நமது நகரப் பாதை வழியாக என்பதை அறிந்த பெருதார் அலி குலி கான் (Fanjudar Ali Kuli Khan) அந்த மூவரையும் கைது செய்யச் சொல்கிறார். அவர்கள் ஒரு இரவு, ஒருபகல் சிறையில் அடைக்கப்படுகிறார்கள்.

‘All these men and someother travellers remained in confinement a night and a day.’

இரண்டாவது நாள் இரவில்தான் முகலாய சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஒரு சந்நியாசி, தனியாகச் சென்று, ‘சிவாஜி நான் தான்’ ஆக்ராவிலிருந்து தப்பிவந்து, இப்போது மீண்டும் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கிறேன்’ என்பதனை ஒப்புக் கொண்டார்.

லஞ்சத்தால் தப்பிய சிவாஜி

‘என்னை கைது செய்து அனுப்பி வைத்தாலோ, அல்லது என் தலையை வெட்டி விட்டாலோ உனக்கு ஒன்றும் கிடைக்கப்போவதில்லை. என்னிடம் விலை உயர்ந்த வைரக்கல் ஒன்றும், ரூபி ஒன்றும் உள்ளது. அது இலட்ச ரூபாய்க்கு மேல் மதிப்புள்ளது. (I have two gems, DIAMOND and a RUBY of GREAT VALUE. with more than a Lac of rupees.) என் தலையை இங்கே வைக்கிறேன். இந்த வைரக் கற்களையும் வைக்கிறேன். இந்த இக்கட்டிலிருந்து என்னை நீ காப்பாற்று’ என்று கெஞ்சிய சிவாஜியிடம் துரோகி அலிகுலி கான் இலட்ச ரூபாய் மதிப்புள்ள வைரங்களைப் பெற்றுக் கொண்டு, அவர்களை விடுதலை செய்து அனுப்பி விடுகிறான். இதனை ‘முன்டகபுல்லுபாப்’ பில் ‘காபிகான் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

(வால்யூம் 11 பக்கம் 217-218)

திரும்பவும் சிறைபட்ட சிவாஜி

இலட்ச ரூபாய்க்கு 330 ஆண்டுகளுக்கு முன்பு ஆசைப்பட்ட துரோகி ஒருவனால், பெற்ற இலட்சத்தால் தப்பிச் சென்ற சிவாஜியின் செயலைத்தான், வீர தீரச் செயல் என்று புகழ்கிறார்கள் போலும்!

ஆக்ராவிலிருந்து தப்பிய சிவாஜி மீண்டும் மொகலாயப் படைப் பிரிவினால் சிறை பிடிக்கப்பட்டு, இரண்டு நாள் திரும்பவும் ஜெயிலில் இருந்தார் என்று எந்த வரலாறு நூலிலாவது சொல்லிக் கொடுக்கிறார்களா? இல்லை. இல்லவே இல்லை.

சிவாஜியை மகா திறமைசாலியாகவும், ஔரங்கஜேப்பை மகா திறமையற்றவராகவும் காட்டுவதற்காகத் தானே வரலாற்றில் இப்படிப்பட்ட இருட்டடிப்புக்கள் நடக்கின்றன என்பதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அது மட்டுமா அங்கிருந்து தப்பிய சிவாஜி, காசியில் நாபா என்ற பிராமணரிடம் அகப்படவில்லையா? அவருக்கும் பணம் கொடுத்து அங்கிருந்தும் தப்பவில்லையா? அத்தோடு ஹைதராபாத்திற்கு வந்து சேர்ந்த சிவாஜியை அப்துல்லா குதப் மாலிக் பார்த்துக் கொண்டார். (Abpu- ilah Kutbu L Malik) அவரிடம் தந்திரமாக பல கதைகளைச் சொல்லி நம்ப வைத்து அங்கிருந்து அதன் பின்னரே சிவாஜி தப்பித்துச் சென்றதும் சரித்திரத்தில் நடைபெற்றதா இல்லையா? இவைகளையெல்லாம் ஏன் சரித்திரத்தில் மறைக்கிறீர்கள்?

ஒன்பது மாதங்கள்

அதோடு சிவாஜி ஆக்ராவிலிருந்து தப்பித்து வந்து தனது தேசத்தை அடைய ஒன்பது மாதங்கள் ஆயிற்று.

‘.....by unfrequented routes, and in various disguises to the Deecan, and finaliy reached Raigurh is December 1666, after an absence of nine months.’*

(* Meadows Taylor, A student’s Manual of the History of India, New Delhi, 1986, P. 340, முதற்பதிப்பு 1904)

ஒன்பது மாதங்களுக்குள் பின் தான் சிவாஜி தனது ராஜ்கர் நகருக்குத் திரும்பினார் என்பதனையும் மறைக்கப் பார்ப்பது ஏன்?

ஆக்ராவிலிருந்து மிட்டாய்க் கூடையில் வெளியேறிய சிவாஜி, தனது வீர தீரத்தால் தனது நாட்டை அடைந்தார் என்று மாத்திரம் சொல்லிக் கொடுக்கப்படும். வரலாற்றில், அவர் திரும்பவும் கைது செய்யப்பட்டார். ஒரு நாள் பகல், இரவு ஜெயிலில் இருந்தார். இலஞ்சம் கொடுத்து தப்பித்தார். ஒன்பது மாதங்கள் கழித்து நாடு திரும்பினார்.இதையெல்லாம் சொன்னால் மாவீரர் சிவாஜியின் புகழுக்கு இழுக்கு வந்துவிடும் என்றல்லவா இவைகளையெல்லாம் வரலாற்றிலிருந்து

மறைக்கிறார்கள். சிவாஜியின் வரலாறு பற்றிக் கூறும் முதல் மராட்டிய நூல் கிருஷ்ணாஜி அனந்த சபாசத் (Krishuaji Anand Sabhasad) என்பவர் கி.பி. 1697-இல் எழுதி 'சிவ சத்திரபதி சென் சரித்திரா' என்ற நூல்.

அதிலே சிவாஜிபழக் கூடைகளில் மறைந்து வந்த செய்திகள் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தஞ்சாவூர் ஸ்ரீ ப்ரஹதீஸ்வர ஸ்வாமி கோயில் கல்வெட்டுகளில் மகாராஷ்டிரப் பாஷையிலுள்ள 'போன்ஸ்லே வம்ச சரித்திரத்தில்' இவைகள் சொல்லப்படவில்லை என்பது அழுத்தந்திருத்தமான வரலாற்றுச் சான்றாகும். தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு எண் 69, 'தஞ்சாவூர் மராட்டிய மன்னர் வரலாறு' கே. எம். வேங்கடராமையா பதிப்பித்து, (1987) பக்கம் 195-இல் சொல்லியுள்ள வாசகங்களைச் சொல்லி, சிவாஜியின் விஷயத்திற்கு முடிவுக்கு வருகிறேன்.

"சாஸ்தாகான் தூங்கிக் கொண்டிருக்குங்கால் நள்ளிரவில் சென்று கொல்ல முயன்றமை, வீரச் செயலாகக் கருதப் பெற மாட்டாது. ஔரங்கஜேப்பின் சிறையினின்று பழக்கூடைகளில் மறைந்து வைத்தமையும் வீரச் செயலாகாது. சூழ்ச்சி திறனாகக் கருதப்படலாம். சூரத் கொள்ளையும் செயலாவது எங்ஙனம்? இன்னோரன்ன காரணங்களால் சிவாஜியைப் பற்றி மராட்டியில் எழுதிய சபாஸத் முதலியவற்றுள் கண்டுள்ள மேற்கண்ட செய்திகள் தஞ்சாவூரில் எழுதப் பெற்ற சுவடிகளிலும் கல்வெட்டிலும் விடுபட்டன."

வரலாற்றைத் திரித்து, சிவாஜியின் புகழுக்குப் பாதகமான விஷயங்களை விட்டு விட்டதை பேராசிரியர் கே.எம். வேங்கட ராமையா அவர்களே ஒப்புதல் வாக்கு மூலம் தந்துள்ளதை வரலாற்றின் நடுநிலையாளர்கள் எண்ணிப்பார்க்கட்டும். உண்மையை உணர்ந்து கொள்ளட்டும்.

ஔரங்கஜேப்பின் பெருந்தன்மை

ஆக்ராவிலிருந்து தப்பித்துச் சென்ற சிவாஜி தனது தலையை மொட்டையடித்து மீசையையும், தாடியையும் சிரைத்தவராய் நெற்றியில் திருநீறு அணிந்து கொண்டார். ஒரு சந்நியாசிக்குரிய மஞ்சள் நிற அங்கியை அணிந்திருந்த அவருடைய இடுப்பில் ஒரு திருவோடும் கையில் ஒரு யாத்திரிகளின் மூங்கில் கழியும் காட்சியளித்தன.

கையில் குடுக்கையும், மூங்கில் தடியும் எடுத்துக் கொண்டு சிவாஜி பிச்சைக்காரன் போல் தோற்றமளித்தார்.

இந்துப்பைராகிகளைப்போல், சந்நியாசிகளைப் போல் வேடமிட்டுத் தப்பி வந்தவர் சிவாஜி.

ஔரங்கஜேப்பின் ஆட்சியில் இந்துக்கள் கொடுமைப் படுத்தப்பட்டார்கள் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்களே, அவ்வாறு நடைபெறாத அந்தக் கொடுமைகள் அப்போது நடைபெற்று இருந்தால், இந்து சந்நியாசியின் வேடத்தில் சிவாஜி தப்பித்து வருவதென்பது நடக்கக் கூடிய காரியமா? நடுநிலையாளர்கள் சிந்திக்க வேண்டுகிறேன். ஔரங்கஜேப்பின் சமயப் பொறையான ஆட்சிக்கு இந்து சந்நியாசி வேஷத்தில் சிவாஜி தப்பித்து வந்த செயல் ஆணித்தரமான சான்றாக அல்லவா அமைகிறது.

பகைவரைப் பாராட்டிய பண்பாளர்

‘Aurangzib himself admitted that his for was a great captain,

‘He was a great captain’, said Aurangzeb his bitterest foe when he heard of his death. *

(* H.G. Rawlsnion, Indian Historical studies, London, 1910, P. 144.)

சிவாஜி ஒரு சிறந்த படைத்தலைவன் என்றும், அவரை எதிர்த்து பத்தென்பது ஆண்டுகள் போர்புரிந்தபோதும், சிவாஜியின் அரசு எந்நாளும் வளர்ந்து கொண்டே வந்துள்ளது’ என்றும் சிவாஜியை புகழ்ந்துரைத்திருப்பது மராட்டிய சரித்திர ஆசிரியர்கள் அல்ல.

மாமன்னர் ஔரங்கஜேப் மறைந்த போது இவ்வாறு அவரைப் புகழ்ந்துரைத்துள்ளார். இது வரலாற்றில் தெள்ளத் தெளிவாகச் சொல்லப்படுகிறது.

பகைவரையும் பாராட்டும் உயர்ந்த பண்பைப் பெற்றிருந்த பேரரசர் ஔரங்கஜேப்பின் உயரிய குண நலனை, வரலாற்றுப் புரட்டர்கள் எண்ணிப் பார்க்கட்டும்; வரலாற்றின் வெளிச்சத்தில் இந்த உண்மைகள் பிரகாசிக்கட்டும்.

7

இராஜ புத்திரர்களின் விரோதியா?

முகலாயச் சக்கரவர்த்தி அக்பருக்கு (கி.பி. 1556- 1605) தக்க துணையாக இருந்தவர்கள் ராஜபுத்திரர்கள். வீரமிக்க அந்த இந்துப் பெருமக்களை ஔரங்கஜேப் தனது ஆட்சிக் காலத்தில் ஹிம்சித்தார். குறிப்பாக மார்வார் மகாராஜா ஜஸ்வந்த்சிங் கி.பி.1678-ல் இறந்தவுடன் ஔரங்கஜேப் மார்வாரைத் தமது ஆட்சிப்பகுதிகளோடு சேர்த்துக் கொண்டார். அத்துடன் ஜஸ்வந்த்சிங்கின் பிள்ளைகளை முஸ்லிமாக்கவும் முயன்றார். இத்தகைய ஹிந்து மத விரோதக் கொள்கைகள் ராஜபுத்திரர்களின் கோபத்தைக் கிளறியது. அதனால் போர்கள் பல நடைபெற்றது. ஔரங்கஜேப்பின் ஹிந்து மத விரோதக் கொள்கைகளே இதற்குக் காரணம்.

இது மாமன்னர் ஔரங்கஜேப் மீது சுமத்தப்பட்டும், பழிதூற்றப்பட்டும், பாடசாலைகளில் போதிக்கப்பட்டும், துவேஷ உணர்வுகள் தூண்டப்பட்டும், தினமும் சொல்லப்பட்டும் வருகின்ற குற்றச்சாட்டு ஆகும். இதில் உண்மை நிலை என்ன? விரிவாகவே இதனை ஆராய்வோம்.

ராஜபுத்திரார்கள்

ராஜபுத்திரர்கள் என்பவர் யார்? ராஜபுத்திரார்களின் பூர்வ வரலாறு பலவாறாகச் சொல்லப்படுகின்றது.

‘சாந்த்பர்தாய்’ என்கிற கவிவாணர் ஹிந்தியில் எழுதியுள்ள ‘பிரிதிராஜ் - ரைஸா’ என்ற காவியத்தில் ராஜபுத்திரர்களின்

பூர்வீகம் பற்றித் தெரிவித்திருக்கிறார்.

விஷ்ணு அவதாரமாகிய பரசுராமர் தன்னுடைய கோடாரியால் க்ஷத்திரியர்களை பூண்டோடு நாசம் செய்துவிட விரதம் பூண்டார். அவ்வாறே செய்தும் முடித்தார். அதனால் பாரதகண்டத்தில் க்ஷத்திரியர்களே இல்லாமல் போய்விட்டனர். வர்ணாசிரம தர்மத்திற்கிணங்க பாரத தேசம் ஆளப்பட வேண்டும் என்கிற விதிப்படி க்ஷத்திரியர்கள் இல்லாததால், இராட்சதர்களும், துஷ்டர்களும் பிராமணர்களுடைய சடங்குகளை கெடுக்கலாயினர். உடனே பிராமணர்களும், பெரியவர்களும் அபு (Abu) என்று சொல்லப்படும் அக்கினிகுண்ட மலையில் நெருப்புக்கு மத்தியில் தவம் செய்தனர்.

இமயமலைக்குத் தெற்கே 'அபு' மலையே உயரமானதால் பிராமணர்களும், ரிஷிகளும் அங்கிருந்து தெய்வங்களைப் பிரார்த்தித்தனர். ஹோமம் செய்தனர்; யாகம் புரிந்தனர். அவர்களுடைய கோரிக்கை பூர்த்தியானது. நெருப்பிலிருந்து பரிஹாரன், ஸோலாங்கி, பரமராமன், சௌகான் என்ற நான்கு வீரர்கள் தோன்றினார்கள். இவர்கள் நாளடைவில் முப்பத்தாறு குலங்களுக்கு மூல புருஷர்களாய் ஆனார்கள்' என்று இராஜ புத்திரார்களின் வரலாறு ஆரம்பமாகிறது.

இதனை சரித்திர ஆசிரியர்கள் ஒப்புக்கொள்வார்களா? பகுத்தறிவிற்குப் பொருந்துமா? என்ற கேள்வி எழத்தான் செய்கிறது.

எனினும் உண்மையான இராஜ புத்திரர்களோவெனின் தம்முடைய வரலாற்றைச் சரித்திர முறையாய்க் கேள்விப்படுங்கால் மனத் துன்பமடைவர். ஏனெனில் அவர்கள் கலப்பு ஜாதியர்களாகக் கணக்கெடுக்கின்றனர் மேனாட்டுச் சரித்திர மேதாவிகள்' என்று பரிதிமாற்கலைஞர் கூறிய வரிகளை மாத்திரம் குறிப்பிட்டுவிட்டு விஷயத்திற்கு வருவோம்.

இராஜபுதனம்

இராஜபுதனம் என்பது அரவலி மலையால் (Aravali) இரு பாகங்களாகப் பிரிக்கப்படுகிறது. இந்த மலையின் மேற்குப் பாகத்திற்கு மார்வார் (Marwar) என்றும், கிழக்குப் பாகத்திற்கு மீவார் (Mewar) என்றும் பெயர் வழங்கப்பட்டது. மேவார் (உதயபுரம்), ஜயபூர், மார்வார் (ஜோத்பூர்), பிகாளிர், கோடா, ஆல்வார், பூண்டி, ஸிரோஹி என்ற எட்டு ராஜ்யங்களாக இராஜபுதனம் ஆளப்பட்டு வந்தது.* (* எஸ். ஆர். பாலசுப்பிரமணியன், இந்து தேச சரித்திரம், சிதம்பரம், **1939,**

பக்**. 135)**

இராஜபுதனத்து வீரர்களின் சரீத திடமும், மன உறுதியும், கம்பீர நோக்கமும் சிங்கத்திற்கு சமமானவர்கள் என்பதால் அவர்கள் 'சிங்' என்ற பட்டத்தை வைத்துககொண்டனர். இராஜபுதனத்தின் ஆதிமுதல் ஆட்சி புரிந்தவர்களின் வரலாறு இங்கு அவசியமில்லாததால், ஔரங்கஜேப் மீது பழி சுமத்தப்பட்டு வரும் ஜஸ்வந்த்சிங் மறைந்த காலச் சரித்திரத்திற்கு வருவோம்.

ஜஸ்வந்சிங் ராதார் **(Jaswant Sing Rathor)**

மார்வாரின்அரச பொறுப்பைக் கவனித்து வந்தவர் ராஜா ஜஸ்வந்சிங். இவரது முந்தைய செயல்களை - நடவடிக்கைகளை சற்று நினைவிற்குக் கொண்டு வருவோம்.

பேரரசர் ஷாஜகான் காலத்தில் வாரிசுரிமைப் போர் நடைபெற்றது. ஔரங்கஜேப் தக்காணத்திலிருந்து ஆக்ரா நோக்கிச் சென்றார். ஔரங்கஜேப்பின் அண்ணன் தாராஷுக்கோ ஔரங்கஜேப்பை வழியில் தடுத்து நிறுத்த முடிவு செய்தார். அதற்காகப் பெரும் படையுடன் அனுப்பப்பட்டவர் ஜஸ்வந்சிங்.

"தந்தை ஷாஜகானின் நோயை விசாரிப்பதற்காகச் செல்கிறேன்; நீர் என்னைத் தேட வேண்டாம்" என்று ஔரங்கஜேப், ஜஸ்வந்தசிங்கிடம் தூது அனுப்பினார். ஆனால் ஜஸ்வந்சிங்கோ அதை ஏற்றுக் கொள்ளவில்லை.*

உஜ்ஜயினிக்கருகில் 70,000 ராஜபுத்திர வீரர்கள் அடங்கிய பெருஞ்சேனையொன்று ஜஸ்வந்சிங் தலைமையில் ஔரங்கஜேப்பை எதிர்த்து நின்றது.

ஜஸ்வந்சிங் அஞ்சாநெஞ்சனாயினும் வெடுவெடுப்பும் கர்வமும் படைத்தவன். அவனுக்கு ஔரங்கஜேப்பை எதிர்க்கத்தக்க வல்லமை போதாது. ஆகவே ஔரங்கஜேப், இராஜபுத்திரர்களைத் தோற்கடித்தார். இராஜபுத்திரர்களில் பத்தாயிரம் பேர் யுத்த களத்திலே மாண்டனர். ஜஸ்வந்சிங் போர்க்களத்திலிருந்து உயிர்தப்பி தனது ஊருக்கு ஓடிப் போனார். அவரை அவரது மனைவி அங்கு ஏற்றுக்கொள்வதாக இல்லை. தோற்ற ஓடிவந்த ஜஸ்வந்சிங்கைப் பார்த்து அவரது மனைவிக் கேட்டாள்:

மாதரசியின் முழக்கம்

"சைன்னியம் தோல்வியுற்றதைச் சொல்லவந்த தூதுவனைப் போல் நீங்கள் வந்திருக்கிறீர்களே, உங்களுக்கு வெட்கமில்லையா?... என் பிராணநாதன் யுத்த களத்தில் இறந்தே போயிருக்க வேண்டும். இங்கே வந்து கதவைத் தட்டுகிற அவர்,

அவராயிருக்க முடியாது; யாரோ ஒரு மாயாவி; தீயை மூட்டுங்கள்; இறந்துபோன என் கணவனுடன் தீக்குளித்து நானும் போய்ச் சேர்ந்துவிடுகிறேன்” என்றாள்.

வெகுநேரம் மன்றாடிய ஜஸ்வந்சிங் கடைசியில் திரும்பவும் புதிதாக ஒரு படையைத் திரட்டிக் கொண்டு போய் எதிரியடன் போர்புரிந்து இராஜபுத்திர கௌரவத்தைக் காப்பாற்றுவதாக வாக்களித்த பின்னரே அவரது மனைவி கதவைத் திறக்கச் சம்மதித்தார்.”*

(* ஹெச்.சி., எஸ். கே. தேவசிகாமணி, மொழிபெயர்ப்பு, இந்து முஸ்லிம் ஆட்சிகளின் வரலாறு, சென்னை, 1946, பக். 255.)

ஔரங்கஜேப்பிடம், ஜஸ்வந்சிங் மன்னிப்புக் கேட்டது இந்த ஒரு முறையோ மட்டும் நின்றதா? இல்லை; இல்லவே இல்லை; மன்னிப்புக்கோரும் படலம் தொடர்ந்தது.

ஜஸ்வந்சிங்கின் சதியும் துரோகமும்

ஔரங்கஜேப் தன் சகோதரர் ஷுஜாவுடன் போரிட்டபோது, ஜஸ்வந்சிங்கைத் தளபதியாக அனுப்பி வைத்தார். இரு படைகளும் சந்தித்தபோது பிந்திய இரவில் தனது படைவீரர்களுடன் ஜஸ்வந்சிங் பிரிந்து சென்று ஷாஜாவின் படையோடு சேர்ந்து கொண்டார். துரோகம் புரிந்த ஜஸ்வந்சிங்கின் படையினர் திடீர்த்தாக்குதல் நடத்தி ஔரங்கஜேப்பின் படையினரின் பொருட்களையும் கஜானாவையும் கொள்ளையிட்டனர். பெருங்குழப்பம் ஏற்பட்டது.

துணிவுடன் பெற்ற வெற்றி!

நள்ளிரவில் தஹஜ்ஜத் (Tahajjud) தொழுகையைத் தொழுது இறைவனைப் பிரார்த்தித்துக் கெண்டிருந்த ஔரங்கஜேப்பிற்கு இந்தச் செய்தி எட்டியது. பதட்டப்படாமல், நிதானத்துடனும், திறமையுடனும் இந்த இக்கட்டான சூழ்நிலையச் சந்தித்திடத் தீர்மானித்தார் ஔரங்கஜேப்.

போர்க்களத்தில் ஓரிடத்தில் அமர்ந்து கொண்டு தனது படைவீரர்களைப் பார்த்து, “நமது ரகசிய எதிரிகள் இறைவனின் இருளால் நமக்கு அடையாளங் காட்டப்படவிட்டனர். இந்தப் போரில் இறைவனின் உறுதுணையோடு நாம்வெற்றி பெறுவோம்” என்றார் ஔரங்கஜேப். அவ்வாறே வெற்றியும் பெற்றார்.

மறுபடியும் மன்னிப்பு

நாட்கள் கழிந்தன. ஜஸ்வந்சிங் திரும்பவும் தூது அனுப்பினார். தன்னை மன்னிக்கும்படி வேண்டினார்.

ஔரங்கஜேப்பும் அவரை மன்னித்தார். ஜஸ்வந்சிங் வெட்கத்தாலும், நாணத்தாலும் ஔரங்கஜேப்பை சந்திக்க நேரில் அப்போது வரவில்லை. இவ்வளவிற்குப் பிறகும் ஜஸ்வந்சிங்கை அமத் நகரின் கவர்னராக நியமித்தவர் ஔரங்கஜேப்.

தொடரும் துரோகம்

இதற்குப் பிறகும் ஜஸ்வந்சிங் தனது துரோக நடவடிக்கைகளில் இருந்து திருந்தினாரா? இல்லை, இல்லவே இல்லையென்றே சொல்ல வேண்டும்.

தக்காணத்தில் சிவாஜியை எதிர்க்க ஜஸ்வந்சிங்கை, ஔரங்கஜேப் அனுப்பிய போது அப்போது சிவாஜியுடன் சேர்ந்து கொண்டு துரோகம் செய்தவர் ஜஸ்வந்சிங். ஷெயிட்ஸ்டகானைத் தாக்குவதற்கு சிவாஜிக்கு உதவியதே ஜஸ்வந்சிங்தான்.*

(*A Secret understanding, it was suspected, existed between Jessomessingue and Seva-Gi”... பெர்னியர், முற்கூறிய நூல், பக். 188.)

ஆக்ராவிலிருந்து சிவாஜி தப்பித்துச் சென்றபோது அவருக்குப் பெரிதும உதவியாக இருந்து துரோகம் புரிந்தது, ஜஸ்வந்சிங்கின் மகன் ராம்சிங் என்பதனை முன்பே குறிப்பிட்டிருக்கிறோம்.

பூண்டிராஜாவிடம் நடத்திய பேரம்

ராவ்ஹால்டாகு என்ற பூண்டிராஜாவைத் தம்முடன் சேர்த்துக் கொள்ள ஜஸ்வந்சிங் விரும்பினார். அதற்காக அந்த ராஜாவின் சகோதரியும் தனது மனைவியுமான ராணியை அழைத்து அதற்காக சிபாரிசு செய்யவும் சொன்னார். பேரரசிற்கு எதிராகத் தயாரித்த அந்தத் திட்டத்திலும் ஜஸ்வந்சிங்கால் வெற்றி பெற இயலவில்லை.

இருபது ஆண்டுகள் இடைவிடாத துரோகம் பல புரிந்த ஜஸ்வந்சிங்கை பலமுறை பெருமனதுடன் மன்னித்தும், பெரிய பதவிகளையும் அளித்தவர் ஔரங்கஜேப். அதற்குப் பின்னர்தான் காபூலுக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

நடுநிலையாளர்களின் கவனத்திற்கு

‘பல ஆண்டுகளாக விசுவாசமாகப் பணியாற்றி வரும் ஜஸ்வந்சிங்கை ஔரங்கஜேப் பழிவாங்கவே காபூலுக்கு அனுப்பிவைத்தார்’ என்று வரலாறு இன்று கற்பிக்கப்படுகிறது. மேற்சொன்ன உண்மைகளை அமுக்கியும், ஜஸ்வந்சிங்கின் சதியையும், துரோகத்தையும் மறைத்தும் சரித்திரம் சொல்லிக்

கொடுக்கப்படுவது நியாம்தானா? நடுநிலையாளர்களின் கவனத்திற்கு இந்தக் கேள்வியை முன் வைக்கிறேன்.

மறைவும் மனைவியர் தீக்குளிப்பும்

கி.பி.1678-ம் ஆண்டு டிசம்பர் 10-ம் தேதி பெஷாவர் மாவட்டத்தில் ஜம்ரூத் என்ற இடத்தில் ஜஸ்வந்சிங் இறந்தார்.

ஜஸ்வந்சிங் மறைவை அறிந்ததும் அவரது ஐந்து மனைவியர்களும், ஏழு ஆசை நாயகிகளும் தீக்குளித்து மரணத்தைத் தழுவிக் கொண்டனர்.

அந்தச் சூழலில் அன்று "ஜஸ்வந்சிங்கிற்குப்பின் பட்டத்திற்கு வர வாரிசு ஒருவருமில்லை."

பொறுப்பாளர்கள் நியமனம்

இந்த நிலையில் கி.பி.1679 ஜனவரியில் ஔரங்கஜேப் ஜோத்பூரில் முகலாய பௌஸ்தார் (haujdar) கிலேதார் (Qiladar), கொத்வால் (Kotwal) ஆகிய பதவிக்குரியவர்களை அங்கு நியமித்தார்.

கி.பி.1679 பிப்ரவரி 7-ல் கான் ஜஹான் என்பவர் (KhanJahan) மார்வாரின் பொறுப்பைப் கவனித்துக்கொள்ளவும் அனுப்பி வைக்கப்பட்டார்.

முகலாய அதிகாரி மீர்பார் படுகொலை

இராஜபுத்திரர்களில் திறமையும், வீரமும்மிக்க துர்க்காதாஸ் என்பவர் தளபதிகள் சிலருடனும், படை வீரர்கள் பலருடனும், ஜஸ்வந்சிங்கின் விதவை மனைவியர் இருவரையும் அழைத்துக் கொண்டு ஔரங்கஜேப்பின் அனுமதி ஏதுமின்றி அட்டாக் (**Atak**) என்ற இடத்தில் நதியைக் கடக்க முயன்றார்.

பயண அனுமதிச் சீட்டுஇல்லாத நிலையில் 'உங்களது பயணத்தைத் தொடர அனுமதிக்க முடியாது' என்று அந்தப் பகுதியிலிருந்து முகலாய அதிகாரிகள் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். உடனே இராஜபுத்திரர்கள் கலகம் விளைவித்தனர். எதிர்த்துத் தாக்கினர். முகலாயப் படைவீரர்கள் பலர் காயமுற்றனர்.

முகலாய அதிகாரி மீர்பார் (**Mir Bahr**) சண்டையில் படுகொலை செய்யப்பட்டார். அதன்பின் இராஜபுத்திரர்கள் பலவந்தமாக நதியைக் கடந்து சென்றார்கள். இதோ அதுகுறித்து சம கால வரலாற்றாசிரியர் காஃபிகான் கூறுகிறார்.

"Without waiting for permission from Aurangzeb, and without even

obtaining a pass from the Subadar of the province, they set off towards the capital, when they reached the ferry of atak, they were unable to produce any pass, so the commender of the boats refused to let them proceed. They then attached him, killed and wounded some of his men, and by force made good their way over the river and went onwards towerds Delhi.” *

(* KhafiKhan, Muntakhabul- Lubab Vil II. P. 259)

அஜீத்சிங் பிறப்பு

இராஜபுத்திரர்கள் ‘அட்டாக்‘ என்ற இடத்தில் முகலாய வீரர்களைக் காயப்படுத்தியும், அதிகாரியை படுகொலை செய்து விட்டும், பலவந்தமாக நதியைக் கடந்து வந்து கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி ஔரங்கஜேப்பிற்கு கிடைத்தது.

இந்த நிலையில் கி.பி. 1679 பிப்ரவரி 16 இல் ஜஸ்வந்த்சிங் இரு மனைவியர்களும்(?) அஜீத்சிங், தல்தாமன் என்ற இரு பிள்ளைகளைப் பெற்றனர். அதில் ஒரு பிள்ளை சில நாட்களில் இறந்து விட்டதாகவும், அஜீத்சிங் என்ற பிள்ளை மட்டும் உயிரோடு இருப்பதாகவும் கி.பி. 1679 பிப்ரவரி 26இல் ஔரங்கஜேப்பிற்கு செய்தி வந்தது.

‘பிறந்த அந்தக் கழந்தையை டில்லிக்கு கொண்டு வாருங்கள். குழந்தை வளர்ந்து பெரியவனானதும் ராஜ்யத்தை அவருக்கு அளித்திடுவதாக’ ஔரங்கஜேப் அறிவித்தார். அதோடு அஜீத்சிங்கை தாமே வளர்த்து ஜோத்பூருக்கு மன்னராக்கிடவும், திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

பிள்ளை வளர்ந்ததும் பதவி

‘Aurengzeb, to get them into his power, invited them to Delhi.’

ஔரங்கஜேப் அவர்களை டில்லிக்கு அழைத்ததை ராபர்ட் ஓர்ம் தனது நூலில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

‘உமது அரசிளங்குமரனுக்கு அரசாளும் வயது வரும் வரையில் அவன் என்னுடைய அரண்மனையின் அந்தப்புரத்தில் வளர்ந்து வரட்டும். பிறகு அவனுக்கு நாமே முன் நின்று முடி சூட்டுகிறோம்’ என்று ஔரங்கஜேப் கூறியதை இராஜபுத்திரர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஜஸ்வந்த்சிங் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது. அஜ்மீர் சென்றிருந்த ஔரங்கஜேப் 1679 ஏப்ரல் 2 இல் டில்லிக்குத் திரும்பினார். 1679 மே 26 இல் இந்திரசிங் (Indrasingh) என்பவரை ஜோத்பூர் ராஜாவாக ஔரங்கஜேப் நியமித்தார்.

ஜஸ்வந்த்சிங்கின் சொத்துக்களை ஔரங்கஜேப் பறிமுதல் செய்தது. சரியா? ஔரங்கஜேப்பின் குரோத உணர்வினையே இதுகாட்டுகிறது என்று அவர்மீது குற்றம் சுமத்துகிறார்கள். இதில் உண்மை நிலை என்ன?

முகலாயர் காலப் பறிமுதல் சட்டம்

'அரசாங்கத்தின் ஊழியர் ஒருவர் வாரிசு இல்லாமலும், அவருக்கு அரசாங்கம் வழங்கிருந்த கடன் தொகை எதையும் கஜானாவுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டியில்லாமலும் உள்ள நிலையில் இறந்துவிடுவாரேயானால் அவருடைய சொத்துக்களைப் 'பைத்துல்மால்' **(Baitul Mal)** என்னும் பொது கஜானாவில் சேர்த்துவிடவேண்டும். இறந்தவர் அரசிற்கு கடன்பாக்கி கொடுக்க வேண்டியதிருந்தால், அவரது கடன் தொகையை மட்டும் கழித்துக் கொண்டு மீதிச் சொத்துக்களைப் பைத்துல்மாலில் ஒப்படைத்துவிட வேண்டும். அவருக்கு வாரிசு எவரேனும் இருப்பாரேயானால் இறந்தவருடைய சொத்துக்களை அவர் இறந்த மூன்று நாள்களுக்குப் பிறகு கைப்பற்ற வேண்டும். இறந்தவருடைய சொத்து அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டிய கடன்களைவிட அதிகமாக இருந்தால், கடன் தொகையை மட்டும் கழித்துக் கொண்டு, எஞ்சியுள்ள சொத்துக்களை சட்டபூர்வமாகத் தானே வாரிசு என்று நிரூபிக்கிற அவருடைய வாரிசிடம் கொடுத்து விட வேண்டும்.

கி.பி. 1679 மார்ச் 9இல் செய்யது அப்துல்லா (Sayyid Abdullah) என்ற அதிகாரி அனுப்பப்பட்டு, இறந்தவர் அரசாங்கத்திற்கு தரவேண்டிய பாக்கி ஒன்றுமேயில்லை என்றால், இறந்தவருடைய சொத்துக்கள் அனைத்தையும், சட்ட பூர்வமாக நிரூபணமாகியிருக்கும் அவருடைய வாரிசிடம் ஒப்படைக்க வேண்டும்.*

(* Mirat-I-Ahmadi, Vol. I, P. 266.)

முகலாய பேரரசில் ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக இந்தப் பறிமுதல் சட்டம் அமுலில் இருந்து வந்தது. இந்தச் சட்ட முறைகளை ஒழுங்குப்படுத்தி ஔரங்கஜேப் கி.பி. 1666 ஜூலை 24 இல் ஆணை பிறப்பித்தார். (ஜஸ்வந்த்சிங் இறந்தது கி.பி. 1678 டிசம்பரில் என்பதனைக் கவனத்தில் கொள்க.)

முந்தைய ஆட்சியாளர்கள் காலத்திலும் முகலாயப் பேரரசர்கள் காலத்திலும், ஔரங்கஜேப் ஆட்சிக் காலத்திலும் வாரிசின்றி பலர் மறைந்தனர். அந்த வேளைகளில்

அரசாங்கத்தினால் பலரது சொத்துக்கள் கைப்பற்றப் பட்டன. அவ்வாறு கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் முழுக்க முழுக்க மாற்று மதத்தினரிடமிருந்து மட்டும் பறிமுதல் செய்யப்பட்டதா? அதுபோல் முஸ்லிம் பிரபுகளிடமிருந்தும் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டனவா? கேள்வி இங்கு எழுகிறது.

முஸ்லிம் பிரப்புக்கள் மறைந்தபோதும், அரசாங்கத்தினால் அவர்களது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டதற்கான சரித்திரச் சான்றுகள் பல உள்ளது.

இதோ! சில சான்றுகள்.....

பஷீர் உமாதுல்முல்க் (துக்ளக் காலத்தில் சொத்து பறிமுதல்)

ஃபய்ரோஸ் துக்களக்கிடம் பணி புரிந்த பஷீர் உமாதுல் முல்க் சாகும்போது 12 கோடி 'தன் காக்'கள் அவரிடமிருந்தது. இத்தொகையில் 9 கோடியை மன்னர் பறிமுதல் செய்து கொண்டார். அவரது மகன்கள், மருமக்கள், மனைவியர், சுவிகரா புத்திரர்கள், அடிமைகள் ஆகியோருக்கு எஞ்சியவை பகிர்ந்தளிக்கப்பட்டது.*

(* Afif, Jariki_i_Firuz Shahi, P. 445. மேற்கோள்**,** எம்**.** அந்தர்அலி**,** அவுரங்கசீப்பின் ஆட்சியில் முகலாய பிரிபு மூலம்**,** தமிழாக்கம்**,** உஸ்மான் ஷெரீப்**,** சென்னை**, 1989,** பக்**. 122.)**

மூனிம்கான் (அக்பர் காலத்திய சொத்து பறிமுதல்)

கி.பி. 1575இல் மூனிம்கான் என்பவர் மறைந்தபோது, அவருடைய சொத்து முழுவதுமே அக்பரால் பறிமுதல் செய்யப்பட்டது. (அந்த வேளையில் இறந்த மூனிம்கானுக்கு ஒரு மகனும் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது) அவரது சொத்துக்கள் முழுவதையும் அரசே எடுத்துக் கொண்டது.

அலீம்தன்கான் (ஷாஜகான் காலத்திய சொத்து பறிமுதல்)

கி.பி. 1657இல் அலீமதன்கான் என்ற முகலாயப் பிரபு காலஞ் சென்றார். அப்போது அவர் விட்டுச் சென்ற சொத்துக்களின் மதிப்பு ரொக்கமும், பொருட்களுமாக சேர்ந்து ஒரு கோடி ரூபாய் ஆகும். அவரது ஆண், பெண் பிள்ளைகளுக்கு 50 லட்ச ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களைப் பிரித்து வழங்கி விட்டு எஞ்சிய ஐம்பது லட்சம் மதிப்புள்ள சொத்துக்களை அரசாங்கக் கருவூலத்தில் சேர்த்துக் கொண்டவர் பேரரசர் ஷாஜகான்.*

(* Muhammad Salihkambo, A Mal-i-Salih, G. Yazdani (Ed) Calcutta, 1923-1946, Voi III, R 246-248 and, Sibhari Lal, Tuhfa-i-Shas Jahani, P.337, I.N.27b (இந்திய ஆபீஸ் நுலகத்திலுள்ள கையெழுத்துப்

பிரதி நுலில் உள்ள அடிக்குறிப்பு.)

இனி ஔரங்கஜேப் காலத்திய சொத்துப் பறிமுதல் விஷயத்திற்கு வருவோம்.

ரஹ்மத்கான் சொத்து பறிமுதல்

ஔரங்கஜேப்பின் 8வது அண்டில் ரஹ்மத்கான் என்ற முகலாயப் பிரபு காலமானார். அவருடைய சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டது. ரஹ்மத்கானின் மருமகனான அப்துர் ரஹீம்கான் அது குறித்து அரசாங்கத்திற்கு விண்ணப்பம் செய்தார். பறிமுதல் செய்யப்பட்ட ரஹ்மத்கானின் சொத்துக்களில் அரசுக் கடன்பாக்கிக்கான தொகை மட்டுமே வசூலிக்கப்பட வேண்டுமென்றும், மீதமுள்ள சொத்துக்களை அவருடைய வாரிசுகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென்றும் கட்டளையிட்டவர் ஔரங்கஜேப்.

அலீயார்பேக் சொத்து பறிமுதல்

கி.பி. 1662இல் அலீயார்பேக் என்பவர் காலமானார். இந்த முகலாயப் பிரபுவின் சொத்திலிருந்து அரசாங்கக் கடன் (முத்தலிபா) மட்டுமே வசூலிக்கப்பட்டது. எஞ்சியவை அவரது வாரிசுகளிடம் ஒப்படைக்கப்பட்டது.*

(* Selected Waqal of the Deccan (1660_1671), யூசுப் ஹுசைன் கான் பதிப்பு, ஹைதராபாத், 1953, பக். 50.)

ஷெயிஸ்டகானின் சொத்து பறிமுதல்

ஔரங்கஜேப்பின் தாய்மாமனாகிய ஷெயிஸ்டகான் இறந்தபோது, அவரது சொத்துக்களை பறிமுதல் செய்ய உத்தரவிட்டவர் ஔரங்கஜேப். இதனை பில்லிமோரியா என்பவர் மொழி பெயர்த்து வெளியிட்டிருக்கிற ஔரங்கஜேப்பின் கடிதங்களிலிருந்து அறிய முடிகிறது.

மகபத்கான் சொத்து பறிமுதல்

முகலாயப் பேரரசில் ஔரங்கஜேப்பிடம் பணியாற்றிய மகபத்கான் என்பவர் மறைந்தபோது அவரது சொத்துக்களைப் பறிமுதல் செய்ய தமது கையாலேயே உத்தரவிட்டவர் ஔரங்கஜேப்.

அமீர்கான் சொத்து பறிமுதல்

காபூல் கவர்னர் அமீர்கான் இறந்தார். அவரது சொத்துக்களை, ஒரு துரும்புகூட விடாமல் பறிமுதல் செய்ய வேண்டுமென்று, லாகூரின் திவானுக்கு கட்டளையிட்டு, ஆணை

பிறப்பித்தவர் ஔரங்கஜேப்.

ஷேக் முஹையத்தீன் சொத்து பறிமுதல்

குஜராத் மாகாணத்தில் சதர்ப் (Sadar) பதவியை வகித்து வந்த ஷேக் முஹையத்தீன் இறந்தபோது அவரது சொத்துக்களை பறிமுதல் சட்டத்தின்படி பறிமுதல் செய்திட ஔரங்கஜேப் உத்தரவிட்டார்.

தனது தந்தையாரின் கடன் முழுவதையும் அரசுக்குச் செலுத்திவிடுவதாக அவரது மகன் அக்ரமுத்தீன்கான் அரசாங்கத்திடம் தெரிவித்தார். அதன் பின்னர் அவரது கோரிக்கை ஏற்கப்பட்டது.

குஜராத்தின் திவானாகப் பணியாற்றிய அலிமுகமதுகான் என்பவர் கி.பி. 1748-ல் எழுதி, பேராசிரியர் நவாப் அலி வெளியிட்டுள்ள 'மீராத்தெ அஹ்மதீ' என்ற நூலில் இந்த விஷயம் சொல்லப்பட்டுள்ளது.

ஷுஜா அத்கான் சொத்து பறிமுதல்

கி.பி. 1701-ல் ஷுஜாஅத்கான் என்ற குஜராத்திய சுபேதார் மறைந்தார். அவரது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டது. அவரது யானைகள், குதிரைகள், கைப்பற்றப்பட்டு ஔரங்கஜேப்பின் தர்பாருக்கு அனுப்பி வைக்கப்பட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

முகலாயர் காலச் சொத்து பறிமுதல்

"முகலாயப் பேரரசில் நிலவி வந்த சொத்துப் பறிமுதல் (Law of Escheats) சட்டத்தின்படி எந்த ஒரு பிரபுவின் சொத்தும் அவர்தம் வாரிசுகளுக்கு விட்டுச் செல்லத்தக்க பரம்பரைச் சொத்து என்று கருதப்படவில்லை. பேரரசின் கீழ் தலைவராக அலுவலில் இருந்த ஒருவர் இறந்து போனால் அவரது இறப்பைத் தொடர்ந்து அவரது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டே வந்தது."

(* எச். அமீர் அலி, 'ஔரங்கஜேப்', பக். 216.)

இந்தச் சட்டத்தின் அடிப்படையில் தான் ஜஸ்வந்த்சிங்கின் சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டது.

முகலாயர் ஆட்சிமுறையில் இந்தப் பறிமுதல் சட்டம் சரியா? தவறா? என்பதற்குள் நான் வரவில்லை. ஆனால் இந்துக்களின் மீது குறிப்பாக, இராஜபுத்திரர்கள் மீது விரோதத்துடனும், மதக் குரோத மனப்பான்மையுடனும் ஔரங்கஜேப் நடந்து ஜஸ்வந்த்சிங்கின் சொத்துக்களைப் பறிமுதல் செய்தார்

என்பதனை மட்டும் மறுக்கிறேன்.

ஜஸ்வந்த்சிங்கின் அரசாங்கக் கடன்

மகாராஜா ஜஸ்வந்த்சிங் மாண்டபோது அவர் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய கடன்தொகை அதிகமாக இருந்தது. அரசுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன்காரராக அவர் இருந்தார்.

கி.பி. 1670 ஆம் ஆண்டில் குஜராத்தின் சுபேதாராராக ஜஸ்வந்த்சிங் நியமிக்கப்பட்டபோது ஒவ்வோர் ஆண்டும் தம் கடன் தீரும் வரையில் இரண்டு லட்ச ரூபாய் அரசாங்கத்திற்குத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று அப்போது அவருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அரசாங்க நெறிமுறைகளை அறிந்து கொள்ள மிகவும் பயன்படுகின்ற வரலாற்று நூலை குஜராத்தின் கவர்னராக இருந்த அலி முஹம்மதுகான் கி.பி. 1748 இல் எழுதியுள்ளார். அதில் ஜஸ்வந்த்சிங் அரசாங்கத்திற்கு கடன் பட்டிருந்த விவரங்களைத் தெரிவித்திருக்கிறார். எனவே கி.பி. 1678 இல் ஜஸ்வந்த்சிங் மறைந்தபோது அரசாங்கத்திற்கு அவர் கடன் பட்டிருந்தார் என்பதையும், அத்தோடு அவர் இறந்தபோது அவருக்கு வாரிசு என்று யாரும் இல்லையென்பதையும், அதனால் தான் ஔரங்கஜேப் அவரது சொத்துக்களைப் பறிமுதல் செய்தார் என்பதையும் நடுநிலையாளர்கள் புரிந்து கொள்வார்களா?. ரஹ்மத்கான், அலீயார் பேக், தாய்மாமன்,ஷெயிஸ்ட்கான், மகபத்கான், அமீர்கான், ஷேக் முஹையத்தீன், ஷுஜா அத்கான் போன்றவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்தது போலவே ஜஸ்வந்த்சிங்கின் சொத்துக்களையும் பறிமுதல் செய்தவர் ஔரங்கஜேப்.

ஆனால் இவைகளை மறைத்து விட்டு, ஜஸ்வந்த்சிங் என்ற இந்து அரசரின் சொத்தை ஔரங்கஜேப் என்ற முஸ்லிம் பேரரசர் பறித்துக் கொண்டார் என்று பிஞ்சு உள்ளங்களில் நஞ்சைத் தூவிடும் வண்ணம் பாடசாலைகளிலும், கலாச்சாலைகளிலும் இந்த வரலாறு திரித்துக் கூறப்படுவது போதிக்கப்படுவது நியாயந்தானா? சரிதானா? என்ற கேள்வி நடுநிலையாளர்கள் உள்ளத்தில் எழத்தானே செய்கிறது?

மேவாரின் ராணா ராஜ்சிங்

சித்தூர்க் கோட்டையைப் புனர் நிர்மாணம் செய்து உறுதிப்படுத்திக் கொண்டார் என்பதற்காக கி.பி. 1654 இல் மேவாரின் ராணாராஜ்சிங்கிடமிருந்து அவரது ஆட்சிப்பகுதிகள்

பறித்துக் கொள்ளப்பட்டது. இதனைச் செய்தவர் ஷாஜகான். ஆனால் அந்தப் பகுதிகளை திரும்பவும் அவருக்குத் திருப்பி கொடுத்துவிட உத்தரவிட்டவர் ஔரங்கஜேப். மேவாரின் ராணா ராஜ்சிங்கிற்கு ஔரங்கஜேப் விடுத்த நிஷான்கள், இன்றும் அழியாமலிருந்து இதனை உலகிற்கு பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.*

(* கவிராஜ் சியாமளதாஸ் (Kaviraj Shyamaladas) எழுதிய வீர் வினோத் (Vir Vinod) நான்கு வால்யூம்களைக் கொண்டு இந்தயில் எழுதப்பட்ட மீவார் வராறு என்ற நூலில் இது சொல்லப்படுகிறது. பாரசீக, ராஜஸ்தானி மூல நூல்கள் நன்கு ஆராயப்பட்டு முகலாய்பபேரரசர்கள் பிறப்பித்த உத்தரவுகளின் முழு வாசகமும் இந்த நூலில் இடம்பெற்றுள்ளது. அதில் இரண்டாவது வால்யூம், பக். 423-424, 426-427.)

7000 வீரர் அந்தஸ்து

ஷாஜகானின் காலம் முழுவதிலுமே எந்த ஒரு இராஜபுத்திர அதிகாரியும் 7000 குதிரை வீரருக்குரிய அந்தஸ்தை அடையவில்லை. அவர்களுக்கு அது வழங்கப்படவுமில்லை. ஆனால், மிர்ஜா ராஜா ஜெய்சிங்கிற்கும், ஜஸ்வந்த்சிங்கிற்கும் 7000 குதிரை வீரர்களின் தலைவர் என்ற அந்தஸ்தை வழங்கியவர் ஔரங்கஜேப் என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

இராஜபுத்திரருக்கும் ஆட்சிப் பகுதி

ஜஹாங்கீர் ஆட்சியின்போது கி.பி. 1606இல் வங்காளத்திலிருந்து மான்சிங் திரும்பியழைக்கப்பட்டார். அதன்பின் எந்த ஒரு ராஜபுத்திர பிரபுவின் வசம் எந்த ஒரு மாநிலமும் ஒப்படைக்கப்பட்டதே கிடையாது. அதன்பின் கி.பி. 1658 ஆம்ஆண்டின் இறுதியில் மால்வாவிற்கு ஜஸ்வந்சிங் நியமிக்கப்பட்டார். அநேகமாக ஔரங்கஜேப் முகலாயப் பேரரசைக் கைப்பற்றிய நிலையில் அப்போது இருந்தார் என்பதனை நடுநிலையாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுகிறேன். அதன்பின் கி.பி. 1665-ல் ஜெய்சிங் தக்காணத்தில் அரசப் பிரதிநிதி (Viceroy) ஆக நியமிக்கப்பெற்றார். அதுவும் ஔரங்கஜேப் ஆட்சியின் போதுதான் என்பதனையும் நடுநிலையாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுகிறேன்.

ஜஸ்வந்த்சிங்கிற்கு வழங்கிய பதவிகள்

ஜஸ்வந்த்சிங்கை கி.பி. 1659-1661 ஆகிய ஆண்டுகளில் முதல்

முறையிலும், கி.பி. 1670 - 1672 ஆகிய ஆண்டுகளில் இரண்டாவது முறையாகவும் குஜராத்தின் ஆளுநராக நியமித்தவர் ஔரங்கஜேப்.

இத்தனை விஷயங்களையும் வரலாற்றிலே மறைத்து விட்டு, அல்லது மறைக்க வைத்துவிட்டு ஔரங்கஜேப்பை ராஜபுத்திரர்களின் பரம எதிரியாகச் சித்தரிக்க முயல்வது சரியா?

முஸ்லிம் மன்னர்கள் இந்து பிரப்புக்களிடம் குரோதமாக நடந்து கொண்டார்கள் என்று கருத்தை திரும்பத் திரும்பச் சொல்லி, இந்த நாட்டில் இந்து முஸ்லிம் ஒற்றுமையை, ஒற்றமையின் அடிப்படையை நிலை குலையச் செய்திடும், நாசச்செய்கையை நாள் தோறும் நடத்திவருவது நியாயந்தானா? சமகாலவரலாற்று ஆசிரியர் பெர்னியர் கருத்தை நடுநிலையாளர்களின் பார்வைக்கு முன் வைக்கிறேன் இதோ! அந்த வரிகள்.....

பெர்னியரின் கருத்து

‘மாண்புமிகு முகலாய மாமன்னர் ஒரு முஹம்மதியராக இருந்த போதிலும் அவர் தம்மிடம் பணியாற்ற எப்பொழுதுமே ராஜாக்களின் பெரும் பரிவாரங்களை நியமித்துக் கொண்டு, அவர் தம்முடைய மற்ற அமீர்களை (உம்ராக்களை) எப்படிப் பரிவுடன் கவனித்துக் கொள்கிறாரோ அப்படியே இவர்களையும் அபிமானத்துடன் நடத்தியும், தம்முடைய சேனைகளில் முக்கியமான தளபதிப் பதவிகளுக்கு அவர்களை அமர்த்திக் கொண்டும் வருகின்றார்.

ஜாதுநாத் சர்க்காரின் கருத்து

அடுத்து ஜாதுநாத் சர்க்கார் சொல்லியுள்ள வாசகங்களையும் இங்கே வைக்கிறேன்.....

‘இச்சட்டத்தின்படி தம்மிடம் பணியாற்றி, வாரிசு இல்லாமல் இறந்து விட்ட மன்சப்தார்களின் சொத்துக்களையும், செல்வங்களையும் அரசர் பறிமுதல் செய்வது வழக்கம். அப்படி வாரிசு இருக்குமேயானால், பின்னர் அவ்வாரிசிடம் சொத்துக்கள் ஒப்படைக்கப்படுவது மரபாகும்’.

‘இவைகளையெல்லாம் மறந்துவிட்டு ஔரங்கஜேப் இராஜபுத்திர விரோதி. அதனால்தான் ஜஸ்வந்த்சிங் இறந்ததும் அவரது சொத்துக்களைப் பறிமுதல் செய்து கொண்டார்’ என்றுச் சொல்வது சரியா?என்ற கேள்வியை நடுநிலையாளர்களின் முன் வைக்கிறேன்.

அஜீத்சிங்கை முஸ்லிமாக்க முயற்சியா?

‘ஜஸ்வந்த்சிங் இறந்த பிறகு அவரது மனைவியரில் ஒருவருக்குப் பிறந்த குழந்தை அஜீத்சிங்கை டில்லிக்கு கொண்டுவர உத்தரவிட்டதோடு, அந்தக் குழந்தையை முஸ்லிமாக மதம் மாற்றிட முயன்றவர் ஔரங்கஜேப்’ இப்படிச் சொல்லப்பட்டு வருகின்ற குற்றச்சாட்டின் உண்மை நிலை என்ன?

பேரரசர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கென்று விருப்பு, வெறுப்புகளும் பலவித உணர்ச்சி கொண்டவர்களாகத் தான் இருப்பார்கள். இருந்திருக்கிறார்கள். ஒரு மனிதன் எவ்வளவுதான் தன்னுடைய சமயத்தின் பேரில் விருப்புக் கொண்டிருந்தாலும், அவனது ஒவ்வொரு செய்கையையும் கொடுமையானதாக விவரிப்பது நல்லதாக அமையாது.

கொண்டு வரச் சொல்லப்பட்ட குழந்தை

ஜோத்பூர் சமஸ்தானத்தின் தலைவர் ஜஸ்வந்த்சிங் ஔரங்கஜேப்பிற்கு நிறையத் தொல்லைகள் கொடுத்து வந்தார் என்பது உண்மை.

இந்த நிலையில் தான் ஜஸ்வந்த்சிங்கின் குழந்தை அஜீத்சிங்கை அதற்கு வாரிசாக்க வேண்டுமென்ற கோரிக்கையை ரத்தோர்கள் ஔரங்கஜேப்பிடம் அனுப்பி வைத்தனர். குழந்தையின் பிறப்பிலேயே சந்தேகம் கொண்டிருந்த ஔரங்கஜேப் இந்தக் கோரிக்கையை ஏற்றக் கொள்ள மறுத்தார். இருந்த போதிலும் அவர்களது கோரிக்கையாக முழுவதுமாக நிராகரித்து விடாமல் குழந்தையை டில்லிக்கு கொண்டு வரவும் உத்தரவிட்டார். குழந்தை வயதுக்கு வந்ததும், ராஜ்யத்தையும் மன்சாப்பையும் அளிக்கவும் வாக்குறுதி தந்தார்.*

(* Massir-i-Alamgiri by Mustaidkhan Saqi, (This was written after Aurangzeb’s death, but is based on State Papers) M.A. 177.)

19-2-1679இல் பிறந்த அந்தக் குழந்தையை தர்பாருக்கு அனுப்பச் சொல்லி ஔரங்கஜேப் உத்தரவு பிறப்பித்திருந்தும், அதனை ராஜபுத்திரர்கள் அலட்சியப் படுத்தவே செய்தனர். 1679 சூலை மாதம் வரை குழந்தையை அழைத்துக் கொண்டு இராஜபுத்திரர்கள் டில்லிக்கு வந்து சேரவில்லை.

சித்தூர் ராணா

இதற்கிடையில் ஔரங்கஜேப், சித்தூரில் இராஜபுத்திர அரசர் இராணாவிடம் நல்லுறவுத் தூதராக தமது மகனையும்

குன்வர் ஜெய்சிங் (Kunwar Jai Singh) என்பவரையும் அனுப்பி வைத்தார். அத்தோடு உயர்ந்த பொன்னாடைகளையும், நகைகளையும், 20,000 ரூபாயையும் சித்தூர் ராணாவிடம் அளித்திட, அவர்களிடம் ஔரங்கஜேப்கொடுத்து அனுப்பினார். இதனை ஔரங்கஜேப்பின் 8-3-1679 வது வருடத்திய அரசு ஆணை தெரிவிக்கிறது.

ஔரங்கஜேப்பின் தூதுவர்கள் சித்தூர் ராணாவை சந்தித்தனர். ஜஸ்வந்த்சிங்கின் குழந்தை அஜீத்சிங்கை அங்கு வாரிசாக நியமிக்க வேண்டுமென்ற கோரிக்கை எதனையும் சித்தூர் ராணா அப்போது வற்புறுத்தவில்லை.

கி.பி. 1679 மார்ச்சில் ஔரங்கஜேப்பை உதயப்பூரின் ராணா நேரில் சந்தித்த போதும் அந்தக் கோரிக்கையை வலியுறுத்தவேயில்லை. குழந்தை அஜித்சிங்கிற்கு வாரிசு உரிமையை ஆரம்ப கட்டத்தில் சித்தூர் ராணா கேட்கவேயில்லை. அத்தோடுபிள்ளையின் பிறப்பைப் பற்றிய சந்தேகத்தை ஔரங்கஜேப் கொண்டிருந்ததால், இதனைத் தீர்மானிக்க முடியாத நிலையில் ஔரங்கஜேப் இருந்தார்.

இந்தர்சிங்

இந்த சூழ்நிலையில் இந்தர்சிங் (Inder Singh) என்ற ஜஸ்வந்த்சிங்கின் உறவினரிடம் (Gran nephew of Jaswant) 36 லட்ச ரூபாயைப் பெற்றுக் கொண்டு 26-5-1670 இல் ஜோத்பூர் பகுதியின் பொறுப்பை ஔரங்கஜேப் வழங்கினார்.

பிள்ளையின் பராமரிப்பு, பேரரசர் உத்தரவு

ஜஸ்வந்த்சிங்கின் ராணியருக்கு மகால்களில் உள்ள சிலபர்கதனாக்களை வழங்கிடவும், குழந்தை அஜீத்சிங்கின் பராமரிப்பிற்கு உரிய தொகை வசதிகளை ஒதுக்கிடவும் சம்பந்தப்பட்ட திவான்களுக்கு உடனடியாக உத்தரவிட்டவர் ஔரங்கஜேப்.

அதோடு குழந்தை வளர்ந்து பெரியவனானதும் ராஜ்யத்தையும், மன்சாப்பையும் வழங்குவதாகவும் தெரிவித்தார்.

ஆனால் ராஜ்யம் முழுவதையும் அந்தக் குழந்தைக்கு வழங்க வேண்டுமென்பதைத் தவிர வேறு எதையும் விரும்பிடாத ராஜபுத்திரர்கள் டில்லிக்கு நேரில் சென்று ஔரங்கஜேப்பைச் சந்திக்கத் தீர்மானித்தனர்.

கான் ஜஹான் பகதூர்

உதயசிங் சம்பவாத் (Udaisingh Champawat), மகுந்த் சிங்

(Makund Singh), ஜெகநாத் (Jagannath) மற்றும் சிலரையும் அழைத்துக் கொண்டு டில்லிக்கு ஔரங்கஜேப்பைச் சந்திக்கச் சென்றவர் கான் ஜஹான் பகதூர் (Khan Jahan Bahadur.) ஔரங்கஜேப்பைச் சந்திக்க வந்தவர்கள், ஔரங்கஜேப்பின் அனுமதி பெறாமல், அவரது தனி அறைக்குள் (Ghusul Khanaroom or private autience) நுழைந்தனர்.

அட்டாக் பகுதியில் முகலாய அதிகாரிகளைத் தாக்கி காயப்படுத்தியும், படுகொலை செய்து விட்டும் வரும் இராஜபுத்திரர்கள், தனது தனி அறைக்குள் அனுமதி ஏதுமின்றி திடுதிப்பென்று நுழைந்ததைக் கண்டதும் எரிச்சலுற்ற ஔரங்கஜேப் ஆத்திரமும், கோபமும் அடைந்தார்.

இராஜபுத்திரர்களை அழைத்து வந்த கான் ஜஹானபகதூரை மன்சப்தார் பதவியிலிருந்து நீக்கிட ஔரங்கஜேப் கட்டளையிட்டார். அதோடு ஜஸ்வந்த்சிங்கின் எல்லாச் சொத்துக்களையும் பேரரசரோடு இணைத்துக் கொள்ளவும், அஜீத்சிங்கை உடனடியாக அரண்மனையில் கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

ஔரங்கஜேப்பைச் சந்திக்க வந்தவர்கள் மிகுந்த கோபத்துடனும் சிவந்த கண்களுடனும் வெளியேறிச் சென்றனர்.

அதனைத் தொடர்ந்து ஔரங்கஜேப்பை எதிர்த்துப் போரிடவும் ஆரம்பித்தனர். ஔரங்கஜேப்பின் ஆயுள் வரையில் அந்தப் போர் நடைபெற்றது. வாழ்வின் இறுதிவரை ஔரங்கஜேப் இராஜபுத்திரர்களின் யுத்தத்தைச் சந்தித்துக் கொண்டிருந்தார். போர்க்களக்காட்சிகளுக்குள் நான் செல்லவில்லை.

பொருளாதாரக் காரணம்

ஜோத்பூர் குறித்து ஔரங்கஜேப்பின் மனநிலை, வாரிசு உரிமையை யாருக்குத் தருவது என்ற மட்டோடு நிற்கவில்லை. அதில் பல ராஜாங்க விஷயங்களும், சொந்தக் காரியங்களும் அடங்கி இருக்கத்தான் செய்தது.

மேற்குக் கரையிலுள்ள நகரங்களுக்கும், டில்லிக்கும் தொடர்பான நெடுஞ்சாலை மார்வார் வழியாகவே செல்கிறது. சூரத்திற்கும், அஹமதாபாத்திற்கும் செல்லும் சாலைகளும் ராஜபுதன எல்லைகளின் ஊடே செல்கின்றன. ஆகையால் டில்லியிலிருந்து ஆட்சி செய்யும் சக்கரவர்த்தி, இந்தப் பாதையின் நடுவே ஒரு சுதந்திரமான, அதிலும் தன்னோடு பகைமை கொண்ட ஒரு அரசர் இருப்பதைச் சகித்துக் கொள்ள முடியாத நிலையில் இருந்தார்.

முகலாயச் சக்கரவர்த்தி அக்பர் காலத்திலிருந்தே ஒவ்வொரு முகலாயச் சக்கரவர்த்தியும் டில்லி, அஹமதாபாத் நெடுஞ்சாலையின் முக்கியத்துவத்தை உணர்ந்தே இருந்தார்கள். இந்தப் பொருளாதாரக் காரணம்தான் ஔரங்கஜேப்பை மேவாரையும், மார்வாரையும் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளிற்று. பல காலமாகவே தனது மனதிற்குள்ளே இதனை நினைத்துக் கொண்டிருந்த ஔரங்கஜேப்பிற்கு ஜஸ்வந்த்சிங் வாரிசு இன்றி இறந்ததும் தனது நீண்ட காலத் திட்டத்தை நிறைவேற்றிடவே இந்த நடவடிக்கையை எடுத்தார். ஆனால் இவைகளையெல்லாம் புறத்தே தள்ளி விட்டு பச்சிளங்குழந்தை அஜீத்சிங்கை முஸ்லிமாக்க ஔரங்கஜேப் முயன்றார், அது முடியாதுபோகவே அவரது ராஜ்யத்தின் மீது போர் தொடுத்தார். ஔரங்கஜேப்பின் ஹிந்து மதத்திற்கு எதிரான குரோத நடவடிக்கை இது என்று இன்றளவும் வரலாற்றில் சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

நடுநிலையாளர்களின் நல்ல சிந்தனைக்கு ஓரிரு விஷயங்களை இது குறித்து பரிசீலனைக்கு முன் வைக்கிறேன்.

ஜோத்பூர் ராணி ஹாதி

ஜஸ்வந்த்சிங்கின் பிரதான ஜோத்பூர் ராணி ஹாதி என்பவர், “ஜோத்பூர் மட்டும் தனக்குப் பிறந்துள்ள இளவரசனுக்கு உரிமையாக்கப் படுமேயானால், இந்த நகரத்திலுள்ள அனைத்து ஹிந்து ஆலயங்களையும், கோவில்களையும் தகர்த்துவிட்டு, அவற்றுக்குப் பதிலாக மசூதிகளை நிர்மாணித்திட, ஜோத்பூரின் பட்டத்திற்கு இரத்தத் தொடர்பின் மூலம் உரிமை கொண்டாடிய இந்தர்சிங்கை விட அதிகமான கப்பத் தொகையை (பேஷ்கஷ்) தாங்கள் தரத்தயாராக இருப்பதாகவும்” தெரிவித்தார்.*

(* Waga-i-Ajmir, A.D. 1678-1683), Asafiya Library, Hydrabad. Fan-i-Tarikh, 2242, transcript in the Dept. of History, Aligarh Nos. 15 and 16, P. 167, 244-246.)

ஹிந்து ஆலயங்களை இடிக்க விரும்பிடாத ஔரங்கஜேப்

இந்தர் சிங்கை விட அதிக அளவில் கப்பத்தொகையை அரசாங்கத்திற்குத் தரத் தயாராக இருந்தார்கள் இராஜபுத்திரர்கள். அதோடு நகரிலுள்ள ஹிந்து கோவில்களை எல்லாம் இடித்துவிட்டு பள்ளி வாசல்களாக மாற்றிடவும் தயாராக இருப்பதாகவும் சொன்னார்கள். இதனை ஔரங்கஜேப் ஏற்றுக் கொள்ளவில்லையே! இந்த சரித்திர சம்பவம் இட்டுக்கட்டியது!

கற்பனைச்செய்தி என்று எவராவது தள்ளிவிடவும் முடியுமா?

ரான் தம்பூரில் நிருபராக முதன் முதலில் நியமிக்கப்பட்டவர் வரைந்தனுப்பிய செய்தித் தகவல்கள். பிறகு அந்த நிருபர் அஜ்மீருக்கு மாற்றலாகி அங்கிருந்து வரைந்த செய்திகள், இறுதியாக இராஜபுத்திரப் போர்களின்போது பாத்ஷா குலிக்கானுடன் படைப்பிரிவுனரோடு தானும் சென்று பங்கேற்ற ஆகிய விவரங்களுடன், 1678-1680 இல் நடைபெற்ற ராத்தோடு கலகம் பற்றிய பயனுள்ள விவரங்களைத் தருகின்ற 'வாக்காயெ அஜ்மீர்' என்ற நூலில் தான் இந்த விவரங்கள் தெள்ளத் தெளிவாகக் காணப்படுகிறது.

ஜோத்பூரிலுள்ள ஹிந்து ஆலயங்களையெல்லாம் பள்ளிவாசல்களாக மாற்றுகிறோம் என்று ஜோத்பூர் ராணி ஹாதியின் அறிவிப்பை ஏற்றுக் கொள்ளாத ஔரங்கஜேப், "அந்த ராணியின் ஒரு வயது கூடஆகாத பச்சிளங்குழந்தை அஜித் சிங்கை மதவெறி கொண்டு முஸ்லிமாக மாற்ற முயன்றார்" என்று குற்றச்சாட்டிற்குள்ளாக்கப் படுவதையும் எண்ணிப் பார்க்கிறேன்.

'One thing which did so, deserves to be remembered and that was the releasing of Sivaji (better knownby nickname Sahu (thief) given by Auragzeb) Sambhaji's son who for many years had been Aurangzebs prisoner.

சாம்பாஜியின் மகன் சாகுவை மதம் மாற்றினாரா?

பல ஆண்டுகளாக ஔரங்கஜேப்பின் பாதுகாப்புடன் வளர்க்கப்பட்ட மராத்திய சாம்பாஜியின் மகன் சாகு பின்னாளில் விடுதலை செய்யப்பட்டார்.*

(*Pringle Kennedy, A History of the great Moghuls or a History of the Badshahate of the Delhi From 1605 to 1736 A.D., Calcutta, 1911, Vol II, P. 158.)

அவரை முஸ்லிமாக மதம் மாற்றிட ஔரங்கஜேப் முயற்சி செய்தாரா? ஹிந்து புத்திரராகச் சென்ற சாகு ஹிந்துவாகத்தானே விடுதலை செய்யப்பட்டார். இது தானே வரலாறு. பல ஆண்டுகாலம் தனது பாதுகாப்பிலிருந்த மராத்திய சாகுவை ஔரங்கஜேப் முஸ்லிமாக்கியதுண்டா? இல்லையே! வரலாற்றில் இவைகளை மறைக்க முடியுமா? இருந்தும் இவைகளை ஏன் மறைக்க முயலுகிறார்கள் என்பது தான் வேதனையான விசித்திரமாக இருக்கிறது.

தீரன் துர்க்காதாஸ்

அஜீத்சிங்கை குழந்தைப் பருவத்தில் பாதுகாத்து, இளமையில் கற்றக் கொடுத்து, வாலிப வயதில் வழி காட்டியவர் துர்க்காதாஸ். அவரின் தீரச்செயல்களினால் தான் அஜீத்சிங் ஔரங்கஜேப்பை எதிர்த்துப் போரிட்டார். அஜீத்சிங்கை உயர்ந்த நிலைக்கு கொண்டு வர நாளும் நாளும் உழைத்திட்ட துர்க்காதாஸை அஜீத்சிங் என்ன செய்தார் தெரியுமா? விரட்டியடித்தார், நாடுகடத்தினார். இது என்ன புதிய செய்தி என்று ஆச்சரியப்பட வேண்டாம். நன்றி மறந்த அஜீத்சிங்கின் துரோகத்தால் துர்க்காதாஸீன் வாழ்வில் சோகம் ததும்பியது.

'இளவரசர்களிடம் உனது நம்பிக்கையை வைக்காதே' எனும் பழமொழியை நிரூபிக்கும் வகையில் துர்க்காதாசின் வாழ்வும் அமைந்து பட்டம், பதவி,சொத்துக்கள் அனைத்தும் அளிக்கப்பட்ட போதும் அதனை நிராகரித்துவிட்டு அஜீத்சிங்கிடம் உண்மையாகவும், விசுவாசமாகவும் இருந்தவர் துர்க்காதாஸ். தனது நேர்மையாலும், வீரத்தாலும், அறிவார்ந்த செயல்களாலும் தான் காப்பாற்றிய ராஜபுத்திர நாட்டிலிருந்தே துர்க்காதாஸ் விரட்டப்பட்டார். எதற்காக அஜீத்சிங் துர்க்காதாஸை விரட்டினார்?' என்று கேள்வி எழுந்தது.

பாதுர்ஷாவின் கடிதம்

அஜீத்சிங் நாட்டிலிருந்து விரட்டப்பட்ட துர்க்காதாஸ் உதயப்பூரில் பெஷாலா ஏரிக்கரையில் வாழ்ந்து வந்தார். அவருக்கு ராணா தினமும் 500 ரூபாய்களை அளித்து காப்பாற்றி வந்தார். ஔரங்கஜேப்பிற்குப் பின் முகலாய ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பாதுர்ஷா இதனை கேள்விப்பட்டார். உடனே ராணாவிடம், 'துர்க்காதாஸை என்னிடம் ஒப்படைத்து விடவும்' என்று கட்டளையிட்டபோது, ராணா அதனை மறுத்தார். இந்த விவரங்கள் பாகதுர்ஷா ஆட்சிக்கால மூல ஆதாரப் பத்திரிகைக் குறிப்பில் காணப்படுகிறது.

துர்க்காதாஸ், ராணாவின் பொறுப்பில் கடைசிக் காலத்தில் வாழ்ந்து வந்த செய்தியிலிருந்து அவர் அஜீத்சிங்கின் பாதுகாப்பில் இல்லையென்பதும், அங்கிருந்து விரட்டப்பட்டார் என்பதும் தெளிவாகிறது. இதோ ஜேம்ஜ்டாட் அதுபற்றி கூறியுள்ள வாசகங்கள் :

"The heroie Doorgadas, the preserver of his infancy, the instructer of his youth the guide of his manhood, lived confirm the proverb, "Put not thy faith in princes". He, who by repeated instances of exaited selfdenial, had vassal condition to an equality with his sovereign, was banished from the fact was incidentally discovered in searching a collection of original

News Papers written from the Camp of Bahadoor Shah.”

விரட்டப்பட்ட துர்காதாஸ்

ஔரங்கஜேப்பை எதிர்த்துப் போரிட அஜீத்சிங்கைத் தயார்படுத்தி ஆளாக்கிய வீரத்தளபதி துர்க்காதாஸ், அதே இராஜபுத்திர அஜீத்சிங்கினால் நாடு கடத்தப்பட்டு விரட்டியடிக்கப்பட்டார். இந்த நன்றி கெட்ட செயலை - கெடுமையைப் பற்றி வரலாற்றிலே ஏன் சொல்லாமல் மறைக்கப் பார்க்கிறார்கள்? அது மட்டுமா? நன்றி கெட்ட அஜீத்சிங் எப்படி மடிந்தார்? இயற்கையாகவா? அல்லது கொலை செய்யப்பட்டாரா? கொலை செய்யப்பட்டார் என்றால் எதற்காக? இதோ வரலாற்றில் அந்த உண்மைகள்.

பெற்ற மகன் செய்த கொலை

கி.பி. 1724 ஜூன் மாதம் அஜீத்சிங் தனதுமகன் பகத்சிங்கால் கொலை செய்யப்பட்டார். என்ன காரணத்திற்காக அந்தக் கொலை நடைபெற்றது?

அஜீத்சிங்கின் மகன் பகத்சிங்கின் இளம் மனைவியோடு காம மோகங்கொண்டு அவளுடன் உடலுறவு கொண்டிருக்கும்போது, அந்த அசிங்கக் காட்சியைப் பார்த்திட்ட மகன் பகத்சிங் ஆத்திரமுற்றார். தனது மனைவியுடன் தகாத உறவு கொண்டிருக்கும் தனது தந்தையை வாளால் ஒரே வெட்டாக வெட்டிச் சாய்த்து இரத்த வெள்ளத்திலே மிதக்கவிட்டார். *

(* W. Irvine, Later Mugals, VOL II P.116-117)

மருமகளிடம் மாமனின் தகாத உறவு

‘அஜீத்சிம்மர் நடத்தை சரியில்லை. தம் இரண்டாம் குமாரர் பகவத்சிம்மரின் மனைவியுடன் நட்புக் கொண்டிருந்தார்’*

(* த.கி.வெங்கிடராமன், நமது பாரதம், சென்னை, 1965, பக். 67.)

என்று மேலோட்டமாக பின்னால் இந்த வரலாற்றைச் சொல்லியுள்ளார்கள்.

ஔரங்கஜேப்பினை எதிர்த்து அஜித்சிங் வீரப்போர் புரிந்தார்; அதன்பின் முகலாய சாம்ராஜ்யம் அடியோடு நாசமாயிற்று என்றெல்லாம் வரலாறு சொல்லிக் கொடுக்கப்படுகின்ற இந்தக் கால கட்டத்தில், அந்த அஜித்சிங் பின்னால் எப்படிச் செத்தார் என்று ஏன் சொல்லிக் கொடுக்கப்படவில்லை? அவருடன் இணைந்து அற்புதமாகப் போராடிய துர்க்காதாஸை

அநியாயமாக அஜித்சிங் விரட்டியடித்த வரலாற்றை ஏன் தெரிவிக்காமல் மறைக்கப் பார்க்கிறீர்கள்?

ஔரங்கஜேப்பின் காலத்திற்குப் பின் மெல்ல மெல்ல முகலாய சாம்ராஜ்யம் அழிவை நோக்கிச் சென்று அதன் இலக்கை அடைந்தது என்பது வரலாற்று உண்மை; ஆனால் ஔரங்கஜேப் தனதுஆட்சி முறையின் சட்டத்தின்படியும், பொருளாதாரக் காரணங்களுக்காகவும் இராஜபுத்திரர்களோடு போர் புரிந்ததை ஹிந்து மத துவேஷங் கொண்டு ஔரங்கஜேப் ராஜபுத்திரர்களைப் பார்த்து, அதனால் ஏற்பட்ட போர்களினால் தான் பேரரசின் அழிவைத் தேடிக் கொண்டார் என்று கூறுவது சரிதானா?

பரந்து விரிந்த பேரரசு என்றாவது ஒரு நாள் வீழ்ச்சியடைவதென்பது இயற்கையின் நியதியாகும். உரோமானியா, கிரேக்கப் பேரரசுகள் உலகில் நிலைத்து நின்று விட்டதா? குப்த-மௌரியப் பேரரசுகள் என்ன ஆயிற்று? சேர-சோழ, பாண்டிய, பல்லவப் பேரரசுகள் நிலைத்தனவா? அண்மைக் காலத்திலிருந்த ஆங்கிலப் பேரரசும் அழியாமல் நின்றதா? எனவே பேரரசுகள் எழுவதும், வீழ்வதும் இயற்கை. ஆட்சிமுறைகளின் குளறுபடிகளும் குறைகளும் அதற்குக் காரணங்கள்தாம். அத்தகைய காரணங்கள் ஔரங்கஜேப்பின் ஆட்சியிலும் இருந்தது. அவரது அரசாங்கத்தில் பின்பற்றப்பட்ட சட்ட முறைகளான காரணங்களினாலும், பொருளாதாரக் காரணங்களுக்காகவும் நடைபெற்ற காரியங்களில், போர்களில், மத விஷயத்தை உள்ளே புகுத்தி, பிரிவினையை ஏற்படுத்திட முயல்வது சரியா? அதனை ஏற்றுக் கொள்ள இயலுமா? என்பதனை நடுநிலையாளர்களின் சிந்தனைக்கே விட்டுவிடுகிறேன்.

8

சீக்கியர்களின் விரோதியா?

‘சீ’க்கியர்களை மதம்மாற்றிட ஔரங்கஜேப் வற்புறுத்தினார்; சீக்கியரின் குரு தேஜ்பகதூரைக் கைது செய்தார்; சிறையில் அடைத்தார்; சிரச்சேதம் செய்தார்; சீக்கியர் மத விஷயத்திலும் தலையிட்டு தீவர மதவெறி கொண்டு திகழ்ந்தார்’ என்று ஔரங்கஜேப் மீது சுமத்தப்பட்டும், பள்ளிக்கூடங்களில் தினமும் போதிக்கப்பட்டும் வருகின்ற குற்றச்சாட்டுக்களின் உணமை நிலை என்ன? அதிலே மறைந்துள்ள செய்திகள் என்ன? இதோ: வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்.....

சீக்கியர்

மாணாக்கர் என்று பொருள்படும் ‘சிஷ்ணர்’ என்ற சொல்லின் திரிபாக வந்தது ‘சீக்கியர்’ என்ற சொல் ஆகும். ‘சிஷ்யர்’, சீக்கியர் என்று சொல்லப்படுபவர் என்று வ.வே.ஸு ஐயர் குறிப்பிடுவர்.

சீக்கியர்களின் வரலாறு குறித்து பவ்வேறு நூல்கள் வெளிவந்துள்ளன; வெளிவந்து கொண்டிருக்கின்றன என்றாலும், சீக்கியர்களின் முழு வரலாற்றையும் இங்கு ஆராயப் போவதில்லை, அதற்கான அவசியமும் இல்லை.

மேஜர் ஜேம்ஸ் பிரௌன்

கிழக்கிந்திய வணிகக் கம்பெனியில் உயர் பொறுப்பில் இருந்தார் மேஜர் ஜேம்ஸ் பிரௌன். ‘ரிஸாலா-இ-நானாக்ஷா’ (நானாக்ஷாவின் சஞ்சிகை) என்ற பாரசீகக் கையெழுத்துச்

சுவடியினை அவர் மொழிபெயர்த்தார். பின், கி.பி. 1788-ல் ‘சீக்கியரின் தோற்றம்-வளர்ச்சி பற்றிய வரலாறு’ என்ற நூலை முதன்முதலில் வெளியிட்டார்.

எம். ரேமண்டு

‘சியார்-உல்-மூட்டா கெரின்’ என்னும் பாரசீக கையெழுத்துப் பிரதி, குலாம் உசேன்கான் என்பவரால் இயற்றப்பட்டது. எம். ரேமண்டு என்ற பிரெஞ்சுக்காரருக்கு கி.பி. 1780-ல் அது கிடைத்தது. அவர் அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து கி.பி. 1789-ல் வெளியிட்டார்; பிரிக்ஸ் என்பவரும் அதன் பகுதியை மொழிபெயர்த்து கி.பி. 1832-ல் வெளியிட்டார்.

குலாம் உசேன்கான்

‘சியர்-உல்-மூட்டா கெரின்’ என்ற பாரசீகக் கையெழுத்துப் பிரதி பற்றிய செய்திகளைச் சொல்கிறாயே ஏன்?’ என்ற எண்ணம் எழுகிறதா? இந்தக் கையெழுத்துப் பிரதியில் குலாம் உசேன் கான் தெள்ளத் தெளிவாக ஒரு செய்தியைச் சொல்லிச் செல்கிறார்.

குருநானக்கின் ஆசிரியர் சையது ஹசன்

15, 16ஆம் நூற்றாண்டுகளில் இஸ்லாமிய - இந்து மதக் கோட்பாடுகளைத் தொகுத்து ‘சீக்கியம்‘ என்னும் மதத்தை நிறுவியவர் குருநானக் (கி.பி. 1469-1539). ‘தல்வந்தி’ கிராமத்தில் குருநானக் பிள்ளைப் பருவத்தினராக இருந்தபோது அவரது ஆசிரியராக இருந்தவர் முஸ்லிம் புலவரும், துறவியுமான முஹான் சையது ஹசன் என்கிற உண்மை, குலாம் உசேன்கானின் பாரசீகக் கையெழுத்துப் பிரதியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீர்பன்சிங் தனது ‘குருநானக்‘ நூலில் தெரிவித்துள்ள இன்னொரு செய்தி இதோ : மகிபதி என்பவரால் எழுதப்பட்ட மராத்திய ‘பக்த லீலா மிருதம்‘ எனும நூலை ஜஸ்டின் ஈ.ஆ. பட் மற்றும் என்.ஆர். காட்போல் ஆகியோர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தனர். ‘இந்தியத் திருத்தொண்டர்களின் தெள்ளமுது’ எனும் அந்த நூலில் 180-195வது பக்கங்களிலும், குருநானக்கின் ஆசிரியராக இருந்தவர் சையது ஹசன் என்ற செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. முல்லா குதுப் உத்தீன் என்பவர் (Quit-ud-Din) பெர்சிய மொழியை குருநானக்கிற்கு கற்றுத் தந்தார். *

(* Tarachand, Influence of Islam on Indian Culture, Allahabad, 1976, P. 134.)

சீக்கிய மதத்தை ஸ்தாபித்த குருநானக்கின் ஆரம்ப கால

ஆசிரியர் சையது ஹஸன் என்ற முஸ்லிம் துறவி என்கிற செய்தி ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? அதுமட்டுமா?

‘குரு கிரந்த் சாகிப்’பும் முஸ்லிம்களும்

சீக்கிய மதத்தினரின் புனித நூல் குருகிரந்த்சாகிப். 1430 பக்கங்கள் கொண்டது; 5894 பாடல்களும், 29,480 செய்யுட்களும், பத்து லட்சம் சொற்களும் அதில் இடம் பெற்றிருக்கின்றன.

அதில் 12 இந்துத் துறவிகள், 2 முஸ்லிம் ஞானிகள், 3 முஸ்லிம் பாடகர்கள் ஆகியோரின் துதிப் பாடல்கள் அடங்கியிருக்கின்றன. பிகான், பாபாபரீத் போன்ற முஸ்லிம் ஞானிகள், கிரந்தசாகிப்பில் எழுதியிருக்கின்றனர். சீக்கியர்களின் புனித நூலை உருவாக்குவதிலும் இஸ்லாமியரின் பங்களிப்பும் உள்ளது.

சீக்கிய மதத்தை ஸ்தாபித்த குரு நானக்கின் ஆரம்பகால ஆசிரியர் முஸ்லிம் துறவி; சீக்கியர்களின் புனித நூலான குருகிரந்த்சாகிப்பில் முஸ்லிம் ஞானிகளின் பங்களிப்பிருக்கிறது என்ற உண்மைகள் ஆச்சரியம் அளிக்கின்றது; சீக்கியர்கள் விஷயத்தில் சக்கரவர்த்தி ஔரங்கஜேப் பற்றிய நடைமுறைகள் குறித்த ஆச்சரியமான உண்மைகளையும் தெரிய வேண்டாமா? அறிய வேண்டாமா?

குரு அமர்தாஸும் அலியாரும்

குருநானக்கைத் தொடர்ந்து குரு அங்கதர் (கி.பி. 1504-1552) பொறுப்பிற்கு வந்தார். அதன்பின்னர் குரு அமர்தாஸ் (கி.பி. 1470-1574) மூன்றாவது குருவாக பதவியேற்றார். குரு அமர்தாஸ் சிகிச்சை பெறுவதற்காக பிரேமா என்பவரை முஸ்லிம் துறவியடம் அனுப்பி வைத்தார். அலயார் (அலியார்) என்று முஸ்லிமை குரு அமர்தாஸ் தனது துணைவராக்கிக் கொண்டார்.*

(* சர்தார் ஜக்சிங்ஜீத், சீக்கிய சமய இயக்கம் வரலாறும், கருத்தயிலும், தமிழாக்கம் த.முத்துமோகன், ந.ம.வீ. ரவி 1995, பக். 68)

அவர் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் வேறுபாடு பார்க்கவில்லை. இருவருக்குப்பின் நான்காவது குருவாக ராம்தாஸ் (கி.பி. 1534 - 1581) பொறுப்பிற்கு வந்தார். இரண்டாவது , மூன்றாவது, நான்காவது சீக்கியக் குருக்கள், மத விவரங்களைத் தவிர்த்து அரசியல் விவகாரங்களில் தலையிடவேயில்லை. அரசாங்க விஷயங்களில் அவர்கள் கலந்து கொள்ளவுமில்லை.

குரு அர்ஜுன்சிங்

ஐந்தாவது குருவாகப் பொறுப்பிற்கு வந்த குரு அர்ஜுன்சிங் (கி.பி. 1563 - 1606) முதன் முதலில் அரசியல் விவகாரங்களில் தலையிட ஆரம்பித்தார். முகலாய மன்னர் ஜஹாங்கீருக்கு எதிராக இளவரசர் குஸ்ரு என்பவரை குரு அர்ஜுன்சிங் ஆதரித்தார். இதனையறிந்ததும் ஜஹாங்கீர் அர்ஜுன்சிங்கிற்குத் தண்டப்பணம் கட்டுமாறு தண்டனை விதித்தார். முகலாயப் பேரரசில் முதன் முதலில் குரு அர்ஜுன்சிங் தண்டிக்கப்பட்டது அரசியல் காரணத்திற்காகத்தான்.

குரு ஹர் கோவிந்த் சிங்

ஆறாவது குருவாக ஹர்கோவிந்த்சிங் (கி.பி. 1606 - 1644) பொறுப்பிற்கு வந்தார். இவர் பெரும் படையைத் திரட்டினார்.போரில் ஈடுபட்டார். பேரரசர் ஷாஜகானை எதிர்த்தார். முகலாயப் படைகள் திரண்டு சென்றபோது காஷ்மீரின் கிராத்பூர் பகுதியில் ஓடி ஒளிந்து கொண்டார். ஆனால் இவர் உருவாக்கிய ஹர் கோபிந்தபூரில் சொந்தமாக ஒரு பள்ளிவாசலை ஏற்படுத்தினார்.

குரு ஹர்ராய்

ஏழாவது குருவாக ஹர்ராய் சிங், பொறுப்பிற்கு வந்தார். அப்போது (கி.பி. 1630 - 1661) ஷாஜகானின் ஆட்சியின் இறுதிக்காலம். அவரது பிள்ளைகள் வாரிசுப் போரில் ஈடுபட்டிருந்தனர். அப்போரில் ஔரங்கஜேப்பிற்கு எதிராகப் போட்டியிட்டுக் கொண்டிருந்த தாராஷுக்கோவை குரு ஹர்ராய்சிங் ஆதரித்தார். வாரிசுரிமை போர் முடிவுற்று ஔரங்கஜேப் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததும், 'ஔரங்கஜேப் தன்னை தண்டிக்கக் கூடும்' என்று அஞ்சிய ஹர்ராய்சிங், ஔரங்கஜேப்பின் அரசவைக்கு தமது மூத்த மகன் ராம்ராய் சிங்கை தூதராக அனுப்பி வைத்தார்.

தம்மை வாரிசுரிமைப் போரில் மதிக்காமல், தனது அண்ணன் தாராஷுக்கோவிற்கு ஆதரவு கொடுத்த குரு ஹர்ராய்சிங்கையோ, அல்லது அவரது மகன் ராம்ராய்சிங்கையோ, ஔரங்கஜேப் தண்டித்தாரா? இல்லை! இல்லவே இல்லை. சீக்கியர்கள் மீது மதவெறி கொண்டிருந்ததால் ஔரங்கஜேப், அவர்களை தண்டிக்காது விட்டிருப்பாரா? இல்லையே! சீக்கியக் குருக்களை அவர் தண்டிக்கவில்லையே! கட்டாயமாக மதம்மாறச் சொல்லவில்லையே! இந்த வரலாறு உண்மையை எந்த சரித்திர

ஆசிரியராவது மறுத்திட முடியுமா?

குரு பதவிக்கு நடந்த போட்டி

சீக்கிய குரு ஹர்ராய் மறைந்ததும் எட்டாவது 'குரு' வாக வருவதற்கு போட்டி ஏற்பட்டது. ஔரங்கஜேப்பின் அரசவைக்குச் சென்று வந்தவரும், ஔரங்கஜேப்போடு, அறிமுமாகியிருந்தவருமான ராம்ராய்சிங், குருவாக வருவதற்கு தனக்கு உதவிடுமாறு ஔரங்கஜேப்பை வேண்டினார்.

ராம்ராய்சிங்கின் தம்பியான ஹர்கிஷன்சிங் தானும் குரு பதவிக்கு வர முயற்சிகள் செய்தார். இந்த வேளையில் தனக்கு நன்கு அறிமுகமாகிப் பழகியிருந்த ராம்ராய்சிங்கிற்கு ஔரங்கஜேப் உதவவில்லை. சீக்கியர்களின் உள் விவகாரத்தில் நடுநிலையோடு நடந்து கொண்டார். சீக்கியர்கள் தங்களது தலைவரைத் தாங்களே தேர்வு செய்து கொள்ளட்டும் என்ற நிலையில் உறுதியாக இருந்தவர் ஔரங்கஜேப்.

டேராடூன் மாவட்ட கெஜட்டியர்

ஏழாவது குருவான ஹர்ராய்சிங் கி.பி. 1661இல் மறைந்தபோது, ராம்ராய்சிங்கிற்கு வயது 15. ஹர்ஹிசன் சிங்கிற்கு வயது 6. இருவரும் எட்டாவது குருவாக வருவதற்குப் போட்டியிட்டார்கள்.

வயதில் மூத்தவராயிருந்த ராம்ராய்சிங் பணிப்பெண்ணுக்குப் பிறந்தவர். ஹர்ராய்சிங்கின் அதிகாரப்பூர்வ மனைவிக்குப் பிறந்தவர் ஹர்ஹிசன்சிங். எனவே, சீக்கியர்கள் ஹர்ஸ்ரீசன்சிங்கைத் தங்களது தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். இதனை ராம்ராய்சிங் ஏற்றுக் கொள்ளவில்லை. 'ஔரங்கஜேப்பிடம் உதவியை நாடினார். ஆனால் ஔரங்கஜேப் இந்த விஷயத்தில் தான் தலையிட முடியாது என்று உறுதியாக இருந்தார். அதோடு எட்டாவது குருவாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஹர்ஹிசன் சிங்கை (கி.பி. 1656 - 1664) ஏற்றுக் கொண்டார். இதனை டேராடூன் மாவட்ட கெஜட்டிய (District Gazetteer of Dehradun) உறுதிப்படுத்துகிறது.

சீக்கிய கட்டிடத்திற்கு ஔரங்கஜேப்பின் உதவி

அதே வேளையில், எட்டவது குருவாக பொறுப்பிற்கு வர இயலாத ராம்ராய்சிங் சீக்கிய மதத்தில் ஆன்மீக விஷயங்களில் சிறந்து விளங்கிட ஔரங்கஜேப் பல உதவிகள் புரிந்தார். டில்லியிலிருந்து கட்டிடச் சாமான்களையும் அனுப்பி வைத்தார். கட்டிடம் ஒன்றைக் கட்டி, அதிலிருந்து ஆன்மீக விஷயங்களில் ஈடுபடச் செய்ய ராம்ராய்சிங்கிற்கு ஔரங்கஜேப் உதவினார்.

ஔரங்கஜேப்பின் சமயச் சகிப்புத் தன்மைக்கு சான்றாக அமைந்துள்ள பல விஷயங்களில் இதுவும் ஒன்றாகும்.

தேஹ்ரா குரு ராம்சாய்

‘Sent marble stones and other materials form Delhi,and caused the erection of a building near the mountains.’

ஔரங்கஜேப்பின் உதவியால் அவ்வாறு உருவாக்கப்பட்ட அந்தக் கட்டிடம் அமைந்த இடம் தேஹ்ரா குருராம்ராய் என்று அழைக்கப்பட்டது. அதுவே தற்போது டெஹ்ராடூன் (Dehra Dun) என்று அழைக்கப்படுகிறது. இந்த நிலையில் எட்டாவது குருவான குரு ஹர்ஹிசன்சிங் அம்மை நோயால் பீடிக்கப்பட்டு மறைந்தார்.

குருதேஜ் பகதூர்

ஆறாவது குரு ஹர் கோவிந்தசிங்கின் இளைய புதல்வரான குருதேஜ் பகதூர் ஒன்பதாவது குருவாக (கி.பி. 1622-1675) பொறுப்பிற்கு வந்தார். அந்தப் பொறுப்பிற்கு வருவதற்கு முன்னர் கி.பி. 1668 ஆம் ஆண்டில் குருதேஜ் கபதூர் ஔரங்கஜேப்பின் படைப்பிரிவில் பணியாற்றினார்.*

(* M.S. இராமசுவாமி ஐயங்கார், இந்து தேச சரித்திரம், M.S. சுந்தரேஸ்வர ஐயர், மொழிபெயர்ப்பு, சென்னை, 1939, பக். 297.)

அஸ்ஸாம் மாகாணத்தில் ஜெய்சிங்கின் மகனான ராம்சிங்கின் தலைமையில் நடைபெற்ற போரிலும் கலந்து கொண்டார். பின் அங்கிருந்து ஆனந்தபூர் சென்றார். இதற்குப் பிறகு தான் வரலாறு திரித்துக் கூறப்படுகிறது. வரலாற்றில் தற்போது என்ன சொல்லிக் கொடுக்கப்படுகிறது?

‘ஔரங்கஜேப் காஷ்மீரில் இந்துக்களை கட்டாய மத மாற்றம் செய்ய முனைந்தார். இதனை இந்துக்கள் எதித்தனர். இந்துக்களை உற்சாகமூட்டி ஔரங்கஜேப்பை எதிர்க்க வெளிப்படையாகப் பணியாற்றினார் தேஜ்பகதூர். எனவே, ஔரங்கஜேப் கோபமுற்று தேஜ்பகதூரை கைது செய்து டில்லிக்கு கொண்டு வரச் செய்தார். அங்கு முஸ்லிமாக மதம் மாறும்படி கட்டாயப்படுத்தப்பட்டார். அதனை ஏற்றுக் கொள்ளாத தேஜ் பகதூரை, ஐந்து நாட்கள் சிறைச்சாலையில் சித்ரவதை செய்து பின் அவரது தலையை வெட்டும்படி உத்தரவிடப்பட்டு, ஔரங்கஜேப்பால் சிரத்சேதம் செய்யப்பட்டவர் தேஜ் பகதூர்’ இவ்வாறு வரலாறு இன்று சொல்லிக் கொடுக்கப்பட்டு வருகிறது. இதில் உண்மை நிலை என்ன?

குரு தேஜ் பகதூர் காலத்தில் காஷ்மீரில் இந்துக்களை முஸ்லிமாக்கிட ஔரங்கஜேப் முயன்றார் என்பதற்கு சரித்திர ஆதாரம் எதுவும் சொல்லப்படவில்லை. எனவே கட்டாய மதமாற்றம் நடந்ததாக நாம் ஒத்துக் கொள்ள இயலாது என்பார் அறிஞர் பாரூக்கி.

ராம் ராய் சிங்கின் எதிர்ப்பு

அப்படியானால் ஔரங்கஜேப்பிற்கும், தேஷ்பகதூருக்கும் இடையே ஏற்பட்ட விரிசல்களுக்கும், பூசல்களுக்கும் உரிய காரணம்தான் என்ன?

ஒன்பதாவது குருவாக தேஜ்பகதூர் பொறுப்பிற்கு வந்ததும், ஏற்கனவே எட்டாவது குருவாக வருவதற்குப் போட்டியிட்ட ராம்ராய்சிங், ஒன்பதாவது குருதேஜ்பகதூருக்கு எதிராக வேலைசெய்ய ஆரம்பித்தார். அதோடு தேஜ்பகதூர் குறித்து ஔரங்கஜேப்பிடம் புகார்களை எடுத்துக் கூறவும் செய்தார்.

ஹாபிஸ் உத்தீன் **(Hafiz -ud - din)**

முஸ்லிம் பக்கிரி ஹாபிஸ் உத்தீன் என்பவருடன் குருதேஜ் பகதூர் சேர்ந்து கொண்டு பஞ்சாபிலுள்ள அமைதியான மக்களுக்கு எதிராக வன்முறைகளைத் தூண்டினார் கலவரங்கள் நடப்பதற்கு காரணமானார்.

“Tegh Bahadur, according to them, provoked his execution by a series of crimes. He joined forcs, they stayte, with a Moslem fakir, of the name of Hafi-zud-din, and, supported by a body of armed mendicants, committed the most violent depredations on the peaceable inhabitants of the Punjab.”

ஔரங்கஜேப்பின் ஆட்சிக்குடுட்பட்ட பகுதி மக்களிடம் பெரும்படையைத் திரட்டிக் கொண்டு சென்று, தேஜ்பகதூர் அவர்களிடம் கட்டாயவரி முதலியவற்றை வசூலித்தார்; தானே அரசன் என்றும் பிரகடனப்படுத்தினார். ஆடசிப் பொறுப்பிலிருக்கும் ஔரங்கஜேப் இதனைப் பொறுத்துக்கொண்டிருப்பாரா? தேஜ்பகதூரை அடக்கி ஒடுக்கிடும் காரியங்களில் ஈடுபட்டார்.

அத்தோடு ராம்ராய்சிங் போன்றவர்கள் ஔரங்கஜேப்பிடம் வந்து தேஜபகதூர் குறித்து புகார்களைத் தெரிவித்தது, ஏற்கனவே எரிகின்ற தீயில் எண்ணெயை வார்த்தது போல அமைந்தது.

மேக்கிரக்கர்

அறிஞர் மேக்கிரக்கர் (Mac Gregor) என்பவர் கி.பி.1846-ல் இலண்டனில் வெளியிட்ட சீக்கியர் வரலாறு குறித்த நூலில் இதுபற்றி தெளிவாகச் சொல்லியிருக்கிறார். அந்த நூலின் 66, 67-வது பக்கங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் விஷயத்தை சர்மா, தனது நூலில் மேற்கோள் காட்டுகிறார்.

‘According to M’Gregor, Thegh Bahadur was sent for by aurangzeg at the instigation of Ramraj, as a lusurper of thesikhgaddi; The Guru was told that unless he gave some explanation of his conduct he should not be liberated’ *

(* S.R. Sharma, Mughal, Empire in India, agra, eight edition, P. 282-283.)

ஏற்கனவே ஒரு பதவியைப் பெற ஔரங்கஜேப்பின் உதவியை நாடியவர் ராம்ராய்சிங். திரும்பவும் அந்தப் பொறுப்பிற்கு அவரால் வரமுடியவில்லை. எனவே அந்தப் பொறுப்பிற்கு வந்திருந்த தேஜ்பகதூரை எதிர்த்தார். அரசுக்கு எதிராகச் செயல்பட்ட தேஜ்பகதூரின் விஷயங்களை எல்லாம் திரட்டிச் சென்று ஔரங்கஜேப்பிடம் முறையிட்டார்.

தனது அரசாங்கத்திற்கு எதிராக தேஜ்பகதூர் செயல்பட்டு வருவதை அறிந்ததும், உடனடியாக அவரை கைது செய்து அழைத்துவர ஔரங்கஜேப் ஆணை பிறப்பித்தார்.

குரு தேஜபகதூர் ஔரங்கஜேப்பின் அரசாங்கத்திற்குரிய பகுதிகளில் இழைத்த பொய் குற்றம்தான் என்ன? செய்த கொடுஞ்செயல்தான் எது?

நதிக்கரையில் நடத்திய கொள்ளை

பஞ்சாபில் மக்வோல் (Makhowal) எனும் இடத்தில் சட்லஜ் நதிக்கரையில் (Sutlej) கிராத்பூருக்கு (Kiratpur) அருகில் தனது முகாமை தேஜ்பகதூர் அமைத்து இருந்தார். அவ்வேளையில் ஹான்சிக்கும், சட்லஜ் நதிக்கரைக்கும் இடைப்பட்ட பகுதிகளில் மக்களிடம் கொள்ளையடித்தவர் தேஜ்பகதூர்.

ஆதம் ஹபீஸ்

தேஜ்பகதூர் நடத்திய கொள்ளைகளுக்கு உறுதுணையாக இருந்தவர் ஆதம் ஹபீஸ் என்ற முஸ்லிம் ஆவார். தேஜ்பகதூருடன் கூட்டுக் சேர்ந்து கொண்ட ஆதம் ஹபீஸ், ஔரங்கஜேப்பின் ஆட்சிப் பகுதியில் இருந்த பணக்கார ஹிந்துக்களிடம் நிறையப் பணத்தை அபகரித்தான்; வசூலித்தான், கொள்ளையிட்டான். அதுபோல் தேஜ்பகதூரின்

ஆட்கள் ஔரங்கஜேப்பின் ஆட்சிப் பகுதியில் இருந்த பணக்கார முஸ்லிம்களிடமும், செல்வந்தர்களிடமும் பணத்தைப் பறித்துக் கொண்டிருந்தனர். அத்துடன் அரசாங்கத்திற்கு விரோதமான குற்றவாளிகள் பலருக்கு அடைக்கலமும் கொடுத்தனர். நாட்டின் நலனுக்கு உலைவைக்கிற இச்செயலைத் தடுத்து நிறுத்திட ஔரங்கஜேப் முயன்றார். படைகளை அனுப்பி வைத்தார். அவர்களைக் கைது செய்திட பஞ்சாப் வைசிராய்க்கு உத்தரவு பிறப்பித்தார். முகலாயப் படை தேஜ்பகதூரைப் போரில் சந்தித்தது; வென்றது; அவரைக் கைது செய்து வந்தது. தானே அரசர் என்றும், கட்டாய வசூல் செய்தும் அதோடு மக்களிடம் கொள்ளையிட்டும் வந்ததால்தான் ஔரங்கஜேப் படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டவர் தேஜ்பகதூர்.

கொள்ளைக்காக வழங்கப்பட்ட கொலைத் தண்டனை

கொள்ளைக்காரராக இருந்து, மக்களிடம் கொள்ளையிட்டதால், தேஜ்பகதூர் தண்டிக்கப்பட்டு, கொல்லப்பட்டு, டெல்லியில் வீதிகளில் அவரது உடல் வீசப்பட்டு, பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது என்பது நிச்சயம்' என்ற கருத்தினை, உண்மையை கன்னிங் ஹாம் தனது நூலில் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்.

ஜோசப் டேவி கன்னிங் ஹால்

மேஜர் ஜேம்ஸ் பிரௌனைத் தொடர்ந்து, சீக்கியர் குறித்த வரலாற்று மூல ஆதாரங்களையும், ஏடுகளையும் பயன்படுத்தி, சீக்கிய வரலாறு குறித்து வெளிவந்த முதல் நூலை எழுதியவர் ஜோசப் டேவி கன்னிங் ஹாம். கிழக்கிந்தியக் கம்பெனியின் வணிக நிறுவனத்தில் படைப்பிரிவின் தலைவராகப் பணியாற்றிவர்; கி.பி. 1849-ல் சீக்கியர்களின் வரலாறு (A History of the sikhs) என்ற நூலை வெளியிட்டார். அந்தத் தெளிவான வரலாற்று நூலில் தான் குர தேவ்பகதூர் ஹான்சிக்கும், சட்லஜ் நதிக்கரைக்கும் இடைப்பட்ட பகுதியில் கொள்ளையடித்த செய்தியினைத் தெரிவித்திருக்கிறார்.

தனது ஆட்சிக்கு உட்பட்ட பகுதியில் மக்களிடம் கொள்ளையடிக்கிறார் தேஜ்பகதூர், பாதிக்கப்பட்ட ஹிந்துக்களும், இஸ்லாமியர்களும் ஔரங்கஜேப்பிடம் முறையிடுகின்றனர்; ஆட்சிப் பெறுப்பிலிருக்கும் ஆட்சியாளரான ஔரங்கஜேப் நடவடிக்கை எடுக்கிறார்; அரசாங்கத்திற்கு எதிராக குற்றம் புரிந்த தேஜ்பகதூர் தண்டனை பெறுகிறார்; கொல்லப்படுகிறார்.

தேஜ்பகதூரைப் பொறுத்தவரை, குறுகிய மத எல்லைக் கோட்டுக்குள் எந்தப் பிரச்சனையும் பார்க்காது, அரசியல்ரீதியாகவே தண்டித்தவர் ஔரங்கஜேப், இதனைத் தான் கன்னிங் ஹாம் வலியுறுத்துகிறார்.' இந்த உண்மையினை ஏன் முழுவதுமாக மறைக்கிறார்கள்? ஔரங்கஜேப் மீது தேஜ்பகதுரைக் கொன்ற மதவெறியர் என்ற முத்திரையை ஏன் பதிக்கிறார்கள்? நடுநிலையாளர்கள் மத்தியில் இந்தக் கேள்வி எழவேண்டாமா? உண்மைகள் வரலாற்றின் வெளிச்சத்திற்கு வரவேண்டாமா?

குரு கோவிந்த்சிங்

சீக்கியர்களின் பத்தாவது குருவாகப் பீடம் ஏறியவர் குரு கோவிந்த சிங் (கி..பி. 1866-1708). கேசம், கங்கா, கிர்பால் (கத்தி) கச்சா (kacha) காரா (kara) ஆகிய சீக்கிய மதச் சின்னங்களை அளித்துச் சீக்கியர்களை மேலும் ஒற்றுமைப்படுத்தியவர் இவர். ஔரங்கஜேப்பின் படைப்பிரிவினருடன் போரிட்டு வெற்றிகளும் பெற்றவர். குரு கோவிந்தசிங் நடத்திய போர்க்களக் காட்சிகளை இங்கு விளக்கப்போவதில்லை. ஆனால் இவருக்கும் ஔரங்கஜேப்பிற்கும் இடையே நிலவிய உறவு குறித்துச் சொல்லிட வேண்டியது கடமையல்லவா?

ஜாபர் நாமா

சீக்கியர்களுடன் நடத்திய போர்களுக்குப் பின் அமைதி காண விரும்பிய ஔரங்கஜேப் குரு கோவிந்தசிங்கிற்கு சமாதான முறையில் கடிதம் எழுதினார். அதில் தக்காணத்தில் வந்து தம்மைக் காணுமாறு அவரை அழைத்திருந்தார். சக்கரவர்த்தி ஔரங்கஜேப்பின் அழைப்புக்குத் 'தீனா'விலிருந்து குரு கோவிந்த்சிங் பதில் கடிதம் எழுதினார். இந்தக்கடிதம் 'தசம கிரந்தத்தில்' இணைக்கப்பட்டிருப்பதால் இன்றும் காணக் கிடைக்கின்றது. பாரசீக மொழிச் செய்யுளாக ஒலியிலும், நடைமுறையிலும், தூய்மையான உயிரோட்டமுள்ள பாணியில் அமைந்த அந்தக் கடிதத்திற்கு ஜாபர் நாமா (Zafarnamah) (வெற்றிப் பாமாலை) என்று பெயரிட்டு, தயாசிங், தர்மசிங் என்ற இருவரிடமும் கொடுத்து அனுப்பினார் குருகோவிந்தசிங்.

உலக அரசுகளுக்கெல்லாம் அணி

குரு கோவிந்த சிங், ஜாபர் நாமா என்று அழைக்கப்படும் கடிதத்தில் முகலாயப் படைகளுக்கும் அவருக்குமிடையே நடைபெற்ற போர்கள் குறித்தும், ஔரங்கஜேப் குறித்தும் கண்டித்து பலவற்றைச் சொல்லியுள்ளார். அரசியல் ரீதியாக

ஔரங்கஜேப்பின் ஆட்சிமுறையைக் கண்டித்துரைத் திருக்கிறார். அந்தக் கடிதத்தில் குரு கோவிந்த சிங் ஔரங்கஜேப்பை புகழ்ந்தும் எழுதி இருக்கிறார். இதோ குரு கோவிந்த சிங் ஔரங்கஜேப் குறித்த எழுதியுள்ள புகழ் வாசகங்கள்.

“மன்னாதி மன்னரே, தாங்கள் அதிர்ஷ்டசாலி, திறமைமிக்க வாள்வீரர், குதிரை வீரர், தோற்றத்தில் தாங்கள் எழில் மிக்கவர், மதி நுட்பமுள்ளவர், நாட்டு மன்னர், ஏகாதிபதியும்கூட. உமது நாட்டை ஆட்சி புரிவதில் தீரர். வாள் ஏந்துவதில் வல்லவர். உங்களது சமயத்தைச் சேர்ந்தவர்களிடம் உதார உள்ளம் பெற்றவர். பகைவர்களை நசுக்குவதில் பரபரப்புள்ளவர், அரசுரிமையும் பெரும் பொருளும் வாரி வழங்குகின்றீர். உங்களது கொடை எல்லையற்றது. போரில் மலைபோல் திடமாயிருப்பவர். பதவியில் தங்களுக்கு மிக்கார் யாரும் இல்லை. உங்களது மேன்மை விண்மீன்கள் குழுவான கார்த்தியையை ஒத்தது. தாங்கள் மன்னாதிமன்னன். உலக அரசர்களுக்கெல்லாம் அணி. தாங்கள் உலகனைத்துக்கும் வேந்தர்.” - ஔரங்கஜேப் குறித்து இவ்வாறு புகழ்ந்துரைத்து குரு கோவிந்த சிங் ஜாபர் நாமாவில் எழுதியிருக்கிறார்.” தன்னைச் சக்கரவர்த்தி ஔரங்கஜேப்பின் ஊழியன் என்றும், குருகோவிந்த சிங் வெளிப்படையாகவே அதில் எழுதியிருக்கிறார்.

ஔரங்கஜேப்பின் பொறுமை

இருந்தபோதிலும் தயாசிங், தர்மசிங் - இவ்விருவர்களின் மூலம் ஔரங்கஜேப்பிற்கு குரு கோவிந்த சிங் அனுப்பிய கடிதம் மிகக் கடுமையான போக்கில் அமைந்திருந்தது. ஆனாலும் ஔரங்கஜேப் அதை தவறாக எடுத்துக் கொள்ளவில்லை. நோய்வாய்ப்பட்டிருந்த வயது முதிர்ந்த ஔரங்கஜேப் தனது உடல் நலிவுற்றிருந்த நிலையிலும் தமது திவானான முனியம் கானுக்கு தாமே ஒரு கடிதம் எழுதினார். அதில் குரு கோவிந்த சிங்குடன் நட்புடன் இருக்குமாறும், அவரிடம் தனது கடிதத்தைக் காட்டி, தமது அவைக்கு அழைத்து வரும்படி ஆணையம் பிறப்பித்தவர் ஔரங்கஜேப்.

பாதுகாப்பு ஏற்பாடு

அதோடு மட்டுமா? குரு கோவிந்த சிங்கின் பிரயாணச் செலவிற்காக அவர் வேண்டும் பொருளை அவரிடமிருந்து அபகரித்த உடமைகளிலிருந்து அவருக்குக் கொடுக்கும்படியும், குரு நாட்டை விட்டு வெளியே வரும்போது அவரது பாதுகாப்பிற்காக, வழித்துணையாக ஒருவரையும் அவருடன்

அனுப்பிவைக்க வேண்டுமமென்றும் ஔரங்கஜேப் கட்டளையிட்டார். சக்கரவர்த்தியின் இந்தக்கட்டளையை ஏந்திச் செல்லும் கடிதத்தை முஹம்மத் பேக் என்பவர் கொண்டு சென்றார்; அவருடன் தூதுவர்களாக வந்த தயாசிங்கும், தர்மசிங்கும் உடன் சென்றனர். குரு கோவிந்த சிங்கிடம் நேரில் வந்து தாயாசிங் ஔரங்கஜேப்பை சந்தித்த விவரங்களைத் தெரிவித்தார். அதனையறிந்ததும் ஔரங்கஜேப்பைச் சந்திக்க குரு கோவிந்த சிங்கும் கிளம்பிச் சென்றார். இயற்கையின் விசித்திரம் - இருவரும் சந்திக்கவேயில்லை. இதற்கிடையில் ஔரங்கஜேப் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

பகைவரை மதித்திடும் பண்பாளர்

குரு கோவிந்த சிங் தம்மைப்பற்றி பலமாகக் கண்டித்து கடிதம் எழுதியிருந்தபோதிலும் அந்தக் கடிதத்தைப் படித்திட்ட ஔரங்கஜேப் சிறிதும் கோபப்படவில்லை. மாறாக தன்னை வந்து குரு கோவிந்த சிங் சந்திக்க வேண்டுமென்றே விரும்பினார். அதோடு தன்னைக் காண வருகிற போது குரு கோவிந்த சிங்கை நல்ல மரியாதையுடன் நடத்துவேன் என்று பகைவரையும் மதித்துப் போற்றிய பண்பாளர் ஔரங்கஜேப்.

“The emperor did not resent this letter, but again desired the Guru to come to him, in which case he whould he kindly received”. *

(* general Sir John J.H. Gorden, The Sikhs, London, 1904, P. 49.)

குருகோவிந்த சிங்கும் பீர்முகம்மதும்

சம்கௌடம் என்ற இடத்தில் முகலாயப் படைகளுக்கும். குரு கோவிந்சிங்கின் படைப் பிரிவினருக்குமிடையே நடைபெற்ற போரில் ஜீவனசிங்கன் மடிந்தான்; அஜீதசிங்கன் மாண்டான்; ஜுஜாரசிங்கன் வீழ்ந்தான். குரு கோவிந்த சிங் சம்கௌடத்திலிருந்து தப்பி ஓடவேண்டியதாயிற்று. அப்போது போலால்பூர் என்ற ஊரில், குரு கோவிந்தசிங்கிற்கும் அவரது படையினருக்கும் பாதுகாபளித்தது பீர்முகம்மது என்ற முஸ்லிம்.

முஸ்லிம்களின் உடையும் உணவும்

அங்கேதான் குரு கோவிந்த சிங் முஸ்லிம்கள் சமைத்த உணவை உண்டார்; ஆபத்துக் காலத்தில் இதர மதத்தினரிடம் அன்னமும் உண்லாம் என்று தன் சிஷ்யர்களுக்கு அப்போது வழியும் வகுத்தார்.*

(* வ.வே.ஸு. ஐயரின் முற்கூறிய நூல், பக். 42.)

முகலாயப் படையினர் குரு கோவிந்தசிங்கைப் பின்

தொடர்ந்து வருகிறார்கள் என்பதையறிந்த பீர்முகம்மது தனது (ஹாஜியார் அணியும்) நீல நிற உடையை அவருக்கு அணிவித்து குரு கோவிந்தசிங் தப்பிச் செல்லவுதம் உதவினார். எதிரிகளிடமிருந்து தான் தப்பிச் சென்றதை நினைவுகூறும் வகையில் அன்றிலிருநந்து குருகோவிந்தசிங் முஸ்லிம் ஹாஜிகள் அணியும் ஆடைகளைப் போன்றே அணிந்து கொள்ளவும் ஆரம்பித்தார்.*

(* செய்யது குலாம் உசேனின் சியார் உல் முதாக்கரின் Colonel Briggs. பிரிக்ஸ் மொழிபெயர்ப்பு, பக். 75, மேற்கோள், பரூக்கியின் முற்கூறிய நூல், பக். 257.)

புத்தன் ஷா

அரசியல் ரீதியாக குருகோவிந்தனுக்கும், ஔரங்கஜேப்பிற்குமிடையே பல போர்கள் நடைபெற்றது. போர்க்களங்களில் குருகோவிந்தசிங்கிற்கு உறுதுணையாக யுத்தன்ஷா என்ற முஸ்லிம் தளபதியும், அவரது சகோதரரும், அவரது நான்கு மகன்களும் போராடியிருக்கின்றனர்; கொல்லப்பட்டிருக்கின்றனர்.

உஸ்மான்கான்

குருகோவிந்தசிங்கோடு போர்க்களத்தில் உடனிருந்து ஊறுதுணையாக போர் செய்த புத்தன் ஷா போரில் கொல்லப்பட்டார். தளபதி உஸ்மான்கான் என்பவரும் அவ்வாறே மடிந்தார்.

சையது பெக்

ஔரங்கஜேப்பின் தளபதிகளில் ஒருவராகத் திகழ்நதவர் சையத்கான். இவரும் முகலாயப் படையிலிருந்து விலகி, குரு கோவிந்சிங்கோடு சேர்ந்து கொண்டார். தனது சொத்துக்கள் முழுவதையும் முகலாயரை எதிர்த்து நிகழ்த்தும் போர்களுக்காக அளித்து உதவினார்.* சில காலங்களுக்குப் பிறகு சையதுபெக் போர்க்களமொன்றில் குருகோவிந்தசிங்கிற்காகவே தமது உயிரைத் துறந்தார்.

சையத் கான்

ஔரங்கஜேப்பின் தளபதிகளில் ஒருவர் சையத்கான். இவரும் முகலாயப் படையிலிருந்து விலகி குரு கோவிந்தசிங்கோடு சேர்ந்து கொண்டு பணியாற்றினார்.

அரசியல் ரீதியாக ஔரங்கஜேப்பிற்கும், குருகோவிந்தசிங்கிற்கும் இடையே நடைபெற்ற போர்களில்

குரு கோவிந்தசிங்கிற்கு ஆதரவாக முஸ்லிம் தளபதிகள் பலர் போரிட்டனர்; போரில் மடிந்தனர். இது மதரீதியான போராட்டம் என்றால், இதில் முஸ்லிம் தளபதிகள் குருகோவிந்த சிங்கிற்கு ஆதரவாகப் போருக்குச் சென்றிருப்பார்களா?

போர்க்களத்திலிருந்து குரு கோவிந்தசிங் தப்பி ஓடியபோது, அவருக்கு அடைக்கலம் கொடுத்ததுடன் உணவும், உடையும் பீர் முகமது என்ற முஸ்லிம் வழங்கியிருப்பாரா? இந்தக் கேள்வியை நடுநிலையாளர்கள் முன் வைக்கிறபோது, குரு கோவிந்தசிங்கை வெட்டிக்கொன்றது. ஒரு பட்டாணியர் அல்லவா என்ற கேள்வியைத் தொடுக்கக் கூடும்.

பஹதூர் ஷா

ஔரங்கஜேப்பின் மறைவிற்குப் பிறகு டெல்லிசிம்மாசனம் யாருக்குரியது-? என்று அவரது புதல்வர்கள் போட்டி போட்டுக் கொண்டிருந்தார்கள். பஹதூர்ஷா என்ற ஔரங்கஜேப்பின் புதல்வருக்கு குருகோவிந்தசிங் உதவினார். பஹதூர்ஷாவும் மொகலாயச் சிம்மாசனத்தைக் கைப்பற்றிக் கொண்டார். ஆக்ராவில் பஹதூர்ஷாவைச் சந்தித்தார். குருகோவிந்த்சிங், மணிவேலைப்பாடுகள் செய்யப்பட்ட ஒரு கழுத்துத்துண்டு, ஒரு அங்கி, முடி இவையுடன் கூடிய சன்மானங்களை குருகோவிந்தசிங்கிற்கு பஹதூர்ஷா அளித்து கௌரவித்தார்.

குருவைக் கொன்றது ஏன்?

இவைகள் நடந்து முடிந்ததற்குப் பிறகு, 1708 ஆம் ஆண்டு, குருகோவிந்தசிங்கை பட்டாணியன் ஒருவன் ஈட்டியால் குத்தினான்.*

(*அ.லெ.நடராஜன், குருநானக், தேவர் வரலாறும், போதனைகளும், சென்னை, 1875, பக். 249.)

(இடது மார்பில் இருதயத்திற்கருகில் கத்தியால் குத்தினான்) முகலாயப்பேரரசர் பகதூர்ஷா செய்தியறிந்ததும், குருகோவிந்தசிங்கின் வைத்தியத்திற்காக திறமைமிக்க இரண வைத்தியர்களையும் அனுப்பி வைத்தார். இந்தக்கொலை எதனால் நடந்தது?

பைந்தாகான்

சிறந்த வீரனும், ஆப்கானிய வர்த்தகனுமான பைந்தாகான் (Painda khan) என்ற பட்டாணியரிடம் குருகோவிந்தசிங் குதிரைகளை விலைக்கு வாங்கினார். அந்தக் குதிரைகளுக்குரிய பெருந்தொகைகளை

குருகோவிந்தசிங்கிடம் குதிரைகளை விற்ற பட்டாணியர் பல முறை கேட்டுக் கொண்டிருந்தார். பணம் பெறுவதற்குத் தாமதமாயிற்று. பட்டாணிய வர்த்தகரோ, குருகோவிந்தசிங்கிடம் கோபமுற்றுப் பேசினார். குதிரைகளுக்குரிய பணத்தைத்தருமாறு கேட்டார். குரு கோவிந்தசிங் ஆவேசமுற்று ஆப்கானிய பட்டாணியரை அடித்துக் கொன்றார்.' அவரது குடும்பத்தார் அப்போது 'விதியே' யென்று இருந்து விட்டார்கள். இருந்தபோதிலும் தனது தந்தை, குரு கோவிந்தசிங்கால் அநியாயமாகக் கொல்லப்பட்ட விஷயத்தை அவரது புதல்வர்கள் மனதிற்குள்ளே எண்ணி காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். குரு கோவிந்தசிங்கைப் பழிவாங்க தக்க தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பழிக்குப் பழி

பாதுகாவலின்றி ஒரு நாள் குரு கோவிந்தசிங் அயர்ந்து தங்கிக் கொண்டிருந்தபோது, பைந்தாகானின் பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் குரு கோவிந்தசிங்கைத் தாக்கி பழியைத் தீர்த்துக் கொண்டார்கள். குரு கோவிந்தசிங் கொலையுண்டு மரணத்தினை எய்திட காரணம் இதுவே* குதிரை வணிகத்தில் நடந்த கொடுக்கல் வாங்கலில் நடைபெற்ற தனிப்பட்ட கொலை விஷயம் இது.

இதில் மதம் எங்கே குறுக்கே நிற்கிறது?

நடுநிலையாளர்களின் சிந்தனைக்கு

சீக்கியர்கள், முஸ்லிம்களுக்கு உதவினார்கள். முஸ்லிம்கள், சீக்கியர்களுக்கு உதவி புரிந்தார்கள். முகலாயப் பேரரசர்கள் சீக்கிய குருமார்களை ஆதரித்தனர். அமிர்தசரஸ் கோவிலைக் கட்ட இடம் வழங்கியது பேரரசர் அக்பர் தான். சீக்கிய குருமார்களும், முகலாயப் பேரரசர்களை ஆதரித்தனர். அரசியல் ரீதியாக முகலாயப் பேரரசர்கள் சீக்கிய குருமார்களுடன் மோதியிருக்கின்றனர்; சண்டை யிட்டுள்ளனர்.

ஔரங்கஜேப், தேஜ் பகதூருக்கு தண்டனை வழங்கியது அரசியல் ரீதியான காரணத்தால் தான். ஆனால் இவைகளை எல்லாம் மறந்து விட்டு, அல்லது மறக்க வைத்து விட்டு, மதத்தின் பெயரால் கலவரங்கள் ஏற்படுத்திட வித்துக்களை விதைத்திடும் தீய சக்திகள் வரலாற்றைத் திரித்துக் கூறுகிறார்கள்.

சீக்கியர்கள் ஜென்ம விரோதி ஔரங்கஜேப் என்பதைப் போல சித்தரிக்க முயலுகிறார்கள். அதன் மூலம் முஸ்லிம் -

சீக்கியர்களிடையே மன வேறுபாட்டை உருவாக்கவும், மனமாச்சர்யங்களை வளர்த்திடவும் முயலுகிறார்கள்.

ஆட்சி அதிகாரத்தின் போது நடைபெற்ற அரசியல் நடவடிக்கைகளுக்கு மதச்சாயம் பூசி துவேஷ உணர்வை வளர்த்திட தூபம் போடுகிறார்கள். இது சரியா? நியாயமா? அடுக்குமா? இதனை நாம் அனுமதிக்கலாமா? என்ற கேள்வியை நடுநிலையாளர்களின் நல்ல சிந்தனைக்கு வைக்கிறேன். ஔரங்கஜேப்- சீக்கியர் குறித்த மேற்கூறிய விஷயங்கள் மக்களின் பார்வைக்கும், வரலாற்றின் வெளிச்சத்திற்கும் கொண்டு செல்லப்பட நடுநிலையாளர்களும் முயல வேண்டும் என்றும் வேண்டுகிறேன்.

9

இசைக் கலைஞர்களை இம்சித்தவரா?

முகலாயச் சக்கரவர்த்தி, 'ஔரங்கஜேப்' இசையைத் தடை செய்தார். இசைக் கலைஞர்களைத் துன்புறுத்தினார் என்று குற்றச்சாட்டிற்குள்ளாகி வருகிறார். இதில் மறைந்துள்ள செய்தி எது? இதோ வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்.....

பாபர்

முகலாயர்கால வரலாற்றில் மாமன்னர் பாபர் ஓர் இசைவாணர். பாடுவதில் வல்லவர். பாடல்கள் குறித்து ஆய்வுக் கட்டுரைகளும் எழுதியவர்.

ஹிமாயூன்

திங்கட்கிழமை, புதன்கிழமை ஆகிய நாட்களில் பாபரின் மகனான பேரரசர் ஹிமாயூன் இசையினை விரும்பிக் கேட்பார். ஒரு சிறைக் கைதியின் இசையில் தனது மனதைப் பறிகொடுத்து அவரைத் தனது ஆஸ்தானப் பாடகராக்கிக் கொண்டவர் ஹிமாயூன்.

அக்பர்

பாட்டனார் பாபர், தந்தையார் ஹிமாயூன் இவர்களின் இசை ஆர்வம் அக்பருக்கு இருந்தது. அக்பர் வியக்கத்தகும் இசைப் புலவர். அவரது அரசவையில் 36 இசைவாணர்கள் இருந்தனர். தான்சேன், இராமதாஸ், சூர்தாஸ், பைஸ்பாவ்ரா போன்றவர்கள் அக்பர் காலத்தையைச் சேர்ந்த பாடகர்கள். அக்பர் காலத்தில் இசைக்கலை பெரிதும் ஊக்குவிக்கப்பட்டது. இசைக் கலையும்,

இசைவாணர்களும் சிறந்து விளங்கினர்.

ஷாஜகான்

பேரரசர் ஷாஜகான் சிறந்த பாடகர். நன்றாகப் பாடும் சாரீரம் கொண்டவர். ஜகநாத் என்ற இசைக்கலைஞர்களின் இசையைப் பாராட்டி மகிழ்ந்ததோடு அவரது எடைக்கு எடை தங்கத்தையும் வழங்கியவர் ஷாஜகான்.

ஔரங்கஜேப்

ஔரங்கஜேப்பிற்கும், இசைக்கும், இசைவாணர்களுக்கும் இடையே இருந்த தொடர்பு பற்றிய வரலாற்றுச் செய்திகளை சரித்திராசிரியர்கள் பக்த்வர்கானும், மனுச்சியும் தெரிவித்திருக்கின்றனர்.

நஜீர் பக்த்வர்கான்

ஆக்ராவிற்கு அருகிலுள்ள ஃபரீதாபத் எனும் ஊரில் வாழ்ந்த நஜீர் பக்த்வர்கான் (Nazir Bakhtawarkhan) ஔரங்கஜேப்பின் ஆட்சியில் 1000 குதிரை வீரர்களுக்கு மன்ஸப்தாரராகவும் இருந்தவர். பின் மேலாளர் (Superintendent) ஆகவும் பணிபுரிந்தவர். சிறந்த வரலாற்று அறிஞரான பக்த்வர்கான், தமது நூலின் முற்பகுதியில் இஸ்ரவேலர்கள், இயேசுபிரான், சாம்சன் ஆகியோர் வரலாற்றையும், எழுதியுள்ளார். ஔரங்கஜேப்பின் ஆட்சியின் நிகழ்ச்சிகளைத் தாம் கண்டவாறே தமது நூலின் பிற்பகுதயில் எழுதியவர்.

மீரத்தே ஆலம், மீரத்தே ஜஹான்நுமா

பக்த்வர்கானின் ‘மீரத்தே ஆலம்’, (Mir at i Alam-) ‘மீரத்தே ஜஹான்நுமா’ (Mir at i Jahan numa) என்ற இருபகுதிகளும் ‘மீரத்தே ஆலம்‘ எனப் பொது பெயரால் தற்போது வழங்கப்படுகிறது. இந்திய வரலாற்றுக்குரிய மூலக்குறிப்பான இந்த நூலை டாக்டர் டார்ன் (Dr. Dorn), கர்னல் டௌ (Col. Dow), அறிஞர் எலியட், டௌசன் ஆகியோர் மொழி பெயர்த்து உள்ளனர். அந்த நூலில் ஔரங்கஜேப் பின் இசை ஆர்வம் குறித்து காணப்படுகிற செய்திகள் இதோ....

இசைக் கலையை அறிந்தவர்

“.....and in the commencement of his reign sometimes uset to hear the sing and play, and though he himself understands music well, yet now for sareral years past an account of his great restraint and self -denial and opser vance of thetenets of the great- Imam (shafi.) he entirelyabstains from this amusement. If any of singers anf musicians becomes ashamed of

his calling, he makes an allowance for him or grants him land for his maintainance". *

(* H.M. Elliet, John Dowson, The History of India as told by its own Historians. Vol. VII, IXIX, Miratialam, Miratijshanuma of Bakhtawarkhan, Allahabad. P.P. 157, 158.)

தனது ஆட்சியின் ஆரம்ப காலத்தில் ஆடலையும், பாடலையும் நன்கு ரசித்த ஔரங்கஜேப் இசையை முழுமையாக அறிந்திருந்தார். ஆனால் பிற்காலத்தில் ஷாஃபி இமாம் அவர்களின் வழிமுறைகளைப் பின்பற்றியதால், ஆடல், பாடல் போன்ற கேளிக்கைகளிலிருந்து ஔரங்கஜேப் விலகிக் கொண்டார்.

இசைக் கலைஞர்களுக்கு உதவி

ஔரங்கஜேப்பின் ஆட்சியில் இசை தடை செய்யப்பட்டபோது, இசைத் தொழிலை விட்டுவிட்ட இசைக் கலைஞர்களுக்கு ரொக்கப் பணமோ, நிலமோ கொடுப்பதற்கு ஔரங்கஜேப் தயாராகவே இருந்தார். இசைத் தொழிலை இழந்தவர்களுக்கு நிலமும், மான்யமும் ஔரங்கஜேப் அளித்த செய்தியினை சமகால வரலாற்றாசிரியர் பக்த்வர்கான் தெரிவித்துள்ளார்.

எட்வர்டுதாஸ் - காரெட் கூற்று

பேராசிரியர் எட்வர்டுதாஸும், காரெட்டும் தங்களது 'முகலாயர் ஆட்சி கால இந்தியா' என்ற நூலில் ஔரங்கஜேப் தனது 11வது ஆட்சி ஆண்டில் இசையைத் தடை செய்தார் என்று குறிப்பிடுகிறார்கள். அதனால் பாதிக்கப்படும் இசைக் கலைஞர்களுக்கு (பென்சன்) உதவித் தொகை வழங்கிடவும் உத்தரவிட்டார் என்பதனையும் தெரிவித்திருக்கிறார்கள்.

கென்னடியின் கூற்று

'முகலாய மன்னர்களின் வரலாறு' என்ற நலில் பேராசிரியர் கென்னடி, ஔரங்கஜேப் பாதிக்கப்பட்ட இசைக் கலைஞர்களுக்கு, சங்கீத வித்வான்களுக்கும் பணமாக உதவித் தொகை வழங்கிட உத்தரவிட்டதைத் தெரிவித்திருக்கிறார்.

மனுச்சியின் கூற்று

ஔரங்கஜேப் ஆட்சிக்காலத்தில் இசை தடை செய்யப்பட்டபோதிலும் பிரபுக்கள், இசை கேட்பதை நிறுத்திவிடவில்லை. அவர்கள் இரகசியமாக இசையைக் கேட்டுக்கொண்டுதானிருந்தனர்' என்பதை நிக்கோலா மனுச்சி

அறிவிக்கிறார்.

ஔரங்கஜேப்பின் ஆட்சிக் காலத்தில் அரண்மனையின் அந்தப்புரத்து அரச மகளிர்களுக்காக நடனமாடும் பெண்கள் இருந்தனர். அவர்கள் ஆடலும், பாடலும் பாடி அவர்களை மகிழ்வித்துக் கொண்டிருந்தார்கள் என்பதனை மனுச்சியும் தெரிவித்துள்ளார்.

டாக்டர் இரா. திருமுருகனின் கூற்று

“வெறி இசை என்பது மனிதனின் புனிதத்தைக் கெடுத்து உணர்வு நிலைகளில் மனிதனைக் கீழ்தரமாக ஆக்கவல்லதாக உள்ளது. இந்த வெறி இசையை, இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது. சிற்றின்ப வேட்கைகளைத் தூண்டும் இசையைக் கேட்பதும், இசைக் கருவிகளைக் கேட்பதும் மார்க்க இயல்புக்கு முற்றிலும் ஒவ்வாததாகும். இன்றைய நவீன கருவிகளின் கூட்டிசை மனிதனை விலங்கு நிலைக்கு ஆக்கவல்லதாகும். குமட்டும் கூச்சலையோ, கூட்ட ஒலிகளையோ இசை எனக் கொண்டு வெறியாட்டம் ஆடுவதைப் பார்ப்பதும் கேட்பதும் பிழையே. இதனையே இஸ்லாம் கண்டிக்கிறது. அவுரங்கசீப் மன்னரைப் போன்றவர்கள் இசையைப் பற்றி, கூடாதது என்று வழங்கிய கருத்தும் இதுபோன்ற வெறி இசை பற்றியதென்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்” என்பார் ஆய்வுச் செம்மல் டாக்டர் இரா. திருமுருகனார்.

ஔரங்கஜேப் தனது பதினோராவது ஆட்சி காலத்தில் இசைக்குத் தடைவிதித்த போதிலும் பாதிக்கப்பட்ட இசைக் கலைஞர்களுக்கும், சங்கீத வித்வான்களுக்கும் நிவாரணத் தொகைகளையும், உதவிகளையும், நிலங்களையும் வழங்கினார் என்பதிலிருந்து அவர் இசையைத் தடை செய்த போதிலும், இசைக்கலைஞர்களை இம்சிக்கவில்லை என்பதுதான் வரலாற்றின் உண்மையாகும்.

10

செருப்புக்கு சிறப்புச் செய்திடச் சொன்னவரா?

“ஔரங்கஜேப்பின் பட்டத்து யானை மீது அவரது செருப்பு ஒன்றை அலங்கரித்து வைத்து ஊர், ஊராகச் செல்லச் செய்வதும், அதனை அந்தப் பகுதி அரசர்கள் தத்தம் நகருக்குள் அழைத்து வருவதும், பின் அந்தச் செருப்பை வங்குவதும், அதனை அவர்களது அரியணையின் மீது வைத்து மரியாதை செய்வதும் நடைபெற்று வந்தது. மதுரை நாயக்கர் மன்னர் ஸ்ரீரங்ககிருஷ்ண முத்துவீரப்ப நாயக்கர் இச்செயலை எதிர்த்தார். அவ்வாறு கொண்டுவரப்பட்ட ஔரங்கஜேப்பின் செருப்பை வாங்கித் தனது காலில் மாட்டினார். அதன்பின் இதை அறிந்ததும், தனது அகந்தைக்கு கிடைத்த பரிசு இதுதான் என்று ஔரங்கஜேப் உணர்ந்தவராய் இருந்து விட்டார்’ என்று ஆலம்கீர் ஔரங்கஜேப் மீது தமிழக வரலாற்றில் ஒரு செய்தி சொல்லப்பட்டு வருகிறது.*

(* கா. மாயாண்டி பாரதி, நாயக்க மாதேவி, சென்னை, 1955, பக். 55-57.)

இதில் உண்மை நிலை என்ன?

முத்து வீரப்ப நாயக்கரின் காலம்

ஸ்ரீரங்க கிருஷ்ணமுத்து வீரப்பநாயக்கர் சொக்கநாத நாயக்கருக்கும், ராணி மங்கம்மாளுக்கும் மகனாக கி.பி. 1675 இல் பிறந்தவர். ஸ்ரீரங்ககிருஷ்ணமுத்து வீரப்ப நாயக்கரின்

பிறப்பு ஆண்டு குறித்து கருத்து வேறுபாடுகள் இருப்பினும் அவர் அரியணை ஏறியது கி.பி. 1682 இல். (the Mrtyunjaya manuscripts ascribe Rangakrishna s accession to Adi Dundubhi (July 1682) ஏழாண்டு கால ஆட்சிக்குப்பின் ஸ்ரீரங்ககிருஷ்ணமுத்து வீரப்பநாயக்கர் அம்மைநோயால் பாதிக்கப்பட்டு மறைந்தது கி.பி. 1689 இல். எனவே கி.பி. 1682 முதல் 1689 வரை அவர் அரச பொறுப்பில் இருந்தார் என்பதனை அனைவரும் ஒப்புக் கொள்கின்றனர்.* (* என்.கே.வேலன், நாயக்கர் ஆட்சி, சென்னை, 1979, பக். 38.)

தனது ஏழாவது வயதில் பட்டத்திற்கு வந்து தனது 14வது வயதில் மறைந்தவரா? அல்லது தனது 25வது வயதில் பட்டத்திற்கு வந்து 32வது வயதில் மறைந்தவரா? என்பது குறித்து கருத்து வேறுபாடுகள் இருப்பினும், ஸ்ரீரங்ககிருஷ்ணாவின் ஆட்சிக் காலம் கி. பி. 1683 முதல் 1689 வரை என்பது தெளிவாக கூறப்பட்டுள்ளது.

நாட்டுப்புறக் கதைகள்

இவரது ஆட்சிக் காலத்தில் தான் ஔரங்கஜேப்பின் செருப்பு, சிறப்புச் செய்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டது என்று கூறப்படுகிறது. செருப்பை ஊர்வலமாக அனுப்புவதும், அதற்குச் சிற்றரசர்களை மரியாதை செய்ய எதிர்பார்ப்பதும் கட்டுக்கதையாய் இருக்க வேண்டுமென்று ஒரு சிலருக்குத் தோன்றும். அங்ஙனம் நினைக்க வேண்டுமென்று ஒரு சிலருக்குத் தோன்றும். அங்ஙனம் நினைக்க வேண்டுவதில்லை. பரதன் இராமபிரானுடைய பாதுகைக்கு மதிப்பளித்துப் போற்றியதை இராமாயணத்தில் படிக்கவில்லையா? ஆதலால், பாதுஷாவின் பாதுகை உலாச்செய்தி நடக்க முடியாததென்று ஒருவரும் அதனைத் தள்ள வேண்டுவதில்லை. நாட்டு வரலாறுகள் செருப்புலாவைச் சிறப்பாக விவரித்துக் கூறுகின்றன" என்று நாட்டுப்புறக் கதைகள் செருப்பு விஷயத்தை சிறப்பாகக் கூறுவதாக அ.கி.பரந்தாமனார் தெரிவித்துள்ளார். வெறுமனே செருப்புக் கதை மட்டும் வழங்கவில்லையே... அதோடு ஔரங்கஜேப்பின் மீது கறையும் படிகிறதே என்பதால் சில விளக்கங்கள் அவசியமாகிறது.

பிஜப்பூர்- கோல்கொண்டா முற்றுகை

ஸ்ரீரங்க கிருஷ்ண முத்துவீரப்ப நாயக்கரின் ஆட்சி நடைபெற்ற காலத்தில், முகலாய சக்கரவர்த்தி ஔரங்கஜேப் பிஜப்பூர்-கோல் கொண்டா பகுதிகளில் தனது முற்றுகையை; தீவிரப்போர்களை நடத்திக் கொண்டிருந்தார். பிஜப்பூர்-கோல்கொண்டா நாடுகளை தனது ஆதிக்கத்தின் கீழ்கொண்டு

வருவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தார். முழுமூச்சுடன் கடுமையான யுத்தங்களை நடத்தியத்திற்குப் பின்னால் பிஜப்பூர் கி.பி. 1686 செப்டம்பர் 12ல் ஔரங்கஜேப்பிற்குப் பணிந்தது.* கி.பி. 1687 செப்டம்பர் 21 இல் கோல்கொண்டாவும் சரண் அடைந்தது என்று பேராசிரியர் ஜாதுநாத் சர்க்கார் தெரிவித்துள்ளார்.

மராட்டியருடன் மாபெரும் யுத்தம்

பிஜப்பூர், கோல்கொண்டா வீழ்ச்சிக்குப்பிறகு ஔரங்கஜேப் தனது சக்திவாய்ந்த எதிரியான மராட்டியர்களை எதிர்த்துப் போரிட தனது படைபலம் அனைத்தையும் ஈடுபடுத்திப் போர்க்களம் புகுந்தார். கி.பி. 1689 ஜனவரியில் சாம்பாஜி (Shambaji) சிறைபிடிக்கப்பட்டார்.* (* Ibid. 382.)

அதன்பின் நடைபெற்ற நீண்ட நெடும்போருக்குப்பின் ராய்கர் (Raigarh) கோட்டையை கி.பி. 1689 அக்டோபர் 19இல் ஔரங்கஜேப் கைப்பற்றினார்.

சிந்தனை சைன்யங்களின் மீதா? செருப்பின் மீதா?

பிஜப்பூர் அடில்ஷாவையும், (Adilshah) கோல் கொண்டாவின் குத்ஷாவையும் (Qutbshah) மராட்டிய சாம்பாஜியையும் வீழ்த்தியதற்குப் பின் வடஇந்தியா மற்றும் தக்காணம் முழுமையும் ஔரங்கஜேப்பின் ஆட்சியின் கீழ் வந்தது. கி.பி. 1689 இறுதியில்தான்.

“Thus, by the end of the year 1689, Aurangzib was the unrivalled lord Paramount of Northern intia and the Deccan alike”.

கி.பி. 1689 ஆம் ஆண்டின் இறுதிவரை பிஜப்பூர், கோல்கொண்டா மற்றும் மராத்தியருடனும் போரில் ஈடுபட்டு வென்றவர் ஔரங்கஜேப். அவரின் கவனம் அந்தப் போர்க்களங்கிலேயே இருந்தது.

ஔரங்கஜேப்பின் சிந்தனை முழுவதும் கி.பி. 1689 இல் தனது சைன்யங்களைப் போருக்கு அனுப்புவதிலும், சாம்பாஜியை கைது செய்வதிலும், மராத்தியரை வீழ்த்துவதிலும் இருந்தது. இத்தகைய சூழ்நிலையில் ஔரங்கஜேப் தமிழகத்திற்கு தனது செருப்பை அனுப்பி வணங்கிடச் சொன்னார் என்று கூறப்பட்டு வருகிற கதை நடுநிலையாளர்கள் நம்பும்படியாக இருக்கிறதா?

‘மனுச்சி’ குறிப்பிடவில்லை

மேலும் இது போன்ற கதைச்சம்பவங்களை தேடி எடுத்து சுவைபட வரலாற்றில் வழக்கமாகச் சொல்லுபவர்

வரலாற்றாசிரியர் மனுச்சி. அவர் தமது மொகாலய வரலாற்றில், ஔரங்கஜேப் குறித்து பல சுவையான கதைகளைத் தெரிவித்திருக்கிறார். தென்னகத்திற்கு ஔரங்கஜேப் தமது செருப்பினை அனுப்பிச் சிறப்புச் செய்யச் சொன்னதாக 'மனுச்சி' தமது நூலில் எங்கேனும் குறிப்பிடவில்லை.

சத்தியநாத அய்யரின் கூற்று

'ரங்க கிருஷ்ணாவின் ஆட்சிக் காலத்தில் இந்த மாதிரியான சம்பவம் நடந்திருக்கவே வாய்ப்பில்லை... இந்தச் சூழ்நிலையில் மேற்கூறிய செருப்புக் கதையின் உண்மை நம்பும்படியாகவே இல்லை... மேலும் ஔரங்கஜேப் சாதாரணமாக இத்தகைய சடங்காச்சாரங்களை கவனத்தில் கொள்பவர் அல்ல. முக்கிய நோக்கங்களைப் பார்ப்பவரே தவிர, இந்த மாதிரி விஷயங்களை கவனிப்பவர் அல்ல. சிற்றரசன் ரங்ககிருஷ்ணாவால் பேரரசர் ஔரங்கஜேப்பிற்குப் பாடம் கற்பிக்கப்பட்டது என்று சொல்வது ஔரங்கஜேப்பின் தன்மைக்கு உகந்ததாக, ஒத்துக் கொள்வதாக இல்லை.' என்று பேராசிரியர் சத்தியநாதய்யர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகையின் மகிமை

"ஓ! ரத்தினப் பாதுகையே! சுபமான நாதங்களை உடைய நீ உன்னிடம் அமைந்துள்ள ரத்தினங்களின் கிரணத்தொகுதியால் பகவானாகிற பதியை மணக்கின்ற சுருதிகளின் கருத்துக்களில் திருமாங்கல்யத்தைக் காட்டுகின்றாய் போலும்.!" என்று கவிதார்க்கிகஸிம்ஹக் என்று பிரசித்தி பெற்ற ஸ்ரீவேதாந்த தேசிகன் தனது பாதுகாஸஹஸ்ரத்தில் பாதுகையின் மகிமைகளை எடுத்துரைப்பார். *

(* ஸ்தோத்திர மாலை, சென்னை, 1992, பக். 55.)

ஸ்ரீ ராம பாதுகே

"ஹே பாதரக்ஷகே! நமஸ்தே நமஸ்தே
ஸ்ரீ ராம பாதுகே! நாப்ரண பாதுகே
பரமார்க்க தர்சகே!ஸ்ரீ நாதபாத ஸகே!"

என்று பரதன், ராமபிரானுடைய பாதுகைகளுக்கு மங்கள வாத்தியங்கள் முழங்க, மகுடத்தை கையில் வாங்கி பாதுகைகளின் மீது வைத்ததாகச் சொல்வர். *

(* S.K.பார்த்தஸாரதி, ஸ்ரீ பக்த பரதன்அல்லது ஸ்ரீ பாதுகா பட்டாபிஷேகம், மன்னார்குடி, 1931, பக். 111, 116.)

பரதன் இராமனின் பாதுகைகளை சிரமேற் தாங்கிக்

கொண்டு வந்ததும், ஸ்தோத்திரம் செய்து விட்டு பாதுகைகளுக்கு பூஜை, தீபாராதனை செய்ததையும் சுவாமி சித்பவானந்தர் கூறுவர்.

உருவ வணக்க எதிர்ப்பாளர்

இவ்வாறு பாதுகைகளை வணங்குவதும், அதற்கு சிறப்பு செய்வதும், தீப ஆராதனை காட்டுவதுமாகிய செயல்கள் உருவ வணக்கத்தை நினைவுப் படுத்துகிற செயல்களாகும்.

இஸ்லாமிய மார்க்க நெறிமுறைகளின்படி அரசாட்சி புரிந்தவர் ஔரங்கஜேப். அத்தோடு உருவ வணக்கத்தை அடியோடு வெறுத்தவர் அவர்.

‘வணக்கத்திற்குரியவன் இறைவன் ஒருவனைத் தவிர வேறு யாருமில்லை’ என்ற கொள்கையினை உறுதியோடு கடைப்பிடித்தவர் ஔரங்கஜேப். இத்தகைய கொள்கைகளைக் கொண்டிருந்த அவர், தனது செருப்பை அனுப்பி அதனைப் பிறர் வணங்கிட வற்புறுத்தினார் என்றும், கட்டளையிட்டார் என்றும் கூறுவது நம்பும்படியாக இருக்கிறதா? அல்லது இது ஔரங்கஜேப் மீது குற்றம் சுமத்த வேண்டுமென்கிற நோக்கத்திலேயே சொல்லப்பட்டு வருகின்ற கட்டுக்கதையா? என்ற கேள்வியை மட்டும் இங்கே வைத்துள்ளேன்.

11

இந்துக்களை இம்சித்தவரா?

டில்லியை தலைநகராகக் கொண்டு 592 ஆண்டுகாலம், 46 இஸ்லாமிய அரசர்கள் ஆட்சிபுரிந்து வந்திருக்கின்றனர். பாமினி சாம்ராஜ்யத்தில் 170 ஆண்டு காலம், 17 மன்னர்களும், மால்வா ராஜ்யத்தில் 130 ஆண்டு காலம் 7 அரசர்களும், குஜராத்தில் 136 ஆண்டுகாலம் 9 மன்னர்களும், பிஜப்பூரில் 127 ஆண்டுகளில் 9 ராஜாக்களும், கோல்கொண்டாவில் 109 ஆண்டுகளில் 8 நவாபுகளும், அஹமது நகரில் 196 ஆண்டுகளில் 14 சுல்தான்களும், பெராரில் 8 ஆண்டுகளில் 4 அரசர்களும், பிதார் ராஜ்யத்தில் 135 ஆண்டுகளில் 12 மன்னர்களும், அவுத்தில் 35 ஆண்டுகளில் 12 நவாபுகளும், ஹைதராபாத்தில் 230 ஆண்டுகளில் 12 நிஜாம்களும், வங்காளத்தில் 67 ஆண்டுகளில் 10 தௌலாக்களும், மைசூரில் 22 ஆண்டுகளில் 2 சுல்தான்களும், ஆற்காட்டில் 135 ஆண்டுகளில் 12 நவாபுகளும் ஆட்சி செலுத்தி வந்திருக்கின்றனர். *

(* S.இனாயத்துல்லா, பல்சமய ஒருமைப்பாடும், இஸ்லாமிய சித்தாந்தமும், பாலக்குலா, 1991, பக். 33.)

ஏறத்தாழ 1170 ஆண்டுகளுக்கு மேலாக 231 முஸ்லிம் மன்னர்களின் ஆட்சி இந்த நாட்டில் நடைபெற்றுள்ளது. இந்தியாவில் இஸ்லாமியரின் ஆட்சியின் போது அமைக்கப்பட்ட மாளிகைகள், பூங்காக்கள், கோட்டை கொத்தளங்கள், கோரிகள், கும்பாஸ்கள் என இவைகளைக் கணக்கிடும் போது, அப்போது கட்டப்பட்ட பள்ளிவாசல்களின்

எண்ணிக்கை மிகக் குறைவுதான்.

சமயச் சாயம்

“முஸ்லிம் மன்னர்கள் இந்தியாவில் தங்களது ஆட்சியின்போது பிற மதத்தினரின் ஆலயங்களை, வணக்க ஸ்தலங்களை இடித்துத் தகர்த்தனர். அங்கே புதிதாக பள்ளிவாசல்களைக் கட்டினர். அதிலும் குறிப்பாக ஔரங்கஜேப் இந்த விஷயத்தில் மிகத் தீவிரமாக செயல்பட்டார். அதோடு தினமும் அவர் ஹிந்துக்களையும், பிற மதத்தினரையும் ஹிம்சித்துக் கொண்டே இருந்தார்.” இது ஔரங்கஜேப் மீது சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுகளில் தலையாய குற்றச்சாட்டு ஆகும்.

ஔரங்கஜேப் நாட்டில் சட்ட ஒழுங்கை நிலைநாட்ட எடுத்துக் கொண்ட நடவடிக்கையின்போது பாதிப்புக்குள்ளாக அல்லது இடிக்கப்பட்ட ஒரு சில வழிபாட்டுத் தலங்களை கணக்கிலெடுத்துக் கொண்டு அதனைப் பொதுவிதியாக்கி, அதற்குச் சமயச்சாயம் பூசி ஔரங்கஜேப்பை கொடுங்ககோலராகச் சித்தரித்து வருகிறார்கள்.

“பத்து நூறுகள் இப்பரதத்தை யாண்ட முஸ்லிம்கள் ஆட்சியைப் பற்றி எஞ்சி நிற்கும் எண்ணமெல்லாம் ஆலம்கீர் ஔரங்கஜேப் ஹிந்துக்களை கொன்று குவித்த கொடுங்ககோலர் என்பதே என்று கவிஞர் ஒருவர் பாடியுள்ளார்.* பள்ளிக்கூடங்களிலும், பல்கலைக் கழகங்களிலும் இவ்வாறே வரலாறு ஔரங்கஜேப் குறித்து கற்பிக்கப்பட்டு வருகிறது.

(* A. அஷ்ரப் அலி, இந்திய வரலாறு திருத்தப்ட வேண்டும் ஏன்? சென்னை, 1992, பக். 35.)

இஸ்லாமிய மார்க்கமும், இதர மதத்தினரும்

இஸ்லாமிய நெறிமுறைகளின்படியும், அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காட்டிய வழிமுறைகளின்படியும் ஆட்சியை நடத்தியவர் ஔரங்கஜேப் என்று அவரைக் குறைகூறி வருபவர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர். எனவே, பிற மதத்தினர்களிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று இஸ்லாமிய மார்க்கம் சொல்வது என்ன? என்பதனை முதலில் பார்ப்போம்.

இஸ்லாமிய மதத்தினர் இதர மதத்தினர்களிடம் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பது குறித்து தெள்ளத் தெளிவாக தித்திக்கும் திருமறையாக திருக்குர்ஆன் தெரிவிக்கிறது.

அறியாமைக் காலத்திய பழக்கம்

“ஒரு பெண்ணுக்கு பலமுறை குழந்தை பிறந்து இறந்து விட்டால், அந்தப் பெண்ணுக்கு அடுத்த குழந்தை பிறக்கும்போது அது உயிரோடு இருந்தால் அதனை யூத மதத்தில் சேர்த்து விடுகிறேன்” என்ற சபதம் செய்து கொள்ளும் பழக்கம் அறியாமைக் காலத்தில் மதீனாவில் அரபு மக்களிடம் இருந்து வந்தது.

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்தில் முஸ்லிம்களுக்கு எதிராகச் சதி வேலைகளில் ஈடுபட்டிருந்த ‘பனூநளீர்’ என்னும் யூதக் கூட்டத்தார் மதினாவிலிருந்து நாடு கடத்தப்பட்டார்கள். அவ்வாறு நாடு கடத்தப்பட்ட யூதர்களில் மேற்குறிப்பிட்ட பழக்கத்தின் அடிப்படையில் யூத மதத்தில் சேர்க்கப்பட்ட மதீனாநகர் முஸ்லிம்களின் பிள்ளைகளும் இருந்தனர்.

தங்களின் மக்களை யூதர்களுடன் வெளியே செல்ல விடமாட்டோம் என மதீனா நகர் முஸ்லிம்கள் கூறினர். அதோடு மதம் மாறியிருந்த தங்களது பிள்ளைகளை இஸ்லாம் மார்க்கத்தில் சேர்த்துவிடுமாறும் வற்புறுத்தினார்கள். அப்போது இறைவனால் இது குறித்த திருவசனம் இறக்கி அருளப்பட்டது என்று இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவித்ததாக ‘இப்னுஜரீர்’ என்ற நூல் தெரிவிக்கிறது.

திருமறையும் தெளிவான அறிவிப்பும்

அன்சாரிகளில் (மதீனாவில் வாழும் முஸ்லிம்கள்) ‘பனூசாலிம்பின் அவ்ப்’என்னும் குடும்பத்தைச் சேர்ந்த ‘ஹலீஸ்’ என்பவரின் இரு பிள்ளைகள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நபித்துவத்திற்கு முன்னதாகவே கிறிஸ்துவ மதத்தைத் தழுவிவிட்டனர். இரு பிள்ளைகளும் மதீனா நகரம் வந்தபோது அந்த அன்சாரி தம்முடைய இரு புதல்வர்களையும் தடுத்து வைத்துக் கொண்டு, அவர்களை இஸ்லாமாக்காமல் விடேன் என்று கூறினார். அப்பொழுது இறைவன் இவ்வசனத்தை அருளினான்.

திருக்குர்ஆனின் இரண்டாவது அத்தியாயமான அல்பறாவில் (ரிஷபம்) 256வது வசனம் இதோ :

“இஸ்லாம் மார்க்கத்தில் நிர்பந்தமேயில்லை. ஏனென்றால் வழிகேட்டிலிருந்து விலகி நேர்வழியடைவது எவ்வாறென்று தெளிவாகிவிட்டது.... *

(* ஆ.கா. அப்துல் ஹமீது பாகவி, தர்ஜுமதுல், குர்ஆன்,

ஆறாம் பதிப்பு- 1986, சென்னை, பக். 50.)

குறைஷிகள் நடத்திய பேரம்

“நமது தெய்வங்களைப் பற்றியும் அவைகளுக்கு வணக்கம் செய்வது பற்றியும், முஹம்மது தூஷணமாகக் பேசக்கூடாது. நமது கூட்டத்தாரில் தலைமைத்தனம் வகிக்கவேண்டுமென்று அவருக்கு விருப்பமிருந்தால் அவரைத் தலைவராக்கி விடுகிறோம். பொருள் கிடைக்க வேண்டுமென்ற எண்ணமிருந்தால் அதிகமான பொருளைச் சேகரம் செய்து கொடுக்கிறோம். அழகிய ஸ்திரீ வேண்டுமென்ற ஆசையிருந்தால் நமது குலத்தில் அழகிற் சிறந்த பெண்களைத் தேர்ந்தெடுக்கிறோம்” என்று அபூஜஹில், ஆஸ்பின்வாயில், வலீத்பின் முஙைரா, அஸ்வத் என்கிற குறைஷிக்கூட்டத்தின் பிரமுகர்கள் நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையாரான அப்பாஸ் அவர்கள் மூலம் பெருமானார் (ஸல்) அவர்களிடம் தூது அனுப்பினார்கள்.

இவ்விஷயத்தை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டதும், ‘இவை ஒன்றுமே எனக்குத் தேவையில்லை. எனது சமூகத்தவராகிய நீங்கள் நாசமடையாமல் நேர்மையான பாதையைக் கடைபிடிக்க வேண்டுமென்பதுதான் எனது விருப்பம்’ என்று பதிலளித்தார்கள்.

குறைஷிகளின் குதர்க்க யோசனை

குறைஷித்தலைவர்கள் மீண்டும் ‘நமக்குள் ஒற்றுமை இருக்க வேண்டுமானால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்க வேண்டும்; ஒரு வருஷம் அவர் நமது தெய்வங்களை வணங்கி வரவேண்டும். மறுவருஷம் நாம் அவருடைய கடவுளை வணங்குவோம். இவ்வாறு செய்து வருவது இருவரும் ஒற்றுமையாக இருப்பதற்கு நல்ல வழி என்று வேறொரு யோசனையைச் சொல்லி மறுபடியும் அண்ணல் (ஸல்) அவர்களிடம் தூது அனுப்பினார்கள். அப்போது அவர்களின் சமரச யோசனைக்கு மறுப்பாக இறைவன், நபிபெருமான் (ஸல்) அவர்களுக்கு கட்டளையிட்டான்.* அந்தக் கட்டளை திருகுர்ஆனின் 109வது அத்தியாயத்தில் வருகின்றது.

(* E.M. அப்துர் ரகுமான், அன்வாருல் குர்ஆன் அல் மஜுஸ்உவின் தமிழ் தப்ஸீர், கூத்தாநல்லூர், 1968, பக். 65.)

ஆண்டவன் கட்டளை

திருமறையின் அந்த வசனம் இதோ.... “நபியே! நீர் சொல்வீராக! நிராகரிப்பவர்களே! நீங்கள் வணங்குகின்றவற்றை

நான் வணங்கமாட்டேன். நான் வணங்குகிற ஒருவனை, நீங்கள் வணங்குகிறவர்கள் அல்லர்! இன்னும் நீங்கள் வணங்குகின்றவற்றை நான் வணங்குபவனல்லன். மேலும் நான் வணங்குகின்ற ஒருவனை நீங்கள் வணங்குகிறவர்கள் அல்லர். உங்களுக்கு உங்களுடைய மார்க்கம், எனக்கு என்னுடைய மார்க்கம்.”

இவ்வாறு மதவிஷயங்களில் நிர்பந்தம் எதுவும் இல்லை, என்பதனை திருகுர்ஆன் தெளிவாகத் தெரிவித்திருக்கிறது.

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்தில் ஏற்பட்ட சரித்திரப் பிரசித்தி பெற்றது ‘சீனாய் சாசனம்’. அதில் பிற மதத்தினரை எவ்வாறு நடத்துவது என்பது குறித்து அண்ணல் (ஸல்) சொல்லியிருக்கும் செய்திகள் என்ன?

சீனாய் சாசனம்

ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு முஹாரம் மாதம் மூன்றாந் தேதி மதீனாவிலுள்ள பள்ளிவாசலில் வைத்து ஹளரத் அலி (ரலி) அவர்கள் எழுதி, அண்ணல் நபி (ஸல்) அவர்களின் முத்திரையிடப்பட்டு, 16 தோழர்கள் (சஹாபாக்கள்) சாட்சிக் கையெழுத்திட்ட உரிமைப் பத்திரம் சீனாய் சாசனம். அது தூர்சீனா (சீனாய்) மலைக்கருகில் உள்ள ஸெய்ன்ட் காதரீன் மடத்தின் கிறிஸ்தவ சன்னியாசிகளுக்கும், பொதுவாகக் கிறிஸ்தவர்களுக்கு அண்ணல் (ஸல்) அளித்த உரிமைப் பத்திரம் ஆகும்.

ரிச்சர்டு போகாக்

மீத் (Meath) பிரதேசப் பாதிரியான ரிச்சர்டு போகாக் (Richard Pococke) கி.பி.1743 இல்பிரசுரித்த ‘கீழ் நாட்டினுடையவும் இதர தேசங்களினுடையவும் விவரம்‘ (A Description of the East and other Countries) என்ற நூலிலும், ஜான் டெவன் போர்ட் (Johan Devan Port) என்பவரின் ‘Apology for Mohamed’ எனும் புத்தகத்திலும், சீனாய் சாசனம் குறித்த விவரங்கள் காணப்படுகிறது.

அல்லா மாகிலர்

அல் அஸ்ஹர் சர்வ கலாசாலை ஆசிரியர் அல்லா மாகிலரின் ‘மஹாலிரத்துல் இஸ்லாமி’ என்ற நூலிலும் செய்யத் அமீர் அலியின் ‘Sprit of Islam’ எனும் கிரந்தத்திலும் சீனாய் சாசனம் குறித்து விவரிக்கப் பட்டிருக்கிறது.

‘பரம காருண்ணியனும், ஏகதயாபரனுமாகிய ஆண்ட வனுடைய திருநாமத்தை முன்னிட்டு சீனாய் மலையின் கிறிஸ்தவ

சந்நியாசிகளுக்கும், பொதுவாகக் கிறிஸ்தவர்களுக்கும் அல்லாஹ்வின் தூதராகிய முஹம்மது (ஸல்) அளிக்கும் சாஸனப் பத்திரமாவது' என்று துவங்கும் அந்த சாசன விவரம் முழுமையும் இங்கு அவசியமில்லை என்றாலும் அதிலிருந்து ஒருசில பகுதி இதோ.

பிறமதத்தவருக்குப் பாதுகாப்பு

'கிறிஸ்தவ சந்நியாசிகளில் யாராவது அவர்களுடைய யாத்திரைகளிடையில் ஏதாவதொரு மலை, குன்று, கிராமம் அல்லது மனிதர்கள் குடியிருக்கக் கூடிய வேறு ஏதாவது ஸ்தலத்திலாவது, கடலிலாவது பாலைவனத்திலாவது ஏதாவதொரு மடம், கோயில் வணக்கஸ்தலத்திலாவது தங்கும்படி நேரிட்டால் அவர்களுடையவும் அவர்களின் சொத்துக்களினுடையவும் பாதுகாவலனாகவும், இரட்சகனாகவும் எனது உயிர், ஒத்தசை பாதுகாப்புடனும் என் ஜனங்கள் எல்லாருடனும் நான் அவர்கள் மத்தியில் இருப்பேன்! ஏனெனில் அவர்கள் என் சொந்த ஜனங்களின் ஒரு பகுதியினராயிருக்கின்றனர். அவர்களால் எனக்குக் கண்ணியம் ஏற்படுகிறது....அவர்களுடைய கோயில்களை அவர்களிடமிருந்து பறித்துக் கொள்ள யாருக்கும் உரிமை இல்லை.....'

அயலாரிடம் அண்ணலார் காட்டிய அன்பு

கிறிஸ்தவர்களும், யூதர்களும், ஸொராஸ்திரியர்களும் நபிபெருமானரின் செய்தியை ஏற்க மறுத்துவிட்டாலுங் கூட அவர்களுடைய அரசர்கள் நபிபெருமானாரின் தூதர்களை மிக இழிவான முறையில் நடத்தியிருந்துங் கூட அம்மக்கள் ஒரு சமயத்தைப் பின்பற்றுவோர் என்ற முறையில் அவர்களிடம், நபிபெருமானார் (ஸல்) அன்பு காட்டியே வந்தார்கள் என்பதற்கு அத்தாட்சியாக சீனாய் மலைப் பாதிரியார்களுக்கு அளிக்கப்பட்ட சாஸனம்* திகழ்கிறது.

(* முஹம்மது மார்மடியூக் பிக்தால், இஸ்லாமியக் கலைப் பண்பு, மொழியாக்கம், ஆர்.பி.எம். கனி, கூத்தாநல்லூர், 1952, பக்.128.)

ஸி.ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார்

".....உங்களுடைய உயிரும் பொருளும் மதாசாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் அங்கிருப்பவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் ஒரே விதமாய் காப்பாற்றப்படும். உங்களுடைய கடமைகளையும், உரிமைகளையும்

மாற்றுவதில்லை. மதம் சம்பந்தமான அதிகாரிகளை மாற்றுவதில்லை. ஆலயங்களை அழிப்பதில்லை....இவ்வாறு மகமத்நபி கிறிஸ்துவர்களுக்குக் கொடுத்த ஓர் சாஸனம் அவருடைய உத்தம குணங்களை இன்னும் நன்றாய் வெளிப்படுத்துகிறது?”*

(* ஏ.என்.முஹம்மத் யூசுப் பாஜில் பாகவி, இஸ்லாத்தில் திருநபி, கூத்தாநல்லூர், 1933, பக்.34.)

ஒரு சமயம் நஜ்ரான் தேசத்திலிருந்து கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமையன்று அண்ணல் நபி (ஸல்) அவர்களைக் காண வந்திருந்தனர். கிருஸ்துவமத முறைபிரகாரம் அன்று அந்த கிறிஸ்தவர்கள் இறைவனை வணங்கிட தங்களுடைய பள்ளிவாசலிலேயே இடம் வழங்கி அனுமதிஅளித்தவர் அண்ணல் நபி (ஸல்) அவர்கள். *

(* ஸி.ஆர். ஸ்ரீநிவாச அய்யங்கார், மஹமத்நபி, சுதேசமித்திரன் லிமிடெட், சென்னை, 1926, பக்.17,18.)

பிற மதத்தினரையும், அவர்களது மரபுகளையும் அண்ணல் நபி (ஸல்) மதித்துப் போற்றிய சம்பவங்களைச் சொல்லிக் கொண்டே செல்லலாம்.

திருகுர்ஆன், மத விஷயங்களில் நிர்ப்பந்தம்இல்லை என்று தெளிவாகத் தெரிந்துள்ளது. அண்ணல் நபி (ஸல்) அவர்களும் அதே வழிமுறையினை, நெறிகளைக் கடைப்பிடித்தார்கள். அதனைப் பின்பறறியே ஔரங்கஜேப் ஆட்சி புரிந்தார் என்று கூறுகிறார்கள். பின் எவ்வாறு பிற மதத்தினருக்கு ஔரங்கஜேப் கொடுமைகளை இழைத்திருக்க முடியும்?

‘ஔரங்கஜேப் ஹிந்துக்களை இம்சை செய்தார், பிற மதத்தினரைத் துன்புறுத்தினார்’ என்பன போன்ற குற்றச்சாட்டுக்களை ஔரங்கஜேப் மீது சுமத்தி வருகிறார்கள். ஆனால் இந்தக் குற்றச்சாட்டுகளுக்குள் மறைந்துள்ள உண்மைகளை உலகறிய வேண்டாமா? விரிவாகவே இதுகுறித்து ஆராய்வோம். இதோ வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்.

“ஔரங்கஜேப் சக்கரவர்த்தியின் குணத்தை அதிக குரூரமாயும், கேவலமாகவும் அயல்நாடடுச் சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் வரைந்திருக்கின்றனர். அவர்கள்தம் சுயநலங்கருதியே நடுநிலையை மறந்து அவ்வாறு வரைந்துள்ளனர். இவர்களைப் பற்றி நம்தேச சரித்திரம் வரைவோர், சர்க்கார் முதலியோருடைய கூற்றுக்களை

நோக்கின் உண்மை நன்கு புலப்படும்” என்ற வரிகளுக்கேற்ப ஔரங்கஜேப் குறித்த செய்திகளை உற்று நோக்குவோம்.

திருமறையை மனனஞ் செய்தவர்

“அரண்மனைக்கே உரிய ஆடம்பரம் - அதிகாரம் - செருக்கு - உல்லாச சல்லாபம் முதலிய எல்லாவற்றையும் உதறித் தள்ளியவர். இளமையிலிருந்தே ஒவ்வொருவரும் ஒவ்வொரு செயலுக்கும் எல்லாம்வல்ல அல்லாஹ்விடம் மறுமையில் விடை இறுத்தாக வேண்டும்” என்ற உள்ளுணர்வோடு வளர்ந்த நல்லவர் ஔரங்கஜேப்.

பதினைந்தாம் வயதிற்குள் இறைவனின் இறுதித் திருமறையாம் புனித திருக்குர்ஆனின் 6666 திருவசனங்களையும் மனப்பாடம் செய்து, அவற்றின் விளக்கங்களேயான அண்ணல் பெருமானார் (ஸல்) அவர்களின் திருவாய் மலர்ந்தருளிய மறைமொழிகளைக் (ஹதீஸ்) கற்று கல்வியிலும் சிறந்து வளர்ந்த செம்மல் ஔரங்கஜேப்.

“தமிழகத்துத் தரங்கம்பாடி - நாகப்பட்டினத்திலிருந்து, வட காஷ்மீரம் வரையிலும், மேற்கே ஆப்கானிஸ்தானிலிருந்து கிழக்கே வங்காளம் வரையிலும் விரிந்து பரந்த பேரரசை - இந்தியாவின் எந்த சக்கரவர்த்தியும் ஆட்சி செய்திராத ஒரு பெரும் பேரரசை ஆட்சி செய்த மாமன்னர் ஔரங்கஜேப்”*

(* ஏம்பல் தஜமுல்முஹம்மது, வீரம்செறிந்த இஸ்லாம், புதுக்கோட்டை, 1990, பக். 311-312.)

இந்து இளவரசியை மணந்த அக்பர்

முகலாயப் பேரரசர் அக்பர் ஆஜ்மீருக்குச் சென்று திரும்புகையில் சாம்பர் (sambar) என்ற ஊரில் ஆம்பர் (Ambar) மன்னர் ராஜா பார்மலின் (Raja Bharmal) மகளை இந்து மரபுப்படி திருமணம் செய்தார். அக்பரின் முகலாய வழியும், இராசபுத்திர வழியும் இத்திருமணத்தால் ஒன்று சேர்ந்தது.

ஷா பாய் (Shah Bai) என்று ஜெய்ப்பூர் ஆவணங்களில் அழைக்கப்படும் இராஜபுத்திர இளவரசியை, அக்பர் திருமணம் செய்துகொண்டதற்குப்பின் மரியம்-உஸ்-ஸமானி (Mariam-uz-zamani) என்று அழைக்கப்பட்டார்.

இந்து இளவரசிக்குப் பிறந்த ஜஹாங்கீர்

முகலாயப் பேரரசர் அக்பரின் வாரிசான ஜஹாங்கீர் இராஜபுத்திர ராணி ஷாபாய் என்ற மரியம் உஸ் ஸமானிக்குப் பிறந்தவர். ஓர் இந்துப் பெண்ணுக்குப் பிறந்த பிள்ளை

யென்பதால் முகலாயப் பேரரசின் ஜஹாங்கீர் அரசுரிமையை இழக்கவில்லை. அக்பருக்குப் பின் ஜஹாங்கீரே அரசப் பொறுப்பிற்கு வந்தார்.

இராஜபுத்திர இளவரசிக்குப் பிறந்த ஷாஜகான்

முகாயப் பேரரசர் ஜஹாங்கீர், மார்வாடா மன்னர் ராஜா உதயசிங்கின் மகளைத் திருமணம் செய்தார். அந்த இராஜபுத்திர இளவரசி ஜகத்கஸாயினி என்பவரின் வயிற்றில் பிறந்தவர்தான் முகலாயப் பேரரசர் ஷாஜகான்.

இந்திய ரத்தம்

ஷாஜகானின் தந்தையார் ஜஹாங்கீர், அக்பருக்கும் இராஜபுதன இளவரசிக்கும் பிறந்தவர். ஜஹாங்கீருக்கும், இராஜபுதன இளவரசிக்கும் பிறந்தவர் ஷாஜகான். ஷாஜகானின் உடலில் ஓடிய ரத்தத்தில், முகலாய ரத்தத்தைவிட இந்திய ரத்தமே அதிகமாக இருந்தது என்பார் வரலாற்றாசிரியர் லேன் பூல்.

‘Like his father, Shah-Jahan was the offspring of a union with a Rajput princess, a daughter of proud Raja of Marwar, and had more indian than mughal blood in in his veins”*

(*Stanly Lane-Poole, Aurangzib, New Delhi, P. 14.)

ஹிந்து ராணியின் பேரன் ஔரங்கஜேப்

இத்தகைய ஷாஜகானுக்கு மகனாகப் பிறந்த மஹா சக்கரவர்த்தியாகிய ஔரங்கஜேப் ஒரு ஹிந்து ராணியின் பேரனாயிருந்தும், மதத்துவேஷிகள் அவரையும சும்மா விடவில்லை. அபாண்டப் பழிகளை அவர்மீது அடுக்கிக் கொண்டே செல்கிறார்கள் என்பதனை அறிகிறபோது வேதனையான விசித்திரமாகத்தான் இருக்கிறது. அது மட்டுமா?

நவாப் பாயின் கணவர் ஔரங்கஜேப்

ஔரங்கஜேப்பிற்குப்பின் முகலாயப் பேரரசின் அரியணை ஏறிய பகதூர்ஷாவின் தாயார் நவாப்பாய் (Nawab Bai) காஷ்மீர் இந்து அரசரின் மகள் (She was the daughter of Raja of the Rajauri State in Kashmir). இராஜபுதன வழியில் வந்த நவாப் பாயின் (ரஹ்மத்துன்னிஷா) கணவர் யார் தெரியுமா? மாமன்னர் ஔரங்கஜேப் தான்!

ஐம்பது வயதைத் தாண்டிய நிலையில்...

ஹிந்து ராஜபுத்திர ராணி வர்ஷாபாய், ஜகத் கஸாயினி

ஆகியோரின் வழியில் கி.பி. 1618-ல் தோன்றியவர் ஔரங்கஜேப். அவரது வாழ்வில், நவாப் பாய், உதயபூரிமஹல் என்ற இந்துப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டவர் ஔரங்கஜேப். அவர் ஹிந்துக்களுக்கெதிரான தமது நோக்க முறையைத் (?) துவக்கியதாக சொல்லப்படுகிற கி.பி. 1669 ஆம்ஆண்டின் போது அவருக்கு வயது ஐம்பதைத் தாண்டிவிட்டது. *

(* H.L.O. காரெட், ஸீதாராம் ஹோலீ, இந்து தேச சரித்திரம், சென்னை, 1942, பக். 170.)

தனது ஐம்பதாவது வயதிற்கு மேல் ஔரங்கஜேப் ஹிந்துக்களை ஹிம்சித்தவரா? மாற்ற மதத்தினரை துன்புறுத்தியவரா? அல்லது தனது ஆட்சிக்காலத்தில் பிற மதத்தினரின் வழிபாட்டுத் தலங்களுக்கும், இந்துக்களின் கோயில்களுக்கும் நிலக்கொடைகள், உதவித் தொகைகளை, மான்யங்களை வழங்கியவரா?

பாண்டே தரும் புதிய தகவல்கள்

ஒரிசா மாநிலத்தின் கவர்னராயிருந்த மேதகு பி.என். பாண்டே கி.பி. 1947 முதல் 58 வரை அலகாபாத் நகராட்சித் தலைவராக இருந்தார். அப்போது கோவிலுக்கு அர்ப்பணிக்கப்பட்ட நிலம் தொடர்பான வழக்கு ஒன்று அவரிடம் வந்தது. அவ்வழக்கில் ஒருவர் தன் குடும்பத்திலிருந்த கோவில் நிலம் சம்பந்தப்பட்ட தஸதாவேஜுக்களைக் கொண்டு வந்து அவரிடம் அளித்தபோது, அந்த ஆவணங்கள் ஔரங்கஜேப்பால் அளிக்கப்பட்டவை என்பதனை அப்போது அறிந்தார்.

இந்துக் கோயில்களில் பூஜை செய்வதற்காக மான்யத்தை ஔரங்கஜேப் எழுதிவைத்தார் என்பதனை அவரால் அப்போது நம்பவே முடியவில்லை. எனவே, இந்த ஆவணம் உண்மையானதுதானா? என்பதனை பரிசோதித்தார். டாக்டர் தேஜ்பகதூர் சப்ரு (Dr. Sir Tej Bahadur sapru) என்ற சிறந்த பாரசீக அராபியக் கல்விமானிடம் பேரப்பிராயத்தைப் பெற்ற பின் அந்த ஆவணங்கள் உண்மையானவைதான் என்பதனையும் உணர்ந்தார். அத்தோடு மாரணாசி ஜங்கம்பதி சிவன் கோவில் வழக்கு தொடர்பான கோப்புகளையும் வரவழைத்தார். அந்தக் கோவிலுக்கும் ஔரங்கஜேப் நிலமான்யம் அளித்ததற்கான சாசனங்கள் அக்கோவிலின் மடாதிபதியிடம் இருந்ததையும் அறிந்து கொண்டார்.

உடனே இந்தியாவிலுள்ள பல்வேறு கோவில்களுக்கு கடிதம் எழுதினார். ‘ஔரங்கஜேப் கோவில்களுக்கு மான்யம்

தந்திருக்கிறாரா? அதற்கான சாசனங்கள் இருக்கின்றனவா?' என்ற அவர் எழுதிய கடிதத்திற்கு ஆச்சரியமான தகவல்கள் பதிலாக வந்தன.

கோவில்களுக்கு ஔரங்கஜேப் கொடுத்த மானியங்கள்

உஜ்ஜயினியின் உன்னதமான பாலாஜி ஆலயம், கவுகத்தியிலுள்ள உமானந்த் கோவில், சத்ருஞ்சயின் ஜைனர்கள் கோவில், மற்றும் குரத்வாரக்களுக்கும் ஔரங்கஜேப் அளித்த மான்யங்களை உறுதி செய்யும் சாசனங்களின் நகல்களைத் திரட்டினார். கி.பி. 1659-ல் இருந்து கி.பி. 1688-க்குள் வழங்கப்பட்டிருந்த இந்த சாசனங்களின்படி ஔரங்கஜேப் பிற மத வழிபாட்டுத் தலங்களுக்கு வழங்கிய கொடைகள், மான்யங்களின் பட்டியல் இதோ :

பனாரஸ் ஃபார்மன்

ஔரங்கஜேப்பை ஹிந்து விரோத ஆட்சி நடத்தியவர் என்று குற்றஞ்சுமத்துபவர்கள், அதற்காக பனாரஸ் ஃபார்மனை சான்றாகக் காட்டுவார்கள்.

வாரணாசியில் மொகல்ல கௌரியில் (Mohalla Gauri) வசித்த ஒரு பிராமணர் குடும்பத்தைச் சேர்ந்தது பனாரஸ் ஃபார்மன் (Banaras Farmn) என்ற சாசனம் ஆகும். இதனை கி.பி.1905-ல் மங்கள் பாண்டே (Mangal Fandey) என்பவர் நகர மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் தாக்கல் செய்தார். கி.பி. 1911-ல் வங்காளத்தின் ஏஷியாடிக் சொசைட்டி (Asiatic Society) ஏட்டில் வெளிவந்தது. அது பல்வேறு மேதைகளின் கவனத்தைக் கவர்ந்தது. அந்த ஆணையின் உள்ளர்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல் ஔரங்கஜேப், இந்துக் கோவில்களைக் கட்ட தடைவிதித்தார் என்று குற்றஞ்சாட்டிட ஆரம்பித்து தொடர்ந்து, இன்றும் குற்றஞ்சுமத்தியும் வருகிறார்கள்.

கி.பி.1659-ல் இந்துக் கோவில் ஒன்றின் பாதுகாவலராக விளங்கிய பிராமணர் ஒருவரைச் சிலர் கொடுமைப்படுத்தியதால் அவர் கொடுத்த புகாரைத் தொடர்ந்து ஔரங்கஜேப் பிறப்பித்த ஆணையான அந்தச்சாசனத்தில் சொல்லப் பட்டிருப்பது என்ன?

புராதனக் கோவில்களைப் பாதுகாப்பீர்!

உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்ற பாகுபாடு இன்றி எல்லா மட்டத்திலும் உள்ள மக்களின் நலன்களை மேம்படுத்த நாம் சலிக்காமல் மேற்கொண்டு வரும் முயற்சிகள், மிகுந்த அன்போடும், பரிவோடும் செயல்படுத்தப்பட வேண்டும். நமது புனிதமான சட்டத்தின்படி, புராதனக் கோவில்கள்

எதையும்அழிக்கக்கூடாது. ஆனால், புதிய கோவில்கள் எதையும் கட்டக்கூடாது.

In accordance with our holylaw, we have decided that the ancient temples shall not be destroyed, but new ones shall not be built.

பிற மதத்தவரின் பிரார்த்தனைக்கு அனுமதி

“நமது பரிபாலனத்தின் கீழுள்ள இந்த நாளில் பனாரஸிலும் அதன் சுற்றப் புறங்களிலுள்ள இந்துக் குடிமக்கள். சிலரால் கொடுமைப்படுத்தப் படுவதாகவும், புராதனமான இந்துக் கோவில்களின் பொறுப்பிலுள்ள பிராமணர்கள் அங்கிருந்து வெளியேறும்படி அச்சுறுத்தப்பட்டு மிரட்டலுக்கு ஆளாகி, அதனால் அந்த வகுப்பினர் மன வேதனைக்கு ஆளாகி இருப்பதாகவும் நமது மேன்மைக்குரிய புனித அரசவைக்கு தகவல் வந்துள்ளது. எனவே இந்த அரசு ஆணை பிறப்பிக்கப்படுகிறது. பிராமணர்களை, சட்ட விரோதமாகத் தலையிட்டுத் தொல்லைக்குட்படுத்தக் கூடாது. அவர்கள் தங்கள் தொழிலைத் தொடர்ந்து செய்து வரவும், இறைவன் அளித்த வரமான இந்த சாம்ராஜ்யம் நிலைக்கும் வகையில் அவர்கள் சமாதானம் நிறைந்த மனதுடன் பிரார்த்தனைகள் நடத்தவும் முன்புபோலவே அனுமதிக்கப்படவேண்டும். இந்த ஆணையை அவசரமானதாக மேற்க்கொண்டு, இது வந்து சேர்ந்ததும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.” இவ்வாறு ஔரங்கஜேப்பின் பனாரஸ்ஃபர்மன் என்ற சாசானத்தில் கூறப்பட்டுள்ளது.*

(* பி.என். பாண்டே, இஸ்லாமும், இந்தியக் கலாச்சாரமும், டாயல் மொழிபெயர்ப்பு, சென்னை, 1987, பக். 61.)

‘இந்த ஆணையில், இந்துக் கோயில்கள் கட்டக் கூடாது என்று புதிதாக ஔரங்கஜேப் ஆணை எதுவும் பிறப்பிக்கவில்லை. ஏற்கனவே நடைமுறையிலிருந்ததை குறிப்பிட்டு, அதன்படி நடக்கக் கூறி இருக்கிறாரே தவிர வேறில்லை. ஏற்கனவே இருந்து வந்த கோவில்களை இடிப்பதற்கு அவர் சம்மதிக்கவில்லை என்பது தெளிவாக உள்ளது. தனது பரிபாலத்தின் கீழ் உள்ள இந்து மதத்தைச் சார்ந்த குடிமக்கள் அமைதியாக வாழ வேண்டும் என்பதில் ஔரங்கஜேப் கவனமாக இருந்தார் என்பதையும் இது எடுத்துக்காட்டுகிறது என்பர் பி.என்.பாண்டே.

ஹிந்து மத குருவிற்கு வழங்கிய பாதுகாப்பு

பனாரசில், கங்கை நதிக்கரையில் தனது மதகுரு பகவத்

கோசைனுக்காக, (Bhagawat Gosain) மகாராஜ திராஜ் ராம்சிங்கின் தந்தை மொஹல்ல மாதவ்ராம் (Mohalla Madhov Ram) ஒரு மாளிகை கட்டியிருந்தார். அங்கு தங்கியிருந்த ஹிந்து மதகுரு பகவத் கோசைனைச் சிலர் துன்புறுத்தியதாக ஔரங்கஜேப்பிற்கு புகார் வந்தது. உடனே அது குறித்து நடவடிக்கை எடுத்து ஔரங்கஜேப் உத்தரவிட்டார்

“இந்த ஆணை வந்து சேர்ந்தபின் தற்போதுள்ள அதிகாரிகளோ, அல்லது எதிர்காலத்தில் பொறுப்பேற்கும் அதிகாரிகளோ பகவத்கோசைன் விஷயத்தில் தலையிடவோ, துன்புறுத்தவோ கூடாது. காலம் காலமாய் நிலைத்திருப்பதற்காக விதிக்கப்பட்ட இந்த ராஜ்யம் துலங்கும் வகையில் பகவத் கோசைன் தனது பிரார்தனைகளைத் தொடர்ந்து நடத்தவும் அனுமதிக்க வேண்டும்.” இது அரச ஆணை, இதை அவசரமான ஒன்றாகக் கருதி செயல்பட வேண்டுமென்றும் கட்டளையிட்டவர் ஔரங்கஜேப்.

மாற்று மதத்தினரின் நிலத்திற்குப் பாதுகாப்பு

பனாரஸில் குடியிருக்கும் நசீர்பேக் என்பவர் தங்களுக்குச் சொந்தமான ஐந்து ஹவேலி நிலத்தை அபகரித்து விட்டார் என்று பனாரஸைச் சேர்ந்த அர்ஜுன்மேல் (Arjunmal) மற்றும் ஜங்கம் (Jangam) பிரிவினர் ஔரங்கஜேப்பிடம் நேரில் புகார் மனுக் கொடுத்தனர். அது குறித்து நடவடிக்கை எடுத்து கி.பி. 1672இல் பிறப்பித்த ஆணையில், இந்தப் புகார்கள் உண்மையென்று நிரூபிக்கப்பட்டால் அந்த நிலத்திற்குள் நுழைய நசீர்பேக்கை அனுமதிக்கப்படக் கூடாது என்றும், எதிர்காலத்தில் நீதி கேட்டு புகார் கொடுத்தவர்கள் மீண்டும் என் முன் வந்து நிற்கக் கூடாது’ என்றும் உத்திரவிட்டவர் ஔரங்கஜேப்.

ஜங்கம் பிரிவினருக்கு வழங்கிய நிலங்கள்

‘நியாயப்பரிபாலனம் ஔரங்கஜேப்புடன் ஒன்றிப் போயிருந்தது. நிஸார் வழங்குவதில் அவர் ஹிந்துக்களிடம் பாரபட்சம் காண்பிக்கவில்லை என்பதற்கு ஜங்கம்களுக்கு அளிக்கப்பட்டுப்பின் திரும்பப் பெறப்பட்ட நிலம், மீண்டும் அவர்களுக்கே அளிக்கப்பட்டது என்பது சான்றாக அமைந்துள்ளது. ஹிஜ்ரி 1071 ரமலான் 5ஆம் நாள் பனாரஸில் உள்ள 178 பிகாஸ் நிலம் ஜங்கம் பிரிவினருக்குத் திரும்பவும் அளிக்கப்படுகிறது. அந்த நிலத்தை அவர்கள் பயன்படுத்திக் கொண்டு, சக்கரவர்த்தியின் சாம்ராஜ்யம் நீடித்திருக்கப் பிரார்த்திக்கட்டும்’ என்று ஔரங்கஜேப் பிறப்பித்த ஆணையை எவராவது மறுத்திட முடியுமா? மறைக்கவும் முடியுமா?

மசூதி அருகே மத குருவிற்கு வழங்கிய நிலம்

பனாரஸில் கங்கை நதிக்கரையில் பெனி மாதேவ் கட்டில் (Benimadho Ghat) 588 திரா (dira) அளவுள்ள இரு வீட்டுமனை நிலங்கள் இருந்தது. ஒரு மனை ராம் ஜீவன் கோசைனின் (Ramjivan Gasain) இல்லத்துக்கு முன்பாக, மத்திய பள்ளிவாசலுக்குப்பின் பகுதியில் உள்ளது. மற்றொரு மனை அதற்கு மேலே உள்ளது. இந்த வீட்டுமனைகளை ராம் ஜீவன் கோசைனுக்கும், அவரது மகனுக்கும் அளித்திட உத்தரவிட்டவர் ஔரங்கஜேப். இதற்கு வரிவிலக்கையும் அளித்தார். அதோடு ஆண்டுதோறும் புதிய ஆணையை தமது அதிகாரிகள் கோரக் கூடாது என்றும் உத்தரவிட்டவர் ஔரங்கஜேப். தனது குடிமக்களின் மத உணர்வுகளை மதிப்பதில் ஔரங்கஜேப் எவ்வளவு கவனத்துடன் இருந்திருக்கிறார் என்பதற்கு, இந்து மத குருவிற்கு ஔரங்கஜேப் அளித்த நிலமான்யம், வரலாற்றில் இன்றும் சான்றாக இருந்து வருகிறது.

கோவில் பூசாரிக்கு வழங்கிய தானம்

அசாமிலுள்ள கௌகாத்தி (Gauhati) நகரில் உமானந்த் கோவில் (Umanand Temple) சர்க்காரா கிராமத்தின் (Sakara) இரண்டரை பிஸ்வா (Biswa) அளவுள்ள முப்பது ரூபாய் வரியாக வருமாளமுள்ள நிலம், முந்தைய மன்னர்களால் மான்யம் அளிக்கப்பட்டிருந்தது. ஔரங்கஜேப் தமது ஆட்சியின் 9வது ஆண்டில் சஃபர் மாதம் 2 ஆம் நாள் பிறப்பித்த ஆணைப்படி, அதனை உறுதி செய்ததுடன், வரி வசூலில் இருபது ரூபாய் விலக்கும் அளித்தார். ‘சுதாமன் குடும்பத்தார் இவைகளை தங்களது பராமரிப்பிற்காகவும் கோவில் பூஜைகளுக்காகவும் பயன்படுத்திக் கொண்டு பேரரசு நீடித்திருக்கப் பிரார்த்திக்கட்டும்’ என்று கோவில் பூசாரி சுதாமனுக்கு ஔரங்கஜேப் வழங்கிய நிலதானத்தை எவராவது மறுத்திட முடியுமா? மறைக்கத்தான் முடியுமா?

ஆலயத்தின் விளக்கிற்கு ஆலம்கீர் அளித்த உதவி

உஜ்ஜய்யினியிலுள்ள சிவ ஆலயத்தில் அணையாமல் எரிந்து கொண்டிருந்த நந்தா விளக்கிற்காக, தினமும் நான்கு சேர் நெய்யை முகலாய அரசாங்கமே வழங்கி வந்திருக்கிறது. உஜ்ஜய்யினி மகா காலேஷ்வரர் கோவிலின் அர்ச்சகராயிருந்த தேவ நாராயணனின் கோரிக்கையின் பேரில் இதற்கான உத்தரவு அப்போது வழங்கப்பட்டிருக்கிறது.

ஹக்கீம் முகமது மெஹ்தி (Hakim Mohammad Mahdi) என்ற

அதிகாரி, கோவிலின் நந்தா விளக்கிற்குத் தினமும் நான்கு சேர் நெய் வழங்க சபுத்ரா (Chabutra) கொத்வாலின் தாசில்தாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

முகலாயப் பேரரசு காலத்தில் ஔரங்கஜேப்பின் ஆட்சியின் போதும் இந்த ஆணை அமுலில் இருந்தது என்பார் பி. என். பாண்டே.

கோவிலைப் பராமரித்திட நிதி வழங்கிய கோமான்

ஔரங்கஜேப் கடும் யுத்தம் ஒன்றில் ஈடுபட்டிருந்தபோது ஷ்ராவாக் (Shrawak) இனத்தைச் சேர்ந்த சகஸ்பாயின் (Sahasbhai) மகனான சாந்திதாஸ் ஜவாஹரி (Shanti das Jawahari) என்பவர் ஔரங்கஜேப்பின் ராணுவத்திற்கு உணவுப் பொருட்களை அளித்து பெரிதும் உதவி புரிந்தார். அதற்காக கி. பி. 1660 மார்ச் 2 இல் ஆமதாபாத் எல்லைகளுக்குட்பட்ட பலிதானா (Palitana) சத்ரஞ்ஜா (Satruaja) என்றழைக்கப்படுகிற குன்றும், அதன் மீதுள்ள கோவிலையும் சாந்திதாஸ் ஜவாஹரிக்கு அளித்திட ஔரங்கஜேப் ஆணை பிறப்பித்தார். அத்தோடு அங்குள்ள கோவிலைப் பாதுகாத்து வருகிறவர்களுக்கே பலிதானாவின் வருவாய் அனைத்தையும் வழங்கிடவும் உத்தரவு பிறப்பித்தவர் ஔரங்கஜேப்.

குமரகுருபரர்

தமிழும் சைவம் தழைக்க வந்த தவமணி குமரகுருபரர் (கி.பி. 1625 - 1688) தம்முடைய கல்வி அறிவாலும், இறைவன் அருளாலும் சிங்கத்தின் மீது ஏறிச்சென்று டில்லி பாதுஷாவிடம் நன்மதிப்பைப் பெற்றார். அம்மன்னரைக் கண்டு பேச இந்தி, சமஸ்கிருதம், உருது முதலிய மொழிகளைக் கற்க, குமரகுருபரர் விரும்பியபடியே காசியில் மடம் அமைக்க முகலாய மன்னர் இடத்தை மானியமாக வழங்கினார்.*

(* என். ராமகிருஷ்ணா, ஆதிகுமரகுருபரரின் அருட்பரம்பரை, மஞ்சரி, 1989, ஜூன், பக். 18.)

குமாரசாமி மடம்

குமரகுருபரர் கங்கையாற்றங்கரையில் குமாரசாமி மடத்தை முதலில் அமைத்தார். அந்த மடத்தில் இந்தியிலும், தமிழிலும், உருதுவிலும் புராணப் பிரசங்கங்களும், சைவ சமயச் சொற்பொழிவுகளும் நிகழ்த்தினார். காசியில் இருந்து சமயச் சொற்பொழிவாற்றிக் கொண்டே, ஆன்மீகப் பணி செய்து கொண்டே குமரகுருபரர் ருத்திராட்சம் விளையும் நேபாளம் சென்றார்.

முகாங்கி மடம்

நோபாள நாட்டில் ‘முகாங்கி மடம்’ என்ற பெயரில் மடத்தை நிறுவி, சமயப் பணி ஆற்றினார். முகாங்கி மடம், காசி மடத்தின் கிளைமடமாக நீண்ட நெடுங்காலமாக இருந்து வந்தது.

நேதார நாதர் திருக்கோயில்

குமரகுருபரர் அரசனிடம் சென்று அருசெயல்கள் செய்து அவ்வரசனால் இடம் தரப்பெற்றுப் பல சைவ மடங்களும் கேதாரநாதர் திருக்கோவிலும் அமைத்தார். *

குமரகுருபர முனிவர் காசியில் தங்கியிருந்த மடத்திற்கு குமாரசாமி மடம் என்று பெயர் வழங்கப்பட்டது. குமாரசாமி மடம் என்னும் பெயருடன் அந்த இடம் இன்றும் இருந்து வருகிறது.

(* குமரகுருபரரின் நீதிநெறி விளக்க நூல், தி.சு-பாலசுந்தரம்பிள்ளை உரை, சென்னை, 1965, பக். 6.)

கோயிலைச் சீர் செய்தல்

அந்த மடத்தில் அமர்ந்து, குமரகுருபர அடிகள் ‘எல்லாவுயிர்க்கும் பசிப்பிணி நீக்கிப் பிற அறங்களும் ஆற்றிச் சிவபெருமானை வணங்கியிதிருந்தார். கங்கைக்கரையிலே திருமடத்திற்கருகிலிருந்த திருக்கேதாரநாதர் கோயிலைச் சீர்செய்தார். அங்கே தென்னாட்டுப் பூசனை நியமங்களை ஏற்படுத்தினார். *

(* கா.சுப்பிரமணிய பிள்ளை, குமரகுர அடிகள் வரலாறும், நுலாராய்ச்சியும், சென்னை, 1932, பக். 10)

பக்தி நூல்களும் இயற்றல்

கலைமகளின் அருளை வேண்டி சகலகலாவல்லி மாலை பாடிய குமரகுருபரர் காசி விசுவநாதர் மீது ‘காசிக் கலம்பகம்’ அருளினார். ‘துண்டி விநாயகர் பதிகம்’ என்ற நுலையும் காசியில் இருந்தபோது குமரகுருபரர் இயற்றினார். அந்த நூல் இப்போது கிடைக்கப்பெறவில்லை.

சிவாலயத்தில் சிறப்பாக பூஜைகள்

காசியில் குமரகுருபரர் சிவபெருமானுக்குக் கோயில் கட்டி நித்திய நைமித்தங்களை நடததினார். இன்னும் அங்கே தமிழ்நாட்டு முறையில் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. *

(* உ.வே. சாமிநாதையர், நல்லுரைக் கோவை, இரண்டாம் பாகம், சென்னை, 1946, பக். 146.)

“மீவுயர் மகிழ்ச்சி பொங்க விருப்பொடு பணிந்தெழுந்து
பாயுயர் செம்பொற் கோவில் பகரருஞ் சிறப்பிற் செய்வார்.
மன்னிய கோயி லாக்கி மறையவர் முதலோர் சூழ
வின்னிய முகினேங்க வெண்ணிய காலந்தோறும்
பன்னிய பூசை யோங்கப் பண்புறச் செய்வித் தேத்தி
நன்னிய மத்து நீங்கள் நாடியங் கமரா நின்றார்”.

‘அழகிய செம் பொன்களால்ஆகிய கோயில் ஒன்றைக்கட்டினார். அங்குச் சிறந்து விளங்கிய ஒப்பற்ற கோவிலைக் கட்டுவித்தும், மேளவாத்தியங்கள் முழங்க காலந்தோறும் தவறாது பண்புடனும், நியமத்துடனும் பூசனைகள் செய்து குமரகுருபரர் அங்கு தங்கியிருந்தார்.’

முப்பதாண்டுகள் பெற்ற மதப்பிரச்சாரப் பணி

குமரகுருபர சுவாமிகள் காசியில் தங்கி நெடுநாள் இந்துஸ்தானி மொழியில் சைவத்தைப் பரப்பினார். தமிழ்நாட்டுப் பாணியில் கேதாரநாதர் கோயில் பூஜைகள் நடத்தி வந்தார். இவ்வாறு முப்பது ஆண்டுகளுக்கு மேலாக அவர் நடத்தி வந்து கி.பி.1688 ஆம்ஆண்டு மே மாதத்தில் சித்தி பெற்றார். *

(*மு. அருணாசலம், குமரகுருபரர், ஸ்ரீ இராமகிருஷ்ணா விஜயம், ஆகஸ்ட், 1989, பக். 12.)

குமரகுருபரருக்கு வழங்கிய தானம்

ஔரங்கஜேப் இந்து ஆலயங்களுக்கும், மடங்களுக்கும், இந்துத் துறவிகளுக்கும் வழங்கிய கொடைகளை-தானங்களைப் பற்றி சொல்லிக் கொண்டிருந்தபோது குமரகுருபரரின் வரலாற்றையும், அவர் காசியில் அமைத்த சிவன் கோயிலையும், குமாரசாமி மடத்தையும் முகாங்கி மடத்தையும், இன்னபிற செய்திகளையும் இங்கு குறிப்பிடுகிறாயே என்ற எண்ணி விடாதீர்கள்.

ஔரங்கஜேப்பின் ஆட்சியில்...

குமரகுருபரருக்கு காசியில் கேதாரமந்திரமும், கேதாரத் துறையும், அறச்சாலை (குமாரசாமி மடம்) முதலியன அமைத்திட உதவிய முகலாய மன்னர் ஔரங்கஜேப்தான்.

ஔரங்கஜேப்பின் பிரதிநிதிதான் உதவினார் என்பாரும் உண்டு.

ஔரங்கஜேப்பின் ஆட்சிக் காலத்தில் இவைகள் நடைபெற்றது என்பார் மார்க்ஸ். *

(* அ. மார்க்ஸ், இஸ்லாமியருக்கு எதிரான கட்டுக்கதைகள், பாண்டிச்சேரி, 1994, பக். 7.)

மறுக்க முடியாத உண்மைகள்

முகலாயச் சக்கரவர்த்தி ஔரங்கஜேப் வழங்கிய தானத்தாலோ, அல்லது அவரது ஆட்சிப்பிரதிநிதி வழங்கின கொடையாலோ, அல்லது அவரது ஆட்சிக் காலத்திலோ, ஹிந்துக்கக்ள கோவில் அமைத்ததும், மடம் அமைத்ததும், மதப்பிரச்சாரம் செய்ததும் வரலாற்றில் மறுக்க முடியாத உண்மையாகும். அதுவும் ஹிந்துக்களை ஹிம்சித்ததாகச் சொல்லப்பட்டு வருகின்ற ஆலம்கீர் ஔரங்கஜேப்பின் ஆட்சிக்காலத்தில், ஹிந்துக்களும், தவஞானிகளும் சிறப்புப் பெற்றதுடன், தங்களின் மதப்பிரச்சாரங்களைத் தொடர்ந்திடவும் அனுமதி அளித்த ஆட்சி ஔரங்கஜேப்பின் ஆட்சி என்பதனை நடுநிலையாளர்களின் நல்ல சிந்தனைக்கு முன்வைக்கிறேன்.

ஞானசந்தர் தரும் சான்றுகள்

“ஹிந்து, ஜெயின் ஆலயங்களுக்கும், பூஜீதர்களுக்கும் ஔரங்கஜேப்பால் மான்யங்கள் வழங்கப்பட்டன. ஹிந்து சாதுக்களுக்கும் அறக்கட்டளைகள் அளிக்கப்பட்டன.” பம்பாயைச் சேர்ந்த (மும்பை) ஞானசந்தர் என்பவரின் கூற்று இது.

தத்தா தரும் தகவல்கள்

K.K. தத்தா என்பவர் ஔரங்கஜேப் இந்துக்களுக்கு, குறிப்பாக அந்தணர்களுக்கு மான்யம் வழங்கியதையும் , அதுகுறித்து பிறப்பித்த அரச ஆணைகளையும் வரிசைப்படுத்தி, புள்ளிவிபரங்களுடன் வெளியிட்டுள்ளார்.

கோபிநாத் ஆலயம் அமைத்திட நிதி

கி.பி. 1699 இல் ஹர்துவாய் மாவட்டத்திலுள்ள கோப்பமாவ் (Gopamau) என்ற இடத்தில் நவ்னீதராய் என்பவர் ஔரங்கஜேப்பிடம் மான்யம்பெற்று, கோபிநாத் ஆலயம் என்னும் கீர்த்தி விருத்த கோயிலை நிர்மானித்தார்; கோவிலுடன் அழகிய தடாகத்தையும் உருவாக்கினார்.

அலெக்ஸாந்தர் ஹாமில்டனின் அசைக்க முடியாத ஆதாரங்கள்

சூரத் நகரில் சில ஆண்டுகள் தங்கி வாழ்ந்தவர் காப்டன் அலெக்ஸாந்தர் ஹாமில்டன்.

*ஔரங்கஜேப்பின் ஆட்சியின் போது பாரசீகர்கள், கிறிஸ்தவர்கள், ஹிந்துக்கள் ஆகிய யாவரும் தங்களது மதக்கடமைகளை ஒழுங்காக ஆற்றிட முடிந்தது" என்று அவர் தமது நூலில் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

ஜுல் பிகார்கான்

ஔரங்கஜேப்பின் முக்கியத் தளபதிகளில் ஒருவராகத் திகழ்ந்தவர் ஜுல்பிகார்கான். (Nawab Zuliqarkhan Nasral Jang. the Commandar-in-Chief) தக்காணப் படையெடுப்பிற்காக தலைமைப் பொறுப்பேற்று, ஜுல்பிகார்கான்அனுப்பி வைக்கப்பட்டார்.

கி.பி. 1690 செப்டம்பரில் செஞ்சிக்கு வந்த இவர் எட்டாண்டு கால மனந்தளராத முற்றுகைக்குப்பின், செஞ்சிக் கோட்டையை கி.பி. 1698 பிப்ரவரி 7இல் கைப்பற்றிக் கொண்டார்.

நசரத் கட்டா (Nasrat Gaddah) என்று செஞ்சியின் பெயர் மாற்றப்பட்டு, செஞ்சிப் பகுதி ஔரங்கஜேப்பின் ஆட்சியின்கீழ் வந்தது.*

(* வலம்புரி அண்ணாமலை, இராஜதேசிங்கின் கதை, சென்னை, 1882, பக். 3.)

சொரூப் சிங்

ஔரங்கஜேப்பின் ஆணைப்படி ஜுலிபிகார்கான் முகலாய தர்பாருக்கு அழைக்கப்பட்டு, 25-4-1699 இல் செஞ்சியிலிருந்து புறப்பட்டார்.

தென்னகத்தில் மொகலாயரின் வெற்றிக்காகப் பெரிதும் உதவிகள் புரிந்த இராஜபுத்திர தளபதியான சொரூப்சிங்கிற்கு (Sarupsingh) (இவர் தேசிங்குராஜனின் தந்தை ஆவார்.) ஔரங்கஜேப்பின் உத்தரவின்படி செஞ்சிக் கோட்டை அளிக்கப்பட்டது. 18-1-1700 இல் செஞ்சியின் அரசப் பொறுப்பை அவர் ஏற்றார். *

(* கோவிந்தசாமி, செஞ்சிக் கோட்டையின் வரலாறு, விழுப்புரம், 1989, பக். 25.)

"அந்த ராஜபுத்ரவீரர் அந்தக் கோட்டையையும் அதனைச் சூழ்ந்துள்ள இடங்களையும் முகமதியரின் அதிகாரத்திற்கு

அடங்கி ஆட்சி செய்து வந்தார். *

(* தே. கிருஷ்ணசரி பாவலர், தேசிங்குராஜன் பக். 13 மற்றும் எம்.கே. வெங்கடாசலம், திருநெல்வேலி, 1956, பக். IV.)

செஞ்சிக் கோட்டைப் பகுதிகளோடு, வழுதாவூர், திண்டிவனம், திருவாமாத்தூர், திருக்கோவிலூர், வேட்டவலம், மஞ்சக்குப்பம், திருப்பாதிரிப்புலியூர் ஆகிய பகுதிகளை சொரூப்சிங் ஆட்சி புரிந்தார்.

தெற்குச் சீமையில் தீன்குல ஆட்சி

திருச்சி, தஞ்சை, மதுரை, வெங்கடகிரி ஜமீன்தார்களிடமிருந்து வரவேண்டிய வரியை, காணிக்கைகளை ஒழுங்காக வசூலித்து காலம் தவறாமல் ஔரங்கஜேப்பின் பிரதிநிதிகள் அனுப்பி வந்தார்கள்.

ஔரங்கஜேப்பின் ஆட்சி தென்பாண்டி நாட்டில் தெற்குச்சீமைவரைப் பரவிநின்றது என்பதற்கு சான்றாக இதோ ஓர் செய்தி :

ஊத்துமலை மறவர் ஒருவரது வரலாறும், விசையாபுரங்கோட்டையை ஔரங்கஜேப் சக்கரவர்த்தியின் படைவீரர்கள் முற்றுகையிட்டதும், தலத்து தெய்வத்தின் பெருமையும் பேசப்படும் நூல் சாத்தூர் நொண்டி நாடகம். இது ஓலைச் சுவடியாக உள்ளது. இயற்றிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை என்று ஓய்வு பெற்ற நகர அளவையாளர் த.அ. அருணாசலம் தெரிவித்துள்ளார்.

தில்பத்ராய் பண்டேலா

முகலாயச் சக்கரவர்த்தி ஔரங்கஜேப்பின் ஆட்சி தென்னகத்தில் நிலவிய போதுள்ள நிலைமை என்ன? ஹிந்துக் கோயில்கள் இருந்தனவா? அல்லது இடித்து அழிக்கப்பட்டனவா?

தக்காணத்தில் ஔரங்கஜேப்பின் கீழ் பணிபுரிந்த ஹிந்து அதிகாரி தில்பத்ராய் பண்டேலா **(Dul Pat Rai Bundela)** தென்னகத்தில் அப்போதுள்ள நிலைமைகளைப் பற்றிய குறிப்புகளைத் தனது நாட்குறிப்பில் **(D i a r y)** எழுதிவைத்துள்ளார்.

இதோ அவர் தெரிவித்திருக்கும் செய்தி....

‘முகலாயத் தளபதி ஜுல்பிகார்கான் திருச்சிக்கு வந்தபோது, அவருக்கு அந்தக் பகுதியின் பொறுப்பிலிருந்து ஆட்சியாளர்

(பாளையக்காரர்) ஒரு குறிப்பிடத்தக்க காணிக்கையை அனுப்பி வைத்தார். காவிரிக்கரையில் இங்குள்ள அரசர்களால் கட்டப்பட்ட புகழ்வாய்ந்த ஹிந்துக் கோயில் இருக்கிறது.

“Came to trichinopoly, the zemindar sent a considerable offering. Here is a famous of the caveree”.

தல்பத்ராய் பண்டேலா அவரது டைரியில் தெரிவித்திருக்கும் இன்னொருசெய்தி இதோ :

‘இந்துக்களின் முக்கியமான ஏழுவழிபாட்டுத் தலங்களில் செஞ்சியும் ஒன்று.’

‘The last is one of the seven chief worshipping places of Hindus.’

கோவில் இல்லாத கிராமம் இல்லை

பிஜப்பூரிலுள்ள அரண்மனைக்கு அளவில் குறைவில்லாமல் நீண்ட சுவர்களைக் கொண்ட ஷியோ செஞ்சி, பிஜான் செஞ்சி என்ற இரண்டு கோயில்கள் இருக்கின்றன. இந்த நகருக்குள் பல கோயில்களும், நகருக்கு வெளியிலும் பலவிதமான கோயில்களும் இருக்கின்றன. பிஜான் செஞ்சிக் கோயில் புகழ்வாய்ந்தது; செழிப்பு மிக்கதாகவும் இருந்தது. அங்கே வரும் யாத்ரீகர்கள் கோவில்களில் வழிபடுவதற்கு சுங்கவரி செலுத்தினார்கள். இதன்மூலம் ஆண்டுதோறும் இங்கு மிகப் பெரிய தொகை வசூலானது. அதோனிக் கோட்டையிலிருந்து கர்னூல், கிஞ்சி, செஞ்சி மற்றும் கடற்கரை ஓரமுள்ள பகுதிகளிலெல்லாம் ராமருக்கோ, லெட்சுமணனுக்கோ கோயில் இல்லாத ஒரு கிராமமும் இருக்கவில்லை.

“There are two temples, seo Ginjee and Bishan Giinjee the walls of which are not less extensive than the citadal of Bijapur. Within the town are many splendid temples and withoutt, round about it a great veriety. Bishan Ginjee was populars and flourishing, being resorted to by numerous pilgrims who paid a toll for permission to perform their devotion at the temples; So that a great sum is annually collected. from near the fort of Adonce to Kernole, Kinjee, Ginjee and hence to the seacost, there is not a village without a temple either to Lachman or the God of Ram.”

சிங்கவரம் அரங்கநாதர் ஆலயம்

ஔரங்கஜேப்பின் ஆட்சிக்காலத்தில் செஞ்சிப் பகுதியில் ராஜா தேசிங்கின்தந்தை சொரூப்சிங் வழிபட்ட, பின்னர் ராஜாதேசிங்கு சேவித்த சிங்கவரம் அரங்கநாதர் ஆலயம்

இன்றும் இருந்து வருகிறது. இந்த ஆலயத்தில் செஞ்சிக்கோட்டைக்குச் செல்லும் சுரங்க வழி ஒன்றும் இருக்கிறது. வெளியில் வைணவ ஆசாரியர்களின் விக்கிரகங்கள் பாசி பிடித்துக் கிடப்பதையும் இன்றும் பார்க்கலாம்.

ஹிந்துக்களின் கோயில்களை எல்லாம் அழித்து ஒழித்திட ஔரங்கஜேப் தனது ஆட்சிக்காலத்தில் முயன்றிருந்தால் இந்தக் கோயில்கள் இன்றும் நிலைத்து நின்றிருக்க முடியுமா?

தில்பத்ராய் பண்டேலா என்ற ஔரங்கஜேப் காலத்திய தக்காண ஹிந்து அதிகாரியின் நாட்குறிப்பில், இந்தப் பகுதியில் இருந்த ஹிந்துக் கோயில்களின் விவரங்களையும், அங்கே தினமும் வழிபாடுகள் நடைபெற்று வந்ததையும் தெரிவித்திருக்கிறாரே? இந்த வரலாற்றுச் சான்றுகளை ஒதுக்கித் தள்ளிவிட முடியுமா? ஔரங்கஜேப்பின் ஆட்சியில், அவரது பிரதிநிதி ஜுல்பிகார்கான் ஆட்சிப் பொறுப்பில், செஞ்சிப் பகுதியில், தெற்குச்சீமையில் ஹிந்துக்களின் ஆலயங்களில் வழிபாடுகள் நடைபெற்றதை மறுத்திட முடியுமா?

சூசன்ராய்

குல்அஸ்அத்-உத்-தவாரிக் (Khulasal ut-Tawarikh) என்ற நூலை கி.பி. 1695-க்கும் 1699-க்கும் இடைப்பட்ட காலத்தில் பாட்லா (Batala) வைச் சேர்ந்த சூசன்ராய் (sujan Rai) காலங்காலமாக ஹிந்துக்களின் வழிபாட்டுத் தலமாக இந்தக் கோயில் இருந்து வருகிறது என்று தனது நூலில் 14-வது பக்கத்தில் இந்த விவரத்தைத் தெரிவித்துள்ளார்.

குல்அஸ்அத்-உத்-தவாரிக் என்ற தமது நூலில் 16வது பகக்த்தில் அவர் தெரிவித்துள்ள இன்னொரு செய்தி இதோ:

சம்பல் ஹர்மந்திர்

தலைநகரிலிருந்து 40 கல் தூரத்தில், கிழக்கில் சம்பல் (Sambal) என்ற புராதன நகரம் இருக்கிறது. அங்கே ஹர்மந்திர் (Har Mandir) என்ற புராதன வழிபாட்டு ஸ்தலம் அமைந்துள்ளது. அதன் அருகில் நானக்மத் (Nanak Math) என்ற அழைக்கப்படும் இடத்தில் சீக்கிய மதத்தலைவர் குருநானக்கினைப் பின்பற்றுபவர்கள் கூடியிருந்து ஸ்தோத்திரமும், வணக்கமும் செய்து வருகிறார்கள்.

குல்அஸ்அத்-உத்-தவாரிக் நூலாசிரியர் சூசன்ராய் தனது நூலில் 65வது பக்கத்தில் சொல்லியுள்ள மற்றொரு செய்தி இதோ:

மகாதேவ் ஆலயம்

மூல் என்ற நகரத்தில் (Mul) அதாவது குஜராத்தின் மங்களூர், நவீன மொதப்பூரில் (Modern Modhopur in Manglor, gujarat) மகாதேவருக்கு (Mahadeo) கோயில் ஒன்று உள்ளது. அதற்கு அருகேதான் துவாரகையும் உள்ளது. அங்கேயும் பிரசித்தி பெற்ற இந்து ஆலயம் இருக்கிறது.

துர்க்கை கோயில்

சூசன்ராய் தனது நூலில் 91வது பக்கத்தில், 'தட்டா' விலிருந்து Thatta 70 கல் தொலைவில் நிக்லஜ் (Niklaj) என்ற இடத்தில் துர்க்கை ஆலயம் உள்ளது; பட்டாலா(Batala) விலிருந்து இரண்டு கல்தொலைவில் அச்சால் (Achal) என்ற இடத்தில் ஷியாம் கார்த்திக் (syam Kartik) ஆலயம் இருக்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இநத ஆலயங்கள் எல்லாம், ஔரங்கஜேப்பின் ஆட்சிக் காலத்தில் வழிபாடுகள் நடைபெற்று, மக்கள் கூட்டங்கூட்டமாய் சென்று வந்த ஸ்தலங்கள் என்பதனை யாரும் மறுத்திட முடியுமா?

சீத்தாபூர் பெரிய கோவில்

"சீத்தாப்பூர் என்ற ஊரில் ஒரு பெரிய கோவிலுக்கு ஔரங்கஜேப் ஓர் சாசனம் எழுதிக் கொடுத்துள்ளார். அதன் பிரகாரம் ஏகப்பட்ட நிலங்கள் அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவைகளிலிருந்து வரும் வருமானம் கோயில்களின் மதக்கிரியைகளுக்காகச் செலவிடப்படுகிறது. மேலம் மதுராவ் என்னும் ஊரிலுள்ள பல்தேவ் என்ற புனித ஸ்தலத்துக்கு பல பூமிகளையும் கோயிலின் செலவுக்காக கொடுத்திருக்கிறர் ஔரங்கஜேப். அப்பூமிகள் இன்று வரைக்கும் அக்கோயில்களுக்கு சொந்தமாக இருந்து வருகின்றது".* ஔரங்கஜேப் ஹிந்துக்கோயில்களுக்குத் தானங்கள் வழங்கிய இத்தகைய செய்திகளை எவரும் மறுத்திட முடியுமா? மறைத்திடத்தான் இயலுமா?

(* மேலப்பாளையம், S.A. மீரான், ஹிந்துக் கோயில்களுக்கு மான்யமளித்த ஔரங்கஜேப் வகுப்பு வெறியரசர் கட்டுரை, ஷாஜகான், மாதமிருமுறை இதழ், திருச்சி, 1-4-1952, பக். 11)

கிறிஸ்தவ ஆலயங்களுக்கு வழங்கிய வரிச் சலுகைகள்

முகலாயப் பேரரசர் ஜஹாங்கீர் ஆட்சியின் போது லாகூரில் கி.பி. 1613இல் ஜெசூட் பாதிரியார்கள் (Jesuit Fathers) தேவாலயம் அமைத்தனர்.

லாகூரில் மோசங் என்ற இடத்தில் (Mozang) ஜோசப்லா காஸ்ட்ரோ பாதிரியாரால் (Father Josephla Castro) என்பவரின் 12 பிகா (bighas) நிலத்திற்கு அரசாங்கத்தின் வரிகளிலிருந்து விலக்கும் அளிக்கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து ஔரங்கஜேப்பின் 14வது ஆட்சி ஆண்டில் (கி.பி. 1672) பைதாகான் (Fidakhan) என்ற முகலாய அதிகாரியின் முத்திரையிடப்பட்ட ஆணையின்படி கிறிஸ்தவப் பாதிரியார்களுக்கு எல்லா வரிகளிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டது. *

(*Journal of Punjab Historical Society P. 20 see Plate 4 and 6.)

ஔரங்கஜேப்பின் 37-வது ஆட்சி ஆண்டில் ஆக்ராவிலுள்ள கிறிஸ்தவப் பாதிரியார்களுக்கு வரிவிலக்குகள் அளிக்கப்பட்டு ஆஜாத்கான் (Ashdkhan) என்பவரது முத்திரையுடன் அரச ஆணையும் பிறப்பிக்கப்பட்டது.

ஜைனருக்கு வழங்கிய சலுகைகள்

சேட் ஆனந்ஜி கல்யாண்ஜி (Seth Anandji Kalianji) யின் பிரதிநிதிகளின் சத்ருஜ்சயா மலையின் (Shaturnjaya) பிவீறீறீ) உரிமை குறித்த மனுவிற்கு ஷாஜகானின் ஆட்சியில் ஜைனர்களின் (Jain) மத உரிமையைப் பாதுகாத்து ஆணை பிறப்பிக்கப்பட்டது.

குஜராத்தின் சுபா (Subah) வான முராத்பக்ஷின் உத்தரவின்படி, ஜைன நகை வியாபாரி சாந்தீதாஜிற்கு (Shatias) பலீத்தானா என்ற (Palitaa) கிராமம் இனாமாக வழங்கப்பட்டது. இதை ஔரங்கஜேப் தனது ஆட்சியிலும் உறுதி செய்து உத்தரவு பிறப்பித்தார். அத்துடன் சாந்திதாஜை சாம்ராஜ்யத்தின் புராதனப்பணியாளராகக் கருதி அவரையோ அல்லது அந்த இடத்திலுள்ள மக்களையோ தொல்லைப்படுத்தவோ, இடர்பாடுகள் செய்திடவோக்கூடாது' என்றும் ஆணையிட்டுள்ளார்.

எழுகின்ற கேள்விகள்

ஹிந்துக்களுக்கும், இதர மதத்தினர்களுக்கும் அவர்களது வழிபாட்டுத் தலங்களுக்கும் ஔரங்கஜேப் வாரி வாரி வழங்கிய தானங்களையும், சலுகைகளையும் பற்றிச் சொல்லிக் கொண்டு செல்கிறாயே!

அப்படியானால் ஔரங்கஜேப் பிறமதத்தினரை ஹிம்சிக்கவில்லையா? இந்து ஆலயங்களை இடித்துத்

தகர்க்கவில்லையா? பிராமணர்களின் கங்கணத்தை* (கைவளை- மஞ்சள்காப்பு) தினமும் அறுத்திட வில்லையா? கேள்விகள் எழுவது விடை காணத் தானே! இதோ, வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்...

இராஜபுத்திர ராணி ஹாதி, ஜோத்பூரை தனது வாரிசிற்கு உரிமையாக்கினால், அங்குள்ள ஹிந்து ஆலயங்களைத் தகர்த்து விட்டு, பள்ளிவாசல்களை நிர்மானிக்கிறேன் என்று சொன்னபோது அதனை ஏற்றுக் கொள்ளாதவர் ஔரங்கஜேப்...

தனது பாதுகாப்பிலிருந்து மராத்திய சாம்பாஜியின் மகன் சாகுவை கட்டாய மதமாற்றம் எதுவும் செய்திடாதவர் ஔரங்கஜேப்...

சீக்கிய ராம்ராய்சிங்கின் ஆன்மீகப் பணிக்காக கட்டிங்கள் கட்டிக் கொடுத்த உதவியவர் ஔரங்கஜேப்...

பல்வேறு ஹிந்துக் கோயில்களுக்கு மான்யங்களும், கொடைகளும் வழங்கியவர் ஔரங்கஜேப்...

அதுமட்டுமா? சூழ்நிலை காரணமாக, 'தாங்களாகவே மதம் மாறுகிறோம்' என்று பலர் சொல்லிய போதும் அதனை விரும்பாத, ஏற்றுக் கொள்ளாத உயரிய பண்பாளர் ஔரங்கஜேப்....இதோ அதற்கான சான்றுகள்....

ஸ்ரீ ரங்கராயலு

விஜயநகர அரச சாம்ராஜ்யத்தின் கடைசி அரசர் ஸ்ரீ ரங்கராயலு (Sri Ranga Rayal). பிஜப்பூர்காரர்கள் கர்னாடகத்தை வென்று தெற்கிலிருந்து முன்னேறி வருவதையும், கோல்கொண்டா தளபதிகள் வடக்கிலிருந்து முன்னேறி வருவதையும் கண்டு தன்னுடைய ராஜ்யம் தனது கரங்களிலிருந்து நழுவிக் கொண்டிருப்பதை அவர் உணர்ந்தார். எனவே தக்காண சுல்தானிகளிடமிருந்து தனக்குப் பாகாப்பு அளிக்கும்படி வேண்டி ராமராவ் (Rama Rao) என்ற பிரதிநிதியை ஔரங்கஜேப்பிடம் அனுப்பி வைத்தார். ஆனால் இதில் ஔரங்கஜேப் தலையிட விரும்பவில்லை.

தூது வந்த பிராமணர்

ரங்கராயலுவிற்கு போர்நெருக்கடிகள் இன்னும் அதிகமானபோது, ஸ்ரீனிவாஸ் (Srinivas) என்ற பிராமணத்தூதுவரை ஔரங்கஜேப்பிடம் அனுப்பி வைத்தார்.

தான் எந்த நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுவதாகவும், தனக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டி ஔரங்கஜேப்பிடம் தூது

அனுப்பியபோது ரங்கராயலு ஔரங்கஜேப்பிடம் அப்போது சொன்னது என்ன தெரியுமா?

‘இரண்டரைக் கோடி ரூபாயும், 200 யானைகளும், தன்னிடமுள்ள ஆபரணங்களையும் தருவதுடன், வருடாந்திர வரியைத் தொடர்ந்து கட்டிடவும், தனது ராஜ்யத்தை முகலாய சாம்ராஜ்யத்துடன் இணைத்துவிட்டு பின் தனது பகுதியை ஒரு ஜாகீராகத் தனக்குத் திரும்பக் கொடுப்பதற்கும் சம்மதம்’ என்று ஸ்ரீ ரங்கராயலு தெரிவித்தார்.

அதுமட்டுமா? ரங்கராயலு தனது ததுவர் ஸ்ரீனிவாஸ் மூலம் சொல்லி அனுப்பிய முக்கியமான இன்னொரு செய்தி என்ன தெரியுமா?

மதம் மாறச் சம்மதம்

“தானும் தனது உற்றார், உறவினர்களும் குடிமக்களும் முஸ்லிமாக மதம் மாறுவதற்கு சம்மதிப்பதாகவும்” சொல்லி அனுப்பியவர் ஸ்ரீரங்கராயலு.

ஔரங்கஜேப், ஸ்ரீரங்கராயலுவின் இந்தக் கோரிக்கையை ஏற்றக் கொண்டாரா? இல்லை. ஏற்றக்கொள்ளவே இல்லை! இதனை வரலாற்றிலிருந்து எவரும் மறைத்திட முடியுமா?

பேரரசின் போற்றதலுக்குரிய பண்பு

இது குறித்து கருத்துத் தெரிவிக்கிறபோது, “இந்தக் கோரிக்கையின் பெயரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை இந்தியாவில் முகலாயர்கால ஆட்சியின் பண்பைப் பற்றி நல்ல விளக்கத்தைத் தருகிறது” என்கிறார் ஜாதுநாத் சர்க்கார்.

ராஜா இந்திரதயமானாவை கட்டாயமாக மதம் மாற்றிட ஷாஜகான் வற்புறுத்தியபோது அதனை ஏற்றுக் கொள்ளாத ஔரங்கஜேப்பின் செயல் குறித்து இன்னொரு வரலாற்று ஆதாரம் இதோ...

ராஜா இந்திரதயமனா

மால்வாவின்- தம்தேராவின் ஹிந்து அரசர் ராஜா இந்திரதயமனா (Rajah Indradyumna of Dhamdhera) (Malwa). இவர் ஷாஜகானின் ஆட்சியில் சிறையில் இருந்தார். ‘50,000 ரூபாய் தந்து விடுகிறேன் என்னை விடுதலை செய்யுங்கள்’ என்று ஷாஜகானிடம் முதலில் கோரிக்கையை அனுப்பினார். அதற்கு, ராஜா இந்திரதயமனா முஸ்லிமாக மாறினால் அவரை விடுதலை செய்கிறேன் என்று ஷாஜகான் நிபந்தனை விதித்தார். ஆனால் ஔரங்கஜேப், ராஜா இந்திரதயமனாவை முஸ்லிமாக மதம்

மாற்றிட வற்புறுத்த விரும்பவில்லை. தனது தந்தையாரிடம் “அவரை முஸ்லிமாக மதம் மாற வற்புறுத்தாதீர்” என்று ஆணித்தரமாகச் சொன்னவர் ஔரங்கஜேப்.

விஜயநகர கடைசி அரசர் ரங்கராயலும், அவரது உற்றார்-உறவினர்களும் முஸ்லிமாக மதம் மாறுகிறோம் என்றுச் சொன்னபோது அதனை ஏற்றுக் கொள்ளாதவர் ஔரங்கஜேப்.

ராஜா இந்திரதயமானவை முஸ்லிமாக மதம் மாற்றிட வற்புறுத்திய ஷாஜகானிடம், ‘அவ்வாறுசெய்யாதீர்’ என்று தந்தையாரிடம் வலியுறுத்தியவர் ஔரங்கஜேப்.

கங்கணம் அறுக்கப்பட்டதா?

இத்தகைய ஔரங்கஜேப் மீதுதான், அவர் தினமும் பிராமணர்களின் கங்கணத்தை அறுத்தார் என்று இன்றளவும் குற்றஞ்சுமத்தி வருகிறார்கள். இதிலே உண்மை நிலை என்ன?

‘ஒவ்வொரு நாளும் ஒன்றே கால் மணங்கு (மணங்கு - ஓர் நிறை) கங்கணங்களென்னும் ஜினியூவைச் சேகரித்துக் கொள்ளாத வரை ஔரங்கஜேப் சாப்பிடுவதில்லை.’ இதன் உண்மை நிலை என்ன?

இது குறித்து 70 ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த பதிலை அப்படியே தருகிறேன்.

18,250 ஆட்சி நாட்கள்

“ஔரங்கஜேப் சுமார் 50 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். அஃதாவது, 50x365 = 18,250 தினங்களாகின்றன. தினமொன்றுக்கு 1¼ மணங்கு கங்கண் என்பன 5/4 x 40 சேர் x 16 சட்டாங் x 5 தோலா = 4000 தோலாக்களாகின்றன.

ஔரங்கஜேப்பின் 18,250 ஆட்சி தினங்களுக்கும் அவரால் சேகரிக்கப்பட்டவை 73,000,000 தோலா ஜினியூவாகின்றன. இரண்டு ஜினியூ, ஒரு தோலா என்று வைத்துக் கொண்ட போதிலும், ஏழு கோடியே முப்பது லட்சம் தோலாவுக்கும் 14 கோடியே 60 இலட்சம் ஜினியூக்களாகும்.

குற்றச்சாட்டும் குளறுபடிகளும்

எனவே ஒரு ஜீனியாவுக்கு ஒருவர் வீதம் இத்தனை பிராமணர்களை ஔரங்கஜேப் தமது ஆட்சி காலத்தில் வதைபுரிதல் வேண்டும். இப்பொழுது இங்கு நாம் கவனிக்க வேண்டிய ஒன்று உண்டு. அஃதாவது! இக்காலத்தில் இந்தியாவின் மொத்த ஜனக்கணிதமானது 35 கோடி எனக்

காணப்படுகிறது. இதிலும் ஜினியூ (வென்னும் கங்கணம்) அணியும் பிராமணர்கள் 2 கோடி காணப்படுவதும் மஹா கஷ்டமானதாகவேயிருக்கும்' (மெய்யாகவே கங்கணம் அணியும் பிராமணர்கள் லட்சக்கணக்குக்கு மேல் கிடைப்பது குதிரைக் கொம்புதான்.)

பா. தாவூத் ஷாவின் விளக்கம்

விவாதத்துக்கென்று இரண்டு கோடி ஜினியூ பிராமணர்கள் இருந்தார்களென்று வைத்துக் கொண்டபோதிலும், 146,000,000 எங்ஙனம் இருந்திருக்க முடியும்?

ஒரு கணக்குக்காக ஒவ்வொரு நாளும் 8,000 கங்கண் பூண்ட பிராம்மணர்களின் ஜினியூக்கள் மாத்திரம் சேகரிக்கப்பட்டதேயல்லாமல், ஜினியூ அணிந்திருந்தவர்கள் கொல்லப்படுவதில்லை என்று கூறப்படுமாயின், இதைக் காட்டினும் அறியாத்தனமான வார்த்தை வேறு என்ன இருத்தல் முடியும்?

மேற்கூறப்பட்ட காட்டுமிராண்டித்தனமான செய்கைகள் வல்லமையும், ஒழுக்கமும், உறுதியுமுள்ள அப்படிப்பட்ட மஹா சர்க்கரவர்த்தியால் உண்டாவது சாமான்யமான விஷயமாயும் புத்திக்கும், யுத்திக்கும் ஏற்றம் படியானதாயும் இருப்பது ஒரு சிறிதும் முடியாது. ஏனெனில், இவ்வளவு கௌரவமுள்ள சக்கரவர்த்தி யாதொரு காரண காரியமுமின்றித் தம்முடைய பிரஜைகளின் எதிர்ப்பை உண்டு பண்ணிக் கொள்வதற்காக ஏற்பாடுகளைச் செய்திருக்க முடியாதென்றே அறிந்து கொள்ளுகிறோம்."

கோவில்களையும் பள்ளிவாசல்களையும் இடித்தது ஏன்?

ஔரங்கஜேப்பின் மதநல்லிணக்கத்தை, சமயப் பொறையைப் பற்றிக் சொல்லிக் கொண்டே செல்கிறாயே... அப்படியானால் ஔரங்கஜேப், ஹிந்து ஆலயங்களை இடித்துத் தகர்க்கவேயில்லையா? கேள்வியில் நியாயமுள்ளது.

ஔரங்கஜேப் ஹிந்துக் கோயில்களை இடித்துள்ளார். வரலாற்றில் அதற்கு தெளிவான ஆதாரங்கள் இருக்கின்றன. கோயில்களை மட்டுமா இடித்தார்? முஸ்லிம்கள் தொழுகை நடத்தும் பள்ளிவாசல்களையும் இடித்துத் தகர்த்தவர் ஔரங்கஜேப். இவைகளை ஏன் இடித்தார்? என்ன காரணம்? இதிலே மறைக்கப்படுகின்ற விஷயங்கள் என்ன? இதோ வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்....

ஹஜ்ரத் குத்புல் காஜா முயீனுத்தீன்

ஒலிகள் நாயகம் குத்புல் ஹந்த் காஜா முயீனுத்தீன் ஆண்டகை வட இந்தியாவில் சன்மார்க்கப் பயிர் செழித்தோங்கச் செய்த மகாபுருஷராவார்.

ஔரங்கஜேப்பின் அண்ணன் தாராஷுக்கோ ஔரங்கஜேப்பை எதிர்க்க, அஜ்மீரில் தங்கியிருந்து படை திரட்டிக் கொண்டிருந்த வேலை... அப்போது ஔரங்கஜேப் அஜ்மீர் சென்றார்.

ஹஜ்ரத் காஜா அவர்களின் மண்ணறை (கப்ருஸ்தான்) மீது கட்டிடம் கட்டப்பட்டு, அவர்களது அடக்கஸ்தலம் மக்களால் போற்றப்படுவதைக் கண்டார் ஔரங்கஜேப். உடனே தம்மோடு இருந்தவர்களிடமும் ஹஜ்ரத்தின் அடக்கஸ்தலத்தைப் பராமரித்தவர்களையும் பார்த்து "நான் அவர்களது மண்ணறையில் நின்று அஸ்ஸலாமு அலைக்கும்"* என்று சொல்லுவேன்; அங்கிருந்து எனக்குப் பதில் வரவில்லையாயின் இந்த மண்ணறையின் மீதுள்ள கட்டிடத்தை உடைத்துத் தரை மட்டமாக்கி விடுவேன்" என்று கூறிவிட்டு, ஸலாம் சொன்னார். உடனே கப்ரிலிருந்து "வ அலைக்குமுஸ்ஸலாம்"* என்று பதில் வந்தது; அதனால்தான் அதனை அப்போது இடிக்காமல் சென்றார் ஔரங்கஜேப்.

(* அஸ்ஸலாமு அலைக்கும் - பிறரைச் சந்திக்கும்போது 'தங்களின்மீது சாந்தியும், சமாதானமும் உண்டாவதாக' என்று சொல்லுதல்.)

உருது, பெர்சிய ஆங்கில நூல்கள் பலவற்றின் துணை கொண்டு ர.பா.மு.கனி எழுதிய நூலில் இந்தத் தகவலைத் தந்துள்ளார்.

அண்ணல்(ஸல்) அவர்களின் புனிதமுடி

350 ஆண்டுகளுக்கு முன்னால் சையது அப்துல்லா என்பவர் அரபு நாட்டில் இருந்து இந்தியாவிற்கு வந்து பிஜப்பூர் அரசரை சந்தித்தார்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சந்ததியைச் சேர்ந்த, மதினாவலி- மட்வாலி என்ற பொறுப்பை வகித்த அவரிடம் அண்ணல் (ஸல்) அவர்களின் தாடியைச் சேர்ந்த புனிதமுடி இருந்ததாகக் கூறினார். பிஜப்பூர் அரசர் அவரைப் போற்றி பாதுகாத்து வந்தார். சையது அப்துல்லா சிறிது காலத்தில் இறந்து விட்டார். இந்த நிலையில் ஔரங்கஜேப் பிஜப்பூரைக் கைப்பற்றினார். அப்போது சையது அப்துல்லாவின் மகனான அப்துல் ஹமீது பிஜப்பூரை விட்டு வெளியேறினார்.

பெஜகன்பாத் நகரில் தங்கியிருந்தபோது நூரூத்தீன் அஸ்வாரி என்ற வியாபாரியைச் சந்தித்து தன்னிடம் தனது தந்தையார் வைத்திருந்த புனிதமுடியைப்பற்றி அப்துல் ஹமீது கூறினார். பின்னர் காஷ்மீரில் தால் ஏரிக்கு அருகே அந்தப் புனித முடி பத்திரமாகப் பாதுகாத்து வைக்கப்பட்டது.

ஹஸரத்பால்

ஔரங்கஜேப்பிற்கு காஷ்மீரில் அண்ணல் (ஸல்) அவர்களின் புனித முடி இருக்கிறதென்ற செய்தி கிடைத்தது. முதலில் ஔரங்கஜேப் இதை நம்பிடவில்லை.

நூருத்தீன் அஸ்வாரி அண்ணல் (ஸல்) பெயரைக் கூறி மக்களை ஏமாற்றுவதாக கருதினார். உடனடியாக அவரைக் கைது செய்திட உத்தரவிட்டார் ஔரங்கஜேப்.

புனிதமுடி பற்றி நூருத்தீன் கூறியது உண்மைதானா என்பது பற்றி ஆராய ஔரங்கஜேப் ஏற்பாடும் செய்தார். இதற்குள் நூருத்தீன் இறந்து போனதால், அவரது பணியாளரான மேதானிஷ் என்பவரிடம் ஔரங்கஜேப் புனித முடியை ஒப்படைத்தார். கி.பி.1700 இல் தால் ஏரியை ஒட்டிய 'பாக்-இ-சதிக்கான்' என்ற இடத்தில் அது பாதுகாப்பாக வைக்கப்பட்டது. 'அஜார்-இ-சாரிப்' என்று அழைக்கப்பட்ட இத்தலம் 'ஹஸ்ரத்பால்' என்று இப்போது அழைக்கப்படுகிறது.

கோல்கொண்டா ஜும்ஆ மஸ்ஜித்

கோல்கொண்டாவின் மன்னன் தானஷா (Tanasha) தனது சமஸ்தானத்தில் வரிவசூல் செய்து, டெல்லிக்குச் செலுத்த வேண்டிய கிஸ்தியைச் செலுத்தவே இல்லை. சில ஆண்டுகளில் கோடிக்கணக்கில் பணம் சேர்ந்துவிட்டது. தானஷா அந்தப் பணம் முழுவதையும் ஆழக்குழி தோண்டிப் புதைத்துவிட்டு, அதற்குமேல் ஒரு ஜும்ஆ மஸ்ஜித்தை கட்டிக் கொண்டார். இநத விபரம் ஔரங்கஜேப்பிற்குத் தெரியவந்தது. உடனே அந்தப் பள்ளிவாசலை இடித்துத் தள்ளிட ஔரங்கஜேப் உத்தரவிட்டார். அதன்படி கோல்கொண்டா ஜும்ஆ மஸ்ஜித் இடிக்கப்பட்டது. அதன் அடியில் புதைத்துவைக்கப்பட்டிருந்த பொக்கிஷம் கைப்பறற்ப்பட்டு, அதுமக்களின் நலனுக்குப் பயன்படுத்தப்பட்டது.

"when Aurangzeb came to know of it, he ordered the demolition of the Mosque. The burried khazana was seized and utilied for the benifit of the people."

குற்றம் கண்டுபிடிக்கப்பட்டால், நீதி வழங்குவதில் அது முஸ்லிம்கள் இறைவனைப் பிரார்த்தித்து தொழுகை நடத்தும் பள்ளிவாசல் என்று வேறுபடுத்திப் பார்த்திடாமல், பள்ளிவாசலை இடித்துத் தள்ளியவர் ஔரங்கஜேப்.

“தேவையற்ற பாடங்களைப் போதித்து வந்த முகம்மதியக் கல்விச்சாலைகளும் ஔரங்கஜேப் ஆட்சியின் போது இடிக்கப்பட்டன.”*

(* A. சுவாமிநாதன், இநதியா 1761 வரை, சென்னை, 1998, பக். 326.)

மதத்தின் பெயரால் மக்களிடம் மோசடிகள் நடந்துவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தவர் ஔரங்கஜேப். அதனால்தான் அஜ்மீரில் காஜாமுயினுத்தீன் ஆண்டகையின் ‘தர்ஹா’வைப்பற்றி கேள்விப்பட்டபோது, முதலில் அதுகுறித்து சந்தேகித்த ஔரங்கஜேப், அதனை இடித்துத் தள்ளுவேன் என்றார்.

அண்ணல் (ஸல்) அவர்களின் புனித முடியைப்பற்றிய செய்தி வந்தபோதும் அவ்வாறு சொல்லி மக்களை ஏமாற்றுவதாக எண்ணி சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்திட உத்தரவிட்டவர் ஔரங்கஜேப்.

கோல்கொண்டா ஜும்ஆ மஸ்ஜிதை இடித்துத் தகர்த்தவர் ஔரங்கஜேப். இவைகளை நம் நினைவில் நிறுத்திக்கொண்டு, இனி கோவில்கள் இடிக்கப்பட்ட விஷயத்திற்கு வருவோம்.

சரித்திர ஆசிரியரது கடமை

ஹிந்துக் கோவில்கள் பலவற்றிற்கு உதவிகள் வழங்கிய ஔரங்கஜேப் வாரணாசி என்று அழைக்கப்படும் இந்துக்களின் மோட்சபுரியான காசியில், விசுவநாதர் ஆலயத்தை இடிக்க உத்தரவிட்டார். இதற்கான சான்று சந்தேகத்திற்கிடமின்றி இருக்கிறது.

ஔரங்கஜேப்பின் ஆட்சியில், ஹிந்துக் கோவில்கள் சில இடிக்கப்பட்ட செய்கையை நாம் நியாயப்படுத்தவும் விரும்பவில்லை. புனித வழிபாடுத் தலங்களை அழிப்பதற்கு எந்தவிதமான நியாயமும் இல்லை. ஆனால் சரித்திர ஆசிரியர்களின் கடமை, நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூறுகையில் அதைச் சார்ந்த சூழ்நிலைகளையும் விளக்கிட வேண்டும்.

வாரணாசி விசுவநாதர் ஆலயம்

வங்காளத்திற்குப் பயணம் செய்துகொண்டிருந்த

ஔரங்கஜேப் வாரணாசி அருகே வந்துகொண்டிருந்தார். அப்போது அவரது ஆட்சியின் கீழிருந்த ஹிந்து ராஜாக்கள் ஔரங்கஜேப்பிடம், “பயணத்தை ஒரு நாள்நிறுத்தித் தங்கிச் சென்றால், அந்த நாளில் எங்களது ராணிகள் கங்கையில் குளித்துவிட்டு விசுவநாதரை தரிசனம் செய்வதற்கு ஏதுவாக இருக்கும்“ என்று கேரிக்கை வைத்தனர்.

ஹிந்து அரசர்களும், ராணியரும் கங்கைக்கரையில் தங்கி விசுவநாதர்ஆலயத்தில் வழிபட்டுச் செல்லவேண்டுமென்ற கோரிக்கையை தயக்கமின்றி ஏற்றுக் கொண்டவர் ஔரங்கஜேப்.

காசி ஆலயத்தில் ஹிந்து ராணியர்

அதனைத் தொடர்ந்து ஔரங்கஜேப்பின் அன்றைய வழிப்பயணம் நிறுத்தப்பட்டது. வாரணாசிக்கு இடையேயான ஐந்து மைல் தூரம் முழுவதும் மொகலாயப்பேரரசின் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டார்கள்.

இந்து ராணிகள் மூடு பல்லக்குகளில் சென்று புனித கங்கையில் நீராடினர்; காசி விசுவநாதர் ஆலயத்தில் வழிபட்டார்கள். (ஔரங்கஜேப் ஆட்சியில் அவரவர் விருப்பப்படி வணங்கிட அனுமதிக்கப்பட்டனர் என்பதற்கு இது சான்றாகும்.

கட்ச் ராணியைக் காணவில்லை!

பூஜைகள் முடிந்தபின் ஹிந்து ராணிகள் திரும்பினர். ஆனால் கட்ச் (Maharani of Kutch) சமஸ்தானத்தின் ராணி மட்டும் திரும்பவே இல்லை. உடனே அந்த ராணியைத் தேடிக்கண்டுபிடிக்க முழு அளவிலான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனாலும் ராணியைப் பற்றிய தகவல் எதுவும் தெரியாததால் ஔரங்கஜேப் ஆத்திரமடைந்தார். ராணியைத் தேடிக் கண்டுபிடித்திட தனது மூத்த அதிகாரிகளை அனுப்பி வைத்தார்.

அவமானப்படுத்தப்பட்ட அரசி

அதிகாரிகள் தீவிரமாகத் தேடுகையில், விசுவநாதர் ஆலயத்தில் உள்ள கணபதி சிலை மட்டும் அசைந்தது. அந்தச் சிலையை அசைத்தபோது, பாதாளச் சுரங்கம் ஒன்றிற்குச் செல்லும் படிக்கட்டுகள் காணப்பட்டன. உள்ளே இறங்கிப் பார்த்தபோது அங்கே காணாமல் போன ராணி, அவமானப்பட்ட நிலையில் அழுத கொண்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இடிக்கப்பட்ட கோயில்

நடந்த சம்பவம் குறித்து ஹிந்து ராஜாக்கள் தங்களது எதிர்ப்பை உரத்தக் குரலில் வெளியிட்டார்கள். இந்த அக்கிரமத்திற்கு தகுந்த நடவடிக்கை எடுத்திட வேண்டுமென்று ஔரங்கஜேப்பிடம் கோரினார்கள்.

அந்த இடத்தில் புனிதத்தன்மை மாசுபடுத்தப்பட்டு விட்டதை உணர்ந்ததால், விசுவநாதர் விக்கிரகத்தை வேறு இடத்திற்கு மாற்றிட உத்தரவிட்டார். அதனைத் தொடர்ந்து அந்தக்கோவில் தரைமட்டமாக்கப்பட்டது. அந்தக் கோவிலின் மடாதிபதி கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டார்.

பட்டாபி சீதாராமையா

இதனை தஸ்தாவேஜுக்களின் சான்றுகளுடன் டாக்டர் பட்டாபி சீதாராமையா (Dr. Pattabhi Sitaramayya) ‘ஃபெதர்ஸ் அன்ட் ஸ்மோன்ஸ்’ (the Feathers and the Stones) என்ற தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். பாட்னா அருங்காட்சியத்தின் பொறுப்பாளர் பி.எல்.குப்தாவும் (Dr. P.L.Gupta) இந்த நிகழ்ச்சி பற்றி குறிப்பிட்டுள்ளார். மேற்கண்ட அவமானகரமான துயரச்சம்பவம் குறித்த பி.என்.பாண்டேயின் வரிகள் இதோ:

பி.என். பாண்டே

‘Aurangzeb came to know of it. He was very much enraged. He sent his senior officers to search for the rani Ultimately they found that the statue of Ganesh which was fixed in the wall was a movable one. when he staue was moved. They saw a movable one. When the statue was moved. They saw a flight o stairs that led to the basement. To their horror, they found the missing Rani dishounoured and crying. The basement was just beneath Lord. Vishwanath’s seat. The Rajas expressed their vociferous protests. At the crime was henious the Rajas demanded examplary action. auranzeb ordered that as the sacred precinets have despoiled. Lord Vishwanath may be moved to some other place. The temple be razed to the ground to some other place. The temple be razed to the ground and the Mahant be arrested and punished.*

(* P.N. Pande, Islam and Indian Culture, P. 55.)

ஔரங்கஜேப் ஆட்சியில் நடைபெற்ற மதக் கலவரங்கள், கோவில்கள், பள்ளிவாசல்கள் இடிக்கப்பட்ட விவரங்களை வரலாற்று ரீதியாகவே ஆராய்வது அவசியமாகிறது.

சரித்திரம் தரும் சான்றுகள்

உலக வரலாற்றில் இரண்டு மதங்களைச் சார்ந்தவர்கள்

போரில் இறங்கிய போது, வெற்றி பெற்றவர்கள் தங்களது எதிரிகளின் கோவில்களை, வணக்கஸ்தலங்களை அழித்துத் தங்களின் கோபத்தை போர் வெறியைத் தணித்திருக் கிறார்கள்.

அதைப்போலவே தோல்வியடைந்தவர்களும் தங்களுக்கு வாய்ப்புக் கிடைத்து விடுகிறபோது, தங்களைப் போரில் ஏற்கனவே வெற்றி கொண்ட வெற்றியாளர்கள் மீது அதே முறையில் தங்களது வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டுள்ளார்கள். இத்தகைய சம்பவங்களுக்கு சரித்திரத்தில் சான்றுகளை எராளம் நாம் காணலாம்.

புஷ்யமித்திரன்

மௌரிய மரபின் இறுதி மன்னள் பிருஹத்ரதன் அவரைக் கொன்றுவிட்டு ஆட்சி அதிகாரத்திற்கு வந்த படைத் தலைவன், சங்கவமிசத்து புஷ்யமித்திரன்.

முதன்முதலில் பௌத்தமதத்தவர்களை, (ஹிந்துக்ககளின் நலன் கருதி) துன்புறுத்திய மன்னன் புஷ்யமித்திரன்.

“Mut, although the alleged ppreseription of Buddhism by Pushyamitra...”

கி.மு. 185 இல் புஷ்யமித்திரனது ஆட்சியில் பௌத்தர்கள் மிகவம் துன்பத்திற்குள்ளானார்கள்.

மிஹிரகுலன்

மத்திய ஆசியாவின் ஸ்டெப்பிப் புல்வெளியிலிருந்து கூட்டம் கூட்டமாய்க் கிளம்பி, மேற்கில் ரோமானிய சாம்ராஜ்யத்தின் வலிமை மிக்க பகுதிகள் சிலவற்றிலும், இந்தியாவில் குப்த சாம்ராஜ்யத்திலும் பரவியவர்கள் ஹூணர் (Huns) என்னும் கொடுமைவாய்ந்த முரட்டுக் கூட்டத்தினர் ஆவர்.

ஹூண வம்சத்தைச் சேர்ந்த தோரமானனின் (toramana) (கி.பி. 499-500) புதல்வன் மிஹிரகுலன் (Mihiragula) கி.பி. 510இல் பஞ்சாப் பகுதியில் தனது ஆட்சி அதிகாரத்தை அமைத்துக் கொண்டான்.*

(* vincent A. Smith, The History of India, London, 1921, P. 163.)

கத்தியையும், நெருப்பையும் ஏந்தி, சென்ற இடங்களையெல்லாம் சுடுகாடாக்கிய வெறியர்களான ஹூணர்கள் செய்த நாசத்திற்கு அளவேயில்லை.

அழிக்கப்பட்ட பௌத்த ஆலயங்கள்

சிவனை வணங்கிய மிஹிரகுலா, புத்த சந்நியாசிகளைத் துன்புறுத்தினான். புத்த சந்நியாசிகளின் மடங்களும், ஸ்தூபிகளும் மஹிரகுலனின் ஆட்சியின்போது அழிக்கப்பட்டன; பௌத்த ஆலயங்கள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. *

(* ஸையித் இப்ராஹீம், இந்தியாவில் முஸ்லீம் ஆட்சி, இரண்டாம் பகுதி, திருச்சி, 1976, பக். 196.)

"... Who worshipped as his patron deity Siva, the god of destruction, exhibited ferocious hostility against the peaceful Buddhist cult, and remorselessly over threw the stupas and monasteries, which he plundered of their treasures". *

(* Vincent A. Smith, The early History of India, P. 319.)

ஹர்ஷவர்த்தனர்

கன்னோசி வம்சத்து அரசர் ஹர்ஷர் (கி.பி.590-647) கி.பி. 606இல் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தார்.

யுவான் சுவாங்கின் குறிப்புகளிலிருந்து, ஹர்ஷர் ஹிந்து மதத்திலிருந்து பௌத்த மதத்தைத் தழுவிய செய்தி உறுதியாகிறது.

ஹர்ஷர் கனோஜ் பிரயாகையில் இருபெரும் பேரவைகளைக் கூட்டினார். அங்கு பௌத்தக் கருத்துக்களுக்கு மட்டுமே சிறப்பிடம் அளிக்கப்பட்டது.

அவரது பேரவை நிகழ்ச்சிகள் பற்றிய விளக்கங்களிலிருந்து ஹர்ஷர் இந்து மதக் கொள்கைகளுக்குப் பலவகைகளிலும் இழுக்குக் கற்பித்திருப்பதை அறிகிறோம்.

கொலை முயற்சி

ஹர்ஷரும், அவருடைய மேலதிகாரத்திற்கு உட்பட்டிருந்த காமரூபத்தின் அரசர் பாஸ்கரவர்மரும் பேரவையில் இந்திரன், பிரம்மாவின் சிலைகளைப் புத்தரின் சிலைக்குச் சற்றுக்கீழான மரியாதை அளித்து வழிபட்டனர். பௌத்த மதத்தின் வேறு பிரிவினரிடமும் ஹர்ஷர் மதிப்புத் தன்மையுடன் நடந்துகொள்ளவில்லை.

யுவான் சுவாங்கின் மஹாயாணப் பிரிவின் கருத்துக்களுக்கு மாறான கருத்துடையவர்கள், பேரவையில் அதைத் தெரிவித்ததால் அவர்களுடைய நாக்கு துண்டிக்கப்படும் என ஹர்ஷர் வெகுண்டு அறிவித்ததது மத உரிமைகளுக்கு அவர் இடமளிக்க மறுத்ததற்குச் சான்றாகும்.

அரசுக் கருவூலத்தில் பொருள்கள் அனைத்தையும் பௌத்தர்களுக்கு வாரி வழங்கிவிட்டு, வெகுதூரத்திலிருந்து பேரவையில் கலந்து கொள்வதற்காக வந்த இந்து மதப் பிரிவினர்களைப் புறக்கணித்ததால், ஹர்ஷரைக் கொல்வதற்கு ஹிந்துக்கள் முயற்சியில் இறங்கினார்கள் என சீனத்துப் பயணி பீல் அவர்களின் விளக்க உரை தெரிவிக்கிறது.

ஸஸாங்கன்

மத்திய வங்காளத்தின் அரசன் ஸஸாங்கன் (Sasankan). இவர் புத்த கயாவிலிருந்த புனிதமான போதி மரத்தை வேரோடு பிடுங்கி எறிந்தார். அதோடு புத்த சந்நியாசிகளின் மடங்களையம் அழித்தார். இந்த விபரங்களை ஹுவான் - சுவாங் தனது குறிப்புக்களில் தெரிவித்திருக்கிறார்.

ஸேனா மன்னர்கள்

வங்காளத்தை ஆட்சி செய்து வந்த ஸேனா மன்னர்களில் ஒருவர் வல்லாள ஸேனா என்ற பல்லால ஸேனா (Vallala Sena or Ballala Sena A.H. 1158-1170) இவர் பௌத்த மதத்தார் மீது கொடுமைகள் பல செய்தார். தமது நாட்டிலிருந்து பௌத்த மதத்தவர்களை வெளியேற்றிடவும் செய்தார்.

அஜயதேவா

குஜராத்தில் ஆட்சி செய்த சைவ அரசர் அஜயதேவா (கி.பி.. 1174 - 1176)

ஜைன மதத்தவர்களை இரக்கமின்றித் துன்புறுத்தி, ஜைன மதத் தலைவர்களைச் சித்ரவதை செய்து கொன்றவர் அஜயதேவா.

Ajayadeva, a ‘Saiva King of Gujarat, bejan his reign by a merciles of the Jains torturing thier Leader to death’*

(* Archacol S.W.I., Vol. IX. P. 16.)

ராஜ தரங்கிணி

காஷ்மீரில் ஹிந்துராஜா ஒருவர் நூற்றக்கணக்கான பௌத்தக் கோயில்களை இடித்து, அவற்றின் சொத்துக்களையும் பறித்து ஹிந்துக்களிடம் வழங்கிய விவரங்களை காஷ்மீர் வரலாற்றைக் கூறும் நூலான ‘ராஜ தரங்கிணி’ யில் காணலாம்.

பௌத்த - ஜைன மதத்தினருக்குக்கெதிரான தாக்குதல்கள் இந்தியாவில் கி.மு. 185 இலேயே துவங்கி விட்டது. அது பல நூற்றாண்டுகள் நீடித்தும் நின்றது.

தமிழகத்தில் பிறமதத்து அரசர்களாலும், பிற மதத்தவர்களாலும், பௌத்தர்களும்,சமணர்களும் கொடுமைகளுக்குள்ளாக்கப்பட்டனர். பௌத்த - சமண வழிபாட்டுத் தலங்கள் ஹிந்துக்களின் ஆலயங்களாக மாற்றப்பட்டது. இதற்கு தமிழக வரலாற்றில் ஏராளமான சான்றுகள் காணப்படுகின்றன.

சமண-பௌத்த மதச் செல்வாக்கு

‘பல ஜென்மங்களில் நிர்வாண நிலையை நாடி, கடைசிப் பிறப்பில் தம் ஊக்கத்தாலும், ஞானத்தாலும் அந்தப் பதவியை அடைந்த ‘போதி ஸத்வர்’ என்ற புத்தரது உபதேசங்களையும், தர்மங்களையும் பின்பற்றி நடக்கிறவர்கள் பௌத்தர்கள். ‘புலன்களையும் கர்மங்களையும் ஜெயித்தவர் ஆதலால், தீர்த்தங்காருக்கு ‘ஜினர்’ என்னும் பெயர் உண்டு. ஜினரைக் கடவுளாக உடைய மதம் ஜைன (சமண) மதம்.

மதங்களிடையே மோதல்கள்

‘முழுவதையும் மாயையாக நேரடியாகப் பார்’ என்று புத்தரும், ‘மாயைக்குள்ளே மெய்ப்பொருள் இருப்பதை நேரடியாகப் பார்’ என்று ஹிந்து மதமும் கூறிற்று.

ஒன்றுக்கொன்று முரண்பட்ட, ஒன்றோடொன்று பெரும்பகை கொண்ட இந்த மதங்கள் ஒன்றையொன்று இழித்தும் பழித்தும், தத்தம் மதத்திற்குச் செல்வாக்கும் சிறப்பும் தேடிக் கொள்ளவும் நாட்டை ஆண்டு வந்த அரசர்கள், செல்வந்தர்கள், பொதுமக்கள் ஆகியோரின் ஆதரவைப் பெற்றிடவும் அவ்வப்போது முயற்சிகளை மேற்கொண்டன.

அந்த வேளையில்தான் பௌத்தக் கோயில்கள் ஜைன கோயில்களாக்கப்பட்டன. ஜைனக் கோயில்கள் பௌத்தக் கோயில்களாக மாற்றப்பட்டன. ஹிந்துக் கோயில்கள் பௌத்தக் கோயில்களாக மாற்றப்பட்டன. பௌத்தக் கோயில்கள் ஹிந்துக் கோயில்களாக மாற்றப்பட்டன.

தாங்கள் சார்ந்திருந்த மதங்களுக்காக அரசர்கள் பிற மதத்தினரைத் துன்புறுத்தினர். பிற மதத்தவரின் வழிபாட்டுத் தலங்களை இடித்துத் தகர்த்தனர். அல்லது தங்களுக்கு விருப்பமான வழிபாட்டுத் தலமாக அவைகளை மாற்றிக் கொண்டனர்.

சமண-பௌத்தச் செல்வாக்கு

கி.பி. 5, 6, 7ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டில் சமண

சமயமும், பௌத்த மதமும் பெரிதும் செழித்து வளர்ந்திருந்தது. சைவ, வைணவ சமயங்கள் முடங்கிக் கிடந்தன. மக்கள் பெரிதும் சமணராகவும், பௌத்தராகவும் இருந்தனர். நாட்டை ஆண்ட மன்னர்களும் சமண, பௌத்த மதங்களைத் தழுவியிருந்தனர்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் சைவ அடியார்களான நாயன்மார்களும், வைணவ அடியார்களான ஆழ்வார்களும் 'பக்தி' இயக்கத்தை ஆயுதமாகக் கொண்டு, சமண, பௌத்த மதங்களை அழித்திட முற்பட்டனர்.

சமயப் போரின் கடுமை

"சமண சமயம் பலவிதத்தில் தாக்கப்பட்டது. கொடுமைப்படுத்துதல், கழுவேற்றுதல், கொலை செய்தல், கலகம் விளைவித்தல், நிலப் புலங்களைக் கவர்தல் முதலிய செயல்கள் நிகழ்ந்ததைக் காண்கிறோம். இந்துக்கள் சமண மதத்தை அழித்த செய்திகள் பல உள்ளன"

"வெறுப்போடு சமணர் முண்டர் வீதியில் சாக்கியர்கள்* (*பௌத்தவர்கள்) நின்பால் பொறுப்பரியன்கள் பேசில் போவதே நோயதாகிக் குறிப்பெனக் கடையுமாகில் கூடுமேல் தலையை ஆங்கே அறுப்பதே கருமங்கண்டாய் அரசாங்கமா நகருளானே!" தொண்டரடிப்பொடி ஆழ்வாரின் இந்தப் பாடல் அக்காலத்திய சமயப்போர் எவ்வளவு வேகம் கொண்டிருந்தது என்பதை விளக்குகின்றது.

திருநாவுக்கரசர்

தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள பாடலிபுரத்தில் சிறப்புப் பெற்றிருந்த சமணப்பள்ளி இருந்தது. இங்கிருந்து தான் சர்வநந்தி என்பவர் 'லோகவிபாகம்' என்னும் நூலை எழுதினார். கி.பி. 458 இல் சிம்மவர்மன் என்னும் பல்லவமன்னன் காஞ்சிபுத்தை அரசாண்டிருந்தபோது அவ்வரசனது 22 வது ஆட்சி ஆண்டில் 'லோகவிபாகம்' பாகத மொழியிலிருந்து வட மொழியில் மொழியில் பெயர்க்கப்பட்டது. இதற்குப் பிறகு 160 ஆண்டுகளுக்குப் பின்னர், திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் புகழனார், மாமினியார் புதல்வராகப் பிறந்தவர் மருணீக்கியார். இவரது சமய அறிவால் சமணர்கள் 'தருமசேனா' என்னும் பெயர் கொடுத்து அவரைப் போற்றினார்கள் நெடுங் காலம் சமணகுருவாக பாடலிபுத்திர சமணப் பள்ளியில் இருந்த தருமசேனர். சமண சமயத்தைவிட்டு சைவ சமயத்திற்கு வந்தபோதுதான் திருநாவுக்கரசர் (வாகீசர்) ஆனார்.*

(* மயிலை சீனி வேங்கடசாமி, மகேந்திரவர்மன், சென்னை, 1978, பக். 27-29.)

குணதரஈச்சரம்

சமணசமயத்தவனாக இருந்த பல்லவமன்னன் மகேந்திரவர்மனைச் சைவ சமயத்தில் திருநாவுக்கரசர் சேர்த்தார். அத்தோடு நின்று விடாமல்,தாம் அப்பர்,தருமசேனர் என்னும் பெயருடன் தங்கியிருந்த பாடலி புத்திர சமணப் பள்ளியை இடித்துத் தள்ளவும் ஏற்பாடு செய்தார்.

பல்லவ அரசனும் சமணக்கல்லலூரியை ஒழித்தான்.பள்ளிகளையும், பாழிகளையும் அழித்தான். அவற்றின் சிதைவுகளைக் கொண்டு வந்து திருவதிகையிற், குணதர ஈச்சரம்'என்று தன் பெயரால் கோவில் ஒன்று கட்டினான்.* இங்குச் சமணர் கோயில் இருந்தது என்பதை உறுதிப் படுத்த மஞ்சக்குப்பம் சாலையில் யாத்திரிகர் பங்காளாவுக்கு அருகில் இன்றும் சமணத்திரு உருவம் காணப்படுகிறது. (* பல்லவர் வரலாறு, பக். 275.)

பெரிய புராணம் தரும் செய்தி

"வீடறியாச் சமணர் மொழி பொய்யென்று மெய்யுணர்ந்த காடவனுந்திருவதிகை நகரின் கட்ண்ணுதற்குப் பாடலிபுத்திலமண் பள்ளியொடு பாழிகளுங் கூட இடித்துக் கொணர்ந்து குணதரவீச்சரம் எடுத்தான்"*

(* தெய்வப்புலவர் சேக்கிழாரடிகள் அருளிய திருத்தொண்டர் மாக்கதை, ப. இராமநாதபிள்ளை, சு.அ. இராமசாமிப் புலவர் குறிப்புரைகளுடன், சென்னை, 1977, திருநாவுக்கரசு நாயனார் புராணம், பாடல் 146, பக். 289.)

பாடலிபுரம் என்னும் திருப்பாதிரிப்புலியூரில் (திருப்பாப்புலியூர்) இருந்த சமணப் பள்ளியை இடித்து அந்தக் கற்களைக் கொண்டு போய்த திருவதிகைச் சிவன் கோயிலிலே குணதரவீச்சர் என்னும் கோயிலைக் கட்டிய செய்தியை பெரிய புராணம் அறிவிக்கிறது.

இந்தக் காலகட்டத்தில் தான், அரேபியாவில் புனித மக்காநகரில், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தைப் போதிக்க ஆரம்பித்தார்கள் என்பதனை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

ஓசை படாமல் கடித்திட்ட நாகம்

இஸ்லாம் மார்க்கம் இப்புவியில் தோன்றுவதற்கு முன்பே,

உலகின் வெவ்வேறு பாகங்களில், ஒரு மதத்தவரின் வழிபாட்டுத் தலங்களை இன்னொரு மதத்தினர் அழித்ததையும் அல்லது அதனை தங்களது வழிபாட்டுத் தலமாக மாற்றியதையும் சரித்திரத்தில் நாம் காண முடிகிறது.

ஆனால், இந்திய வரலாற்றில், மதவாதசக்தியினர், ஓசைபடாமல் கடித்திடும் நாகத்தைப் போல, நச்சுச் செய்திகளை மெல்ல மெல்ல வரலாற்றிலே நுழைத்தனர். இந்தியாவை ஆண்ட முஸ்லிம் மன்னர்கள் “ஹிந்துக் கோயில்களையும், பிறமதத்தவரின் வழிபாட்டு ஸ்தலங்களையும் இடித்து தகர்த்து, தங்களது மார்க்கத்தின் வழிபாட்டுத்தலங்களாக மாற்றிக் கொண்டார்கள்” என்ற கருத்தை இங்குள்ள மக்களிடம் ஆழமாகவும் பதிய வைத்து விட்டனர். இவ்வாறு வரலாற்றில் நடைபெற்றுள்ள இருட்டடிப்புக்கள், வேதனையான விசித்திரமாகத்தான் இருக்கிறது.

தேடித் திரிந்து சேகரித்த செய்திகள்

ஒரு மதத்தினர், பிறமதத்தினரின் வழிபாட்டுததலங்களை அழித்தும், ஆக்கரமித்தும், அதனை அவர்களது விருப்பமான வழிபாட்டுத்தலமாக ஆக்கிக் கொள்வதுமான சம்பவங்கள் இந்தியா முழுவதும் காலங்காலமாக நடை பெற்று வந்துள்ளது. இவைகள் அனைத்தையும் வரலாற்றின் வெளிச்சத்திற்கு கொண்டுவர வேண்டுமென்ற நிலையிலிருந்து வருகிறது. நாடு முழுவதும் சுற்றிவர போதிய வாய்ப்பும் பொருளாதார வசதியும் இல்லாத நிலையில் அடியேன் ஐந்தாறு ஆண்டுகள் தமிழகத்தின் பல பகுதிகளில் தேடித் திரிந்து, இது குறித்து சேகரித்த செய்திகள் இதோ:

பாண்டிய நாடு

சங்க காலத்திலேயே சமண மதம் பாண்டிய நாட்டில் பரவியிருந்தது என்பதற்குச் சங்க இலக்கியம் சான்று பகர்கின்றது.

ஆனைமலை, அழகர்மலை, சமணர்மலை, நாகமலை, திருப்பரங்குன்றம், கொங்கர் புளியங்குளம், கரடிப்பட்டி, முத்துப்பட்டி போன்ற ஊர்களிலுள்ள மலைகளில் சமணர்களது குகைகளும், படுக்கைகளும், கல்வெட்டுக்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. களப்பிரர் ஆட்சியின் போது சமணத்தின் செல்வாக்கு நன்கு பரவி உச்சநிலையை அடைந்திருந்தது.*

(* கே.வி. ராமன், பாண்டியர் வரலாறு, சென்னை, 1977, பக். 263.)

யுவான் சுவாங்

சீனயாத்திரிகர் யுவான் சுவாங் இந்திய தேசத்தில் செய்த யாத்திரையைப் பற்றி எழுதிய குறிப்பில் தமிழகத்தைப் பற்றி சொல்லியுள்ள செய்திகளிலிருந்து இதோ சில விஷயங்கள்:

த-லொ-பி-து நாட்டில், கஞ்-சிஹ்-பு-லொ நகரத்தில் (திராவிட தேசத்தில், காஞ்சிபுர நகரத்தில்) நூற்றுக்கும் மேற்பட்ட பௌத்தப் பள்ளிகளும், 1000க்கு மேற்பட்ட பிக்ஷுக்களும், 80க்கும் மேற்பட்ட பௌத்தப் பிரிவினரின் தேவாலயங்களும் இருக்கின்றன. இந்தப் பிரதேசத்தில் புத்தர் பெருமான் அடிக்கடி எழுந்தருளியிருக்கிறார். கற்றுத் தேர்ந்த அறிஞர்கள் கூடுகிற இடமும் இருந்தது; அசோகர் காலத்தில் கட்டப்பட்ட பள்ளியும் இருந்தது.

தமிழகத்தில் சமணமும், பௌத்தமும் செல்வாக்கும் பெற்றிருந்ததற்கு அடையாளமாக இந்தச் சான்றினைத் தந்துள்ளேன். விவரிக்கின் பெருகும். இனி அவைகள் அழித்தொழிக்கப்பட்ட வரலாற்றுச் செய்திகளைப் பார்ப்போம்.

திருஞானசம்பந்தர்

சோழ நாட்டில் சீர்காழியில் சிவபாதவிருதயர்க்கும், பகவதியார்க்கும் திருமகவாகத் தோன்றியவர் திருஞானசம்பந்தர். சைவத்திருமுறை பன்னிரெண்டனுள் முதல்மூன்று திருமுறைகளைத் திருவாய் மலர்ந்தருளிய அருளாசிரியரான திருஞானசம்பந்தருக்கு ஆளுடைய பிள்ளையார், திருஞான சம்பந்தடிகள், திருஞானம் பெற்ற பிள்ளை, காழிநாடுடைய பிள்ளை, சம்பந்தப் பெருமான், பரசமய கோளரி, காழிச் சம்பந்தப் பெருமாள் நாயனார், திருஞான சம்பந்தப் பெருமாள், சிவஞான சம்பந்தடிகள், திருஞான சம்பந்த நம்பி, ஞானம் பெற்ற ஆளுடைய பிள்ளை, ஆணை நமதொன்ற பெருமாள் என்ற பெயர்களும் உண்டு.*

(* சொ. சிங்காரவேலன், திருஞானசம்பந்தர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும், சென்னை, 1969, பக். 64, 65.)

செழியர் நாட்டில் சமணம்

பாண்டிய மன்னனாகிய மாறவர்மன் சமணன். அந்த நாட்டுக் குடிமக்களும் சமண சமயத்தையே தழுவியிருந்தனர். மதுரை

மாநகருக்குள் அப்போது சோமசுந்தரப் பெருமாள் திருக்கோயில் வழிபாடற்று அடைபட்டு நின்றது.

திருநீறிட்ட சைவர் ஒருவர் காணப்பட்டாலும் அவரை உடனே சமண மதந்தழுவுமாறு, அரசன் துணையினால் வலி மிகுந்த சமணகுருக்கள் நெருக்கி, வருத்தி வற்புறுத்துவாராயினர். இந்நிலைமையில், அப்பாண்டி நாட்டிற் சைவர் ஒருவர் கூட தலைகாட்டுதல் இயலாத நிலை இருந்தது. அவ்வாறு சமண கொடுமை மிகுந்திருந்த அந்நாட்டில் அரசனின் பெருந்தேவியரான மங்கையர்க்கரசியாரும், அரசனின் பேரமைச்சரான குலச்சிறையார் மட்டுமே சைவ சமயத்தை விடாப்பிடியாய்த் தழுவினவர்களாய் தனித்திருந்தார்கள்.*

(* இளவழகனார், சம்பந்தரும் சமணரும், கட்டுரை, செந்தமிழ்ச்செல்வி, 1928, ஜூன்-ஆகஸ்ட், பக். 419.)

திருஞான சம்பந்தருக்கனுப்பிய தூது

‘மங்கையர்கரசியும் குலச்சிறையாரும் ஓர் பிராமணன் மூலமாய் திருஞானசம்பந்த மூர்த்திக்கு ஒரு திருமுகம் அனுப்பி, மதுரைக்கு வந்து சமண இருளைப்போக்கி சைவப்பயிர் முன்போல தழைக்க அனுக்ரஹிக்கும்படி வேண்டினார். அதன்படி திருஞான சம்பந்தரும் மதுரைக்கு வந்தார்; சமணர்கள் ஞானசம்பந்தர் தங்கியிருந்த மடத்திற்கும் தீயிட்டனர். அதன்பின் சமணர்களை அனல் வாதத்திலும், புனல் வாதத்திலும் வென்றார் ஞானசம்பந்தர்.

மாறவர்மன் அரிகேசரி

பாண்டிய மன்னன் செழியன் வேந்தன் (கி.பி 625 -640) மறைந்தபின், அவரது புதல்வனான அரிகேசரி கி.பி. 640-670) பட்டத்திற்கு வந்திருந்தான். இவனுக்கு மாறவர்மன், சுந்தரபாண்டியன், கூன்பாண்டியன் என்ற பெயர்களுண்டு. இந்த பாண்டிய மன்னன்தான்*திருஞானசம்பந்தரால் சைவனாக்கப்பட்டான்.

(* T.V. சதாசிவ பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, சென்னை, 1977, பக். 31.)

பாண்டிய மன்னன் மாறவர்மனும், அவனது துணைவியார் மணிமுடிச் சோழனின் புதல்வியார் மங்கையர்கரசியாரும், பாண்டிய நாட்டின் தலைமை அமைச்சரான குலச்சிறையாரும், மதுரையிலிருந்த சமணர்களை அதன்பின் என்ன செய்தார்கள் தெரியுமா?

கழுவிலேறிய சமணர்கள்

“பாண்டிய அரசர், குலச்சிறை நாயனாரை நோக்கி சமணரைக் கழுவேற்றி முறை செய்யுமாறு பணித்தார். பிள்ளையார் அவர் செய்த சிவா பராதங்கருதி விலக்காதிருந்தார். குலச்சிறை நாயனார் முறை செய்யச் சமணர் யாவரும் கழுவேறி மாண்டார்கள்”

“அரசர் குலச்சிறையாரை நோக்கி, ‘சமணர்களைக் கழுவிலே ஏற்றுக என்று ஆஞ்ஞாபித்தார்...திடபக்தியுடைய அமைச்சர் குலச்சிலையார் கழுத்தறிகளை நிறையாக நாட்டுவித்து அவைகளில் ஏற்ற, அதிபாதகர்களாகிய சமணர்கள் எண்ணாயிரவரும் தானாகவே ஏறினார்கள்.”*

(*A.G. கோமதி அம்மாள், திருத் தொண்டர் பெரிய புராணம், சைவம் வளர்த்த அரசி, கோவில்பட்டி, 1948, பக். 18.)

சமணர்கள் சைவராகுதல்

“அமைச்சர் குலச்சிறையார் கழுத்தறிகளை நாட்டியபின் தோல்வியுற்று நின்ற சமணர் அனைவரும் அத்தறிகளில் ஏறி உயிர் துறந்தனர்”

“எண்ணாயிரம் சமணர்களும் கழுவேறினார்கள் திருஞானசம்பந்தர் கொடுக்க வாங்கி மன்னன் திருநீறணிந்தான். நாட்டுள்ளார் அனைவரும் திருநீறிட்டுச் சைவராயினர். இவ்வாறு சமண மதத்தைத் தழுவியிருந்த மக்கள் மன்னரால் சைவராக்கப்பட்டவர்கள். சைவ சமயத்தைத் தழுவாமல், சமண மதத்தை விடாப்பிடியாகப் பற்றிக் கொண்டிருந்த சமணர்களின் கதி என்ன ஆயிற்று--?

பரிதாபச் சாவுகள்

மன்னன் சமண விரோதியாகி,பாண்டிய நாட்டிலுள்ள சமணர்களை வெட்டி வீழ்த்தி,அவர்கள் சொத்து, சுதந்திரம், கோயில், குளம், மடம் முதலியவைகளைக் கைப்பற்றும்படி தன் சைதன்யங்களை ஏவியதோடு, தன் முன்னிலையிலேயே அநேக ஆயிரக்கணக்கான சமண முனிவர்களை வலியப் பிடித்து கழுமரத்திலேற்றி பதைக்கப் பதைக்கக் கொன்றான்...*

(* அ. பொன்னம்பலம், அப்பரும், சம்பந்தரம், சென்னை, 1983, பக். 28.)

விபூதி-கோமயம்-பசுவின் கன்று

கழுவிலேறாத சமணர்களையெல்லாம், சைவ சாரத்தைக்

கொண்டவர்கள் ஒவ்வொருத்தராகப் பிடித்து அந்த முத்தலைக் கழுமரங்களிலே ஏற்றியிருத்திக் கொன்றார்கள். அந்த சமணர்களுக்குப் பாரம்பரியாக அடியார்களானவர்கள் சாவப் பயந்து மனங்குலைந்து விபூதி பூசிக் கொண்டார்கள். அந்த விபூதி கிடையாமல் பசுவின் கோமயத்தையெடுத்திட்டுக் கொண்டார்கள். அதுவும் கிடைக்காத சிலர் பசுவின் கன்றைத் தோள்மேலே தூக்கிப் போட்டுக் கொண்டார்கள்.

விபூதி, குங்குமம், பசுவின் கன்று இந்த மூன்றுங் கிடையாத சிலர் விபூதி பூசின நெற்றியுடனே நெற்றியை மோதிப் பூசிக் கொள்ள கோமயத்திலும்படியே மோதியிட்டுக் கொண்டும் இப்படியாகத் தங்கள் பாசங்களை வென்று பிழைக்க எண்ணினவர்களைக் கொல்லாமல் விட்டுவிட்டனர்.”*

(* பூவை. கல்யாணசுந்தர முதலியார் பொழிப்புரை, திருவிளையாடற் புராணம், சென்னை, 1925, பக். 494.)

நாய்-நரி தின்ற சமணர் உடல்கள்

விபூதி பூசியவர்கள் உயிர் தப்பினர். அதற்கு உடன்பட மறுத்ததால், கழுவிலேற்றிக் கொல்லப்பட்டவர்களின் உடல்கள் என்ன ஆயிற்று தெரியுமா?

கழுவிலேறி இறந்தவர்களெல்லாம் சுற்றப்பட்ட பருந்துகளும், காக்கைகளும், நரிகளும், நாய்களும் தொடர்ந்து கௌவிப் பிடித்திழுத்துத் தின்னக்கிடந்தார்கள்.

“மற்றிவர் தம்மை யூற்றஞ்செய்திலர் யாருஞ்

சுற்றிய சேனங்காக நரிகணாய் தொடர்ந்துகௌவிப்

பற்றிநின் றீர்த்துத் தின்னக் கிடந்தனர்”

என்று திருவிளையாடற் புராணம் தெரிவிக்கிறது.

பெரும்பற்றப் புலியூர் நம்பி

‘தூண்டுரும் பாக்கியின்றோர் துரும்பு தூணாக்கியே மூன்றாண்டிலோர் புதல்வனாலெண்ணாயிரஞ் சமணர் தம்மைக் காண்டகு கழுவிலேற்றல் கண்டு நீறணியா தந்தோ மாண்டகு கடவுள் வேறுண்டென்பரே மதியிலாரே’ என்று, எண்ணாயிரம் சமணர்கள் பண்டிய நாட்டில் படுகொலை செய்யப்பட்டதை மற்றொரு திருவிளையாடற் புராணமும் தெரிவிக்கிறது.

வ.சு.செங்கல்வராயபிள்ளை

1946 இல் வெளிவந்த ‘தேவார ஒளிநெறி’ நூலில் 189 வது

பக்கம் வரையில் தேவாரத்தில் வரும் சமண - பௌத்தர்களைப் பற்றிய குறிப்புகளை வ.சு.செங்கல்வராய பிள்ளை தந்துள்ளார். சைவ-சமண-பௌத்தர்களுக்கிடையே அன்று நிலவிய கடும்பகை உணர்வினை தேவார வாசகங்களிலிருந்து தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகிறது.

திரு.வி.க.

'திருஞான சம்பந்த சுவாமிகள் முதலியோர் சமண பௌத்தங்களை மிக உரமாகத்தாக்கி மறுத்திருப்பது உண்மையே.' என்பார் திரு.வி.க.

திருஞானசம்பந்தருக்கும், சமணர் மற்றும் பௌத்தர்களுக்கு மிடையே நடைபெற்ற மோதல்கள் குறித்து பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை தெரிவித்திருக்கும் கருத்துக்களில் ஒரு சில இதோ.

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை

"திருஞானசம்பந்தர், பாண்டிமாதேவியினுடைய அழைப்பை ஏற்றுக் கொண்டு மதுரை மாநகரிற் புகுந்தார். திருஞானசம்பந்தரும் சமணரும் பாண்டியன் முன் வாதிட்டனர். அங்ஙனம் அவர் வாதிட்டமை எவராலும் மறுக்க முடியாத உண்மை."

பதிகமும் பத்தாவது பாடலும்

"தமிழ்நாட்டில் புத்தமும், சமணமும் சிதைவதற்குக் காரணமாக ஒரு பெரியார் இருந்தார் என்றால் அவர் திருஞானசம்பந்தரே. இவருடைய ஆயுளில் இப்புறச் சமயங்களை அழித்தலே தமது முதற் கடமை எனக் கொண்டிருந்தார் என்பதற்குச் சான்று பகர்வது தாம் பாடியருளிய ஒவ்வொரு பதிகத்திலும் பத்தாவது பாட்டில் இவர் இச்சமயங்களைக் கண்டித்திருப்பதேயாகும். மதுரையிலே வாதில் ஒப்புயர்வற்ற வெற்றி பெற்ற பின்னரும் இவர் தாம் பாடிய பதிகங்கள் தோறும் சமணரையும், புத்தரையும் கண்டிப்பது நிற்கவில்லை."

அழிக்கப்பட்ட பௌத்தம்

"கூன்பாண்டியன் சைவத்திற் புகுந்த நாளே சமணமும் வீழ்ந்த நாளாகும். அதன் பின் புத்தமதம் திரும்பத்தலை தூக்கவே இல்லை. நம்பியாண்டர் நம்பி காலமாகிய பதினோறாவது நூற்றாண்டில் தமிழ் நாட்டிலிருந்து அவை அழிந்துபோயின".

சமணத்தின் முதற்பகைவர்

சைவ நாயன்மார்களில் ஒருவரான ஞானசம்பந்தர் சிறந்த இசைப் பெருங்கவி, அவர் தென்னகத்தில் சமண சமயத்தின் முதற்பெரும் பகைவரும் ஆவார்.

It shows the position of sambandha as a saiva saint and a lyrical tamil poet, and also as the first great adversary of jainism in southern India."`

இது சுந்தரம் பிள்ளையின் கூற்றாகும்.

பௌத்தர்கள் சைவராகுதல்

"திருஞானசம்பந்தர், பௌத்த-ஜைன சமயங்களை அழித்துப் பக்தி இயக்கத்தையும்,சைவ சமயத்தையும் நிலை நாட்டுவதில் தமது வாழ்நாளைக் கழித்தவர்" என்று மயிலை சீனி . வேங்கடசாமி குறிப்பிடுவார்.

சமணர்களை வாகை சூடிய ஞான சம்பந்தர், பாண்டிய மன்னனின் ஆதரவினால் மதுரையம்பதி முழுவதையும் சைவ சமயத்தைத் தழைத்திட வைத்தார். அதன் பின் அங்கிருந்து புறப்பட்டு,காரைக்கால் திருத்தெளிச்சேரிக்கு அருகிலுள்ள போதி மங்கை என்ற ஊருக்கு வந்தார். புத்த மதத்தினர் அதிகமாக வாழ்ந்து வந்த அந்த ஊரில், புத்த நந்தியுடன் வாதிட்டார். புத்த நந்தியின் தலையில் இடி விழ இறந்தார். பின்னர் சம்பந்தருடன் சாரிபுத்தன் என்பவர் வாதிட்டு தோற்றார். பௌத்தர்கள் பலரும் சைவராகித் திருநீர் அணிந்துக்கொண்டனர்.*

(* Prof. P. Sundaram Pillai, some Mile-stones in the History of Tamil Literature or The age of Tiru-Janana Sambaadha, The Tamilan Autiquary, Tamillan Archaeological society, Trichinopoly, 1909, No. 3, P. 60.

திருஞானசம்பந்தர் மதுரையிலே எட்டு ஆயிரம் சமணரைக் கழுவேற்றினார் என்று சைவ சமய நூல்களாகிய பெரிய புராணம், திருவிளையாடற்புராணம், தக்கயாகப் பரணி முதலிய நூல்கள் கூறுவதும், இவற்றை நினைவு படுத்த மதுரைப் பொற்றாமரைக் குளத்து மண்டபத்தின் சுவரில் சமணரைக் கழுவேற்றுங்காட்சியைச் சித்திரந் தீட்டி வைத்திருப்பதும், மதுரைக் கோயிலில் நடைபெற்று வரும் உற்சவங்களில் ஐந்துநாள் கழுவேற்று உற்சவம் ஆண்டுதோறும் நடைபெற்று வருவதும் இவை நடை பெற்றதற்கு முதன்மையான சான்றுகளாகும்.

அன்றைய அரசரால், அன்றையத் தமிழகத்தில் இவ்வாறு மதம் மாற்றஞ் செய்யப்பட்ட, படுகொலை செய்யப்பட்ட சமண, பௌத்தர்களின் சரித்திரத்தைச் சொல்லிக் கொண்டே

செல்லலாம்.

அன்றைய தமிழகத்தில் சைவர்களால் மட்டுமின்றி, வைணவத்தை தழுவியிருந்த மன்னர்களாலும், பௌத்த-சமணர்கள் பாதிப்பிற்குள்ளாயினர். இதோ அது குறித்தும் ஒரு சில தகவல்கள்....

உதயேந்திரப் பட்டயம்

வைணவ சமயத்தைத் தழுவியிருந்த பல்லவ மன்னன் தம்முன்னோர் சமணர்களுக்கு விட்டிருந்த நிலத்தைக் கவர்ந்து, மறையவர்க்கு உரிமையாக்கினான். “இரண்டாம் நந்திவர்மன் தரும சத்திர முறைப்படி நடவாத மக்களை அழித்து. இந்த நிலத்தைக் கைப்பற்றி விரியிலியாக பிராமணர்க்கு அளித்தான்” என்று உதயேந்திரப் பட்டயம் தெரிவிக்கிறது.

தாமஸ் போக்ஸ்

“இந்த நிலத்திற்கு உரியவர் சமணர்; அவர்களை அழித்து இந்நிலத்தைப் பிறர்க்குக் கொடுத்தது என்பது பல்லவ மன்னனின் வரலாற்றில் ஒரு களங்கத்தை உண்டுபண்ணிவிட்டது. எனினும்இச்செயல் அக்கால நிலையை ஒட்டியதாகும்“ என்ற உதயேந்திரப் பட்டயம் குறித்து தாமஸ் போக்ஸ் எனும்அறிஞர் கருத்து தெரிவித்துள்ளார்.

திருமங்கையாழ்வார்

தெள்ளாற்றுப் போர் வென்ற நந்தியின் பாட்டனான பல்லவ மன்னன் நந்திவர்மன் காலத்தில் திருமங்கையாழ்வார் வாழ்ந்திருந்தார். அவர் சமண, பௌத்த சமயங்களைத் தாக்கி வைணவ சமயத்தை நிலைநிறுத்தினார்.

கி.பி. 8ஆம் நூற்றாண்டினனான இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் சோழநாட்டின் ஒரு பகுதியான ஆலி நாட்டை ஆண்ட குறுநில மன்னர் திருமங்கையாழ்வார்.

இவர் நாகப்பட்டினத்துப் பௌத்த விகாரத்தில் இருந்த பொன்னால் செய்யப்பட்ட புத்தர் சிலையைக் கவர்ந்து வந்து, அதைக் கொண்டு பல கோயில் திருப்பணிகள் செய்தார். பௌத்த சமண சமயங்கள்மீது நாயன்மாரைப் போலவே மிக்க வெறுப்புற்றவர் என்பதை இவரது பாடல்களைக் கொண்டு நன்கு உணர முடிகிறது.

நாகப்பட்டினத்து புத்தவிக்ரஹம்

“பெரிய பெருமாளுக்கும் திருவரங்கச் செல்வரான அழகிய

மணவாளர்க்கும், விமானம், மண்டபம், கோபுரம், ப்ரகாரம் முதலான கைங்கர்யங்கள் செய்தருளத் திருவுள்ளமாய், தம்பரிஜனங்களை அழைத்து, இதற்கு மநார்ஜம் பண்ணும் உபாயம் கேட்டருள, அவர்களும்,. “நாகப்பட்டணத்தில் பொன்னாற் செய்த ஒரு புத்த விக்ரஹமிருக்கிறது. அதைக் கொண்டு வந்து சித்தம் பித்தமாக்கிக் கோயிலுக்குக் கோபுரம் முதலானவை கட்டலாம்“ என்று சொன்னார்கள்.

திருமங்கையாழ்வாரும் நாகப்பட்டணத்திற்குப் போய் அந்த பிம்பத்தை அபகரித்துக் கொண்டு வந்து பங்கபப்டுத்தி திருமதின் கைங்கர்யத்துக்கு அர்ஹமாம்படி உருக்கிப் பொன்னாக்கி, அந்த ரவ்யத்தைக் கொண்டு திருமதிள் முதலாக சிகர பர்யந்தமாகப் பண்ணவேணும் என்று உபக்ரமித்து, திருமதிள் கட்டுவித்துக் கொண்டு வந்தார்.”*

(* மதராஸ், என்.ஹி.டி. கேபால்நாயகரின் கோல்டன் ஸ்டீம் பிரஸ்ஸில், பரிதாபி வருடம் பதிப்பிக்கப்பெற்ற, பால ஸரஸவதி பி. கிருஷ்ணமாசாரிய ஸ்வாமிகள், பரிசோதித்து வெளியிட்ட நாலாயிர திவ்ய பிரபந்தம், பக். 207.)

புத்தர் சிலையை உருக்கி பெருமாளுக்கு சுவர் உருவாக்கி...

“திருமங்கை ஆழ்வார் திருவரங்கம் பெரிய கோவில் விமான மண்டப கோபுராதி கைங்கரியங்கள் செய்யத் திருவுள்ளமாய்ப் பொருள் தேட எண்ணுகையில் நாகப்பட்டினத்தில் ஒரு பொன்னாலான புத்த விக்ரஹமிருப்பதை அறிந்து அதையறுத்துத் திருப்பணி செய்ய நினைத்து, நாகப்பட்டினம் சென்று, புத்தர் கோவிலக்குட் சென்று, விக்ரஹத்தை எடுத்து வந்துடைத்துச் சுட்டுரைத்த நன்பொன்னாக்கித்திருமதில் கைங்கர்யத்துக்கு உபயோகப்படுத்தினர்.

குருபரம்பரப்பிரபாவம்

நீலன், பரகாலன் என்ற பெயர்களைப் பெற்றிருந்த திருமங்கையாழ்வார், சோழ மன்னனால் திருமங்கை நாட்டிற்கு அரசனாக முடிசூட்டப்பட்டவர்.

நாகப்பட்டணத்துப் பௌத்த விகாரையொன்றில் முழுதும் பொன்னால் அமைக்கப்பட்டிருந்த புத்த உருவச் சிலையைக் கவர்ந்து கொண்டு போய் அப்பொன்னைக் கொண்டு திருவரங்கத் திருப்பதியில் திருமதில் எடுப்பித்தல் முதலான திருத் தொண்டுகளைச் செய்தவர் திருமங்கையாழ்வார் என்பதை ‘குரபரம்பாப் பிரபாவம்‘ என்னும் வைணவ நூலும் தெரிவிக்கிறது.

ஹதி கும்படஹ்பா கல்வெட்டு

கி.மு. 454இல் கலிங்க நாட்டிலிருந்து நந்தவர்த்தனன் என்னும் அரசன் சமணர்களின் விருஷபதேவர் சிலையைக் கவர்ந்து சென்றான். அந்தச்சிலை பாடலிபுத்திரத்திலிருந்து வந்தது. மகதப்படையெடுப்பின் போது காரவேலன் அந்தச்சிலையை மீட்டான். உதயகிரி மலையில் கி.மு. 170இல் பொறித்த ஹதிகும்ப்ஹ்பா கல்வெட்டில் இச்செய்தியைப் பொறித்தான். அச்சிலையை மீண்டும் பிரதிஷ்டை செய்து விழா நடத்தினான். தமிழகத்திலிருந்து பாண்டிய மன்னர்களும் அவ்விழாவிற்கு வந்திருந்தனர். இந்தக் கல்வெட்டுச் சான்றிலிருந்து கி,மு, ஐந்தாம் நூற்றாண்டிலேயே சமணர்கள் கோயில் வழிபாடு நடத்தினர் என்ற உண்மை விளங்குகிறது. இவ்வாறு கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலேயே ஆதிக்கம் பெற்றிருந்த சமணம், தமிழகத்தில் கி.பி. எட்டாம் நூற்றாண்டுக்குப் பிறகு வீழ்த்தப்பட்டது.

மாற்றப்பட்ட வழிபாட்டுத் தலங்கள்

கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்குப்பிறகு சமணம் பல முனைகளில் எதிர்ப்புக்களால் நசுக்கப்பட்டது. வேத சமயத்தைச் சார்ந்த அரசர்களான பல்லவர், பாண்டியர் காலத்தில் மிகக் கடுமையான முறையில் ஒடுக்கப்பட்டது.

“அரசர்களில் ஆக்க வடிவான ஊக்கம் இல்லாவிட்டாலும் தாழ்வில்லை. அதனை விட அரசர்கள் ஆட்சி இயந்திரம் முழு எதிர்ப்பாகத் திருப்பப்பட்டது.” *

(* க.ப. அறவாணன், சமணம் வளர்த்த தமிழ் இலக்கணம், புதுச்சேரி, 1993, பக். 9)

சமணர்களது கோயில்களும் சொத்துக்களும் சூறையாடப்பட்டது. அந்நிய மதத்தினரைக் கொல்வதும், அவர்களது சொத்துக்களைச் சூறையாடுவதும் ஹிந்து தர்மமாகக் கருதப்பட்டது.

சமண பௌத்த ஆலயங்கள் ஹிந்து ஆலயங்களாக அப்போது மாற்றப்பட்டன. தமிழகத்தில் அவ்வாறு மாற்றப்பட்ட சில வழிபாட்டுத்தலங்கள் குறித்த விவரங்கள் இதோ :

அமணலிங்கேஸ்வரர்

கோயமுத்தூர்மாவட்டம்- உடுமலைப்பேட்டை திருமூர்த்தி மலையிலுள்ள சமணர் கோவில் அமண லிங்கேஸ்வரர் என்ற ஹிந்து மதக் கோவிலாக மாற்றப்பட்டது.

நாகராஜர் ஆலயம்

“உடையிலாதுழல்கின்ற குண்டருமூணருந்தவத்தாய சாக்கியர் கொடையிலா மனத்தார் குறையாருங் கோட்டாற்றில்...” என்ற சம்பந்தரால் பாடல் பெற்ற தலம் திருக்கோட்டாறு.

கல்வெட்டு சொல்லும் செய்தி

“ஸ்வஸ்தி ஸ்ரீ அருளிச் செயல் கொட்டாறான

மும்முடி சோழபுரத்து நாகர் கோயிலிற்

பள்ளி உடைய குணவீர பண்டிதனும்,

கமல வாகன பண்டிதனும் கொட்டாற்று

நாகர்க்கும் நாகராசாவிக்கும் உச்சிச்சந்தப்

பூசைக்கு நாள் ஒன்றுக்கு அமுதுபடி

நானாழி ஆகவும் திரு நந்தாவிளக்கு

இரண்டாகவும் நடாத்திக் கொண்டு

பொதும்படி கற்பித்து தொண்ணூற்று

ஆறாமாண்டு கார்முதலுக்குப் பள்ளிச்

சத்தமாக விட்டுக் கொடுத்த நிலமாவது...”

பள்ளிச் சந்தம்

இதில் காணப்படும் குணவீர பண்டிதன் கமலவாகன பண்டிதன் ஆகிய பெயர்களே. இவர்கள் சமணர்கள்தான் என்பதைத் தெரிவிக்கப்போதுமான ஆதாரமாகும். இந்த சமய ஆலயங்களுக் அளிக்கப்படும் நிலபுலன்களை மான்யம் எனவும், பிறசமய ஆசாரங்களுக்கு அளிக்கப்படும் நன்கொடைகளைப் பள்ளிச் சந்தம் எனவும் குறிப்பிடுகிறோம். இந்தக்கல்வெட்டு ஒன்றே இது ஒரு சமணப்பள்ளியாகும் என்பதற்கும், பின்னர் இந்து ஆலயமாக மாற்றப்பட்டிருக்க வேண்டும் என்பதற்கு தக்கச்சான்றாகும்.”

நாகராஜர் கோயிலில் சமணச் சான்றுகள் நாகராஜர் கோவில் தூண்களில் சமண சமயற் தீர்த்தங்கரர்களான பார்சவநாதரும், மகாவீரரும் தவக் கோலத்தில் நின்றும் அமர்ந்தும் காட்சி தருகின்றனர்.

கி.பி. 12 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம்வரை உள்ள இடைப்பட்ட காலத்தில் நாகராஜர் கோவில் இந்து சமயக்கோவிலுக்குரிய மாற்றங்களைப்

பெற்றிருக்க வேண்டும் எனத்தெரிகிறது. *

(* எஸ். பத்மநாபன், நாகராஜர் ஆலயம், நாகர்கோவில், 1969, பக். 13, 14.)

விளவங்கோடு மலைக்கோவில்

திருவதாங்கூரின் வடகோடியிலும் கன்னியாகுமரிக்கு அண்மையிலுள்ள தற்கால நாகர்கோவிலைச் சுற்றிலும் ஒரு காலத்தில் சமணப் பள்ளிகள் வளர்ந்தோங்கின. விளவங்கோட்டு திருச்சினாட்டு மலைக்கோவிலும், நாகர்கோவில் ஆலயமும் 13 ஆம் நூற்றாண்டு வரை சமணர் வழிபட்டு வந்த இடங்கள் என்பது உறுதி. பின்னரே அவை இந்துக்கள் வழிபடும் திருக்கோவில்களாக அமைக்கப்பெற்றன என்பார் கே.கே. பிள்ளை.

செஞ்சிப் பகுதியில் சமணம்

கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே செஞ்சிப் பகுதியில் சமணம் அதிகமான இருப்பிடங்களைப் பெற்றிருந்தது. தமிழ்நாட்டின் சமண சமயத்தின் தலைமையிடமான 'மேல்சித்தாமூர்' துவங்கி, 'வடதரம்' வரை 40க்கு மேற்பட்ட சமணச் சான்றுள்ள ஊர்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார் அனந்தபுரம் கோ.கிருட்டிணமூர்த்தி.

அரசுகள் மாறும்போதெல்லாம் சமண சமயத்திற்குப் பல இடையூறுகள் எற்பட்டதை வரலாற்றுச் சான்றுகளைக் கொண்டு அவர் விளக்குகிறார்.

தாயனூர் சமணப்பள்ளி

செஞ்சிக்கு வடமேற்கில் 20 கி.மீ. தொலைவில் தாயனூர் அமைந்துள்ளது. வெங்கட கிருஷ்ணப்ப நாயக்கர் செஞ்சியை அரசு புரிந்தபோது வர்த்தமானாச்சாரியார் தாயனூர் மடாதிபதியாகத் திகழந்தார். அப்போது செஞ்சிமன்னர் சமணர்களைத் துன்புறுத்தியதால் அவர்கள் மேலசித்தாமூர் சென்று குடியேறலாயினர். இதனால் தாயனூரிலிருந்த சமணப்பள்ளி அழிந்து போயிற்று.

வேங்கடபதி நாயக்கர்

செஞ்சியை ஆட்சி செய்து வந்த வேங்கடபதி நாயக்கர் சமணர்களுக்கு மிகுந்த கொடுமைகளைச் செய்தார். அதனைத் தாங்க முடியாத சமணர்கள் தப்பியோடினர். செஞ்சி அரசன் அந்நாட்டுச் சமணர் தலையை வெட்டிய காலத்தில் வேறு நாடுகளுக்குத் தப்பிப்போய்விட்ட சமணர்களில் காங்கேய

உடையாரும் ஒருவர்.*

(* மயிலை சீனி. வேங்கடசாமி, சமணமும் தமிழும், பக். 74.)

பழையாறை சிவன்கோவில்

பழையாறை வடதளியில் இருந்த சிவன் கோயிலைச் சமணர்கள் கைப்பற்றிக் கொண்டனர். சிவ ஆலயம் சமணர்களின் கீழ் சென்றுவிட்டதையறிந்த அப்பர் அதனை திரும்புவம் சைவக் கோவிலாக்க எண்ணினார். அங்குள்ள அரசனது உதவிகளைப்பெற்றார். அரசன் யானைகளைச் சமணர்கள்மேல் ஏவி அவர்களைக் கொன்றான் என்ற சரித்திரம் திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழாரால் சொல்லப்பட்டிருக்கிறது.

திருவாரூர் திருக்குளம்

தமிழ்நாட்டில் பெரிய அளவிலானதும், பதினெட்டு ஏக்கர் நிலப் பரப்பைக் கொண்டதுமான திருவாரூர் திருக்குளம் இப்போதும் இருக்கிறது. திருவாரூரில் சமணர்கள் செல்வாக்குடன் இருந்த காலத்தில் அந்தத்திருக்குளம் சிறியதாக இருந்தது. அத்துடன் அந்தக் குளத்தின் நான்கு பக்கங்களிலும் சமண சமயத்தவருடைய நிலங்களும், மடங்களும், பள்ளிகளும், பாழிகளும் இருந்தன. அப்போது ‘தண்டியடிகள்’ என்னும் சைவ நாயனார் அந்தக் குளத்தைப் பெரிய குளமாக்கிட முயற்சி [a]ச்யதார். அங்குள்ள அரசன் சமணரை ஊரைவிட்டுத் துரத்திய பின்னர், அவர்களுடைய கட்டிடங்களையும், நிலங்களையும்அழித்துப் பறித்து அந்தச் சிறிய குளத்தை இப்போதுள்ள பெரிய குளமாகத் தோண்டினான். ‘பன்னும் பாழிப் பள்ளிகளும் பறித்துக் குளஞ்சூழ் கரைபடுத்து’ என்று திருத்தொண்டர் புராணம் தண்டியடிகள் (27) இதனைஅறிவிக்கிறது.

திருவோத்தூர் சைவக் கோயில்

வடஆர்க்காடு மாவட்டம் செய்யாறு தாலுகாவில் ஆனக்காவூருக்கு அருகில் உள்ள ஊர் புனதாகை பூனாவதி அல்லது திருவத்தூர். இவ்வூரில் இருந்த சமணக்கோவில் இடிக்கப்பட்டுத் தரைப்பகுதி மட்டும் காணப்படுகிறது.

இக்கோயிற் கற்களை எடுத்துக் கொண்டு போய் திருவோத்தூர் சைவக் கோயிலைக் கற்றளியாகக் கட்டினார்கள்.

திருநாகேச்சுரத்துச்சைவக் கோயில்

கும்பகோணம் தாலுகாவைச் சேர்ந்த திருநாகேச்சுரர் கோயிலின் மண்டபக் கற்றூணில் உள்ள சாசனம் தென்கரைத்திரைமூர் நாட்டில் இருந்த மிலாடுடையார் பள்ளி என்னும் சமணக் கோயிலைக் குறிப்பிடுகிறது. திருக்கோவலூரில் இருந்த 'மிலாட்' அரசனால் கட்டப்பட்ட இந்த சமணக் கோயில் பின்னால் இடிக்கப்பட்டது. அக்கோயிற் கற்களைக் கொண்டு இப்போதுள்ள திருநாகேச்சுரத்துச் சைவக் கோயில் கட்டப்பட்டது. இவ்வூருக்கு அருகிலுள்ள வயல்களில் சமண உருவங்கள் இன்றும் காணப்படுகின்றன.

வர்த்தமாரீச்சுரர் கோயில்

நன்னிலம் ரயில் நிலையத்திற்கு கிழக்கே வர்த்தமானீச்சுரர் கோயில் இப்போது உள்ளது. ஸ்ரீவர்த்தமானர் (மகாவீரர்) 21 வது தீர்த்தங்கரர், இவரது பெயரைக் கொண்டே இதுபழங்காலத்தில் சமணக் கோயிலாக இருந்ததைத் தெரிந்து கொள்ள முடிகிறது. கி.பி. 7 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே சைவரால் கைப்பற்றப்பட்ட இச்சமணக்கோயில், சைவக் கோயிலாக்கப்பட்டது.

குலசேகரநல்லூர்ச் சிவன் கோயில்

இராமநாதபுரத்திலிருந்து வடமேற்கேயும், நல்லூர் திருச்சூளை என்னுமிடத்திலிருந்து மேற்கேயும் உள்ள குலசேகரநல்லூரில் சிவன் கோயில் இருக்கிறது.

குலசேகர பாண்டிய மன்னன் இந்தக்கிராமத்திலிருந்த சமணர்களைத் துரத்தி விட்டு, சமணக் கோயிலைச் சைவக் கோயிலாக மாற்றினான்.

பஸ்தீபுரம்

கொள்ளேகால் தாலுகாவில் பஸ்தீபுரத்தில் இருந்த சமணக் கோயிலை இடித்து அந்தக் கற்களைக் கொண்டு சிவன் முத்திரம் என்னும் இடத்தில் காவிரி ஆற்றில் ஒரு பாலம் கட்டினார்கள்.

விசயமங்கலம்

ஈரோடு தாலுகாவில் விசயமங்கலத்திற்கருகில் அரசண்ணாமலை என்ற குன்றில் சமணக் கோயில் இருந்தது. இப்போது அக்கோயில் சிவன் கோயிலாக மாற்றப்பட்டு இருக்கிறது.

கும்பகோணம் விநாயகர் ஆலயம்

கும்பகோணம் நாகேசுவரசுவாமி திருமஞ்சன வீதியில் உள்ள

விநாயகர் ஆலயத்தில் பசுவரிஷி என்னும் பெயருள்ள புத்தர் கோயில்கள் பல பிற்காலத்தில் விநாயகர் (பிள்ளையார்) கோயில்களாக்கப்பட்டன. இங்குள்ள விநாயகர் கோயிலும் அதில் உள்ள புத்தர் உருவமும் இதற்குச் சான்றாகும். *

(* மயிலை சீனி. வேங்கடசாமி, பௌத்தமும் தமிழும், பக். 45.)

காஞ்சிபுரத்திற்குத் தென்மேற்கே பல்லவபுரம் என்ற பல்லாவரத்திற்கு அருகில் 'கணிகிலுப்பை' என்ற ஊரில் புத்தர் கோவிலை இடித்து அந்த இடத்தில் விநாயகர் ஆலயம் கட்டியிருக்கிறார்கள். அதோடு அங்கிருந்த புத்த உருவங்களையும் ஏரிக்கரையில கொண்டு போய்ப் போட்டுவிட்டார்கள்.

காஞ்சிபுரம்

நமது பரத கண்டத்தில் புண்ணிய நகரங்கள் ஏழு என்பர், ஹிந்து மத நம்பிக்கை உடையோர். இதில் அயோத்தி ராமனுக்கும், மதுராவும், துவாரகையும் கிருஷ்ணனுக்கும், மஹாமாயைக்கு ஹரித்துவாரும், சிவபிரானுக்கு காசியும், உஜ்ஜயினியும் சிறப்பானவை. காஞ்சிபுரம் மட்டும்தான் பராசக்தி, சிவபிரான், திருமால், குமரன் ஆகிய நால்வருடைய தனிச்சிறப்பும், காம, ருத்ர, புண்ய குமரக் கோட்டங்களுடன் விளங்குகிறது. *

(* காஞ்சி காமகோட்டமும் பண்டைய இலக்கியங்களும், சென்னை, 1968, பக். 1, 2.)

கி.மு. 500க்கு முன்னரே தோன்றி, வரலாறு புகழும் பெருநகரம் காஞ்சிபுரம்.

காமாட்சியம்மன் கோயில்

காஞ்சிபுரத்தில் முக்கியமானவைகளாகக் கருதப்படும் எல்லாவற்றிலும் காமாட்சி அம்மையார் கோவில் ஒன்றாகும்.

"காமாட்சியம்மன் கோயில் ஆதியில் பௌத்தரின் தாராதேவி ஆலயம். இவ்வாலயத்தில் பல புத்த உருவங்கள் இருந்தன".

ஸ்ரீ ஆச்சார்யாள் பௌத்த மத நிரஸனம் செய்து வேறு மதத்தை நிலைநாட்டிக் காஞ்சியில் ஷண்மத ஸ்தாபனம் செய்தபோது, சக்தி மதத்தலைமை ஸ்தாபனமாகப் பிரதிஸ்டை செய்ததே இந்தக் காமாட்சியம்மன்கோயில ஆகும். காஞ்சிபுரத்தில் உள்ள புத்தர் கோயில் தெரு, இப்போது காமாட்சியம்மன் சந்நிதித் தெரு என்ற பெயரைப் பெற்றிருக்கின்றது. *

(* சோமலெ, செங்கற்பட்டு மாவட்டம், சென்னை, 1963, பக். 139.)

குடுமியாமலை சங்கரன்

“காமாட்சி ஆலயத்தில் உள்ள சங்கரர் சந்நிதியில் உள்ள சங்கரர் சிலை, சமபத்மாசானத்தில் தனது இடதுகையை மடிக்கப்பட்ட காலில் உள்ளங்கை மேலே தெரியும்படி விரல்களைப் பிரித்து வைத்துக் கொண்டும், வலதுகையின் முத்திரையை தரித்துக்கொண்டும், மஞ்சள் உடையை அணிந்து கொண்டும் காணப்படுகிறது. முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது அந்தச் சிலையின் காதுகள் தொள்ளை காதுகளாகக் காணப்படுகின்றன. இது சந்தேகமன்னில் புத்தமத உருவ வர்ணனைகளில் தெளிவாக வர்ணிக்கப்படும் புத்தர் சிலையே. *

(* குடுமியாமலை சங்கரன், காஞ்சிமடத்து ஆச்சாரியார்கள் வரலாறு, மதுரை, 1989, பக். 50, 51.)

K.R. வெங்கட்ராமன்

Scholars long opened that the idiol noworshipped as Sankaracharya in the present Kamakshi temple, origionally represented the Buddha. *

(* K.R. Venkataraman, Devi Kamakshi in Kanchi. Tirunelveli. 1973, P. 39.)

காமாட்சியம்மன் ஆலயமே பௌத்தர் கோயிலாக இருந்திருக்க வேண்டுமென்று பலர் கருதுகிறார்கள்.*

(* எம். ராதாகிருஷ்ணபிள்ளை, தமிழ் வளர்த்த கோயில்கள், சென்னை, 1956, பக். 101, 102.)

கச்சீஸ்வரர் கோயில்

காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள கச்சீஸ்வரர் கோயிலின் முன் கோபுரத்தில் அஸ்திவாரக் கல் கட்டிடத்தில் சில புத்த உருவங்களும், கல் மண்டபத்திலும் சில கண்தூண்களில் புத்த உருவங்களும் இப்போதும் இருக்கின்றன. இவைகளால் இந்த ஆலயம்பூர்வத்தில் புத்தர் கோயிலெனத் தெரிகிறது. *

(* பௌத்தமும் தமிழும், பக். 53, 54.)

கயிலாசநாதர் கோயில்

காஞ்சிபுரம் புத்தேரித் தெருவின் மேற்குக் கோடியில் உள்ள கயிலாசநாதர் கோயில் என்னும் ராஜசிம்மேச்சரம் ஆதியில்

புத்தர் கோயிலாக இருக்க வேண்டும் என்பதற்கு அக்கோயிலின் புராண ஆதாரங்களால் யூகிக்கப்படுகிறது.

ஏகாம்பரேஸ்வரர் கோயில்

காஞ்சி ஏகாம்பரேஸ்வரர் கோயில் வெளிமதிற் சுவரில் சில புத்த உருவங்கள் சிற்பமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த மதிற் சுவர் விஜயநகர அரசனான கிருஷ்ணதேவராயரால் கி.பி. 1509 இல் கட்டப்பட்டது. பழைய புத்தர் கோயில்களை இடித்து அக்கற்களைக் கொண்டு இந்த மதிற்சுவர் கட்டியிருக்க வேண்டும் என்பார், மயிலை. சீனி. வேங்கடசாமி.

அய்யப்பன் கோயில்

மலையாள நாட்டில் ஐயப்பன் கோயில் என்று வழங்கப்படுவது முற்காலத்தில் பௌத்தக் கோயிலாக இருந்தது.

சாத்தன் என்பதும் சாஸ்தா என்பதன் திரிபு, சாஸ்தா என்பதும் புத்தருக்குப் பெயர். காவு அல்லது கா என்பது தோட்டம். சாத்தான் காவு என்றால் புத்தரது தோட்டம் என்று பொருள்.

“புகழ் பெற்ற சாஸ்தா (புத்தமத) கோயிலே அய்யப்பன் கோயிலாக மாற்றப்பட்டது. தர்மசாஸ்தா என்கிற பெயரும் சரணம் என்கிற முழக்கமும் இதனை உறுதி செய்கின்றன.”*

(* பணம்பள்ளி கோவிந்தமேனன், இந்து சூடனின் நூலுக்கு எழுதிய முன்னுரை, பக். 5, மேற்கோள், அ. மார்க்ஸ், மசூதிக்குப் பிறகு மாதா கோயிலா?, புதுவை, 1994, பக். 25.)

குலோத்துங்கன் தூக்கி எறிந்த கோவிந்தராசப் பெருமான்

தமிழ் நூல்களிலும், வடமொழி நூல்களிலும் தில்லைத் திருக்கோயில் சிறந்த சிவஸ்தலமாகவே போற்றப்படுகின்றது. இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி.1135 - 1150) தில்லையிலிருந்து புனிதமான அம்பலத்திலிருந்து கோவிந்தராசப் பெருமானை அகற்றியதாக ‘குலோத்துங்க சோழன் உலா’ நூல் தெரிவிக்கிறது.*

(* K.A.நீலகண்ட சாஸ்திரி, சோழர்கள், புத்தகம் -1, சென்னை, 1989, (தமிழாக்கம் கே.வி. ராமன்), பக். 475.)

“நடராசர் கோயிலுக்குள் தெற்றியம்பலத்தில் அமைக்கப்பட்டிருந்த கோவிந்தராசப் பெருமானின் சிலையைப் பெயர்த்தெடுத்துக் கடலில் எறிந்தான்.” *

(*கே.கே. பிள்ளை, தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், சென்னை, 1975, பக். 288; புலவர் முத்துப்பிள்ளை, வைணவத்

தலங்கள், பக். 63.)

குலோத்துங்கச் சோழனால் தில்லைத் திருக்கோயிலிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட கோவிந்தராசர் திருவுருவத்தை இராமானுஜர் கீழைத் திருப்பதியிற் கொண்டு சேர்த்து அங்கே பிரதிஷ்டை செய்தார் என இராமானுஜ திவ்ய சரிதை கூறுகிறது. *

(* சோமலெ, கோயில், சென்னை, 1979, பக். 409.)

சிதம்பரத்தில் சைவர் பட்ட துயரம்

கி.பி.1597இல் தில்லை நடராசர் கோயில் முதற்பிரகாரத்திலேயே கோவிந்த ராஜர்க்கெனத் தனிக்கோயிலை அமைக்க முன்வந்தனர். செஞ்சியை ஆண்டுவந்த கொண்டம நாயக்கரிடம், 'சைவ சமயத்தார்க்கேயுரிய நடராசர் கோயிலின் உட்பிரகாரத்தினுள் கோவிந்தராஜப் பெருமானுக்குத் தனிக்கோயில் அமைத்தல் கூடாதென்று' தில்லைவாழ் அந்தணர்களும் பொதுமக்களும் கேட்டனர். அவர்களது வேண்டுகோளுக்குச் செவி சாய்க்காததோடு அவர்களைச் சுட்டுத் தள்ளவும் உத்திரவிட்டவர் கிருஷ்ணப்ப கொண்டம நாயக்கர். அங்கு இருவர் சுடப்பட்டு மாண்டதும் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த அம்மையொருவர் உடனே கழுத்தையறுத்து தற்கொலையும் செய்து கொண்டார். அரசராலும் அரசாங்க அதிகாரிகளாலும் சமயப் பிடிவாதங் காரணமாகச் சிதம்பரத்தில் இத்தகைய துன்பங்கள் அக்காலத்தில் நிகழ்ந்ததை பிமெண்டா என்ற பாதிரியார் (Jesuit Father N.Pimenta) தனது யாத்திரைக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

திருச்சிராப்பள்ளி

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் 'சிரா' என்ற சமண முனிவரின் கீழ் சீடர்கள் பலரைக் கொண்டு திகழ்ந்தது சிராப்பள்ளி. சமயப் பள்ளியைத் தாங்கி நின்ற மலை இப்பெயரைத் தனக்கும் பெயராக வாங்கியது. 'திரு' என்ற அடைமொழி சேர்த்து திருச்சிராப்பள்ளி எனச் சொல்லத் தொடங்கினர் மக்கள். காலப்போக்கில் இம்மலைக்குப் பக்கத்தில் இருக்கும் ஊருக்கும் இதுவே பெயராக விளங்கி வருகிறது.

சமணப்பள்ளி சிவ ஆலயமானது

இங்கு சமணப் பள்ளியை அமைத்திடவும், தீர்த்தங்கரரை வழிபடவும் பல்லவ மன்னன் மகேந்திர வர்மன் (கி.பி. 615-630) பெரிதும் உதவினான். காலம் கழிந்தது. சமணராக இருந்த

மகேந்திர வர்மன் சைவராக மாறியபோது, திருச்சிராப்பள்ளியில் இருந்த சமணப் பள்ளியை அழித்தொழித்து அங்கு சிவ ஆலயத்தை எழுப்பினான்.

தி.வி. சதாசிவப்பண்டாரத்தார்

திருச்சி உச்சிப் பிள்ளையார் கோவிலின் பின்பக்கத்தில் இன்றும் சமண முனிவர்களுடைய கற்படுக்கைகளைக் காண முடிகிறது. அந்தப் படுக்கைகளில் சமண முனிவர்களின் பெயர்களும் குறிக்கப் பெற்றுள்ளன. 'சிரா' என்னும் பெயருடைய கற்படுகையும் உள்ளது. சமணப் பள்ளி கோயிலானாலும், பெயர் போகாமல் சிராப்பள்ளி என்றே இன்றும் வழங்கப்படுகிறது." இவ்வாறு கூறுவதற்கு சாட்சியங்கள் வலிமையாக உள்ளன.

சரித்திரப் பேரறிஞர் தி.வி. சதாசிவப் பண்டாரத்தார் 1949 இல் 'செந்தமிழ்' இதழில் 'சிராப்பள்ளி'யின் பெயர்க்காரணத்தைப் பற்றி 'திருச்சிராப்பள்ளி' எனும் ஆராய்ச்சிக் கட்டுரையில் மகேந்திரப் பல்லவன் சமணப் பள்ளியை இடித்து அழித்து சைன ஆலயம் எழுப்பியதைச் சான்றுகளுடன் விளக்கியுள்ளார்.

கலைக் களஞ்சியம்

தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்ட கலைக்களஞ்சியம் 5வது தொகுதியில் 741, 742 வது பக்கங்கள், திருஞானசம்பநதர் தேவாரத்தில் இதனை 'சிராப்பள்ளி' என்றே குறிப்பிட்டுள்ளதையும், விஜயநகர மன்னர்கள் காலம் வரை 'சிராப்பள்ளி' என்றே அழைக்கப்பட்டதையும், ஆதிகாலச் சமணச் சின்னங்கள் அங்கு இருந்ததையும் தெளிவு படுத்துகிறது.

கழுகுமலை

'அரைமலை' எனும் பழம் பெயரை உடைய 'கழுகுமலை' தூத்துக்குடி மாவட்டத்திலுள்ளது. கழுகுமலையின் தென்புற மலைச்சரிவில் முக்குடையின்கீழ் உள்ள சமண முனிவர்களின் சிலைகள் அறுபதுக்கும் மேற்பட்டவை செதுக்கப்பட்டுள்ளன. ஒரு பெரிய சமண சிலை மாடத்தினுள் இருப்பதுபோல் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு சமணர்கள் சிறப்பாக வழிபாடு செய்தனர். சமண சித்தாந்தமும் போதிக்கப்பட்டது.*

(* F. இராசமாணிக்கம், நெல்லை குடைவரைக் கோயில்கள், சென்னை, 1980, பக். 34, 35.)

சமணர் கழுவேற்றம்

மதுரையில் பாண்டிய நாட்டு அமைச்சர் குலச்சிறையார் தாம் அரசப் பணியாளர் என்ற முறைப்படி கழுத்தறிகளை நாட்ட ஏற்பாடுகள் செய்கின்றார். *

(* ந.சுப்புரெட்டியார், ஞானசம்பந்தர், சென்னை, 1986, பக். 223.)

அனல்வாது, புனல்வாது, பிரிந்து தோல்வியுற்ற எட்டாயிரம் சமணர்கள் அரசு நீதிப்படி கழுவிலேற்றி தண்டிக்கப் பட்டனர்.*

(* கிருபானந்த வாரியார், சிவனருட்செல்வர், சென்னை, 1996, பக். 430.)

இக்கால கட்டத்தில் நாடெங்கும் சமணர்கள் கழுவிலேற்றப்பட்டதாகத் தெரிகிறது.

அரைமலை என்று அழைக்கப்பட்ட கழுகுமலையிலும் சமணர்கள் கழுவிலேற்றப்பட்டனர். அதனால் இவ்வூர் கழு(கு)மலை எனப் பெயர் பெற்றது என்றும் கூறப்படுகிறது.*

(* இளசை. கு.பக்தவச்சலம், கழுகுமலைத்தல வரலாறு, கோவில்பட்டி, 1972, பக். 8.)

தஞ்சை இராஜராஜேசுவரம்

சோழ வேந்தர்கள் தமிழ்நாட்டில் எடுப்பித்த கோயில்களும் தலைசிறந்து விளங்குவது முதலாம் இராஜராஜ சோழன் தஞ்சையிலே அமைத்த பெரிய கோயில் ஆகும்.

“கோயிலின் தெற்கு விக்கிரமன் திருவாயிலின் கீழ்ப்பாகத்தில், பௌத்த உருவச்சிலைகள் சில காணப்படுகின்றன.*

(* ஜே.எம். சோமசுந்தரம்பிள்ளை, தஞ்சை இராஜராஜேசுவரம், கலைமகள், தொகுதி 14, 1938, சென்னை, பக். 132, மற்றும் சோழர்கோயிற் பணிகள், சென்னை, 1950, பக். 56.)

டாக்டர் சுரேஷ் பிள்ளை

“கோயில்களை இடிப்பது, மாற்றியமைப்பது ஆகியவற்றில் வேற எந்த மதத்தினருக்கும் இந்து மன்னர்கள் சளைத்தவர்களில்லை. தஞ்சைப் பெரிய கோயில் உட்பட பல முக்கிய இந்துக் கோயில்களை இவ்வாறு மாற்றி அமைக்கப்பட்டவைதான்” என்பதை சுரேஷ்பிள்ளை நிறுவியுள்ளார்.

அழகர் கோயில்

சங்க இலக்கியங்களில் பெயர் சொல்லப்படுகின்ற தமிழ்நாட்டு வைணவத் திருப்பதிகளில் ‘அழகர் கோயில்’ பழமையானதாகும். இங்கு கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பழமையான சாசனங்களில் இக்குகையை அமைப்பித்த ஜைன முனிவர்களின் பெயரும், அதில் வாழ்ந்த ஜைன முனிவர்களைப் பற்றிய செய்திகளும் உள்ளன.

பழங்காலத்தில் இக்கோயில், பௌத்தக் கோயிலாக இருந்தது என்பார் மயிலை சீனிவேங்கடசாமி.

பௌத்தக் கோயிலாக இருந்த இந்தஸ்தலம் வைணவக் கோயிலாகப் பின்னால் மாற்றப்பட்டிருக்கிறது என்பதை தனது ஆய்வு நூலில் டாக்டர் தொ.பரமசிவன் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

திருக்குற்றாலம்

திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்குத்தொடர்ச்சி மலையின் தென்கிளையில் உடலுக்கும், உள்ளத்திற்கும் சுகநிலையாகத் திகழும் சாரல் வளஞ் செய்யும் நகரம் திருக்குற்றாலம்.

தென்னாடு வந்த அகத்திய முனிவர் திருக்குற்றாலத்திற்கு வந்தார். அங்கு ‘திரு முற்றம்‘ என்று யாவரும் பாராட்டும் திருமாலின் ஆலயமும், கணக்கற்ற வைணவ அந்தணர்களும் இருந்தனர். சிவனடியார்களைக் கண்டால், தொன்றுதொட்டுள்ள பகைவர்களைப்போல எணணிக் கொள்பவர்கள் அவர்கள். *

(*கந்தபுராணம், தி. பட்டுச்சாமி ஓதுவார் உரை, காசிமடம் திருப்பனந்தாள் வெளியீடு, திருச்சி, 1962, பக். 195.)

சிவனடியாரைப் போலத் தோற்றமளித்திடும் அகத்தியரை கோவிலுக்குள் வரக்கூடாது என்று வைணவர்கள் தடுத்து நிறுத்தினர்.

பின்னர் அகத்தியர் வைணவக் கோலத்தோடு ஆலயத்திற்குள் சென்றார்.

இ.மு. சுப்பிரமணிய பிள்ளை

“பாலலோசப்பரன் எனப்பாவகம் பண்ணி

மாலினார் சிரமீது தன்மலர்க்கரம் பதித்தே

கோலநீடு மெய்குறுகு நீருறுகு எனக் கூறிச்

சீலமார் சிவலிங்கத்தின் வடிவினைச் செய்தான்!”

என்று திருமால் இருந்த இடத்தில் அவரது திருமேனியை

சிவலிங்கமாக மாற்றியவர் அகத்தியர்.

குறுமுனி, திருமாலைச் சிவனாக்க, அவரைத் தன் கைகளால் தொட்டதால் மூலஸ்தானத்தில் சிவலிங்கத்தின் தலைப்பாகத்தில் ஐந்து விரல்களும் பதிந்திருக்கின்றன.

வைணவர்கள் தொடுத்த போர்

“ஆத்திரமுற்ற வைணவர்கள் அகத்தியரை வெளியே போகாதபடி பிணிப்போம் எனக் கூறி கயிறும், தண்டும் மழுவுங் கொண்டு குறுகினர்.”

வஞ்சக மனத்தனாகிய அகத்தியரைத் தலைவாயில் கடந்து போவதற்கு முன்னம் இறுகும்படி வலியான் முன்னங் கொக்குத்திரன் வந்தது போல வந்தனர்.

உடனே அகத்தியர் தருப்பையை எடுத்து ஏவினார். தாக்குப்பிடிக்க முடியாத வைணவ அந்தணர் அபயம் வேண்டினர். “கருணை முனிவனும் சாந்தி மந்திரத்தால் தருப்பையை வரவழைத்து யாவர்க்கும் உயிர்ப்பிச்சை அருளினார். *

(* செ. முத்துக்குமரப்பிள்ளை, ஸ்ரீ திருக்குற்றால க்ஷேத்திர புராணம், இராமேஸ்வரம், 1935, பக். 126.)

திருமால், சிவலிங்கமானது

“திருக்குற்றாலத்தில் ஆதியில் திருமால் கோயில் இருந்தது. அதன்பின், அகத்திய முனிவர் மூர்த்தியைச் சிவலிங்கமாக்கினார் என்று கந்தபுராணமும், திருக்குற்றாலத் தலபுராணமும் தெரிவிக்கின்றன.* (*பி.ஸ்ரீ.திருக்குற்றாலம், சென்னை, 1960, பக். 7,8)

திருக்குற்றாலத்திலுள்ள திருக்குற்றாலநாதர் கோயில் வைணவக் கோயிலை இடித்துக் கட்டப்பட்டது என்று ஆ.சிவசுப்பிரமணியனும் தெரிவித்திருக்கிறார். *

(* மசூதிக்குப்பிறகு மாதா கோயிலா? பக். 26)

இந்து மதத்திற்குள்ளேயே, நடைபெற்ற மோதலின் போது, வைணவக் கோயிலை இடித்து சைவக் கோயிலாக மாற்றியிருக்கிறார்கள் என்பதற்கு திருக்குற்றாலம் சாட்சியமளிக்கிறது.

தஞ்சை மாவட்டப் பௌத்தக் கோயில்கள்

தஞ்சை மாவட்டத்தில் சிக்கல், வலிவலம், கீழ்வேளூர், தேவூர் ஆகிய ஊர்களிலுள்ள ஹிந்துக் கோயில்கள், ஒரு காலத்தில்

பௌத்தக் கோயில்களாக இருந்திருக்கலாம் என்பார் சுரேஷ் பிள்ளை.

விசயாலயச் சோழிசுவரம்

புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலையிலுள்ள விசயாலயச் சோழிசுவரம் கோயிற்பரப்பினைப்பற்றி எஸ்.ஆர். பாலசுப்பிரணியம் தனது, சோழர் கலைப்பாணி நூலில் பக்கம் 42 இல், 'வலப்பக்கத்திலுள்ள சமணக் குடகு என்ற குடபோகக் கோயில் பிற்காலத்தில் வைணவக் கோயிலாக மாறியது என்றும், அதன் அர்த்தமண்டபத்தில் திருமாலின் பன்னிரெண்டு உருவங்கள் மிக்க சிற்பத்திறனுடன் செதுக்கப்பட்டுள்ளது' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பஞ்ச ஆராமங்கள்

'பஞ்ச ஆராமங்கள் என்று ஒரு சிவதலக் கூட்டம் ஆந்திர தேசத்தில் உண்டு. இவையாவன : திராக்ஷாராமம், குமாராராமம் (சாளுக்கிய பீமேஸ்வரம்) க்ஷீராராமம் (பாலுகோலுவில்) சோமாராமம் (பீமவரத்துக்கருகே உள்ள குனுபூடியில்) அமராராமம் (குண்டூருக்கருகில் உள்ள அமராவதியில்) ஆகியவையாகும். இவை 'சங்கரராமங்கள்' என்று பண்டைக்காலத்தில் பௌத்தர் வசித்த இடங்கள் என்று கூறுவர். சங்காராம் என்று விசாகப்பட்டின மாவட்டத்தில் ஒரு ஊரிருப்பதும் இதற்குச் சான்றாகும். *

(* P.R. ஸ்ரீநிவாசன், நாம் வணங்கும் தெய்வங்கள், சென்னை, 1959, பக். 49-50.)

பூரி ஜெகநாதர் கோயில்

'பூரியிலுள்ள ஜெகநாதர் கோயில் ஒரு காலத்தில் பௌத்தக் கோயிலாக இருந்ததை ரைஸ்டேவிட்ஸ் ஒத்துக்கொள்கிறார்' என்று செகதீசன் குறிப்பிடுகிறார்.

சிதறால் பகவதி கோயில்

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சிதறாலில் திருச்சாணத்துமலையில் இன்று காணப்படும் பகவதி கோயில் தென்னாட்டில் சமணர்களின் மிக முக்கியத்துவம் வாய்ந்த கோயிலாகத்திகழ்ந்ததாகும். அங்குள்ள 'பத்மாவதி' சிலையை 'பகவதி' சிலையாக மாற்றி இந்துக்கள் தங்களது கோயிலாக்கிக் கொண்டனர். திருவிதாங்கூர் ஸ்ரீமூலம் திருநாள் (கி.பி. 1885 - 1924) மன்னரின் காலத்தில் சிதறாலம்மா என்ற பகவதி பிரதிஸ்டை செய்யப்பட்டது.

மதிலகம் கோயில்

‘கேரளத்தில் மதிலகம் கோயிலும், பிற சமணக் கோயில்களும், சமண மதம் வீழ்ந்து, அம்மதத்தவர் இந்துக்களானபோது இந்துக்கோயில்களாக மாற்றப்பட்டன’ என்று ஸ்ரீதரமேனன் குறிப்பிடுகிறார்.

மண்டைக் காட்டம்மன் கோயில்

குமரி மாவட்டத்திலுள்ள மண்டைக்காடு பகவதி அம்மன் கோயில் புத்த சந்நியாசினி ஒருவர் அடக்கம் செய்யப்பட்ட இடமாகும். இங்கும் சமண மார்க்கம் உண்டு. *

(* G.T. விக்கிரமன் தம்பி, எஸ். செண்பகப் பெருமாள், வரலாற்றில் மண்டைக்காடு, மணவாளக்குறிச்சி, 1988, பக். 14, 15.)

வயநாடு காட்டிற்குள் கண்டுபிடிக்கப்பட்ட சிங்ஙேரத் தேவரையும், செல்வரத் தேவியையும் பிரதிஷ்டை செய்துள்ள கோயில், முன்பு சமணக் கோயிலாக இருந்தது. * (* நெடுவட்டம் கோபாலகிருஷ்ணன், மாத்ருபூமி, 1989, பக். 25, நவம்பர் 5-11 இதழ்.) திருச்சூரிலுள்ள வடக்கு நாதர் கோயில் புத்த பள்ளியாக இருந்து இந்துக் கோயிலாக மாற்றப்பட்டது.

சீமாறன் சீவல்லபன்

முதல் வரகுண பாண்டியனின் மகனாகிய சீமாறன் சீவல்லபன் என்னும் சடையமாறன் (மாறவர்மன், ஏகவீரன், பரசக்கர கோலாகலன், அவனிபசேகரன்) கி.பி. 835 இல் ஆட்சி புரிந்த பாண்டிய மன்னன் ஆவான்.

ஈழ நாட்டில் முதல் சேனன் (கி.பி. 831-851) ஆட்சி புரிந்து கொண்டிருந்த காலத்தில், பாண்டிய மன்னன் சீமாறன் சீவல்லபன் படையெடுத்துச் சென்றான்; பல நகரங்களைக் கொள்ளையிட்டான். அத்தோடு நின்றுவிடவில்லை. ஈழத்திலிருந்த விலையுயர்ந்த புத்தர் சிலைகளையும், புத்த விகாரங்களிலிருந்து விலையுயர்ந்த பொருட்களையும் கைப்பற்றி வந்தான் என்று மகா வம்சம் என்ற இலங்கை வரலாற்று நூல் கூறுகிறது.

முதல் சேனன்

‘The Tamils now ravaged the Country Anuradhapura, the beautiful city, was plundered and left desolate. The jewels in the King’s Place. The golden Images which the Piety of Kings and Princes had placed is Buddhist viharas, the golden of Buddha that Mihindu II.

ஈழநாட்டில் மன்னன் முதல் சேனன் (Senan), சீமாறன் சீவல்பனின் தாக்குதலைத் தாக்குப் பிடிக்க முடியாத நிலையில் மலேயாவிற்கு ஓடியபோது, பாண்டியநாட்டுப் படையோடு போர்புரிந்த இளவரசன் மகீந்தன் மடிந்தான்; பாண்டிய மன்னன் புத்தர் ஆலயங்களிலுள்ள செல்வங்களைக் கொள்ளையிட்டதோடு, பொன்னாலான புத்தர் சிலைகளையும் கவர்ந்து வந்தான் என்பதனை இலங்கை வரலாற்று நூல் தெரிவிக்கிறது-.

பிரான்சின் சார்லஸ்

கி.பி. 780 இல் பிரான்சு தேச சக்கரவர்த்தி சார்லஸ், 'சீக்னி' எனும் பகுதியைக் கைப்பற்றினார். அப்போது அங்கு கிறிஸ்தவ மதத்தை ஏற்றுக் கொள்ள மறுப்பவர்களுக்கு மரண தண்டனை அளித்திட உத்தரவிட்டார்.

மால்ட்டா, ரோட்ஸ், சசிலி, கிரைட்

கி.பி. 976 முதல் 1013 ஆம் வருஷம் வரையில் மால்ட்டா, ரோல்ட், சிசிலி, கிரைட் தீவி முதலிய இடங்களிலிருந்த முஸ்லிம்கள் ஒருவரும் விடப்படாமல் கொல்லப்பட்டே ஒழிக்கப்பட்டார்கள்.

அனட்டோலியா

கி.பி. 1098 இல் கிறிஸ்தவர்கள் அனட்டோலியாவைக் கைப்பற்றினார். அப்போது அங்கு வசித்து வந்த 70,000 ஆண், பெண் மற்றும் குழந்தைகளான முஸ்லிம்களை கொலை புரிந்தனர்.

மங்கோலியார்களால் கொல்லப்பட்ட முஸ்லிம்கள்

செங்கிஸ்கான் என்ற மங்கோலியத் தலைவனின் குடி மக்கள் மத்திய ஆசியாவில் தங்கு தடையின்றித் திறந்து விடப்பட்டனர். அவர்கள் சென்ற இடங்களில் எல்லாம் சேதத்தை விளைவித்தனர். எங்கும் சிதைவு தலை தூக்கி நின்றது. பன்னிரண்டாம் நூற்றாண்டிலேயே செங்கிஸ்கான் இறந்துவிட்டான். அவருடைய புதல்வர்களும், பேரர்களும் அவருடைய படையெடுப்புக்களை விடாமல் தொடர்ந்து நடத்தி வந்தனர்.*

(* Khaliq ahamad Nizami, Some aspects of Regilions and Politics in India during the Thirtenth century, Bombay, 1961, 1961, நூலில் பேராசிரியர் இர்பான்ஹபீப் எழுதிய முன்னுரை, பக். IV.)

கி.பி. 1228-1260ஆம் வருடங்களில் சுமார் 80 லட்சம்

முஸ்லிம்களை மங்கோலியர்கள் கொன்றார்கள்.

ஸ்பெயின்

ஸ்பெயின் என்று தற்போது அழைக்கப்படும் நாடு பழங்காலத்தில் ஐபீயத் தீபகற்பம் என்று அழைக்கப்பட்டது. அது ஐரோப்பாவின் தென்மேற்கு வாயிலாகும். அநாகரிக மக்கள் என்று அழைக்கப்பட்ட விசிகோத்தர்கள் அப்பகுதியைத் தங்கள் அதிகாரத்துக்குட்படுத்தி வைத்திருந்தனர்.

யூதர்கள் கொல்லப்படுதல்

ஸ்பெயினில், வம்பா ஆட்சியாளர்களின் காலத்தில் (Wamba's rule) (கி.பி 672-680) யூதர்கள் அடிமைகளாக்கப்பட்டு ஆப்ரிக்க நாடுகளுக்கு விற்கப்பட்டனர்.

His reign is only Memorable for his fierce and cruel Persecution of the Jews, who were mostly killed, or sold is to slavery, or driven over in to Africa*

(* General sir Edmund Barrow, The Growth of Europe through the Dark ages, A.D. 401-1100, London, 1972. P. 123.)

இவ்வாறு ஸ்பெயினில் யூதர்கள் மிகவும் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதன் விளைவு அடுத்த நூற்றாண்டிலேயே முஸ்லிம்கள் ஸ்பெயினைக் கைப்பற்றிக் கொண்டார்கள்.

முப்பது லட்சம் முஸ்லிம்கள்

கி.பி. 1492இல் எலிசபத் மகாராணியின் காலத்தில் ஸ்பெயினுள்ள கிரானாடா என்னும் நகரம் முஸ்லிம்களிடமிருந்து கிறிஸ்தவர்களால் கைப்பற்றப்பட்டது.*

(*என்.ஜே. இராஜகோபால், ஐரோப்பிய வரலாறு (கி.பி.1453-தற்காலம்வரை) சென்னை, 1978, பக். 27.)

ஸ்பெயினிலுள்ள பள்ளிவாசல்கள் கிறிஸ்தவக் கோயில்களாக மாற்றப்பட்டன. அப்போது முப்பது லட்சத்திற்கும் அதிகமான முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

"Between the Fall of Granada and the First decade of the seventeenth century it is estimated that about "three Million Muslems were bonished or executed." என்பார் பிரபல வரலாற்றாசிரியர் பிலிப் கே கிட்டி.

நெருப்பிற்கு இரையாக்கப்பட்ட முஸ்லிம்கள்

ஸ்பெயினில் அல்ஹாமா, குனராத்தா, பேஜா முதலிய வனப்புமிகுந்த நகரங்களில் கிறிஸ்தவ ஆதிக்கத்தினர்

முஸ்லிம்களை வெட்டி இரத்த வெள்ளம் பெருக்கினர். அனேகரை அக்னிக்கும் இலக்காக்கி விட்டனர். பல மஸ்ஜித்களையும் (பள்ளிவாசல்களையும்) மதக் கல்விக் கூடங்களையும் தகர்த்தும், நாசப்படுத்தியும் நஷ்டம் உண்டாக்கி விட்டனர். முஸ்லிம் எளிய மக்கள் பலர், கிறிஸ்தவர்களின் கொடுமையினால் கருணையில்லாது கொலை செய்யப்பட்டு துடிதுடித்து உயிர் விட்டார்கள்.*

(* மௌலவி அஹ்மத் ஸயீத்சாஹிபு, (ஸைபுல் இஸ்லாம் ஆசிரியர்) இஸ்லாமும் உலகமும், முழு உலகிலும் இஸ்லாம் பரவிய வரலாறு, சென்னை, பக். 92, 93.)

கத்தோலிக்கர்களால் கொல்லப்பட்ட பிராட்டஸ்டண்டுகள்

பிரான்ஸ் நாட்டில் தூயபர்த்தலோமியோவின் (St. Bartholmeu' s day) நாளன்று 9வது சார்லஸ் மன்னரின் காலத்தில் கி.பி. 1572 ஆகஸ்ட் 24 இரவில் 25 ஆயிரம் பிராட்டஸ்டண்டுகள் கத்தோலிக்கர்களால் கொல்லப் பட்டனர். அவர்களது உடல்கள் வீதியிலே, நடைபாதையிலே, நாய்நரிகள் தின்னக் கிடந்தது.

'கேதரீன்டி மெடிசி'யால் தூண்டிவிடப்பட்ட கத்தோலிக்கர்கள், முன் ஆராய்ந்து முடித்திருந்த திட்டப்படி ஹியூகி நாட்டுகளைத் தாக்கிப் படுகொலை செய்தனர்.*

(* ந. சுதர்சனபாபு, பிரிட்டன் வரலாறு, சென்னை, 1978, பக். 567.)

இவ்வாறு திட்டமிட்டு கத்தோலிக்கர்களால் இலட்சக் கணக்கில் பிராட்டஸ்டண்டுகள் கொல்லப்பட்டனர்.

ஜான்லூத்ரப் மோட்லி

'Within the whole kingdom, the number of victims was variously estimated at form twenty five thousand to one hundred thousand. The heart of Protestant Europe, for an instant, stood still with horror.*

(* John Lothrop Motley, The Rise of the Duch Republic, Vol. II. Newyork, 1864, P. 389.)

இன்றளவும் ஐரோப்பாவில் வாழும் பிராட்டஸ்டண்டுகளின் மனத்தை புண்ணாக்கிடும் நிகழ்ச்சியாக பர்த்தலோமியா நாளன்று நடைபெற்ற நிகழ்ச்சி அமைந்திருக்கிறது என்பார் ஜான்லூத்ரப்மோட்லி. ஸ்பெயினில் பிராட்டஸ்டண்டுகளும், ஸ்காட்லாந்தில் கத்தோலிக்கர்களும், இங்கிலாந்தில் இருசாரரும் நூறாயிரக்கணக்கில் தலைவெட்டி இயந்திரத்தில் கொலையுண்டு மாண்டனர்.

இராசராசசோழன் அழித்த கோவில்கள்

இராசராஜசோழன் இலங்கைத் தீவைத்தாக்கி அனுராதாபுரம், பொலனருடைய போன்ற இடங்களிலிருந்து பௌத்த கோயில்களைத் தரைமட்டமாக்கினான்.*

(*S.I.I. Voi. IV. No. 1388, கே.கே. பிள்ளை, சோழர் வரலாறு, 1977, சென்னை, பக். 191.)

பின்னால் வந்த போர்த்துக்கீசியர்களோ இந்துக்களின் ஆலயங்களைத் தகர்த்தார்கள்.

பரநிருபசிங்கன்

இலங்கையில் பரநிருபசிங்கன் ஒன்பதாண்டுகள் ஆட்சி புரிந்தான். அவன் இறந்ததும், பரங்கிகள் (போர்துக்கீசியர்), சிவாலயம், சுப்பிரமணியர் ஆலயம், விநாயகர் ஆலயம் என்பவைகளைளெல்லாம் இடித்தார்கள். அங்கிருந்த அரிய நிதிகளையெல்லாம் கவர்ந்தார்கள். சனங்களையெல்லாம் கிறிஸ்தவர்களாகுமாறு நெருக்கினார்கள். அவர்களின் பொருட்களைக் கவர்ந்தனர். அவர்கள் தண்டத்துக் கஞ்சி அகத்தே சைவராகவும் புறத்தே கிறிஸ்தவராகவும் நடிப்போர் பலராயினர். கிறிஸ்தவ சமயப் பிரவேசஞ் செய்யோமென உயிர்விடுத்தோரும் அநேகர். அந்நியதேசஞ் சென்றனர் அநேகர்.

பரராசசிங்கன்

பரநிருபசிங்கன் இறந்த பின்னர் அவன் மகன் பரராசசிங்கனைப் பரங்கிகள் முதன் மந்திரியாக்கினார்கள். (கி.பி. 1581-1592) பரராசசிங்கன் இறந்ததும், கீரிமலையிலிருந்த திருத்தம்பல லேசுவரன் கோயிலையும், நல்லூர் கந்தசாமி கோயிலையும் இடித்தொழித்தார்கள். இடியாமல் விட்டிருந்த ஆலயமெல்லாமே இடிப்பித்தார்கள்.*

(* மாதகல் மயில்வாகனப் புலவர் எழுதிய யாழ்பாண வைபவமாலை, முதலியர் குல. சபாநாதன் பதிப்பு, கொழும்பு, 1953, பக். 79-81.)

கிராமங்களிலிருந்த கோயில்களையெல்லாம் தேடி இடித்து அங்கிருந்த விலை உயர்ந்த விக்கிரமங்களையும் திருவாபரணங்களையும் கொள்ளை கொண்டார்கள்.

1500 வருஷ காலமாகத் தமிழரசரும், பிரபுக்களும் பெருநிதி கொண்டு நிருமித்துப் பாதுகாத்து வந்த ஆலயங்களையெல்லாம் பரங்கிகள் கை சிறிதுங் கூசாது தகர்த்துச் சித்திரமணஞ்

சிறிதுமில்லாத நாடாக்கி விட்டார்கள்.

திரிகோணமலை சிவாலயம்

கி.பி. 1622இல் திரிகோணமலையிலே சுவாமி மலை மேலிருந்த மகோந்நதமானதும், அதிவிநோத சித்திர சிற்ப அலங்காரங்கள் அமைந்ததும் ஆகிய கோபுரத்தோடு கூடிய ஏழுமதிலும் அநேக மண்டபங்களுமுடைய சிவ ஆலயத்தை தகர்த்தார்கள்.

சீதா வாக்கைச் சிவாலயம்

தினம் ஒன்றுக்கு 2000 சிற்பர்கள் கூடி வேலை செய்தால், இருபது வருடத்தில் முடித்தற்கரிய மகத்தான அற்புத அலங்காரமான கருங்கல் திருப்பணியுடையதென்று பரங்கிய சரித்திராசிரியர்கள் பாராட்டிய சீதா வாக்கைச் சிவாலயத்தையும் இடித்து ஒழித்தார்கள்.

தேவேந்திரபுரத்து விஷ்ணு ஆலயம்

தேவேந்திரபுரமெனக் காலிக்கப்பாலுள்ள இடத்தில் (Dondra) பொன்மயமான சிகரங்களோடு கூடிய, உயர்ந்த வானளாவிய கோபுரங்களையம், தோரண மண்டபங்களையும், அநேக விசித்திரமான உள்மண்டபங்களையும் உடையதாய்க் கடல்மேற்செல்வோர் கண்களையுங் கவர்ந்து இலங்கையைச் சிறப்பித்து நின்ற விஷ்ணு ஆலயத்தையும் கைகூசாது இடித்து அழித்தார்கள்.” *

(* ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, யாழ்பாணச்சரித்திரம், யாழ்ப்பாணம், 1915, பக். 74-77.)

இலங்கையில அழிக்கப்பட்ட ஆலயங்கள்

இலங்கையில் திருக்கேதீஸ்வரம், திருகோணமலை, தேவிநுரை, அநுராதாபுரம், பொலன்னறுவ திருக்கோயில், யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் உலோகத்தாலும், கல்லாலுமான இந்து சமயச் சிற்பங்கள் கிடைத்துள்ளன. அநுராதாபுரத்தினைச்சேர்ந்த பத்துக்கு மேற்பட்ட சைவக் கோயில் அழிபாடுகளை எச்.சி.பி. பெல் வேதானித்துள்ளார். தேவி நுவரையிலே சிறப்புடன் விளங்கிய உபுல்வன் (விஷ்ணு) ஆலயத்திலிருந்த நேர்த்தியான சிற்பங்களைப் பற்றி கி.பி. 1344இல் இலங்கைக்கு வந்த இபின் பத்தூத்தாவும், இதனை அழித்துச் சூறையாடிய போர்த்துக்கீசியரும் குறிப்பிட்டுள்ளனர். இலங்கையில் பிறகரையோரப் பகுதிகளிலே இருந்த பௌத்த, இந்துக் கட்டிடங்களும், சிற்பங்களும் போர்த்துக்கீசியரால்

அழித்தொழிக்கப்பட்டன.

கிறிஸ்தவ மதத்தை ஏற்றுக் கொண்டிருந்த போர்த்துக் கீசியர்களாலும், டச்சுக்காரர்களாலும் இலங்கையில் ஹிந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டதைப் போலவே தமிழகத்தில் ஹிந்து மன்னர்களாக இருந்த கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப வந்தவர்கள் துன்புறுத்தப் பட்டார்கள்; ஊரைவிட்டு விரட்டப்பட்டனர்; கொல்லப்பட்டனர். கிறிஸ்தவ மதத்தைத்தழுவியவர்கள் அடைந்த இன்னல்கள் ஏராளம்; இதோ சில சான்றுகள் :

ராமராயர்

விஜய நகரப் பேரரசில் சதாசிவராயர் (Sadasiva) கி.பி. 1541 அல்லது 1542இல் பெயரளவில் பேரரசரானார். உண்மையில் அரசாங்க அதிகாரங்களை நடத்தி வந்தவர் இராம ராயர். (Rama raya)

திருமலை (Tirumala) வேங்கடாத்திரி (Venkatadri) என்ற தனது சகோதரர்கள் துணையுடன் இராம ராயர் ஆட்சிபுரிந்து வந்தவேளை.

கிறிஸ்தவர்கள் துயரம்

இராமராயரின் படையினர், கி.பி. 1544இல் ஆராம்பள்ளிக் கணவாய் வழியாகக் கன்னியாகுமரி வரைசென்று கிறிஸ்தவ ஊர்களைத் தாக்கினர். வீடுகளுக்கு நெருப்பு வைத்தனர்; சிலரைச் சிறைப்பிடித்தனர். பலர் தப்பியோடி கன்னியாகுமரிக்கு அருகே கடலிலிருந்த பெரிய பாறைகளில் (இன்றைய விவேகானந்தர் மண்டபப் பாறை) தஞ்சம் புகுந்தனர். பல நாட்களாகப் பசியாலும், தாகத்தாலும் வாடின, சிலர் மடிந்தனர்.

தூய சவேரியார்

7-4-1506இல், நவார் நாட்டில், ஜான்-தி-ஜாஸுஸ் மரியா-தி ஆஸ்பில் குவத்தா என்ற பெற்றோருக்குப் பிறந்தவர் தூய பிரான்சிஸ் சேவியர் (St. Francis Xavier). தமிழ்நாட்டில் கிறிஸ்தவ மதம் தழைத்திட உழைத்த இந்து தேச அப்போஸ்தலராக சிறப்புடன் பணியாற்றியவர் இவர். கன்னியாகுமரியில் துயரத்திலிருந்த கிறிஸ்தவர்களைக் காப்பாற்ற விரைந்தார்; நிவாரணப் பணிகளில் இறங்கினார். * (* எஸ். வெனான்சியுஸ், திருத்தலத் கோட்டாறு, பெங்களூர், 1988, பக். 9.)

மணப்பாட்டிலிருந்து எழுதிய மடல்

புன்னைக் காயலில் பணியாற்றிய மான்சியாஸ் (Mancias)

என்பவருக்கு கி.பி. 1544 ஜூன் 16இல் பிரான்சிஸ் சேவியர் மணப்பாட்டிலிருந்து எழுதிய கடிதத்தில், “கொம்புத் துறையிலிருந்தபோது கன்னியாகுமரி கிறிஸ்தவர்களைப் பற்றி வெகு துயரமான செய்தி கேள்வியுற்றேன். விஜயநகரப் பேரரசப் படையினர் அவர்களைச் சிறைப்பிடிக்க முயன்றுள்ளனர். அதனால் கிறிஸ்தவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள தப்பியோடி கடலுக்குள்ளேயிருக்கும் பாறைகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்; அவர்களைச் சந்தித்து உதவிட நான் கிளம்புகிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

கன்னியாகுமரியில் தஞ்சம் புகுந்திருந்த கிறிஸ்தவர்களைச்சந்தித்து, ஆறுதல் அளித்து, அழைத்து வந்து மணப்பாடு, பெரிய தாழை, புதுக்கரை ஆகிய ஊர்களுக்குப் பாதுகாப்பாகக் கெண்டு வந்து சேர்த்தவர் புனிதசேவியர்.

கிறிஸ்தவக் கிராமங்கள் சூறை

கி.பி. 1544 செப்டம்பரில் கயத்தாறு பாண்டிய மன்னராகிய வெட்டும்பெருமானின் படைவீரர்கள் தூத்துக்குடி அருகிலுள்ள கிறிஸ்தவக் கிராமங்களைச் சூறையாடினார்கள். தப்பியோடிய கிறிஸ்தவர்கள் வான்தீவு, பாண்டியன் தீவில் தஞ்சம் புகுந்தனர். வாடி வதங்கிய அவர்களின் வாட்டம் போக்கவும் விரைந்தார் சேவியர்.*

(*Epistolae Francisci Xaverii, Vol. I. P. 222-223.)

வெந்த வீடுகள், உயிரற்ற உடல்கள்

மணப்பாட்டிலிருந்தும், சுற்று வட்டாரங்களிலிருந்தும் அரச படைவீரர்களுக்குப் பயந்து கிறிஸ்தவர்கள் துணியின்றி, உணவின்றி கூட்டங்கூட்டமாய் வந்து கொண்டேயிருந்தனர். எங்கும் வெந்த வீடுகள், உயிரற்ற உடல்கள், நான்கு மாதங்கள் ஒவ்வோர் இடத்திற்கும் சென்று அகதிகளுக்கு அப்போது உதவியவர் சேவியர்.*

(* ஜே.ம.ஞானாதிக்கம், அர்ச் சவேரியார் சரிதை, பாளையங்கோட்டை, 1958, பக். 117.)

புனித தோமையர்

சகமோ சட்டத்தின் காலத்தில் அர்ச். தோமை அப்போஸ்தலர் இந்தியாவிற்கு வந்தார். கிறிஸ்தவக் கோயிலைக் கட்டி புதுமைகள் செய்தார்.

அப்போது ஆட்சி செய்த மன்னன் இதனை அறிந்தான். கோபங்கொண்டான். பழுக்கக் காய்ச்சிய இரும்புத் தகடுகள் மீது

தோமையரை நிற்க வைத்தான். சிறையில் அடைத்தான். சித்திரவதை செய்தான்.* (* எம்.மோ.வாஸ் அடிகளார், புனித தோமையார் வரலாறு, திருச்சி, 1971, பக். 68-80.)

ஊருக்கு வெளியே அழைத்துச் சென்று தோமையரைக் குத்திக் கொல்ல உத்திரவிட்டான் மன்னன். முழங்காலிட்டு செபித்துக்கொண்டிருந்த புனித தோமையர் அரச ஆணைப்படி ஈட்டியால் குத்திக் கொல்லப்பட்டார்.

இரத்தச்சாட்சிகள்

மதுரை மன்னர் திருமலை நாயக்கர் காலத்தில் திருச்சியில் மார்ட்டின் குருவும், மதுரையில் நொபிலி பாதிரியாரும், வெங்கட்ராம பிள்ளையால் கி.பி. 1622ல் சிறைவைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாயினர்.* (* தனிஸ் லாஸ்மேரி, தமிழ்த்தந்தை தத்துவபோதகர், மதுரை, பக். 53.)

நாகர்கோவில் சித்தர் காற்றாடி மலையில் கி.பி. 1752 -1753ல் ஐந்து காயங்கள் பட்டு கிறிஸ்தவ மதத்திற்காக உயிர் துறந்த வஞ்சி நாட்டு வேதசாட்சி பக்த தேவசகாயம் பிள்ளை.

திருநெல்வேலி திருச்சபையின் முதலாம் இரத்தச்சாட்சியாக கிறிஸ்தவ மதத்தை ஏற்றுக் கொண்டதற்காக கொலை செய்யப்பட்ட தாவீது சுந்தரானந்தம் (1806). தமிழகத்தில் இப்படி இரத்த சாட்சியாக மரித்தவர்கள் ஏராளம். ஔரங்கஜேப் ஆட்சிக் காலத்தின் போது தமிழகத்தில் மறவர் சீமையில் கிழவன் சேதுபதி ஆட்சி நடைபெற்றது.

கிழவன் சேதுபதி

நிர்வாகத் திறமையாலும், போர் புரியும் ஆற்றலாலும் மறவர் சீமையின் புகழ் எங்கும் ஓங்கும் படியும், அனைவரும் மதிக்கும்படியும் மறவர் சீமையைச் சுதந்திர நாடாக அறிவித்தவர் கிழவன் சேதுபதி. (கி.பி. 1674-1710) இவர் தமது ஆட்சிப் பகுதியில் கிறிஸ்தவ மதப் பிரச்சாரம் நடைபெறுவதை அறிந்தார். “மாதா கோவில்களை இடித்துத் தரை மட்டமாக்குங்கள். அந்த மதோன்மத்தர்களை இழுத்து வாருங்கள்” என்று தனது படை வீரர்களுக்கு கிழவன் சேதுபதி ஆணையிட்டார்.* (*T. Raja Ram Row, Ramnad Manual, P. 142-143.)

ஜான் டீ பிரிட்டோ

போர்த்துக்கல்லைச் சேர்ந்த சால்வதோர் தொபிரித்தோ டோனா பிரிட்டென் பிறரோ தம்பதியருக்குப் பிறந்தவர் (1-3-1647 - 4-2-1693) ஜான் டீ பிரிட்டோ என்னும் அருளானந்தர்.

இவர் இந்தியாவிற்கு கிறிஸ்தவ மதப் பிரச்சாரம் செய்ய வந்தார். ஞானமுத்து உபதேசியாரிடம் தமிழ் கற்றார். கி.பி. 1685 இல் மதுரை மிஷன் சிரேஷ்டராக நியமிக்கப்பட்டார். கி.பி. 1686 மே 5 இல் மறவர் சீமையில் மதப்பிரச்சாரம் செய்யத் துவங்கினார். அப்போது இவர் அடைந்த சித்திரவதைகளுக்கு அளவேயில்லை.

‘சிவா, சிவா’

கிழவன் சேதுபதியின் ஆட்சியின்போது கி.பி. 1693 ஜனவரி 8இல் கைது செய்யப்பட்டார் ஜான் டீ பிரிட்டோ. வீரர்கள் அவரைக் கொடூரமாக அடித்து இரத்தம் சொட்டச்சொட்ட இழுத்துச் சென்றனர். திறந்த வெளியில் நிறுத்தி வைத்து ‘சிவா, சிவா’ என்று சொல்லும்படி அவரைக் கட்டாயப் படுத்தினார்கள். அவ்வாறு அவர் சொல்ல மறுத்ததால், பலவாறாக அருளானந்தர் சித்ரவதை செய்யப்பட்டார்.* (*தமிழ்நாடு, மாவட்ட விவரச் சுவடிகள், இராமநாதபுரம், அ. ராமசாமி, மொழிபெயர்ப்பு, சோமலெ, சென்னை, 1990, பக். 106.)

கண்டம் விட்டு கண்டம் வந்தவர்

கண்ட துண்டமாக வெட்டப்பட்டார்

கி.பி. 1692 பிப்ரவரி 4 ஆம் நாள் அமைச்சர் முருகப்பிள்ளை உத்தரவிட்டார். கொலைக்களத்தில் பெருமாள் என்பவன் தீட்டப்பட்ட அரிவாளுடன் நின்றான்.*

(* சி.கே. சுவாமி, ஓரியூரின் ஒளிவிளக்கு புனித அருளானந்தர், திருச்சி, 1983, பக். 193-194.)

கண்டம் விட்டு கண்டம் வந்து சமயப்பணி புரிந்து வந்த அருளானந்தரின் உடல் கண்ட துண்டமாக வெட்டப்பட்டு காக்கை, கழுகுகளுக்கு இரையாகப் போடப்பட்டது.*

(* மீ.மனோகரன், கிழவன் சேதுபதி, சிவகங்கை, 1983, பக். 94.)

அவரது இரண்டு கால்களையும், கரங்களையும் வெட்டி இவைகளையும் சிரசையும் திரேகத்தோடு சேர்த்துக் கட்டி ஒரு மரக் கம்பத்தில் ஏற்றிக் காவல் காத்திருந்தார்கள்.*

(* இஞ்ஞாசியார் சுவாமி, அருளானந்தர் சிரித்திரம், மதுரை, 1939, பக். 153-154.)

கிறிஸ்தவர்களை எச்சரித்திட

அருளானந்தரின் தலையும், கால்களும், கைகளும்,

கிறிஸ்தவர்களையும், மறவர்களையும் பயமுறுத்திடும் வகையில் கோட்டையின் முன் தொங்கவிடப்பட்டது.

“His head and limps were cut off and hung up as a warning to all Christians.”*

(* J.H. Nelson, The Madura Country a Manual, Madras, 1868, (AES Reprint 1989) Part III. P. 220.)

கிறிஸ்தவம் பரவாமல் தடுத்திட

‘ஜான் டி பிரிட்டோ என்ற கத்தோலிக்கப் பாதிரியார் ஓரியூரில் தூக்கிலிடப்பட்டது கிழவன் சேதுபதியின் ஆட்சிக்காலத்தில்தான்.”* (* W.Francis, Madura, Vol. I. Madras, 1914, P.76.)

‘கிறிஸ்தவ மதமாற்றம் 17 ஆம் நூற்றாண்டில் இறுதியில் இராமநாதபுரம் சீமையில் புளியால், சருகனி முதலிய சில பகுதிகளில் காட்டுத்தீ போலப் பரவிற்று. இதைத் தடுக்கும் முயற்சிகளை மேற்கொண்டபோது சேதுபதியின் நாட்டில் அருளானந்தர் தலையும், உடலும் வெவ்வேறாயின.’* (* சோமலெ, நமது தமிழ்நாடு, இராமநாதபுர மாவட்டம், சென்னை, 1972, பக். 38, 39.)

உலகெங்கிலும் ஒரு மதத்தவர் மீது இன்னொரு மதத்தவர் நடத்திய தாக்குதல்கள், ஒருவரை ஒருவர் கொன்று குவித்த கொடூரங்கள், வழிபாட்டுத் தலங்களை அழித்தொழித்தது, அல்லது அதை தாங்கள் விரும்பிய வழிபாட்டுதலங்களாக மாற்றியது. குறிப்பிட்ட ஒரு மதத்தை ஏற்றுக் கொண்டதற்காக சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டது. சிரச்சேதம் செய்யப் பட்டதுமான சரித்திரச் செய்திகள் ஏராளம். ஏராளம். இன்னும் சொல்லிக் கொண்டே செல்லலாம்.

தேவோத் பாதன நாயகா

சிலைகளை உலைக்களத்திற்கு இழுத்துச் செல்லப்படுவதற்கு முன் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களை மலஜலம் கழிக்க வைத்ததுடன், விக்கிரகங்களை உடைத்து உருக்குவதற்கென்றே ‘தேவோத் பாதன நாயகா’ என்கிற அதிகாரியை நியமித்திருந்த ஹர்ஷர் முதல், அருளானந்தரின் தலையைத் துண்டிய கிழவன் சேதுபதி வரையிலான வரலாற்றுச் செய்திகளை நடுநிலையாளர்கள் சிந்தையில் வைத்துக் கொள்ள வேண்டுகிறேன். இனி, ஔரங்கஜேப் விஷயங்களுக்கு வருவோம்.

இஸ்லாமியரின் இன்னல்கள்

ஔரங்கஜேப்பின் மத துவேஷத்தைப் பற்றியப் பரவலாகப் பேசப்பட்டாலும், அவர் தீவிர நடவடிக்கைகளில் இறங்குவதற்கு காரணமாக இருந்த நிகழ்ச்சிகளை இன்னமும் சரியாக உணர்ந்து கொள்ளப்படவில்லை. அல்லது உணர்ந்து கொள்ளப்படும் வகையில் சொல்லப்படவில்லை என்பதே உண்மையாகும்.

முஸ்லிம் மன்னர்களின் செல்வாக்கு உச்சகட்டத்தில் இருந்தபோது, அவர்களது சாம்ராஜ்யத்திலிருந்த மிகப் பெரிய நகரங்களில் ஒன்றில் ஒரு ஆண்டு முழுவதும் அவர்கள் வெள்ளிக்கிழமைப் (ஜும்ஆ) பிரார்த்தனையை நடத்த முடியாமல் இருந்தார்கள் என்ற செய்தி மிகவும் ஆச்சரியப்படத்தக்க செய்தியன்றோ!

ஓராண்டு ஜும்ஆ தொழுகை நடைபெறாத பள்ளிவாசல்

அஹமத் நகரில், நகரத்தின் வாயிலுக்கு அருகில் ஒரு பெரிய பள்ளிவாசல் இருந்தது. ஒரு வருடகாலமாக அங்கு வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகை நடைபெறவில்லை. அங்குள்ள 'கூலிஸ்' இனமக்கள் (Kulis) வெள்ளிக்கிழமையன்று முஸ்லிம்கள் நடத்திடும் பிரார்த்தனையை அனுமதிக்கவில்லை. இது ஔரங்கஜேப்பின் கவனத்திற்கு வந்தது.

உடனே ஔரங்கஜேப் பிறப்பித்த அரச ஆணையில், முஸ்லிம்களின் ஜும்ஆ தொழுகைக்கு ஏற்பாடு செய்ததுடன், முஸ்லிம்களுக்கு யாரும் தொல்லை கொடுக்காத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் தனது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

முகலாயர்ஆட்சியில் இந்துக்கள் பாதிப்பிற்குள்ளாகியது உண்மை; ஆனால் ஹிந்துக்கள் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் எதிர் நடவடிக்கையான முஸ்லிம்களின் பள்ளிவாசல்களை அழித்து வந்தனர் என்பதும் வரலாற்றில் காணப்படும் உண்மையாகும்.

பள்ளிவாசலில் நாட்டியக் கச்சேரி

ஹுசைன் நிஜாம்ஷாவிற்கு (Husain Nizamshah) எதிராகப் போரிட்டபோது, விஜயநகர அரசரின் உதவியை, அலி அடில்ஷா (Ali Adilshah) நாடினார். அப்போது விஜயநகர அரசரிடம் வைத்த கோரிக்கையில், அங்குள்ள பொதுமக்களைக் கொடுமைப்படுத்தக்கூடாது என்றும், பள்ளிவாசல்களை ஏதும் செய்யக்கூடாது என்றும் கோரினார்.

ஆனால் விஜயநகர அரசர் அகமது நகருக்குள்

பிரவேசித்தபோது அங்குள்ள பள்ளிவாசல்களுக்குள் நுழைந்து, அங்கு நாட்டியக் கச்சேரிகளை நடத்தினார்.

ஹிந்துக்கள் கைப்பற்றிய பள்ளிவாசல்கள்

ஷாஜகான் குஜராத்தில் தங்கியிருந்தபோது, முஸ்லிம் பெரியவர்கள் வந்து, 'இங்குள்ள ஹிந்துக்கள் முஸ்லிம் பெண்களை மணந்து பல பள்ளிவாசல்களைக் கைப்பற்றிக் கொண்டார்கள்' என்று முறையிட்டனர். அதன்பேரில் இதுகுறித்து நடவடிக்கை எடுத்திட ஷேக் முகம்மது குஜராத்தி (Shaikh Mahmud Gujarati) என்பவர் நியமிக்கப்பட்டார்.

அதன்படி பள்ளிவாசல்களிலிருந்து ஹிந்து ஆலயங்களாக மாற்றப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டிருந்த பழைய பள்ளிவாசல்களை இடித்துத் தள்ளிவிட்டு, புதிய பள்ளிவாசல்கள் கட்டப்பட்டது. இதுமாதிரியான நடவடிக்கைகள் சாம்ராஜ்யம் முழுவதும் நடைபெற்றிடவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பள்ளிவாசலைக் கோயிலாக்கும் முயற்சி

காசிப்பூரிலிருந்து நான்கு மைல் தொலைவில் உள்ள குளத்திற்கு ஒரு முஸ்லிம் துறவி வந்தார். அந்தக் குளத்தில் தண்ணீர் அதிகமாக இருந்தது. அதன் கரையில் இறைவனின் திருநாமங்களோடு கூடிய பள்ளிவாசல் ஒன்று இருந்தது. ஹிந்துக்கள் அதனைக்கோயிலாக மாற்றும் விதத்தில் அந்தக் கட்டிடத்தின்மேல் எண்ணெயை ஊற்றி, செந்தூரப்பொடியைத் தூவி வைத்திருந்தார்கள். முஸ்லிம் துறவி அதனைக் கழுவிச் சுத்தப்படுத்திவிட்டு தனது நண்பகல் பிரார்த்தனையை அங்கே நடத்தினார் என்று முஸ்லிம் துறவி, ஷபான் 25 ஹிஜ்ரி 1077இல் எழுதிய குறிப்பு தெரிவிக்கிறது,

மராத்தியர் இடித்த பள்ளிவாசல்கள்

"சதாரா (Satara) பாலி (Parli) கோட்டைகளை ஔரங்கஜேப் வெற்றிபெற்றபோது கோட்டைகளுக்குள் பிஜப்பூர் அரசர்களால் கட்டப்பட்டிருந்த பள்ளிவாசல்கள் இடிக்கப்பட்டிருப்பதை ஔரங்கஜேப் அறிந்தார். அதனைத் திரும்பவும் கட்ட உத்தரவிட்டார்" என்று காபிகான் தெரிவித்துள்ளார். சிவாஜியால் இடிக்கப்பட்ட பள்ளிவாசல்கள் குறித்த விவரங்களை முன்னரே குறிப்பிட்டுள்ளோம்.

ராஜபுத்திரார்கள் இடித்த பள்ளிவாசல்கள்

ராஜபுதனத்தின் வரலாற்றைத் தெளிவாக எழுதிய டாட், இராஜபுத்திரர்கள் பள்ளிவாசல்களை இடித்த செய்தியைத்

தெரிவித்துள்ளார். அஜீத்சிங்கின் வெற்றியைப் பற்றிக் குறிப்பிடும் டாட், முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டனர்; வெட்டப்பட்டனர், ராமநாமத்தை சொல்லும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். அவர்களது தாடியை எடுப்பதற்கு கைநிறைய தங்கமும் கொடுக்கப்பட்டது. பள்ளிவாசல்கள் இடிக்கப்பட்டு ஹிந்துக்கோயில்கள் கட்டுவதற்கும் முயற்சிகள் அஜீத்சிங்கால் செய்யப்பட்டது.

மதுராவின் ஆளுநர் பொறுப்பு

கஜினி முகம்மது காலத்திலிருந்தே முஸ்லிம் பிடியில் மதுரா நகரம் மிகுந்த தொல்லைக்குள்ளாயிற்று. எனவே அந்தப் பகுதியிலுள்ள 'ஜாத்' இன மக்கள் முஸ்லிம் விரோத மனப்பான்மை கொண்டிருந்தார்கள்.

ஷாஜகான் ஆட்சிக் காலத்தில் கி.பி. 1636இல் முர்ஷித் குலிகான் (Murshid Qulikhan) மதுராவின் பௌஸ்தாராக (Faujdar) அனுப்பி வைக்கப்பட்டார். அவர் அங்கு நடைபெற்ற கலகத்தில் ஓராண்டுக்குள் கொல்லப்பட்டார். அதன்பின் அலாவர்தீகான் (Allahverdikhan) நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து கி.பி. 1642இல் இர்தத்கான் (Iradatkhan) பொறுப்பேற்றார். மதுராவில் கலகம் புரிந்த ஹிந்துக்களுக்கெதிராக தீவிர நடவடிக்கை எடுக்காததால் அவரும் பின்னர் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டார். இவ்வாறாக மதுராவின் பௌஸ்தார் பொறுப்பு, அதனை ஏற்றுக் கொண்டவர்களின் பெயருக்கு களங்கம் விளைவித்து வந்தது. எனவே மதுராவில் ஆளுநராகச் செல்வதற்கு யாரும் முன்வரவில்லை.

பழிவாங்கப்பட்ட முஸ்லிம்கள்

ஸ்திரத்தன்மை இல்லாத நிலைமையில், பெயரளவிற்கு மதுராவில் முகலாயர் ஆட்சி இருந்து வந்தது. கி.பி. 1669இல் தில்பத் (Tilpat) ஜமீன்தார் கோக்லா (Gokla) என்பவரின் தலைமையில் 'ஜாத்' இன மக்கள் கிளர்ச்சி செய்தனர். மதுராவைச் சுற்றியுள்ள பல கிராமங்களையும் கொள்ளையிட்டனர். குறிப்பாக அப்போது முஸ்லிம்கள் பழிவாங்கப்பட்டனர். (The Musalmans were the chief victims of the rising) இந்தக் கலகத்தின்போது மதுராவின் பௌஸ்தார் அப்துல் நபியும் (Abdul Nabi) கொல்லப்பட்டார்.

மதுரா முற்றுகை

மதுராவில் கலகம் தீவிரமாயிற்று. அத்தோடு அது ஆக்ரா நகருக்குள்ளும் பரவியது. இந்த நிலைமையில் கி.பி. 1669

நவம்பரில் ஔரங்கஜேப் தானே தலைமையேற்று மதுராமீது படையெடுத்தார். அவருடன் மதுராவின் பௌஸ்தார் ஹசன் அலிகானும் (Hasan Alikhan) இணைந்து தீவிரமாகப் போர் புரிந்தார்கள். ‘தில்பத்’ தாக்கப்பட்டது. கோக்லா சிறைப்பிடிக்கப்பட்டார்; அவருக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டது. இத்தகைய கடுமையான போரின்போதுதான் மதுராவில் கேசவராய் ஆலயம் ஔரங்கஜேப்பால் இடிக்கப்பட்டது.

கேசவராய் ஆலயம் குறித்த மேலம் சில செய்திகள் இதோ:

உபகுப்தா பௌத்த ஆலயம்

மதுரா நகரின் மையப் பகுதியில் 50 அடி உயரத்தில் உயர்வான நிலப் பகுதியில், புகழ்வாய்ந்த உபகுத்தாவில் (Upagupta) புத்த மடாலயம் அமைந்து இருந்தது. பௌத்த மதத்தின் வீழ்ச்சியின் போது, பௌத்த சீடர்கள் இங்கிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். அவர்களது கட்டிடங்களும் வழிபாட்டுத் தலங்களும் இடிக்கப்பட்டு, அவர்களது பொருட்களும் அழிக்கப்பட்டது. அநத இடத்தில்தான் பின்னாளில் கேசவராய் ஆலயம் எழுந்தது.

கேசவராய் கோயிலுக்கு அருகில் பௌத்த புராதன, அடையாளங்கள் பலவற்றை நேரில் பார்த்த ‘கன்னிங்காம்‘ இதனைத் தெரிவித்துள்ளார். கேசவராய் ஆலயம் எப்போது, யாரால் கட்டப்பட்டது?

மதுரா கேசவராய் ஆலயம்

முகலாய மன்னர் ஜஹாங்கீரின் ஆட்சியின் போது, அவரது தூண்டுதலின்பேரில், பீச்சிங் டியோ பண்டேலா (Birsingh Deo Bundela) என்பவர் 19-8-1602இல் அபுல்பாசலைக் (Abul Fazl) கொலை செய்தார்.* அதற்காக பதவி உயர்வும் பெற்றார். அத்தோடு மட்டுமின்றி அதற்காக, அவருக்கு 32 இலட்ச ரூபாய் கொடுக்கப்பட்டது. அந்தப் பணத்தைக் கொண்டு பீர்சிங்டியோ பண்டேலா கட்டியதுதான் மதுரா கேசவராய் ஆலயமாகும். (* Ishwari Prasad, History of Muslim rule, Allahabad, 1933, P. 357.)

முஸ்லிம் ஒருவரைக் கொலை செய்து அதன்மூலம் பெற்ற பணத்தைக் கொண்டு கட்டப்பட்ட இந்த ஆலயத்தை முதலில் பௌத்த மடாலயமாகத் திகழ்ந்த இந்த ஆலயத்தை, மதுராவில் நிலவிய பயங்கரமான நிலையைச் சரிசெய்திடவும், கலகக்காரர்களை ஒடுக்கிடவும் முடிவெடுத்த போரின் போதுதான், ஔரங்கஜேப் கேசவராய் ஆலயத்தை இடித்தார்.

இவ்வாறு இதனை விரிவாகச் சொல்லிவிடாமல் பொத்தாம் பொதுவாக, ஔரங்கஜேப் கேசவராய் ஆலயத்தை இடித்தார் என்று மட்டும் சொல்வது சரிதானா?

காசி

இதுவரை எந்த வரலாற்று ஆசிரியரும் சரியாக ஆராய்வதற்கு முனையாத விசுவநார் ஆலயம் அமைந்துள்ள காசியில், கட்டப்பட்டுக்கொண்டிருந்த ஒரு பள்ளிவாசலை இடித்து அதில் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்களையும் காயப்படுத்தினார்கள். அப்போது இந்தச் செய்தியறிந்த ஷா யாஸின் என்பவர் (Shah Yasin) மந்தியாவிலிருந்து காசிக்கு விரைந்தார். காசியில் வாழ்ந்து வந்த முஸ்லிம் நெசவாளர்களை ஒன்று திரட்டிச் சென்று பழிக்குப் பழியாக அங்குள்ள இந்து ஆலயத்தை இடித்தார்.

கட்டிடத் தொழிலாளி ஷயீத்

கட்டிடத் தொழிலாளியான ஷயீத் (Sayyid) என்பவர் காசியில் ஒரு பள்ளிவாசல் கடடுவதற்கு அப்துல் ரசூல் (Abdul Rasul) என்பவரிடம் பொறுப்பேற்று அதற்காக அடிப்படை வேலைகளைச் செய்து, அஸ்திவாரமிட்டார். அவ்வாறு அவர் பள்ளிவாசலுக்கு அஸ்திவாரமிட்ட இடத்திற்கருகில், ஒரு ஹிந்துக் கோயிலும், இராஜபுத்திரர்கள் வசித்து வந்த பல வீடுகளும் இருந்தன.

மீண்டும் மீண்டும் இடிபட்ட மசூதி

முஸ்லிம்கள் இந்த இடத்தில் பள்ளிவாசலைக் கட்டுவது முறையல்ல என்று தீர்மானித்த இந்துக்கள், முஸ்லிம்களின் பள்ளிவாசல் கட்டிடத்தைத் தரைமட்டமாக்கிட முடிவெடுத்தனர். பள்ளிவாசலுக்குரிய கட்டிடச் சுவர்கள் இடிக்கப்பட்டன.

பள்ளிவாசலை முஸ்லிம்கள் திரும்பவும் கட்டிட, இந்துக்கள் திரும்பவும் இடித்திட இவ்வாறு நான்கு தடவைகள் நடைபெற்றது. அப்போது நடைபெற்ற மோதல்களில் ஷயீத் காயப்படுத்தப்பட்டார்.

புனிதப் போர்

இந்த நிலைமையில் அந்தப் பகுதியிலுள்ள முஸ்லிம்கள் குவியத் துவங்கினர். அதனைப் பார்த்ததும் எதிரிகள் அங்கிருந்து ஓடிப்போய்விட்டனர். அதனைத் தொடர்ந்து ஷாயாஸினும், முஸ்லிம்களும் பள்ளிவாசல் கட்டப்பட்டுக் கொண்டிருந்த இடத்திற்கருகில் கூடினார்கள்.

பள்ளிவாசலுக்கருகில் ஹிந்துக் கோவிலைக் கட்டியிருந்த ராஜா, சக்கரவர்த்தி ஔரங்கஜேப்பின் தர்பாரிலே உள்ளவர். ஆதலால், அந்த ராஜாவின் பகையை, அதிருப்தியை சம்பாதிக்க உண்மையிலேயே பயந்தார்கள். இருந்தபோதிலும் ஷாயானின் வாளைக் கையில் எடுத்துக கொண்டு புனிதப் போருக்குத் தயாரானார்.

ஷாயாஸின்

ஔரங்கஜேப்பின் உள்ளூர் அதிகாரிகள் இம்மாதிரியான கடுமையான நடவடிக்கைகளை சக்கரவர்த்தியின் அனுமதியின்றி எடுக்கக்கூடாது என்று ஷாயாஸினுக்குச் செய்தி அனுப்பினார்கள். ஷாயாஸின் அதனைப் பொருட்படுத்தவில்லை. சௌகம்பா பஜார் (Chau Khamba Bazar) பகுதிக்கு ஷாயாஸின் திரளான கூட்டத்தினரோடு வந்தார். அங்கிருந்த ஹிந்துக் கோயிலின் கதவுகள் உடைக்கப்பட்டன. அங்கே இருந்த சிலைகள் வீசி எறியப்பட்டன. நகரிலிருந்த நூற்றுக்கணக்கான ஆலயங்களையும் இடித்ததார்கள்.

ஏற்க இயலாத செய்கைகள்

காசியின் பெனி மாதா (Beni Madho) ஆலயத்தை இடிக்கவும் கிளம்பிச் சென்றார்கள். ஆனால் அதற்குச் செல்லும் வழிகள் அடைக்கப்பட்டிருந்தன. எனவே அவர்கள் அதற்கு மேல் சென்று அந்தக் கோயிலை இடிக்க முடியவில்லை.

காசியில் வாழ்ந்து வந்த முஸ்லிம் துறவி ஒருவர் ஹிஜிரி 1079இல் குறிப்பிட்டிருககும் விஷயங்கள் இவை :

மதவெறி பிடித்த ஒரு கும்பல் கலகம்செய்கிறபோது புனித ஸ்தலங்களை இடிப்பது போன்ற மோசமான குற்றங்கள், ஏற்றுக்கொள்ள இயலாத செய்கைகள் நடந்து விடுகின்றன.

பனாரஸ் மாவட்ட கெஜட்டியர்

பனாரஸ் மாவட்ட கெஜட்யார் பக்கம் 208இல் (District Gazeteer of Benares) கி.பி. 1809 ஆம்ஆண்டில் நடைபெற்ற ஒரு மதக் கலவரத்தின் போது, கயான்பாபி (Gyan Bapi) உள்பட 50 பள்ளிவாசல்களை ஹிந்துக்கள் இடித்துத் தள்ளினார்கள் என்ற செய்தி காணப்படுகிறது.

ஸ்ரீராம் சங்கர் திரிபாடி

காசியில் தற்போதுள்ள விசுவநாதர் ஆலயம் பல மன்னர்களால், பலமுறை இடிக்கப்பட்ட செய்தியினை ‘காசி விசுவநாதரின் தங்கக் கோவிலின் வரலாறு’ என்ற கட்டுரையில்

காசிவிசுவநாதரின் கோவிலின் நிர்வாகத் தலைவர் ஸ்ரீ ராம் சங்கர் திரிபாடி தெரிவித்துள்ளார்.

பதினேழாம் நூற்றாண்டின் போர் முறைகள்

இன்றைக்கு இருப்பதைப்போல் நவீன ராணுவத்தினர் கைக்கொள்ளும் யுத்த சட்ட திட்டங்களை, போர்த் திட்டங்களை 17 ஆம் நூற்றாண்டிலுள்ள அரசர்களும், தளபதிகளும் மேற்கொள்ளவில்லை. நவீன காலத்தில் வாழும் நாம் சகித்துக் கொள்ள முடியாத பல நடைமுறைகள் அந்தக் காலத்தில் நடைபெற்றன.

ஒரு நாட்டை வெற்றி பெறுவதற்கு போர்த்தளபதிகள் எந்த முறையையும் கையாண்டார்கள்.

சித்தூர் ராணாவிற்கு எதிராக ஜஹாங்கீர், ஷாஜகானை அனுப்பியபோது, நடைபெற்ற போரில், வயல்கள், தோட்டங்கள் எரிக்கப்பட்டன. கிராமங்கள், நகரங்கள் கொள்ளையிடப்பட்டன. கோயில்கள் இடிக்கப்பட்டன. புனிதக் கோயில்களைப் பாதுகாப்பதற்காகத்தான் மிகக் கடுமையான முறையில் அப்போது போர் நடைபெற்றது. ஏராளமான இந்துக் கோயில்கள் இடிக்கப்பட்டன.

ஜஹாங்கீரின் செயல்கள்

ஹிந்துக்களைச் சமாதானப் படுத்துவதற்காக, பசுக்களைக் கொன்ற முஸ்லிம்களை சிரச்சேதம் செய்தவர் ஜஹாங்கீர். ஆனால் அவரது ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற போரின்போதுதான் ஹிந்து ஆலயங்களும் இடிக்கப்பட்டன என்பதனை அறிகிற போது இது மத வெறியா? அல்லது போர் வெறியா? என்பதனை ஆராய வேண்டியது அவசியமாகிறது.

இடிக்கப்பட்ட கோவில்கள்

கி.பி. 1679இல் கண்டலோ (Khandela)விலுள்ள இராஜபுத்திரர்கள் கலகம் செய்த போது, அங்கே பெரும் படையுடன் தாருப்கான் (Darab Khan) அனுப்பப்பட்டார். அப்போது அங்குள்ள பெரிய கோவில் இடிக்கப்பட்டது. ஔரங்கஜேப் போருக்கு நேரில் சென்ற போதும் ஜோத்பூர் (Jodhpur). சித்தூர் (Chittor) கோயில்கள் இடிக்கப்பட்டன.

இடிக்கப்பட்ட பள்ளிவாசல்கள்

அதே வேளையில் ராணா குன்வர் பீம்சிங்கை (Rana Kunwar Bhim Singh) எதிர்த்து முகலாயப் படையினர் போரிட்டுக் கொண்டிருந்தபோது, குன்வர் பீம் சிங்கின் இரண்டாவது

குமாரன் தலைமையில் இராஜபுத்திரப்படை தனியே பிரிந்து சென்று குஜராத்தில் முகலாயர் வாழும் பகுதியில் நுழைந்தது. அங்கு அப்போது 300 பள்ளிவாசல்கள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டன.

புராதனக் கோயில்கள்

இந்த நிலையில் ஔரங்கஜேப் ஆட்சியின் போது முகலாய எல்லைக்குள் இருந்த புராதனமானக் கோயில்கள் எதுவும் இடிக்கப்படவில்லை.

கோல்கொண்டா மற்றும் கரீம் நகர் (Karimnagar) கோட்டைகளுக்குள்ளிருந்த புராதன ஹிந்துக் கோயில்கள் எதுவும் ஔரங்கஜேப் ஆட்சியில் இடிக்கப்படவில்லை. அத்தகைய புராதனக் கோயில்கள் எல்லாம் இன்னும் நிலையாக இருக்கின்றன. அவைகளில் ஹிந்துக்களால் இன்றளவும் வழிபாடுகள் நடத்தப்பட்டும் வருகின்றன.

இஸ்லாமிய நெறி

'லகும் தீனுகும் வலியதீன்' என்று திருகுர்ஆன் (109:6) திருவசனம் தெரிவிக்கிறது.

'உனக்கு உனது மார்க்கம். எனக்கு எனது மார்க்கம்' என்று தெளிவாக தெரிவித்து விட்ட நிலையில், பிறமதத்தவரின் வணக்க ஸ்தலங்களை அழிப்பதை இஸ்லாமிய மார்க்கம் ஏற்றுக் கொள்ளவில்லை.

அரசியல் ரீதியான நடவடிக்கை

ஷாஜகானின் ஆட்சியின்போது புதிதாகக் கட்டப்பட்ட கோயில்களை இடித்துவிட வேண்டும்மென்ற ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அந்த அரச ஆணை ஔரங்கஜேப் ஆட்சிக்காலத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டபோது சில புதிய கோயில்கள் இடிக்கப்பட்டன. 'எவர்களுக்கு எதிராகப் போர் புரியப்படுகின்றதோ அவர்களுக்கு தற்காப்பின் பொருட்டுப் போரிட அனுமதியளிக்கப்பட்டுவிட்டது' (22:39) என்ற திருகுர்ஆனின் திருவசனப்படி ஆட்சிக்கு எதிராக கிளம்பியவர்களை அடக்கப் போர் தொடுத்தபோது சில கோயில்கள் இடிக்கப்பட்டன.

போர்க்களத்தில்...கலகக் காலங்களில்

ஔரங்கஜேப்பின் ஆட்சியில் புதிதாகக் கோயில்கள் சட்டத்திற்குப் புறம்பாகக் கட்டப்பட்டபோது, கோவிலைக் கட்டியவர்கள் சட்டத்தினை நன்கு அறிந்திருந்தும் அதனை

மீறிய காரணத்திற்காகத்தான் அவைகள் இடிக்கப்பட்டன. கலகக்காலங்களிலும், போர்க்களங்களிலும் கோயில்கள் இடிக்கப்பட்டன. இவை மதரீதியான நடவடிக்கைகள் அல்ல; முழுக்க முழுக்க அரசியல் ரீதியான நடவடிக்கைகளாகும்.

இவைகளைத் தவிர்த்து, ஔரங்கஜேப் ஆட்சியில் புராதனக் கோயில்கள் எவையாவது, எங்காவது இடிக்கப்பட்டிருந்தால் அவை நியாயத்திற்குப் புறம்பானதுதான்; ஆனால்....

கா. அப்பாத்துரை

“நம் காலத்தில் சமயவாதிகள் எண்ணுவதுபோல் சமய இயக்கங்கள் வெறும் அன்பியக்கமாகவோ, அறிவியக்கமாகவோ வரலாற்றில் இருந்ததில்லை. போர்களாலும் சூழ்ச்சிகளாலும் மன்னர் பேரரசு நிறுவுவதுபோலவே, சமயங்களும் அரசியல் ஆதிக்கம் சூது வாது சூழ்ச்சிகளாலே உலகில் பரவ முடிகிறது” என்பார் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை.

தொ. பரமசிவன்

“ஒரு சமயத்தார்க்குரிய கோயில் மற்றொரு சமயத்தாருடைய கோயிலாக மாறுவதோ, மாற்றப்படுவதோ சமய இயக்கங்களின் வரலாற்றில் வியப்பான செய்தியாகாது” என்பார் ஆய்வாளர் டாக்டர் தொ. பரமசிவன். இந்த அடிப்படையையும் நாம் தள்ளிவிடமுடியாது.

பேரரசர் தயவில் வளர்ந்த பௌத்தம்

“யமுனை நதி தீரத்திலிருந்து மேற்காகப் பாலைவனங்களைக் கடந்த பகுதிகளிலும், கிழக்காக இமாலய மலைகளின் கிழக்குக் கோடி வரையிலும் காணப்பட்ட ஏராளமான அரசுகளின் அரசர்களும் மிக உறுதியாக புத்தரின் தருமத்தை ஏற்றுக் கொண்டவர்களாக விளங்கினார்கள்” என்று பாஹியான் தனது பயணக்குறிப்பிலே இந்தியாவிலே பௌத்தம் பரவி இருந்தது பற்றி சொல்லியிருக்கிறார். பௌத்த மதத்தின் இன்றைய நிலை என்ன? ஓரிஸ்ஸாவில் ஒரு சிறு பிரிவாக, சுமார் 2000 பேர் மட்டும் இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து வந்த வெளி நாட்டவர்கள் தவிர வேறு பௌத்தவர்கள் இந்தியாவில் கிடையாது.* (* Max Weber, The Religions of India, London, 1960, P. 18.)

இந்தியாவில் அசோகப் பேரரசரின் ஆதரவால் வளர்ந்த புத்த மதம், அதன் பின்னால் அழிந்தே போயிற்று.

பாமரர் நெஞ்சத்திலும் இஸ்லாம்

ஆனால் இந்தியாவில் இஸ்லாமிய மார்க்கம் ஔரங்கஜேப் போன்ற மொகலாயப் பேரரசின் முழு ஆதரவினால் மட்டும் பரப்பப்பட்டிருந்தால், பௌத்த மதத்தைப்போல பட்டுப் போயிருக்க வேண்டுமே; மாறாக இந்தியாவில் இஸ்லாம் பரந்து விரிந்து, வேரூன்றி, பாமரர் நெஞ்சத்திலும் இன்றளவும் நிலைத்திருக்கிறதே! அது மக்களின் மனங்களில் நிலையான இடத்தைப் பிடித்து பேராதரவைப் பெற்றிருப்பதின் காரணம் என்ன?

மயான பூமிக்கல்ல... மனிதநேயத்திற்கு...

‘இந்தியத் திருநாட்டில் இஸ்லாம் வாள் முனையில் பரப்பப்பட்டது எனப்பேசப்படுவதை கேட்க முடிகிறது. இது திட்டமிட்டுச் செய்திடும் பித்தலாட்ட பிரச்சாரமாகும்....முஸ்லிம்களின் நடவடிக்கைகள், அந்த மார்க்கத்தின் ஏற்றத்தாழ்வற்ற கொள்கைகளே இஸ்லாம் வளரக் காரணமாயிற்று. இவ்வுண்மையை மறைத்து தவறாக சித்தரிப்பதன் மூலம் மதமாச்சாரியங்களுக்கு வழி கோலப்படுவது வேதனைக்குரியதாகும். மனித நேயத்திற்கு மக்களை இட்டுச் செல்லுங்கள். மயானத்திற்கு அழைத்துச் செல்லாதீர்* என்ற குன்றக்குடி தவத்திற்கு பொன்னம்பல அடிகளாரின் கருத்தினை, ஔரங்கஜேப்பை தூற்றித்திரிவோர் சிந்தனைக்கு வைக்கிறேன்.

(* வாள்முனையில் இஸ்லாம் பரப்பப்பட்டிருந்தால்.... குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் உரை, மறுமலர்ச்சி, 16-1-98, பக். 3.)

12

காதலை அழித்திட, கொதிக்கும் நீரில் வைத்துக் கொன்றவரா?

சேலம் அரசுக் கல்லூரி ஆண்டு மலர் (2003-2004), கல்லூரி முதல்வர் முனைவர் லெ.லெட்சுமணன் தலைவராகவும், தமிழ் இணைப் பேராசிரியர் முனைவர் கொ.ஆறுமுகம் மலர் ஆசிரியராகவும், தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் செ.மாயாண்டி, ஆங்கிலத் துறைத் தலைவர் முனைவர் செ.குருசாமி, வரலாற்றுத் துறைத் தலைவர் இரா.பெரியசாமி, புவியியல் அமைப்பியல் இணைப் பேராசிரியர் இரா.ரெங்கராஜன் ஆகியோர் மலர்க் குழு உறுப்பினர்களாகவும் இருந்து வெளியிடப்பட்டது.

அந்த மலரில், பக்கங்கள் 45, 46-ல் ஆர்.விஜயகுமார் எழுதிய ‘காதல் காதல் காதல்... காதல் இல்லையேல் சாதல்!’ எனும் கட்டுரை வந்துள்ளது. அதில் முகலாயப் பேரரசர் ஔரங்கஜேப், முஸ்லிம் மன்னர் முஹம்மது கோரி, முகலாய மன்னர் ஷாஜகான் ஆகியோரைப் பற்றி அபாண்டமானக் கட்டுக்கதைகள் இட்டுக் கட்டப்பட்டுள்ளன.

பேரரசர் மீது சுமத்தப்பட்ட பத்துக் குற்றச்சாட்டுகளுக்கு பதில் எழுதிட பல ஆண்டுகளுக்குமுன் வாய்ப்பு அளித்த இறைவனுக்கு நன்றியைத் தெரிவித்துவிட்டு, விஜ(ஷ)யகுமாரின் விஷயத்துக்கு வருகிறேன்.

சேலம் அரசு கலைக் கல்லூரி ஆண்டு மலர் (2003-2004)

கட்டுரையில், விஷத்தைக் கக்கியவாறு கீழ்க்காணுமாறு துவங்குகிறார்.

‘ஔரங்கஜேப்பின் பிள்ளைகள் ஜெபுன்னிசா, முலயம் சுல்தான், ஜீனத் ரிஷா, பக்ருன்னிசா ஆகியோர். ஜெபுன்னிசா, அகில்கான் என்கிற இளைஞனைக் காதலிக்கிறாள். அவர்களின் காதலை அழிக்க எண்ணிய ஔரங்கஜேப், அகில்கானை, கொதிக்க வைக்கும் கொதிநீர்க் கொப்பறையில் தள்ளி நெருப்பு மூட்டி, அவனை வேகவைத்தே கொன்றுவிடுகிறான்.

எத்தனை கொடூரமான சிந்தை பாருங்கள். தெருவில் திரியும் நாய்க்குக்கூட, வழி தவறி வந்த பூனைக்குட்டிக்குப் பால் கொடுக்கும் பக்குவமும் பாசமும் உள்ளது. ஔரங்கஜேப்பின் மிருகத்தனமான கொடுங்கோல் ஆட்சியை விமர்சிக்க, இதனைக் காட்டிலும் கீழான உவமை எனக்கு வேறு கிடைக்கவில்லை. உங்களுக்குத் தோன்றினால் அதையும் சேர்த்து இத்துடன் படித்துக்கொள்ளுங்கள்.’

இதுதான் கட்டுரையாளரின் விஷம் கக்கும் வார்த்தைகள்

கட்டுரையாளரே! உங்களது வார்த்தைகளிலேயே உங்களுக்கும் உலகுக்கும் பதிலைத் துவங்குகிறேன். உங்களுக்குத் தோன்றாவிட்டாலும் இதையும் அதனுடன் சேர்த்துப் படித்துக் கொள்ளுங்கள்...

இதோ... உங்கள் பொய்க் கதைக்கு உரிய உண்மையான பதில்!

உங்களது பழியின் துவக்கத்தில் ஔரங்கஜேப்பின் பிள்ளைகள் ஜெகபுன்னிஸா, முலயம் சுல்தான், ஜீனத் ரிஷா, பக்ருன்னிசா ஆகியோர் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். அதுவே சரியான வரலாற்றுத் தகவல் அல்ல.

1912-ல் ஜாதுநாத் சர்க்கார் (Jathunath Sarkar) வெளியிட்ட ‘History of Aurangazeb’ நூலின் முதல் வால்யூமில் அதுகுறித்த விவரங்களைத் தந்துள்ளார். Orient Longman நிறுவனத்தார், 1973-ல் அதன் மறுபதிப்பு செய்துள்ளனர். அதில் பக்.27, 38, 39-களில் பார்த்தபடி இணைத்துள்ளேன்.

1930-ல் ‘A Short History of Aurangazeb’ (1618-1707) எனும் நூலை 507 பக்கங்களில் தந்துள்ள சர் ஜாதுநாத் சர்க்கார் (Sir Jadunath Sarkar, K.T., C.I.E., Honarary Member, Royal Asiatic Society of Grant Britain) அந்த நூலில் பக்கங்கள் 16, 17-ல் அதனை அப்படியே திரும்பவும் எடுத்து ஆண்டுள்ளார். அவர் தந்துள்ள விவரப்படி ஔரங்கஜேப்புக்கு 10 பிள்ளைகள். நீங்கள் சொல்லியபடி நான்கு

பிள்ளைகள் அல்ல.

இதோ, ஔரங்கஜேப்பின் பிள்ளைகள் பட்டியல்:

1. ஜெபுன்னிசா (Zebun Nisa)
2. ஜீனத்துன்னிசா (Zeenat)
3. ஜேப்தத்துன்னிசா (Zubatunnisa)
4. முஹம்மது அஸம் (Muhammed azam)
5. முஹம்மது அக்பர் (Mohammed Akbar)
6. முஹம்மது சுல்தான் (Muhammed Sultan)
7. முஹம்மது முஅஜம் (Muhammed Mazzam)
8. பத்ருத்னிசா (Baor Unnisa)
9. மெஹருன்னிசா (Mihrunnisa)
10. முஹம்மது காம்பக்ஸ் (Muhammed Kambakhs)

ஔரங்கஜேப்பின் ஆண், பெண் மக்கள் பத்து பேர். ஆனால், நீங்கள் பழியைத் துவங்கும் இடத்திலேயே ஔரங்கஜேப்பின் பிள்ளைகள் நான்கு பேரின் பெயர்களை மட்டுமே தெரிவித்து, வரலாற்றில் தங்களுக்குள்ள அறிவை(?) வெட்டவெளிச்சமாக்கி விட்டதற்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜெபுன்னிசா - அகில்கான் காதல், கொதிநீர்க் கொப்பறையில் கொளுத்தப்பட்டது- - 'கொடுங்கோலாட்சி' என்ற கட்டுரையின் சரித்திரப் பின்னணி என்ன?

சோதிடம் தனை இகழ்

ஔரங்கஜேப்பின் திருமணம், 19-வது வயதில் நடைபெற்றது. திருமணப் பேச்சுகள் ஓராண்டாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. 1637 ஏப்ரல் 15-ல், பேரரசர் ஷாஜகானின் அழைப்பை ஏற்று ஔரங்கஜேப் ஆக்ராவுக்கு வந்து சேர்ந்தார். 8.5.1637-ல் திருமணம் நடத்தலாம் என்று காலக்கணிப்பாளர்களால் (சோதிடர்களால்) நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. ஆனால், ஔரங்கஜேப் அதனை நிராகரித்தார்.

தில்ரோஸ்பானு

ஷாநவாஸ் கானின் மகள் பாரசீக தில்ரோஸ்பானு பேகம் (Dil Ras Banu Begam) என்பவரை, ஔரங்கஜேப் ஆக்ராவில் வைத்து 1637 ஏப்ரல் 16, காலை 4 மணிக்கு திருமணம் செய்தார். திருமணத்தின் போது இளவரசர் ஔரங்கஜேப் தன் மனைவிக்கு

பெரும் மஹர்த் தொகையை அளித்தார்.

மஹர்

முஸ்லிம் கணவன் ஒவ்வொருவரும் தன் மனைவிக்குத் தவறாமல் திருமணத்தின்போது தரவேண்டியது இந்த 'மஹர்'. தில்ரோஸ் பானு பேகத்தை ஔரங்கஜேப் மணந்தபோது நான்கு லட்ச ரூபாய் மஹர் தொகை அளித்தார். (The Bridegroom promised his wife a dowry (kabin) of four lakhs of rupees & முற்கூறிய ஜாதுநாத் சர்கார் நூல், பக்.32)

ஆக்ராவில் மூன்று மாதங்கள் தனது தந்தையருடன் புதுமணத் தம்பதிகள் ஔரங்கஜேப்பும் - தில்ரோஸ்பானுவும் தங்கியிருந்தனர். 1637 செப்டம்பர் 4-ல், ஔரங்கஜேப் தக்காணத்துக்கு (Deccan) தனது மனைவியுடன் பயணித்தார்.

தௌலதாபாத்

15.2.1638-ல் தௌலதாபாத்தில் ஔரங்கஜேப்பின் மூத்த புதல்வியான ஜெபுன்னிசா பிறந்தார்.

ஹஃபீஜாமர்யம்

ஜெபுன்னிசா (Zebunnisa) என்பதற்கு, (Ornament of Womenkind) 'பெண்களில் ஆபரணம்' என்று பொருள். தந்தையைப்போலவே மிகுந்த புத்திக்கூர்மையும் கல்வி ஆர்வமும் கொண்டிருந்த ஜெபுன்னிசாவுக்கு, முறையாகக் கல்வி கற்றுத்தரப்பட்டது.

காஷ்மீரைச் சேர்ந்த மீர்ஜா ஜஹ்ருல்லா (Mirza Shakrullah) என்பவரின் மனைவியான ஹபிஸா மரியத்தின் (Hafiza Mariyam) பூர்வீகம், குராஸனில் உள்ள 'நைசாபூர்' (Naishabur in Khurasan).

ஜெபுன்னிசாவுக்கு, ஹபிஸா மரியம் கல்வி கற்றுத் தந்தார். மிகச் சிறிய வயதிலேயே திருக்குர்ஆன் முழுவதையும் மனப்பாடம் செய்த ஜெபுன்னிசாவின் அறிவுத் திறமையைக் கண்டு வியந்து, ஔரங்கஜேப் 30,000 தங்கக் காசுகளை அன்பளிப்பாகத் தந்தார்.

மொழிகளில் பாண்டித்யம்

ஜெபுன்னிசா, பாரசீக- அரபி மொழிகளில் மிகுந்த தேர்ச்சி பெற்றவர். மிகவும் சுத்தமாகவும் அழகாகவும் எழுதக் கற்றுக் கொண்டிருந்தார். ஜெபுன்னிசாவின் நூலகம், வேறு எந்த நூலகத்தையும்விட அநேக நூல்களைக் கொண்டதாக இருந்தது. புதிய இலக்கியங்களை உருவாக்கிடவும், இலக்கிய நகல்களை படித்திடவும் அநேக கல்விமான்களை, தாராளமான

ஊதியத்துடன் ஜெபுன்னிசா பணியில் அமர்த்தியிருந்தார்.

அந்தக் காலத்தில் அநேக கவிஞர்களுக்கு ஜெபுன்னிசா உதவிகள் புரிந்தார்; பராமரித்தார். கல்விமான்களின் புகலிடமாக ஜெபுன்னிசாவின் அரண்மனை இருந்தது.

முல்லா ஷபியுத்தீன் ஆர்பெலி

காஷ்மீரில் வளமாக வாழ்ந்த அரேபிய மொழியில் 'தப்ஸீர்-இ-கபீர்' (Thafsir I Kabir) (Great Commentary) என்ற நூலைப் பாரசீகத்தில் மொழிபெயர்த்த முல்லா ஷபியுத்தீன் ஆர்பெலியால், ஜெபுன்னிசாவின் ஆதரவிலேயே அங்கு வளமாக வாழவும், இலக்கியப் பணிகளைச் செய்திடவும் முடிந்தது.

அந்த நூலுக்கு, முல்லா ஷபியுத்தீன் தன்னை ஆதரித்த வள்ளலான ஜெபுன்னிசாவின் பெயர் வரும்வண்ணம் 'ஜெப்-உத்-தப்ஸீர்' என்று வெளியிட்டார்.

சிறந்த கல்வியாளரும், பன்மொழி அறிஞரும், கவிஞருமான ஜெபுன்னிசாவின் பெயர், 'அகில்கான் என்பவருடன் காதல்' என்ற கட்டுக்கதை வரலாற்றில் எப்போது நுழைந்தது? எப்போதுதான் நுழைக்கப்பட்டது? எவ்வாறு திணிக்கப்பட்டது? அதனை மிக விரிவாகக் காணவேண்டிய சரித்திரக் கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டு இருக்கிறோம்.

அகில்கான் யார்? அவரைப் பற்றிய விவரங்கள் இதோ...

அகில்கான்

'மீர் அஸ்காரி' என்று அழைக்கப்பட்டவரே பின்னாளில் 'அகில்கான்' என்று வழங்கப்படுகிறார். அவர் பாரசீகத்தைச் சேர்ந்த 'குவாப்'பைச் சேர்ந்தவர். இவர், பேரரசர் ஷாஜகான் ஆட்சிக் காலத்தில் ஔரங்கஜேப்பிடம் பணியில் சேர்ந்தார்.

ஜிலேதார்

ஔரங்கஜேப், தக்காணத்தில் இரண்டாவது முறையாக வைசிராயாக ஆனபோது (கி.பி.1652-1657), ஔரங்கஜேப்பின் ஜிலேதாராகப் பணியாற்றியவர் அகில்கான்.

ரசீ

அகில்கான், தன்னை ஒரு கவிஞர் என்று அடையாளம் காட்டிக்கொண்டு அவர் மிகவும் மதிப்பு வைத்திருந்த புர்கானுதீன் ரப்-உல்லா என்கிற தூய பரிசுத்தவானின் நினைவாகத் தனது புனைப்பெயரை 'ரசீ' என்றும் வைத்துக்கொண்டார். டெல்லியின் சிம்மாசனத்தை

தனக்குரியதாக்கிட ஔரங்கஜேப் தக்காணத்தில் இருந்து புறப்பட்டபோது, அவர் தனது குடும்பத்தினரை தௌலதாபாத் கோட்டையில் விட்டுச் சென்றார்.

1658 பிப்ரவரி 6 முதல் 1658 டிசம்பர் வரை ஔரங்கஜேப்பின் பிள்ளைகள் அங்கு இருந்தனர்.

கவர்னர்

தௌலதாபாத்தின் கவர்னராக 1658 பிப்ரவரி 6-ம் நாளிலிருந்தும், கோட்டையில் கவர்னராக 1658 ஆகஸ்ட் மாதம் முதலும் பணியாற்றினார். இந்தப் பணி 1659 டிசம்பர் வரை நீடித்தது.

டெல்லி

8.2.1660 அன்று டெல்லிக்கு வந்து சேர்ந்த அகில்கான், இரண்டு மாதங்களுக்குப் பின் கங்கைக்கும், யமுனைக்கும் இடையில் உள்ள பகுதி நிலத்துக்கு (மீயான் துவாப்) பௌஸ்தாராக நியமிக்கப்பட்டார். கி.பி.1661 ஜூலை மாதத்தில் அந்தப் பணிக்கு மற்றொரு அதிகாரி நியமிக்கப்பட்டார் என்பதால், அதுவரை அகில்கான் அந்தப் பணியில் இருந்தார் என்பதை வரலாறு தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறது.

1661 நவம்பரில்...

அகில்கான், தனக்கு உடல்நலம் சரியில்லை என்பதால் உடல்நலக் குறைவின் காரணமாக தற்காலிகமாக பணியில் இருந்து ஓய்வுபெற்று, மாதந்தோறும் 750 ரூபாய் ஓய்வூதியம் பெற்றார். அத்தோடு லாகூரில் வசித்திடவும் அனுமதிக்கப்பட்டார்.

1663 நவம்பரில்...

தன் குடும்பத்தாருடன் காஷ்மீரிலிருந்து திரும்பி வந்துகொண்டு இருந்த முகலாயச் சக்கரவர்த்தி ஔரங்கஜேப், லாகூரைக் கடந்து சென்றபோது, 2.11.1663-ல் லாகூரில் அகில்கான் ஔரங்கஜேப்பைச் சந்தித்தார். கருணை உள்ளங்கொண்ட சக்கரவர்த்தி ஔரங்கஜேப், அகில்கானைத் தன்னோடு அழைத்துச் சென்றார்.

1664 ஜனவரியில்...

சக்கரவர்த்தி ஔரங்கஜேப்பின் தனிப்பட்ட பேட்டிகளை அளிக்கும் மாளிகையின் கண்காணிப்பாளராக ஔரங்கஜேப்பிடம் மிகவும் நெருக்கமாகப் பணியாற்றிய உயரிய

பொறுப்பாளராக, அகில்கான் 1664 ஜனவரியில் நியமிக்கப்பட்டார்.

1666 அக்டோபரில்...

அகில்கான், ஔரங்கஜேப்பின் உயர்ந்த பரிவுக்கு ஆளாகி, 1666 அக்டோபரில் பதவி உயர்வு பெற்றார்.

1667 மே மாதத்தில்...

அகில்கானுக்கு 1667 மே மாதத்தில் ஔரங்கஜேப் அரசில், ராஜாங்கப் பதவி ஒன்று அளிக்கப்பட்டது. (Royal Present).

1669 ஏப்ரல் மாதத்தில்...

அகில்கான், ஔரங்கஜேப் ஆட்சியில் அஞ்சல் துறைத் தலைவராக நியமிக்கப்பட்டார். 1669 ஏப்ரல் மாதத்தில் அந்தப் பதவியிலிருந்து விலகினார்.

1676 அக்டோபர்...

அகில்கானுக்கு மாதந்தோறும் 100 ரூபாய் அலவன்ஸ் வழங்கப்பட்டது என்ற சரித்திரக் குறிப்பு (கி.பி.1676, அக்.) கிடைத்துள்ளது.

1679 ஜனவரி...

அகில்கான், 1679 ஜனவரியில் மீண்டும் ஔரங்கஜேப் ஆட்சியில் பணியமர்த்தப்பட்டார். 2-வது ஊழிய அதிகாரியாக (Second Pay Master) அவர் பணியாற்றினார்.

1680 அக்டோபர்...

அகில்கான், டெல்லியில் சுபேதாராராக 1680 அக்டோபரில் பணியில் அமர்ந்தார்.

1696-ல்...

அகில்கான், 1680-ம் ஆண்டிலிருந்து அவர் இறக்கும் வரை டெல்லி சுபேதாராராகப் பணியாற்றி மறைந்தார். இயற்கையாகவே இறந்தார். டெல்லியில் சுபேதாராராகப் பணியில் இருக்கும்போதே மறைந்தார். ஔரங்கஜேப் ஆட்சியில் பல்லாண்டுகள் பல்வேறு பணிகளில் பணியாற்றி, இயற்கையாகவே மரணத்தைத் தழுவிக்கொண்டவர் அகில்கான்.

இந்த அகில்கானைத்தான், வெந்நீர் பாத்திரத்தோடும், ஜெபுன்னிசாவோடும், ஔரங்கஜேப்போடும் சம்பந்தப்படுத்தி கட்டுக்கதைகளை உலவவிட்டுவிட்டார்கள். ஔரங்கஜேப்பின்

உத்தரவின் பேரில் வெந்நீர் பாத்திரத்தில் போட்டு அகில்கான் என்பவர் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படும் கட்டுக்கதை, அப்பட்டமான பொய் எவ்வாறு சரித்திரத்தில் செருகப்பட்டது?; வரலாற்றில் திணிக்கப்பட்டது?

பின்குறிப்பு: அகில்கான், ஔரங்கஜேப் ஆட்சியில் பணியாற்றிய பதவிகள், பணிபுரிந்த காலம் இவற்றை சரித்திரத்தின் மூல ஆதாரங்களிலிருந்து திரட்டப்பட்டவை. இவற்றைத் தவறாக எவரும் கூறிட இயலாது. அகில்கான், தனது ஆயுட்காலம் வரை பணிபுரிந்து இயற்கையாகவே மரணமடைந்தார் என்பதை எவரும் மறுத்திட இயலாது. இதனை மறுத்துக்கூறி நிரூபித்தால், வரலாற்றுக் கட்டுரைகளை எழுதுவதை நிறுத்திக்கொள்ள எளியேன் தயார்.

கலீஃபா உமர் (ரலி)

கந்தாப், கதைமா தாய்-தந்தையருக்கு குறைஷி கோத்திரத்தில் மகனாகத் தோன்றி கி.பி.633-ல் கலீஃபாவாகப் பொறுப்பேற்றுக் கொண்ட ஹஸ்ரத் உமர், பின் கத்தாப் (ரலி) அவர்கள் பன்னிரண்டரை லட்சம் சதுர மைல்கள் பரப்பளவுக்கு வெற்றிப்பறை முழக்கிய தீரர்.

கி.பி.640-ல் (ஹிஜ்ரி 19)

ஃபாரூக்குல் அஃலம் ஸையிதினா உமர் (ரலி) அவர்களின் உத்தரவையேற்று, அம்ரு இப்னு ஆஸ் (ரலி) எகிப்தின் மீது படையெடுத்துச் சென்றார். கி.பி.641-ல் இஸ்கந்திரியா என்னும் அலெக்ஸாந்திரியா முஸ்லிம்களின் வசமாயிற்று. ஃபுஸ்தாத் என்னும் 'கெய்ரோ' தலைநகராக்கப்பட்டது. இந்தப் போரின்போது அலெக்ஸாந்திரியாவில் (Alexandria) மிகப் பழமையான பெருநூல்களையும் கையெழுத்துப் படிகளையும் தன்னகத்தே கொண்டிருந்த புராதனமான நூலகத்தை கலீஃபா உமர் (ரலி) அவர்களது உத்தரவை ஏற்று, அமர் இப்னு ஆஸ் (ரலி) அவர்கள் தீயிட்டுச் சாம்பலாக்கினார் என்ற கட்டுக்கதைப் பரப்பப்பட்டது.

ஜூலியஸ் சீசர்

கி.மு.48-ல் அதாவது கலீஃபா உமர் (ரலி) பிறப்பதற்கு 700 ஆண்டுகளுக்கு முன்னரே கிடைத்தற்கரிய நூற்களஞ்சியத்தை ஜூலியஸ் சீசர் (Julius Ceasar) அலெக்ஸாந்திரியாவில் எரித்துச் சாம்பலாக்கினார் என்பதை வரலாறு தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது.

கி.பி.389-ல் கீழ் ரோமப் பேரரசின் சீசராக விளங்கிய

தியோடோஷியஸ் (Theodosius) பிறப்பித்த உத்தரவின்படி, அலெக்ஸாந்திரியாவின் சேய் நூலகமென்று போற்றப்பட்ட பெரிய நூலகமும் திரும்பவும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

"... and the treasures of ancient learning were preserved in the famous Alexandrian Library, which had arisen with new splendour from its ashes. The old library of the ptolemies was total consumed in Ceasar's Alexandria War."

(The Decline and Fall of the Roma Empire by Edward Gibbon Vol.I, London, 1887, P.255)

பழங்காலத்து கல்வியின் பொக்கிஷங்களான நூல்கள் புகழ்பெற்ற அலெக்ஸாந்திரியா நூல் நிலையத்தில் பாதுகாக்கப்பட்டு வந்தது. இந்த நூல் நிலையமானது, சாம்பலில் இருந்து தன்னுடைய மகிமைக்கு எழுதப்பட்டது. கி.மு.48-ஐத் தொடர்ந்து கி.பி.389-ல் மறுமுறையும் தீக்கிரையாக்கப்பட்டது, வரலாற்றின் பக்கங்களில் தெளிவாகத் தெரிகின்ற உண்மை.

அம்ர் இப்னு ஆஸ் (ரலி)

கலீஃபா உமர் (ரலி) அவர்களின் உத்தரவை ஏற்று அலெக்ஸாந்தரியா நூலகத்தில் உள்ள நூல்களை எல்லாம் நகரத்தின் வெந்நீர் கொப்பறைகளுக்குப் பயன்படும்விதத்தில் அம்ர் இப்னு ஆஸ் (ரலி) தீயிலிட்டார் என்னும் குற்றச்சாட்டின் உண்மை நிலை என்ன?

கி.மு.48-லும், கி.பி.389-லும் இரு மன்னர்களால் அலெக்ஸாந்திரியா நூல் நிலையம் முழுவதுமாக அழிக்கப்பட்டுவிட்டது.

நிக்குவின் ஜான் (John of Nikiu)

எகிப்திய வெற்றி குறித்து முழு விவரங்களையும் தெள்ளத் தெளிவாக எழுதிய சமகாலத்து வரலாற்று ஆசிரியர், நிக்கு என்ற பகுதியைச் சார்ந்த ஜான். இவர் அலெக்ஸாந்திரியா நூல் நிலையம் கலீஃபா உமர் (ரலி) அவர்களின் உத்தரவினால், அமர் இப்னு ஆஸ் (ரலி)யால் தீக்கிரையாக்கப்பட்டது என்று எங்கும் சொல்லவில்லை.

சமகால வரலாற்று ஆசிரியர்களான தபாரி (Tabari), இப்னு அப்துல் ஹக்கம் (Ibn Abdul Hakam) ஆகிய இருவரும், மேற்குறித்த சம்பவம் பற்றி எதுவும் கூறவில்லை. எகிப்து நாட்டைச் சேர்ந்த கிறிஸ்தவ வரலாற்று ஆசிரியர் யூட்டிசியஸ் (Eutychius), அலெக்ஸாந்திரிய நூல் நிலையம் கலீஃபா உமர் (ரலி)

அவர்களின் காலத்தில் தீக்கிரையாக்கப்பட்டதாகச் சொல்லப்படும் சம்பவங்கள் குறித்து எதுவும் சொல்லிடவில்லை.

அப்துல் லத்தீஃப் அல் பக்தாதி

சமகால ஆசிரியர் எவரேனும் அல்லது அந்தக் காலத்திய எதிரிகள் யாரேனும் கூறிடத் துணியாத அபாண்டப் பழியை, கட்டுக்கதையை கி.பி.1231-ல் (UxK 629) செத்துப்போன அப்துல் லத்தீஃப் அல் பக்தாதி (Abdul Baghdadi) என்பவர்தான் முதன்முதலாக எழுப்பினார். கி.பி.641-ல் நடைபெற்றதாகச் சொல்லப்பட்ட போலிச் சம்பவத்துக்கு 600 ஆண்டுகளுக்குப் பின்னால், கி.பி.1231-ல் எழுதிய ஒருவரின் கட்டுக்கதையை ஆய்ந்து பின்னாளில் கலீஃபா உமர் (ரலி) அவர்கள் மீது சொல்லப்படும் குற்றச்சாட்டு, கட்டுக்கதையென வரலாற்று ஆசிரியர்கள் நிரூபித்தனர்.

ஃபிலிப் கே.ஹிட்டி

“கலீஃபாவின் உத்தரவுப்படி அலெக்ஸாந்திரியா நூலகத்தின் நூல்களைக்கொண்டு அம்ர் இப்னு ஆஸ் (ரலி) அவர்கள் ஆறுமாத காலத்துக்கு நகரத்தின் குளியலறை அடுப்புகளை மூட்டினார் என்று சொல்லப்படும் கதையானது, நல்ல ரசமான நாவலில் ஒன்றாகக் கருதப்படலாம். ஆனால், அது மோசமான வரலாறு... அரேபியர்கள் வெற்றிகொண்ட காலத்தில் அலெக்ஸாந்திரியாவில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நூலகம் இருக்கவில்லை...”

“The story that by the Caliph’s Order Amr for six long months fed the numerous bath furnaces of the city with the volumes of the Alexandrian Library is one of those tales that make good fiction but bad history...”

“At the time of the Arab Conquest, therefore, no library of importance existed in Alexandria...”

(Philip K.Hitti, History of the Arabs from The Earliest Times to the Present, London, 1964, P.166)

வரலாற்றில் வெந்நீர்க் கொப்பறைகள்!

வரலாற்றில் நடந்தவையை ஆராய்ந்தறிந்த சரித்திர ஆசிரியர்கள் உண்மையை இவ்வாறு உலகுக்கு அறிவித்ததால், கலீஃபா உமர் (ரலி) அலெக்ஸாந்திரியா நூலகத்தை தீ வைத்துக் கொளுத்தி, அந்த நூல்களை ஆறு மாதங்களுக்கு நகரில் வெந்நீர் கொப்பறைகளுக்கு நெருப்பு மூட்டப் பயன்படுத்தினார் என்று சொல்வது, கட்டுக்கதை. கெட்ட நோக்கில் பரப்பப்பட்ட

புனைக்கதை என்றும், பொய் என்றும் புறத்தே தள்ளப்பட்டது. இப்போது அதுபோல் ஔரங்கஜேப் மீதும் அகில்கான் - ஜெபுன்னிசா காதல் - ஔரங்கஜேப் கோபம் - வெந்நீர் கொப்பறை - அதில் அகில்கான் உயிரோடு கொளுத்தப்பட்டார் என்றும் கூறப்படும் கட்டுக்கதை.

இந்தக் கதை, வரலாற்றில் எப்போது நுழைந்தது? எவ்வாறு இடையில் செருகப்பட்டது?

கற்பனைக் கதையின் சுருக்கம் இதோ...

கற்பனையான காதல் கதை!

கி.பி.1662-ல் ஔரங்கஜேப்புக்கு உடல்நலக் குறைவு, மருத்துவர்கள் இயற்கைத் ததும்பும் இடத்துக்குச் செல்லுமாறு ஆலோசனை கூறுதல், தனது குடும்பத்தாருடன் லாகூருக்குச் செல்லுதல் - லாகூரின் வாஜிர் (Wazir) மகன் அகில்கான்.

இளவரசி ஜெபுன்னிசாவின் கவித் திறனையும் பேரழகையும் அறிந்த அகில்கான், அவளைக் காணத் துடிக்கிறான். நகரைக் காவல் காத்திடும் பாவனையில் பேரரசர் தங்கியிருந்த மாளிகையைச் சுற்றிச் சுற்றி வருகிறான். மாதுளம் பூ கலரில் நீண்ட நெடிய ஆடை அணிந்திருந்தாள் ஜெபுன்னிசா. அதைப் பார்த்த அகில்கான், “அரண்மனை மாடத்தில் சிவப்புக் காட்சி ஒன்று தோன்றுகிறது” (A vision in red appears on the roof of the palace) என்றானாம்.

ஜெபுன்னிசா, லாகூரில் படிக்கிறாள். அங்கு, தோட்டம் அமைக்கிறாள். அதனை அறிந்த அகில்கான், கட்டட வேலையாள்போல வேடமணிந்து அதனுள்ளே செல்கிறான். ஜெபுன்னிசா, தனது தோழியருடன் ‘கவுசர்’ (சிலீணீusணீக்ஷீ) விளையாடிக் கொண்டிருந்தாளாம். அகில்கான், அவள் அருகில் சென்று, “உன் மீது கொண்ட ஆசையினால் நான் பூமியைச் சுற்றிவரும் தூசிபோல ஆனேன்” (In my longing for thee, I have become as the dust wandering round the earth) என்றானாம்.

அதற்கு ஜெபுன்னிசா தந்த பதில்:

“நீ காற்றாகவே மாறினாலும் என்னுடைய கூந்தலின் ஒரு கற்றையையும் தொட முடியாது” (Even if thou have become as the wind, thou should not touch a tress of my hair.)

ஔரங்கஜேப், ஜெபுன்னிசாவின் திருமண ஏற்பாடுகளைச் செய்கிறார். “மணமகனின் படங்களைக் கொண்டு வாருங்கள். நான் தேர்வு செய்ய வேண்டும்” என்கிறாள் ஜெபுன்னிசா.

காட்டப்பட்ட படங்களில் அகில்கானைத் தேர்ந்தெடுத்தாளாம். உடனே ஔரங்கஜேப், அகில்கானை அழைத்துவரச் சொன்னார். அப்போது அகில்கானின் நண்பர், “அரசர் உன்னை அழைப்பது உனக்கு உதவிட அல்ல; பழித் தீர்க்கத்தான்” என்றானாம். உடனே ஔரங்கஜேப்பைச் சந்தித்த அகில்கான், “இந்தத் திருமணத்தில் எனக்குச் சம்மதமில்லை” என்று பின்வாங்கிவிடுகிறானாம். அரச பதவியையும் ராஜினாமா செய்துவிடுகிறானாம்.

பின்பு ஜெபுன்னிசா, டெல்லி சென்றுவிடுகிறாள். அங்கு அரண்மனையில் ரகசியமாக சந்திக்க வருகிறான். அப்போது ஔரங்கஜேப் வந்துவிடுகிறார். வெந்நீர்ப் பானைக்குள் மறைப்பு - மறைவு என்று கதை செல்கிறது.

கற்பனையாக வரைந்த கதையில்கூட அகில்கானை, ஜெபுன்னிசா திருமணம் செய்ய விரும்புகிறாள் என்றதும், ஔரங்கஜேப் அவனை அழைத்துவரச் சொன்னார் என்றும், ஆனால் அகில்கான், பயந்து இந்தத் திருமணத்தில் தனக்குச் சம்மதமில்லை என்று சொன்னதாகவும் எழுதி வைத்திருப்பதை எவராவது இல்லையென்று மறுத்திட முடியுமா?

அதன் பின்னர், சலீம்கார் கோட்டையில் ஜெபுன்னிசா சிறை வாழ்வு வாழ்ந்து வந்தார்.

இனி, வரலாற்றின் உண்மைகளைக் கொஞ்சம் கவனிப்போம்!

சிம்மாசனத்துக்குப் போட்டி நடந்துகொண்டிருந்த வேளையில் தனது மனைவியையும் குழந்தைகளையும் தௌலதாபாத் கோட்டையில் விட்டுச்சென்றார், ஔரங்கஜேப். (1638 பிப்ரவரி 6 முதல் 1658 டிசம்பர் முடிய) அகில்கான், தௌலதாபாத்தின் கவர்னராக பிப்ரவரி 6-ம் தேதியிலிருந்தும் கோட்டையின் கவர்னராக 1658 ஆகஸ்ட் மாதம் முதலும் பணியாற்றி இந்தப் பணியில் 1659 இறுதி வரை இருந்தார்.

08.02.1660 அன்று டெல்லிக்கு வந்து சேர்ந்த அகில்கான், இரண்டு மாதங்களுக்குப் பின் கங்கைக்கும் யமுனைக்கும் இடையில் உள்ள மீயான்துவாப் பகுதிக்கு பௌஸ்தாராக நியமிக்கப்பட்டார்.

ஔரங்கஜேப், தனது மனைவியையும் பிள்ளைகளையும் சிம்மாசனத்துக்குப் போட்டி நடந்துகொண்டிருந்த அந்த வேளையில் அவர்களுக்குப் பொறுப்பாக மிகக் குறைந்த வயதுடையவரின் கீழ் அவர்களை விட்டுச்சென்றிருப்பார் என்பதை ஏற்றுக்கொள்ள முடியுமா? குறைந்தபட்சம் 30

வயதுள்ள ஒரு மனிதரின் கீழ்தான் அவ்வாறு விட்டுச் சென்றிருக்கக்கூடும்.

கி.பி.1696-ல் இயற்கையாக மரணமடைந்த அகில்கான், அப்போது வயோதிகராகத்தான் இருந்தார். அகில்கான், தனது காதலியான ஜெபுன்னிசாவின் தந்தையான ஔரங்கஜேப்பால் கொல்லப்பட்டார் என்ற கற்பனைக் கதைக்கு மாற்றாக, வேறு பெண்ணை முறையாக அவர் திருமணம் முடித்து இல்லற வாழ்வை நடத்தினார் என்பது வரலாற்றின் பக்கங்களில் காணக் கிடைக்கும் உண்மை.

திருமணம் புரிந்த அகில்கான், தனது 70-வது வயதில் பேரப்பிள்ளைகளுடன் வாழ்ந்துதான் மரணம் அடைந்தார்.

இதற்கு என்ன சான்று?

மிர்ஸா பேடில் (Mirza Bedil)

17-ம் நூற்றாண்டின் இறுதியில் டெல்லியின் கவர்னராக இருந்தவர் அகில்கானின் உற்ற நண்பர் மீர்ஸா பேடில். இவர் எழுதியக் கடிதங்கள், வரலாற்று ஆவணங்களாக இன்றும் உள்ளன. அதில் அகில்கானின் மகன் கய்யூம் கான் (Qayyum Khan), அகில்கானின் மருமகன்கள் ஷக்ருல்லா கான் (Shukrullah Khan), ஷாகிர் கான் (Shakir Khan) ஆகியோரைப் பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். ஆக, அகில்கான் திருமணம் ஆனவர்; மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் என வாழ்ந்தவர். இவ்வாறு வாழ்ந்து மறைந்த ஒருவரைத்தான் அரண்மனையில் அந்தப்புரத்தில் வெந்நீர்ப் பானையில் வேக வைக்கப்பட்டுக் கொல்லப்பட்டார் என்று கற்பனைக் கதையைக் கட்டிவிட்டுள்ளார்கள்.

கற்பனையாக இந்தக் கதையை எழுதிய முன்ஷி அஹமதீன், முகலாய கால பயணி பெர்னியர், இதனைக் கண்களால் கண்டார் என்று இட்டுக்கட்டிக் கூறியுள்ளார். அந்தக் கற்பனை மிகுந்த ஆசிரியரின் கர்வத்தை, ஆணவத்தை என்னவென்று சொல்வது?

ஔரங்கஜேப்பின் சகோதரி ஜஹானராவைப் பற்றி பெர்னியர் எழுதியிருந்தார். அவரும் ‘மனுச்சி’யிடமிருந்து அதனைப் பெற்று எழுதினார். இந்தக் கதை தவிர பெர்னியர், ஜெபுன்னிசா பற்றி எதுவும் எழுதிடவே இல்லை. வரலாற்று உண்மை இவ்வாறு இருக்க, கற்பனைக் கதையாளர் பெர்னியரையும் இழுத்து தனது புளுகு மூட்டையை அவிழ்த்துவிட்டுள்ளார்.

ஜெபுன்னிசா தௌலதாபாத்தில் இருந்தபோது (1658), அந்த இடத்தில் பத்து மாதங்கள்தான் அகில்கான் பணியாற்றியுள்ளார்.

லாகூரில் ஒரு வாரம் மட்டும்

‘லாகூரில் காதல்’ என்ற கற்பனையைத் தட்டிவிட்டுள்ள கற்பனையாளர்கள், அந்த இடத்தில் வரலாற்றுக் குறிப்புகளில் அகில்கான் ஒரு வாரம் மட்டும்தான் இருந்திருக்கிறார். அதன் பின்னர், டெல்லி தர்பாரில் பணியாற்றி ஆக்ராவிலும் பணியாற்றி 1669 ஏப்ரலில் பணியை ராஜினாமா செய்துள்ளார் அகில்கான்.

மீண்டும் ராஜபுத்திர யுத்தங்களின்போது அகில்கான் 1679 முதல் 1680 வரை டெல்லியில் தௌலதாபாத்தில் இருந்தபோதும் கடைசியாக டெல்லியில் பணியாற்றியபோதும்தான் அகில்கான், இளவரசியை காதலிக்கத் தூண்டியிருக்க முடியும்.

1661 நவம்பர் முதல் 1663 அக்டோபர் வரை தற்காலிகமாக பணியில் இருந்து விலகி, லாகூரில் அகில்கான் வசித்து வந்தபோது அவர் சக்கரவர்த்தி ஔரங்கஜேப்பின் அதிருப்தியினால்தான் அங்கு இருந்தார் என்று எவரும் கூறிட முடியாது. ஏனென்றால், அந்த முழுக்காலத்துக்கும் அவருக்கு முழு ஓய்வூதியமும் அளிக்கப்பட்டு வந்ததை அரசாங்க ஆவணங்கள் உறுதி செய்கின்றன.

“The Khan’s temporary retirement from service and residence at Lahore away from the court.”

(November 1661 - October 1663) Could not have been due to imperial displeasure, as he was given a large pension all the time.)

இனி, அகில்கான் கவிஞனா என்றால், அதுவும் இல்லை.

அகில்கான் கவிஞனா?

“அகில்கான் ஒரு கவிஞனா? நான் அப்படி நினைக்கவில்லை” என்கிறார் வரலாற்றுப் பேராசிரியர் ஜாதுநாத் சர்க்கார்.

“Was this Aqil her alleged lover? Aqil Khan Razi the poet? I think not...” - இது ஜாதுநாத் சர்க்காரின் கூற்று.

இளவரசர் அக்பர்

ஔரங்கஜேப்பின் புதல்வர், இளவரசர் அக்பரின் முகாமில், முஹம்மது அகில் (Mohammed Aqil) என்கிற முல்லா (Mullah) ஒருவர் இருந்தார். இவர், இளவரசர் அக்பருக்கு ஆதரவாக ஔரங்கஜேப் மீது தண்டனையை விதித்த உத்தரவில் கையொப்பமிட்டவர்.

இளவரசர் அக்பரது கலகம்

ஔரங்கஜேப்பிடமிருந்து அவரது மகன் இளவரசர் அக்பர் தனியே பிரிந்து சென்றார். ராஜபுத்திரர்களிடமும் மராத்தியர்களிடமும் தொடர்புகொண்டார். துர்க்காதாஸின் தலைமையில் 30,000 ராஜபுத்திர வீரர்கள் அவருடன் சேர்ந்து கொண்டனர். அக்பர், அரியணை ஏறியதாக அறிவிக்கப்பட்டது. தமது பெயரில் நாணயங்களையும் அவர் அச்சிட்டு வெளியிட்டார் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஔரங்கஜேப் தந்திரம்

இளவரசர் அக்பரது படைகளோடும் அவருக்கு உதவிய ராஜபுத்திரப் படைகளுக்கும் இடையில் ஔரங்கஜேப்பின் படைகள் போரில் பங்கேற்று பெருவெற்றிகளைக் குவித்தன. அத்தோடு ஔரங்கஜேப் இன்னொரு தந்திரமும் செய்தார். தமது மகன் இளவரசன், அக்பருக்கு ஒரு கடிதம் எழுதுவதைப்போல் எழுதி இளவரசரின் அரசியல் நுணுக்கத்தையும், அறிவுக் கூர்மையையும் தாம் வெகுவாகப் போற்றுவதாகவும், தாம் திட்டம் தீட்டித் தந்தபடி ராஜபுத்திரர்களிடையே உறவாடி உளவு அறிந்ததற்காக அக்பர் மேற்கொண்ட முயற்சிகளைப் பாராட்டுவதாகவும், நாடக நடிப்புப் பாவனையில் ஒரு கடிதத்தை எழுதினார். அதனை, ராஜபுத்திரர்களின் கரங்களில் கிடைக்கச் செய்தார்.

இந்தக் கடிதத்தைக் கண்ட ராஜபுத்திரத் தலைவர்கள் (துர்க்காதாஸ்) இதனை உண்மையென நம்பி, இளவரசர் அக்பரைக் கைவிட்டுவிட்டனர். இளவரசர் அக்பரது மனைவி, இரண்டு மகள்கள், மூன்று மகன்கள் ஆகியோரை ஔரங்கஜேப்பிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

350 குதிரை வீரர்களுடன் இளவரசர் அக்பர் தப்பிச் சென்றார். கடலில் பயணத்தின்போது- இரண்டு கப்பல்களில் ஒன்று வழி மாறியது- - மஸ்கத் சென்றார். அங்கு, பாரசீக அரசரின் கீழ் உள்ள சிற்றரசரிடம் தஞ்சம் புகுந்தார். ஔரங்கஜேப்புக்குத் தகவல் சென்றது. மஸ்கத்திலிருந்து பாரசீகம் சென்றார். பாரசீக ஆட்சியாளர் ஔரங்கஜேப்புக்கு தூது அனுப்பினார். ஔரங்கஜேப்புக்கு மன்னிப்பு வேண்டிக் கடிதம் அனுப்பினார்.

ஔரங்கஜேப்பும் இளவரசர் அக்பரை மன்னித்து ரச ஆணை, கௌரவ ஆடை, 50,000 ரூபாய் பணம், உரிய மரியாதை கொடுத்து தூதுவரை அனுப்பினார். இளவரசர் அக்பரது வெளி

வேஷத்தைக் கண்டபின் ஔரங்கஜேப் அந்த ஆணையை ரத்து செய்தார்.

21.10.1699

சித்தி ஹசன் என்கிற வேலையாளர், ஔரங்கஜேப்பிடம் இளவரசர் அக்பர் சார்பில் தூதுவராக வந்து பேசுதல், இந்தியாவுக்கு வந்தால் மன்னிக்கிறேன், வங்காளத்தில் சுபேதராராக நியமிக்கிறேன் என்று ஔரங்கஜேப் தகவல் சொல்லி அனுப்பினார்.

இளவரசர் அக்பர் நம்பவில்லை. இந்தியாவில் ஔரங்கஜேப்பின் எதிரிகளுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு சதிவேலைகளில் இறங்கினார். ஔரங்கஜேப் கவனத்துடன் காரியத்தில் ஈடுபட்டார். ஆப்கானிஸ்தான் எல்லையில் இளவரசர் அக்பர் தனது ஆசை நிறைவேறாமல் விரக்தியுடன் கிபி.1704 நவம்பரில் மடிந்தார்.

ஔரங்கஜேப்பின் மகன் இளவரசர் அக்பர், தனது தந்தைக்கு எதிராக ஆட்சியாளராக மாறிடத் திட்டமிட்டார். சிம்மாசனத்தைக் கைப்பற்றிட முயற்சித்தார்.

“அல்லாஹ்வின் சித்தம் இல்லாமல் எதுவும் நடத்திட முடியாது. அவரவர் எண்ணங்களுக்கு ஏற்ப இறைவனிடமிருந்து பெறுகிறார்கள். நான் எனது மக்களிடமிருந்து நல்லதைத் தவிர வேறு ஒன்றையும் பெறமாட்டேன்” என்ற உறுதியுடன் வாழ்ந்தவர் ஔரங்கஜேப்.

கி.பி.1661-ல் அவரது நான்காவது மகனான இளவரசர் அக்பர், அவரை விரட்டிட ஆரம்பித்த வேளை. இளவரசர் அக்பரைவிட 17 வயது மூத்தவளான அவரது அக்காள், அக்பரிடம் பாசம் காட்டினாள். இளவரசர் அக்பருக்குத் திருமணம் நடைபெற்றதற்குப் பிறகுகூட, அவனது வீட்டுக்காரியங்களை ஜெபுன்னிசாவே கவனித்து வந்தார். அந்த நாட்களில் தம்பியுடனான சகோதர உறவு, மிகுந்த பாசத்துடன் இருந்து வந்தது.

1681-ல் அக்பர்

ஔரங்கஜேப்புக்கு எதிராக கலகங்களில் இறங்கியபோது ஜெபுன்னிசா தனது சகோதரனின் பக்கத்தில் இருந்து போருக்கு எதிராக சதி செய்தார். அக்பரது முயற்சிகள் தோற்றன. அக்பரது ஆதரவாளரான முல்லா அகில் சிறைப்பிடிக்கப்பட்டார்.

முல்லா அகில்கான் என்பவர் ஏன் சிறைப்பிடிக்கப்பட்டார்?

அவரது முத்திரையுடன்கூடிய கடிதங்கள் அல்லது எந்த ஒரு பொட்டலமோ அரண்மனையின் அந்தப்புரத்துக்கு அனுப்பப்படக் கூடாது என்று ஔரங்கஜேப் உத்தரவிட்டார். ஜெபுன்னிசா - அகில்கான் காதலுக்கு, அதனால்தான் தடை விதித்தார் என்று பிற்காலத்தில் கட்டுக்கதையை வரைய முற்பட்டவர்கள் இதனைக் காரணமாக எடுத்துக்கொண்டனர்.

இதில் உண்மை நிலை என்ன?

ஔரங்கஜேப்புக்கு எதிராக சிம்மாசனத்தைக் கைப்பற்றிட நினைத்த இளவரசர் அக்பர் அணியில், முல்லா அகில்கான் என்பவரும் இளவரசி ஜெபுன்னிசாவும் இருந்தனர். திருக்குர்ஆன் நன்கு கற்றறிந்திருந்த மாணாக்கர் என்ற முறையிலும், இஸ்லாமியச் சித்தாந்தங்களைப் பற்றிய புதிய கருத்துகளை ஆதரிப்பவராகவும் திகழ்ந்தவர் ஜெபுன்னிசா.

புகழ்பெற்ற தத்துவவாதியான முல்லா அகில்கான் போன்றவர்களுடன் ஜெபுன்னிசா கடிதத் தொடர்பு வைத்திருந்தால் அது இயற்கையாகவே சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டதாகவே அமையும். இந்த நிலையில் இதனைக் கருத்தில்கொண்டு சிம்மாசனத்தைக் கைப்பற்றும் முயற்சியில் இறங்கிய இளவரசர் அக்பர், தனது கூட்டாளியான தனது அக்காள் ஜெபுன்னிசாவுக்கு ரகசியக் கடிதங்களை எழுதி அனுப்புகிறபோது அகில்கான் உறைகளில் அகில்கானின் முத்திரையுடன் அனுப்பி வைத்தார்.

இளவரசர் அக்பரின் ரகசியக் கடிதங்கள் அப்படி அனுப்பப்படுகிற போதுதான் யாராலும் அவை மறிக்கப்படாமலும், உரியவர்களுக்குப் போய்ச் சேருவதாகவும், அதேவேளையில் தனது சொந்த முத்திரையுடன் அனுப்பப்படுகிற கடிதங்கள் மறிக்கப்பட்டு தடுக்கப்பட்டுவிடுகின்றன என்றும் அக்பரே கூறியுள்ளார்.

இளவரசர் அக்பர், தனது அக்காள் ஜெபுன்னிசாவுக்கு எழுதிய கடிதத்தின் இறுதிப் பகுதியில்,

‘உனக்குக் கடிதம் எழுதுவதில் ஏற்பட்ட தாமதமானது, என்னுடைய கடிதங்கள் மாற்றாரின் கைகளிலோ அயலாரின் கைகளிலோ கிடைத்துவிடக் கூடாது என்ற பயம்தான் காரணம்’ என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நிலைமை இவ்வாறிருக்க, கவிஞரான அகில்கானுக்கும், தன்னுடைய மகள் ஜெபுன்னிசாவுக்கும் தொடர்பு இருந்ததைக் கண்டுபிடித்து அவர்களிடையே கடிதப் போக்குவரத்தை

ஔரங்கஜேப் தடுத்தார் என்று தற்கால சரித்திர ஆசிரியர்கள் கூறும் கூற்று எவ்வளவு அபத்தமானது. அதுமட்டுமா?

கி.பி.1681 ஜனவரிக்குப் பிறகுதான் அதாவது ஔரங்கஜேப், அகில்கான் மீது நடவடிக்கை எடுத்தார் என்று கூறப்படும் சம்பவத்துக்குப் பின்புதான் ஜெபுன்னிசா அரசியல் கைதியாக அனுப்பி வைக்கப்படுகிறார். அதே இடமான டெல்லியில்தான் அகில்கான் உயர்ந்த பொறுப்பில் வைசிராயாக நியமிக்கப்பட்டார் என்பதை வரலாறு தெளிவாகப் பறை சாற்றுகிறபோது கற்பனையாளர்களின் கூற்று நம்பத்தகுந்தது அல்ல என்பதும் நிரூபணம் ஆகிறதல்லவா!

ஜெபுன்னிசா வரலாற்றின் இறுதிப் பக்கங்களுக்கு வருவோம்.

சக்கரவர்த்தி ஔரங்கஜேப்புக்கு எதிராகக் கலகம் செய்த இளவரசர் அக்பருடன் கூட்டுச் சேர்ந்ததற்காகத்தான் ஜெபுன்னிசா தண்டிக்கப்பட்டாள். கி.பி.1681-ல் தனது தந்தையாரால் சிறை வைக்கப்பட்டாள். இது அதிகாரப்பூர்வமான வரலாறு. கிஞ்சிற்றேனும் சந்தேகங்களுக்கு இடமில்லாத வகையில் சரித்திரச் சான்றுகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

ஜெபுன்னிசா ஔரங்கஜேப்புக்கு எதிராக தனது சகோதரர் அக்பரோடு செய்த சதிகள், அதன் விளைவுகள்...

இளவரசர் அக்பர் - இளவரசி ஜெபுன்னிசா கூட்டுச் சதி!

தனது சகோதரன் அக்பரின் நலன்களுக்காக எவ்வளவு தீவிரமாக ஜெபுன்னிசா ஈடுபட்டிருந்தார் என்பதைக் காட்டும் பல சம்பவங்கள் வரலாற்றில் காணப்படுகின்றன. அக்பர், ஜெபுன்னிசாவுக்கு எழுதிய கடித வாசகங்கள் சில...

‘உனக்குச் சொந்தமானவை எல்லாம் எனக்குச் சொந்தமானவை போன்றதே!’

‘எனக்குரிய அனைத்தையும் உன் பிரியப்படி பயன்படுத்திக் கொள்ளலாம்.’

‘தௌலத் (Daulat) மற்றும் சாகர்மால் (Sagermal) இவர்களது மருமகன்களைப் பதவியில் அமர்த்துவதோ அல்லது பணி நீக்கம் செய்வதோ உன்னுடைய நோக்கம்போல் செய்யலாம். உனது ஆணையின்படி நான் அவர்களை பதவியிலிருந்து நீக்கிவிட்டேன். உன்னுடைய ஆசைகளை நான் எல்லா காரியங்களிலும் கருத்தில் கொள்கிறேன்.’

ஆஜ்மீர் முகாம் அருகில்

இளவரசர் அக்பரின் கலகம் பிசுபிசுத்தது. அவர் கைவிட்டுச் சென்ற ஆஜ்மீருக்கு (Ajmir) அருகில் உள்ள முகாம் கைப்பற்றப் பட்டபோது, இளவரசி ஜெபுன்னிசா, அக்பருக்கு எழுதிய ரகசியக் கடிதங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டன. அதற்குப் பின்புதான் ஜெபுன்னிசாவுக்கு ஔரங்கஜேப் ஆண்டுதோறும் வழங்கிவந்த நான்கு லட்ச ரூபாய் ஓய்வூதியத்தை நிறுத்தினார்; ஜெபுன்னிசாவின் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன. டெல்லியில் உள்ள சாலிம்ஹர் கோட்டையில் அவள் தங்கவைக்கப்பட்டாள்.

26-.5.-1702-ல் இறக்கும் வரை இங்கேயே வாழ்ந்தார்.

‘மஆசிரெ ஆலம்கீரி’ பக்கம் 204 தகவல் இதோ...

(Zeb-un-nisa’s correspondence with him was discovered. She was deprived of her pension of four lakhs rupees a year. Her property was Confiscated and she was lodged in the fort of Sali Margh at Delhi.)

‘மஆசிரெ ஆலம்கீரி**’**யின் முக்கியத்துவம்

ஔரங்கஜேப்பின் வரலாற்றை முழுமையாக அறிய உதவும் குறிப்பிடத்தக்க நூல்கள் சிலவற்றில், ‘மஆசிரெ ஆலம்கீரி’ (Ma-A’siri A’lamgiri) என்னும் நூல் சிறப்பான இடத்தைப் பெறுகிறது.

‘லுப்பூத்தவாரிக் ஹிந்த்’ (Lubout Tawarikh-Hind) என்ற நூலை ராய்பிந்த் ராயன்மால் எனும் இந்து திவான் எழுதினார். முஹம்மத் அமீன் முன்ஷியின் மகனான மிர்ஜா முஹம்மத் காசிம் எழுதிய ‘ஆலம்கிர் நாமா’ (Alamgir Nama) நூலின் சாரங்களைப் பிழிந்து ஔரங்கஜேப்பின் முதல் பத்து வருட ஆட்சியைப் பற்றி மஆசிரெ ஆலம்கீரி குறிப்பிடுகிறது.

40 ஆண்டுகள் ஔரங்கஜேப்பின் ராஜ்யப் பேரவையில் கலந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருந்த முஹம்மது சகீ முஸ்தயித் கான் (Muhammed Sakhi Mustaid khan) கி.பி.1710 வரையிலான வரலாற்றை எழுதியுள்ளார்.

ஔரங்கஜேப்பின் மறைவுக்குப் பின்தான் இந்த நூல் வெளியாயிற்று. இந்த நூலை 1785-ல் ஹென்றி வான் சிட்டார்ட் (Henry Van Sittart) மொழிபெயர்த்து வெளியிட்டார். அந்த நூலின் பக்கம் 204-ல் ஜெபுன்னிசாவைப் பற்றி இந்தக் குறிப்புகள் உள்ளன.

சாலிமார் கோட்டையில்

சாலிமார் கோட்டையில் ஜெபுன்னிசா தங்கவைக்கப்பட்ட காலத்தில்தான் அவள் கவிதைகள் புனைந்தாள் என்று கற்பனை

செய்து இனிமையாகக் கதை கட்டுகிறார்கள். அப்போது ஜெபுன்னிசா எழுதியதை Mrs.Westbrook தனது புத்தகத்தில் 17-வது பக்கத்தில் மொழிபெயர்த்து இருக்கிறார். இதோ அந்தக் கவிதை:

“So long these fetters cling to my feet! My friends have become enemies, my relations are strangers to me. What more have I do with being anxious to keep my name undishonoured, when friends seek to disgrace me? Seek not relief from the prision of grief, O Makhfi; thy release is not politic.”

O Makhfi, no hope of release hast thou until the Day of Judgement come.

கவிதையின் தமிழாக்கம்...

‘என்னுடைய காலில் இந்தச் சங்கிலிகள் கட்டப்பட்டு பூட்டப்பட்டிருக்கும் வரை என்னுடைய நண்பர்கள் விரோதிகளாகி விட்டனர். என்னுடைய உறவினர் எனக்கு அயலாராகிவிட்டனர். என் பெயரின் கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள நான் இன்னும் என்ன செய்ய வேண்டும்? நண்பர்களே, என்னை இழிவுபடுத்த நினைக்கும்போது ஓ! மக்பியே!

துயரத்தின் சிறையிலிருந்து மீள எத்தனிக்காதே! உன்னுடைய விடுதலை, அரசியல் ஆகாது. ஓ! மக்பீ! நியாயத் தீர்ப்பு நாள் வரும் வரை நீ விடுதலை அடைவாய் என்பதற்கு ஒரு நம்பிக்கையும் இல்லை.’

இவ்வாறு சாலிமார் கோட்டையில் இருந்த ஜெபுன்னிசா, கவிதைகள் புனைந்தார் என்பதைப் பற்றி வரலாற்றில் எங்கும் குறிப்புகள் இல்லை.

சிறை வைக்கப்பட்டபோது...

சாலிமார் கோட்டையில் ஜெபுன்னிசா சிறை வைக்கப்பட்டபோது அவரது வயது 43. பிறப்பு 15.2.1638. சிறை வைக்கப்பட்டது 16.1.1681. (மறைவு 26.5.1702; அப்போது வயது 64) ஜெபுன்னிசா, சிறை வைக்கப்பட்டபோது அகில்கானுக்கு வயது 55. 43 வயதான பெண்மணியான ஜெபுன்னிசா, 55 வயதான தாத்தா நிலையில் அகில்கான். இந்த நிலையில் காதல், கத்தரிக்காய் என்பதை யோசித்துப் பார்க்கவே முடியவில்லை.

சரித்திரச் சான்றுகள்

ஜெபுன்னிசாவைப் பற்றிக் கிடைத்திருக்கும் சரித்திரச்

சான்றுகள் சில...

ஔரங்கஜேப், ஜெபுன்னிசாவுக்கு எழுதிய சிறிய கடிதம் ஒன்று தற்போதும் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. 'பயாஸ்-உல்-குவானே' 'Faiyyaz-ul-Qa wanin' நூலில் பக்கம் 396-ல் காணப்படும் இந்தக் கடிதம், பாதி அரபியில் எழுதப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் ஜெபுன்னிசாவின் வாழ்க்கைக் குறிப்புகள் எதுவும் இல்லை.

அதாபி ஆலம் கீரி

கி.பி.1679-1680-களில் இளவரசி ஜெபுன்னிசா தனது சகோதரன் இளவரசர் அக்பருக்கு எழுதிய கடிதங்கள் அதாபி ஆலம் கீரியில் (Adab-i-Alamgiri) தொடுக்கப்பட்டு இருந்தாலும், அதில் ஜெபுன்னிசாவின் வாழ்க்கையைப் பற்றியக் குறிப்புகள் எதுவும் இல்லை.

அலிகார் பல்கலைக்கழகத்தில்

அலிகார் பல்கலைக்கழகத்தில் (Aligarh University), ஜெபுன்னிசா குறித்த கையெழுத்துப் பிரதிகள் உள்ளன. தனக்குப் பழம், விளையாட்டுப் பொருட்கள், ஒரு ஜோடி மூக்குக்கண்ணாடி இவற்றை கொடுத்ததற்கு நன்றி தெரிவித்து ஜெபுன்னிசாவின் செயலாளர் மீர்ஸா கலீல் (MIRZA KHALIL), ஜெபுன்னிசாவுக்கு எழுதிய கடிதங்கள் இன்றும் அலிகார் பல்கலைக்கழகத்தில் உள்ள கையெழுத்துப் பிரதிகளில் காணலாம்.

மக்பீ

'மறைந்திருக்கும் ஒன்று அல்லது மறைந்த ஒன்று' எனப்படும் 'மக்பீ' என்ற புனைப்பெயரில் பாரசீக இலக்கியங்களை ஜெபுன்னிசா எழுதினார். என்றாலும், தற்போதுள்ள 'திவானி மக்பீ' (Diwani-Makhfi) ஜெபுன்னிசாவால் எழுதப்பட்டதல்ல என்று ஜாதுநாத் சர்க்கார் தெளிவுபடுத்துகிறார்.

மகா விமர்சனம்

'தப்ஃசீர்-இ-கபீர்' (Tafsir-i-Kabir Great Commentrary) என்ற நூல், ஜெபுன்னிசாவின் ஆதரவில் முல்லா சிபியுத்தின் (Mullah Safiuddin Rabeli) எழுதியது. ஜெபுன்னிசாவே இதை எழுதினார் என்பது தவறு என, ஜாதுநாத் சர்க்கார் வலியுறுத்துகிறார்.

மேலும் 'மக்பி' என்ற புனைப்பெயரை பல கவிஞர்கள் வைத்துக்கொண்டனர். பேரரசர் அக்பரின் மனைவி ஒருவரும், நூர்ஜகானும் அந்தப் புனைப்பெயரை வைத்திருந்தனர் என்ற

வரலாற்றை நன்கு அறிந்திருப்பவர்களால் உணர்ந்துகொள்ள முடியும்.

அக்பர்

ஜெபுன்னிசாவின் முடிவு

ஜெபுன்னிசா தனது ஆயுள் பரியந்தம் வரை டெல்லியில் சாலிமார் கோட்டையில் தங்கவைக்கப்பட்டு இருந்தாள். அவள் விடுதலை செய்யப்படவில்லை. அவள் சிறையில் நல்ல முறையில் நடத்தப்பட்டாள். (but was othewise well treated). அவள் அரண்மனையில் புகுந்த ஆறு மாத காலத்துக்குப் பிறகு, ஔரங்கஜேப் அவளது மாதாந்திர நிதியான 30,000 ரூபாயை 10,000-மாகக் குறைத்து வழங்கினார்.

மாதாந்திர நிதி வழங்கப்படல்

Some six months after she had entered her palace-prison, the Emperor restored her monthly allowance of Rs.30,000 though with a reduction of Rs.10,000; (Akhbarat, 15 September, 1681)

அதிகாரப்பூர்வ வரலாற்றில்

தன்னுடைய வாழ்வைப் போன்ற இனிமையான தனது மகள் ஜெபுன்னிசா மறைந்தபோது, ஔரங்கஜேப்பின் இதயம் வேதனையிலும் அவருடைய கண்கள் நீரிலும் நிறைந்தன. அவரால், தன் பலவீனத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. மிகுந்த சிரமங்களிடையே அதனை அடக்கிக்கொண்டார்.

‘இறைவனின் கருணைத் திரையை (ஜெபுன்னிசா இளவரசியின்) முகத்தின் மேல் இழுத்துப் போர்த்தி, மன்னிப்பின் இடத்தில் தன்னுடைய இருப்பிடத்தை ஏற்படுத்திக்கொண்டாள்’

என்று ஔரங்கஜேப் டெல்லியில் வெளியாகும் அரசாங்க பத்திரிகை மூலம் 26.5.1702-ல் அறிவித்தார்.

ஏழைகளுக்கு தர்மம்

செய்யித் அம்ஜத் கான், ஷேக் அதௌல்லா (Shaikh Ataullah) ஹாபிஸ் கான் ஆகியோரிடம் ஜெபுன்னிசாவின் அடக்கத்தின்போது ஏழை-எளியவர்களுக்கு தர்மங்கள் வழங்கிட ஔரங்கஜேப் உத்தரவிட்டார்.

முப்பதாயிரத்தின் தோட்டம்

தனது சகோதரி ஜஹானாவிடமிருந்து வந்த சொத்துகளிலிருந்து, டெல்லிக்கு வெளிப்புறமுள்ள 'முப்பதாயிரத்தின் தோட்டம்' (Garden of Thirty Thousand) என்ற இடத்தில் முன்னமே தீர்மானித்து இருந்தபடி, ஒரு நினைவிடம் எழுப்ப உத்தரவிட்டார். (Masir-i-Alamgiri- Page.462)

டெல்லியில் காபூலி வாயிலுக்கு (Kabuli Gate) வெளிப்புறமுள்ள முப்பதாயிரம் மரங்களின் தோட்டத்தில் இருந்த ஜெபுன்னிசாவை அடக்கவிடம், ராஜபுதன ரயில்வே பாதை அமைக்கப்பட்டபோது (Rasputana railway line) இடிக்கப்பட்டது.

இறுதி இடத்திலும் இல்லாததைச் சொல்வதா?

'ஜெபுன்னிசா உடல், பஞ்சாப்பில் உள்ள நவகாட்டில் (Nawakut in the Punjab) இறுதியாக அடக்கம் செய்யப்பட்டுள்ளது' என்று, இன்று இளவரசியின் இறுதி இடத்தைப் பற்றிய செய்தியிலும்கூட வரலாற்று உண்மைகளை மறைத்த ஏனோ எழுதுகிறார்கள்.

வரலாற்றில் கற்பனைக் கதைகளை அவிழ்த்துவிடுபவர்களின் எண்ணம், ஆசை வெகுகாலம் நிலைத்து நிற்பதில்லை. நீரில் தோன்றிய குமிழிபோன்று மறையும். மகாகவி காளிதாசின் வரலாற்றிலும் கதைக் கட்டிவிட்டவர்கள் என்ன ஆனார்கள்?

காளிதாசர்

வடமொழி இலக்கிய வானில் வட்ட நிலவெனத் திகழ்ந்தவர் காளிதாசன். அவருடைய படைப்புகள், பல மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. பல நூற்றாண்டுகளாக அவருடைய புகழ் இடையூரின்றி எங்கும் பரவி வந்துள்ளது.

வால்மீகி வாழ்ந்த ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் காளிதாசன் தோன்றினான். காளிதாசன் உலகுக்கு உதவியுள்ள பெருங்காப்பியங்கள் இரண்டு: மேகதூதம், ருதுசம்ஹாரம்.

நாடகங்கள் மூன்று: ‘மாளவிகாக்நி மித்ரம், சாகுந்தலம், விக்ரமோர்வசீயம். ‘உபமாபாளிதாசஸ்ய’ (உவமைக்கு காளிதாசன்) என்பது கற்றோர் வாக்கு. சு.அ.இராமசாமிப் புலவர், காளிதாசரின் குமாரசம்பவம் (முருகக் கடவுள் பிறப்பு) சென்னை, 1970 பதிப்புரையில்...

கரும்பைச் சுவைத்தவர் கற்கண்டை விரும்பினர்; காளிதாசனைச் சுவைத்தவர்ஆரியக் கலை இன்பத்தில்ஆழ்ந்தனர்.’ (‘நா.வரதராஜுலு நாயுடு, காளிதாசன் உவமைகள், பொள்ளாச்சி 1977, பக்கம் vii, ix, x,)

காளிதாசரின் நூல்களோ, நிபுணக் கலைஞன் பலவித மணிகளை வெட்டி, இழைத்துக் கோத்துக்கட்டிக் கலாதேவிக்குச் சூட்டிய அணிகலங்கள். அமரகவி காளிதாசனின் கீர்த்தி உலகெங்கும் பரவியுள்ளது. கற்று வல்லபோஜன் முதலிய காவலராலும், கீர்த்தி பெற்ற பாணபவ பூதாதி பாவலராலும் நன்கு மதிக்கப்பட்ட மகாகவி காளிதாசன், இதர மன்னர்களிடம் எவ்வளவோ சன்மானம் பெற்றாலும் மாளவேந்தனாகிய போஜன் சபையின் புகழ் ஆபரணங்களிலே மகுடாபரணமாக (Poet Literature) விளங்கினார்.

(சுவாமி சுத்தானந்த பாரதியார், மஹாகவி காளிதாசன், இராமச்சந்திரபுரம், பக்.19.)

(க.சந்தானம், காளிதாசன் காவியங்கள் சாகுந்தலம், மேகதூதன், சென்னை, 1958, பக் iv, v.)

(சிதம்பரம் குருநாத கந்தசாமி முதலியார் காளிதாச மகாகவியின் சரித்திரம் என்னும் கவிரத்தின சிந்தாமணி, சென்னை, 1954, பக்.4.)

நன்நடத்தை இல்லாத காமுகர்

அந்தக் காலத்தில் மகாகவி காளிதாசன் மீது நம்பமுடியாத, மதிக்கத்தகாத, மானக்கேடான, அவமதிப்புத் தருகின்ற (Dis creditable) மக்களால் ஆர்வமாக நம்பப்படும் மரபுவழிக் கதை கட்டுக்கதை (Legent) பல கூறப்பட்டன.

காளிதாசரைப் பற்றிக் கர்ணபரம்பரையாக வழங்கும் கதைகள் அவர் நன்னடத்தை இல்லாத காமுகர் எனக் கூறுகின்றனர்.

வே.ஸ்ரீ.வேங்கடராகவாச்சாரியார்

“காளிதாசர், குணநலன் இல்லாதவர் என்று கொள்வதற்கு அகச்சான்றோ, புறச்சான்றோ இல்லை. சிருங்கார ரஸத்தை,

முக்கியமாக அவருக்கே உரித்தான தனிப்பட்ட ஓர் உற்சாகத்துடன் நூல்களிலே வர்ணித்துள்ளார் என்பதாலேயே அவர் நன்நடத்தையற்றவர் என அனுமானிப்பது மிக மிகப் பிழைபட்டதாகும்" என்று வே.ஸ்ரீ.வேங்கடராகவாச்சாரியார் அதனை ஆணித்தரமாக மறுக்கிறார்.

(ரகுவம்ச மஹாகாவ்யம், சென்னை, 1952, பக். ix, x)

இந்தியன் ஆன்டிகு - வெரி

நடுநிலைமை வாய்ந்த, ஆர்த்தமைந்த நல்லறிவு நிலையிலுள்ள வரலாற்று ஆசிரியர்கள், தங்களது ஆய்வின் துணைக்கொண்டு கவி ஸார்வ பௌமரான மகாகவி காளிதாசன் மீது சுமத்தப்பட்ட பொய்க் களங்கத்தை கட்டுக்கதையென்று நிரூபித்தனர். 'இந்தியன் ஆண்டிகு-வெரி' 1878-ல் பக்கம் 115-ல் இதுகுறித்த விளக்கத்தைக் காண முடிகிறது.

ஒப்பற்ற ஒழுக்கசீலரான பேரரசர் ஔரங்கஜேப் மீதும், அவரது மகளும், கவிஞரும், இளவரசியுமான ஜெபுன்னிசா மீதும் சுமத்தப்பட்ட காதல் குறறச்சாட்டுகள், அது தொடர்பாக ஔரங்கஜேப் மீது சுமத்தப்பட்ட கொலைப்பழிகள் இவற்றை வாசிக்கிறபோது காளிதாசனது நினைவுதான் வந்தது. அதுபோலத்தான் புகழ்பெற்ற கல்கிகூட வ.ரா.மீது தவறாக எழுதினார்.

கல்கியின் தவறான கருத்து

3-.11-.1935 ஆனந்த விகடனில் கல்கி ரா.கிருஷ்ணமூர்த்தி, காந்தி சகாப்தம் படைத்து சிறைக்குச் சென்ற தமிழ் எழுத்தாளர் வ.ரா. (1889-1951)வைப் பற்றி எழுதுகிறபோது, அவர் ஆங்கிலம் தெரியாதவர் என்பதுபோல எழுதி, அவரது ஆங்கில இலக்கியப் பயிற்சியைக் கேள்விக்குரியதாக்கினார். ஆனால், 1930-ல் வ.ரா. எழுதிய 'எது கவிதை?' (What is poetry?) என்ற ஆங்கிலக் கட்டுரை, பின்னால் வரலாற்றின் பக்கங்களுக்கு வந்தபோது வ.ரா-வைப் பற்றி 1935-ல் எழுந்த சந்தேகம், 1982-ல் அவரது ஆங்கிலக் கட்டுரை கிடைத்தபோது வரலாற்றில் உண்மை வெளிச்சத்துக்கு வந்தது என்பார் ஆய்வாளர் பெ.சு.மணி. (இலக்கியப்பீடம் ஏப்ரல் 1997, பக்கங்கள் 39,40).

அதுபோலத்தான் அகில்கான் வெந்நீர்ப் பானையில் கொல்லப்பட்ட கதையும் வரலாற்று உண்மைகளால் குப்பைத்தொட்டியில் வீசப்பட வேண்டிய ஒன்றாகும்.

சமகால வரலாற்றில் எழுதப்படவில்லை

ஜெபுன்னிசாவின் காதல் எனும் கட்டுக்கதை பற்றி செய்திகள், ஔரங்கஜேப் ஆட்சிக்காலத்தில் வரலாற்றுச் சான்றுகள் எதிலும் இல்லை. ஔரங்கஜேப் மரணத்துக்குப் பிறகு, நூறு ஆண்டுகள் கழித்தும்கூட எந்த வரலாற்று நூலிலும் இதுகுறித்துப் பேசப்படவில்லை.**ஆஸ்தான வரலாற்று**

ஆசிரியர்கள்

ஔரங்கஜப் ஆட்சிக்காலத்தில் ஆஸ்தான வரலாற்று ஆசிரியர்கள் மறைந்திருக்கலாம். அதனால் இந்தச் சம்பவம் குறிக்கப்படாமல் போயிருக்கலாம் என்று வாதம் எழுந்திடக்கூடும்.

ஹிந்து வரலாற்று ஆசிரியர்

ஔரங்கஜேப் கால ஹிந்து வரலாற்று ஆசிரியர் ஈஸ்வரதாஸ் (Iswardas), பிம்சென் (Bhimsen) ஆகியோர் இதுபற்றி எழுதியிருந்தால், அதனை எவரும் அப்போது தடுத்திருக்க இயலாது. அவர்களும் எழுதிடவில்லை.

வரலாற்றில் ஒரு காஃபிகான்

முகலாயச் சக்கரவர்த்தி ஔரங்கஜேப் மறைந்த 25 ஆண்டுகளுக்குள் முகலாய சரித்திரப் பகுதிகளை எழுதிய வரலாற்று ஒரு காபிகான் (Khafikhan), இதனைப் பற்றி எதுவும் எழுதிடவில்லை. இவர் முகலாய அரசர்களின் வரலாற்றை இரண்டு தொகுதிகளாக எழுதியுள்ளார்.

மஜர உல் உமரா

Masir-ul-umara என்ற அந்த வரலாற்றுத் தொகுதிகளில் காபிகான் இதுகுறித்துக் கூறவில்லை.

பர்னியர்

முகலாயர் ஆட்சிக்காலத்தில் ஆட்சிப் பகுதியில் சுற்றுப்பயணம் செய்து வரலாற்றில் குறிப்புகளை எழுதி வைத்துவிட்டுச் சென்றுள்ள பர்னியர் இந்தக் கதையைக் கூறவில்லை.

மனுசி

முகலாய அரண்மனையில் நடைபெற்ற சம்பவங்களை, சின்னச் சின்ன விஷயங்களைக்கூட விடாமல் பதிவுசெய்து வைத்தவர் ‘மனுச்சி’ (Manucci). அதுவும் முகலாய அரச தர்பார்களில் நடைபெறும் வதந்திகளையும், ஹேஸ்யங்களையும் எழுதுவதையே தனது தொழிலாகக் கொண்டவர் மனுச்சி.

(அவரது முகலாயர்களின் வரலாறு ‘History of Mughals’ நூலில்.)

வதந்திகளின் வரலாறு

‘Story of Mogal’ என்று பெயர். அதாவது, வதந்திகளின் வரலாறு. (Chronique Scandleuse) என்று அது அழைக்கப்பட்டது. இவ்வளவு தூரம் முகலாய வரலாற்றை எழுதிய மனுசிகூட, அகில்கான்- ஜெபுன்னிசா காதல் என்னும் கட்டுரையைப் பற்றி எங்கும், எதிலும், எப்போதும் குறிப்பிட்டதில்லை.

பின் எவ்வாறு இந்தக் கட்டுரை உருவாயிற்று?

18-ம் நூற்றாண்டில்

அசில்கான் - ஜெபுன்னிசா காதல் எனும் கட்டுக்கதை, 19-ம் நூற்றாண்டில்தான் செருகப்பட்டுள்ளது. அதற்கு முந்தைய வரலாறு நூல்களில் அது எங்கும் இல்லை. 19-ம் நூற்றாண்டுக்கு முந்தைய நூல்களில் இந்தக் கட்டுக்கதையைப் பற்றிய குறிப்புக்கூட எங்கும் காணப்படவில்லை.

கற்பனைக் கட்டுக்கதையாளர்

19-ம் நூற்றாண்டில் உருது கற்பனைக் கட்டுரைக் கதையாளரான முன்ஷி அஹமதீன் (Munshi Ahamauddin) பி.ஏ., வரைப் படித்தவர். தனது ‘தாரி-இ-மக்தும்’ (Durr-i-Maktum) என்ற நூலில் முதன்முதலில் அவர்தான் எழுதியுள்ளார்.

1913-ல்

இவர் எழுதிய கட்டுக்கதையை அகில்கான்-ஜெபுன்னிசா காதல் என்ற கற்பனைக் கதையை, 1913-ல் ஆங்கிலத்தில் விவரித்து எழுதத் துவங்கினார்.

Wisdom of the Eastseries

1913-ல் Mrs. West brook என்பவர் ‘Wisdom of the Eastseries’ என்ற நூலின் அகில்கான் - ஜெபுன்னிசா காதல் எனும் கற்பனைக் கதையை விரிவாக எழுதியுள்ளார்.

வங்காளத்தில்

பியாரி சந்திரமித்திரர் (1814-1883), பூதேவ முக்கர்ஜி (1825-1894) இருவரும் வங்காளி மொழியில் புனைந்துரைக் கதைக்கு வித்திட்டவர்கள்.

ரொமான்ஸ் ஆஃப் ஹிஸ்டரி

சரித்திரப் புனைந்துரைக் கதைகள் ‘ரொமான்ஸ் ஆஃப்

ஹிஸ்டரி’ (Ramance of History) எனும் நூல், 19-ம் நூற்றாண்டில் வெளிவந்தது.

ஹன்டர்

The Romance of History India By the Rev. I to BART (AUNTER, B.O.) என்பவரால் லண்டனில் வெளியிடப்பட்ட அந்த நூல், 514 பக்கங்களைக் கொண்டது. 15 கதைகள் அடங்கியது. (அப்பளம்போல் நொறுங்கி விழும் நிலையில் உள்ள அந்த நூலின் பிரதி அடியேனிடம் உள்ளது.)

வங்க இலக்கிய வரலாறு

‘தி மாட்டாசிப்’ (மராத்தியத் தலைவர்) என்னும் கதை, ஔரங்கஜேப்பினுடைய படைகளின் மீது சிவாஜி வெற்றி கொண்டதாகவும், முகலாயச் சக்கரவர்த்தியின் அழகிய மகளை அவர் சிறைப்படுத்தியதாகவும், அந்த இருவருக்கு இடையே காதலின் முனை தோன்றியதாகவும் அதிலே கற்பனையான கதை நன்றாகவே எழுதப்படுகிறது.

12.5.1666

ஆக்ராவில் சக்கரவர்த்தி ஔரங்கஜேப்பை மராத்திய வீரன் சிவாஜி காணவந்த நேரத்தில், அவனைக் கண்டதும் காதல் கொண்டதாக ஜெபுன்னிசா மீது மற்றொரு கட்டுக்கதை கட்டப்பட்டுள்ளது. கி.பி.1840-களில் வங்காள மொழியில் புதே முயற்சியால் எழுதப்பட்டுள்ளது. முழுக்க முழுக்க கற்பனைக் கதை இது.

பாரசீக வரலாறுகளோ அல்லது சிவாஜியைப் பற்றிய மராத்திய வாழ்க்கை வரலாறுகளோ சிறு குறிப்பு ஒன்றைக்கூடத் தரவில்லை. ஆதாரமற்ற கற்பனைக் கதைகளை இவ்வாறு புனைந்துகொண்டே இருக்கிறார்கள். அந்தக் கதையில் மராத்திய சிவாஜியோடு, முகலாய இளவரசி ரோஷினரா (Ruchi nara) காதல் கொண்டதாகக் கூறப்பட்டுள்ளது.

1805-ல் ராபர்ட் லூர்ம் (Robert urme) எழுதிய நூலில் அவர் ‘இந்தக் கதையை ஏற்க முடியாது. இதை நம்புவதற்கு இல்லை’ என்று விரிவாகத் தெரிவித்துள்ளார். 1805-ல் தெளிவாக மறுத்த விஷயத்தை அதற்குப்பின்பு வந்தவர்கள் திரும்பவும் எழுதுகிறார்கள். 1958-ல் திரும்பவும் அந்தக் கதை என்ன ஆயிற்று தெரியுமா?

வித்துவான் O.கிருஷ்ண பிள்ளை

திருவிதாங்கூர் பல்கலைக்கழகத்தின் தமிழ் ஆசிரியர்

வித்வான் ஸ்ரீ கிருஷ்ண பிள்ளை ‘சரிதமஞ்சரி’ எனும் நூலின் 1859-ல் 93 பக்கங்களில் தந்துள்ளார். பெர்.வால்டர் ராலி துவங்கி, சம்யுக்தை வரையிலான பத்துக் கதைகள் அந்த நூலில் இடம் பெற்றுள்ளன. அதில் ஆறாவது கதையாக ஜெபுன்னிசா உள்ளது. அதில் சிவாஜியுடன் ஜெபுன்னிசா காதல் கொண்டதாக ஸ்ரீ கிருஷ்ண பிள்ளை கற்பனையை அவிழ்த்துவிட்டுள்ளார். அத்தோடு விட்டாரா? இல்லை! சிவாஜி மறைந்ததற்குப் பிறகு திரும்பவும் ஜெபுன்னிசா - அகில்கான் மீது காதல் கொண்டதாக தனது கற்பனையை அவிழ்த்துவிட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, 2004-ல் விஜ(ஷ)யகுமாரும் விஷத்தைக் கக்கியுள்ளார். வரலாற்றில் இல்லாத ஒன்றை சமகால சரித்திர ஆசிரியர்கள் எவரும் கூறிடாத ஒன்றை, மாற்று மதத்தைச் சேர்ந்த வரலாற்று ஆசிரியர் யாராலும் கூறப்படாத ஒன்றை, சிறு சிறு வதந்திகளைக்கூட வரலாற்றில் பதிவுசெய்து வைத்திருக்கும் வரலாற்று ஆசிரியர்கள் எழுதிடாத ஒன்றை நூற்றாண்டுகள் கழிந்தபின் கற்பனையாக, கட்டுக்கதையாக எழுதி, 18-ம் நூற்றாண்டில் அதன் காதல் ரசம் சொட்டச் சொட்ட உருது, ஆங்கிலம், வங்காளம் என பல மொழிகளில் உலவவிடப்பட்டுள்ளது. அதனைப் படித்துவிட்டு கிருஷ்ண பிள்ளை, விஜயகுமார் போன்றோர் வாதத்தைக் கக்குவது நியாயந்தானா?

மரகதவேலு, எஸ்.எஸ்.அருணகிரிநாதர்

1919-ல் மதுரையில் அச்சிட்டு உ.மீ.மரகதவேலு, எஸ்.எஸ்.அருணகிரிநாதர் ஆகியோரை ஆசிரியராகக்கொண்டு 10 அணா விலையில் வெளிவந்த நூல், ‘ஔரங்கஜேப்’. அதில் 112-வது பக்கத்தில் கூறுகிறார்கள்...

‘ஔரங்கஜேப், கல்வியில் மேதாவி; எழுதுவதில் நிபுணர்; போரில் புறங்காட்டாத வீரர்; அஞ்சா நெஞ்சமும் ஆண்மையும் மிக்கவர்; ராஜதந்திரத்தில் தேர்ந்தவர்; ராஜ்யபார நிர்வாகத்தில் சிறந்தவர்; நடுநிலைமை தவறாத நியாயாதிபதி. ஏழைகள் மீது கருணையும் கடவுள் பக்தியும் மிகுந்தவர்’ என்ற வரிகளை எண்ணிப் பார்க்கிறேன்.

உலகப் பேரரசர்களில் உயர்ந்தவர்

ஆலம்கீர்; புவியரசர்! அரசத் தலைமுறைகளுக்கு வழிகாட்டியான அணையா விளக்கு. தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் உள்ள வேறுபாட்டை நன்கு உணர்ந்தவர். ‘வரலாற்று ஆசிரியர் எனக் கூறிக்கொள்வோர், உம்முடைய

கருத்தை அறியாமல், உம்மைப் பற்றி எத்தனையோ கட்டுக்கதைகளை உண்டாக்கிவிட்டார்கள். அவர்களுடைய பார்வை மங்கலானது' என்ற எம்.ஆர்.எம். அப்துர்ரஹீமின் வரிகளையும் எண்ணிப் பார்க்கிறேன்.

JADUNATH SARKAR

"Thus we find that the story of young Aqilkhan having seen roasted to death in a caulfron by Order of Aurangzib is utterly false" என்று அகில்கான் ஔரங்கஜேப்பால் கொல்லப்பட்டார் என்பது, முற்றிலும் சிறிதும் கலப்பின்றி, தீர பொய்யானது. (இந்திய வரலாற்றில் ஔரங்கஜேப் காலத்தில் நடைபெறாதது என்று ஹாலந்துப் பேராசிரியர் சாதுநாத் சர்க்கார் 1912-களில் 'Historical Essays' எனும் நூலில் ஆணித்தரமாக எழுதியுள்ளார்.)

1919-ல் 'Students in Mughal India' நூலில் வலியுறுத்தியுள்ளார். 1933-ல் திரும்பவும் அந்த நூலை மறுபதிப்பு செய்துள்ளார். ஓரியன்ட் லாப்மன் நிறுவனத்தார் 1989-ல் அதனைத் திரும்பவும் மறுபதிப்பு செய்துள்ளனர். அந்த நூலின் பக்கம் 94-ல், சாதுநாத் சர்க்கார் இந்தக் கருத்தை ஆணித்தரமாக வலியுறுத்தி எழுதியுள்ளார். தகுந்த சான்றுகளுடன் மறுத்துள்ளார்.

இத்தனைக்கும் பிறகு ஔரங்கஜேப், அகில்கானை வெந்நீர்ப் பானையில் உயிரோடு கொன்றார் என்ற அப்பட்டமான பொய்யை, கற்பனை கலந்து தொடர்ந்து எழுதி வருவதும், அதனை அரசுக் கல்லூரி மலர்களில் கட்டுரையாக வெளியிடுவதும் நியாயந்தானா? இந்தத் தவறுகள் இனித் தொடர்வது அவசியந்தானா? வரலாற்று உண்மைகள் உணர்ந்தவர்கள் இனியாவது உலகப் பேரரசர் ஔரங்கஜேப் மீது பழியை வாரித் தூற்றுவதை நிறுத்துவார்களாக!

கை மையால் பொய் எழுதிடேன்!

எளியேன் எனது கை மையினால் ஒருபோதும் பொய் எழுதிடேன்.

'ஓ! மனமே! உண்மையற்ற ஒன்றுக்காக உண்மையை ஏன் நீ தவறாகப் புரிந்துகொண்டால் போதுமே, அடுத்தவர்களின் மதத்தின் மீது உனக்கு ஈடுபாட்டை ஏற்படுத்தி இருக்குமே' என்று 14-வது நூற்றாண்டில் வாழ்ந்த காஷ்மீர ஹிந்துக் கவிஞர் லல்லேஷ்வரி என்ற அன்னையார் கூறிய வரிகளை விஜ(விர)யகுமார்கள் போன்றோர் எண்ணிப் பார்ப்பார்களாக!

காலந்தோறும் கீர்த்தி மிக்கவர்களின் மீது கட்டுக்கதைகளை அவிழ்த்துவிடுவதும், புகழுக்குரியவர்களின்

மீது புழுதிவாரித் தூற்றுவதும், பின்னர் சரித்திரச் சான்றுகளுடன் தொடர்ந்து ஆணித்தரமான மறுப்பைத் தெரிவிப்பதும் தொடர்கதையாகாமல் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டிய நிலையே, வரலாற்றுக்கு ஆரோக்கியம் தருவதாகவும் உள்ளக் கிடக்கையும், அவாவும் ஆகும்.

13

ஔரங்கஜேப் ஒரு மதவெறியரா?

பண்டிதநேரு தனது உலக சரித்திர நூலில் 89-வது அத்தியாத்தில் ‘அக்பரைப்’ பற்றி எழுதி முடித்தநிலையில், 90-வது அத்தியாத்தைத் துவங்குகிறபோது, ‘அக்பரைப் பற்றி இன்னும் சிறிது கூற எனக்கு ஆசையாக இருக்கிறது... வரலாறுகளிலிருந்து இன்னும் சில மேற்கோள்களை எடுத்துக்காட்டாமலிருக்க என்னால் முடியவில்லை’ என்று குறிப்பிட்டுவிட்டுத் தொடர்வார்; அதுபோன்று, ஔரங்கஜேப் குறித்தும் இன்னும் சில செய்திகளைச் சொல்ல நானும் விரும்புகிறேன்.

“ஆசியாக் கண்டத்திலேயே சிம்மாசனத்தில் வீற்றிருந்தவர்களில் மிகுந்த கெடுதல் மனப்பான்மையையும், சந்தேகப்படுதலையும், ஏமாற்றுதலையும், மனிதனிடம் இருக்க வேண்டிய நேசிக்கக்கூடிய எந்தக் குணமும் அற்றவர் ஔரங்கஜேப்.” இது அவரைப்பற்றித் தூற்றுபவர்களின் கூற்று.

“மிகுந்த மரியாதைக்காரர், அவரது ஒழுக்கம் சாலச் சிறந்தது; அவரது எளிமை பாராட்டத்தக்கது.” இது ஔரங்கஜேப்பைப் போற்றபவர்கள் கூறுவது. இவ்வாறு போற்றுதலுக்கும் தூற்றுதலுக்குமுரிய மாமன்னர் ஔரங்கஜேப்பின் குணநலன்கள் அவரது நடைமுறைகள் பற்றி வரலாற்றில் காணப்படும் செய்திகள்தான் எவை?

யானைச் சண்டை

கி.பி. 1633இல் ஓர் நாள். உப்பரிகையில் மாமன்னர் ஷாஜகான் அமர்ந்து மைதானத்தில் நடைபெற்ற யானைகள் சண்டையைக் கண்டு களித்துக் கொண்டிருந்தார். களத்தில் நின்ற யானை ஒன்றுக்கு அதன் காதருகே ஈட்டி பாய்ந்ததால், கோபம் கொண்டு அந்த யானை பாய்ந்து வந்தது. அப்போது மைதானத்தின் குறுக்கே இளவரசர் ஔரங்கஜேப் வந்து கொண்டிருந்தார். பிளிறிக்கொண்டு வெறியோடு வந்துகொண்டிருந்த யானையை எதிர்கொண்டு, துளியும் அச்சங்காட்டாமல், ஒரு அங்குலம்கூடப் பின்வாங்காமல் முன்னேறிச் சென்று கையிலிருந்த ஈட்டியை யானையின் நெற்றிப் பகுதியில் செலுத்தினார். அதனைக்கண்டு கூடியிருந்த மக்கள்கூட்டம் பிரமித்து ஆரவாரம் செய்தது.

மன்னர் ஷாஜகான் தமது மகனை அழைத்து, 'என்ன இந்த விபரீத விளையாட்டு? வேறு ஏதாவது நடந்திருந்தால்...?' என்றார். பதினைந்து வயது கொண்ட பாலகன் இளவரசர் ஔரங்கஜேப் சொன்ன பதில் இதோ :

"தந்தையே, எப்பேர்ப்பட்ட சக்கரவர்த்தியாக இருந்தாலும் மரணம் என்கிற திரை விழாமலா இருக்கப்போகிறது? என் வீரத்தைக் காட்டும்போது நான் மரணமடைந்தால் அது பெருமையான விஷயம் தானே' என்ற பதிலைக் கேட்டு திகைத்துப் போனார், ஷாஜகான்.

சுதாகர் என்ற அந்த யானையை வீழ்த்தியதற்காக தனது தந்தையாரிடமிருந்து பகதூர்ஷாஹ் என்ற சிறப்புப் பட்டத்தை ஔரங்கஜேப் பெற்றார். * (* பாரசீக லாஹூரி, முதல் பாகம், வங்காள ஆசியக் கழகம் வெளியீடு. பக். 489.)

படைத்தலைவர்

அதற்கு ஆடுத்த ஆண்டே, ஔரங்கஜேப் பத்தாயிரம் வீரர்கள் அடங்கிய குதிரைப் படையின் தலைவரானார். 1634 இல் 10,000 ஸாட், 4000 பொவர் தகுதி பெற்ற மான்சப்தரானார். பந்தல்கண்டு நாட்டுப் படையெடுப்பின் தலைவராக, ஆர்சா நாட்டு ஜிஜார்சிங் என்ற கிளர்ச்சிக்காரரை அடக்கச் சென்று தனது முதல் போர்க்களத்தைச் சந்தித்தார்.

1636 முதல் 1644 வரை தக்காணத்தின் கவர்னராக சிறப்பாகப் பணிபுரிந்தார். அப்போதுதான் 1637 மே 18-ல் பாரசீக அரசக்குடியின் உறுப்பினரான ஷாநாவாஸின் மகளான திலராஸ்பானு பேகத்தை மணந்து கொண்டார். 1645-ல் குஜராத்தின் கவர்னரானார். 1647-ல் பால்க் நாட்டின் மீது படையெடுக்க அனுப்பப்பட்டார். 1648-ல் முல்தானின் கவர்னராகி

1652 வரை அந்தப் பதவியை வகித்தார். அப்போதுதான், ‘காந்தஹாரை’ வெல்லும்படி அவர் படையுடன் அனுப்பப்பட்டார். 1652லிருந்து 1658 வரை தக்காணத்தில் திரும்பவும் வைசிராய் ஆனார்.

1658 ஜூலை 31-ல் (21 என்பாரும் உண்டு.) வானவேடிக்கை, விழா ஏதுமின்றி எளிமையாக முடிசூட்டிக் கொண்டார்.

1659 மே 15-ல் (ஜூன் 5 என்பாரும் உண்டு.) திரும்பவும் முடிசூட்டிக் கொண்ட அந்த மாமனிதர் அக்பர் சக்கரவர்த்திக்கு நிகராக வீரமும், ஆற்றலும் கொண்டு, ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக கி.பி.1767 வரை கோலோச்சவும் செய்தார்.

யானைச் சண்டையில் ஆரம்பித்து அவரது வாழ்நாளெல்லாம் தொடர்ந்து போர் உடைதரித்து போர்க்களங்களிலே வாழ்ந்த மாமன்னர் ஔரங்கஜேப். இதோ ஒரே ஒரு போர்க்களக்காட்சி.

போர்க்களத்தில் பிரார்த்தனை

1647-ல் பேரரசர் ஷாஜகான் காபூலில் முகாமிட்டிருந்தார். ஔரங்கஜேப்புடன் 25,000 படைவிரர்கள் அனுப்பப்பட்டனர். எதிரிகளான உஸ்பெக்கியர்களின் எண்ணிக்கை 10,00,000 மாக இருந்தது. பைஸாபாத்தில் ரம்ஜான் 14ஆம் நாள் அஸ்கா (Aska) முகாமிலிருந்து புறப்பட்ட படைகளுக்கு ஔரங்கஜேப் தலைமை தாங்கினார். ஜயசிங் இடப்பக்கத்திலும், அமீகுல் உம்ரா வலப்பக்கத்திலும் படைகளை உடன் நடத்திச் சென்றனர். பிருதிவிராஜ் ராத்தோரின படைகள் இவற்றிற்கு முன்னே சென்றன. ஆல்மேனியர்களை ‘அர்பாங்க்‘ என்ற இடத்தில் மொகலாயப் படைகள் விரட்டியடித்தன. ஆனால் உஸ்பெக்கியர்களின் ‘பாலக்‘ பகுதியில் முகலாயவர்களால் நிரந்தரமாக முகாமிட முடியவில்லை. ஆனால் ஔரங்கஜேப் தைரியத்தை இழக்காமல் பொக்காரா இராணுவ வீரர்களுடன் தம்படைகளை மோத விட்டார். போர் உக்கிரமாக நடைபெற்றுக்கெண்டிருந்தபோது மாலைவேளையில் தொழுகைக்கான நேரம் வந்தது. குதிரையிலிருந்து கீழே இறங்கிய ஔரங்கஜேப் துணியை விரித்து மேற்கு நோக்கி தொழுகை நிகழ்த்த ஆரம்பித்தார். ஔரங்கஜேப்பை எதிர்த்த பெரும் படைகள் இதைக் கண்டபோது மயங்கி நின்றன. இத்துணை ஆன்மீக பலம்பொருந்தியவருடன் போரிடுவது நாமே நம் அழிவை வரவேற்பதாகும்‘ என்ற கருதி எதிரிகள் போரைக் கைவிட்டுவிட்டு களத்திலிருந்து சென்றனர். வரலாற்றாசிரியர்கள் பலரும் இதனை உறுதிப்படுத்தி இருக்கின்றனர். * (* To fight with such a man is to court one’s own

ruin’ Muhammad Saqi Mustaid Khan, Masir-i-Alamgiri, P. 531.)

இத்தகைய மாமனிதரின் தினசரி வாழ்க்கை நடைமுறைகள் பற்றி வரலாற்றில் காணப்படுகிற செய்திகள் இதோ:

வாழ்வில் ஒரு நாள்

ஆலம்கீர் ஔரங்கஜேப் காலை 5 மணிக்கு எழுந்து பஜ்ர் தொழுகையை முடித்து விட்டு, இஸ்லாம் மார்க்க சம்பந்தமான நூல்களைப் படித்துக் கொண்டிருப்பார்.

காலை 7-30 மணிக்கு தனது தனி அவையில் நீதி வழங்குதல், (Justice in Private Chamber)

காலை 8-30 மக்களுக்கு தரிசனம் கொடுத்தல், யானைச்சண்டையைப் பார்வையிடுதல்.

காலை 9-15 பொது தர்பார். (Public Audience)

11.00 தனிப்பட்ட நபர்களைக் காணுதல்.

11-50 அந்தப்புரத்தில் மதிய உணவு, சிறிது ஓய்வு.

மாலை 2-00 லுஹர் தொழுகையை நிறைவேற்றுதல்.

2-30 தனிச் சேம்பரில் படித்தல், அரசு சம்பந்தமான காரியங்களைக் கவனித்தல், பின் அஸர் தொழுகையினை நிறைவேற்றுதல்.

5-30 தனிப்பேட்டி மண்டபத்தில் மாலை நேர மரியாதை. பின் மக்ரிப் தொழுகையினை நிறைவேற்றுதல்.

6-40 தீவானி இ காஸ் அவையில் பணிகள் (Service in the Diwan-i - Khas).

7-40 சபை கலைக்கப்படுதல்; இஷா தொழுகை

8-00 அந்தப்புரத்தில் இஸ்லாம் மார்க்கத் தியானம், படிப்பு, பின் படுக்கை அறை செல்லுதல், என்று ஔரங்கஜேப்பின் தினசரி வாழ்க்கையைப் பற்றி சரித்திரச் சான்றுகள் சொல்லிக் கொண்டிருக்கின்றன. இதோ இது குறித்த விளக்கங்கள்.

காலையில் எழுந்து பஜ்ர் தொழுகையை முடித்து விட்டு 7-30 மணிக்கு உணவு சாப்பிடும்வேளை வரை குர்ஆன், நபிகள் நாயகத்தின் ஹதீஸ்கள், இஸ்லாமிய மார்க்கச்சட்டங்களைப் படித்துக் கொண்டேயிருப்பார்.

நீதி வழங்குதல்

ஒரு சில நம்பிக்கைக்குரிய அதிகாரிகளும், அவர்களுடைய

தனிப்பட்ட பணியாளர்களும் அனுமதிக்கப் படக்கூடிய அவரின் தனி மண்டபத்தில் அவருடன் செல்வர். அங்கு சிம்மாசனத்தில் அமர்ந்து மன்னரின் முதல் கடமையான நீதி வழங்குதலைச் செய்வார்.

தலைநகரங்களிலிருந்தும், தொலைவிலுள்ள மாநிலங்களிலிருந்தும், கோரிக்கைகளுடன் வந்த மக்களை, சட்ட நீதிமன்றங்களின் தலைவர்கள் மன்னனிடம் அழைத்து வருவார்கள். அவர்களது கோரிக்கைகளை கவனத்துடன் கேட்டு, தாமே தீர ஆராய்ந்து உண்மைகளை கண்டறிவார். அப்படிக் கண்டறிந்த உண்மைகளின் அடிப்படையில் எல்லா வழக்குகளையும் திருகுர்ஆனின் அடிப்படையில் தீர்மானிப்பார்..

பொது வழக்குகளை பேரரசின் சட்ட திட்டங்களின் படியும் விசாரித்து, தனது சொந்த அபிப்பிராயங்களின்படி தீர்ப்பளிப்பார்.

பாதிக்கப்பட்டோருக்கு உதவிகள்

மிகுந்த தேவைக்குள்ளானவர்களுக்கும், துன்பங்களுக் குள்ளானவர்களுக்கும், கோரிக்கையாளர்களுக்கும் பொது நிதியிலிருந்து பண உதவி செய்வார்.

யமுனை நதியின் அகன்ற மணல் கரையை எதிர் நோக்கியிருக்கும் தன்னுடைய ஓய்வு மாடத்திலிருந்து மக்களுக்குத் தரிசனம் கொடுப்பார்.

சக்கரவர்த்தியின் தரிசனத்தைக் காண்பதற்காக பல தரப்பட்ட பெரிய கூட்டம் கோட்டையின் அடித்தளத்திலுள்ள இந்த மைதானத்தில் கூடி நிற்கும், இங்கேயிருந்து அடிக்கடி ராணுவப் பயிற்சியையும், யானைச் சண்டையையும் பார்ப்பார்.

எல்லா வெள்ளிக் கிழமைகளிலும் டெல்லியிலுள்ள ஜும்ஆ மஸ்ஜிதிற்கு சக்கரவர்த்தியுடன் செல்லும் பிரபுக்களின் பரிவாரமும் இங்கே அணிவகுப்பு நடத்துவதையும் காண்பார்.

காலை 9-15 முதல் 11-15 வரை தனது தந்தையார் ஷாஜஹான் நடத்தியபடியே தீவானி ஆமிலுள்ள தன்னுடைய சிம்மாசனத்தில் அமர்ந்து பொதுமக்களின் காரியங்களையே கவனித்து வருவார்.

அதன்பின் முக்கிய அந்தரங்க ஆட்சிகளைச் சந்திப்பதும், பரிசு வழங்குவதும் நடைபெறும்.

தானே எழுதும் பதில் கடிதங்கள்

பெரியவளீர், மாநிலங்களின் வைசிராய்கள், கவர்னர்கள்

ஆகியோரிடமிருந்து வரும் செய்திகளை வாசித்துக் காண்பிக்கவோ அல்லது சுருக்கமாகவோ விளக்கப்படும். அவைகளின் பேரில் சக்கரவர்த்தியின் உத்தரவுகளைப் பெற்று அதற்குரிய பதில்கள் 'முன்ஷி' (Munshis) களுக்கு வஸீர் (Wazjr) வாசித்துச் சொல்ல அவர்கள் அந்தப் பதில்களைத் தயாரித்து, அப்படித் தயாரிக்கப்பட்ட பதில்கள் சக்கரவர்த்தியால் சரி பார்க்கப்பட்டு, திருத்தங்கள் செய்யப்பட்டு, திருத்தங்கள் செய்யப்பட்ட பதில்கள் பின்னதாக சக்கரவர்த்தியின் கையெழுத்து இடப்பட்டு, அவரது முத்திரையும் குத்தப்படும். சில வேளைகளில் மிக உயர்ந்த பொறுப்பில் இருப்பவர்களுக்கு, பெரிய மனிதர்களுக்கு அனுப்பப்படும் கடிதங்களின் அவசரத்தை குறிப்பதற்காகவும், அவர்களுக்கு அந்தஸ்து அளிப்பதற்காகவும் சக்கரவர்த்தியே அந்தக் கடிதத்தின் முதல் பகுதியை எழுதி அனுப்புவார். அதற்குப்பின் உணவு; சிறிய ஓய்வு.

இறைவணக்கம்

உலமாப் பெருமக்கள், செய்யதுகள், ஷேக்குகள், பக்கீர்கள், சக்கரவர்த்தியின் நெருங்கிய பணியாளர்கள், கவாஸுக்கள், சலுகை அளிக்கப்பட்டவர்கள் ஆகியோருடன் ஜமாஅத்தாக நின்று லுஹர் (மதியவேளை) தொழுகை நடைபெறும்.

(The congregation privileged to join the Emperor in his devotions, consisted of Ulema (theologians) Syeds, Shaikhs, Faqirs and a few of his majesty's close attendants and and Khawases.)

தொழுகை முடிந்ததும் அந்தப்புரத்தில் இருக்கும் தனி அவையில் உள்ள குஷால்கானா (Ghusal - khanah) வில் இருந்து குர்ஆனை ஓதுவதிலும், அதிலிருந்து நகல் எடுப்பதிலும், அதன் பேரில் குறிப்புக்கள் எழுதுவதிலும், கானன் லாவிற்கு (Canon Law) அராபிய பழக்கவழக்கங்களின் படியான முறைகளை ஆராய்வதிலும் நேரத்தை செலவு செய்வார். எல்லாக் காலங்களிலுமுள்ள தூயவர்கள், புனிதர்கள் மற்றும் பக்திமான்களின் நூல்கள் அவர்களது துண்டறிக்கைகள் போன்றவற்றை அப்போது வாசித்துக் கொண்டிருப்பார்.

அப்போது, ஆட்சிபற்றி அவசரக் காரியங்களைக் கவனிக்கவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகி விடுவதும், சக்கரவர்த்திக்கு வேண்டிய அரசுப் பிரமுகர்களின் தலையீட்டினைப் பெறக்கூடிய செல்வாக்கு மிகுந்தவர்களின் (வி.ஐ.பி.) களின் கோரிக்கைகள், பரிந்துரைச்சீட்டுகளும் இடையிலே குறுக்கிடுவதும் நடைபெறும்.

நலிவுற்றோர் நலம் பெற

அரசாங்கக் காரியங்களை முடித்து விட்டு அந்தப்புரத்திற்கு செல்கிறபோது அங்கே காத்து நிற்கின்ற ஏழைப் பெண்கள், விதவைகள் மற்றும் அநாதைகளின் கோரிக்கைகளைக் கேட்டு அவர்களுக்கு பணம், நிலப்பட்டாக்கள், தங்க ஆபரணங்கள் ஆகியவற்றை கொடுத்து அனுப்பிக் கொண்டேயிருப்பார் மாமன்னர் ஔரங்கஜேப்.

(on some days work being over, His Majesty visited the harem again for an hour, heard the Petitions of poor women, widows, and orphans, and satisfied them with money, Lands or ornaments.)

அஸர் தொழுகைக்குரிய நேரம் வந்துவிடும். அவரது மண்டபத்தை அடுத்துள்ள பள்ளிவாசலில் ஜமாஅத்தார் நின்று தனது தொழுகையை நிறைவேற்றுவார்.

அதற்குப்பிறகு, சூரிய அஸ்தமனம் வரை நிர்வாகக் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருப்பார். அரச மரியாதைகளை அப்போது ஏற்றக்கொள்வார்.

இரவு நேரத் தொழுகை

மக்ரிப் தொழுகைக்கான பாங்கொலி கேட்டதும் அனைத்துப் பணிகளும் நிறுத்தப்படும். உலகப் பிரகாரமான காரியங்களிலிருந்து தன்னையும், தன் மனதையும் தவிர்த்துக் கொண்டு மிகுந்த பயபக்தியுடன் பாங்கொலியை ஔரங்கஜேப் கேட்டுக் கொண்டிருப்பார். ஒவ்வொரு குரல் ஒலிக்கும் போதும் அதற்குரிய பதிலைச் சொல்லிக் கொண்டே இருப்பார்.

பாங்கொலி நிறைவுற்றதும், சிம்மாசனத்திலிருந்து எழுந்து பள்ளிவாசலுக்குச் சென்று நிரம்பிய கூட்டத்தினருடன் சேர்ந்து தொழுகையை முடிப்பார்.

பள்ளியிலிருந்து நேராக திவானி-இ-காஸிற்குச் சென்று (Diwan-i-khas) சிம்மாசனத்தில் அமர்ந்து வருவாய்த்துறை சம்பந்தப்பட்ட பொதுவானதும், குறிப்பிடத் தகுந்ததுமான காரியங்களை எடுத்து வைத்து அதற்கான அதிகாரியான வஸீர் (Wazir) உடன் ஆலோசித்து முடிவுகளை மேற்கொள்வார். மற்றவிதமான அரசு அலுவல்களும் இந்த நேரத்தில் கவனிக்கப்படும்.

இசையோ, நடனமோ எதுவும் அங்கே கிடையாது. தனது ஆட்சியின் 11-வது ஆண்டான கி.பி. 1668-லிருந்து இம்மாதிரியான கேளிக்கைகளை ஔரங்கஜேப் நிறுத்தி

விட்டார்.

இஷா தொழுகைக்கான பாங்கின் ஒலி கேட்டதும் அரசவை கலைக்கப்படும். சக்கரவர்த்தி ஔரங்கஜேப் தனது நெருங்கிய ஆட்களுடன் பள்ளிவாசலுக்குச் சென்று இஷா தொழுகையை நடத்திவிட்டு, அந்தப்புரத்திற்கு திரும்புவார்.

அங்கு படுக்கை அறைக்குச் செல்வதற்குமுன் பல மணிநேரம் மத விஷயங்களிலும், தொழுகையிலும், திக்ரு செய்வதிலும் கழித்துவிட்டு, மிகவும் களைப்படைந்த பின்பு தான் தூங்கச் செல்வார்.

(Several hours were spent here in prayer and religious meditation, before his tired frame sank into its necessary repose.)

வெள்ளி விடுமுறை

இம்மாதிரியான தினசரி வாழ்க்கை வாரத்தின் மூன்று நாட்களில் மட்டுமே வேறுபடும். வெள்ளிக்கிழமையன்று கோர்ட் கிடையாது. (On Friday, the lslamic Sabbath, no Court was held. புதன்கிழமை தர்பார் கிடையாது. நீதி செலுத்துவதற்கு தூய்மையான நாள் புதன்கிழமையென்பதால் அன்று பொது தர்பார் கிடையாது. அந்த நேரமும் நீதி அவையில் வழக்கு விசாரணை நடைபெறுகிறபோது குறிப்பிட்ட அதிகாரிகள் மட்டும்தான் கலந்துகொள்ள முடியும். சம்பந்தமில்லாதவர்கள் அந்த அவையில் கலந்து கொள்ள முடியாது.

அந்த நீதி அவையில் சக்கரவர்த்தி ஔரங்கஜேப் தானே விசாரித்து நீதி வழங்குவார். (The Emperor went on Personally judging cases till noon.

வியாழக்கிழமை மதியத்திற்கு மேல் அரசுப்பணிகளுக்கு விடுப்பு (லீவ்) கொடுத்து விட்டு, உலகப் பிரகாரமான காரியங்களைத் தவிர்த்து விட்டு, இஸ்லாம் மார்க்க சம்பந்தமான நூல்களைப் படிப்பதிலேயே செலவழிப்பார். கடுமையான உழைப்பு நிறைந்த வாழ்க்கையைத்தான் ஔரங்கஜேப் நடத்தியுள்ளார்.

மூன்று மணி நேரமே ஓய்வு

அவரது அரச சபை மிகுந்த கடுமையும், கண்டிப்பும், பயபக்தியும் உண்டாக்கும் விதமாகவே அமைந்திருந்தது. கேளிக்கைகள் இல்லாது சதா வேலை, வேலையென்றே உழைத்துக் கொண்டிருந்தார்.

“அரசாட்சி செய்ய ஒருவன் கடுமையாக உழைக்க வேண்டும்,

கடுமையான உழைப்பில்லாமல் அரசாட்சியை விரும்புவது இறைவனுக்கு நன்றி இல்லாமையும், இறைவனை அசட்டை செய்வதோடு மட்டுமல்லாமல், மக்களுக்கு அநியாயமும், கொடுமையும் செய்வதாகும்“ என்று வாழ்நாளெல்லாம் கூறிக் கொண்டிருந்தவர் ஔரங்கஜேப்.

ஆலம்கீர் நாமா என்ற ஔரங்கஜேப்பின் சரிதையைச் சொல்கிற நூலில் (Alamgir namah) அந்த வரலாற்றாசிரியர் சொல்கிறார். ‘24 மணி நேரத்தில் மூன்று மணி நேரம் மட்டுமே தூங்கி ஓய்வெடுத்தார் ஔரங்கஜேப்.’ (Aurangzib slept only three hours out of twenty four.)

ஆணித்தரமான ஆதாரங்கள்

வாழ்வில் ஓயாது உழைத்திட ஔரங்கஜேப்பின் தினசரி வாழ்க்கை அலுவல் பற்றிய இந்தத் தகவல்களை ஜாதுநாத் சர்க்கார் தந்திருக்கிறார். ஆலம்கீர் நாமாவில் 1096-1106 வது பக்கங்களிலும் இந்த விவரங்கள் காணப்படுகிறது.

துறவி அரசர்

‘மிகவும் எளிய வாழ்வை நடத்திய ஔரங்கஜேப், புலன்களை ஒறுத்த தவசி. கடும் நோன்பு நோற்கிற துறவி போன்றவர்’ என்று ஜவஹர்லால்நேரு குறிப்பிட்டுள்ளார்.

“...but in his Personal life Aurangzeb was simple and almost an ascetic.”

ஆம்! வரலாற்றில் மாமன்னர் ஔரங்கஜேப், ஒரு துறவி அரசர் தான். (Terwesh King)

தரணியை ஆண்ட மன்னர் தரையில்

இந்தியாவின் பெரும்பகுதி நிலப்பரப்பை ஆண்ட முகலாயச் சக்கரவர்த்தி ஔரங்கஜேப்பின் படுக்கை எங்கு தெரியுமா? இதோ, ‘லேன்பூல்’ என்ற சரித்திர ஆசிரியர் சொல்கிறார்.

“...for besides this he slept on the ground, with only a tiger ‘ s skin over him.”

ஔரங்கஜேப் தரையில் படுத்திருப்பார். புலித்தோலை தனது மேலே போர்த்தியிருப்பார்.

மாமிச உணவு உண்ணாத மாமன்னர்

“ஔரங்கஜேப் மாமிச உணவு உண்ணாதவர்.”

“No animal food passed his lips.”

கி.பி. 1640 முதல் 1667 வரை இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்த டவேர்னியர் என்பவர் எழுதிய நூலில் இதனைத் தெரிவிக்கிறார்.

சுயதொழில் புரிந்த சக்கரவர்த்தி

‘முஸ்லிம்கள் யாராயினும் வாழ்வில் ஏதாவது ஒரு தொழில் செய்துதான் வாழ வேண்டும்‘ என்ற அண்ணல் நபி (ஸல்) அவர்களின் போதனைப்படி ஔரங்கஜேப் தானே தொப்பிகளை தயாரித்தார். திருகுர்ஆன் முழுவதையும் மனனஞ் செய்திருந்த ஔரங்கஜேப், திருகுர்ஆனை தனது கரங்களாலே பிரதிகள் எடுத்தார். அவற்றில் சிலவற்றை புனித மக்கா, புனித மதினா நகரங்களுக்கும் அனுப்பி வைத்தார்.* (* stanly Lane-Poole, Madiaeval India Under Mohammedan Rule (A.D. 712-1764), London, 1926, P. 330.)

இவைகளின் மூலம் கிடைத்த வருவாயைத் தனது சொந்த தேவைகளுக்குச் செலவு செய்தவர் ஔரங்கஜேப்.

உயர்ந்த ஆடைகளை அணியாத உத்தமர்

“இஸ்லாம் மார்க்கத்தால் தடை செய்யப்பட்ட ஆடைகளை ஔரங்கஜேப் அணிவதில்லை. தங்கம், வெள்ளிப் பாத்திரங்களைத் தனது சொந்த தேவைகளுக்காக உபயோகப் படுத்தியதும் இல்லை” என்று பெர்னியர் கால்பர்ட் என்பவருக்கு (Monseigneur Colbert) எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இதனை நஜீர் பக்த்வார்கானும் தனது ‘மீராத்தே ஆலம்’ நூலிலும் அவ்வாறே தெரிவித்திருக்கிறார்.

ஆடம்பரத்தை வெறுத்த ஆலம்கீர்

நாடக நூலொன்றில், ரோஷனாரா ஔரங்கஜேப்பைப் பற்றி குறிப்பிடும் ஓர் இடத்தில் “ஔரங்கஜேப்பிற்கு அழகை உபாசிக்கத் தெரியவில்லை. மடையன், தினம் தினம் திருக்குரான் ஓதுகிறான், ஐந்து தடவை நமாஸ் செய்கிறான். மது அருந்தவில்லை. மங்கையைப் பார்ப்பதில்லை. ஆடம்பரத்தை வெறுக்கிறான். அணிகலன்கள் பூணுவதை தவிர்த்துவிட்டான். முட்டாள் என்று அவரைத் தூற்றிடும் நோக்கத்துடன் சொல்லப்பட்டிருக்கிறது.”* (* இந்திரா பார்த்தசாரதி, ஔரங்கசீப், சென்னை, 1978, பக். 163.)

என்றாலும் அது ஔரங்கஜேப்பின் எளிய வாழ்வைப் பற்றியல்லவா நமக்கு அறிவிக்கவும் செய்கிறது.

‘ஒரு மனிதன் எளிமையான உடைகளையே அணிய

வேண்டும். அதுவும் தேவைக்கேற்ற அளவில் தான் அணிய வேண்டும். அழகான பொருட்களை, ஆடைகளை அணிவது பெண்களுக்குரிய சிறப்பாகும். அது அவர்களுக்குப் பொருத்தமானதுங்கூட' என்பது ஔரங்கஜேப்பின் கருத்தாகவும் இருந்தது.

ஜாதுநாத் சர்க்காரின் கருத்து

ஔரங்கஜேப்பின் தனிமனித வாழ்வில், அவர் ஆடை, உணவு மற்றும் ஓய்வு நேரத்தைச் செலவழிக்கும் விதம் ஆகியவை முறையாகவும், எளிமையாகவும் இருந்தது. தீயவற்றிலிருந்து முற்றிலுமாக அப்பாற்பட்டிருந்தார். செல்வந்தர்களுக்கே உரிய சாதாரண சுகங்களிலிருந்தும் கூட விலகியிருந்தார். அவர் விரும்பிச் சாப்பிட்ட பண்டம் பற்றிச் சொன்னால் நீங்கள் சிரித்து விடுவீர்கள். கொரிந்தா எனும் புளிப்புப்பழமும், கர்தாலி எனும் சப்பிச்சாப்பிடும் ஒரு வகைப் பிசினும்தான் என்று ஜாதுநாத் சர்க்கார் தெரிவித்து இருக்கிறார். இதோ அவரது வரிகள்....

"His Private life, dress, food and recreations were all extremely simple, but well - ordered. He was absolutely free from vice and even from the more innocent pleasures of the idle rich. The only delicacies he relished, the reader will smile to hear, were the acid fruit corinda (Caridssa Carandas) and a sort of chewing gum called Khardali."

கருணை உள்ளம்

பேரரசர் ஔரங்கஜேப்பைப் பற்றி பழி தூற்றுவோர், 'இரக்கமில்லாக் கொடியவர்' என்பதைப் போல அவரைச் சித்தரித்து வருகிறார்கள். ஆனால் அவரது கருணை உள்ளத்திற்கு எத்தனையோ சான்றுகளைக் காட்டிட முடியும். இதோ, அவரது கருணை உள்ளத்திற்கு சரித்திரம் தரும் ஒரு சில சான்றுகள்.....

ஆசைகளைத் துறந்தவர்

மிகுந்த நோய்வாய்ப்பட்டிருந்த நண்பர் கான் பிரோஸ் ஜங் (Khan Firoz Jang) என்பவருக்கு ஔரங்கஜேப் எழுதிய கடிதத்தில்,

"நோய்வாய்ப்பட்டிருக்கும் தங்களைச் சந்திக்க எனக்குத் துணிவில்லை. எனவே எனது கண்களை வைத்துப் பார்ப்பதற்கு, சதாத்கானை அங்கு அனுப்பியிருக்கிறேன். தாங்கள் பூரண குணமடைந்து நல்ல நிலைக்கு வரும் வரையில் எந்தவித பழங்களையும் நான் சாப்பிட மாட்டேன்" என்று குறிப்பிடுகிறார்.

"He would not himself eat any grapes till the patient was well enough

to partake with him”**

நண்பருக்காக இரங்கிய ஔரங்கஜேப்பின் இரக்க உள்ளத்திற்கு, மற்றொரு சான்று இதோ.

கிழவியும் ஆலம்கீரும்

ஹஸன் அப்தால் என்ற பிரதேசத்தில் ஔரங்கஜேப் பிரயாணம் செய்து கொண்டிருந்த வேளையில், அங்கு ஒரு சிற்றூரில் தங்கியிருந்தார். அவர் தங்கியிருந்த இடத்தின் சுவர் ஓரத்தில் ஏழைக்கிழவியின் வீடும் இருந்தது. நீரால் ஓடும் இயந்திரத்தால் கோதுமையை மாவாக அரைத்துக் கொடுத்து அவள் ஜீவனம் செய்து வந்தாள்.

ஔரங்கஜேப் தங்கியிருந்த பகுதியிலிருந்து கிழவியின் இயந்திரத்தை ஓட்டுவதற்காக நீரோட்டம் சென்று கொண்டிருந்தது. ஔரங்கஜேப்பின் பணியாளர்கள் அந்தத் தண்ணீரை அங்கு செல்லாமல் தடுத்து விட்டார்கள். இதனை மிகுந்த துக்கத்துடன் வந்து ஔரங்கஜேப்பிடம் கிழவி முறையிட்டாள். உடனே தண்ணீரைத் திறந்து விடும்படி கட்டளையிட்டார் ஔரங்கஜேப். இத்தோடு இந்த விஷயம் முடிந்து விடவில்லை.

மன்னிப்பு வேண்டிய மன்னர்

அன்று இரவு அந்த கிழவிக்கு உணவும், அதனுடன் ஒரு பண முடிப்பையும் ஔரங்கஜேப் அனுப்பி வைத்தார். அத்தோடு நின்றுவிடாமல்,

“நாங்கள் இங்கு வந்து தங்கியதால், உங்களுக்குக் கஷ்டம்நேர்ந்தது. ஆகையால் எங்களை மன்னித்து விடுங்கள்” என்றும் சொல்லியனுப்பினார்.

துயர் தீர்க்கும் தீரர்

அதோடு முடிந்ததா? இல்லை. இரவு கழிந்தது. மறுநாள் காலையில் அந்தக் கிழவியை மறுபடியும் அழைத்தார்; அவளுடைய குடும்ப விஷயங்களைப் பற்றி விசாரித்தார். அந்தக் கிழவியின் இரண்டு மகள்கள் திருமணமாகாமல் இருக்கிறார்கள் என்பதை ஔரங்கஜேப் அறிந்தபோது, அந்தப் பெண்களின் திருமணத்திற்காகப் பல உதவிகள் அளித்தார். பேரரசருடன் தங்கியிருந்த குடும்பத்தாரும் சில நகைகளையும் அந்தக் கிழவிக்கு வழங்கினார்கள்.* (* ஸையித் இப்ராஹீம், இந்தியக் கதைகள், திருச்சி, 1961, பக். 84, 85.)

ஔரங்கஜேப்பின் காருண்ய உள்ளத்திற்கு எத்தனையோ

சான்றுகளை இன்னும் நாம் சொல்லிக் கொண்டே செல்லலாம்.

கிருஷ்ணலால் ஜவேரிஹாஸ்

கி.பி. 1906 அக்டோபரில் வெளிவந்த கிழக்கும் மேற்கும் (East and West) என்ற இதழில் ஆராய்ச்சியாளர் கிருஷ்ணலால் ஜவேரிஹாஸ் (Krishnalal M.Jhaverihas) ஔரங்கஜேப்பின் கடிதத் தொடர்புகள் (Correspondence of Aurangzeb) பற்றிய கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் ஔரங்கஜேப் பற்றி இதுவரை சொல்லப்படாத - அறியப்படாத அவரது உள்ள உணர்வு, பாசம், இரக்க குணம் ஆகியவைகளைப் பற்றிய பல செய்திகளையும் சொல்லியிருக்கிறார்.

கடிதங்கள் தரும் செய்திகள்

“தளராத ஊக்கங் கொண்டிருந்த ஔரங்கஜேப், தன்னுடைய விசாலமான சாம்ராஜ்யத்தில் நடைபெறும் காரியங்களைப் பற்றி ஒவ்வொரு சிறிய விவரங்களையும் அறிந்து கொள்ளும் ஆர்வம் உடையவராக இருந்தார். தன்னிடம் வருபவர்களிடம் அநியாயத்திலிருந்தும், அநீதியிலிருந்தும் விலகி இருக்குமாறும் வற்புறுத்தினார்.

“ஔரங்கஜேப்பின் கடிதங்கள், அவரது பணியாளர்களின் நியமன மாற்றுதல் உத்தரவுகள், தற்கால அரசிதழ்களின் நகல்களைப் போல காட்சி அளிக்கின்றன” என்பார் கிருஷ்ணலால் ஜவேரிஹாஸ். (அவ்வாறே “எந்த ஒரு மாநில, மாவட்ட உயர் அதிகாரிகளின் நியமனமும், ஏன் ஓர் எழுத்தரின் நியமனமும் ஔரங்கஜேப்பின் கவனத்திற்கு வராமல் சென்றதில்லை. தள்ளாத வயதிலும், தளராத சுறுசுறுப்புடன் நிர்வாகம் நடத்திய முறையைப் பார்க்கும்போது எந்தக் காலத்திலும் காண முடியாத சிறப்பாக இருந்தது” என்று எல்பின்டன்ஸ்டனும், ஔரங்கஜேப்பின் ஆட்சித் திறமையை மதிப்பிடுகிறார்.)

திறமையான பொறியாளர்

“டெல்லியிலுள்ள அரசுக் கட்டிடங்கள், மற்றும் சில கோட்டைகளைப் பலப்படுத்துதல் இவற்றைப் பற்றி ஔரங்கஜேப் தனது கடிதங்களின் மூலம் தனது அதிகாரிகளுக்குக் கொடுத்திருக்கும் வழிகாட்டுதல்கள், ஔரங்கஜேப் சிறந்த பொறியாளராகவும் திகழ்ந்தார்” என்று குறிப்பிடும் ஜவேரிஹாஸ் தொடர்ந்து சொல்கிறார்.

மதவெறி கண்களை மறைத்திடாதவர்

“ஔரங்கஜேப் மிகக்கண்டிப்பான இஸ்லாமியராக இருந்தபோதிலும் அவருடைய ஊக்கம் தன்னுடைய சமயத்தைச் சேர்ந்தவர்களின் குறைகளைக் காணாதிருக்கும் அளவு அவரது கண்களை மறைத்திடவில்லை. (அவர்களது குறைகளை உணர்ந்தார். அதுகுறித்து தட்டிக் கேட்டார்.)

“Aurangzeb was strictly religious too; but his zeal did not close his eyes against his seeing the defects of his co-religionists.”

வரலாற்று ஆய்வாளர் கிருஷ்ணலால் ஜாவரிகாஸின் வைர வரிகள் இது. ஔரங்கஜேப்பின் கடிதங்கள் அனைத்தையும் ஆய்வு செய்தபின் அவர் தெள்ளத்தெளிவாகச் சொல்லியிருக்கும் விஷயம் இது. அத்தோடு மதவாத சக்திகளின் கண்களில் தெரியவேண்டிய விஷயமும் ஆகும்.

மன்னர்குல மகான்

“ஔரங்கஜேப் தன்னுடைய குறிப்பிடத்தக்க நீண்ட வாழ்க்கையில், ஒருநாள்கூட அதிகார போதையில், தனது நாவடக்கத்தையோ, மனக்கட்டுப்பாட்டையோ, நிதானத்தையோ மீறி நடந்தது கிடையாது. ஆதலால், அவர் காலத்தில் வாழ்ந்தவர்கள் அவரை மன்னர்குல மகான் என்று அழைத்ததில் வியப்படைவதற்கு ஒன்றுமே இல்லை.

..did not intoxicate him into losing the curb over his tongue, temper and heart for a single day during an exceptionally long life... No wonder his contemporaries called him “the darvish in the purple.”

அற்புதம் விளைவிக்கும் புனிதர்

“இஸ்லாமிய மக்களுக்கு ஔரங்கஜேப் ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தார். எனவே அற்புதம் விளைவிக்கும் ஒரு வாழும் புனிதராகவே, ஔரங்கஜேப்பை நம்பினார்கள்.”

“He thus became an ideal character to the muslim portion of his subjects. They believed him to be a living Saint (Alamgir, zindapir).”

அபூர்வ மேதை

சிறந்த சரித்திர விமர்சகரான பெர்னியர், ஔரங்கஜேப்பைப் பற்றிக் குறிப்பிடும்போது, ‘அவர் ஒரு ஒப்பற்ற பல திறன்கொண்ட அபூர்வ மேதை, சிறந்த ராஜதந்திரி மாமன்னர் என்பதனை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்” என்கிறார்.

இத்தகைய அருங்குணங்களைப் பெற்றிருந்த ஆற்றல் நிறைந்திருந்த ஆலம்கீர் ஔரங்கஜேப் ஆட்சிக்கு எதிர்ப்புகள்

ஏன் தோன்றியது?

‘சதி’யை நிறுத்திய சாகசம்

“ஆதரவற்ற துர்பாக்கியவதியான ஒரு பெண்ணை ‘சதி’ (உடன் கட்டை ஏற்றுதல்) உயிருடன் எரிக்க முயன்றனர். அப்போது ஔரங்கஜேப் அதனைத் தடுத்துக் காப்பாற்றினார். அதோடு எந்த ஒரு இந்துப் பெண்ணையும் உயிருடன் எரிக்க அதிகாரிகள் அனுமதி அளிக்கக் கூடாதென்று உத்தரவு பிறப்பித்தார்.

இதனையறிந்த உயர் ஹிந்துக்கள் தங்கள் மத விஷயத்தில் தலையிடுவதாக புகார்கள் கூறினர். உயிருள்ள ஒரு பெண்ணை எரிப்பது அவர்களுடைய மத நம்பிக்கையென்றால், அத்தகைய மோசமானச் செயலைச் செய்திட அனுமதி அளிக்காமலிருப்பதே தன்னுடைய நம்பிக்கை என்று ஔரங்கஜேப் உறுதியாக நின்றார். உயர்பிரிவைச் சேர்ந்தவர்கள் பலரது எதிர்ப்பை மீறி தாம் இட்ட கட்டளையை நிறைவேற்றிடவும் பணித்தார். பலவந்தமாக உடன் கட்டையேறும் பெண்ணின் நகை, ஆபரணங்களைப் பெற்று அனுபவித்து வந்தவர்கள் பாதிப்பிற்குள்ளாயினர்.

விளைவு, மதத் தலைவர்கள் ரகசிய இடத்தில் கூடினர். ஔரங்கஜேப் அரசைக் கவிழ்க்கச் சதி செய்தனர். அவரைக் குறித்து ஹிந்து மதவிரோதியென பொய்களைப் புனைந்துரைத்தனர்.*

(* Premnath Bazaz, The Role of Bhagavadgita in Indian History, New Delhi 1975, P. 339. மேற்கோள், ஜோசப் இடமருகு, பிராமண மதம், (மலையாளம்) தமிழில் த. அமலா, சென்னை, 1995, பக். 227.)

வீண் விரையம் வெறுத்த வேந்தர்

பாரசீகர்கள் பின்பற்றி வந்த நௌரோஜ் (Navroz) என்னும் புத்தாண்டு விழா ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 21ல் கொண்டாடப்படும். அப்போது மன்னரின் எடைக்கு எடை சமமான பொன், வெள்ளி பொருள்களைப் பரிசாகக் கொடுத்து புரோகிதர்கள் பெற்று வந்தனர். அக்பர் காலத்திலிருந்து இது நடைமுறைக்கு வந்தது. இவ்வாறு பேரரசின் பொருள்களை வாரி இறைத்திட, ஆடம்பரமாகச் செலவு செய்திட விரும்பாத ஔரங்கஜேப் இதனை தனது ஆட்சியின்போது வழங்காமல் நிறுத்தினார். விளைவு என்ன? அரசவையிலிருந்து ஆண்டு தோறும் பொன்னையும், பொருளையும் கொள்ளை கொண்டு போய் அனுபவித்து வந்த கூட்டத்தினர் ஔரங்கஜேப் மீது வீண்

பழிகளைத் தூற்றத் துவங்கினர்.

போதைப் பொருட்களைத் தடை செய்த மாமேதை

பங்க் (Bang), கஞ்சா, அபினி ஆகிய லாகிரிப் பொருள்கள் ஔரங்கஜேப் ஆட்சியில் தடை செய்யப்பட்டன. அதனை எடுத்துச் செல்வதற்கும் தடையும் விதிக்கப்பட்டது.

சில பைராகிகளும், வாம மார்க்கிகளும், மதத் துறவிகளும், 'கஞ்சா புகைப்பதும், அபின் அருந்துவதும், தங்களது வழிபாட்டு முறைக்கான அனுமதிக்கப்பட்ட செயல்கள்', என்று கூறினர். 'ஔரங்கஜேப் அந்தப் போதைப் பொருட்களை ஒழித்துக் கட்டிய செயலானது, தங்கள் மதத்திற்கு விரோதமான வெறித்தனமான நடவடிக்கை' என்று கூக்குரலிட்டனர். விளைவு, ஔரங்கஜேப்பை ஹிந்து மத விரோதி போல சித்தரிக்கத் துவங்கினர்.

ஹிந்துப் பண்டிகைகளுக்குத் தடையா?

எந்த வரலாற்று ஆசிரியரும் ஔரங்கஜேப் அனைத்துப் பண்டிகைகளையும் தடைப்படுத்தினார் என்பதற்கான அரசாங்க ஆணை எதனையும் இதுவரை எடுத்துக் காட்டவில்லை.

ஆனால் ஔரங்கஜேப் தீபாவளி, ஹோலி போன்ற இந்துப் பண்டிகைகளை தடுத்து நிறுத்தியதாக குற்றம் சாட்டுகிறார்கள்.

தீபாவளியின் போது ஏற்றப்படும் தீப அலங்காரங்களுக்காக விதிக்கப்பட்ட வரியை ரத்து செய்தவர் ஔரங்கஜேப் என்பதனை முன்னரே பார்த்திருக்கிறோம். தீபாவளி சிறப்பு விளக்கு அலங்காரங்களுக்கென்று விதிக்கப்பட்டிருந்த வரிகளை நீக்கிய ஔரங்கஜேப், தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுவதைத் தடுத்திருப்பாரா?

வெறிக்களியாட்டத்தை வெறுத்தவர்

இஸ்லாமிய ஆண்டில் முதல் மாதம் முஹர்ரம். புது வருடப்பிறப்பாக மகிழ்வுடன் அதனைக் கொண்டாடுபவர் உண்டு. அண்ணல் (ஸல்) பேரராகிய இமாம் ஹுஸைன் (ரலி) ஜனநாயகத்தின் காப்பாளராக 'கர்பலா'வில் மடிந்த சோக நிகழ்ச்சியினை நினைத்து, துக்க ஊர்வலம் நடத்துபவர்களும் உண்டு.

ஹிஜ்ரி 1079இல் (கி.பி. 1669) புர்ஹான்பூரில் முஸ்லிம்களில் இருதரப்பினருக்குமிடையே பெருங்கலகம் ஏற்பட்டது. இரத்தம் சிந்தப்பட்டது. இனிமேல் 'தாபூத்' ஊர்வலம் நடத்தக்கூடாதென்று முஸ்லிம்களுக்கு ஔரங்கஜேப் ஆணை

பிறப்பித்தார்.

இதனைப் போலவே ஹோலிப் பண்டிகையின் போது வெறிக்களியாட்ட, வரம்பு கடந்த விபரீத விஷமங்களைத் தடுத்து நிறுத்திடவும் கட்டுப்படுத்திடவும் முயன்றார்.

தசரா விழாவின் போது தன்னுடைய ஹிந்துச் சீமான்களுக்கு, மரியாதைக்குரிய அங்கிகளையும், ஆடைகளையும் வழங்கி கௌரவித்தவர் ஔரங்கஜேப் (ஆலம்கீர் நாமா, பக் 914). அத்தகைய ஔரங்கஜேப்பை ஹிந்து விழாக்களுக்கு விரோதியென்று வீண்பழியைச் சுமத்தத் துவங்கினர்.

அரசியல் வேறு; மதம்வேறு

ஔரங்கஜேப்பிடம் அவரது முஸ்லிம் நண்பர்கள், 'அவரது அரசாங்கத்திலுள்ள இரண்டு முஸ்லிமல்லாதவரை அவர்கள் சார்ந்திருந்த மதத்தின் காரணமாக பதவியில் வைத்துக் கொள்ளக்கூடாதென்று' கூறியபோது, அதனை ஏற்க மறுத்தவர் ஔரங்கஜேப். 'அரசியலுக்கும், மதத்திற்கும் சம்பந்தமில்லை; அரசியல் விவகாரங்களில் மதம் என்பதே கிடையாது; அவரவர், அவரவரது மதத்தைப் பின்பற்றட்டும்' என்று சொன்னவர் ஔரங்கஜேப்.

சான்று காட்டிட முடியுமா?

"பிற மதத்தவர்களை முஸ்லிமாக மாறிடுமாறு பலவந்தமாக ஔரங்கஜேப் கட்டாயப்படுத்தினார் என்றோ, அல்லது அவ்வாறு அவர்கள் மதம் மாறாததால் தண்டிக்கப்பட்டனர், கொல்லப்பட்டனர் என்றோ ஔரங்கஜேப்பின் வரலாற்றிலிருந்து சான்று காட்டத்தான் முடியுமா?

நாணயங்கள் வெளியிடுவதில் நாணயம்

"வணக்கத்திற்குரியவன் இறைவனைத் தவிர வேறு யாரும் இல்லை. நபிகள் நாயகம்(ஸல்) இறைவனின் இறுதித் தூதராவர்கள்" என்னும் மூலக்கோட்பாடான கலிமாவை, நாணயங்களில் பொறிக்கும் வழக்கத்தை கைவிட்ட மாமன்னர் ஔரங்கஜேப்.

தமது அரசாங்கத்தால் வெளியிடப்படும் நாணயத்தில், தனது மதக்கோட்பாட்டை வலியப் புகுத்தாமல், அவ்வாறு புகுத்தப்பட்டிருந்ததைத் தடுத்து நிறுத்திட ஆணை பிறப்பித்த ஔரங்கஜேப் ஓர் மதவெறியரா?

14

உலகப் பேரரசர்களில் உயர்ந்தவர்

வாரிசுரிமைப் போரில் ஆதரித்த ஹிந்துக்கள்

5000 குதிரை வீரர்களைக் கொண்ட ராஜபுத்திர மன்ஸப்தார் ராணா ராஜ் சிங் சம்பத் புண்டேலா, 4000 குதிரை வீரர்களைக் கொண்ட மராட்டியர் ஜாது ராவ், தாமாஜி தக்காணி, 3000 குதிரை வீரர்களைக் கொண்ட மன்ஸப்தார் ராஜபுத்திர ராஜா இந்தர்மன் தண்டேரா, ராஜ ராஜ்ரூப் கோஹிஸ்தான்தானி, 2500 குதிரை வீரர்களைக் கொண்ட மன்ஸப்தார் மராட்டிய தாதாஜீ, மானாஜி பான்ஸ்லே, ருஸ்தம்ராவ், பாபாஜி பான்ஸ்லே என்ற ஹபாஜி, 2000 குதிரை வீரர்களைக் கொண்ட மராட்டிய மன்ஸப்தார் பயிஸ்ராவ், போத்தூஜி தக்காணி, 1500 குதிரை வீரர்களைக் கொண்ட மன்ஸப்தார் தர்மாக்ஜி பான்ஸ்லே, தாக்கூஜி, ராஜபுத்திர குலாரின் மான் சிங், நார்வாரின் ஜமீன்தார் அமர்சிங், மால்வாவின ஜமீன்தார் கரண்கச்சி, பக்வந்த்சிங் ஹாரா, 1000 குதிரை வீரர்களைக் கொண்ட மன்ஸப்தார் ராஜபுத்திர ஸெலின்சிங், ஸுப்ஹ் கரண் புண்டேலா ஆகிய ராஜபுத்திர, மராட்டிய மன்ஸப்தார்கள் ஔரங்கஜேப்பை வாரிசுரிமைப் போரில் ஆதரித்த ஹிந்துக்கள்.

ஹிந்துக்களின் ஆதரவோடும், முஸ்லிம்களின் ஆதரவோடும் இந்த நாட்டை வேற்றுமைபாராது, நீதி நெறியுடன் ஆட்சி செய்தவர் ஔரங்கஜேப்.

எனது தேசத்து ஏழைகளுக்கு

ஒரு சமயம் புனித மெக்கா நகரத்தின் ஷெரீப் பொருள் உதவி வேண்டி தனது தூதரை ஔரங்கஜேப்பிடம் அனுப்பியபோது, அவருக்கு பொருளுதவி செய்ய மறுத்ததோடு, “எனது தேசத்தில் (இந்தியாவில்) உள்ள ஏழை எளிய மக்களுக்கு அந்தப் பணத்தை வினியோகிக்கக்கூடாதா?” என்று கேட்டு, ‘இறைவன் எங்கும் நிறைந்திருக்கிறார்’ என்றும் அந்தத் தூதரிடம் பதில் தந்தவர் ஔரங்கஜேப்.

இவ்வாறு தனது தேசத்தில் நலனையே பெரிதாக மதித்துப் போற்றிய பண்பாளர் ஔரங்கஜேப்.

இறுதி உயில்

ஔரங்கஜேப் இறந்த பிறகு தன்னை என்ன செய்ய வேண்டும்? எவ்வாறு அடக்கம் செய்ய வேண்டும் என்று அவரே எழுதி வைத்திருந்தார்.

“தம்மால் செய்யப்பட்ட குல்லாக்களின் கிரையம் நான்கு ரூபாய் இரண்டனாவை வைத்துக்கொண்டு ‘கபன்’ வாங்க வேண்டுமென்றும், குர்ஆனை எழுதியதால் கிடைத்த ‘ஹதியா’ முன்நூற்றைந்து ரூபாய்களை ஸாலிகான ஏழைகளுக்குத் தானஞ் செய்ய வேண்டுமென்றும், தமது கபுறுக்கு மேல் யாதொரு விமானமும் கட்டக் கூடாதென்றும் ஔரங்கஜேப் எழுத்து மூலமாக ஆக்ஞையிட்டிருந்தார்”.

இதோ ஜாதுநாத் சர்க்கார் இதுகுறித்து கூறியிருக்கும் வரிகள்.....

“Four rupees and two annas, out of the price of the cabs sewn by me, are with Aia Bega, the Mahaldar. Take the amount and spend it on the shroud of this helpless creature. Three hundred and five Rupees, from the wages of copying the Quran, are in my purse for personal expenses. Distribute them to the fagirs on the day of my death.”

இறுதிநாள்

ஐந்து அல்லது ஆறு நாட்கள் மட்டுமே ஐங்காலத் தொழுகையை நீரினால் புறச் சுத்தம் செய்து கொள்ளாமல் தொழுத நிலையில், பதிமூன்று நாட்கள் நோய்வாய்ப்பட்டிருந்த ஔரங்கஜேப், தாம் நாடியவாறே, வெள்ளிக்கிழமையன்று, ஹிஜ்ரி 1118 துல்கஅதா மாதம் 28ஆம் நாள் கி.பி. 1707 பிப்ரவரி 21ல் தனது 90வது வயதில்அஹ்மத் நகரிலிருக்கும்போது, இப்புவி வாழ்வைத் துறந்தார்.

ஐம்பது ஆண்டுகள், இரண்டு மாதங்கள் இருபத்தியேழு

நாட்கள் இந்தியாவில் பெரும் பகுதியை அரசாட்சி புரிந்த மாமன்னர் ஔரங்கஜேப்பின் உடல், தௌலதாபாத்துக்கு அருகில் குல்தாபாத்தில் (ரௌஜா) ஔரங்கபாத்திற்குச் சமீபத்தில் ஜெய்க்புர்ஹானுத்தீன் கான் (வலி) ஷாஹ்ஜர்தி ஜர்பக்ஷ் (வலி) என்ற இறை நேசர்களின் அடக்க ஸ்தலங்களுக்கிடையில் அடக்கம் செய்யப்பட்டது.

இறுதித் தீர்ப்புநாள் ஓலம்

ஔரங்கஜேப் மறைந்த செய்தி டெல்லிக்கு எட்டியது. பெயர் குறிப்பிடாத ஒருவர் அன்று டில்லியில் நடந்ததை இவ்வாறு வருணித்துள்ளார்.

அந்தி மயங்கியதும், மாலைத் தொழுகைக்கு முன்னர் “உலகத்தின் இறுதித் தீர்ப்பு நாளன்று கேட்கக்கூடிய கூக்குரலின் மாதிரியில்” என்று கூறத்தக்க ஓலம் ஊரின் மேற்குப் பக்கம் எழுந்தது. பல்லாயிரவர் ஓரிடத்தில் கூடி ஒரே நேரத்தில் எழுப்பும் மிகப் பயங்கரமான ஓலக் குரல் கூட இந்த கூப்பாட்டைப் போலிருக்க முடியாது என்று விவரிக்கும் ஆற்றல் அனைத்தையும் மிஞ்சுவதாக அது இருந்தது. அந்தக் கூக்குரலைக் கேட்டு இப்போது நாற்பதாண்டுகளாய் விட்டன. ஆனால் அது இன்றும் என் செவிகளில் ஒலிக்கிறது. அதைக் கேட்டவர் எவராயினும் நிச்சயமாக நினைவில் வைத்திருப்பார். அப்பேய் ஓலம் சுமார் அரை மணிநேரம் கேட்டது. அதன்பிறகு அடங்கியது. இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு எதுவுமே கேட்கவில்லை. அதனையடுத்து இந்துஸ்தானில் ஏற்பட்ட குழப்பத்தினால் எல்லா மாகாணங்களிலும் தானிய விலை தாறுமாறாகியது.”

ஏழைகளுக்கு உதவிடும் நினைவு

இறக்கும் வேளையிலும் கடமைகளை மறவாது நிறைவேற்றியவர் ஔரங்கஜேப். ‘ஜோதிடருக்கு யானை ஒன்றையும் விலை மதிக்க முடியாத வைரக்கல்லையும் தானமாகக் கொடுக்க வேண்டும்’ என்று ஹாமீதுத்தீன்கான் வந்து கேட்டபோது அதனை மறுத்ததுடன், 4000 ரூபாய்களை ஏழை எளிய மக்களுக்குத் தானம் செய்து விடுங்கள், என்று அன்புக் கட்டளையிட்டவர் ஔரங்கஜேப்.

“இறந்தபிறகு தனது கல்லறை (கப்ர்) மேல் அலங்காரங்களைத் தவிர்த்துவிடுங்கள், நான் தொப்பி தைத்துச் சேர்த்த பணம் நான்கு ரூபாய் இரண்டனாவை மஹல்தார் அஜ்யா பேக்கிடம் கொடுத்து வைத்திருக்கிறேன். அந்தத் தொகையைக்

கொண்டு தான் எனது உடல் அடக்கத்திற்குரிய செலவுகளைச் செய்து விடுங்கள். திருமறை திருகுர்ஆனை எழுதி விற்றதின் மூலம் சேர்த்து வைத்துள்ள பணம் 305 ரூபாயை எனது சொந்த பணப்பையில் வைத்துள்ளேன். அந்தத் தொகை புனிதமான வருமானமாகும். அதனை எனக்காக செலவளித்து விடுங்கள்" என்று ஏழை எளியவர் நலன்களையே எப்போதும் நினைத்த நல்லாட்சியாளர் ஔரங்கஜேப்.

வாரிசுகளுக்கு முறையான பகிர்வு

தன் பிள்ளைகளுக்கிடையே தனது இறப்பிற்குப்பிறகு வாரிசுரிமைப்போர் எதுவும் வந்துவிடக்கூடாதென்பதற்காக, தமது ஆட்சிப் பகுதிகளை முறைப்படி பிரித்து, தமது பிள்ளைகளுக்கு கொடுத்திட ஏற்பாடுகளையும் செய்து, ஹாமீதுத்தீன்கான் என்பவரை அதற்காகப் பணித்தவர் ஔரங்கஜேப்.

பணியாளர்கள் மீது பாசம்

"காடுகளிலும், மலைகளிலும், பாலைவனங்களிலும் என்னைப் பின் தொடர்ந்து வந்த எனது பணியாட்களை, எனது ஊழியர்களை எனது வாரிசுகள் அன்புடனே நடத்த வேண்டும். அவர்கள் தவறு செய்தாலும் கூட அதற்குப் பதிலாக மன்னிப்பையும் அன்பையுமே எனது வாரிசுகள் காட்ட வேண்டும்" என்று வேண்டியவர் ஔரங்கஜேப்

It is Proper for the rules of the Kingdom (i.e. my heir) to treak kindly the helpless servants who in the train of this shameless sinner (Aurangzib) have been roving in the deserts and wildernesses (of the Deccan) Even if any manifest fault is committed by them, give them in return for it gracious forgiveness and benign overlooking (of the fault).

அல்லாமா இக்பால்

"ஸாரே ஜஹான்ஸே அச்சா, ஹிந்துஸ்தான் ஹமாரா ஹம், புல்புலேஹீ இஸ்கி, ஏகுலிஸ்தான் ஹமாரா". "எல்லா நாடுகளிலும் எங்கள் ஹிந்துதுஸ்தான் சிறந்தது! அது எங்கள் பூங்கா, நாங்கள் அதிலுள்ள இசைபாடும் பறவைகள்" என்று வீர முழக்கமிட்ட அல்லாமா இக்பால், ஔரங்கஜேப் குறித்துச் சொல்லியுள்ள வரிகள் இதோ!

"ஆலம்கீர்! புவியரசர்! அரச தலைமுறைகளுக்கு வழி காட்டியான அணையா விளக்கு! இஸ்லாத்தின் சிறப்பை உயர்த்திய மன்னர். தர்மத்திற்கும், அதர்மத்திற்குமுள்ள வேறுபாட்டை நன்கு உணர்ந்தவர்! வன்மையான வாள் வீரர்!

எண்ணற்ற சக்திகள் நிறைந்தவர்! பற்றற்ற ஒரு பக்கிரி”.

உலகப் பேரரசர்களில் உயர்ந்தவர்

வரலாற்று ஆசிரியர் எனக் கூறிக்கொள்வோர் உம்முடைய கருத்தை அறியாமல், உம்மைப் பற்றி எத்தனையோ கட்டுக்கதைகளை உண்டாக்கி விட்டார்கள். அவர்களுடைய பார்வை மங்கலானது.

உம்முடைய எளிமையான அடக்கவிடம் அலங்காரம் செய்து கட்டடம் எழுதப்படாத சமாதி உலகப் பேரரசர்களில் நீரே உயர்ந்தவர் என்பதற்குச் சான்று பகர்கிறது.”*

(* எம்.ஆர்.எம். அப்துல் ரஹீம், இஸ்லாமியக் கலைக்களஞ்சியம், தொகுதி 2, சென்னை, 1977, பக். 493, இநதியாவில் முஸ்லிம் ஆட்சி, முற்கூறிய நூல், பக். 262, 263.)



செ.திவான்

சொந்த ஊர் நெல்லை மாவட்டம் விசுவநாதபுரம். தற்போது இருப்பது பாளையங்கோட்டை. எம்.ஏ., எம்.ஃபில் பட்டம் பெற்றவர். தற்சமயம் முனைவர் பட்டத்துக்காக ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்.

தமிழில் சுமார் 90 நூல்கள் எழுதியிருக்கிறார். 1,300 கட்டுரைகளுக்கு மேல் எழுதியுள்ளார். இவருடைய நூல்களுக்கு ‘சீதக்காதி அறக்கட்டளை’ பரிசு உள்ளிட்ட பல பரிசுகள் அளிக்கப்பட்டுள்ளன. ‘உமறுப் புலவர் விருது’, ‘தமிழ் மாமணி விருது’, ‘வரலாற்றில் அறிஞர் விருது’, வ.உ.சி. விருது’ ஆகியவை பெற்றவர். துணைவியார் டாக்டர் திவானி ஜஹனாரா. இரு புதல்விகள் - நஜாத், சுகைனா.

Printed Books

இந்தியாவை ஆண்ட முஸ்லிம் மன்னர்கள் ஆட்சியில், 'ஹிந்து கோயில்களை இடித்தார்கள். பள்ளிவாசல்களைக் கட்டினார்கள்' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொடுக்கப்பட்டு நாள்தோறும் நச்சு விதையை, மதத் துவேஷத்தை வளர்த்துவரும் இந்த வேளையில், 'இந்திய நாட்டு முஸ்லிம் மன்னர்கள், பிற சமயங்கள்மால் வெறுப்புக் கொண்டதில்லை; குடிமக்களை அச்சுறுத்தி கட்டாயமாக மதமாற்றம் செய்ததில்லை என்றும் சொல்லும்போது, இந்த உண்மைகளுக்கு மாறான உதிரி நிகழ்ச்சிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்திருக்கக்கூடும் என்பதை மறுப்பதற்கில்லை' என்றாலும், முஸ்லிம் மன்னர்கள் ஆட்சியில் அப்படித் தவறுகளே நடந்திடவில்லையென்று சொல்லிடும் தற்குறியல்ல நான். ஆனால், வரலாற்று உண்மைகளை மறைத்திடும்போது, மறைத்திட முயலும்போது, திட்டமிட்டே மறைந்து வருகிறபோது, அதுகுறித்த உண்மைகளை வரலாற்றின் வெளிச்சத்துக்கு கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

ஷாஜகானுக்கு மகனாகப் பிறந்த மஹா சக்கரவர்த்தியாகிய ஔரங்கஜேப் ஒரு ஹிந்து ராணியின் பேரனாயிருந்தும், மதத்துவேஷிகள் அவரையும சும்மா விடவில்லை. அபாண்டப் பழிகளை அவர்மீது அடுக்கிக் கொண்டே செல்கிறார்கள் என்பதனை அறிகிறபோது வேதனையான விசித்திரமாகத்தான் இருக்கிறது. அது மட்டுமா..?

விகடன் பிரசுரம்

VARALAATRIN VELICHATHIL AURANGAZEB

₹ 160

ISBN 978-81-8476-521-2

9 788184 765212